பன்னிரு திருமுறைகள்

முதல் திருமுறை – இரண்டாம் பாகம்



தேவாரம்

மூலமும் உரையும்

தமிழ் நிலையம்

உ

சிவமயம்

திருஞானசம்பந்த சுவாமிகள்

அருளிச் செய்த

தேவாரம்

(முதல் திருமுறை – இரண்டாம் பாகம்)

உரையாசிரியர் :

வ.த. இராமசுப்பிரமணியம், எம்.ஏ.,

தமிழ் நிலையம்

ஏ.ஆர்.ஆர். காம்ப்ளெக்ஸ்,
141, உஸ்மான் சாலை,
தி. நகர், சென்னை – 600 017.

முதல் பதிப்பு : 1994

இரு தொகுதிகள்:

விலை : ரூ. 175.00

Laser Typeset at : LKM Computer Prints, Madras – 17.

Printed by Offset at :
Sankar Printers, Madras - 600 042.

தேவாரம்

(முதல் திருமுறை - இரண்டாம் பாகம்)

61. திருச்செங்காட்டங்குடி

தல விளக்கம்: *பதிக எண் 6 காண்க.*

பண் : *பழந்தக்க ராகம்*

திருச்சிற்றம்பலம்

656. நறைகொண்ட மலர்தூவி
விரையளிப்ப நாள்தோறும்
முறைகொண்டு நின்றடியார்
முட்டாமே பணிசெய்யச்
சிறைகொண்ட வண்டறையும்
செங்காட்டங் குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான்
கணபதீச் சரத்தானே.

தெளிவுரை: *சிறகுகளையுடைய வண்டுகள் பறக்கும் செங்காட்டாங்குடியில் கரிய கண்டத்தையுடைய கணபதீச்சரத்தானைத் தொண்டர்கள் தேன் நிறைந்த மலர்களால் தூவிப் போற்றி, மணம் அளிக்க நாள்தோறும் குறைவின்றி, விதிப்படி பணி செய்கின்றனர்.*

சிறப்புரை: தேன் மலரின் மணம் யாண்டும் நிகழக் கூடியது எனினும், ஈசனைப் போற்றி வணங்கும் அடியவர்களின் செய்கையால் ஆன்மாக்கள் மணம் பெறுமாறு உள்ளது என உணர்த்துவதாயிற்று.

நறை – தேன்; விரை – மணம்; முறை – விதிப்படி; முட்டாமே – குறைவின்றி, தடையின்றி; சிறை – சிறகு; கறை – கரிய விடம்.

657. வாரேற்ற பறையொலியும்
சங்கொலியும் வந்தியம்ப

ஊரேற்ற செல்வத்தோடு
ஓங்கியசீர் விழவுஓவாச்
சீரேற்றம் உடைத்தாய
செங்காட்டங் குடியதனுள்
காரேற்ற கொன்றையான்
கணபதீச் சரத்தானே.

தெளிவுரை: தோல் வாரினால் கட்டப்பெற்ற பறையின் ஒலியும், முழங்கும் சங்கின் ஒலியும் திகழ, ஊர் மக்கள் எல்லோரும் சேர்ந்து செல்வச் செழிப்பு தோன்றுமாறு சிறப்பான திருவிழாக்கள் ஓய்வில்லாமல் ஆற்றப் பெருமையின் ஏற்றத்தைக் கொண்டுள்ள செங்காட்டங் குடியில் கார்காலத்தில் பூத்துக் குலுங்கும் கொன்றை மலர் சூடிய கணபதீச்சரத்தான் விளங்குகின்றான்.

658. வரந்தையான் சோபுரத்தான்
மந்திரத்தான் தந்திரத்தான்
கிரந்தையான் கோவணத்தான்
கிண்கிணியான் கையதோர்
சிரந்தையான் செங்காட்டங்
குடியான்செஞ் சடைச்சேரும்
கரந்தையான் வெண்ணீற்றான்
கணபதீச் சரத்தானே.

தெளிவுரை: ஈசன் வரந்தை, சோபுரம் ஆகிய திருத் தலங்களில் வீற்றிருப்பவன்; வேதமும் ஆகமும் ஆகி அதன் எழுத்தாகவும் ஒலியாகவும் விளங்குபவன்; கோவண ஆடையுடையவன்; கிண்கிணிச் சலங்கை யுடையவன்; கரத்தில் பிரம கபாலம் ஏந்திச் செங்காட்டங்குடியில் உள்ளவன்; செஞ்சடையில் கங்கை நீரைக் கரந்து சேமித்தவன்; திருவெண்ணீறு தரித்தவன். அவன் கணபதீச்சரத்தில் வீற்றிருப்பவன்.

சிறப்புரை: *கிரந்தை என்பது திருத்தலத்தின் பெயரைக் குறித்தலும் ஆகும். கரந்தை என்பது திருநீற்றுப் பச்சை எனத் திகழும் செடியைக் குறித்தலும் ஆகும்.*

மந்திரம் – வேதம்; தந்திரம் – ஆகமம்; சிரந்தை – சிரத்தை (பிரம கபாலம்)

659. தொங்கலும் கமழ்சாந்தும்
அகிற்புகையும் தொண்டர்கொண்டு
அங்கையால் தொழுதுஏத்த
அருச்சனைக்குஅன்று அருள்செய்தான்
செங்கயல்பாய் வயல்உடுத்த
செங்காட்டாங் குடியதனுள்
கங்கைசேர் வார்சடையான்
கணபதீச் சரத்தானே.

தெளிவுரை: *மலர் மாலை சாற்றிக் கமழ்கின்ற சந்தனம், அகிற்புகை கொண்டு தொண்டர்கள் கைகளால் கூப்பித் தொழுது வணங்கி அருச்சனை புரிய அருள் புரிந்தவன். கயல் பாயும் வயல் சூழ்ந்த செங்காட்டங் குடியில், கங்கை தரித்த நீண்ட சடையுடையவனாகிய கணபதீச்சத்தில் மேய பரமன்.*

தொங்கல் – மாலை.

660. பாலினால் நறுநெய்யால்
பழத்தினால் பயின்றுஆட்டி
நூலினால் மணமாலை
கொணர்ந்துஅடியார் புரிந்துஏத்தச்
சேலினார் வயல்புடைசூழ்
செங்காட்டங் குடியதனுள்
காலினால் கூற்றுதைத்தான்
கணபதீச் சரத்தானே.

தெளிவுரை: நெய், பால் ஆகியவற்றைக் கொண்டும் பழங்கள் முதலான பஞ்சாமிர்தமும் கொண்டு அபிடேகம் செய்து, வேதாகம விதிப்படி மணங் கமழும் மாலைகள் கொணர்ந்து, அடியவர்கள் மகிழ்ந்து ஏத்தச் சேல்கள் திகழும் வயல்கள் சூழ்ந்த செங்காட்டங்குடியில் திருப்பாதத்தால் கூற்றுதைத்த கணபதீச்சரத்தான் வீற்றிருக்கின்றான்.

661. நுண்ணியான் மிகப்பெரியான்
நோவுளார் வாயுளான்
தண்ணியான் வெய்யான் அந்
தலைமேலான் மனத்துளான்
திண்ணியான் செங்காட்டங்
குடியான்செஞ் சடைமதியக்
கண்ணியான் கண்ணுதலான்
கணபதீச் சரத்தானே.

தெளிவுரை: மிக நுண்ணிய பொருளாகவும், மிகப் பெரியவனாகவும், மனங்கசிந்து உருகும் அடியவர்தம் வாயிலிருந்து மலரும் சொல்லாகவும், தண்மையும் வெம்மையும் உடையவனாகவும், தலையின் மேலாக வும் மனத்தகத்தும் இருப்பவன், ஈசன். திண்ணியனாக விளங்கும் அப் பரமன் செங்காட்டங்குடியில் உள்ளவனாகவும், செஞ்சடையில் சந்திரனைத் தரித்துள்ளவனாகவும், நெற்றிக் கண்ணையுடையவ னாகவும் இருப்பவன். அவன் கணபதீச்சரத்தான்.

சிறப்புரை: இந்நிலையில், "ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே" என்று மாணிக்கவாசர் உரைத்தலும் காண்க. "மனத்தகத்தான் தலை மேலான் வாக்கின் உள்ளான்" என திருநாவுக்கரசர் மொழிதலும் நோக்குக.

662. மையினார் மலர்நெடுங்கண்
மலைமகள்ஓர் பாகமாம்
மெய்யினான் பையரவம்
அரைக்கசைத்தான் மீன்பிறழ்அச்
செய்யின்ஆர் அகல்கழனிச்
செங்காட்டங் குடியதனுள்
கையினார் கூர்எரியான்
கணபதீச் சரத்தானே.

தெளிவுரை: மை பொலிந்த குளிர்ந்த மலர் போன்ற நெடுங்கண்களையுடைய மலைமகளை, ஒப்பற்ற பாகமாக உடைய திருமேனியில், படத்துடன் கூடிய நாகத்தை அரையில் அசைத்து, மீன்கள் துள்ளிக் களிக்கும் வயல்களும், அகன்ற கழனிகளும் உள்ள செங்காட்டங்குடியில், கூர்மையான சுடர்விட்டு எரியும் நெருப்பை ஏந்திய ஈசன், கணபதீச்சரத்தான்.

663. தோடுடையான் குழையுடையான்
அரக்கன்றன் தோளடர்த்த
பீடுடையான் போர்விடையான்
பெண்பாக மிகப்பெரியான்
சேடுடையான் செங்காட்டங்
குடியுடையான் சேர்ந்தாடும்
காடுடையான் ஆடுடையான்
கணபதீச் சரத்தானே.

தெளிவுரை: ஒரு காதில் தோடும், மற்றொன்றில் குழையும் உடைய ஈசன், அரக்கன் தோளை நெரித்தவன்; பெருமையுடையவன். போர்த்தன்மை யுடைய வீரம் மிக்க இடபத்தை உடையவன், பெண்ணைப் பாகமாக உடையவன், அழகும் இளமையும் உடையவன். பூத கணங்களுடன் சேர்ந்து

ஆடும் இடுகாட்டினன், வெற்றியுடையவன். அவன் செங்காட்டாங்குடியுடைய கணபதீச்சரத்தானே.

பீடு – பெருமை; சேடு – இளமை, அழகு; ஆடு – வெற்றி.

664. ஆனூரா உழி தருவான்
அன்றிருவர் தேர்ந்துணரா
வானூரான் வையகத்தான்
வாழ்த்துவார் மனத்துளான்
தேனூரான் செங்காட்டங்
குடியான்சிற் றம்பலத்தான்
கானூரான் கழுமலத்தான்
கணபதீச் சரத்தானே.

தெளிவுரை: *ஈசன், இடபத்தில் மீதேறி வருவான், பிரமன் திருமால் ஆகியோர்களுக்கு உணர முடியாதவாறு விண்ணில் உயர்ந்தான், வையகத்தில் வாழ்த்துவார்தம் மனத்தில் உள்ளான், அவர்தம் உள்ளத்தில் ஊறி நின்று தேன் போன்று இனிப்பவன். அவன் சிற்றம்பலம், கானூர், கழுமலம் ஆகிய தலங்களிலும் விளங்கி, செங்காட்டங்குடியில் மேவும் கணபதீச்சரத்தானே.*

சிறப்புரை: *"சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நிற்கும் பெருமான்" என்று மாணிக்கவாசகர் உரைப்பது நினைக்கத்தக்கது.*

665. செடிநுகரும் சமணர்களும்
சீவரத்த சாக்கியரும்
படிநுகராது அயர்உழப்பார்க்கு
அருளாத பண்பினான்
பொடிநுகரும் சிறுத்தொண்டர்க்கு
அருள்செய்யும் பொருட்டாகக்

கடிநகராய் வீற்றிருந்தான்
கணபதீச் சரத்தானே.

தெளிவுரை: சமணர்களும் சாக்கியர்களும், உலகத்தில் நன்மை தீமைகளை நுகராது துன்பத்தில் நெஞ்சைப் பதித்துக் கொள்ள, அன்னார்களுக்கு அருள் புரியாதவன் ஈசன். திருநீற்றை விரும்பி அணியும் சிறுத் தொண்டருக்கு அருள் செய்யும் பொருட்டுக் காவல்பதியாக வீற்றிருந்தான், கணபதீச்சரத்தான்.

செடி – துர்நாற்றம்; பொடி – திருநீறு; கடி – காவல்.

666. கறை இலங்கு மலர்க்குவளை
கண்காட்டக் கடிபொழிலின்
நறைஇலங்கு வயல்காழித்
தமிழ்ஞான சம்பந்தன்
சிறைஇலங்கு புனல்படப்பைச்
செங்காட்டங் குடிசேர்த்தும்
மறைஇலங்கு தமிழ்வல்லார்
வானுலகத்து இருப்பாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: விளங்கும் குவளை மலர்களும் மணம் பொருந்திய பொழிலில் தேன் பெருகவும் வயல்கள் சிறக்கும் காழியின் தமிழ் ஞானசம்பந்தன் நீர் வயல்களும் தோட்டங்களும் உடைய செங்காட்டாங் குடியை இணைத்துப் பாடிய மறை விளங்கும் இத் திருப்பதிகத்தைக் கூற வல்லவர், வானுலகில் திகழ்வார்கள்.

சிறை – கரை.

62. திருக்கோளிலி

தல விளக்கம்: காவிரி தென்கரைத் தலம். திருக்குவளை என வழங்கப்படுகிறது. சப்த விடங்கத் தலங்களுள் ஒன்று. பிரமன், அகத்திய முனிவர் வழிபட்டது. நவக் கிரகங்கள் பூசித்ததால் கோளிலி எனப் பெயர் பெற்றது. பிரம தபோவனம், கத காரண்யம் (தேற்றாமரம்) தென் கயிலை முதலான பெயர்களும் உண்டு.

சுந்தரமூர்த்தி நாயனாருக்கு குண்டையூர் கிழார் வேண்டுகோளின்படி பெற்ற நெல் மூட்டைகளைப் பூதங்களைக் கொண்டு திருவாரூரில் சேர்ப்பித்த திருத்தலம்.

சுவாமி : பிரமபுரீஸ்வரர், கோளிலி நாதேஸ்வரர்

அம்பிகை : வண்டார் பூங்குழலி

தல மரம் : தேற்றா மரம்

தீர்த்தம் : விநாயக தீர்த்தம், சக்தி தீர்த்தம், அகத்திய தீர்த்தம், இந்திர தீர்த்தம், சந்திர நதி, மணி கர்ணிகை.

பண் : பழந்தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

667. நாளாய போகாமே
நஞ்சணியும் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம்
அடல்நெஞ்சே அரநாமம்
கேளாய்நம் கிளைகிளைக்கும்
கேடுபடாத் திறம்அருளிக்
கோளாய நீக்கும்அவன்
கோளிலிஎம் பெருமானே.

தெளிவுரை: வாழ்நாட்களை வீணாகக் கழிக்காமல், நஞ்சையுடைய நீலகண்டனாக விளங்கும் ஈசனுக்கே உரிய ஆளாகி, அன்பு செய்வோமாக. பேதைமை உடைய நெஞ்சே! அரனுடைய திருநாமத்தைச் செவிகுளிரக் கேட்பாயாக. அது நம் வழி வழியாக வரும் தலைமுறையினருக்கும் கெட்டுப் போகாத உயர்ந்த தரத்தில் நிலைத்த பொருளாய் இருந்து, இடையூற்றை நீக்கும். அத்தகைய பெருமான் கோளிலியில் உள்ளவனே.

சிறப்புரை: உட்கொண்ட நஞ்சு ஒளிரும் நீலமணி போன்று கண்டத்தில் விளங்கி, ஈசனார் அருள் வண்ணத்தையும் கருணைத் திறத்தையும் காட்டி நிற்பதால், அந் நஞ்சு அணியென உணர்த்தப் பெற்றது.

ஈசன் தொண்டில் சிறந்து விளங்குதலும், பக்திப் பெருக்கால் அவன் கழலை உள்குதலும், மனிதப் பிறவியின் நோக்கமாதலை விளக்குகின்ற மாண்பு, ஆளாய அன்பு செய்வோம் என உணர்த்தப்பட்டது. "ஆளலா தவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே" எனவும்; "அன்பிலா தவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே" எனவும் மணிவாசகப் பெருமான் உரைப்பதும் நோக்குக.

சீவன் முத்தரை அன்றி, ஏனையோர்க்குக் களிம்பு உறு செம்பு போன்று, மனம் பேதுறும் என்பதை உணர்த்தும் வகையில், மட நெஞ்சே என்பது குறிப்பதாயிற்று.

உலகாய பொருட்கள், சில காலகட்டங்களில் பாழ்பட்டுவிடும் தன்மையுடையவை. அவ்வாறு இன்றி, அரன் திருநாமம் எக்காலத்திலும் கெடுதல்

இல்லாமல் பயன் அளிக்கும், காப்புப் பொருளாக விளங்கும் திறன் உள்ளதெனவும், அது, திருநாமத்தை ஓதும் அன்பருக்கு மட்டும் அல்லாது, அவர்களுடைய தலைமுறையினர் மற்றும் சுற்றத்தினருக்கும் உறுதியைத் தந்தருளி, இடர் களையும் என்பதனைக் "கேடுபடாத் திறமருளிக் கோளாய நீக்கும்'' என்றார். கோள் (நவக்கிரகம்) களால் ஏற்படும் தோஷம் நீங்கும் என்பதும் குறிப்பு.

668. ஆடரவத்து அழகுஆமை
அணிகேழல் கொம்புஆர்த்த
தோடரவத்து ஒருகாதன்
துணைமலர்நற் சேவடிக்கே
பாடரவத்து இசைபயின்று
பணிந்துஎழுவார் தம்மனத்தில்
கோடரவம் தீர்க்கும் அவன்
கோளிலிஎம் பெருமானே.

தெளிவுரை: ஆடிக்கொண்டிருக்கும் அரவத்தில் அழகிய ஆமை ஓடும் பன்றியின் கொம்பும் கட்டி அணிபவன் ஈசன். அரவத்தைக் காதில் தோடாக உடையவன். திருவடியில் மலர்களைத் தூவிப் பாடல்களை இசையுடன் பயின்று பணிபவர் மனத்தின் துன்பத்தைத் தீர்க்கும் பரமன், கோளிலியில் வீற்றிருப்பவன்.

பாடரவம் – பாடலின் ஓசை; கோடரவம் – துன்பம்.

669. நன்றுநகு நாண்மலரால்
நல்லிருக்கு மந்திரங்கொண்டு
ஒன்றிவழி பாடுசெயல்
உற்றவன்றன் ஓங்குயிர்மேல்
கன்றிவரு காலன்உயிர்
கண்டுஅவனுக்கு அன்றளித்தான்

கொன்றைமலர் பொன்திகழும்
கோளிலிஎம் பெருமானே.

தெளிவுரை: நன்று மலர்ந்த மலர்கள் தூவி, இருக்கு வேத மந்திரங்களை ஓதி, மனம் ஒருமித்து வழிபாடு செய்த மார்க்கண்டேயரின் உன்னதமாக ஓங்கும் உயிரைக் கவரச் சினந்து வரும் காலனின் உயிரைப் போக்கிக் காத்தவன், பொன் போன்ற கொன்றை மலர் சூடும் கோளிலியில் வீற்றிருக்கும் பெருமான்.

சிறப்புரை: ஈசனை மலர் தூவி ஒருமித்த சிந்தையால் வழிபடும் அடியவர்கள் காலன் பிடியிலிருந்து காப்பாற்றப்படுவார்கள் என்பது உணர்த்தப்பட்டது. ஈசனை வழிபடும் உயிரே ஓங்கும் உயிர் எனவும் மற்றவை அத்தன்மையற்றவை என உணர்த்தப் படுதலும் காண்க.

நாண்மலர் – அன்றலர்ந்த மலர்.

670. வந்தமண லால்இலிங்க
மண்ணியின்கண் பாலாட்டும்
சிந்தைசெய்வோன் தன்கருமம்
தேர்ந்துசிதைப் பான்வரும்அத்
தந்தைதனைச் சாடுதலும்
சண்டீசன் என்றருளிக்
கொந்தணவு மலர்கொடுத்தான்
கோளிலிஎம் பெருமானே.

தெளிவுரை: மண்ணியாற்றின் கரையில் மணலால் இலிங்கத் திருமேனி அமைத்துப் பால் அபிடேகம் செய்த பாலனுடைய செயலை விரும்பாத தந்தையைச் சாடிய அம் மகனுக்குச் சண்டீசன் எனும் சிறப்பினைத் தந்தருளி, மலர்களைக் கொடுத்தவன் கோளிலிப் பெருமான்.

671. வஞ்சமனத்து அஞ்சுஒடுக்கி
வைகலுநற் பூசனையால்
நஞ்சமுது செய்தருளு
நம்பியென வேநினையும்
பஞ்சவரில் பார்த்தனுக்குப்
பாசுபதம் ஈந்துகந்தான்
கொஞ்சுகிளி மஞ்சுஅணவும்
கோளிலிஎம் பெருமானே.

தெளிவுரை: வஞ்சனை பொருந்திய மனத்தில் மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகளின் வழி செல்லாது ஒடுக்கி, நாள்தோறும் நல்ல மெய்ப்பாடு கொள்ளும் பூசனையால், நஞ்சினை அமுது கொண்ட ஈசனைபே கருதும் பார்த்தனுக்குப் பாசுபத அத்திரம் ஈந்து மகிழ்ந்தவன் கோளிலிப் பெருமான்.

672. தாவியவன் உடனிருந்தும்
காணாத தற்பரனை
ஆவிதளில் அஞ்சொடுக்கி
அங்கணன்என்று ஆதரிக்கும்
நாவியல்சீர் நமிநந்தி
அடிகளுக்கு நல்கும்அவன்
கோவியலும் பூவெழுகோற்
கோளிலியெம் பெருமானே.

தெளிவுரை: எல்லா இடங்களிலும் வியாபித்து இருக்கும் ஈசன் தன்னிடத்தும் உள்ளவன் என உணராதவனாகி உலகத்தைத் தாவி நின்று அளந்த திருமாலும் காண முடியாத தற்பரன், ஐம்புலன்களை ஒடுக்கி விரும்பிப் போற்றி வழிபடும் நமி நந்தி அடிகளுக்குப் பெருமையும் புகழும் நல்கிய கோளிலிப் பெருமான்.

673. கல்நவிலு மால்வரையான்
கார்திகழு மாமிடற்றான்
சொல்நவிலு மாமறையான்
தோத்திரம்செய் வாயின்உளான்
மின்நவிலும் செஞ்சடையான்
வெண்பொடியான் அங்கையினில்
கொல்நவிலும் சூலத்தான்
கோளிலியெம் பெருமானே.

தெளிவுரை: உறுதியான பெருமைமிக்க கயிலை மலையை உடையவன், கரிய கண்டத்தையுடையவன், வேதங்களையுடையவன், தோத்திரம் செய்பவர் வாய்ச் சொல்லில் உறைபவன், மின்னலைப் போன்ற ஒளி மயமான சிவந்த சடையுடையவன், திருநீற்று மேனியன், அழகிய கரத்தில் பெருமையான சூலத்தை உடையவன், கோளிலிப் பெருமான்.

சிறப்புரை: ஈசனைத் தோத்திரப் பாடல்களால் பாடுபவர்தம் வாய்ச் சொல்லாகவும் அதுவே வழியாகும் (வாய் – வழி) முறை எனவும், குறிப்பால் உணர்த்தப்படுதல் அறிக. இதனைத் திருநாவுக்கரசர் மனத்தகத்துள்ள இறைவன் வாக்கின் வழி உள்ளான் என உணர்த்துமாப் போன்று, மனத்தகத்தான் வாக்கின் உள்ளான் என உரைத்தலும் நோக்குக.

கொன் – பெருமை.

674. அந்தரத்தில் தேர்ஊரும்
அரக்கன்மலை அன்றுஎடுப்பச்
சுந்தரத்தன் திருவிரலால்
ஊன்றஅவன் உடல்நெரிந்து
மந்திரத்தை மறைபாட
வாள்அவனுக்கு ஈந்தானும்

கொந்தரத்த மதிச்சென்னிக்
கோளிலிஎம் பெருமானே.

தெளிவுரை: *வானத்தின்கண் தேர் ஊர்ந்து சென்ற இராவணன் கயிலை மலையை எடுத்தபோது ஈசன் அழகிய தன் திருப்பாத விரலால் ஊன்ற, உடல் நெரிந்து துன்புற்று சாம கீதத்தை ஓதினான். அதனைக் கேட்டு மகிழ்ந்து, மந்திரவாளை அவ் அரக்கனுக்கு வழங்கியவன் பிறை சூடிய கோளிலிப் பெருமான்.*

சுந்தரத்தன் திருவிரல் – அழகன் திருவிரல்; சுந்தரத் தன் திருவிரல் – அழகிய தனது திருவிரல்.

675. நாணமுடை வேதியனு
நாரணனு நண்ணவொணாத்
தாணுஎனை ஆளுடையான்
தன்னடியார்க்கு அன்புடைமை
பாணன்இசை பத்திமையால்
பாடுதலும் பரிந்தளித்தான்
கோணல்இளம் பிறைச்சென்னிக்
கோளிலியெம் பெருமானே.

தெளிவுரை: *பிரமனும் திருமாலும் நண்ணமுடியாத ஈசன், என்னை ஆளுடையவன், அடியவர்பால் அன்புடைய பாணர் யாழ் மீட்டிப் பக்திப் பெருக்கால் இசைத்துப் பாட அருள் புரிபவன், வளைந்த இளம் பிறையைச் சென்னியில் தரித்த கோளிலிப் பெருமான்.*

தாணு – ஈசன்.

676. தடுக்குஅமரும் சமணரொடு
தர்க்கசாத் திரத்தவர்சொல்
இடுக்கண்வரு மொழிகேளாது
ஈசனையே ஏத்துமின்கள்

நடுக்கமிலா அமருலகம்
நண்ணலும்ஆம் அண்ணல்கழல்
கொடுக்கிலா வரங்கொடுக்கும்
கோளிலிஎம் பெருமானே.

தெளிவுரை: தடுக்கில் அமரும் சமணர்களும், மற்றும் தர்க்க சாத்திரத்தில் வல்லவர்களும் சொல்பவை துன்பத்தைத் தருவதாகும். அவற்றை ஏற்காது ஈசனை வழிபடுமின். அப்பெருமான் அரிய வரங்களைத் தருபவர். அவன் அருள் அச்சமற்ற வானுலகத்தில் அடியவர்களை மகிழ்ந்திருக்கச் செய்யும். அத்தகைய அண்ணல் எம் கோளிலியில் வீற்றிருக்கும் பெருமானே.

677. நம்பனைநல் லடியார்கள்
நாம்உடைமாடு என்றிருக்கும்
கொம்பனையாள் பாகன்எழில்
கோளிலிஎம் பெருமானை
வம்புஅமரும் தண்காழிச்
சம்பந்தன் வண்தமிழ்கொண்டு
இன்புஅமர வல்லார்கள்
எய்துவர்கள் ஈசனையே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஈசனை, நன்மையே உற்ற அடியவர்கள் தமது செல்வம் எனக் கருதும் உமையவளைப் பாகமாக உடைய கோளிலிப் பெருமானைப் போற்றி மணங்கமழும் குளிர்ச்சி பொருந்திய காழிச்சம்பந்தன் வளப்பம் மிக்க உரைத்த இத் திருப்பதிகத்தை இன்பம் பெருக ஓத வல்லவர்கள் ஈசன்பால் எய்துவர்.

நம்பன் – ஈசன், பரமன்; மாடு – செல்வம்; கொம்பனையாள் – உமாதேவி; வம்பு – மணம்.

63. திருப்பிரமபுரம்

தல விளக்கம்: *பதிக எண் 1 காண்க.*

பதிகக் குறிப்பு: *இத்தலத்தின் 12 பெயர்களும் பாடலில் அமைய்ப் பெற்றது.*

பல்பெயர்ப்பத்து

பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

678. எரியார்மழுவொன்று ஏந்திஅங்கை
இடுதலையே கலனா
வரியார் வளையார் ஐயம்வல்லாய்
மாநலம் வவ்வுதியே
சரியாநாவின் வேதகீதன்
தாமரைநான் முகத்தன்
பெரியான்பிரமன் பேணியாண்ட
பிரமபுரத் தானே.

தெளிவுரை: *நெருப்பைப் போன்ற மழுப்படையைக் கரத்தில் ஏந்திக் கபாலம் ஒரு கரத்தில் ஏந்திப் பிச்சை ஏற்று அழகிய வளையலை அணிந்த நங்கையரிடம் அவர்தம் நலத்தையும் கவர்ந்தவன் பிரமபுரத்து மேவிய பெருமான்! தவறுதல் இல்லாது வேதங்களை ஓதும் தாமரை மலர் மேல் விளங்கும் நான்முகத்தனாகிய பிரமன் பூசிக்க ஆட்கொண்டவன்.*

679. பெயலார்சடைக்கோர் திங்கள்சூடிப்
பெய்பலிக்குஎன்று அயலே
கயலார்தடங்கண் அஞ்சொல் நல்லார்
கண்துயில் வவ் வுதியே

இயலான் நடாவி இன்பம்எய்தி
இந்திரன்ஆள் மண்மேல்
வியலார் முரசம் ஓங்குசெம்மை
வேணுபுரத் தானே.

தெளிவுரை: இந்திரன் மூங்கில் (வேணு) வடிவத்தில் பூசிக்க அருள் புரிந்த வேணு புரத்தனே, கங்கை பொருந்திய சடையில் சந்திரனைச் சூடி பலியேற்க வேண்டும் என்று கயல் போன்ற அகன்ற கண்களை யுடைய மாதர்கள்பால் சென்று, அவர்கள் நின்னைக் கண்டு நின்னையே நினைத்துத் துயில் துறக்க வவ்வுதல் செய்தனை!

வேணு – மூங்கில்.

680. நகலார் தலையும் வெண்பிறையு
நளிசடைமாட்டு அயலே
பகலாப் பலிதேர்ந்து ஐயம்வவ்வாய்
பாய்கலை வவ் வுதியே
அகலா துறையும் மாநிலத்தில்
அயலின்மை யால் அமரர்
புகலான் மலிந்த பூம்புகலி
மேவிய புண்ணியனே.

தெளிவுரை: தலையோடும், வெண் பிறையும் சடையில் விளங்கப் பலியேற்கும் தன்மையனே! அமரர்கள் அடைக்கலம் புகுந்து இருந்தமையால் பூம்புகலி எனப்படுமாறு விளங்கும் ஈசனே, பலியேற்கப் பரந்த ஆடையைக் கவர்ந்தது ஏன்?

பாய்கலை – துகில், ஆடை.

681. சங்கோடு இலங்கத் தோடுபெய்து
காதிலொர்தாழ் குழையன்
அங்கோல் வளையார் ஐயம்வவ்வா
யானலம்வவ் வுதியே

செங்கோல் நடாவிப் பல்லுயிர்க்கும்
செய்வினை மெய்தெரிய
வெங்கோத்தருமன் மேவியாண்ட
வெங்குரு மேயவனே.

தெளிவுரை: *வெங்குரு மேவும் பெருமானே! சங்குடன் தோடும் குழையும் காதில் அணிந்து, அழகிய வளையலை அணிந்த மாதர்களிடம் பிச்சை கொள்ளாது, அவர்தம் நலனை வவ்விக் கொள்வையோ! செங்கோல் சிறப்புற நடைபெறும் முகத்தான் செய்கின்ற தம் பணி சிறப்புறுமாறு குருபகவான் போற்ற அருள் புரிந்தனை!*

682. தணிநீர் மதியம் சூடி நீடு
தாங்கிய தாழ் சடையன்
பிணி நீர் மடவார் ஐயம்வவ்வாய்
பெய்கலை வவ்வுதியே
அணிநீர் உலகம் ஆகி எங்கும்
ஆழ்கடலால் அழுங்கத்
துணி நீர் பணியத் தான்மிதந்த
தோணி புரத் தானே.

தெளிவுரை: *நீரானது உலகெங்கும் விரிந்து சூழ்கடலால் ஆழ்ந்த காலத்துத் தான் மட்டும் மிதந்து மேல் நிற்கும் தோணிபுரத்து ஈசனே! தணிந்த நீர் போன்ற குளிர்ந்த வெண் மதியைச் சூடித் தாழ்ந்த சடையுடன் விரக தாகம் உடைய பெண்களிடம் பிச்சை யேற்காது அவர்களுடைய ஆடைகளை வவ்வியது ஏனோ!*

பிணிநீர் – விரகதாகம்; பெய்கலை – ஆடைகள்.

683. கவர்பூம் புனலும் தண்மதியும்
கமழ்சடைமாட்டு அயலே

அவர்பூம் பலியோடு ஐயம்வவ்வா
யானலம் வவ்வுதியே
அவர் பூண் அரையர்க்கு ஆதியாய
அடல் மன்னன் ஆள் மண்மேல்
தவர்பூம் பதிகள் எங்கும் எங்கும்
தங்குதரா யவனே.

தெளிவுரை: *மன்னர்களுக்கெல்லாம் மன்னனாக விளங்கிக் காக்கும் தொழிலை மேவும் திருமால் மண்மேல் பூக்களால் (பூர்தராய்) திகழ வழிபடும் பூந்தராய் மேவும் பெருமானே! கங்கையும் சந்திரனும் கமழ்சடையில் திகழ மாதர்களிடம் பிச்சை யேற்காது அவர்தம் நலத்தை வவ்வியது ஏன்?*

684. முலையாழ் கெழுவ மொந்தை கொட்ட
முன்கடை மாட்டு அயலே
நிலையாப் பலிதேர்ந்து ஐயம் வவ்வாய்
நீ நலம் வவ்வுதியே
தலையாய்க் கிடந்து அவ் வையம் எல்லாம்
தன்னதொரு ஆணை நடாய்ச்
சிலையான் மலிந்த சீர்ச்சிலம்பன்
சிரபுர மேயவனே.

தெளிவுரை: *திருமால், மோகினி அவதாரம் தாங்கித் தேவர்களுக்கு அமுதம் வழங்கிய ஞான்று, சிலம்பன் என்னும் அசுரன் அவ்வரிசையில் நிற்கக் கண்டு சிரத்தை அறுத்தார். அந்த சிரம் மண்மிசை கிடந்து, தன் ஆணை நடத்தும் வண்ணம் பூசிக்க, விளங்கும் சிரபுரம் மேரும் பெருமானே! முல்லை யாழும் மொந்தை என்னும் ஒலியும் பொருந்தி ஒலிக்க, வாயிலின் முன் மாதர்கள் இடும் பிச்சை ஏற்பதை விடுத்து அவர்கள் நலத்தினை வவ்வினையே!*

முலை – முல்லை.

685. எருதே கொணர்க என்று ஏறிஅங்கை
இடுதலையே கலனாக்
கருதேர் மடவார் ஐயம் வவ்வாய்
கண்துயில் வவ்வுதியே
ஒருதேர் கடாவி ஆர்அமருள்
ஒருபது தேர் தொலையப்
பொருதேர் வலவன் மேவிஆண்ட
புறமவர் புண்ணியனே.

தெளிவுரை: *புறாவின் எடைக்குத் தன் தசையை அறுத்துக் கொடுக்குமாறு புறா வடிவத்தில் போந்த அக்கினிக் கடவுள், ஒரு தேரினைத் தன்னகத்தே கொண்டு பத்துத் தேர்களை வெல்லும் போர் வல்லமையுடைய சிபிச் சக்கரவர்த்தியின்பால் போந்து நற்கதியடையச் செய்த புறவம் நகர் மேவும் புண்ணியனே! எருது வாகனத்தில் அமர்ந்து அழகிய கையில் கபாலம் ஏந்தி நினைக் கருதியிருக்கும் மடவார் இடும் பிச்சையைக் கொள்ளாமல் அவர்கள் நினைத்து வாடுமாறு துயிலை வவ்வினையே!*

686. துவர்சேர் கலிங்கப் போர்வையாரும்
தூய்மையிலாச் சமணும்
கவர்செய்து உழலக் கண்டவண்ணம்
காரிகைவார் குழலார்
அவர்பூம் பலியோடு ஐயம்வவ்வா
யானலம் வவ்வுதியே
தவர்செய் நெடுவேல் சண்டன்ஆளச்
சண்பை அமர்ந்தவனே.

தெளிவுரை: *சண்பை என்னும் கோரைப்புல்லால் தனது குலம் அழிதலுக்குண்டான பாவம் அணுகாதவாறு, திருமால் (கண்ணபிரான்) பூசித்த சண்பை நகரில் நெடுவேலுடைய சண்டன் எனும் காலனை உதைத்து*

ஆளும் பெருமானே! துவராடையையுடைய சாக்கியரும், சமணரும் மனம் தேராது உழலுதலைப் போலத் தாருகவனத்து மாதர்களும் தேராது உழன்று திகைக்க, அவர்கள் இடும் பிச்சையை வவ்வாது, நலங்கள் யாவினையும் வவ்வுதல் செய்தனையே!

687. நிழலால் மலிந்த கொன்றைசூடி
நீறுமெய் பூசி நல்ல
குழலார் மடவார் ஐயம் வவ்வாய்
கோல்வளை வவ்வுதியே
அழலாய் உலகம் கவ்வைதீர
ஐந்தலை நீள்முடிய
கழல் நாகஅரையன் காவலாக
காழி அமர்ந்தவனே.

தெளிவுரை: உலகத்தின் துன்பம் தீரும் பொருட்டு ஐந்து தலைகளையுடைய நாகராசன் காவலாக விளங்கக் காழி நகரில் அமர்ந்த பெருமானே! ஒளிரும் கொன்றை மலர் சூடித் திருநீறு மெய்யில் விளங்க நீண்டு வளர்ந்த குழலையுடைய மடவார் இடும் பிச்சை கொள்ளாது வளையல்களை வவ்வினை!

688. கட்டார் துழாயன் தாமரையான் என்று
இவர்காண் பரிய
சிட்டார் பலிதேர்ந்து ஐயம்வவ்வாய்
செய்கலை வவ்வுதியே
நட்டார் நடுவே நந்தன் ஆள
நல்வினையால் உயர்ந்த
கொட்டாறு உடுத்த தண்வயல்சூழ்
கொச்சை அமர்ந்தவனே.

தெளிவுரை: மேன்மையில் விளங்கும் பிரமன் புதல்வனாகிய பராசரன் படகோட்டியின் மகனான

மச்சகந்தியை மணந்ததால் கருதப்பட்ட இழிவு நீங்கும் பொருட்டுக் கொச்சை நீங்க அமர்ந்து, விளங்கும் வயல்சூழ் கொச்சைவயம் அமர்ந்தவனே! துளசி மாலை அணிந்த திருமாலும், தாமரை மலரானாகிய பிரமனும் காணற்கு அரியவனாய்ப் பலி தேர்ந்து பிச்சை கொள்ளாது ஆடைகளை வவ்வினை!

689. கடையார் கொடிநன் மாடவீதிக்
கழுமலவூர்க் கவுணி
நடையார் பனுவல் மாலையாக
ஞானசம்பந்த னல்ல
படையார் மழுவன் மேல்மொழிந்த
பல்பெயர்ப் பத்தும் வல்லார்க்கு
அடையா வினைகள் உலகில் நாளும்
அமர்உலகு ஆள்பவரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: வாயில்கள்தோறும் தோரணங்களைக் கொண்ட நல்ல மாடவீதிகள் உடைய கழுமல ஊரில் கவுணியர் கோத்திரத்தில் உதித்த ஞானசம்பந்தர் நன்னடை மிகும் சந்தப் பாடல் மாலையாக மழுப்படையுடைய ஈசன் மேல் மொழிந்த பல பெயர்களைச் சிறப்பாகப் பெற்ற இத்திருப்பதிகத்தைப் பாட வல்லவர்களுக்கு, உலகில் எந்நாளும் வினைகள் சாராது. பிற்றைக் காலங்களில் தேவர் உலகில் விளங்கித் திகழ்வார்கள்.

64. திருப்பூவணம்

தல விளக்கம்: பாண்டிய நாட்டுத் தலம். பிரமன் பூசித்த தலம். பொன்னனையாள் எனும் தாசி வாழ்ந்து

சிவனடியார்களை வழிபட்ட தலம்; இறை திருப்பணி செய்த தலம். வைகைக் கரையில் உள்ளது. இத் தலத்தின் பிற பெயர்கள்: நெல் முடிக்கரை, புஷ்பவன்காசி, பிதுர் மோட்சபுரம், பாஸ்கரபுரம், லட்சுமிபுரம், பிரமபுரம்.

சுவாமி : பூவண நாதர்

அம்பிகை : மின்னனையாள், மின்னம்மை

தல மரம் : பலா

தீர்த்தம் : வைகை

பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

690. அறையார்புனலு மாமலரும்
ஆடரவார் சடைமேல்
குறையார் மதியும் சூடிமாதோர்
கூறுடையான் இடமாம்
முறையார் முடிசேர் தென்னர்சேரர்
சோழர்கள் தாம் வணங்கும்
திறையார் ஒளிசேர் செம்மை ஓங்கும்
தென்திருப் பூவணமே.

தெளிவுரை: பரம்பரையாக வந்துதித்த முடி மன்னர்களாய பாண்டிய வேந்தர்கள், சேர சோழ மன்னர்கள் அனைவரும் வணங்க', கப்பம் செலுத்தும் பொருள்களும் நிலவளமிக்க வயல்களும் பெருகும் தென் திருப்பூவணமானது, கங்கையும் மாமலரும் ஆடும் அரவமும் சடைமேல் திகழ, பிறைச் சந்திரனைச் சூடி மாதொரு பாகனாக விளங்கும் ஈசனார் இடமாகும்.

691. மருவார் மதில்மூன்று ஒன்ற எய்து
மாமலையான் மடந்தை
ஒருபால் பாகிமாகச் செய்த
உம்பர்பிரான் அவன்ஊர்
கருவார்சாலி ஆலை மல்கிக்
கழல் மன்னர் காத்தளித்த
திருவான் மலிந்த சேடர்வாழும்
தென் திருப் பூவணமே.

தெளிவுரை: *சாலி நெல்மணிகள் வளமாகத் திகழும்மாறு வீரக் கழல் அணிந்த மன்னர்கள் பாதுகாத்து வரவும், திருத்தக்க செல்வம் மலிந்த பெருமை மிக்கவர்கள் வாழும் தென் திருப்பூவணமானது, பகைவரின் மூன்று மதில்களையும் ஒரே நேரத்தில் எரித்து, மலையரசன் மகளாகிய பார்வதியை ஒரு பாகமாகச் செய்த தேவர் தலைவனுடைய ஊராகும்.*

சேடர் – பெருமையுடையவர்.

692. போரார் மதமா உரிவை போர்த்துப்
பொடியணி மேனியனாய்க்
காரார்கடலின் நஞ்சம் உண்ட
கண்ணுதல் விண்ணவன்ஊர்
பாரார்வைகைப் புனல்வாய் பரப்பிப்
பன்மணி பொன் கொழித்துச்
சீரார் வாரி சேரநின்ற
தென்திருப் பூவணமே.

தெளிவுரை: *பூமியில் பொலியும் வைகைக் கரையில் பொன்னும் மணிகளும் கொழிக்கச் செம்மையான நீர்வளம் பொருந்தி விளங்கும் தென் திருப்பூவண மானது, போர்முகத்து மத யானையின் தோலை உரித்துப் போர்த்துத் திருநீற்று மேனியனாய்க் கடல்*

நஞ்சுண்ட கண்ணுதல் மேவும், தேவனுடைய ஊர் ஆகும்.

693. கடியார் அலங்கல் கொன்றைசூடிக்
காதிலொர் வார் குழையன்
கொடியார் வெள்ளை ஏறுஉகந்த
கோவணவன் னிடமாம்
படியார்கூடி நீடி யோங்கும்
பல்புக ழாற் பரவச்
செடியார் வைகை சூழநின்ற
தென்திருப் பூவணமே.

தெளிவுரை: உலகத்தவர் ஒருங்குகூடி நிலைத்து, ஓங்கி நிற்கும் புகழ் விளங்கப் புதர்கள் போன்று செடிகள் மண்டிக் கிடக்கும் வைகைக் கரையில் இருக்கும் தென் திருப்பூவணமானது, மணம் கமழும் கொன்றை மாலை சூடிக் காதில் வெண்குழை அணிந்து வெண்மையான இடபக் கொடி விரும்பிய, கோவணம் அணிந்த ஈசன் இடமாகும்.

சிறப்புரை: ஈசன், காதில் ஒரு குழையன் என்பதனை, "சங்க வெண் குழை ஓர் காதிற் கோமாற்கே" எனத் திருநாவுக்கரசர் உரைத்தலும் காண்க.

கடி – நறுமணம்; அலங்கல் – மாலை; படி – உலகம்; படியார் – மக்கள், உலகத்தவர் கோவணவன்னிடமாம் – கோவணவன் இடம் – சந்தம் நோக்கி னகரம் மிகுந்தது.

694. கூரார் வாளி சிலையில் கோத்துக்
கொடிமதில் கூட்டழித்த
போரார்வில்லி மெல்லியலாள் ஓர்
பால்மகிழ்ந் தான்இடமாம்
ஆராஅன்பில் தென்னர்சேரர்
சோழர்கள் போற்றிசைப்பத்

தேரார் வீதி மாடநீடும்
தென்திருப் பூவணமே.

தெளிவுரை: பெருகி வளரும் பக்திப் பெருக்குடன் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் போற்றி வணங்குகின்ற தேர்கள் செல்லும் மாடவீதிகள் கொண்ட திருப்பூவண மானது, கூர்மையான அம்பினை வில்லில் கோத்து வாங்கி, மூன்று கொடிய மதில்களையுடைய புரங்களின் கூட்டை அழித்த, போர் செய்வதிற் சிறந்த வில்வீரராகிய ஈசர், மென்மையான இயல்பினை உடையவளாகிய உமாதேவியை ஒரு பக்கம் இருத்தி மகிழும் இடமாகும்.

கூர்ஆர்வாளி – கூரிய அம்பு; சிலை – வில்; ஓர்பால் – ஒரு பக்கம்; தென்னர் – பாண்டியர்; தேரார் வீதி – தேர்கள் விளங்கும் வீதி.

695. நன்று தீதுஎன்று ஒன்று இலாத
நான் மறையோன் கழலே
சென்று பேணி யேத்த நின்ற
தேவர்பிரான் இடமாம்
குன்றில் ஒன்றி ஓங்க மல்கு
குளிர்பொழில் சூழ்மலர்மேல்
தென்றல் ஒன்றி முன்றில் ஆரும்
தென் திருப் பூவணமே.

தெளிவுரை: குன்றுகளில் தவழ்ந்தும் ஓங்கிப் பெருகும் குளிர்ச் சோலைகளில் விளங்கும் மலர்கள் மீதும் பொருந்தி, மருந்தும் மணமும் பெருக வரும் தென்றல் காற்று வீசும் முற்றங்களையுடைய பூவணமானது, எதனாலும் நன்மையோ அன்றித் தீமையோ, அடையாதவனாய், நான்மறையோனாய்த் தேவர் தலைவனாய், அவன் கழலையே யாவரும் ஏத்தக் கூடியதாய் உள்ள இடம் ஆகும்.

சிறப்புரை: இத்தகு சிறப்பினைப் "பூவணம் அதனில் பொலிந்து இருந்து அருளி" என மாணிக்கவாசகர் கீர்த்தித் திரு அகவலில் குறிப்பதும் நோக்குக.

696. பைவாய் அரவம் அரையில்சாத்திப்
பாரிடம் போற்றிசைப்ப
மெய்வாய் மேனி நீறுபூசி
ஏறுகந்தான் இடமாம்
கைவாழ் வளையார் மைந்தரோடும்
கலவியினால் நெருங்கிச்
செய்வார் தொழிலின் பாடல்ஓவாத்
தென்திருப் பூவணமே.

தெளிவுரை: கை வளையல்கள் அணிந்த மகளிர் தம் கணவன்மார்களுடன் மகிழ்வு எய்தியும், செய்யும் தொழிலின் நாட்டத்தால் பாடல் இசைத்துப் பணி செய்யும் தன்மை குறையாது, எப்போதும் மேவும் திருப் பூவணமானது, படம் எடுத்து ஆடும் அரவத்தை அரையில் கட்டிப், பூதங்கள் போற்றிப் பாட, மெய்ம்மை வழியாய் விளங்கும் திருமேனியில் நீறு பூசி, ஏற்றினை வாகனமாகக் கொண்டவன் இடமாகும்.

சிறப்புரை: ஈசன் திருமேனி மெய்ம்மையுடன் எல்லாக் காலங்களிலும் விளங்கி நிற்றலை, மெய்வாய் மேனி என உணர்த்தப் பட்டது. மகளிர் தம் கணவருடன் மகிழ்ந்து பாடுகின்ற தன்மையும் புலப்படுத்தப்பட்டது. வயலில் பணி செய்வோர் (செய் - வயல்) பாடும் பாடலையும், உழவு, கவலை, ஏற்றம் முதலானவை குறித்தலும் பொருந்தும்.

பை – படம்; பாரிடம் – பூதம்; கைவாழ் வளையார் – மகளிர்; மைந்தர் – கணவர்.

697. மாட வீதி மன்னிலங்கை
மன்னனை மாண் பழித்துக்
கூடவென்றி வாள்கொடுத்தாள்
கொள்கையினார்க்கு இடமாம்
பாடலோடும் ஆடல் ஓங்கிப்
பன்மணி பொன்கொழித்து
ஓடி நீரால் வைகை சூழும்
உயர்திருப் பூவணமே.

தெளிவுரை: *பக்திப் பெருக்குடன் கூடிய பாடலும் ஆடலும் விளங்கவும், பலவிதமான உயர்ந்த மணிகளும் பொன்னும் கொழித்துப் பெருகி, வைகையின் நீரால் சூழ்ந்த திருப்பூவணமானது, மாட வீதிகளையுடைய இலங்கையின் மன்னனுடைய மாண்பினை அழித்துப் பின்னர் அவன் மனம் பொருந்திக் கூட, வெற்றி தரும் வாளைக் கொடுத்த பண்புடைய ஈசனார்க்கு இடமாகும்.*

மாண் பழித்து; மாண்பு அழித்து – பொருள் நயம் நோக்குக.

698. பொய்யாவேத நாவினானும்
பூமகள் காதலனும்
கையால் தொழுது கழல்கள் போற்றக்
கனல்எரி யானவன்ஊர்
மையார் பொழிலின் வண்டுபாட
வைகை மணிகொழித்துச்
செய்யார் கமலம் தேனரும்பும்
தென்திருப் பூவணமே.

தெளிவுரை: *பசுமையான பொழிலில் வண்டுகள் இசைத்து ரீங்காரம் செய்ய, வைகை நதியானது மணிகளைக் கொழிக்கச் சிறப்பான நீர்வளம் நிறைந்த வயல்களில் தாமரை மலரில் தேன் துளிர்க்கும் பூவண*

மானது, பொய்ம்மை யடையாத வேதத்தை ஓதும் பிரமனும், திருமாலும், கையால் தொழுது போற்றித் துதிக்கச் சோதிப் பிழம்பாகத் தோன்றிக் காட்சி நல்கிய ஈசனார் ஊராகும்.

மை – பசுமை; செய் – வயல்.

699. அலையார்புனலை நீத்தவரும்
தேரரும் அன்பு செய்யா
நிலையா வண்ண மாயம் வைத்த
நின்மலன்றன் னிடமாம்
மலைபோல் துன்னி வெற்றியோங்கு
மாளிகை சூழ்ந்து அயலே
சிலை ஆர்புரிசை பரிசு பண்ணும்
தென்திருப் பூவணமே.

தெளிவுரை: *மலை போன்று உயர்ந்த மாட மாளிகைகள் வெற்றிவாகை சூடியதைப் போன்று பொலிவடைந்து இருக்க, உறுதியான மலை போன்ற மதில்கள் சூழ்ந்த பயன்தரும் பூவணமானது, நீராடலை விடுத்தவரும், பௌத்தரும், அன்பு செய்யாதவாறு மாயையைத் தோற்றுவித்த நின்மலனாகிய ஈசனின் இடமாகும்.*

சிறப்புரை: *மாயை யானது நிலைத்த தன்மையற்றது எனக் குறிக்கும் வண்ணம் நிலையா வண்ணம் என உணர்த்தப்பட்டது. அவனருளாலே அவன் தாள் வணங்குதலைப் போன்று மாயை நீங்காமையும் அவனருளால் விளைபவை எனவும் சுட்டப் பெறுதல் காண்க.*

சிலை – மலை; புரிசை – மதில்.

700. திண்ணார் புரிசை மாடம் ஓங்கும்
தென்திருப் பூவணத்துப்
பெண்ணார் மேனி எம்மிறையைப்
பேரியலின் தமிழால்
நண்ணார் உட்கக் காழிமல்கு
ஞானசம் பந்தன் சொன்ன
பண்ணார் பாடல் பத்தும் வல்லார்
பயில்வது வானிடையே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: வலிமையான மதில்களும் மாட மாளிகைகளும் ஓங்கும் பூவணத்தில், உமா தேவியைப் பாகமாக உடைய எம் இறையைப் பெருமைமிக்க இயல்பினதாகிய தமிழ் மொழியால், பகைவர்கள் அச்சம் பெறும் காழியில் விளங்கும் ஞானசம்பந்தன் சொன்ன இத் திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள் வானுலகில் விரும்பித் திகழ்வார்கள்.

நண்ணார் உட்க – பகைவர்கள் அச்சம் கொள்ள.

65. காவிரிப் பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரம்

தல விளக்கம்: காவிரி வடகரைத்தலம். காவிரிப்பூம் பட்டினம், பூம்புகார் என வழங்கப்படுகிறது. பல்லவ மன்னன் வழிபட்ட தலம். இயற்பகை நாயனார், பட்டினத்துப் பிள்ளையார் அவதாரப் பதி.

சுவாமி : பல்லவனேஸ்வரர்

அம்பிகை : சௌந்தர நாயகி

தல மரம் : மல்லிகை

தீர்த்தம் : சங்கம தீர்த்தம் (காவிரி)

பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

701. அடையார்தம் புரங்கள் மூன்றும்
ஆரழலில் அழுந்த
விடையார் மேனி யராய்ச் சீறும்
வித்தகர் மேய இடம்
கடைஆர் மாட நீடிஎங்கும்
கங்குல் புறம்தடவப்
படைஆர் புரிசைப் பட்டினஞ்சேர்ப்
பல்லவ னீச் சரமே.

தெளிவுரை: *அடைக்கலம் புகுந்து, பணியாத முப்புரத்து அசுரர்களை நெருப்பால் அழித்துத் தீக்கு இரையாக்கி, சீற்றம் மிக்க இடபத்தை வாகனமாக உடைய திருமேனியராய், எல்லாம் வல்ல வித்தகராய் விளங்கும் ஈசன் மேவும் இடமானது, மதில்களை யுடைய மாட மாளிகைகள் வானத்தைத் தொடும் அளவு உயர்ந்து பொலியும் காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரம் ஆகும்.*

கடை – வாயில்; கங்குல்புறம் – வானம்; படை – அடுக்குகள்.

702. எண்ணார் எயில்கண் மூன்றும் சீறும்
எந்தை பிரான் இமையோர்
கண்ணாய் உலகம் காக்க நின்ற
கண்ணுதல் நண்ணும் இடம்
மண்ணார் சோலைக் கோலவண்டு
வைகலும் தேன் அருந்திப்
பண்ணார் செய்யும் பட்டினத்துப்
பல்லவ னீச்சரமே.

தெளிவுரை: *நன்மையை எண்ணிப் பாராத பகைவர்களின் மூன்று கோட்டைகளையும் சீற்றங் கொண்டு அழித்த எந்தை பிரான், தேவர்களைக் கண் போன்று*

காக்கின்ற கண்ணுதல். அப்பெருமான் நண்ணி விளங்கும் இடமானது, மண்ணுலகில் உள்ள சோலைகளில் வண்டுகள் தேன் அருந்தி எஞ்ஞான்றும் மகிழ்ந்து பண் இசைக்கும் காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரமே.

சிறப்புரை: மண்ணுலகில் செய்த புண்ணியப் பயன் காரணமாகவும், உயர்ந்த பிறப்பின் தன்மையினாலும், இமையவர்களைக் கண் போன்று காக்கும் பரன் என, மரபின் வழி உணர்த்தப் பட்டது. மண்ணுலகத்தின் இயக்கத்திற்கும், அக்கினி, நீர், மருந்து, வளம் முதலான யாவும் சிறந்து விளங்குவதற்குத் தேவர்கள் அதிதேவதைகளாகி நின்று காத்தல் செய்ய, அவர்களுக்குப் பெருமான் கண்ணாக விளங்கி உலகினைக் காத்தருள் புரிகின்றான் எனலும் பொருந்தும்.

703. மங்கை அங்கோர் பாகமாக
வாள்நிலவு ஆர் சடைமேல்
கங்கை அங்கே வாழவைத்த
கள்வன் இருந்த இடம்
பொங்கு அயம்சேர் புணரிஓத
மீதுயர் பொய் கையின்மேல்
பங்கயம்சேர் பட்டினத்துப்
பல்லவ னீச்சரமே.

தெளிவுரை: உமாதேவி ஒரு பாகத்தில் பொருந்தி விளங்க, ஒளி பொருந்திய நிலவு நீண்ட சடையில் இருக்க, அதன்மேல் கங்கையை எப்போதும் திகழுமாறு வைத்த கள்வனாகிய ஈசன் இருக்கும் இடம், ஆழ் கடலின் நீர் ஓதம் கொள்ளவும், பொய்கையில் தாமரை மலர்கள் விளங்கவும் உள்ள காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரமாகும்.

அயம் – பள்ளம், கடலைக் குறித்தது; பங்கயம் – தாமரை.

704. தார்ஆர் கொன்றை பொன்தயங்கச்
சாத்திய மார்பகலம்
நீர்ஆர் நீறு சாந்தம் வைத்த
நின்மலன் மன்னும் இடம்
போர்ஆர் வேற்கண் மாதர்மைந்தர்
புக்கிசை பாடலினால்
பார்ஆர்கின்ற பட்டினத்துப்
பல்லவ னீச்சரமே.

தெளிவுரை: *கொன்றை மலர்மாலை மார்பில் தவழ்ந்து பொன்னொளியை நல்க, இனிமை பொருந்திய திருவெண்ணீறு, சந்தனம் ஆகியன உடன் பொருந்தக் கமழ வைத்துள்ள நின்மலனாகிய ஈசன் விளங்கும் இடமாவது, பகைவரை அழிக்கும் வேல் போன்ற கண்களையுடைய மாதர்கள் தம் கணவருடன் சேர்ந்து, இசைப் பாடல்களைப் பார் மணக்கப் பாடும் காவிரிப் பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரம் ஆகும்.*

705. மைசேர்கண்டர் அண்டவாணர்
வானவரும் துதிப்ப
மெய்சேர் பொடியன் அடியார்ஏத்த
மேவி இருந் தஇடம்
கைசேர் வளையார் விழைவினோடு
காதன்மை யால் கழலே
பைசேர் அரவார் அல்குலார்சேர்
பல்லவ னீச்சரமே.

தெளிவுரை: *கரிய வண்ணமுடைய நஞ்சினைக் கொண்ட கண்டத்தை உடையவராய், அண்டங்கள் யாவற்றிலும் விளங்குபராய், வானவர்கள் துதித்துப் போற்றத் திருமேனியில் திருவெண்ணீற்றைத் தரித்த வராய், அடியவர்கள் ஏத்தி வணங்க, மேவும் ஈசன் விளங்கும் இடமாவது, கைகளில் வளையல் அணிந்த*

மகளிர் விருப்பத்தோடு இறைவன் கழல் பணிந்து வாழும் பல்லவனீச்சரம் ஆகும்.

சிறப்புரை: ஈசனார் தூல சூக்குமமாய் விளங்கி அண்டங்கள் தோறும் விளங்குதல் அண்டவாணர் என உணர்த்தப் பெற்றது. இவ்வண்டங்கள், நூற்று ஒரு கோடியினும் மேற்பட விரிந்தன என்றும், அளவற்ற அண்டங்களை உடையவன் ஈசன் எனவும், மாணிக்க வாசகர் கூற்றால் அறிக. எல்லா அண்டங்களுக்கும் ஈசன் ஒருவனே முழு முதலாக உள்ளவன் என்பதும் உணரற்பாலதாகும்.

பொடியன் – திருநீறு தரித்தவன், ஈசன்.

706. குழலினோசை வீணை மொந்தை
கொட்ட முழவதிரக்
கழலினோசை ஆர்க்க ஆடும்
கடவுள் இருந்த இடம்
சுழியில்ஆரும் கடலில்ஓதம்
தெண் திரை மொண்டெறியப்
பழியிலார்கள் பயில்புகாரின்
பல்லவ னீச்சரமே.

தெளிவுரை: புல்லாங்குழல், வீணை ஆகிய இசைக் கருவிகளும், மொந்தை, கொட்டு வாத்தியம், முழவு ஆகிய வாத்தியங்களும் இயம்ப, காலில் சலங்கை அணிந்து, அவ்வொலிகள் யாவும் இணைந்து பொருந்த, நடம் புரியும் கடவுளாகிய ஈசன் விளங்கும் இடமாவது நீர்ச்சுழிகளையுடைய கடலின் ஓதம் அலைகளை வாரி எறியவும், பழிப்பு அற்ற நற் குணத்தை உடையவர்கள் விளங்கவும் திகழும் பூம்புகாரின் பல்லவனீச்சரமே.

மொந்தை கொட்ட – மொந்தை எனும் கருவி கொட்டி முழங்குதலும் ஆகும்.

707. வெந்தலாய வேந்தன் வேள்வி
வேர்அறச் சாடி விண்ணோர்
வந்துஎலாமுன் பேண நின்ற
மைந்தன் மகிழ்ந்த இடம்
மந்தலாய மல்லிகையும்
புன்னை வளர்குரவின்
பந்தலாரும் பட்டினத்துப்
பல்லவ னீச்சரமே.

தெளிவுரை: *தெய்வத்தன்மை வெந்து மாயுமாறு நிகழ்த்திய தக்கன் வேள்வியை மூவரோடு அழித்துத் தேவர்கள் எல்லாம் தொழுமாறு நின்று விளங்கும் இடமாவது, மலர்ந்து விரிந்து மயலைத் தரவல்ல மல்லிகையும் புன்னை மற்றும் குரவமும், பந்தல் போன்று படரும் காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரம் ஆகும்.*

சிறப்புரை: *தலமரமான மல்லிகை குறிப்பிடப் பட்டுள்ளது. வெந்தல் – அழிதல்.*

708. தேர்அரக்கன் மால்வரையைத்
தெற்றி எடுக்க அவன்
தார்அரக்கும் திண்முடிகள்
ஊன்றிய சங்கரன்ஊர்
கார்அரக்கும் கடல்கிளர்ந்த
கால மெலாம் உணரப்
பார்அரக்கம் பயில்புகாரிற்
பல்லவ னீச்சரமே.

தெளிவுரை: *தேரை உடைய அரக்கன் பெருமை பொருந்திய கயிலையைத் தான் செல்லும் பாதைக்குத் தடையாக உள்ளதென எண்ணிப் பெயர்த்து எடுக்க, அவனுடைய மாலை பதிந்த திண்மையான முடிகள்*

அழுந்துமாறு ஊன்றிய சங்கரனுடைய ஊரானது, கடலானது கிளர்ந்து எழுந்த காலத்திலும் விளங்கி, உலக மக்கள் உருத்திராக்கம் அணிந்து நல்லொழுக்கம் பயிலும் நெறியுடைய புகாரின் பல்லவனீச்சரமே ஆகும்.

தெற்றுதல் – பாதையைத் தடுத்தல்; தார் அரக்கும் – மாலை பதிந்திருக்கும்; அக்கம் – உருத்திராக்கம்.

709. அங்கம்ஆறும் வேத நான்கும்
ஓதும் அயன் நெடுமால்
தம்கணாலும் நேடநின்ற
சங்கரன் தங்கு மிடம்
வங்கம்ஆரும் முத்தம்இப்பி
வார்கடல் ஊடு அலைப்பப்
பங்கம்இல்லார் பயில்புகாரிற்
பல்லவ னீச்சரமே.

தெளிவுரை: நான்கு வேதங்களும் அதனுடைய ஆறு அங்கங்களும் ஓதும் அயனும், திருமாலும், தமது கண்களாலும் தேட நின்ற சங்கரன் தங்கி இருக்கும் இடமாவது, மரக்கலங்கள் செல்லும் கடலில் உள்ள சிப்பிகள் முத்துக்களை நல்க, பங்கம் இல்லாத பெருமக்கள் பயிலும் பூம்புகாரின் பல்லவனீச்சரமே யாகும்.

சிறப்புரை: ஈசனை நெஞ்சினால் தேட வேண்டும் என்ற கொள்கையை நீக்கிக் கண்களால் தேடிய நான்முகன் மற்றும் திருமாலின் செயலைக் குறிப்பிடுதலும், அத்தகைய தன்மையில் இல்லாது, பங்கமில்லாது நெஞ்சாரத் தொழும் பக்தர்கள் விளங்கும் புகார் நகரம் என்பது குறிப்பு.

இறைவன் வீற்றிருக்கும் தன்மையினை, "நாடி நாரணன் நான்முகன் என்று இவர், தேடியும் திரிந்தும் காண வல்லரோ! மாட மாளிகைசூழ் தில்லை அம்பலத்து ஆடியபாதம் என் நெஞ்சுள் இருக்கவே," எனத் திருநாவுக்கரசர் கூறுதலும் நினைக்கத்தக்கது.

வங்கம் – மரக்கலன், கப்பல்.

710. உண்டு உடுக்கை இன்றியே நின்று
ஊர் நகவே திரிவார்
கண்டு உடுக்கை மெய்யில் போர்த்தார்
கண்டு அறியாத இடம்
தண்டு உடுக்கை தாளம் தக்கை
சார நடம் பயில்வார்
பண்டு இடுக்கண் தீர நல்கும்
பல்லவ னீச்சரமே.

தெளிவுரை: உடுக்கை இன்றி உணவினைப் பெரிதாகக் கருதுபவர்களும், உடுக்கையை மெய்யில் போர்த்து அணிந்தவர்களும் ஆகிய புறநெறியாளர், ஈசனையும், அவன் அருளையும் கண்டு மகிழ்ந்து தரிசிக்க இயலாத இடமானது, தண்டும், உடுக்கை என்னும் வாத்தியமும், தாளம், தக்கை முதலான வாத்தியங்களும் பயில, முன் வினைப் பயனால் உண்டாகும் துன்பம் தீர அருள் நல்கும் பல்லவனீச்சரம் ஆகும்.

உண்டு உடுக்கை இன்றி – உணவு கொண்டு ஆடை இன்றி; கண்டு உடுக்கை மெய்யில் போர்த்தல் – காணும் தன்மையில் ஆடை போர்த்தல்; தண்டு உடுக்கை – பிரமத் தண்டும், உடுக்கை எனும் வாத்தியமும்.

711. பத்தர் ஏத்தும் பட்டினத்துப்
பல்லவனீச்சரத்து எம்
அத்தன் தன்னை அணி கொள்காழி
ஞானசம்பந்தன் சொல்

சித்தம் சேரச் செப்பு மாந்தர்
தீவினை நோய் இலராய்
ஒத்துஅமைந்த உம்பர்வானில்
உயர்வினொடு ஓங்குவரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *பக்தர்கள் எல்லோரும் தொழுது ஏத்தும் காவிரிப்பூம் பட்டினத்துப் பல்லவனீச்சரத்தில் மேவும் எம் அன்பிற்குரிய ஈசனைப் போற்றிக் காழியின் ஞான சம்பந்தன் சொல்லிய இத் திருப்பதிகத்தைச் சித்தத்தில் பதித்துச் சொல்ல வல்லவர்கள், தீவினையாகிய நோய் அற்றவராய், தேவர் உலகில் ஒத்த உரிமை பூண்டு உயர்வுடன் ஓங்குவார்கள்.*

66. திருச்சண்பை நகர்

தல விளக்கம்: *பதிக எண் 1 காண்க.*

பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

712. பங்கம் ஏறு மதிசேர் சடையார்
விடையார் பல வேதம்
அங்கம் ஆறு மறை நான்கவையும்
ஆனார் மீன்ஆரும்
வங்க மேவு கடல்வாழ் பரதர்
மனைக்கே நுனைமூக்கின்
சங்கம்ஏறி முத்தம் ஈனும்
சண்பை நகராரே.

தெளிவுரை: *குறைவு உடைய சந்திரனைத் தரித்துச் சடைமுடியும் இடப வாகனமும் உடையவராய், நான்*

மறையாகவும் அதன் ஆறு அங்கமும் ஆகியவராய் விளங்கும் ஈசன், பல் வண்ணங்களை உடைய மீன்கள் திகழ, தோணிகள் மேவ, கடற்புரத்தில் வாழும் பரதர்கள் மனைக்குக் கூரிய மூக்குகளை உடைய சங்குப் பூச்சிகள் ஏறி முத்துக்களை ஈனுகின்ற சண்பை நகரத்திற்கு உரியவராவர்.

பங்கம் – குறைவு; பரதர் – கடல் சார்ந்து வாழும் நெய்தல் நிலத்து மக்கள். சங்கம் – சங்குப் பூச்சிகள்.

713. சூதகம் சேர் கொங்கையாள் ஓர்
பங்கர் சுடர்க் கமலப்
போதகம் சேர் புண்ணியனார்
பூத கண நாதர்
மேதகம் சேர் மேகம் அந்தண்
சோலையில் விண்ணார்ந்த
சாதகம் சேர் பாளை நீர்சேர்
சண்பை நகராரே.

தெளிவுரை: தீண்டரிய தனங்கள் கொண்ட உமா தேவியை ஒரு பங்குடைய ஈசனார், ஒளிர்விடும் கமல மலரில் விளங்கும் புண்ணியனார்; பூத கணங்களுக் கெல்லாம் நாதனார். அவர், மேன்மையான மேகம் சூழ்ந்த குளிர்ச்சி மிக்க சோலை விண்ணார்ந்து விளங்கத் தேன், கமுகு முதலான மரங்களின் பாளைகளில் தேன் சொரியும் சண்பை நகரினர்.

சூதகம் – தீண்டுதற்கு உரியதாகாதது; மேதகம் – மேதகு, மேன்மை; சாதகம் – ஒருவகைப் பறவை.

714. மகரத்துஆடு கொடியோன்உடலம்
பொடிசெய்தவ னுடைய
நிகர்ஒப்பில்லாத தேவிக்குஅருள்செய்
நீலகண் டனார்

பகரத் தாரா அன்னம் பகன்றில்
பாதம் பணிந்து ஏத்தத்
தகரப் புன்னை தாழைப்பொழில்சேர்
சண்பை நகராரே.

தெளிவுரை: மன்மதனை எரித்துச் சாம்பலாக்கி, அவனுடைய தேவியாகிய இரதிக்கு மட்டும் தெரியுமாறு, அருள் செய்த நீலகண்டனாராகிய ஈசன், தாரா, அன்னம் முதலான பறவைகள் ஏத்திப் பணியப், புன்னை, தாழைப் பொழில்கள் சேர் சண்பை நகருடையவர்.

மகரித்து ஆடு கொடியோன் – மன்மதன்.

715. மொய்வல்லசுரர் தேவர்கடைந்த
முழுநஞ்சது உண்ட
தெய்வர்செய்ய உருவர்கரிய
கண்டர்திகழ் சுத்திக்
கையர்கட்டங் கத்தர்கரியின்
உரியர் காதலால்
சைவர்பாசு பதர்கள் வணங்கும்
சண்பை நகராரே.

தெளிவுரை: வலிமையான அசுரர்களும், தேவர்களும் பாற்கடலில் அமுதம் நாடிக் கடைந்தபோது, முதற் கண் தோன்றிய நஞ்சு முழுவதும் உண்ட தெய்வ நாயகர், சிவந்த வடிவினர்; கரிய கண்டத்தை உடையவர்; திகழும் மழுப்படையைக் கரத்தில் உடையவர்; வாள் படை உடையவர்; யானையின் தோலை உரித்தவர்; அன்புடன் பழகுவதில் சைவர்; பாசுபதர்கள் வணங்கும் சண்பை நகரார் ஆவர்.

சிறப்புரை: "அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின், அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே" எனவும்; "சைவம்

சிவனுடன் சம்பந்தம் ஆவது" எனவும், வரும் திரு மந்திரப் பாடல்களின் கருத்தும், இவண், காதலால் சைவர் என உணர்த்தப்படுவதும், "சைவத்தின் மேற் சமயம் வேறில்லை" என உரைக்கப் பெறுவதும் நோக்குக.

716. கலம்ஆர் கடலுள் விடம்உண்டு அமரர்க்கு
அமுதம் அருள் செய்த
குலம்ஆர் கயிலைக் குன்றது உடைய
கொல்லை எருது ஏறி
நலமார் வெள்ளை நாளி கேரம்
விரியா நறும்பாளை
சலம்ஆர் கரியின் மருப்புக்காட்டும்
சண்பை நகராரே.

தெளிவுரை: *கடலில் தோன்றிய நஞ்சினைத் தான் ஏற்று உண்டு, தேவர்கள் அமுதம் அருந்துமாறு அருள் செய்த, கயிலைமலை நாயகர் இடபவாகனத்தில் அமரும் ஈசர். அப்பெருமான், தென்னை மரத்தின், விரியாத பாளையானது, யானையின் வெண்மையான கொம்பினை ஒத்து விளங்கும் எழில் கொண்ட சண்பை நகரத்தினர்.*

நாளி கேரம் – தென்னை.

717. மாகரம்சேர் அத்தியின் தோல்
போர்த்து மெய்ம் மாலான்
சூகரம்சேர் எயிறு பூண்ட
சோதியன் மேதக்க
ஆகரம்சேர் இப்பி முத்தை
அந்தண் வயலுக்கே
சாகரம்சேர் திரைகள் உந்தும்
சண்பை நகராரே.

தெளிவுரை: சிறப்பான நீண்ட துதிக்கையுடைய யானையின் தோலை உரித்துப் போர்த்தித் திருமால் பன்றி அவதாரம் மேற்கொண்ட ஞான்று, வெற்றிக் களிப்பில் திரிய, அவ்வாற்றலை அடக்கும் விதத்தில் அதன் பல்லை உகுத்து அணியாகப் பூண்ட சோதி வடிவினராய் விளங்குபவர் ஈசன். அவர், முத்துக் களின் பிறப்பிடமாகிய, கடலில் விளங்கும் சிப்பிகளைத், தம் அலைகளால் அழகிய வயலுக்கு உந்திச் செலுத்தும் சிறப்பினையுடைய சண்பை நகரினர் ஆவர்.

சிறப்புரை: ஈசனை வணங்குவோர்க்குச் செல்வங்கள் தாமே சென்று அடையும் எனும் சிறப்பு, முத்துக்களை வயல்களில் சேர்க்கும் கடல் அலைகள் எனும் காட்சி யின் வாயிலாக உணர்த்தப்பட்டது.

மாகரம் – துதிக்கை; அத்தி – யானை. சூகரம் – பன்றி; எயிறு – பல். ஆகரம் – உறைவிடம் (கடல்).

718. இருளைப் புரையு நிறத்தில் அரக்கன்
தனைஈடு அழிவித்து
அருளைச் செய்யும் அம்மான் ஏரார்
அந்தண் கந்தத்தின்
மருளைச் சுரும்பு பாடி அளக்கர்
வரையார் திரைக்கையால்
தரளத் தோடு பவளம் ஈனும்
சண்பை நகராரே.

தெளிவுரை: இருள் போன்ற கரிய நிறத்தினனாகிய இராவணனுடைய பெருமையைக் குலைத்துப் பின்னர் அவ் அரக்கன் பணிந்து வேண்ட அருள் செய்த அழகிய தலைவன், ஈசன். அப்பெருமான், வாசனை பொருந்திய மலர்களில் மருள் எனும் இசையை

வண்டுகள் பாடவும், கடல் தனது உயர்ந்து விளங்கும் அலைகளாகிய கைகளால் முத்தும் பவளமும் வழங்கும் சண்பை நகரத்தினர்.

சிறப்புரை: முத்தும் பவளமும் ஆகிய கடல் செல்வங்கள் மிகுந்திருத்தலையும், அவை ஈசன் திருப்பணிக்கு ஆற்று மாறு காணிக்கையாக்கப் பெறுதலும், உணர்த்துவ தாயிற்று. திருப்பணிக்குத் தரப்படும் பொருள்களின் சிறப்பு வரையார் திருக்கை எனக் குறிக்கப் படுதலும் நோக்குக.

அரக்கனின் கீழ்மைக் குணத்தைப் புலப்படுத்தும் வகையில் அவனுடைய கருமை வண்ணம் இருளுக்கு ஒப்புமை கூறப்படுதலும் ஓர்க.

ஈடு – பெருமை; சுரும்பு – வண்டு; அளக்கர் – கடல்.

719. மண்தான் முழுதும் உண்டமாலும்
மலர்மிசை மேல்அயனும்
எண்தான் அறியா வண்ணநின்ற
இறைவன் மறையோதி
தண்டுஆர் குவளைக் கள்ளருந்தித்
தாமரைத் தாதின்மேல்
பண்தான் கொண்டு வண்டு பாடும்
சண்பை நகராரே.

தெளிவுரை: உலகத்தை முழுதும் உண்டு பாதுகாத்துப் பின்னர் வெளியே விடுத்த திருமாலும், மலர்மேல் உறைபவனாகிய பிரமனும், எள்ளளவும் அறியாதவாறு விளங்கி நின்ற இறைவன், ஈசன். வேதங்களால் போற்றிப் புகழப்பெறும் அப்பெருமான், வண்டானது குவளை மலரில் உள்ள தேனை அருந்தித் தாமரை

மலரின்மேல் வட்டமிட்டு இசை பாடும் சண்பை நகரத்தவர் ஆவார்.

720. போதியாரும் பிண்டியாரும்
புகழ்அல சொன்னாலும்
நீதியாகக் கொண்டு அங்கு அருளு(ம்)
நின்மலன் இருநான்கின்
மாதிசித்தர் மாமறையின்
மன்னிய தொல்நூலர்
சாதிகீத வர்த்தமானர்
சண்பை நகராரே.

தெளிவுரை: பௌத்தர்களும், சமணர்களும் புகழற்ற சொற்களைத் கூறினாலும், அவற்றைப் புகழ்ச் சொல்லாக ஏற்று நடுநிலை பேணி அருள் நல்குபவர் ஈசன். அப்பெருமான், அட்டமாசித்திகளில் வல்லவர்; வேத விற்பன்னர்; சாதகம் செய்யப்படும் இசைக் கீதங்களில் மிக்கவர்; சண்பை நகரில் விளங்குபவர்.

வர்த்தமானம் – நன்மை பெருகுதல்.

721. வந்தியோடு பூசையல்லாப்
போழ்தின் மறைபேசிச்
சந்திபோதிற் சமாதி செய்யும்
சண்பை நகர் மேய
அந்தி வண்ணன் தன்னைஅழகார்
ஞானசம் பந்தன்சொல்
சிந்தைசெய்து பாடவல்லார்
சிவகதி சேர்வாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: வந்தனை செய்து வழிபட்டுப் பூசனை ஆற்றும் உமாதேவியுடன் வேதத்தின் சாரங்களை உபதேசித்து, ஏனைய காலை, மாலை முதலான சந்திக்

காலத்தில் சமாதி நிலை கொண்டு அடியவர்களின் – பக்த கோடிகளின் பூசைகளை ஏற்று விளங்கும் சண்பை நகர் மேய செவ்வண்ணனாகிய ஈசனை, ஞானசம்பந்தன் ஏத்திப்பாடிய அழகு பொருந்திய இச் சொல் மாலையைச் சிந்தித்துப் போற்றிப் பாடவல்ல வர்கள் சிவகதி அடைவார்கள்.

சிறப்புரை: சந்திக் காலங்களில் பக்த கோடிகள் பூசை யாற்றும் கொள்கையினால் சமாதிநிலையில் ஈசன் உள்ளார் எனும் கருத்து இவண் உணர்த்தப்படுகிறது..

அந்தி வண்ணன் – மாலைக்காலக் கதிர் வண்ணன், செவ்வண்ணன், ஈசன்.

67. திருப்பழனம்

தல விளக்கம்: காவிரி வடகரைத் தலம். கதலிவனம் என்ற பெயரும் உண்டு. சந்திரன் வழிபட்டது.

சுவாமி : ஆபத்சகாயர்

அம்பிகை : பெரியநாயகி

தல மரம் : வாழை

தீர்த்தம் : மங்கள தீர்த்தம், காவிரி

பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

722. வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு
வெள்ளை எருதேறிப்
பூதம் சூழப் பொலிய வருவார்
புலியின் உரி தோலார்
நாதா எனவு(ம்) நக்கா எனவு(ம்)
நம்பா என நின்று

பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார்
பழன நகராரே.

தெளிவுரை: வேதத்தை ஓதி, முப்புரி நூல் தரித்து வெண்மையான இடபத்தில் அமர்ந்து, பூத கணங்கள் புடை சூழ, புலியின் தோலை ஆடையாக உடுத்தி, பொலியும் சிறப்புடன் காட்சி நல்கும் ஈசன், நாதா! நக்கா! நம்பா! என மனம் ஒருமித்து நின்று பாதம் தொழுபவர்களின் பாவம் தீர்ப்பவர். அவர் பழன நகரில் விளங்குபவர்.

நக்கன் – நிர்வாணி.

723. கண்மேல் கண்ணும் சடைமேல் பிறையும்
உடையார் காலனைப்
புண்ணாறுதிரம் எதிர்ஆறுஓடப்
பொன்றப்புறம் தாளால்
எண்ணாதுஉதைத்த எந்தை பெருமான்
இமவான் மகளோடும்
பண்ணார் களிவண்டு அறைபூஞ்சோலைப்
பழன நகராரே.

தெளிவுரை: நெற்றிக் கண்ணும் சடையின்மேல் பிறைச் சந்திரனும் உடைய ஈசன், மார்க்கண்டேயருக்கு உதவும் வகையில், காலனைப் புண்படுத்தி உதிரம் வெளிப்பட்டு ஆறாக ஓடுமாறு, புறந்தாளால், அவனை ஒரு பொருட்டாகக் கருதாமல் உதைத்தவர். அப்பெருமான், உமாதேவியோடு, வண்டுகள் மகிழ்வுடன் பண்ணிசைக்கும் பழன நகரில் விளங்குபவர்.

கண்மேல்கண் – நெற்றிக்கண்.

724. பிறையும் புனலும் சடைமேல் உடையார்
பறைபோல் விழிகட்பேய்
உறையு மயானம் இடமா உடையார்
உலகர் தலைமகன்
அறையு மலர்கொண்டு அடியார் பரவி
ஆடல் பாடல் செய்
பறையும் சங்கும் பலியும் ஓவாப்
பழன நகராரே.

தெளிவுரை: *பிறைச் சந்திரனும், கங்கையும் சடைமேல் உடையவர்; பறை போன்ற அகன்ற விழிகள் உடைய பேய் உறையும் மயானத்தை இடமாக உடையவர்; உலகில் தேன் துளிர்க்கும் மேலான மலர்கள் கொண்டு தூவி, அடியவர்கள் பாடியும் ஆடியும் மகிழ, ஒலிக்கும் சங்கும், நைவேத்தியப் பிரசாதங்களும் எஞ்ஞான்றும் மல்கிப் பெருகும் பழன நகரில் விளங்குபவர், ஈசன்.*

725. உரமன்னுயர் கோட்டு உலறுகூகை
அலறு மயானத்தில்
இரவில் பூதம் பாடஆடி
எழிலார் அவர் மேலைப்
பிரமன் தலையில் நறவம் ஏற்ற
பெம்மான் எமையாளும்
பரமன் பகவன் பரமேச்சுவரன்
பழன நகராரே.

தெளிவுரை: *வலிமையான உலர்ந்து போன கிளைகளில் கோட்டான்கள் அலறும் மயானத்தில், இரவில் பூத கணங்கள் பாடியும் ஆடியும் களிக்க, பிரம கபாலம் ஏந்தி உணவு கொண்ட பெருமான், எமை ஆள்கின்ற பரமன்; கடவுள்; பரமேஸ்வரன். அவர் பழன நகரில் வீற்றிருப்பவர்.*

726. குலவெஞ்சிலையான் மதில் மூன்றெரித்த
கொல் ஏறுடை அண்ணல்
கலவ மயிலும் குயிலும் பயிலும்
கடல்போல் காவேரி
நலமஞ்சுடைய நறுமாங்கனிகள்
குதிகொண்டு எதிர் உந்திப்
பலவின்கனிகள் திரைமுன்சேர்க்கும்
பழன நகராரே.

தெளிவுரை: *மலைகளில் சிறப்புடைய மேருவை வில்லாக உடையவன், மூன்று மதில்களை எதிர்த்து அழித்தவன், இடபவாகனம் உடைய அண்ணலாகிய ஈசன். அவர், தோகையுடைய மயிலும் குயிலும் விளங்கும் நீர்வளம் மிக்க விரிந்த காவிரியின் கரைகளில், மேலான அழகிய மாங்கனிகளும், பலாப்பழங்களும் அலைகளால் கொண்டு சேர்க்கும் பழன நகரில் விளங்குபவர்.*

சிறப்புரை: *தீர்த்த மகிமை பெற்ற காவிரியில், நீராடுதல் போன்று சேரும் கனிகள், மேன்மையும் அழகிய வடிவமும் கொள்ளுதலைப் போன்று, மன்னுயிர்களைச் செய்விக்க வல்லது காவிரி என்பது குறிப்பாக உணர்த்தப்பட்டது.*

நலம் – மேன்மை, இன்பம், புகழ். மஞ்சு – அழகு.

727. வீளைக்குரலும் விளிச் சங்கொலியும்
விழவின்னொலி ஓவா
மூளைத்தலை கொண்டு அடியார் ஏத்தப்
பொடியா மதில் எய்தார்
ஈளைப் படுகில் இலைஆர் தெங்கில்
குலை ஆர் வாழையின்

பாளைக் கமுகின் பழம்வீழ்சோலைப்
பழன நகராரே.

தெளிவுரை: பேரிரைச்சலும், சங்கின் ஒலியும், திருவிழாக்களின் ஆரவாரமும் ஓயாத வகையில், சேறுகள் ஈரம் பொருந்தி ஈளை கொண்டு விளங்கும் ஆற்றுப் படுகையில், தென்னை, வாழை, கமுகு ஆகியவற்றின் குலைகள் வீழும் சோலைகள் உடையது பழனநகர். ஆங்குப் பிரம கபாலம் ஏந்தி, அடியவர்கள் போற்றி நிற்க, யாராலும் வெல்ல முடியாத மதில்களை எரித்த ஈசன் விளங்குகின்றார்.

வீளை – பேரிரைச்சல். மூளைத்தலை – பிரமகபாலம்.

728. பொய்யாமொழியார் முறையால் ஏத்திப்
புகழ்வார் திருமேனி
செய்யார்கரிய மிடற்றார் வெண்ணூல்
சேர்ந்த அகலத்தார்
கைஆடலினார் புனலாய்மல்கு
சடைமேல் பிறை யோடும்
பையாடு அரவம் உடனே வைத்தார்
பழன நகராரே.

தெளிவுரை: பொய்ம்மை நயவாதவர்களாகிய அடியவர்கள் பூசா விதிப்படி ஈசனை ஏத்திப் புகழவும், சிவந்த திருமேனியில் கரிய கண்டத்தவராகிய அவர், முப்புரிநூல் விரிந்த மார்பில் விளங்க, கைகளை வீசி ஆட, கங்கை சடையில் மல்க, அதன் மீது பிறைச் சந்திரன் திகழ, படம் திகழும் அரவத்தை உடன் வைத்தவர் ஆவார். அவர் பழன நகரில் வீற்றிருப்பவர்.

சிறப்புரை: கைகளை வீசி நின்று ஆடும் ஈசன் மாண்பினை, "எண்தோள் வீசி நின்று ஆடும் பிரான்

தனைக் கண்காள் காண்மின்களோ" என்று திருநாவுக்கரசர் உரைத்தலும் நோக்குக.

பொய்ம்மையாகிய அஞ்ஞானத்தின்பால் மாயையின் வயப்பட்டுக் கூறப்பெறும் சொற்களைத் தவிர்த்து, மெய்ம்மையாக விளங்கும் ஈசன் புகழை ஓதுபவர்களாகிய அடியவர்கள் இயல்பு பொய்யா மொழியார் என உணர்த்தப்படுகிறது.

729. மஞ்சோங்குஉயரம் உடையான் மலையை
மாறாய் எடுத்தான் தோள்
அஞ்சோடு அஞ்சும் ஆறுநான்கும்
அடர ஊன்றினார்
நஞ்சார்சுடலைப் பொடிநீறு அணிந்த
நம்பால் வம்பு ஆரும்
பைந்தா மரைகள் கழனிசூழ்ந்த
பழன நகராரே.

தெளிவுரை: *ஆகாயத்தை ஓங்கி உயரமாய் விளங்கும் கயிலை மலையை, இயல்பிற்கு மாறாக எடுத்தவனுடைய இருபது தோள்கள் அழியுமாறு விரலால் ஊன்றிய ஈசனார், திருநீறு அணிந்து மணம் மிக்க தாமரைகள், கழனிகள் சூழ்ந்த பழன நகரில் வீற்றிருப்பவர். (அஞ்சோடு அஞ்சும் ஆறு நான்கும் (5 + 5 + 6 + 4 = 20) இருபது.)*

வம்பு – நறுமணம்.

730. கடியார் கொன்றைச் சுரும்பின் மாலை
கமழ்புன் சடையார் விண்
முடியாப் படிமூ வடியால் உலக
முழுதும் தாவிய
நெடியான் நீள்தா மரைமேல் அயனு(ம்)
நேடிக் காணாத

படியார் பொடியாடு அகலம்உடையார்
பழன நகராரே.

தெளிவுரை: வண்டுகள் சூழும் மணம் பொருந்திய கொன்றை மாலை கமழ் புன்சடை யுடைய ஈசன், வானத்தை உச்சியாகக் கொண்ட உலகத்தை மூவடியால் தாவி அளந்த திருமால் மற்றும் தாமரை மலரின்மேல் விளங்கும் பிரமன் ஆகியோர் தேடியும் காணாதபடி திருநீறு பூசியவராய், விரிந்து பெரியதாய் நீண்டார். அவர் பழன நகரில் வீற்றிருப்பவர்.

கடி – மணம்; படி – உலகம்; சுரும்பு – வண்டு. நெடியோன் – திருமால்; அயன் – பிரமன். பொடி – திருவெண்ணீறு; அகலம் – பெரும்பரப்பு.

731. கண்தான் கழுவா முன்னே ஓடிக்
கலவைக் கஞ்சியை
உண்டு ஆங்கு அவர்கள் உரைக்கும்சிறுசொல்
ஓரார் பாராட்ட
வண்தா மரையின் மலர்மேல் நறவ
மதுவாய் மிகவுண்டு
பண்தான் கெழும வண்டியாழ் செய்யும்
பழன நகராரே.

தெளிவுரை: உடல் தூய்மை முதலான புறத் தூய்மை செய்து கொள்ளாதவர்களாய் உணவைக் கொள்பவர்களுடைய உரைகள் சிறுமையானவை யாகும். அவற்றை ஏற்காது, அடியவர்கள் பாராட்டுமாறு, தாமரை மலரில் உள்ள தேனை வண்டுகள் மாந்தி யாழின் இசைபாடும் பழனநகரில் ஈசன் வீற்றிருக்கின்றார்.

732. வேய்முத்து ஓங்கி விரைமுன் பரக்கும்
வேணுபுரம் தன்னுள்

நாஉய்த்து அனைய திறலான்மிக்க
ஞானசம் பந்தன்
பேசற்கினிய பாடல்பயிலும்
பெருமான் பழனத்தை
வாயிற் பொலிந்த மாலை பத்தும்
வல்லார் நல்லாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *மூங்கில் முதிர்ந்து முத்துக்கள் பெருகிச் சேரும் வேணுபுரத்தில், உய்யும்படியான உறுதிபயக்கும் சொல்திறன் மிக்க ஞானசம்பந்தன், பேசற்கு இனிய பாடலாய்ப் பழனத்தில் வீற்றிருக்கும் பெருமானைப் போற்றிப் பாடிய இத்திருப்பதிகத்தை ஓதவல்லவர்கள் நல்லவராய் விளங்குவர்.*

68. திருக்கயிலாயம்

தல விளக்கம்: *வடநாட்டுத் தலம். இமயமலையில் வடபால் திபெத் நாட்டில் அமைந்துள்ளது. நொடித் தான்மலை எனவும் வழங்கப்படும். 29 மைல் சுற்றளவு கொண்டது. இயற்கையான கோயில் அமைப்பில் வெள்ளியங்கிரி என அழைக்கப்படுவதற்கு ஏற்பப் பனி படர்ந்த மலையாக உடையது. 22,980 அடி உயரத்தில் தென்திசை நோக்கிய அமைப்புடன் இருப்பது. பாரத நாட்டில் உள்ள அத்தனை கோபுர வகைகளும் காணக் கிடக்கின்றன. மலைச்சுவர்கள் செங்குத்தாக உள்ளன. அம்மலையில், சதுரம், வட்டம், முக்கோணம் போன்ற இயற்கையான மேடைகள் காட்சி தருகின்றன. இங்குப் பனி மூடிய இலிங்கத் திருமேனி உள்ளது. சுந்தரமூர்த்தி சுவாமிகள், சேரமான் பெருமாள், காரைக்கால் அம்மையார் ஆகியோர்*

கயிலை சென்றனர். திருநாவுக்கரசர் மானசரோவர் என்னும் திருக்குளத்தில் மூழ்கித் திருவையாற்றில் கயிலைக் காட்சியைக் கண்டார் என்பது வரலாறு.

ஞானசம்பந்தர் திருக்களாத்தி மலையில் இருந்தவாறு திருக்கேதாரத்தையும், திருக்கயிலையை யும் பாடியதாகப் பெரியபுராணம் இயம்புகிறது.

இங்கு எழுந்தருளப் பெற்ற சுவாமி, பரமசிவன். அம்பிகை, பார்வதி தேவி எனக் கூறுதல் மரபு.

பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

733. பொடிகொள் உருவர் புலியின்அதளர்
புரிநூல் திகழ் மார்பில்
கடிகொள் கொன்றை கலந்த நீற்றர்
கறைசேர் கண்டத்தர்
இடியகுரலால் இரியுமடங்கல்
தொடங்கு முனைச்சாரல்
கடிய விடைமேல் கொடியொன்றுடையார்
கயிலை மலையாரே.

தெளிவுரை: ஈசன் திருநீற்று மேனியர்; புலியின் தோலை உடையாகக் கொண்டவர்; முப்புரிநூல் அணிந்த மார்பில் மணம் பொருந்திய கொன்றை மலர் சூடித் திருநீறு தரித்தவர்; கறை பதிந்த கண்டத்தை உடையவர்; இடி முழக்கத்தைக் கேட்ட சிங்கம் அஞ்சி நடுங்கும் சாரலில் இடபக் கொடியுடையவர். அவர் கயிலை மலை நாயகர்.

இரியும் – அஞ்சும். மடங்கல் – சிங்கம்.

734. புரிகொள் சடையர் அடியர்க்கு எளியார்
கிளிசேர்மொழி மங்கை

தெரிய உருவில் வைத்து உகந்த
தேவர்பெரு மானார்
பரிய களிற்றை அரவு விழுங்கி
மழுங்க இருள்கூர்ந்த
கரிய மிடற்றர் செய்யமேனிக்
கயிலை மலையாரே.

தெளிவுரை: *சடையுடைய ஈசன், அடியவர்க்கு எளிமை யானவர்; உமாதேவியை, யாவரும் காணுமாறு ஒரு பாகத்தில் வைத்து மகிழ்ந்த தேவர் பெருமான்; பெரிய யானையை மலைப்பாம்பு விழுங்க இருள் பரவுதலைப் போன்ற கரிய கண்டத்தை உடையவர். அவர் சிவந்த திருமேனியுடைய கயிலைமலை நாதர்.*

பரிய – பெரிய தேகம்.

735. மாவின் உரிவை மங்கைவெருவ
மூடிமுடி தன்மேல்
மேவு மதியு(ம்) நதியும் வைத்த
இறைவர் கழல் உன்னும்
தேவர் தேவர் திரிசூ லத்தர்
திரங்கல் முகவன் சேர்
காவும் பொழிலும் கடுங்கல் சுனைசூழ்
கயிலை மலையாரே.

தெளிவுரை: *உமாதேவி அஞ்சுமாறு யானையின் தோலை உரித்துப் போர்த்துச் சடைமுடியில், பிறைச் சந்திரனும், கங்கை நதியும் வைத்த இறைவர், எல்லோரும் அவர் திருவடியைத் தியானிக்க விளங்கும் திரிசூலத்தினர். அவர் வானரங்கள் சேர் சோலை களும், அஞ்சத்தக்க கற்சுனைகளும் சூழ் கயிலைமலை யார்.*

திரங்கல் முகவன் – வானரம்.

736. முந்நீர் சூழ்ந்த நஞ்சம் உண்ட
முதல்வர் மதனன்றன்
தென்நீர்உருவம் அழியத்திருக்கண்
சிவந்த நுதலினார்
மன்னீர் மடுவும் படுகல் லறையின்
உழுவை சினம் கொண்டு
கல்நீர் வரைமேல் இரைமுன் தேடும்
கயிலை மலையாரே.

தெளிவுரை: கடலில் சூழ்ந்த நஞ்சினை உண்ட முதல்வராகிய ஈசன், மன்மதனுடைய அழகிய உருவத்தை அழித்த திருவிழியை உடைய நெற்றியினர். நிலைத்த நீர் நிலையுடைய சுனைகளும் ஆங்கு நிறைந்து உள்ளன. கற் குகைகளில் உள்ள புலி சினம் கொண்டு எழுந்து கல்லூற்றுக் கரையில் நின்று இரைதேடும் அமைப்புடைய கயிலையின் நாதர், ஈசனார்.

உழுவை – புலி.

737. ஒன்றும் பலவு மாய வேடத்து
ஒருவர் கழல் சேர்வார்
நன்று நினைந்து நாடற்கு உரியார்
கூடித் திரண்டு எங்கும்
தென்றி இருளில் திகைத்த கரிதன்
சாரல் நெறி யோடிக்
கன்றும் பிடியும் அடிவாரம் சேர்
கயிலை மலை யாரே.

தெளிவுரை: ஒருவனாகியும் பலவாகியும் விளங்கும் வடிவத்தை யுடைய ஒப்பற்றவராகிய ஈசன், கழலை வணங்குபவர்களும் – பக்தர்களும், பேரின்பத்தை – முத்திப்பேற்றை விரும்பும் ஞானிகளும் கூடித்திரண்டு

விளங்க, திகைத்த களிறு தன் கன்றுடன் அடிவாரம் சேரும் சிறப்புடைய கயிலை மலையார்.

சிறப்புரை: திருவடியின் சிறப்பும் ஈசன் அருள் தன்மையும் மன்னுயிரின் பேரின்ப நிலையும் உணர்த்தப் பட்டன.

738. தாதார் கொன்றை தயங்கு முடியர்
முயங்கு மடவாளைப்
போதார் பாக மாகவைத்த
புனிதர் பனிமல்கும்
மூதார் உலகின் முனிவர் உடனாய்
அறநான்கு அருள்செய்த
காதார் குழையர் வேதத்திரளர்
கயிலை மலையாரே.

தெளிவுரை: மகரந்தம் விளங்கும் கொன்றை மலரும், ஒளிரும் சடைமுடியும் கொண்டு, பொருந்திய உமா தேவியை மெல்லிய இடப் பாகத்தில் வைத்த புனிதராகிய ஈசன், முதிர்ச்சி யடைந்த சனகாதி முனிவர்களுக்கு அறம், பொருள், இன்பம், வீடு எனப் பெறும் நான்கு அறங்களையும் அருளிச் செய்த, காதில் குழையும், நாவில் வேதத் திரட்சியும் உடைய கயிலை மலையார் ஆவார்.

தயங்கு – ஒளிர்விடுதல். போது ஆர் – மலர் போன்ற (மென்மை). புனிதர் – ஈசன்.

739. தொடுத்தார் புரமூன்று எரியச்சிலைமேல்
எரிஒண் பகழியார்
எடுத்தான் திரள்தோள் முடிகள் பத்தும்
இடிய விரல்வைத்தார்
கொடுத்தார் படைகள் கொண்டார் ஆளாக்
குறுகி வரும் கூற்றைக்

கடுத்து ஆங்கு அவனைக் கழலால் உதைத்தார்
கயிலை மலையாரே.

தெளிவுரை: முப்புரங்கள் எரியுண்ணுமாறு மேரு மலையை வில்லாகக் கொண்டு, நெருப்பை அம்பாகத் தொடுத்த இறைவன், மலையைப் பெயர்த்த அரக்கனுடைய முடிகளும் திரட்சியான தோள்களும் நொறுங்குமாறு தமது திருப்பாத விரலால் அழுத்தினார். பின்னர், அவ்அரக்கன் இசைத்துப் போற்ற, தெய்வப் படைகளை வழங்கி அருள்புரிய, தன்பால் நண்ணிய மார்க்கண்டேயரின் உயிரைக் கவரும் பொருட்டுக் குறுகிவந்த கூற்றுவனை வெகுண்டு, திருப்பாதத்தால் உதைத்தவர் கயிலைமலையார்.

740. ஊணாப் பலிகொண்டு உலகில் ஏற்றார்
இலகு மணி நாகம்
பூண் நாண் ஆரமாகப் பூண்டார்
புகழும் இருவர்தாம்
பேணா ஓடி நேடஎங்கும்
பிறங்கும் எரியாகிக்
காணா வண்ணம் உயர்ந்தார்போலும்
கயிலை மலையாரே.

தெளிவுரை: பிரம கபாலத்தை ஏந்தி உணவுக்காக, உலகில் பிச்சையேற்ற ஈசன், மாணிக்கக் கற்களையுடைய நாகத்தைப் பூணும் மாலையாகப் பூண்டவர். திருமாலும் பிரமனும் போற்றித் துதிக்காது தேடித் திரியக் காண இயலாது ஒளித்து, பின்னர்ப் பேரொளிப் பிழம்பாகி உயர்ந்தவர் கயிலை மலையாரே.

நேட – தேட. பிறங்குதல் – பெருமை, சிறப்பு.

741. விருதுபகரும் வெஞ்சொல் சமணர்
வஞ்சச் சாக்கியர்
பொருது பகரு(ம்) மொழியைக் கொள்ளார்
புகழ்வார்க்கு அணியராய்
எருதுஒன்று உகைத்துஇங்கு இடுவார்தம்பால்
இரந்து உண்டு இகழ்வார்கள்
கருதும் வண்ணம் உடையார்போலும்
கயிலை மலையாரே.

தெளிவுரை: *பட்டங்கள் கொண்டு பெருமை பேசி நிலவும் சமணர் மற்றும் சாக்கியர்கள், விவாதம் செய்து தர்க்கித்துக் கூறும் மொழிகளை ஏற்றுக் கொள்ளாதவர், ஈசன். அப்பெருமான், புகழ்ந்து போற்றும் அன்பர் களுக்கு அண்மையில் இருப்பவராய், இடப வாகனத் தில் ஏறி அமர்ந்து, பிச்சை இடுபவர்களிடம் இனிதுடன் ஏற்று, உண்டு, தன்னை இச் செயல் குறித்து இகழ்ந்து பேசினாலும் அவற்றை விரும்பி ஏற்று கயிலைமலையில் இருப்பவர்.*

742. போர்ஆர் கடலில் புலைசூழ்காழிப்
புகழார் சம்பந்தன்
கார்ஆர் மேகம் குடிகொள் சாரல்
கயிலை மலையார் மேல்
தேரா உரைத்த செஞ்சொல் மாலை
செப்பும் அடியார் மேல்
வாரா பிணிகள் வானோர் உலகில்
மருவு மனத்தாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *அலைகள் மோதுகின்ற கடலின் நீர் சூழ் காழியின் புகழ் மிக்க ஞானசம்பந்தன், கரிய குளிர்ந்த மேகங்கள் தங்கும் சாரலை யுடைய கயிலை மலையார் மேல் தேர்ந்து உரைத்த செஞ்சொல் மாலையாகிய இத்*

திருப்பதிகத்தைச் சொல்கின்ற அடியவர் மேல் பிணிகள் வாரா. வானோர், உலகத்தவர் எவ்வகை யில் மகிழ்வுடன் விளங்குகின்றனரோ அவ்வகையில் இன்பம் மருவும் மனத்தினராய் விளங்குவர்.

சிறப்புரை: தென்கயிலை எனச் சொல்லப்படுகின்ற காளத்தி மலையிலிருந்தவாறு, திருக்கயிலையைத் தரிசித்து மகிழ்ந்து பாடிய திருப்பதிகம், கயிலைநாதன் உணர்த்தியவாறு அமைந்தது எனத் தெளிவு படுத்தும் மாண்பில் "தேரா உரைத்த செஞ்சொல் மாலை" என உணர்த்தப் பெற்றது.

தேரா – தேர்ந்து, தெளிந்து.

69. திருவண்ணாமலை

தல விளக்கம்: பதிக எண் 10 காண்க.

பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

743. பூவார் மலர்கொண்டு அடியார் தொழுவார்
புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்த அன்று
மூவர்க்கு அருள்செய்தார்
தூமா மழைநின்று அதிரவெருவித்
தொறுவின் நிரையோடும்
ஆமா(ம்) பிணைவந்து அணையும் சாரல்
அண்ணாமலை யாரே.

தெளிவுரை: பூவுலகத்தில் உள்ள அடியவர்கள் மலர் கொண்டு தூவித் தொழவும், வானவர்கள் புகழ்ந்து ஏத்தவும், ஈசனார் முப்புரங்களை எரித்த காலத்தில்

மூவர்க்கு அருள் செய்தார். இருள் போன்ற புகை சூழ்ந்த மேகம் குமுற மழை பொழிய, வெருவிய ஊர்ப் பசுக் கூட்டங்களும், காட்டுப் பசுக்களும் தமது பிணையுடன் வந்து சேரும் மலைச் சாரலை உடையது அண்ணாமலை. ஆங்கு வீற்றிருப்பவர் அண்ணாமலை நாதர்.

சிறப்புரை: ஈசனால் முப்புரங்கள் எரியுற்ற போது, அக்கோட்டைக்குள் இருந்த மூன்று அசுரர்கள், முன் செய்த நல்வினைப் பயனாகத் தீக்கு இரையாகாது தப்பிப் பிழைத்தனர். பின்னர் அவர்கள் ஈசனார் திருவருட் கருணையை வியந்து வணங்கிப் போற்றி வாயிற்காவலர் ஆகும் பேற்றினைப் பெற்ற வரலாறு காஞ்சிப் புராணம் இயம்புகின்றது. இது மூவர்க்கு அருள் செய்தார் என இவண் உணர்த்தப்பட்டது.

புகை மண்டிக் காட்சி தந்து மேகம் சூழும் அண்ணாமலை (குன்று)யின் இயல்பு (இக்காலத்திலும் காணப் பெறுவது) கூறப்பட்டது.

தூமம் – புகை, இருள். தொறு – பசுக்கூட்டம். ஆமா – காட்டுப் பசுக்கள்.

744. மஞ்சைப் போழ்ந்த மதியம்சூடும்
வானோர் பெருமானார்
நஞ்சைக் கண்டத்து அடக்கும் அதுவும்
நன்மைப் பொருள் போலும்
வெஞ்சொல் பேசும் வேடர் மடவார்
இதணம் அது ஏறி
அஞ்சொற் கிளிகள் ஆயோஎன்னும்
அண்ணா மலையாரே.

தெளிவுரை: மேகத்தைக் கிழித்து ஊடுருவிச் செல்லும் சந்திரனைச் சூடும் வானோர் பெருமான், நஞ்சினைக்

கண்டத்தில் அடக்கிய செயலும் ஒரு நன்மையை ஈட்டது போலும்! கொடுமைக் குணம் பதிந்த விலங்குகளை வேட்டையாடும் வேடர்கள் வாயிலிருந்து, "வெட்டு, குத்து" போன்ற சொற்கள் வெளிவருதலை விடுத்துத் தினைப்புனம் காத்தல் பொருட்டு அமைக்கப் பெற்ற காவற் பரணில் உள்ள மகளிர், அழகாகச் சொற்பயிலும் கிளிகளை விரட்ட, "ஆயோ" என்று கூறலானார். இச்சொற்கள் ஈசன் நஞ்சு அருந்திய செயல் அமையப் பெற்றது எனும் நயம் தோன்றலாயிற்று. இத்தகைய தன்மையுடையது அண்ணாமலை. அவ் அண்ணாமலைக்கு உரியவர் ஈசன்.

போழ்தல் – ஊடுருவுதல். இதணம் – காவற்பரண்.

745. ஞானத்திரளாய் நின்ற பெருமான்
நல்ல அடியார் மேல்
ஊனத்திரளை நீக்கும் அதுவும்
உண்மைப் பொருள் போலும்
ஏனத்திரளோடு இனமான் கரடி
இழியும் இரவின் கண்
ஆனைத் திரள்வந்து அணையும்சாரல்
அண்ணா மலையாரே.

தெளிவுரை: ஈசன் ஞானத்திரட்சியாக விளங்கித் தன்னை வணங்கும் அடியவர்கள்பால் உள்ள அஞ்ஞானமாகிய ஊனத் திரட்சியைத் தீர்க்கின்றார். அவர், பன்றிக் கூட்டங்கள் மான் கரடிகள் மற்றும் யானைக் கூட்டங்கள் சாரும் அண்ணாமலைக்கு உரியவர்.

ஊனம் – குறைபாடு, அஞ்ஞானம். ஏனம் – பன்றி.

746. இழைத்த இடையாள் உமையாள் பங்கர்
இமையோர் பெருமானார்
தழைத்த சடையார் விடையொன்று ஏறித்
தரியார் புரம் எய்தார்
பிழைத்த பிடியைக் காணாது ஓடிப்
பெருங்கை மதவேழம்
அழைத்துத் திரிந்து அங்கு உறங்கும் சாரல்
அண்ணா மலையாரே.

தெளிவுரை: *நூலிழை போன்ற மெல்லிய இடையை உடைய உமாதேவியைப் பங்குடைய, தேவர் தலைவ ராகிய ஈசன், தழைத்து விரிந்த சடையுடையவர், இடப வாகனம் ஏறி முப்புரத்தை எரித்தவர். அவர், பெண் யானையைத் தேடிய ஆண் யானையானது திரிந்து களைத்து உறங்கும் சாரலையுடைய அண்ணா மலையில் வீற்றிருப்பவர்.*

747. உருவில் திகழும் உமையாள் பங்கர்
இமையோர் பெருமானார்
செருவில் லொருகால் வளையஊன்றிச்
செந்தீ எழுவித்தார்
பருவில் குறவர் புனத்தில்குவித்த
பருமாமணி முத்தம்
அருவித் திரளோடு இழியும் சாரல்
அண்ணா மலையாரே.

தெளிவுரை: *ஒரே உருவாக உமையவள் இடப்பாகமும் ஈசன் வலப்பாகமுமாக, அர்த்தநாரியாய், தேவர் பெருமானாய், போர் செய்வதற்குரியதாக மேருமலையை வில்லாக்கி வளைத்து, முப்புரத்தை எரிக்கு இரையாக்கியவர், இறைவன். அவர், வில்லை உடைய குறவர்கள் புனத்தில் குவித்த மணிகளும்*

முத்துக்களும் அருவிகளில் கலந்து செல்லும் சாரலை யுடைய அண்ணாமலையார் ஆவார்.

748. எனைத்துஓர் ஊழி அடியார் ஏத்த
இமையோர் பெருமானார்
நினைத்துத் தொழுவார் பாவம்தீர்க்கு(ம்)
நிமலர்உறை கோயில்
கனைத்த மேதி காணாது ஆயன்
கைம்மேல் குழலூத
அனைத்தும் சென்று திரளும்சாரல்
அண்ணா மலையாரே.

தெளிவுரை: எத்தகைய ஊழிக்காலத்திலும் அடியவர் களால் வணங்கப் பெறும் ஒரே கடவுளாகிய தேவர்பெருமான், நினைத்து வணங்கும் அன்பர் களுடைய பாவங்களைத் தீர்க்கும் நிமலர். அப்பெருமான் உறையும் இடமாவது, எருமைகளைத் தமது கையில் உள்ள வேய்குழலால் ஆயர்கள் இசை எழுப்பச் சேரும் மலைச்சாரலையுடைய அண்ணா மலை ஆகும்.

சிறப்புரை: நினைக்க முத்தி தரும் தலத்தின் சிறப்பு தோன்ற, இத்திருத்தலமானது, நினைத்துத் தொழுவார் பாவம் தீர்க்கும் நிமலர் உறைகோயில் என உணர்த்தப் பெற்றது. ஏனைய நலம் தரும் திருத்தலங்களாவன:

1. தரிசிக்க முத்தி – தில்லை. 2. வசிக்க முத்தி – காஞ்சி.
3. பிறக்க முத்தி – திருவாரூர். 4. மரிக்க முத்தி – காசி.

749. வந்தித்திருக்கும் அடியார் தங்கள்
வருமேல் வினையோடு
பந்தித் திருந்த பாவம்தீர்க்கும்
பரமன் உறை கோயில்

முந்தி எழுந்த முழவின் ஓசை
முதுகல்வரை கண்மேல்
அந்திப் பிறைவந்து அணையும்சாரல்
அண்ணா மலையாரே.

தெளிவுரை: வணங்கிப் போற்றும் அடியவர்களின் மேல், பற்றியிருக்கும் வினையோடு பாவத்தையும் தீர்க்கின்ற பரமன் உறையும் இடமாவது, முழவின் ஓசை ஒலிக்கப் பிறைச் சந்திரன் சாரும் அண்ணா மலையாகும்.

சிறப்புரை: முன் செய்த வினையின் பயனாகத் தோன்றிய இப்பிறவியில் எஞ்சியுள்ள சஞ்சித வினைகளும், பிறிவியால் நேரும் வினையாகிய ஆகாமிய வினைகளும் தீரும் என்பது “வருமேல் வினையோடு பந்தித்திருந்த பாவம் தீர்க்கும் பரமன் உறைகோயில் என உணர்த்தப்பட்டது. தீப்பிழம்பாகிய ஈசன் அண்ணாமலை வடிவில் திகழ்வதையொட்டி அந்திப் பிறை, அம்மலைவடிவாக உள்ள ஈசன் திருமுடியில் சூடியவாறு அமைந்துள்ளது எனவும் உணர்த்துவதாயிற்று.

அந்திப் பிறை – பிறைச் சந்திரன்.

750. மறந்தான் கருதி வலியை நினைந்து
மாறாய் எடுத்தான் தோள்
நிறந்தான் முரிய நெரிய ஊன்றி
நிறைய அருள் செய்தார்
திறந்தான் காட்டி அருளாய் என்று
தேவர் அவர் வேண்ட
அறந்தான் காட்டி அருளிச் செய்தார்
அண்ணா மலையாரே.

தெளிவுரை: அறநெறியை விட்டு நீங்கி மறநெறியாகிய வன்மையை மனத்தில் தேக்கித் தன் வலிமையான ஆற்றலை நினைத்துக் கொண்டு, இயல்பிற்கு விரோத மாக மலையைப் பெயர்த்த இராவணன் தோளின் அழகு அழியுமாறும், துன்புற்று வருந்துமாறும், தன் திருப்பாத விரலால் ஊன்றிய ஈசனார், பின்னர் அருள் புரியுமாறு அவ்வரக்கன் வேண்டிப் போற்றித் தொழ அறத்தின் வழி நின்று அருள் செய்தார். அவர் தேவர் பெருமானாகிய அண்ணாமலையார் ஆவார்.

சிறப்புரை: துன்மார்க்கர்களாயினும், ஈசனாரை வணங்கிப் போற்றி நாடுகின்ற ஞான்று, வரம் தந்து அருள்புரிதல் தெய்வத்தின் அருட்பாங்கு என்று உணர்த்தும் நெறியில், "அறந்தான் காட்டி அருளிச் செய்தார்" என்று சுட்டப் பெற்றது. அண்ணாமலை யானது வரையாது வழங்கும் வரை எனவும் பெறப் படுதல் காண்க.

751. தேடிக் காணார் திருமால் பிரமன்
தேவர் பெரு மானை
மூடி ஓங்கி முதுவேய் உகுத்த
முத்தம் பலகொண்டு
கூடிக் குறவர் மடவார் குவித்துக்
கொள்ள வம்மின் என்று
ஆடிப்பாடி அளக்கும் சாரல்
அண்ணா மலையாரே.

தெளிவுரை: திருமாலும் பிரமனும் தேடிக் காண முடியாதவராய் விளங்கியவர் தேவர் பெருமானாகிய ஈசர். அவர், மூங்கில்களிலிருந்து உண்டான முத்துக் களைக் குறமகளிர் குவித்து இவற்றைப் பெற்றுக் கொள்ள வம்மின் என அழைக்குமாறு விளங்கும் சாரலை உடைய அண்ணாமலையார் ஆவார்.

சிறப்புரை: ஈசன், ஆன்மாக்கள் நற்கதியடையுமாறு அருள் நலம் புரிதலுடன், தூலசரீரத்தால் மேவும் இவ்வாழ்க்கை, செல்வ வளம் பெற்றுத் திகழ அருள் பாலித்தலையும் உணர்த்துவதாயிற்று. "குவித்துத் கொள்ளவம்மின்" எனும் சொற்றொடரில் மல்கும் அன்பின் வெளிப்பாட்டினையும், வளத்தின் மேன்மை யினையும் எண்ணி மகிழ்க.

முதுவேய் – முற்றிய மூங்கில்.

752. தட்டை இடுக்கித் தலையைப் பறித்துச்
சமணே நின்றுண்ணும்
பிட்டர் சொல்லுக் கொள்ளவேண்டா
பேணித் தொழு மின்கள்
வட்ட முலையாள் உமையாள் பங்கர்
மன்னி உறை கோயில்
அட்டம் ஆளித் திரள்வந்தணையும்
அண்ணா மலையாரே.

தெளிவுரை: சமணர் மற்றும் பிறர் தூற்றிக் கூறும் சொற்களை மனத்தில் கொள்ளாது, ஈசனைப் போற்றித் தொழுமின்கள். அப்பெருமான் உமாதேவி யோடு உறையும் இடம் சிங்கங்கள் திரளாகச் சேர்ந்து பக்கம் சாரும் அண்ணாமலை ஆகும்.

753. அல்லாடு அரவம் இயங்கும் சாரல்
அண்ணாமலை யாரை
நல்லார் பரவப் படுவான் காழி
ஞான சம் பந்தன்
சொல்லால் மலிந்த பாடலான
பத்தும் இவை கற்று
வல்லார்எல்லாம் வானோர் வணங்க
மன்னி வாழ்வாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: அரவம் இயங்கும் சாரலையுடைய அண்ணாமலையாரை, நல்லோர்களால் போற்றி மதிக்கப்படும் காழியின் ஞானசம்பந்தன் பாடிய, மந்திரம் போன்ற உயர்ந்த சொற்கள் மலிந்த இத் திருப்பதிகத்தை நன்கு கற்றுத் தேர்ந்து பாட வல்லார்கள், வானவர்களால் போற்றி வணங்கத் தக்கவர்களாய்ச் சிறப்புடன் வாழ்வார்கள்.

சிறப்புரை: மொழியும் சொல்லே துணையாக விளங்கும் சிறப்பு, "சொல் துணை வேதியன்" எனத், திருநாவுக் கரசர் வாக்கால் உணர்த்துமாறு உள்ளதைப் போன்று, இத் திருப்பதிகம் சொல்லால் மலிந்து சிறப்புற்றிருத்தல் உணர்த்தப்பட்டது.

அல் ஆடு அரவம் – இருளில் ஆடும் அரவம்.

70. திருஈங்கோய்மலை

தல விளக்கம்: காவிரி வடகரைத் தலம். திருவிங்க நாதமலை என வழங்கப் பெறுகிறது. அம்பிகை வழிபட்டதால் இதற்குச் சிவசக்தி மலை எனவும் பெறும். அகத்தியர் ஈ வடிவத்தில் இறைவனைத் தரிசித்த தலம்.

இத் தலத்திற்கு அண்மையில் காவிரித் தென்கரை யில் உள்ள கடம்பந்துறை (குளித்தலை) நாதரைக் காலையிலும், அதற்கு அண்மையில் உள்ள திருவாட் போக்கியில் எழுந்தருளியுள்ள நாதரை நண்பகலிலும், திருவீங்கோய் மலை நாதரை மாலையிலும் வழிபடுதல் சிறப்புடையது என்பர்.

சுவாமி : மரகதாசலேசுவரர், மரகதநாதர்

அம்பிகை : மரகதவல்லி

தீர்த்தம் : அமிர்த தீர்த்தம்

பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

754. வானத்துயர்தண் மதிதோய் சடைமேல்
மத்த மலர் சூடித்
தேனொத்தனமென் மொழிமான் விழியாள்
தேவி பாகமாக்
கானத்து இரவில் எரிகொண்டாடும்
கடவுள் உலகேத்த
ஏனத் திரள்வந்து இழியும் சாரல்
ஈங்கோய் மலை யாரே.

தெளிவுரை: ஆகாயத்தில் உயர்ந்து இருக்கும் குளிர்ந்த சந்திரனை வைத்த சடையின்மீது, ஊமத்த மலர் சூடி, தேன்போன்ற இனிமையான மொழியும், மான் விழியும் உடைய உமாதேவியை பாகமாகக் கொண்டு, மயானத்தில், இரவில் அனல் ஏந்தி ஆடும் கடவுள், உலகத்தவர் போற்றித் தொழுமாறு விளங்கும், பன்றியின் கூட்டங்கள் சாரும் ஈங்கோய் மலையில் வீற்றிருப்பவர் ஆவர்.

கானம் – மயானம், சுடுகாடு. ஏனத்திரள் – பன்றியின் கூட்டம்.

755. சூலப்படையொன்று ஏந்திஇரவில்
சுடுகாடு இடமாகக்
கோலச் சடைகள் தாழக்குழல்யாழ்
மொந்தை கொட்டவே
பாலொத் தனைய மொழியாள்காண
ஆடும் பரமனார்
ஏலத்தொடு நல் லிலவம்கமழும்
ஈங்கோய் மலையாரே.

தெளிவுரை: சூலப்படையைக் கரத்தில் ஏந்தி சுடுகாட்டினை இடமாகக் கொண்டு, அழகிய சடைகள் தாழ்ந்து பரவ, இரவில், யாழிசையும் மொந்தை என்னும் ஒலிக்கருவியும் அதிர்ந்து கொட்ட, பால் போன்ற இனிய மொழியுடைய உமாதேவி மகிழுமாறு நடனம் புரியும் பரமனார், ஏலமும், இலவங்கமும் கமழும் ஈங்கோய் மலையில் வீற்றிருப்பவர்.

இலவம் – இலவங்கம் (வாசனைப் பொருள்)

756. கண்கொள் நுதலார் கறைகொள் மிடற்றார்
கரியின் உரிதோலார்
விண்கொள் மதிசேர் சடையார் விடையார்
கொடியார் வெண்ணீறு
பெண்கொள் திருமார் பதனிற் பூசும்
பெம்மான் எமை ஆள்வார்
எண்கும் அரியும் திரியும் சாரல்
ஈங்கோய் மலை யாரே.

தெளிவுரை: ஈசன், நெற்றியில் கண்ணுடையவர்; கறையுடைய கண்டத்தை உடையவர்; யானையின் தோலை உரித்துப் போர்த்தி யிருப்பவர்; வானத்தில் விளங்கும் சந்திரனைச் சடையில் சேர்த்தவர்; இடபக் கொடி உடையவர்; தேகத்தில் ஒரு பெண்ணைப் பாகத்தில் கொண்டிருந்து மார்பில் திருவெண்ணீறு பூசுபவர். இத்தகைய பெருமான் எம்மை ஆள்பவர். அவர் கரடியும் சிங்கமும் திரியும் சாரலைக் கொண்ட ஈங்கோய் மலையில் வீற்றிருப்பவர்.

எண்கு – கரடி; அரி – சிங்கம்.

757. மறையின் னிசையார் நெறிமென் கூந்தல்
மலையான் மகளோடும்

குறைவெண் பிறையும் புனலும் நிலவும்
குளிர்புன்சடை தாழப்
பறையும் குழலும் கழலும் ஆர்ப்பப்
படுகாட்டு எரியாடும்
இறைவர் சிறைவண்டு அறைபூஞ்சாரல்
ஈங்கோய் மலையாரே.

தெளிவுரை: *வளைந்து சுருண்ட மெல்லிய கூந்தலை யுடைய வேதத்தின் இசை பொருந்திய உமா தேவியோடு சடையில் வெண்மையான பிறைச் சந்திரனும் கங்கையும் நிலவ, பறை முழங்கவும் குழல் இசைக்கவும் வீரக்கழல் ஆர்க்கவும் சுடுகாட்டில் நெருப்பை ஏந்தி ஆடும் இறைவர், சிறகுகளையுடைய வண்டுகள் ஒலிக்கும் பூஞ்சாரலைக் கொண்ட ஈங்கோய் மலையில் வீற்றிருப்பவர்.*

நெறிமென் கூந்தல் – வளைந்து சுருண்ட மென்மையான கூந்தல்; படுகாடு – சுடுகாடு; சிறைவண்டு – சிறகுகள் உடைய வண்டு.

758. நொந்த சுடலைப் பொடிநீறு அணிவார்
நுதல்சேர் கண்ணினார்
கந்த மலர்கள் பலவும் நிலவு
கமழ்புன் சடைதாழப்
பந்தண் விரலாள் பாகமாகப்
படுகாட்டு எரியாடும்
எந்தம் மடிகள் கடிகொள் சாரல்
ஈங்கோய் மலையாரே.

தெளிவுரை: *ஈசன், வெந்த சுடலையின் சாம்பலாகிய திருநீற்றை அணிபவர்; நெற்றியில் கண்ணுடையவர்; மணம் வீசும் மலர்கள் பலவும் நிலவி நிற்கக் கமழும் சடை விரவ, உமாதேவியைப் பாகமாக உடையவர், சுடுகாட்டில் நெருப்பு ஏந்தி ஆடும் எம் அடிகள்; மணம்*

கமழும் சாரலையுடைய ஈங்கோய் மலையில் வீற்றிருப்பவர்.

759. நீறுஆர் அகலம் உடையார் நிரையார்
கொன்றை அரவோடும்
ஆறுஆர் சடையார் அயில் வெங்கணையால்
அவுணர் புர மூன்றும்
சீறா எரிசெய் தேவர் பெருமான்
செங்கண் அடல் வெள்ளை
ஏறுஆர் கொடியார் உமையா ளோடும்
ஈங்கோய் மலையாரே.

தெளிவுரை: திருவெண்ணீறு தரித்தவரும், கொன்றை மலரும், அரவும் கங்கையும் சடையில் கொண்டவரும், கூர்மையான கொடிய கணை தொடுத்து முப்புரங்களை எரித்துச் சாம்பலாக்கியவருமாகிய தேவர் பெருமான், வெண்மையான இடபக் கொடியேந்தி உமாதேவியுடன், ஈங்கோய் மலையில் வீற்றிருப்பவர்.

760. வினையாயின தீர்த்து அருளே புரியும்
விகிர்தன் விரிகொன்றை
நனைஆர் முடிமேல் மதியம்சூடு
நம்பான் நல மல்கு
தனையார் கமல மலர்மேல் உறைவான்
தலையோடு அனல் ஏந்தும்
எனையாள் உடையான் உமையாளோடும்
ஈங்கோய் மலை யாரே.

தெளிவுரை: வினைகளால் உண்டாகும் தீயவற்றைத் தீர்த்து நல்லவற்றைப் புரியும் விகிர்தன், விரிந்த கொன்றை யரும்பும் மலரும் பொருந்திய சடை முடிமேல் வெண்மதியைச் சூடி நன் நலத்தைப் பெருகச் செய்பவன். அப்பெருமான் மலர்களில் சிறந்த

தாமரையில் உறையும் பிரமனின் தலையோட்டினைக் கொண்டும், அங்கையில் அனல் ஏந்தியும் என்னை ஆட் கொள்பவர், உமாதேவியோடு ஈங்கோய் மலையில் வீற்றிருப்பவர்.

நனை – அரும்பு.

761. பரக்கும் பெருமை இலங்கை என்னும்
பதியிற் பொலிவாய
அரக்கர்க்கு இறைவன் முடியும் தோளும்
அணி ஆர் விரல் தன்னால்
நெருக்கி அடர்த்து நிமலா போற்றி
என்று நின்றேத்த
இரக்கம் புரிந்தார் உமையாளோடும்
ஈங்கோய் மலையாரே.

தெளிவுரை: *பரந்த பெருமையுடைய இலங்கையின் வேந்தனான இராவணன் முடியும் தோளும் தன் அழகிய விரலால் அடர்த்துப் பின்னர் அவ்வரக்கன் வணங்கித் தொழுது ஏத்த இரங்கி அருள் புரிந்தவர், உமா தேவியுடன் வீற்றிருக்கும் ஈங்கோய் மலை ஈசர்.*

762. வரியார் புலியின் உரிதோலுடையான்
மலையான் மகளோடும்
பிரியாது உடனாய் ஆடல் பேணும்
பெம்மான் திருமேனி
அரியோடு அயனும் அறியாவண்ணம்
அளவில் பெருமையோடு
எரியாய் நிமிர்ந்த எங்கள் பெருமான்
ஈங்கோய் மலையாரே.

தெளிவுரை: *வரிகளையுடைய புலியின் தோலை உடையாகக் கொண்டு, மலையான் மகளாகிய உமா தேவியோடு பிரியாது எப்போதும் உடனாய் விளங்கி,*

ஆடலை விரும்பும் பெருமான் திருமேனியை அரியோடு அயனும் அறியாத வண்ணம் பெரிய சோதிப் பிழம்பாய் நிமிர்ந்து ஈங்கோய் மலையில் வீற்றிருப்பவர்.

763. பிண்டி ஏன்று பெயரா நிற்கும்
பிணங்கு சமணரும்
மண்டை கலனாக் கொண்டு திரியு(ம்)
மதியில் தேரரும்
உண்டி வயிறுஆர் உரைகள் கொள்ளாது
உமையோடு உடனாகி
இண்டைச் சடையான் இமையோர் பெருமான்
ஈங்கோய் மலையாரே.

தெளிவுரை: *சமணரும் பௌத்தரும் கூறும் உரைகளைப் பொருட்டாக மதியாது, உமையோடு உடனாய் விளங்கும் இண்டை மாலையும் சடையும் உடையவராய் தேவர் தலைவராய் ஈங்கோய் மலையில் விளங்கும் நாதன், ஈசன்.*

பிண்டி – அசோக இலை; மண்டை – பிச்சைப் பாத்திரம்; இண்டை – ஒருவகை மலர்.

764. விழவார் ஒலியு(ம்) முழவும் ஒவா
வேணு புரந் தன்னுள்
அழலார் வண்ணத்து அடிகள் அருள்சேர்
அணிகொள் சம்பந்தன்
எழிலார் சுனையும் பொழிலும் புடைசூழ்
ஈங்கோய் மலை ஈசன்
கழல் சேர் பாடல் பத்தும் வல்லார்
கவலை களை வாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *விழாக்களின் ஒலியும் முழவின் ஒலியும் ஓயாது விளங்கும் வேணுபுரத்தில் விளங்கும் அழல் போன்ற சிவந்த வண்ணம் உடைய அடிகளாகிய ஈசன் திருவருளைப் பெற்ற அழகு மிக்க ஞானசம்பந்தன், எழில் பொருந்திய சுனையும், பொழிலும் புடைசூழ விளங்கும் ஈங்கோய் மலையில் வீற்றிருக்கும் ஈசனார் திருவடிக்குச் சேர்ப்பித்த இத் திருப்பதிகத்தை உரைக்க வல்லவர்கள், கவலைகள் யாவும் நீங்கப் பெற்றவர் ஆவர்.*

71. திருநறையூர்ச் சித்தீச்சரம்

தல விளக்கம்: *பதிக எண் 29 காண்க.*

பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

765. **பிறைகொள் சடையர் புலியின் உரியர்**
பேழ்வாய் நாகத்தர்
கறைகொள் கண்டர் கபாலம் ஏந்தும்
கையர் கங்காளர்
மறைகொள் கீதம் பாடச் சேடர்
மனையின் மகிழ் வெய்திச்
சிறைகொள் வண்டு தேனார் நறையூர்ச்
சித்தீச் சரத்தாரே.

தெளிவுரை: *ஈசன், பிறையைச் சூடிய சடையினர்; புலியின் தோலை உடையவர்; பிளந்த வாயையுடைய நாகத்தைப் பூண்டவர்; நீல கண்டத்தினர்; கபாலத்தைக் கையில் ஏந்தியவர்; எலும்பு மாலை கொண்டவர். அவர் வேத கீதங்கள் இசைக்கப் பெறும் பெருமை மிக்க இல்லங்களும், மகிழ்ச்சியுடன் தேன்*

உண்ணும் வண்டுகள் மிக்க விளங்கும் நறையூர்ச் சித்தீச் சரத்தில் விளங்கும் ஈசனாரே!

766. பொங்கார் சடையர் புனலர் அனலர்
பூதம் பாடவே
தம்கா தலியும் தாமும் உடனாய்த்
தனியோர் விடையேறிக்
கொங்கார் கொன்றை வன்னிமத்தம்
சூடிக் குளிர் பொய்கைச்
செங்கால் அனமும் பெடையும் சேரும்
சித்தீச் சரத்தாரே.

தெளிவுரை: *ஈசன், நீண்டு வளரும் சடையினர்; கங்கையும், நெருப்பும் உடையவர். அவர் பூதகணங்கள் பாட்டு இசைக்கத் தம் காதலியாகிய உமா தேவியுடன் இடப வாகனத்தில் ஏறித் தேன் சொரியும் கொன்றை மலர், வன்னி, ஊமத்தம் சூடி, குளிர்ந்த பொய்கையில் அன்னம் தம் பெடையுடன் விளங்கும் சித்தீச்சரத்தில் வீற்றிருக்கும் பரமன் ஆவார்.*

கொங்கு – தேன்.

767. முடிகொள் சடையர் முளைவெண் மதியர்
மூவா மேனி மேல்
பொடிகொள் நூலர் புலியின் அதளர்
புரிபுன் சடை தாழக்
கடிகொள் சோலை வயல்சூழ் மடுவில்
கயலார் இனம் பாயக்
கொடிகொள் மாடக் குழாம்ஆர் நறையூர்ச்
சித்தீச் சரத்தாரே.

தெளிவுரை: *ஈசன், சடைமுடியுடையவர், இளமையான பிறைமதி சூடியவர், மூப்பு அடையாத திருமேனி உடையவர், திருநீறு தரித்து, முப்புரிநூல் அணிந்து*

புலியின் தோலை உடுத்தியவர். அவர், சடைகள் தொங்க, மணம் மிகுந்த சோலையும் வயலும், கயல் விளங்கும் நீர் நிலைகளும் விளங்கும் தோரணங்கள் கொண்ட மாடங்களும் உடைய நறையூர்ச் சித்தீச் சரத்தில் வீற்றிருப்பவர்.

முளைவெண் மதி – இளம் பிறை.

768. பின்தாழ் சடைமேல் நகுவெண் தலையர்
பிரமன் தலை யேந்தி
மின்தாழ் உருவில் சங்குஆர் குழைதான்
மிளிரும் ஒரு காதர்
பொன்தாழ் கொன்றை செருந்தி புன்னை
பொருந்து செண்பகம்
சென்றார் செல்வத் திருவார் நறையூர்ச்
சித்தீச் சரத்தாரே.

தெளிவுரை: தாழ்ந்து விளங்கும் சடையின்மேல் தலைமாலை அணிந்து, கையில் பிரம கபாலம் ஏந்தி, மின்னலை விஞ்சிய ஒளி பொருந்திய சங்கால் ஆன குழையை ஒரு காதில் அணிந்து, பொன்னையும் விஞ்சிய கொன்றையும், செவ்வந்தி, புன்னை, செண்பகம் ஆகிய மலர்களைச் சூடித் திருநறையூர்ச் சித்தீச்சரத்தில் வீற்றிருப்பவர் பரமன்.

செருந்தி – செவ்வந்திப்பூ.

769. நீரார் முடியர் கறைகொள் கண்டர்
மறைகள் நிறை நாவர்
பாரார் புகழால் பத்தர் சித்தர்
பாடி ஆடவே
தேரார் வீதி முழவார்விழவின்
ஒலியும் திசைசெல்லச்

சீரார் கோலம் பொலியு(ம்) நறையூர்ச்
சித்தீச் சரத்தாரே.

தெளிவுரை: ஈசன், கங்கையை முடியில் கொண்டவர்; நீலகண்டர்; வேதங்களாகிய உயர்ந்த சொற்களை மொழிபவர்; உலகத்தில் விளங்கும் புகழால் பக்தர்களும், சித்தர்களும் போற்றிப் பாடி ஆட, தேர் ஓடும் அகன்ற வீதிகளும், முழவு ஒலிக்கும் திருவிழாக்களின் ஒலி நான்கு திசைகளிலும் பரவப் பொலியும் நறையூர்ச் சித்தீச்சரத்தினர். அவர் அழகிய வடிவில் வீற்றிருக்கின்றார்.

பார் – உலகம்.

770. நீண்ட சடையர் நிரைகொள் கொன்றை
விரைகொள் மலர்மாலை
தூண்டு சுடர் பொன்னொளி கொள் மேனிப்
பவ ளத்து எழிலார் வந்து
ஈண்டு மாடம் எழிலார் சோலை
இலங்கு கோபுரம்
தீண்டு மதியம் திகழு நறையூர்ச்
சித்தீச் சரத்தாரே.

தெளிவுரை: ஈசன், நீண்டு வளர்ந்த சடை யுடையவர்; சரம் போன்று நீண்டுள்ள மணம் மிக்க கொன்றை மலரை மாலையாக உடையவர்; பொன் போன்று ஒளியுடைய திருமேனி உடையவர். அவர், பவளம் போன்ற செம்மையான எழில் மிக்க திருத் தொண்டர்கள் வந்து வணங்க, மாட மாளிகைகளும், சோலைகளும், வானத்தில் உள்ள சந்திரனைத் தீண்டும் உயர்ந்த கோபுரத்தையும் உடைய திருநறையூர்ச் சித்தீச்சரத்தில் வீற்றிருக்கின்றார்.

771. குழலார் சடையர் கொக்கின் இறகர்
கோல நிற மத்தம்
தழலார் மேனித் தவள நீற்றர்
சரி கோவணக் கீளர்
எழிலார் நாகம் புலியின் உடைமேல்
இசைத்து விடை யேறிக்
கழலார் சிலம்பு புலம்ப வருவார்
சித்தீச் சரத்தாரே.

தெளிவுரை: *ஈசன், கூந்தலும் சடையும் உடையவர்; கொக்கின் இறகைச் சூடியவர்; அழகிய நிறத்தை யுடைய ஊமத்தம்பூ தரித்தவர்; தழல் போன்ற சிவந்த திருமேனியில் வெண்மையான நீற்றினை அணிபவர்; சரிந்த கோவணத்தையுடையவர். அவர், அழகிய நாகத்தைப் புலித்தோல் உடையின் மேல் இசையப் பூண்டு, இடப வாகனத்தில் ஏறித் திருப்பாதத்தில் சிலம்பு ஒலிக்கச் சித்தீச்சரத்தில் வீற்று இருக்கும் பரமன் ஆவார்.*

தவளம் – வெண்மை; புலம்ப – ஒலிக்க.

772. கரைஆர் கடல்சூழ் இலங்கை மன்னன்
கயிலை மலை தன்னை
வரைஆர் தோளால் எடுக்க முடிகள்
நெரித்து மனம் ஒன்றி
உரைஆர் கீதம் பாட நல்ல
உலப்பில் அருள் செய்தார்
திரைஆர் புனல்சூழ் செல்வ நறையூர்ச்
சித்தீச் சரத்தாரே.

தெளிவுரை: *இலங்கை மன்னனாகிய இராவணன், கயிலை மலையைத் தன் தோளால் எடுக்க, அவன் முடிகளை நெரித்துப் பின்னர் மனம் ஒன்றிக் கீதம்*

இசைத்து வணங்கி வேண்ட, தெவிட்டாத நல்லருளைப் புரிந்தவர், செல்வம் திகழும் நறையூர்ச் சித்தீச்சரத்தில் வீற்றிருக்கும் பரமன் ஆவார்.

உலப்பில் – தெவிட்டாத, குறையாத.

773. நெடியான்பிரமன் நேடிக்காணார்
நினைப்பார் மனத்தாராய்
அடியார் அவரும் அருமா மறையும்
அண்டத்து அமரரும்
முடியால் வணங்கிக் குணங்கள் ஏத்தி
முதல்வா அருள் என்னச்
செடியார் செந்நெல் திகழு நறையூர்ச்
சித்தீச் சரத்தாரே.

தெளிவுரை: நெடியவனான திருமாலும், பிரமனும் தேடிக் காணாதவராய் விளங்கித் தன்னை நினைத்துப் போற்றும் மனத்திடை உறைபவராய் விளங்குபவர் ஈசன். அடியவர்களும், வேதங்களும், அமரர்களும் தாழ்ந்து வணங்கி, அருள் குணங்களைக் கூறிப் போற்றி, 'முதல்வனே! அருள் புரிவாயாக!' என்று வாழ்த்த, செந் நெற் கதிர்கள் புதர்போல் திகழும் நறையூர்ச் சித்தீச்சரத்தில் வீற்றிருப்பவர் அவர்.

774. நின்றுஉண் சமணர் இருந்துஉண் தேரர்
நீண்ட போர்வையார்
ஒன்றும் உணரா ஊமர்வாயில்
உரைகேட்டு உழல்வீர்காள்
கன்றுஉண் பயப்பால் உண்ண முலையில்
கபாலம் அயல் பொழியச்
சென்று உண்டு ஆர்ந்துசேரு நறையூர்ச்
சித்தீச் சரத்தாரே.

தெளிவுரை: சமணர்களும், தேரர்களும் நற்பொருள் ஒன்றினையும் உணராதவராய்ப் பொருளற்றவைகள் மொழிய, அதனைக் கேட்டு வாடும் மக்களே! கன்று, உண்ணும் விருப்பால் பாலை உண்ணவும், பின்பு பாத்திரம் வழியுமாறு தாய்ப் பசு பால் பொழியவும், மீண்டும் கன்று பால் உண்ணும் வளப்பம் மிக்க நறையூர்ச் சித்தீச்சரத்தில் வீற்றிருக்கும் ஈசனைச் சேர்ந்து வணங்குவீராக.

ஊமர் வாயில் உரை – பொருளற்ற உரை; பயப்பால் – விருப்பால்.

775. குயிலார் கோல மாதவிகள்
குளிர்பூஞ் சுரபுன்னை
செயிலார் பொய்கை சேருநறையூர்ச்
சித்தீச் சரத்தாரை
மயிலார் சோலை சூழ்ந்தகாழி
மல்குசம் பந்தன்
பயில்வார்க்கு இனிய பாடல்வல்லார்
பாவ நாசமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: அழகிய குயில்களும், மாதவி, சுரபுன்னை போன்ற மரங்களும், வயல்களும் சூழ்ந்த நறையூர்ச் சித்தீச்சரத்தில் வீற்றிருக்கும் பெருமானை, மயில் விளங்கும் சோலை சூழ்ந்த காழியின் ஞானசம்பந்தன் ஏத்திப்பாடிய பாடல்களைச் சொல்பவர்களின் பாவம் நலிந்து அழியும்.

72. திருக்குடந்தைக் காரோணம்

தல விளக்கம்: காவிரி தென்கரைத் தலம். கும்ப கோணத்தில் பொற்றாமரைக் குளத்தின் கீழ்க்கரையில்

உள்ளது. சோமேசர் கோயில் என்று வழங்கப்படுகிறது. அம்பிகை, இறைவன் திருமேனியை ஆரோகணித்த தலம். குரு, சந்திரன் வழிபட்டது. அமுத கலசம் வைத்திருந்த உறி (உறி – சிக்கம்) சிவலிங்கமான தலம். இதுவே சிக்கேசம் ஆயிற்று.

சுவாமி : சோமேசர், சிக்கேசர்

அம்பிகை : சோமசுந்தரி, தேனார் மொழியாள்

தீர்த்தம் : சோம தீர்த்தம்

பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

776. வாரார் கொங்கை மாதோர் பாகம்
ஆகவார் சடை
நீரார் கங்கை திங்கள்சூடி
நெற்றி ஒற்றைக்கண்
கூரார் மழுவொன்று ஏந்திஅந்தண்
குழகன் குடமூக்கில்
காரார் கண்டத்து எண்தோள் எந்தை
காரோணத் தாரே.

தெளிவுரை: உமாதேவியைப் பாகமாகக் கொண்டு, நீண்ட சடையில் கங்கை ஏற்றுத் திங்கள் சூடி, நெற்றியில் ஒரு கண்ணுடன், கூரிய மழுவைக் கரத்தில் ஏந்திய குழகன், குடமூக்கில் கரிய மேகம் போன்ற கருமையான கண்டத்தினராய் எட்டுத் தோள்களுடன் விளங்கும் எந்தை காரோணத்தார் ஆவார்.

குடமூக்கு – கும்பகோணம்.

777. முடியார் மன்னர் மடமான் விழியார்
மூவுலகும் ஏத்தும்
படியார் பவள வாயார் பலரும்
பரவிப் பணிந்தேத்தக்

கொடியார் விடையார் மாடவீதிக்
குடந்தைக் குழகாரும்
கடியார் சோலைக் கலவமயிலார்
காரோ ணத்தாரே.

தெளிவுரை: முடியுடை வேந்தர்களும், மான் விழி மாதர்களும், மற்றும் மூவுலகத்தவரும் ஏத்தும் உலகத்தில் பவளம் போன்ற செம்மையான சொற்கள் கூறும் பலரும், பணிந்து போற்ற இடபக் கொடியுடையவராகிய ஈசர், மாட வீதிகளை யுடைய குடந்தைக் குழகரும், நறுமணம் கமழும் சோலையில் மயில் விரித்தாடும் எழில்மிக்க காரோணத்தார் ஆவார்.

குடந்தை – கும்பகோணம்.

778. மலையார் மங்கை பங்கர் அங்கை
அனலர் மடலாரும்
குலையார் தெங்கு குளிர்கொள்வாழை
அழகார் குடமூக்கில்
முலையார் அணிபொன் முளைவெண் நகையார்
மூளா மதியினார்
கலையார் மொழியார் காதல்செய்யும்
காரோ ணத்தாரே.

தெளிவுரை: மலை மங்கையாகிய உமாதேவியை ஒரு பாகம் கொண்டு, அழகிய கையில் நெருப்பை ஏந்தியவர் ஈசர். அவர், வாழையும் தென்னையும் பெருகும் குடமூக்கில், இளமை தவழும் முகம் உடையவராய் விளங்கும் வெண் நகை உடையவராய். ஞான மொழியினராய் விளங்குபவர், பெருமக்களால் மிகவும் விரும்பப் படுகின்றவர், அப்பெருமான், காரோணத்தாரே ஆவார்.

779. போதார் புனல்சேர் கந்தம் உந்திப்
பொலிஅவ் அழகாரும்
தாதார் பொழில் சூழ்ந்து எழிலார் புறவில்
அந்தண குடமூக்கில்
மாதார் மங்கை பாகமாக
மனைகள் பலி தேர்வார்
காதார் குழையர் காளகண்டர்
காரோணத் தாரே.

தெளிவுரை: *தாமரை முதலான மலர்கள் நீரில் சேர்ந்து மணம் பரப்ப, அவ்வழகு தவழ் பொழில் சூழ்ந்து எழில் மிக்க காடுகள் போல் குளிர்ச்சியாக விளங்கும் குடந்தையில், உமாதேவியைப் பாகமாகக் கொண்டு, மனைகள்தோறும் பிச்சை நாடுபவர், காதில் குழையணிந்த நீலகண்டராய்க் காரோணத்தில் விளங்குபவர்.*

780. பூவார் பொய்கை அலர்தாமரை செங்
கழுநீர் புறவெல்லாம்
தேவார் சிந்தை அந்தணாளர்
சீரால் அடி போற்றக்
கூவார் குயில்கள் ஆலு மயில்கள்
இன்சொற் கிளிப்பிள்ளை
காவார் பொழில் சூழ்ந்து அழகார்குடந்தைக்
காரோணத் தாரே.

தெளிவுரை: *தாமரை முதலான மலர்களால், தெய்வ சிந்தனை உடைய அடியவர்கள் எல்லாம் சிறப்பு மிக்க ஈசன் அடி போற்றுகின்றனர். குயில்கள் கூவ, மயில்கள் அகவ, கிளிகள் இன்சொல் பயில, கா்வார் பொழில்சூழ் அழகு மிக்க குடந்தைக் காரோணத்தார் வீற்றிருப்பர்.*

காஆர் பொழில் – காக்கும் தன்மையுடைய பொழில்.

781. மூப்பூர் நலிய நெதியார் விதியாய்
முன்னே அனல்வாளி
கோப்பார் பார்த்தன் நிலைகண்டு அருளும்
குழகர் குட மூக்கில்
தீர்ப்பார் உடலில் அடுநோய் அவலம்
வினைகள் நலியாமைக்
காப்பார் காலன் அடையா வண்ணம்
காரோணத் தாரே.

தெளிவுரை: தேகத்தில் முதுமை அடைவதால் உண்டாகும் நலிவைத் தீர்ப்பவரும், முப்புரங்களை எரிப்பதற்கு நெறிமுறையாக அனல் அம்பைக் கோர்த்தும், பார்த்தன் தவநிலை கண்டு அருளியவரும் ஆகிய குழகர் குடமூக்கில் விளங்குபவர். அவர் நோயினால் மெலியாதவாறும், வினைகளால் துன்பம் நேராதவாறும் காப்பவர். காலன் நம்மைக் குறுகாத வண்ணம் பாதுகாப்பவர் காரோணத்தாரே.

மூப்பு ஊர் – முதுமை அடைதல்; அனல் வாளி – நெருப்பு அம்பு.

782. ஊனார் தலைகை ஏந்தி உலகம்
பலிதேர்ந்து உழல்வாழ்க்கை
மானார் தோலார் புலியின் உடையார்
கரியின் னுரி போர்வை
தேனார் மொழியார் திளைந்து அங்குஆடித்
திகழும் குடமூக்கில்
கானார் நட்டம் உடையார் செல்வக்
காரோ ணத்தாரே.

தெளிவுரை: பிரம கபாலம் கையில் ஏந்தி, உலகத்தில் பிச்சை எடுத்து உழலும் வாழ்க்கையை உடையவர், மான் தோலையும், புலித் தோலையும் உடையாகக் கொள்பவர். அப் பெருமான் யானையின் தோலை

உரித்துப் போர்வையாகக் கொண்டு, உமாதேவி மகிழுமாறு ஆடித் திகழ்கின்ற குடமூக்கின், மயானத்திலும் நடனம் புரிபவர். அவர், செல்வம் தழைக்கும் காரோணத்தில் வீற்றிருப்பவரே.

சிறப்புரை: ஈசன் பல வண்ணங்களில் நடம் புரிந்து மன்னுயிர்களை மகிழ்விக்கும் செயலைத் தேவி காணுமாறு, "திளைத்து ஆடி" எனவும், "கானார் நட்டம் உடையார்" எனவும் உணர்த்தப்பட்டது.

தன்னகத்தே எல்லாச் செல்வங்களும் கொண்டு மன்னுயிர்களுக்கும் வரையாது வழங்கும் சிறப்பு தோன்ற, செல்வக் காரோணத்தார் என உணர்த்தப் பட்டது. அம்பிகை ஈசனை ஆரோகணித்து வீற்றிருக்கும் திருத்தலப் பெருமையைக் குறித்தலும் ஆகும்.

ஊனார்தலை – பிரமகபாலம்; தேனார் மொழியார் – திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள அம்பிகையின் திருநாமம்; திளைத்தல் – மகிழ்தல்.

783. வரைஆர் திரள்தோள் மதவாள் அரக்கன்
எடுப்ப மலைசேரும்
விரைஆர் பாத நுதியால் ஊன்ற
நெரிந்து சிரம் பத்தும்
உரைஆர் கீதம் பாடக் கேட்டுஅங்கு
ஒளிவாள் கொடுத்தாரும்
கரைஆர் பொன்னி சூழ்தண் குடந்தைக்
காரோ ணத்தாரே.

தெளிவுரை: மலை போன்ற திரட்சியான தோளை யுடைய ஆணவத்தை வாளாக உடைய, அரக்கனாகிய இராவணன் பெயர்த்த மலையானது, அவனையே சேர்ந்து தாக்குமாறு தனது திருவிரலால் ஊன்ற, அவற்றால் நெரிந்து துன்புற்ற பத்துத் தலைகளும் சாம

கானம் இசைக்கவும், அவற்றைக் கேட்டு ஒளிமிக்க வாளைக் கொடுத்து அருள் புரிந்தவர் ஈசன். அப் பெருமான் காவிரிக் கரையில் விளங்கும் குடந்தைக் காரோணத்தில் வீற்றிருப்பவர்.

சிறப்புரை: ஈசனார் மலர்ப்பாதம், ஆணவம் ஒழித்து வணங்குபவர்களுக்கு அருள் நல்கும் மென்மை தோன்றுதலும், அவ்வாறின்றி ஆணவ ஈட்டம் பெருக்கெடுத்த அரக்கனுக்கு அம் மெல்லிய திருப்பாதமே துன்பத்தை ஈட்டித் தந்தது என்றும் இவண் உணர்த்தப்பெற்றது. ஆணவத் திரட்சியை ஒரு படையாகத் தோன்றுமாறு காட்டி, ஆங்கு அவ்வரக்க னுக்குத் துன்பத்தைத் தேடித் தந்தது என்னும் குறிப்பு இவண் மதவாள் என உணர்த்தப் பெற்றது. ஈசனார் திருப்பாதச் சிறப்பு தோன்ற, இராவணன் வாகனமாக விளங்கி (மலை சேர)க் கயிலை மலை விழாக்காட்சி நிகழ்தலை, மலைசேரும் விரையார் பாதம் எனும் தொடர் குறிப்பதாயிற்று.

பொன்னி – காவிரி.

784. கரிய மாலும் செய்ய பூமேல்
அயனும் கழறிப் போய்
அரிய அண்டம் தேடிப்புக்கும்
அளக்க ஒண்கிலார்
தெரிய அரிய தேவர் செல்வம்
திகழும் குடமூக்கில்
கரிய கண்டர் காலகாலர்
காரோ ணத்தாரே.

தெளிவுரை: திருமாலும் நான்முகனும், தமக்குள் தர்க்கம் செய்துகொண்டு அண்டங்கள் எல்லாம் தேடியும் அறிய வொண்ணாதவராகிய தேவர்,

குடமூக்கில் காலகாலராய்க் கரிய கண்டத்தராய்க் காரோணத்தில் வீற்றிருப்பவர்.

கழறி – தமக்குள் பெரியவர் யார் என விவாதித்து.

785. நாணார் அமணர் நல்லது அறியார்
நாளும் குரத்திகள்
பேணார் தூய்மை மாசுகழியார்
பேசேல் அவரோடும்
சேணார் மதிதோய் மாடமல்கு
செல்வ நெடு வீதிக்
கோணா கரம் ஒன்று உடையார்குடந்தைக்
காரோணத் தாரே.

தெளிவுரை: நன்மை அறியாதவராய்க் குரலை உயர்த்திப் பேசும் தன்மையுடைய சமணர் தம் உரைகளை ஏற்காது, உயர்ந்த மாட மாளிகைகளும் நீண்ட வீதிகளும் உடைய குடந்தையில் வரையாது அருள்பவர் காரோணத்தில் எழுந்தருளியுள்ள ஈசனார்.

குரத்தி – குரலை உயர்த்திப் பேசுதல்; கோணாகரம் – கோணுதல் இல்லாத அருள் புரியும் கரம், கோணம் போன்ற பீடம், ஊர்ப்பெயரை. (கும்பகோணம்) யும் சுட்டுதல் அமையும்.

786. கருவார் பொழில்சூழ்ந்து அழகார் செல்வக்
காரோணத் தாரைத்
திருவார் செல்வ மல்குசண்பைத்
திகழும் சம்பந்தன்
உருவார் செஞ்சொல் மாலை இவைபத்து
உரைப்பார் உலகத்துக்
கருவார் இடும்பைப் பிறப்புஅறுத்துக்
கவலை கழிவாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: வளம் மிக்க அடர்த்தியான பொழில் சூழ்ந்து அழகுடன் விளங்கும் செல்வம் திகழும் காரோணத்தில் விளங்கும் ஈசனைத் திருநலம் பொருந்திய செல்வச் செழிப்புடன் விளங்கும் சண்பை நகரின் ஞானசம்பந்தன் செஞ்சொல் மாலையாக உருவாக்கிய இத் திருப்பதிகத்தை உரைப்பவர்கள், உலகத்தில் கருப்பையில் நேரும் பிறப்பாகிய துன்பத்தை அறுத்து மனக் கவலையும் நீங்கப் பெறுவர்.

சிறப்புரை: மீளவும் பிறவி எடுக்கும் துன்பம் தீரும், இப் பிறவியிலும் துன்பம் இல்லை என உணர்த்தப்பட்டது.

திருமுறையைத் தெய்வமாகக் கருதி வழிபடுதல் மற்றும், அதன் அருள்வண்ணம் அறியுமாறு நூல்சாற்றுதல் போன்ற நிலையில் இத் திருமுறை திகழும் மரபினை உணர்த்தும் வகையில் திருஞான சம்பந்தரும், அவர்தம் தேவாரமும் வேறு அல்ல என்று புலப்படுமாறு "திகழும் ஞான சம்பந்தன் உரு ஆர் செஞ்சொல் மாலை இவை" என உணர்த்தப்பட்டது.

திகழும் ஞானசம்பந்தன் உரு ஆர் செஞ்சொல் மாலை – ஞான சம்பந்தன் வடிவம் பொருந்திய செம்மையான சொல்மாலை.

73. திருக்கானூர்

தல விளக்கம்: காவிரி வடகரைத் தலம். மணல்மேடு என அழைக்கப் படுகிறது. அம்பிகை சிவயோகத்தில் இருந்த போது ஈசன் தீ வண்ணராகத் திருவுருவம் காட்டிய தலம்.

பதிகக் குறிப்பு: தலைவன் தலைவி பாவனையில் அமைந்தது.

சுவாமி : செம்மேனி நாதர்

அம்பிகை : சிவலோக நாயகி

தீர்த்தம் : கொள்ளிடம்

பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

787. வானார் சோதி மன்னு சென்னி
வன்னி புனங் கொன்றைத்
தேனார் போது தானார் கங்கை
திங்களொடு சூடி
மானேர் நோக்கி கண்டங்கு உவப்ப
மாலை ஆடுவார்
கானூர் மேய கண்ணார் நெற்றி
யானூர் செல்வரே.

தெளிவுரை: வானத்தில் ஒளிரும் சோதியாகிய சூரியனும் சந்திரனும் முறையே வலக் கண்ணும் இடக் கண்ணும் ஆகி விளங்க, சென்னியில் வன்னியும் கொன்றை மலரும், கங்கையும், மதியும் சூடி, உமாதேவி கண்டு மகிழுமாறு பெருமையாக ஆடுபவர், நெற்றியில் கண்ணுடைய கானூர் மேய செல்வராகிய ஈசர்.

சிறப்புரை: ஒளி தரும் வானில் விளங்கும் சந்திரன், ஈசனார் இடக்கண்ணாக உள்ள சிறப்பினை "வானார் சோதி" என உரைத்தலாம். தக்கனால் நேரப் பெற்ற சாபம், விமோசனம் அடையும் பொருட்டு ஈசன் சந்திரனைத் திருமுடியில் சூடி அருள்புரிந்து வளரச் செய்த வரலாறு "திங்களொடு சூடி" எனக் குறித்தலாகும்.

788. நீந்தலாகா வெள்ளமூழ்கு
நீள்சடை தன்மேலோர்

ஏய்ந்த கோணல் பிறையோடு அரவு
கொன்றை எழிலாரப்
போந்த மென்சொல் இன்பம் பயந்த
மைந்தர் அவர்போலாம்
காந்தள் விம்மு கானூர் மேய
சாந்த நீற்றாரே.

தெளிவுரை: *பெருக்கெடுத்து ஓடிய கங்கை, சிறிதளவும் வெளியேறாதபடி சடையில் ஏற்றுக் கொண்டு, அதன் மேல் வளைந்த பிறைமதியும், அரவம், கொன்றை மலரும் தரித்து, இனிய சொற்களால் இன்பம் நல்கும் அழகர் போன்று, சாந்தம் மலரும் திருநீற்றைப் பூசி கானூர் மேவி விளங்குபவர், ஈசன்.*

789. சிறையார் வண்டும் தேனும் விம்மு
செய்ய மலர்க் கொன்றை
மறையார் பாடல் ஆடலோடு
மால்விடை மேல்வருவார்
இறையார் வந்தென் இல்புகுந்தென்
னெழில் நலமுங் கொண்டார்
கறையார் சோலைக் கானூர் மேய
பிறையார் சடையாரே.

தெளிவுரை: *சிறகுகள் உடைய வண்டும் தேனும் விளங்கும் கொன்றை மலர் சூடி, வேதங்கள் ஓதிப் பாடவும், ஆடவும், பெருமை மிகுந்த இடப வாகனத்தில் வரும் இறைவராகிய தலைவர், என்னிடம் வந்தார். வந்த அவ் இறைவர், என் இல்லம் புகுந்து என் உள்ளத்தையும் கவர்ந்து கொண்டார். அவர் அடர்த்தியான சோலைகளை யுடைய கானூரில் மேவும் பிறைச்சந்திரனும் சடை முடியும் கொண்டுள்ள ஈசரே.*

சிறப்புரை: தேகமானது "என் இல்லம்" எனவும், அத் தேகத்தில் - இல்லத்தில் புகுந்த இறைவன் மனத்தினில் எழில் பெறச் செய்து என் வசம் இன்றித் தானே ஆட் கொண்டான் என்பதும் இதனால் உணர்த்தப் பெற்றது. "ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி" எனவும், "தந்தது உன்றன்னைக் கொண்டது என்றன்னை" எனவும் மாணிக்கவாசகர் உரைப்பதும் இந் நெறியில் நினைக்கத் தக்கதாகும்.

கறையார் சோலை – அடர்த்தியான சோலை

790. **விண்ணார் திங்கள் கண்ணி வெள்ளை**
மாலை யதுசூடித்
தண்ணார் அக்கோடு ஆமை பூண்டு
தாழ்புன் சடைதாழ
எண்ணா வந்தென் இல்புகுந்துஅங்கு
எவ்வ நோய் செய்தான்
கண்ணார் சோலைக் கானூர் மேய
விண்ணோர் பெருமானே.

தெளிவுரை: ஈசன், விண்ணில் திகழும் சந்திரனைத் தரித்து, வெள்ளெருக்க மாலை சூடி, குளிர்ந்த எலும்பும் ஆமையோடும் பூண்டு, நீண்ட சடைகள் விரிந்து பரவ, என்பால் எண்ணம் கொண்டு நாடி வந்து, என் இல்லத்தில் புகுந்து பிற பொருள்கள் மீது யான் வெறுப்பு அடையுமாறு என்னை ஆக்கினான். அத்தகைய தலைவன் (ஈசன்) சோலைகள் விளங்கும் கானூரில் மேவும் விண்ணோர் பெருமான்.

சிறப்புரை: ஈசன், "தானே வந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டு அருளி" என மாணிக்கவாசகர் உரைப் பதைப் போன்று தானாகவே முன் வந்து ஆட்கொள்ளும் சிறப்பு "எண்ணா வந்து என் இல்லம்

புகுந்து" எனும் தொடர் வாயிலாகப் புலப்படுத்தப் பட்டது. இது தலைவனுக்குள்ள உரிமையைப் புலப் படுத்திற்று. இச்செயல் முன்வினைப் பயனால் கிடைக்கப்பெறும் பெரும் பேறு.

ஈசன் உள்ளம் புகுந்து ஆட்கொண்ட பின்னர் உலகப் பொருள்மீது பற்று நீங்கி ஈசனையே — தலைவன் ஒருவனையே கருதி இன்புறும் தகைமை உடையதாகும். அந்நிலையில் பிற பொருள்கள்பால், வெறுப்புக் கொள்ளும் தன்மை "எவ்வநோய் செய்தான்" என உணர்த்தப்பட்டது.

அக்கு – எலும்பு. எவ்வம் – வெறுப்பு, துன்பம்.

791. தார்கொள் கொன்றைக் கண்ணியோடும்
 தண் மதியம்சூடி
சீர்கொள் பாடல் ஆடலோடு
 சேடராய் வந்து
ஊர்கொள் தோறும் ஐயம் ஏற்றுஎன்
 னுள்வெந் நோய் செய்தார்
கார்கொள் சோலைக் கானூர்மேய
 கறைக் கண்டத்தாரே.

தெளிவுரை: கொன்றை மாலையும் குளிர்ந்த சந்திரனும் சூடி, புகழ் விளங்கும் ஆடல் பாடல்களுடன், பெருமை யுடையவராய் வந்து, ஊர்கள்தோறும் பிச்சை ஏற்கும் செயல் புரிந்து, என் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டவர், கானூர் மேவும் நீலகண்டத்தவரே.

சேடர் – பெருமையுடையவர், அழகுடையவர்.

792. முளிவெள் ளெலும்பு நீறுநூலு
 மூழ்கு மார்பராய்
எளிவந்தார் போல் ஐயம் என்றென்
 இல்லே புகுந்து உள்ளத்

தெளிவு நாணும் கொண்ட கள்வர்
 தேறல் ஆர் பூவில்
களிவண்டு யாழ்செய் கானூர்மேய
 ஒளிவெண் பிறை யாரே.

தெளிவுரை: உலர்ந்த எலும்பும், முப்புரிநூலும், திருநீறும் மார்பில் விளங்க, எளிமையான திருக்கோலத்தில் பிச்சை என்று கேட்டு என் இல்லம் புகுந்து, என் உள்ளத்தையும், தெளிவினையும், தன்மானத்தையும் கவர்ந்து கொண்ட கள்வர், தேன் சொரியும் பூவில் வண்டு களிப்புடன் யாழ்போன்று இசை யெழுப்பும் கானூரில் மேவும், வெண்பிறை சூடிய தலைவரே.

சிறப்புரை: இறைவன், உள்ளம் புகுந்த பின், தன்னிலை இழந்தமையும், ஈசனால் முழுமையாக ஆட் கொள்ளப் பட்டமையும், உணர்த்தப்பட்டது. இது மல நீக்கத்தை உணர்த்துதலாகும்.

முளி – உலர்ந்த.

793. மூவா வண்ணர் முளைவெண் பிறையர்
 முறுவல் செய்து இங்கே
பூவார் கொன்றை புனைந்து வந்தார்
 பொக்கம் பல பேசிப்
போவார் போல மால்செய்து உள்ளம்
 புக்க புரி நூலர்
தேவார் சோலைக் கானூர்மேய
 தேவ தேவ ரே.

தெளிவுரை: ஈசனார், மூப்பு அடையாத எழில் வண்ண மான் இளமையுடையவர்; முளைத்தெழும் இளமை யான வெண்பிறைச் சந்திரனைச் சூடியுள்ளவர்; இள முறுவல் செய்து, கொன்றை மாலை புனைந்து என்பால் வந்து, வஞ்சனையாகப் பேசிப், போவார்

போல, மயக்கத்தை உண்டாக்கி, என் உள்ளத்தில் புகுந்தவர், முப்புரி நூலணிந்தவராகிய, சிறப்பான சோலையுடைய கானூரில் மேவும் அவர் தேவதேவரே.

சிறப்புரை: தலைவனை நினைத்து மகிழும் தலைவியின் மனம் களிக்குமாறு பேசிச் செல்லும் தலைவனின் செயல், "பொக்கம் பல பேசிப் போவார்போல" என உணர்த்தப் பட்டது. இது, ஈசனைக் கனவில் கண்டு மகிழ்தல், கற்பனையில், பெருமானின் தோற்றத்தைக் கண்டு மகிழ்தல், தியானத்தில் மகிழ்தல் போன்ற வற்றையும் குறிப்பதாகும்.

மெய்ம்மொழி நவிலும் தன்மை சாற்றும் முப்புரி நூல் அணிந்த மார்பினராகிய ஈசன், பொக்கம் பல பேசிப் போவார் போல ஆயினரே எனும் பொருள் நயமும் காண்க.

பொக்கம் – வஞ்சனை, பொய்.

794. தமிழின் நீர்மை பேசித் தாளம்
வீணை பண்ணிநல்ல
முழவமொந்தை மல்குபாடல்
செய்கை இடம் ஓவார்
குமிழின் மேனி தந்து கோல
நீர்மை யது கொண்டார்
கமழும் சோலைக் கானூர்மேய
பவள வண்ணரே.

தெளிவுரை: தமிழ் போன்ற இனிமையாகப் பேசியும், தாளம், வீணை, முழவம், மொந்தை ஆகிய இசைக் கருவிகளுடன் விளங்கும் பாடல்களைப் பாடியும், அப் பாடல்களுக்கு ஏற்ற அசைவுகளைப் புரிவித்தும், என்னுள்ளத்தில் மகிழ்ச்சியைத் தந்து, என்னை,

அவனையே நினைக்கச் செய்து, என் மேனியில் குமிழம் பூ வண்ணத்தை உண்டாக்கிக் கவர்ந்து கொண்டவர், சோலை கமழும் கானூர் மேய பவளவண்ணரே.

சிறப்புரை: ஈசன் திருநாமத்தையும், அவன் புகழ் பொழிகளையும் கூறுபவர்களும், அவன் புகழ் பாடும் பாடல்களைப் பாடும் ஓதுவாமூர்த்திகளும், ஈசனே போலப் பாவித்து வழிபடுதலை உணர்த்தியது. மூன்று வகையாக விளங்கும் 1) குரு, 2) இலிங்க, 3) சங்கம வழி பாட்டில், இது சங்கம - அடியார் வழிபாட்டைக் குறிக்கும்.

குமிழின் மேனி – குமிழம்பூ வண்ணம்.

795. அந்தம்ஆதி ஆயனுமாலும்
ஆர்க்கும் அறிவரியான்
சிந்தையுள்ளு நாவின்மேலும்
சென்னியு மன்னினான்
வந்துஎன் னுள்ளம் புகுந்துமாலை
காலை ஆடுவான்
கந்த மல்கு கானூர்மேய
எந்தை பெம்மானே.

தெளிவுரை: திருமாலும் பிரமனும் அறிவரியவனாகிய ஈசன், என் சிந்தையில் புகுந்தும் நாவின் உறைந்தும் சென்னியிலும் விளங்குகின்றான்; என் உள்ளத்தில் புகுந்து காலையிலும் மாலையிலும் ஆடுகின்றான். அவ் ஈசன் மணம் மல்கும் கானூர் மேய எந்தை பெருமான்.

சிறப்புரை: சிந்தையும் நாவும் சென்னியும் திகழும் ஈசன், தன்னை முழுமையாக ஆட்கொண்ட தன்மை யுடைமையை உணர்த்துவதாயிற்று. நாவிலிருந்து வெளிவரும் சொ.ல்லும், அச் சொற்களுக்கு அடித்

தளமாகிய சிந்தையும், அவ்வடிவமும் ஈசனே ஆதலையும் உணர்த்திற்று. காலை மாலை ஆடுதல் பூசனை ஆற்றுதலைக் குறிப்பால் உணர்த்துவதாயிற்று.

796. ஆமைஅரவோடு ஏனவெண்கொம்பு
அக்குமாலை பூண்டு
ஆமோர்கள் வர் வெள்ளர்போல
உள்வெந்நோய் செய்தார்
ஓம வேத நான்முகனும்
கோண் நாகணை யானும்
சேமமாய செல்வர் கானூர்
மேய சேடரே.

தெளிவுரை: ஆமையோடு, அரவம், பன்றியின் வெண் கொம்பு, எலும்பு மாலை பூண்டு உள்ள கள்வராகிய ஈசன், தூய்மையாக உள்ளவர் போல் எனது உள்ளத்தில் புகுந்து நோய் உறுமாறு செய்தார். வேத நெறியில் வேள்வியாற்றும் நான்முகனும், வளைந்த நாகத்தைப் படுக்கையாக உடையவனும் ஆகிய திருமாலும் பாதுகாப்பாக நலம் கொள்ளப் புரியும் அச் செல்வர், கானூரில் மேவும் கடவுள்.

ஏனம் – பன்றி. அக்கு – எலும்பு, உருத்திராக்கம். கோண் நாகணை – வளைந்த நாகத்தின் படுக்கை. சேமம் – பாதுகாப்பு.

797. கழுது துஞ்சும் கங்குல் ஆடும்
கானூர் மேயானைப்
பழுதுஇல் ஞான சம்பந்தன்சொல்
பத்தும் பாடியே
தொழுதுபொழுது தோத்திரங்கள்
சொல்லித் துதித்து நின்று
அழுது நக்கும் அன்புசெய்வார்
அல்லல் அறுப்பாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: பேயும் உறங்கும் இருளில் நின்று நடனம் பயிலும் ஈசனை, கானூரில் விளங்கும் பெருமானைப் போற்றிப் பழுதில்லாத சொல் புகலும் ஞானசம்பந்தன் பாடிய இத்திருப்பதிகத்தை பாடியும் ஈசனைப் போற்றித் தொழுதும், தோத்திரங்களைச் சொல்லி வணங்கி நின்று, கசிந்து கண்ணீர் மல்கி அன்பு செய்பவர்கள் துன்பங்கள் அற்றவர்களாய் விளங்குவர்.

பொழுது – கொடி. எப்போதும் என்பது குறிப்பு.

74. திருப்புறவம்

தல விளக்கம்: *பதிக எண் 1 காண்க.*

பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

798. நறவ நிறைவண்டு அறைதார்க் கொன்றை
நயந்து நயனத்தால்
கறவம் செறி வண் கொடியோன் உடலம்
பொடியா விழி செய்தான்
புறவம் உறைவண் பதியா மதியார்
புறமூன்று எரிசெய்த
இறைவன தவன் இமையோர் ஏத்த
உமையோடு இருந்தானே.

தெளிவுரை: தேன் அருந்திய வண்டு நயந்து மேவும் கொன்றை மாலை சூடிய பரமன், மகரக் கொடி யுடைய மன்மதனைத் தன் நெற்றிக் கண்ணால் பொடியாக்கியவன். புறவம் எனப்படும் பதியில் உறையும் அப்பெருமான் மதியாத முப்புரங்களை எரியாக்கிய இறைவனாய், தேவர்கள் போற்ற, உமாதேவியோடு வீற்றிருந்தான்.

புறவம் – *சீகாழி.*

799. உரவன் புலியின் உரிதோலாடை
உடைமேற் படநாகும்
விரவி விரிபூங் கச்சா அசைத்த
விகிர்தன் உகிர் தன்னால்
பொரு வெங்களிறு பிளிற உரித்துப்
புறவம் பதியாக
இரவும் பகலும் இமையோர் ஏத்த
உமையோடு இருந்தானே.

தெளிவுரை: வலிமையான புலியின் தோலை உரித்து ஆடையாகக் கொண்டு, அதன் மீது படம் விரித்தாடும் நாகத்தைக் கச்சாகக் கட்டிய ஈசன், நகத்தினால் யானையின் தோலை உரித்து, புறவம் பதியாகக் கொண்டு, இரவும் பகலும் இமையவர்கள் ஏத்த, உமா தேவியுடன் வீற்றிருந்தனன்.

உரவன் – வலிமை.

800. பந்தம் உடைய பூதம் பாடப்
பாதம் சிலம்பார்க்கக்
கந்த மல்கு குழலிகாணக்
கரிகாட்டு எரியாடி
அந்தண் கடல்சூழ்ந்து அழகார் புறவம்
பதியா அமர்வெய்தி
எந்தம் பெருமான் இமையோர் ஏத்த
உமையோடு இருந்தானே.

தெளிவுரை: இரவில் தீப்பந்தங்களை ஏந்திய பூத கணங்கள் பாட, சிலம்பு ஒலித்து, கந்தம் கமழும் தேவி காணுமாறு சுடுகாட்டில் நெருப்பைக் கையில் கொண்டு நடனம் ஆடி, கடல் சூழ்ந்த அழகிய புறவத்தைப் பதியாகக் கொண்டு, எம் பெருமான் தேவர்கள் போற்ற உமாதேவியுடன் வீற்றிருந்தனன்.

பந்தம் – தீப்பந்தம், கட்டப்படும் அணி

801. நினைவார் நினைய இனியான் பனியார்
மலர்தூய் நித்தலும்
கனையார் விடையொன்று உடையான் கங்கை
திங்கள் கமழ்கொன்றை
புனைவார் சடையின் முடியான்கடல்சூழ்
புறவம் பதியாக
எனைஆளுடையான் இமையோர் ஏத்த
உமையோடு இருந்தானே.

தெளிவுரை: அன்று மலர்ந்த மலர்களைத் தூவி, நினைத்துப் போற்றும் அடியவர்தம் நெஞ்சில் இனிமை தருபவனாகி, கனைத்து ஒலி முழக்கும் விடையை (இடபம்) வாகனமாகவும், சடையில் கங்கை, சந்திரன், கொன்றை மலர் தரித்து புறவத்தைப் பதியாகக் கொண்டும், என்னை ஆளுடையவனாகிய பெருமான், தேவர்கள் எல்லோரும் போற்றுமாறு உமாதேவியுடன் வீற்றிருந்தனன்.

சிறப்புரை: ஆளுடைய பிள்ளையார் ஞான சம்பந்தர் என்னும் குறிப்புத் தோன்ற "எனை ஆளுடையான்" என்று உரைக்கும் ஞானசம்பந்தர் வாக்கு நோக்குக.

கனை – இடபம் எழுப்பும் ஒலி.

802. செங்கண் அரவு நகுவெண் தலையு(ம்)
முகிழ்வெண் திங்களும்
தங்கு சடையன் விடையன் உடையன்
சரிகோவண ஆடை
பொங்குதிரைவண் கடல்சூழ்ந்து அழகார்
புறவம் பதியாக
எங்கும் பரவி இமையோர் ஏத்த
உமையோடு இருந்தானே.

தெளிவுரை: அரவம், மண்டையோடு, இளஞ் சந்திரன் ஆகியவற்றைத் தன் சடை முடியில் வைத்த இடப வாகனன், கோவண ஆடை கொண்டு, கடல் சூழ்ந்த புறவம் என்னும் பதியை இடமாகக் கொண்டு, தேவர் கள் ஏத்த, உமாதேவியோடு வீற்றிருந்தனன்.

803. பின்னு சடைகள் தாழக் கேழல்
எயிறு பிறழப் போய்
அன்ன நடையார் மனைகள் தோறும்
அழகார் பலி தேர்ந்து
புன்னை மடலின் பொழில்சூழ்ந்து அழகார்
புறவம் பதியாக
என்னை உடையான் இமையோர் ஏத்த
உமையோடு இருந்தானே.

தெளிவுரை: பின்னப்பட்டு முறுக்கு ஏறிய சடைகள் தாழ்ந்து விரிந்து விளங்க, பன்றியின் பல்லைக் கழற்றி, தாருக வனத்தில் உறையும் முனிவர்களின் மனைகள் தோறும், முனிபத்தினிகள் விருப்பத்துடன் முன் வந்து அளிக்குமாறு உடைய அழகிய பலியைத் தேர்ந்து செய்து, புன்னை மரங்கள் சூழ்ந்த அழகிய புறவம் என்னும் பதியில், என்னை ஆளாக உடையவனாகிய ஈசன், தேவர்கள் ஏத்த உமாதேவியோடு வீற்றிருந்தனன்.

சிறப்புரை: பிச்சையேற்போருக்கு விரும்பி அளித்தலை யும், அளிக்கும் பொருட்கள் விருப்பத்துடன் அளிக்கப் படுவதுடன் அல்லாமல், பிச்சை ஏற்றவனாகிய ஈசன் அழகில் தன்னை இழந்து நிற்றல், குறிக்கும் சிறப்பினை "அழகார் பலி தேர்ந்து" என உணர்த்தப்பட்டது.

ஈசன், மன்னுயிர்களைத் தன்பால் ஈர்த்து மகிழ வைக்கும் தன்மையுடையவன் என்பதும், இதனால் உணர்த்தப்பட்டது.

ஞானசம்பந்தர், "ஆளுடைய பிள்ளை" என்னும் குறிப்பு, என்னை உடையான் என்று உரைத்தலாலும் காண்க.

கேழல் எயிறு – பன்றியின் பல் – (பன்றி – திருமால் கொண்ட அவதாரம்)

804. உண்ணற்கு அரிய நஞ்சை உண்டு
ஒரு தோழம் தேவர்
விண்ணில் பொலிய அமுதம் அளித்த
விடைசேர் கொடி அண்ணல்
பண்ணில் சிறை வண்டு அறைபூஞ் சோலைப்
புறவம் பதியாக
எண்ணில் சிறந்த இமையோர் ஏத்த
உமையோடு இருந்தானே.

தெளிவுரை: உண்பதற்கு அரியதான நஞ்சினை உண்டு, தேவர்கள் விண்ணுலகத்தில் சிறந்து விளங்குமாறு புரிந்து, அமுதம் அளித்த இடபக் கொடியுடைய அண்ணல், சிறகுகளை உடைய வண்டுகள் பண்ணிசை எழுப்பும் பூஞ்சோலையுடைய புறவம் எனும் பதியில், தேவர்கள் ஏத்துமாறு உமாதேவியுடன் வீற்றிருந்தனன்.

தோழம் – ஒருவகைப் பேரெண் – முப்பத்து முக்கோடி தேவர்கள் என்று உரைக்கப் பெறுதலும் காண்க.

805. விண்தான்அதிர வியனார் கயிலை
வேரோடு எடுத்தான்றன்
திண்டோள் உடலு(ம்) முடியு(ம்) நெரியச்
சிறிதே ஊன்றிய
புண்தான் ஒழிய அருள்செய் பெருமான்
புறவம் பதியாக
எண்டோள் உடையான் இமையோர் ஏத்த
உமையோடு இருந்தானே.

தெளிவுரை: விண்ணுலகம் அதிருமாறு, பெருமை பொருந்திய கயிலையை எடுத்த இராவணனுடைய வலிமையான தோளும், உடலும், தலையும் நெரியுமாறு சிறிது ஊன்றி, அதனால் ஏற்பட்ட புண் நீங்குமாறு அருள் செய்த பெருமான், புறவம் எனும் பதியில் எட்டுத் தோள்களுடன் இமையவர்கள் ஏத்த உமாதேவியுடன் வீற்றிருந்தனன்.

வியன் – பெருமை.

806. நெடியான்நீள்தா மரைமேல் அயனு(ம்)
நேடிக் காண்கில்லாப்
படியா மேனி உடையான் பவள
வரைபோல் திருமார்பில்
பொடியார் கோலம் உடையான்கடல் சூழ்
புறவம் பதியாக
இடியார் முழவார் இமையோர் ஏத்த
உமையோடு இருந்தானே.

தெளிவுரை: நெடியவனாகிய திருமாலும், தாமரை மலர் மேல் விளங்கும் பிரமனும் காண முடியாதவாறு, எதிலும் படியாதபடி திருமேனி உடைய ஈசன், பவளம் போன்ற சிவந்த திருமார்பில் திருவெண்ணீறு அணிந்து, புறவம் பதியெனக் கொண்டு, இடிபோன்ற முழவம் அதிர, தேவர்கள் ஏத்த, உமாதேவியுடன் வீற்றிருந்தனன்.

807. ஆலும் மயிலின் பீலி அமணர்
அறிவில் சிறுதேரர்
கோலும் மொழிகள் ஒழியக் குழுவும்
தழலும் எழில் வானும்
போலும் வடிவும் உடையான் கடல்சூழ்
புறவம் பதியாக

ஏலும் வகையால் இமையோர் ஏத்த
உமையோடு இருந்தானே.

தெளிவுரை: அகவுகின்ற மயிலின் இறகுடைய சமணர் களும் பௌத்தர்களும் கூறுகின்ற மொழிகளை ஒதுக்கி வைத்து, திரண்ட தீப் பிழம்பு போன்று வானம் முழுமையும் எழில் பெறச் செய்யும் வடிவினனாகிய ஈசன், புறவம் என்னும் பதியில் பொருந்தி அருள் புரிபவனாக, இமையோர்கள் ஏத்த உமாதேவியுடன் வீற்றிருந்தனன்.

ஆலும் – அகவும். ஏலும் – பொருந்திய.

808. பொன்னார் மாட நீடும் செல்வப்
புறவம் பதியாக
மின்னார் இடையாள் உமையாளோடும்
இருந்த விமல னைத்
தன்ஆர்வம் செய் தமிழின் விரகன்
உரைத்த தமிழ்மாலை
பன்னாள் பாடி ஆடப் பிரியார்
பரலோகம் தானே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: பொன்போன்று திகழும் மாட மாளிகை களும், நீண்டு வளரும் செல்வச் செழிப்பும் உள்ள புறவம் என்னும் நகரினை இடமாகக் கொண்டு, மின்னலைப் போன்ற இடையுடைய உமாதேவியோடு வீற்றிருக்கின்ற விமலனாகிய ஈசனை, தானாக, உள்ளுணர்வால் எழும் அன்பின் காரணமாக – நன்மைகளைச் செய்யும் தமிழின் மீது பற்றுக் கொண்டவராகிய ஞானசம்பந்தன் உரைத்த இத் திருப்பதிகத்தைப் பல நாட்கள் பாடி, மனங்கசிந்து பக்தியினால் ஆட, பரனுடைய உலகமாக விளங்கும்

இனிய உலகத்தில் எக்காலத்திலும் பிரியாதவராய் மகிழ்ந்திருப்பர்.

சிறப்புரை: *பரலோகம் வாய்க்கும் நிலையை உறுதிப் படுத்தும் சொல்லாகப் பிரியார், தானே என உரைக்கப் பட்டது.*

தமிழின் விரகன் – தமிழில் பற்றுடைய ஞானசம்பந்தன்.

75. திருவெங்குரு

தல விளக்கம்: *பதிக எண் 1 காண்க*

பண் : *குறிஞ்சி*

திருச்சிற்றம்பலம்

809. காலைநன் மாமலர் கொண்டு அடிபரவிக்
கைதொழு மாணியைக் கறுத்த வெங்காலன்
ஓலமது இடமுன் னுயிரொடு மாள
உதைத்தவன் உமையவள் விருப்பன் எம்பெருமான்
மாலை வந்துஅணுக ஓதம்வந் துலவி
மறிதிரை சங்கொடு பவள(ம்)முன் உந்தி
வேலைவந்து அணையும் சோலைகள் சூழ்ந்த
வெங்குரு மேவிஉள் வீற்றிருந்தாரே.

தெளிவுரை: *காலை நேரத்தில், சிறப்பான மலர்கள் தூவித் திருவடியைப் பரவித் தொழுத மார்க்கண்டேயர்பால் சினங்கொண்டு உயிரைக் கவர வந்த கூற்றுவன், ஓலம் இட்டு அலறுமாறு உதைத்து, அவன் உயிரைக் கவர்ந்தவனாகிய ஈசன், உமாதேவிக்கு மிக விருப்பமானவன்; எம் தலைவன். மாலை நேரத்தில் கடல் அலைகள் சுருளாகக் கரையை அணுகி, சங்கும் பவளமும் உந்திச் சேர்க்கும்*

சோலைகள் சூழ்ந்த வெங்குரு எனும் பதியில் மேவி அப் பெருமான் வீற்றிருந்தனர்.

வெங்குரு – சீகாழி.

810. பெண்ணினைப் பாகம் அமர்ந்து செஞ்சடைமேல்
பிறையொடும் அரவினை அணிந்து அழகாகப்
பண்ணினைப் பாடி ஆடிமுன் பலிகொள்
பரமர் எம்மடிகளார் பரிசுகள் பேணி
மண்ணினைமூடி வான்முகடு ஏறி
மறிதிரை கடல்முகந்து எடுப்பமற்றுயர்ந்து
விண்ணளவோங்கி வந்திழி கோயில்
வெங்குரு மேவியுள் வீற்றிருந்தாரே.

தெளிவுரை: உமாதேவியை ஒரு பாகமாக மகிழ்ந்து, சிவந்த சடையின் மீது பிறைச் சந்திரனும் அரவமும் அணிந்து, அழகிய வடிவம் தாங்கி, பாடியும் ஆடியும் பிச்சையேற்ற எம் அடிகள் ஆகிய ஈசனார், நன்மைகள் பேணி, உயர்ந்த அலைகள் பரப்பி, தேவலோகத்தில் உள்ள செல்வங்களையும் முகந்து பெறும், கடல் சிறப்புடைய வெங்குரு என்னும் பதியில் இடமாகக் கொண்டு வீற்றிருந்தனர்.

சிறப்புரை: வளம் மிக்க முத்தும், பவளமும், சங்கும் வழங்கும் கடலானது, பெருக்கெடுக்கும் அலைகளாலும் சூறைக் காற்றாலும் சேதம் விளைவிக்கும் தன்மை உடையது. ஆயினும் இத்தலத்தில், நெய்தற் சிறப்பும், வளமும் பெருகித் தோன்றும் இயல்புடையது எனச் சுட்டிக்காட்டும் விதத்தில் "பரிசுகள் பேணி" என உணர்த்தப்பட்டது காண்க.

ஈசனார் திருவருளைப் புரியும் பாங்கில், அதனைப் பேணும் இயல்பாக வழங்கப் பெறும்

நன்மைகளும் ஆகும் என அமையுமாறு "பரிசுகள் பேணி" எனப்படுதலும் ஆம். இவற்றுடன், "பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும் பெண்சுமந்த பாகத்தன்" என, ஈசனைப் போற்றி மாணிக்கவாசகர் உரைப்பதும் காண்க.

பிரளய காலத்தில், ஈசன் தோணியில் வீற்றிருந்து கனிந்தருள வல்லவன் எனவும், அஞ்ஞான்று, கடலலைகள் மண்ணினை மூடிக் காட்சி தரும் எனவும் குறிப்பால் சுட்டப் பெறுதலும் காண்க.

பரிசு – கொடை, நன்மை, பெருமை.

811. ஓர்இயல்பு இல்லா உருவமது ஆகி
ஒண்திறல் வேடனது உருவது கொண்டு
காரிகை காணத் தனஞ்சயன் தன்னைக்
கறுத்து அவற்கு அளித்துடன்
காதல்செய்பெருமான்
நேரிசை யாக அறுபதமுரன்று
நிரைமலர்த் தாதுகண் மூசவிண் டுதிர்ந்து
வேரிகள் எங்கும் விம்மிய சோலை
வெங்குரு மேவியுள் வீற்றிருந்தாரே.

தெளிவுரை: இத்தகைய உருவம்தான் உடையவன் என்று அறுதியிட்டுக் கூறமுடியாத வடிவத்தை உடையவனாய்த் திறல்மிக்க வேடன் உருவத்தைத் தாங்கி, உமாதேவி காணுமாறு அர்ச்சுனனுடன் சினந்து வழக்கிட்டுப் போர் செய்து, பின்னர் வரம் நல்கி அன்பு சொரியும் ஈசன், வண்டு நேரிசை என்னும் பண் எழுப்பி, மகரந்தம் உதிர்ந்து கண்ணை மறைக்கத் தேன் சொரியும் சோலைகள் உடைய வெங்குரு எனும் பதியில் வீற்றிருந்தனர்.

சிறப்புரை: இன்ன வடிவத்தன் ஈசன் என்று உரைக்க இயலாத தன்மையினை, "ஒருநாமம் ஒருருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம் திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ" எனவும்; "அருவாய உருவமும் ஆயபிரான்" எனவும் மாணிக்கவாசகர் உரைத்தலும், "ஓரியல்பு இல்ல, உருவமது ஆகி" என உணர்த்தப் பெறுவதோடு நோக்கத்தக்கது.

கருத்து – சினந்து. காதல் – அன்பு. நேரிசை – ஒரு பண் வகை. அறுபதம் – வண்டு. முரன்று – இசைத்து. மூச – மறைத்தல். வேரி – தேன்.

812. வண்டுஅணை கொன்றை வன்னியு மத்த
மருவிய கூவிளம் எருக்கொடு மிக்க
கொண்டணி சடையர் விடையினர் பூதம்
கொடுகொட்டி குடமுழாக் கூடியுமுழவப்
பண் திகழ்வாகப் பாடியொர் வேதம்
பயில்வர்முன் பாய்புனல் கங்கையைச்சடைமேல்
வெண்பிறை சூடி உமையவளோடும்
வெங்குரு மேவியுள் வீற்றிருந்தாரே.

தெளிவுரை: வண்டுகள் மொய்த்துச் சேரும் கொன்றை, வன்னி, ஊமத்தம், வில்வம், எருக்கு ஆகியவற்றைச் சடையில் உடைய இடப வாகனர், கொடு கொட்டி முழவு முதலியவை பூதங்கள் முழங்கவும், பாடவும், வேதங்கள் பயில, கங்கையும் வெண்பிறையும் தரித்து உமாதேவியோடு வெங்குருமேவி வீற்றிருந்தனர்.

கொடுகொட்டி – வாத்திய வகை.

813. சடையினர் மேனி நீறதுபூசித்
தக்கைகொள் பொக்கணம் இட்டுடனாகக்
கடை தொறும்வந்து பலியது கொண்டு
கண்டவர் மனமவை கவர்ந்தழகாகப்

படையது ஏந்திப் பைங்கயற்கண்ணி
உமையவள் பாகமும் அமர்ந்தருள்செய்து
விடையொடு பூதம் சூழ்தரச் சென்று
வெங்குரு மேவியுள் வீற்றிருந்தாரே.

தெளிவுரை: சடையை உடைய ஈசன், திருமேனியில் வெண்ணீறு பூசி, தக்கை என்கிற வாத்தியத்தை ஒரு பையில் இட்டு, வாயிற்படிதோறும் வந்து பிச்சை யேற்று, இவரைக் கண்ணுற்றவர் மனத்தைக் கவர்ந்து, அழகிய தோற்றப் பொலிவுடன் விளங்கி, கரத்தில் மழு, சூலம் முதலான படைகளை ஏந்தி, உமாதேவியை ஒரு பாகத்தில் வைத்து அமர்ந்து அருள் செய்து இடப வாகனமும், பூத கணங்களும் சூழ வெங்குருவில் மேவி வீற்றிருந்தனர்.

தக்கை – வாத்திய வகை. பொக்கணம் – துணிப்பை.

814. கரைபொரு கடலில் திரையது மோதக்
கங்குல் வந்து ஏறிய சங்கமும் இப்பி
உரையுடை முத்த மணலிடை வைகி
ஓங்கு வான் இருள்அறத் துரப்பஎண் திசையும்
புரைமலி வேதம் போற்றுபூ சுரர்கள்
புரிந்தவர் நலங்கொள் ஆகுதியினில் நிறைந்த
விரைமலி தூபம் விசும்பினை மறைக்கும்
வெங்குரு மேவியுள் வீற்றிருந்தாரே.

தெளிவுரை: கடலலைகள் கரையில் மோதிச் செல்ல, அந்த ஓதத்தில் கரையை அடைந்த சங்குகளும், முத்துக்கள் ஈனும் சிப்பிகளும் மணலில் விளங்கி, இரவில் இருளை அகற்றி ஒளியை உமிழ, எட்டுத் திசைகளும் சிறந்து விளங்கும், வேதம் ஓதுகின்ற பூவுலகின் தேவர்களாகிய அந்தணர்கள், நலத்தை நாடிப் புரியும் வேள்வித் தீயிலிருந்து தோன்றும் புகையானது

விசும்பினில் சென்று, அவ்வொளியை மறையச் செய்யும் சிறப்புடைய தெய்வீக மணம் கமழும் இடமாகிய வெங்குரு மேவி, ஈசன் வீற்றிருந்தனர்.

சிறப்புரை: வேதம் ஓதி வேள்வி புரிந்து நலம் புரியும் மாண்பு சிறக்கும் சீகாழி என இவண் உணர்த்தப் பட்டது. "கற்று ஆங்கு எரியோம்பி கலியை வாராமே செற்றார் வாழ்தில்லை" எனச் சாற்றும் சிதம்பரத்தின் தலச் சிறப்பும் இவண் சிந்திக்கத் தக்கது.

பூசுரர் – அந்தணர்.

815. வல்லி நுண்ணிடையாள் உமையவள்தன்னை
மறுகிட வருமத களிற்றினை மயங்க
ஒல்லை யில்பிடித்தங்கு உரித்து அவள் வெருவல்
கெடுத்தவர் விரிபொழில்மிகு திருஆலில்
நல்லறம் உரைத்து ஞானமோடு இருப்ப
நலிந்திடல்உற்று வந்த அக் கருப்பு
வில்லியைப் பொடிபட விழித்தவர் விரும்பி
வெங்குரு மேவியுள் வீற்றிருந்தாரே.

தெளிவுரை: கொடி போன்ற மெல்லிய இடையை உடைய உமாதேவியைக் கலங்கச் செய்யுமாறு வந்த மதயானையை விரைவில் பிடித்துத் தாக்கி அழித்து, அவள் அச்சத்தைப் போக்கிய ஈசர், கல்லால நிழலில் சனகாதி முனிவர்களுக்கு நல்லறப் பொருள்களை உரைத்துத் தட்சணாமூர்த்தியாக ஞானமுத்திரை காட்டி இருக்க, அவரை அந்நெறியிலிருந்து வழுவுதல் செய்யும் பொருட்டு வந்த கரும்பு வில்லையுடைய மன்மதனைத் தன் நெற்றிக் கண்ணால் பொடியாக்கியவர், விருப்பத்துடன் வெங்குரு எனும் பதியில் மேவி வீற்றிருந்தனர்.

வல்லி – கொடி. ஒல்லை – விரைவாக. வெருவல் – அச்சம். கருப்பு வில்லி – மன்மதன்.

816. பாங்கிலா அரக்கன் கயிலை அன்று எடுப்பப்
பலதலை முடியொடு தோளவை நெரிய
ஓங்கிய விரலால் ஊன்றி அன்று அவற்கே
ஒளிதிகழ் வாளது கொடுத்து அழகாய
கோங்கொடு செருந்தி கூவிள மத்தம்
கொன்றையும் குலாவிய செஞ்சடைச் செல்வர்
வேங்கை பொன் மலரார் விரைதரு கோயில்
வெங்குரு மேவியுள் வீற்றிருந்தாரே.

தெளிவுரை: நற்குணம் இல்லாத அரக்கனாகிய இராவணன் கயிலையை எடுக்க, அவன் பத்துத் தலைகளும் தோளும் நொறுங்கி வதைபடுமாறு, பெருமை மிக்க திருப்பாத விரலால் ஊன்றி, அவ்வரக்க னுக்கு ஒளி திகழ் வாளும் கொடுத்து, அழகாக விளங்கும் கோங்கு, செருந்தி, வில்வம், ஊமத்தம், கொன்றை மலர்கள் விரவிய சிவந்த சடையுடைய செல்வராகிய ஈசன் மலைபோன்ற ஏற்றம் பொருந்திய வெங்குருவில், மணம் மல்கும் கோயிலில் வீற்றிருந்தனர்.

817. ஆறுடைச் சடைஎம் மடிகளைக் காண
அரியொடு பிரமனும் அளப்பதற்காகிச்
சேறிடைத் திகழ்வா னத்திடை புக்கும்
செலவறத் தவிர்ந்தனர் எழிலுடைத் திகழ்வெண்
ணீறுடைக் கோல மேனியர் நெற்றிக்
கண்ணினர் விண்ணவர் கைதொழுது ஏத்த
வேறுஎமை ஆள விரும்பிய விகிர்தர்
வெங்குரு மேவியுள் வீற்றிருந்தாரே.

தெளிவுரை: கங்கை தரித்த சடையுடைய எம் அடிகளைக் காண்பதற்குத் திருமாலும், பிரமனும் அளவிடுவதற்கு என, பூமிக்குக் கீழேயும், வானத் திடையிலும் புகுந்து செல்ல, காண்பதற்கு இயலாமல்

அச்செயலைத் தவிர்த்தனர். அவர், எழில் திகழும் திரு வெண்ணீறு பூசிய கோலம் உடையவர்; நெற்றியில் கண்ணுடையவர்; விண்ணுலகத்தவர் தொழுது ஏத்தி நிற்க எம்மை ஆட்கொள்ள விரும்பிய விகிர்தர்; வெங்குரு மேவி வீற்றிருந்தனர்.

சேறு – பூமி. கோலம் – அழகு. விகிர்தர் – யாவற்றுக்கும் வேறுபாடு உடையவர், ஈசர்.

818. பாடுடைக்குண்டர் சாக்கியர் சமணர்
பயில்தரு மறவுரை விட்டுஅழகாக
ஏடுடை மலராள் பொருட்டு வன்தக்கன்
எல்லையில் வேள்வியைத் தகர்த்து அருள்செய்து
காடிடைக் கடிநாய் கலந்துடன் சூழக்
கண்டவர் வெளிவுற விளித்து வெய்தாய
வேடுடைக் கோலம் விரும்பிய விகிர்தர்
வெங்குரு மேவியுள் வீற்றிருந்தாரே.

தெளிவுரை: துன்பத்தில் ஆழும் சாக்கியர் மற்றும் சமணர் உரைசெய்யும், மறம் தோயும் புன் சொற்களை ஒதுக்கி, உமாதேவியின் பொருட்டு கொடிய தக்கன் வளர்த்த வேள்வியைத் தகர்த்து அழித்துப் பின்னர் அருள் செய்து, சுடுகாட்டில் வேட்டை நாய்கள் சூழவும், காண்கின்றவர்கள் கீழ்மையறிவினன் எனக் கருதுமாறும் வேட்டுவக்கோலம் விரும்பிய விகிர்தர், வெங்குரு மேவி வீற்றிருந்தனர்.

வெளிமை – கீழ்மையறிவு.

819. விண்ணியல் விமானம் விரும்பிய பெருமான்
வெங்குரு மேவியுள் வீற்றிருந்தாரை
நண்ணிய நூலன் ஞானசம்பந்த(ன்)
நவின்ற இவ் வாய்மொழி நலமிகு பத்தும்
பண்ணியல் பாகப் பத்திமை யாலே
பாடியும் ஆடியும் பயிலவல் லோர்கள்

விண்ணவர் விமானம் கொடுவரவு ஏறி
வியன் உலகுஆண்டு வீற்று இருப்பவர்தாமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: உயர்ந்த நிலையுடைய விமானத்தை விரும்பிய ஈசன், வெங்குருமேவி வீற்றிருந்த பெருமான். அவரை ஏத்தி ஞான நூல் வல்லவனாகிய ஞான சம்பந்தன் மெய்ம்மை சேர் வாய்மொழியாக உரைத்த இத் திருப்பதிகத்தை, பண்ணிசையாகவும், பக்தி யாகவும், பாடி, மனங்கசிந்து உள் மகிழ்ந்து நெக்குருகி ஆடி ஓத வல்லவர்கள், தேவர்கள் விமானத்தைக் கொண்டு வந்து அதில் ஏற்றிச் சென்று பெருமையான உலகத்தில் சேர்க்க, அதில் திளைத்து இருப்பார்கள்.

வாய்மொழி – மெய்யுரை.

76. திருஇலம்பையங்கோட்டூர்

தல விளக்கம்: தொண்டை நாட்டுத் தலம். எலுமியன் கோட்டூர் என வழங்கப்படுகிறது. அரம்பையர் பூசித்துப் பேறு பெற்ற தலம். ஞானசம்பந்தருக்கு இறைவன் பாலனாகவும், விருத்தனாகவும், பசுவாகவும் தோன்றிக் காட்சி தந்த தலம். ஈசன் தனது உரை, ஞானசம்பந்தரின் உரை நவிலுமாறு உரைச் சிறப்புடையது.

குறிப்பு: தலைவி தலைவன் பாவனையில் அமையப் பெற்ற பதிகம்.

சுவாமி : அரம்பேஸ்வரர், சந்திரசேகரர்

அம்பிகை : கோடேந்து முலை அம்மை

தல மரம் : மல்லிகை

தீர்த்தம் : மல்லிகை தீர்த்தம், சந்திர தீர்த்தம்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

820. மலையினார் பருப்பதம் துருத்தி மாற்பேறு
மாசிலாச் சீர்மறைக் காடுநெய்த் தானம்
நிலையினான் எனதுஉரை தனதுஉரை யாக
நீறுஅணிந்து ஏறுஉகந்து ஏறிய நிமலன்
கலையினார் மடப்பிணை துணையொடும்துயிலக்
கானலம் பெடைபுல்கிக் கணமயில்ஆலும்
இலையினார் பைம்பொழில் இலம்பையங் கோட்டூர்
இருக்கையாப் பேணிஎன் னெழில்
கொள்வதியல்பே.

தெளிவுரை: பருப்பத மலையை (ஸ்ரீசைலம்) உடையவர், திருத்துருத்தி, திருமாற்பேறு, திருமறைக்காடு, நெய்த் தானம் ஆகிய திருத்தலங்களில் நிலைத்து விளங்குபவர், ஈசன். அவர், என்னுடைய உரையைத் தன்னுடைய உரையாக ஏற்றுத் திருநீறு அணிந்து, இடப வாகனம் விரும்பிய நிமலன். கலைமான் தன் துணையாகிய பெண் மானுடன் துயிலவும், சோலையில், ஆண் மயில் கூட்டங்கள் பெண் மயில்களுடன் சேர்ந்து மகிழ்ந்து விளங்கவும், சோலைகள் பொலியும் இலம்பையம் கோட்டூரை இடமாகக் கொண்டுள்ள இவர், என் உள்ளத்தைக் கவர்ந்து கொள்ளை கொண்டு, என் எழிலையும் கவர்ந்து, என்பால் நாடி மகிழ்விக்காமல் இருப்பது நல் இயல்பு ஆகுமோ!

சிறப்புரை: மானும், மயிலும் தன் துணையுடன் மகிழ்ந்து விளங்கும் பெற்றி கூறி, அவ்வாறு விளங்கும் இலம்பை யங்கோட்டூரில் வீற்றிருக்கும் பெருமான், உள்ளம் பொருந்த என்பால் பொருந்தி மகிழ்ந்து இருக்க

வேண்டும் என வேண்டியவாறு, உணர்த்தப்பட்டது. மன்னுயிர்பால் இறைவன் பொருந்திய நிலையில், மகிழ்ச்சியுற்றுப் பேரின்பம் உறும் எனவும் உணர்த்துவ தாயிற்று.

821. திருமலர்க்கொன்றையான் நின்றியூர் மேயான்
தேவர்கள் தலைமகன் திருக்கழிப்பாலை
நிருமலன் எனதுஉரை தனதுஉரை யாக
நீறுஅணிந்து ஏறுஉகந்து ஏறிய நிமலன்
கருமலர்க் கமழ்சுனை நீண்மலர்க்குவளை
கதிர்முலை இளையவர் மதிமுகத்து உலவும்
இருமலர்த் தண்பொய்கை இலம்பையங் கோட்டூர்
இருக்கையாப் பேணிஎன்னெழில்கொள்வது
இயல்பே.

தெளிவுரை: *சிறப்பான கொன்றை மலர் சூடிய பரமன், திருநின்றியூரில் மேயவன்; தேவர்களுள் முதலாமவன்; திருக்கழிப்பாலையில் விளங்கும் நின்மலன். அவன் எனது உரையைத் தனது உரையாக ஏற்றுக்கொண்டு திருநீறு தரித்து, இடப வாகனத்தை விரும்பி அமர்ந்த நிமலன், நீலவண்ணமலர் கமழ் சுனைகளும், நீண்ட குவளை மலர் போன்ற மதிமுகத்து மாதர்களும், பெரிய தாமரை மலர் சூழ்ந்த பொய்கையும், விளங்கும் இலம்பையங் கோட்டூரில் வீற்றிருக்கும் ஈசன், என் எழிலைக் கவர்ந்து என்னை வாடுமாறு புரிவது நல்லியல்பு ஆகுமோ!*

822. பாலனாம் விருத்தனாம் பசுபதிதானாம்
பண்டுவெங் கூற்றுதைத்து அடியவர்க்கு அருளும்
காலனாம் எனதுஉரை தனதுஉரை யாகக்
கனல்எரி அங்கையில் ஏந்திய கடவுள்
நீலமாமலர்ச்சுனை வண்டுப ண்செய்ய
நீர்மலர்க் குவளைகள் தாதுவிண் டோங்கும்

ஏலநாறும் பொழில் இலம்பையம் கோட்டூர்
இருக்கையாப் பேணி என்னெழில்
கொள்வதியல்பே.

தெளிவுரை: ஈசன், பாலனாகவும், விருத்தனாகவும், பசுபதியாகவும் வந்தவன். ஒரு காலத்தில், கொடுமையான கூற்றுவனைத் திருப்பாதத்தால் உதைத்து மாய்த்து மார்க்கண்டேயருக்கு அருள் செய்தவன், காலனுக்குக் காலனாகிய பரமன். அப் பெருமான், எனது உரையைத் தனது உரையாக ஏற்றுக் கொண்டு, எரியும் அனலைக் கையில் ஏந்திய கடவுள். நீல மலர்களை உடைய சுனைகளில் வண்டு இரைக்கவும், நீரில் திகழும் குவளை மலர்கள் மகரத்தைப் பொழிய, மணம்கமழும் பொழில் உடைய இலம்பையங் கோட்டூரில் வீற்றிருக்கும் அப்பெருமான் என் எழிலைக் கவர்ந்து செல்வது நல்லியல்பு ஆகுமோ!

823\. உளங்கொள்வார் உச்சியார் கச்சியேகம் பன்
ஒற்றியூர் உறையும்அண் ணாமலை அண்ணல்
விளம்புவான் எனதுஉரை தனது உரையாக
வெள்ளநீர் விரிசடைத் தாங்கிய விமலன்
குளம்புறக்கலை துள மலைகளும் சிலம்ப
கொழுங்கொடி எழுந்தெங்கும் கூவிளம்கொள்ள
இளம்பிறை தவழ்பொழில் இலம்பையங் கோட்டூர்
இருக்கையாப் பேணிஎன் னெழில்கொள்வ
தியல்பே.

தெளிவுரை: தன்னைத் தியானம் செய்பவர்களுடைய உள்ளத்தில் உயர்வாக உறைபவர் திருக்கச்சியேகம்பன். அவர் திருவொற்றியூர் என்னும் திருத்தலத்தில் உறைபவராகிய அண்ணாமலை அண்ணல்; எனது உரையைத் தான் உரைக்கும் உரையாகக் கொண்டு

விளம்புபவர்; கங்கையை, விரித்த சடையில் ஏற்றுத் தாங்கிய விமலன். கலைமான் குளம்பு பதியத் துள்ள மலைகளிலும் ஓசைகள் நிலவ, பூங்கொடிகள் தாவி வில்வமரங்களைப் பற்றிப் படர்ந்திருக்கும், பிறைதிகழ் பொழில் உடைய இலம்பையங் கோட்டூரில் இருக்கை யாகக் கொண்டு அவர் வீற்றிருக்க, என்னுடைய எழிலைக் கவர்ந்து என்னை வாடுமாறு செய்வது நல்லியல்பு ஆகுமோ!

சிறப்புரை: தன்னை நினைத்துப் போற்றும் அடியவர் பால் ஈசன் சிறப்பாக வீற்றிருந்து அருள் செய்தல் உளங்கொள்வார் உச்சியார் என்று உணர்த்தப் பட்டது. இக்கருத்தில், திருவடியை உச்சமாகக் கருதும் அடியவர்களின் பெருமானாக விளங்கும் ஈசனார் தன்மையைப் "படர்சடையாய் பாதமலர் உச்சத்தார் பெருமானே" என்று மாணிக்கவாசகர் உரைப்பதும் காண்க.

பூங்கொடிகள் வில்வமரத்தைச் சார்ந்து படர்ந்து மகிழுமாறு புரியும் ஈசன் என்னைக் கவர்ந்த பின்பு தன்பால் இணைத்துக் கொள்ளாது தவிப்புறச் செய்தல் நல்லியல்பு ஆகாமை உணர்த்தப்படுகிறது. தலைவி தலைவனைப் பற்றி இருந்து மகிழ்தலைப் போன்று, ஆன்மாவானது தனது தலைவராகிய ஈசனைப் பற்றி உடனிருந்து மகிழ்தல் வேண்டும் என உரைத்த மாண்பும் காண்க.

•

824. தேனுமாய்அமுதமாய்த் தெய்வமும் தானாய்த்
தீயொடு நீருடன் வாயுவாம் தெரியில்
வானுமாம் எனதுரை தனதுரையாக
வரிஅராஅரைக்கு அசைத்து உழிதரு மைந்தன்
கானமான் வெருவுறக் கருவிரல் ஊகம்
கடுவனோடு உகளும்ஊர் கற்கடும்சாரல்

ஏனம்ஆன் உழிதரும் இலம்பையங் கோட்டூர்
இருக்கையாப் பேணிஎன் னெழில்கொள்வ
தியல்பே.

தெளிவுரை: தேனாக இனிமை தருபவனாயும், அமுதமாய் விளங்கி நிலைத்த தன்மையை வழங்கு பவனாயும், தெய்வமாக இருந்து முத்திப் பேற்றினை அருள்பவனாகவும் திகழ்ந்து, ஐம்பூதங்களாகிய நிலம், நீர், தீ, காற்று, வான் ஆகிச் சூழ்ந்து, நான் சொல்லும் உரையைத் தான் சொல்லும் உரையாகக் கொண்டு மெய்ம்மைப்படுத்தி அழகிய அரவத்தை இடையில் பொருத்திக் காட்சி தரும் அழகனாகிய ஈசன், சோலை களில் உள்ள மான்கள் மருட்சியடைந்து அச்சம் கொள்ள, குரங்குகள் தாவித் திரிய, கற்கள் மிகுந்த சாரலில் பன்றிகளும் பசுக் கூட்டங்களும் திரியவும் விளங்கும் இலம்பையங் கோட்டூர் என்னும் தலத்தில் வீற்றிருந்து என்னைப் பாதுகாத்து என் எழிலைக் கவர்ந்தது அவன் நல்லியல்பு ஆகுமோ!

வரி – அழகு. உழிதரு – இடம் சார்தல். மைந்தன் – அழகன், ஈசன். ஊகம் – கருங்குரங்கு. கடுவன் – ஆண் குரங்கு. கானமான் – சோலையில் உள்ள மான். உகளும் – தாவும். ஏனம் – பன்றி. ஆன் – பசு.

825. மனம்உலாம் அடியவர்க்கு அருள்புரிகின்ற
வகையலால் பலிதிரிந்து உண்பிலான் மற்றோர்
தனம்இலான் எனதுரை தனதுரையாகத்
தாழ்சடை இளமதி தாங்கிய தலைவன்
புனம்எலாம் அருவிகள் இருவிசேர் முத்தம்
பொன்னொடு மணிகொழித்து ஈண்டிவந்தெங்கும்
இனமெலாம் அடைகரை இலம்பையங் கோட்டூர்
இருக்கையாப் பேணி என்னெழில்
கொள்வதியல்பே.

தெளிவுரை: தன்னை எக்காலத்திலும் நினைத்துக் கொண்டிருக்கும் அடியவர்களுக்கு அருள்புரிகின்ற தன்மையினால் அல்லாது, தான் பிச்சையேற்று உண்ணும் தன்மை இல்லாதவன், ஈசன். அவன் என்னுரையைத் தன்னுரையாகப் பொறுப்பு ஏற்று மெய்ம்மை புரிபவன். அவன் தாழ்ந்த சடை முடியும், இளமையான சந்திரனையும் உடையவன். அத்தகைய தலைவன், தினைப்புனத்தில் உள்ள அருவிகளில் தினைத்தாள்களும், முத்தும் பொன்னும் கொழிக்கும் வண்ணம் செய்து, மற்றும் செல்வத்தின் இனங்கள் யாவும் அடையும் இலம்பையங் கோட்டூரில் வீற்றிருந்து, என் எழிலைக் கவர்ந்து கொள்வது நல்லியல்பு ஆகுமோ!

சிறப்புரை: பொன்னொடு மணிகள் கொழிக்கும் அருவியானது அதன் இனமாக உள்ள நவரத்தினம் முதலான செல்வங்களையும், சங்க நிதி, பதும நிதி போன்ற குவியலையும் உடைமை கொள்ளுமாறு தோன்ற "இனமெலாம் அடைகரை இலம்பையங் கோட்டூர்" என உணர்த்தப்பட்டது.

இருவி – தினைத்தாள்.

826. நீர்உளான்தீயுளான் அந்தரத்துள்ளான்
நினைப்பவர் மனத்துளான் நித்தமா ஏத்தும்
ஊர்உளான் எனதுரை தனதுரையாக
ஒற்றைவெள் ளேறுஉகந்து ஏறிய ஒருவன்
பார்உளார் பாடலோடு ஆடல்அறாத
பண்முரன்று அஞ்சிறை வண்டினம் பாடும்
ஏர்உளார் பைம்பொழில் இலம்பையங் கோட்டூர்
இருக்கையாப் பேணி என்னெழில்
கொள்வதியல்பே.

தெளிவுரை: நீராகவும், நெருப்பாகவும், ஆகாயமாகவும் நினைத்து வழிபடும் அடியவர்களின் மனத்தின் உள்ளும் உறையும் ஈசன், தினந்தோறும் ஆகம விதிப்படி திருக்கோயில்களில் பூஜை செய்யும் ஊர்களிலும் உள்ளவன். அவன் என்னுடைய உரைகளை எல்லாம் தன்னுடைய உரையாகக் கொண்டு ஏற்று மெய்ம்மைப் படுத்தி அருள் புரிபவன். அவன், வெண்மையான இடபத்தில் மகிழ்ந்து ஏறி, வாகனமாகக் கொண்ட ஒப்பற்றவன். அப்பெருமான், பாடலும் ஆடலும் கொண்டு திகழும் பொழிலில் வண்டினம் பண் அமைத்துப் பாடவும் விளங்கும் இலம்பையங் கோட்டூரில் வீற்றிருந்து, என் எழிலைக் கவர்வதும் நல்லியல்பு ஆகுமோ!

சிறப்புரை: ஈசன் நீராகவும், நெருப்பாகவும், ஆகாய மாகவும் விளங்குகின்றான் என்பதை "அம்பரமே (வான்) நிலனே அனல் (தீ) காலொடு (காற்று) அப்பு (நீர்) ஆனவனே" என மாணிக்கவாசகர் உரைப்பதும் காண்க.

நினைப்பவர்தம் மனத்தில் உள்ளவன் ஈசன் என்பதனை, "மனத்தகத்தான் தலைமேலான்" எனத் திருநாவுக்கரசர் உரைப்பதும் இவண் நோக்குக.

827. வேருலாம் ஆழ்கடல் வருதிரை இலங்கை
வேந்தன் தடக்கைகள் அடர்த்தவன் உலகில்
ஆர்உலாம் எனதுரை தனதுரையாக
ஆகம்ஒர் அரவுஅணிந்து உழிதரும் அண்ணல்
வாருலா நல்லன மாக்களும் சார
வாரணம் உழிதரு மல்லல்அம் கானல்
ஏருலாம் பொழில்அணி இலம்பையங் கோட்டூர்
இருக்கையாப் பேணி என்எழில்
கொள்வதியல்பே.

தெளிவுரை: கடலால் சூழப்பட்ட இலங்கையின் வேந்தனாகிய இராவணனுடைய வலிமையான கைகளை அடர்த்து, உலகில் யாவும் நிரம்பப் பெற்ற எனது உரையைத் தனது உரையாக ஏற்று மகிழ்ந்து, உடலில் அரவம் அணிந்து காட்சி தரும் அண்ணலாகிய ஈசன், சாந்தம் திகழும் நல்விலங்குகள் சாரவும், யானைகள் சாரும் வளம் பொருந்திய பொழில் சூழ் இலம்பையங்கோட்டூரில் வீற்றிருந்து, பேணி, என்னுடைய எழிலைக் கவர்ந்து கொண்டது நல்லியல்பு ஆகுமா!

மாக்கள் – விலங்குகள்.

828. கிளர்மழை தாங்கினான் நான்முகம் உடையோன்
கீழ்அடிமேல் முடி தேர்ந்துஅளக்கில்லா
உளம்அழை எனதுரை தனதுரையாக
ஒள்ளழல் அங்கையில் ஏந்தியஒருவன்
வளமழை எனக்கழை வளர்துளி சோர
மாசுணம் உழிதரு மணியணி மாலை
இளமழை தவழ்பொழில் இலம்பையங் கோட்டூர்
இருக்கையாப் பேணி என்னெழில் கொள்வ
தியல்பே.

தெளிவுரை: கிளர்ந்து எழுந்து பெய்த மழையின் இடரைக் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்துத் தாங்கிய திருமாலும், பிரமனும் பூமிக்கு அடியில் ஈசன் திருவடியையும், மேலே முடியையும் காணவேண்டும் என்று தேர்ந்தும், அதனை அடையாத வர்களாக இருந்தனர். அப்பெருமான், என் உள்ளம் விரும்பி அழைக்க எனது உரையைத் தனது உரையாக ஏற்றவன்; ஒளிபொருந்திய நெருப்பை அழகிய கரத்தில் ஏந்தியவன். மூங்கில் இலைகளிலிருந்து மழையெனத்

துளிகள் வீழவும் மலைப்பாம்புகள் பக்கம் சார, அழகிய மணி மாலைகள் போல் தவழ் பொழில் திகழ் இலம்பையங்கோட்டூரில் அப்பெருமான் வீற்றிருந்து என் எழிலைக் கவர்ந்து கொள்வது நல்லியல்பு ஆகுமோ!

சிறப்புரை: அழைக்கும் உள்ளத்தில் ஈசன் விளங்கி நிற்கும் தன்மையை, "நாடி நாரணன் நான்முகன் என்றிவர் தேடியும் திரிந்தும் காணவல்லரோ! மாட மாளிகை சூழ் தில்லை அம்பலத்து ஆடிபாதம் என் நெஞ்சுள் இருக்கவே," எனப் புகலும் திருநாவுக்கரசர். வாக்கு, "கீழ் அடிமேல் முடிதேர்ந்து அளக்கில்லா உளம் அழை எனதுரை தனதுரையாக," என, ஈசனார் ஏற்ற அருள் நிலையை ஞானசம்பந்தர் உரைப்பதுடன் ஓர்ந்து உணரற்பாலது.

மாசுணம் – பாம்பு

829. உரிஞ்சன கூறைகள் உடம்பினர் ஆகி
உழிதரு சமணரும் சாக்கியப் பேய்கள்
பெருஞ்செல்வன் எனதுரை தனதுரையாகப்
பெய்பலிக் கென்றுழல் பெரியவர் பெருமான்
கருஞ்சுனை முல்லைநன் பொன்னடை வேங்கை
களிமுக வண்டொடு தேனினமுரலும்
இருஞ்சுனை மல்கிய இலம்பையங் கோட்டூர்
இருக்கையாப் பேணிஎன் னெழில்கொள்வ
தியல்பே.

தெளிவுரை: உரித்த தன்மை கொண்ட ஆடைகள் கொண்டு உலவும் சமணரும் சாக்கியரும் ஒருபுறம் தனித்திருக்கின்ற நிலையில், பெருஞ் செல்வனாகிய ஈசன், எனதுரையைத் தனதுரையாய்க் கொண்டு பலியேற்கும் பெரியோன். சுனையும், முல்லை வேங்கை

முதலான பூங்கொத்துக்களில் வண்டுகள் களித்துத் தேன் உண்ணும் பொழில்களும் உடைய இலம்பையின் கோட்டூரில் வீற்றிருக்கும் பெருமான், என் எழிலைக் கவர்ந்து கொள்வது நல்லியல்பு ஆகுமோ!

சிறப்புரை: வண்டுகள் களித்துத் தேன் உண்ணுதலை, ஆன்மா சிவபோதத்தில் திளைத்து மகிழ்தலை உணர்த்திற்று.

830. கந்தனை மலிகனை கடலொலியோதம்
கானலங்கழிவளர் கழுமலமென்னும்
நந்தியார் உறைபதி நான்மறை நாவன்
நற்றமிழ்க்கு இன்துணை ஞானசம்பந்தன்
எந்தையார் வளநகர் இலம்பையங் கோட்டூர்
இசையொடுகூடிய பத்தும்வல்லார்போய்
வெந்துயர் கெடுகிட விண்ணவ ரோடும்
வீடுபெற்று இம்மையின் வீடெளிதாமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: நறுமணமும், திரண்டெழு ஒலியும் உடைய கடலின் ஓதம் மிகுந்து ஈசன் உறையும் கழுமலம் என்னும் நகரில் நான்மறை வல்ல நாவினை யுடையவனும், நற்றமிழுக்கு இனிய துணையும் ஆகிய ஞானசம்பந்தன், எந்தை விளங்கும் வளநகராகிய இலம்பையங்கோட்டூரினைப் பற்றி இசையொடு உரைத்த இத் திருப்பதிகத்தை உரைக்க வல்லவர்கள், வெந்துயர் நீங்கப் பெற்றவராய் விளங்குவர். பின்னர் அவர்கள் தேவர்களோடும் கூடி இருந்து மகிழ்ந்து, வீடு பேறு அடைவார்கள். இம்மையிலும் அவர்கள் வீடு பேற்றுக்குரிய மகிழ்ச்சியில் திளைப்பார்கள்.

கந்தனை – நறுமணம். நந்தியார் – ஈசன், இடப வாகனர்.

77. திருஅச்சிறுபாக்கம்

தல விளக்கம்: தொண்டை நாட்டுத் தலம். அச்சரப் பாக்கம் என வழங்கப்படுகிறது. கௌதமர், கண்வர் பூசித்துப் பேறுபெற்ற திருத்தலம். ஈசன் விநாயகருக்கு அருள் புரிந்து, பின்னர் திருவதிகை சென்று முப்புராதி களை வென்றதாக வரலாறு.

அச்சு இற்ற இடம், அச்சிறுபாக்கம் ஆகியது என்பர். பாண்டிய மன்னனால் கட்டப் பெற்றது திருக் கோயில்.

சுவாமி : பார்க்கபுரீஸ்வரர், ஆட்சீஸ்வரர்

அம்பிகை : இளங்கிளியம்மை, சுந்தர நாயகி

தல மரம் : சரக்கொன்றை

தீர்த்தம் : சிம்ம தீர்த்தம்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

831. பொன்திரண் டன்ன புரிசடை புரளப்
பொருகடல் பவளமொடு அழல்நிறம்புரையக்
குன்றுஇரண்டன்ன தோளுடை யகலம்
குலாயவெண் ணூலொடு கொழும் பொடியணிவர்
மின்திரண்டன்ன நுண்ணிடைஅரிவை
மெல்லியலாளையோர் பாகமாப் பேணி
அன்று இரண்டு உருவம் ஆயஎம் மடிகள்
அச்சிறு பாக்கமது ஆட்சி கொண்டாரே.

தெளிவுரை: பொன் திரண்டாற் போன்ற சடை புரளவும், கடலில் தோன்றும் பவளம் போன்ற அழல் நிறம் பொலியும் இரண்டு குன்றுகளைப் போன்ற தோள்களும், அகன்ற அதனிற் பொலிந்து தவழும்

முப்புரி நூலும், வளம்மிக்க திருநீறும் விளங்க, மின்னலைப் போன்ற நுண்ணிய இடையை உடைய உமாதேவியைப் பாகமாகப் பேணி, இரு உருவமாக விளங்கும் எம் அடிகள், அச்சிறுபாக்கத்தில் ஆட்சி கொண்டுள்ளார்.

சிறப்புரை: ஈசன், உமாதேவியுடன் உடனாகிய வடிவமும், வேறாகிய வடிவமும் உடைய பெருமான் என்பது, "இரண்டு உருவம் ஆய எம் அடிகள் என உணர்த்தப்பட்டது. திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள ஈசனார் திருநாமமான ஆட்சீஸ்வரர் என்னும் சொல் திருப்பாடல்கள் தோறும் உரைக்கப்பெறுதலும் காண்க.

குலாய – மகிழ்ந்து தவழ்தல். எம்மடிகள்: எம் அடிகள் – சந்தம் நோக்கி மகரம் மிகுந்தது.

832. தேனினும் இனியர் பாலன நீற்றர்
தீங்கரும்பு அனையர்தம் திருவடிதொழுவார்
ஊனயந்து உருக உவகைகள் தருவார்
உச்சிமேல் உறைபவர் ஒன்றலாது ஊரார்
வானகம் இறந்து வையகம் வணங்க
வயங்கொள நிற்பதோர் வடிவினை உடையார்
ஆனையின் உரிவை போர்த்தஎம்மடிகள்
அச்சிறு பாக்கமது ஆட்சி கொண்டாரே.

தெளிவுரை: தேனைவிட இனிமையானவர்; பால் போன்ற வெண்ணீற்றைத் திருமேனியில் தரித்தவர்; இனிய கரும்பு போன்றவர்; தமது திருவடியைத் தொழும் அடியவர்கள் ஊன்நயந்து உருக, மகிழ்ச்சியைத் தருபவர்; உச்சியாகிய தலையின்மேல் உறைபவர்; இடப வாகனத்தையன்றி வேறு எதிலும் ஊர்ந்து செல்லாதவர்; போகத்தலமாகிய வானுல

கத்தைக் கடந்து கர்மத்தலமாகிய பூவுலகத்தவர் வணங்கத், தன் வயப்படும் வடிவத்தை உடையவர்; ஆனையின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டவராவர் எம் அடிகள். அவர் அச்சிறுபாக்கத்தில் மேவி ஆட்சி கொண்டவர்.

சிறப்புரை: உண்கின்ற தேன், சிறிது நேரம் நாவில் இனிமைச் சுவை பெருக்கிப் பின்னர் மறைந்துவிடும் தன்மையுடையது. சிவானந்தத் தேன், நினைக்கும் தோறும், காணும் தோறும், பேசும் தோறும், எப்போதும் அனைத்து எலும்பும் உள் நெக ஆனந்தம் புரியவல்லது" என்னும் மாணிக்கவாசகர் கூற்றினை ஒக்கச் சுவை பெருக்குவதைச் சுட்டுமாறு தேனினும் இனியர் என உணர்த்தப்பட்டது.

பாலானது, தோற்றப் பொலிவில் வெண்மையாக இருப்பினும், பூசைக்கு உரிய பொருளாக விளங்கு தலும், உடல் பி...யைப் போக்குவதுடன், பிணி நீக்கத் திற்கும் காரணமாக இருந்து, உடலைப் பாதுகாக்கும் சத்துப் பொருளாக விளங்குதலும், உடையதைப் போன்று, திருவெண்ணீறு, மலநீக்கம், ஞானப் பெருக்கம் தந்து, தூய்மை புரிதலும் செய்யும் தன்மை யில், பாலன நீற்றர் என உணர்த்தலாயிற்று.

கரும்பு, மண்ணின் வளமும், நுனி, இடை, அடி என வரும் கணுக்களின் வழி, அமையும் தன்மையிலும், மென்று சுவைப்பார்தம் திறத்தின் அடிப்படையிலும், உள்ளதைப் போன்று, ஆன்மாக்களின் பரிபக்குவ நிலைக்கேற்ப ஈசன் விளங்குவதையும், அவ் இனிமையைச் சுவைக்கும் பாங்கின் வளத்தையும் சுட்டப் பெறுமாறு, தீங்கரும்பு அனையர் என உணர்த்தப் படுவதாயிற்று.

"ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி, உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த செல்வமே" என, மாணிக்க வாசகர் உரைப்பதைப் போன்று, ஊன் நயந்து உருகும் அடியவர்க்கு உவகை தருபவன் ஈசன் எனவும், தலை மேலான் வாக்கின் உள்ளான் எனக் கூறும் திருநாவுக் கரசர் உரைசெய்தலை ஒட்டி உச்சிமேல் உறைபவன் ஈசன் எனவும், உணர்த்துவதாயிற்று.

துரிய நிலையை உச்சி நிலையாயும், துரியாதீத நிலையை உச்சியின் மேல் நிலையாயும் கொண்டு இறைவன் எழில் கொள வீற்றிருந்து மன்னுயிர்பால் இன்பம் நல்குதலை உணர்த்திற்று எனலும் பொருந்தும்.

இறைவன் ஆன்மாவில் உறைந்து இருத்தலை, இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் என்றும், என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா, விமலா, விடைப்பாகா! என்றும், மாணிக்க வாசகர் உரைத்தலும், உயிருக்கு இத்தேகமானது உடலாக உள்ளதைப் போன்று, இறைவனுக்கு உயிரானது உடலாக உள்ளது என்னும் நிலையிலும், ஈசன் ஆன்மாவில் ஊர்ந்து நிற்றலை ஒன்றலாது ஊரார் என உணர்த்துவதாயிற்று. இத்தொடர் ஞானத்தையும் உணர்த்த வல்லது.

ஒன்று – ஆன்மா, ஞானம்.

833. காரிருள்உருவ மால்வரை புரையக்
களிற்றனது உருவுகொண்டு அரிவைமேல்ஒடி
நீர்உரு மகளை நிமிர்சடைத் தாங்கி
நீறணிந்து ஏறுஉகந்து ஏறிய நிமலர்
பேரருளாளர் பிறவியில் சேரார்
பிணியிலர் கேடிலர் பேய்க்கணம்சூழ

ஆர்இருள் மாலை ஆடும்எம் மடிகள்
அச்சிறு பாக்கமது ஆட்சிகொண்டாரே.

தெளிவுரை: கன்னங்கரிய வடிவத்தை யுடைய பெண் யானையின் உருவைத் தாங்கிய உமாதேவியை நோக்கி, ஆண் யானையின் உருவத்தைத் சடையில் தாங்கி, நீறு அணிந்து இடபத்தில் உகந்து ஏறிய நிமலர். அவர் பேரருளாளர். எப் பிறவித் தொகையிலும் சேராதவராய், எதனாலும் கட்டுப்படாதவராய், அழிவில்லாதவராய், பேய்க் கணங்கள் சூழ, அடர்த்தியான இருள் மயக்கம் நிறைந்த சுடுகாட்டில் நடனம் ஆடும் எம் அடிகள், அச்சிறுபாக்கத்தில் ஆட்சி கொண்டார்.

சிறப்புரை: "பிடியதன் உருஉமைகொள மிகுகரியது வடிகொடு தனதடி வழிபடும் அவர் இடர்கடி, கணபதி வர அருளினன்" என்னும் திருப்பாட்டுடைக் கருத்து, (பதிக எண்: 123 - பாடல் 5.) இவண், "களிற்றனது உருவுகொண்டு" என உணர்த்தப்பட்டது காண்க.

நீர் உருமகள் – கங்கை. ஆர் இருள் மாலை – அடர்ந்த இருள் மயக்கம் சூழ்தல்.

834. மைம்மலர்க் கோதை மார்பினர் எனவு(ம்)
மலைமகளவளொடு மருவினர் எனவும்
செம்மலர்ப் பிறையும் சிறையணி புனலும்
சென்னிமேல் உடையர்எம் சென்னிமேல் உறைவார்
தம்மலர் அடியொன்று அடியவர்பரவத்
தமிழ்ச்சொலும் வடசொலும் தாள்நிழற் சேர
அம்மலர்க் கொன்றை அணிந்தஎம் மடிகள்
அச்சிறு பாக்கமது ஆட்சி கொண்டாரே.

தெளிவுரை: மலர் மாலை சூடிய மார்பினர்; மலைமகளுடன் மருவி இருப்பவர்; மலர் போன்ற

பிறைச் சந்திரனும், கட்டுப்படுத்தப்பட்ட நீராகிய கங்கையும் சென்னியில் சூடியவர்; என் சிரசின்மேல் உறைபவர், தமது மலர்போன்ற திருவடியை மனத்தில் பதித்து அடியவர் பரவவும் இனிய தமிழ்ச் சொல்லும் உயர்ந்த வடசொல்லும் திருத்தாள் நிழலில் சேர்ந்து பெருமை கொள்ள, அழகிய கொன்றை மலர் அணிந்த எம் அடிகள், அச்சிறுபாக்கத்தில் ஆட்சி கொண்டார்.

சிறப்புரை: இனிமை மிகுந்த பக்தியால் சொல்லப்படும் தமிழ்ச் சொல்லும் உயர்ந்ததாக விளங்கும் வேதமான வட சொல்லும் ஈசன் தாள் நிழற் கீழ் சேர்ந்து பெருமை கொள்ளுதலைத் "தமிழ்ச் சொல்லும் வட சொல்லும்" என உணர்த்துவதாயிற்று. ஈசன் திருக்கழலின்கீழ் இருப்பதைப் பெருமையாகவும் நிலைத்ததாகவும் சொல்லப்படும் வகையில், இச்சொற்கள் தாள் நிழல் சேர என உரைக்கப் பெற்றது. தாள் நிழலின் பெருமையை, மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கு இளவேனிலும், மூசுவண்டு அறை பொய்கையும் போன்றதே. ஈசன் எந்தை இணையடி நீழலே!'' எனத் திருநாவுக்கரசர் உரைத்தலாலும் நோக்குக.

கோதை – மாலை. தமிழ் – இனிமை. வட – உயர்வு.

835. விண்ணுலா மதியம் சூடினர் எனவும்
விரிசடை யுள்ளது வெள்ளநீர் எனவும்
பண்ணுலா மறைகள் பாடினர் எனவும்
பலபுகழ் அல்லது பழியிலர் எனவும்
எண்ணலாகாத இமை யவர் நாளும்
ஏத்த வரங்களோடு எழில்பெற நின்ற
அண்ணலான் ஊர்தி ஏறும்எம் மடிகள்
அச்சிறு பாக்கமது ஆட்சி கொண்டாரே.

தெளிவுரை: வானத்தில் உலவும் சந்திரனைச் சூடியவர் எனவும், பெருக்கெடுத்தோடும் கங்கையைச் சடையில் தேக்கியவர் எனவும், பண்கள் விளங்கப்பெறும் வேதங்களைப் பாடி மொழிந்தவர் எனவும், எச் செயலைச் செய்தாலும் புகழேயன்றிப் பழியற்ற தன்மை யுடையவர் எனவும் உள்ளவர், ஈசன். திரிதரும் எண்ணங்கள் இல்லாத போகத் தலத்தில் உள்ள தேவர்கள், நாள்தோறும் ஏத்தி வழிபடவும் நல்ல வரங்களும் எழிலும்பெற்று விளங்க, அண்ணலாகிய இடபத்தை வாகனமாக ஏறும் எம் அடிகள், அச்சிறுபாக்கத்தில் ஆட்சிகொண்டார்.

சிறப்புரை: கட்டுப்பாடு இல்லாது இயங்கும் சந்திரனையும், கங்கையையும் தன்பால் கட்டுக்குள் வைத்தமை, ஈசனார் அருள் திறத்தை உணர்த்தும். அவ்வாறே விரிந்து பெருகும் வேதம், நிலை பெறுதலும் உணர்த்தப்பெற்றது. ஆலம் (நஞ்சு) அருந்தியது, பலி (பிச்சை) கொண்டது முதலானவை மன்னுயிர்கள் உய்தற் பொருட்டாக ஆயினமையால், பழியின்மை யராய்ப், பல்புகழால் ஈசன் விளங்குதல் உணர்த்தப் படுகிறது.

முன் செய்த புண்ணிய வசத்தால் தேவர்கள் ஆயினமையும், அவர்கள் முத்தி நலம் முதலான நலங்களை நாடி வேண்டும் முகத்தான் ஈசனைப் போற்றி வணங்குதலும் உரைத்தல் காண்க.

அண்ணல் ஆன்: இடபத்தின் சிறப்பு கூறப்பட்டது. ஆன் – எருது, இடபம். எம்மடிகள்: எம் அடிகள் – சந்தம் நோக்கி மகரம் மிகுந்தது.

836. நீடுஇரும் சடைமேல் இளம் பிறை துலங்க
நிழல்திகழ் மழுவொடு நீறுமெய்பூசித்
தோடு ஒருகாதினில் பெய்துவெய்தாய
சுடலையில் ஆடுவர் தோலுடையாகக்

காடு அரங்காகக் கங்குலும் பகலும்
கழுதொடு பாரிடம் கைதொழுது ஏத்த
ஆடுஅரவுஆட ஆடும் எம் மடிகள்
அச்சிறு பாக்கமது ஆட்சி கொண்டாரே.

தெளிவுரை: நீண்ட பெரிய சடைமுடிமீது இளம்பிறைச் சந்திரன் விளங்க, ஒளிதிகழ் மழுப்படை கொண்டு, திருநீறு மெய்யில் பூசி, ஒரு காதில் தோடு அணிந்து, வெம்மை பொருந்திய சுடலையில் ஈசன் நடம்புரிவர். அப்பெருமான் புலித்தோலை உடுத்திச் சுடுகாட்டை அரங்கமாகக் கொண்டு இரவும் பகலும், பேயும் பூதமும் கைதொழுது ஏத்த, ஆடுகின்ற அரவம் மேனியில் ஆடுமாறும், நடம் புரிகின்ற எம் அடிகள், அச்சிறுபாக்கத்தில் ஆட்சி கொண்டார்.

வெய்தாய – வெப்பம் பொருந்திய.

837. ஏறும்ஒன்று ஏறி நீறு மெய்பூசி
இளங்கிளை அரிவை யொடு ஒருங்குஉடனாகிக்
கூறும்ஒன்று அருளிக் கொன்றையந் தாரும்
குளிர்இள மதியமும் கூவிள மலரும்
நாறு மல்லிகையும் எருக்கொடுமுருக்கு
மகிழிளவன்னியும் இவைநலம்பகர
ஆறும் ஓர் சடைமேல் அணிந்தஎம் மடிகள்
அச்சிறு பாக்கமது ஆட்சிகொண்டாரே.

தெளிவுரை: இடபத்தில் ஏறி அமர்ந்து, திருவெண்ணீறு மெய்யில் பூசி, உமாதேவியுடன் வீற்றிருந்தும், தனது பாகத்தில் ஒரு கூறும் அருள்செய்து, கொன்றை மலர், இளம் பிறைச்சந்திரன், வில்வம், மல்லிகை, எருக்கம், முருக்கு, மகிழம்பூ, வன்னி ஆகியவற்றுடன். கங்கையும் சடைமேல் அணிந்த எம் அடிகள், அச்சிறுபாக்கத்தில் ஆட்சி கொண்டார்.

சிறப்புரை: அமுத தாரைகள் பொழியும் சந்திரனும் வற்றாத நீர்ப்பெருக்குடைய கங்கையும் அணியப் பெற்ற செஞ்சடையில் எருக்கம் முதலான மலர்களும் உடன் திகழச் சூடிய ஈசனின் நடுநிலைத் தன்மை, இவண் சுட்டப் பெறுதல் உணரத்தக்கது.

838. கச்சும் ஒள்வாளும் கட்டிய உடையர்
கதிர்முடி சுடர்விடக் கவரியும் குடையும்
பிச்சமும் பிறவும் பெண்ணணங்காய
பிறை நுதலவர்தமைப் பெரியவர் பேணப்
பச்சமும் வலியும் கருதிய அரக்கன்
பருவரை எடுத்ததிண் தோள்களை அடர்வித்து
அச்சமும் அருளும் கொடுத்தஎம் மடிகள்
அச்சிறு பாக்கமது ஆட்சி கொண்டாரே.

தெளிவுரை: கச்சையில் ஒளிமிக்க வாளைக் கட்டிய உடையைக் கொண்ட அரக்கனாகிய இராவணனை, பெண்கள், அழகன் என்றும், வீரம் மிக்கவன் என்றும் போற்றிப் பெருமை செய்து பேணியதைக் கொண்டு, வலிமை கொண்டவன் எனக் கருதி மலை எடுத்த தோள்களை அடர்த்து, மண்ணில் அழுத்தி அச்சத்தைக் கொடுத்தும், பின்னர் அருள்புரிந்த எம் அடிகள், அச்சிறுபாக்கத்தில் ஆட்சி கொண்டார்.

839. நோற்றலாரேனும் வேட்டலாரேனு(ம்)
நுகர் புகர்சாந்தமொடு ஏந்திய மாலைக்
கூற்றலாரேனும் இன்னவாறு என்றும்
எய்தலாகாததொர் இயல்பினை உடையார்
தோற்றலார் மாலு(ம்) நான்முகம் உடைய
தோன்றலும் அடியொடு முடியுறத் தங்கள்
ஆற்றலாற் காணார் ஆயஎம் மடிகள்
அச்சிறு பாக்கமது ஆட்சிகொண்டாரே.

தெளிவுரை: நோன்பு, விரதம் முதலியவற்றால் தவம் செய்யாதவர்களும், வேத மந்திரங்கள் கூறி வேள்வி செய்யாதவர்களும், தூப, தீப, நைவேத்தியம் செய்து பூசனை ஆற்றி, மலர்கள் தூவிச் சாற்றிப் பக்திப் பாடல் களைக் கூறி வணங்காதவர்களும், ஈசனை அறியவும், அவன் திருவடியை எய்துதலும் ஆகாதவர்களாவர். அவதாரங்கள் கொண்ட திருமாலும், நான்முகத் தோன்றலாகிய பிரமனும், திருவடியையும் திருமுடியை யும் தங்கள் ஆற்றலால் தேடியும் காணாதவராய் விளங்கிய எம் அடிகள், அச்சிறுபாக்கத்தில் ஆட்சி கொண்டார்.

சிறப்புரை: நோன்பு முதலான விரதங்கள் மேற் கொள்வதும், வேதமந்திரங்கள் கூறி வேள்வி புரிவதும், சிவபூசை செய்வதும் வழிபாட்டு முறைகளாம். இவ் வழிபாட்டு முறையைக் கடைப்பிடித்து ஒழுகாத வர்கள், இறைவன் அருளைப் பெறும் இயல்பினை அடையாதவர்களாவர்.

வேட்டல் – வேள்வி புரிதல். புகர் – நைவவேத்தியம். நான்முகமுடைய தோன்றல் – பிரமன்.

840. வாது செய்சமணும் சாக்கியப் பேய்கள்
நல்வினை நீக்கிய வல்வினை யாளர்
ஓதியும் கேட்டும் உணர்வினை இலாதார்
உள்கலாகாததோர் இயல்பினை உடையார்
வேதமும் வேத நெறிகளும் ஆகி
விமல வேடத்தொடு கமலமா மதிபோல்
ஆதியும் ஈறும் ஆயஎம் மடிகள்
அச்சிறு பாக்கமது ஆட்சிகொண்டாரே.

தெளிவுரை: விவாதம் செய்கின்ற சமணரும், சாக்கி யரும் நல்வினை நீக்கிய வல்வினையாளர்களாய்,

நல்லுரைகள் ஓதியும் அதனைக் கேட்டும் உணர்வு கொள்ளாதவர்களாய், ஈசனை நெஞ்சில் நினைத்துப் போற்றாத இயல்பினை உடையவர்கள். அவர்களால் இறைவனை அணுக முடியாது. வேதமும், அவ்வேத நெறிகளும் ஆகி விளங்கி, மலமற்ற விமலராய்க், குளிர்ச்சி பொருந்திய அழகிய சந்திரனைப் போல் ஒளிர்ந்து ஆதியும் ஈறும் ஆகும் எம் அடிகள் அச்சிறு பாக்கத்தில் ஆட்சி கொண்டார்.

சிறப்புரை: ஈசனார் திருப்புகழைச் செவிமடுத்து வணங்குதல் வேண்டும் என உணர்த்தப்பட்டது. "முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளே" என மாணிக்கவாசகர் உரைத்தலை யொட்டி, யாவற்றுக்கும் ஆதிப்பிரானாக உள்ள ஈசன் ஆதியும் ஈறும் ஆய எம் அடிகள் என உணர்த்தப் பட்டது. மற்றும், "முன்னானை மூவர்க்கு முற்றுமாய் முற்றுக்கும் பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின் மன்னானை" என வரும் மாணிக்க வாசர்தம் தொடரும் இவண் உன்னற்பாலது.

ஈசன், "ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும் ஒளியானே" என்று போற்றப்படுதலைப் போன்று, ஈசன் உணர்வினை அற்றவர்களும், அவ் பெருமானை நினைத்து வணங்காதவர்களும் அறியமுடியாத இயல்பு உடையவர் என்பதனை, "உணர் வினை இலாதார், உள்கலாகாத தோர் இயல்பினை உடையார்" என உணர்த்துதலும் ஓர்க.

841. மைச்செறிகுவளை தவளைவாய் நிறைய
மதுமலர்ப் பொய் கையில் புதுமலர் கிழியப்
பச்சு இறவுஎறிவயல் வெறிகமழ்காழிப்
பதியவர் அதிபதி கவுணியர் பெருமான்

கைச்சிறு மறியவன் கழலலாற் பேணாக்
கருத்துடை ஞானசம் பந்தன் தமிழ்கொண்டு
அச்சிறு பாக்கத்து அடிகளை யேத்தும்
அன்புடை அடியவர் அருவினை இலரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *நீலவண்ணக் குவளை மலரில் உள்ள தேன், பொய்கையில் உள்ள தவளையின் வாயில் நிறையவும், பசிய இறா மீன்கள் வயல்களில் துள்ள, புதுமலர் கிழியவும், மணம் கமழ் காழிப்பதியில் உள்ள பெருமான் கழலைத் தவிர வேறொன்றைக் கருதாத கருத்துடைய ஞானசம்பந்தன் உரைத்த இத் திருப் பதிகத்தால், அச்சிறுபாக்கத்தில் வீற்றிருக்கும் அடிகளை, ஏத்திப் பணிந்து அன்பு செய்யும் அடியவர்கள், வினை நீங்கப் பெற்றவர் ஆவர்.*

மறி – மான்.

78. திருவிடைச்சுரம்

தல விளக்கம்: *தொண்டை நாட்டுத் தலம். திருவடிசூலம் என வழங்கப்படுகிறது. கௌதமர், சனற்குமாரர் வழிபட்ட தலம். அம்பிகை பசு வடிவில் தோன்றி பால் சொரிந்து வழிபட்ட திருத்தலம்.*

சுவாமி : *ஞானபுரீஸ்வரர், இடைச்சுரநாதர்*

அம்பிகை : *இமய மடக்கொடியம்மை*

பண் : *குறிஞ்சி*

திருச்சிற்றம்பலம்

842. வரிவளர்அவிர்ஒளி அரவுஅரைதாழ
வார்சடை முடிமிசை வளர்மதி சூடிக்

கரிவளர் தருகழல் கால்வலன் ஏந்திக்
கனல்எரியாடுவர் காடரங்காக
விரிவளர் தருபொழில் இளமயில்ஆல
வெண்ணிறத் தருவிகள் திண்ணென வீழும்
எரிவளர் இனமணி புனமணிசாரல்
இடைச்சுர மேவிய இவர் வணம்என்னே.

தெளிவுரை: *வரிகளை உடைய ஒளிமிக்க அரவு அரையில் விளங்க, சடைமுடியின்மேல் வளரும் பிறைச் சந்திரன் சூடி, யானையின் வடிவம் பொறித்த வீரக்கழல் வலக்காலில் ஒலிக்க, எரியும் கனலைக் கரத்தில் ஏந்தி சுடுகாட்டில் ஆடுகின்ற ஈசர், விரிந்த சோலையில் மயில்கள் அகவ, அருவிகள் "திண்" ணெனும் ஓசையை எழுப்பி வீழ, ஒளி பொருந்திய மணிகள் திகழும் மலைச் சாரலில் விளங்கும் இடைச் சுரத்தில் மேவிய இவர் அழகிய திருமேனியின் வண்ணம் தான் என்னே!*

குறிப்பு: *சுவாமி மரகதலிங்கத் திருமேனியுடையவர் (பச்சை வண்ணம்).*

அவிர் – பிரகாசம், ஒளிர்தல்

843. ஆற்றையும் ஏற்றதோர் அவிர்சடை யுடையர்
அழகினை அருளுவர் குழகு அலது அறியார்
கூற்றுயிர் செகுப்பதோர் கொடுமையைஉடையர்
நடுஇருள் ஆடுவர் கொன்றையந்தாரார்
சேற்றயன் மிளிர்வன கயல்இள வாளை
செருச்செய ஓர்ப்பன செம்முக மந்தி
ஏற்றையொடு உழிதரும் எழில்திகழ் சாரல்
இடைச்சுர மேவிய இவர்வணம் என்னே.

தெளிவுரை: *ஈசன், கங்கையைச் சடைமுடியில் ஏற்ற அழகு பொலிய அருள்புரிபவர்; இளமை பொருந்திய*

குழகர்; கூற்றுவனை உதைத்துக் கொடுமை செய்தவர்; நள்ளிரவில் இருளில் ஆடுபவர்; கொன்றை மாலை சூடியவர். சேற்றில் கயல்களும், வாளை மீன்களும் முட்டிக்கொண்டு போர் செய்வதைப் போன்று உள்ள காட்சியை பெண் குரங்கும் ஆண் குரங்கும் கூர்ந்து நோக்கும் எழில்திகழ் சாரலில் இடைச்சுரத்தில் மேவிய இவர் வண்ணம்தான் என்னே!

மந்தி – பெண் குரங்கு. ஏற்றை – ஆண் குரங்கு.

844. கானமும் சுடலையும் கற்படு நிலனும்
காதலர் தீதிலர் கனல் மழுவாளர்
வானமு நிலமையும் இருமையும் ஆனார்
வணங்கவும் இணங்கவும் வாழ்த்தவும் படுவார்
நானமும் புகையொளி விரையொடுகமழ
நளிர்பொழில் இளமஞ்ஞை மன்னிய பாங்கர்
ஏனமும் பிணையலும் எழில்திகழ் சாரல்
இடைச்சுர மேவிய இவர்வணம் என்னே.

தெளிவுரை: ஈசன், காடும், சுடலையும், மலைப்பகுதியும் விரும்பி உறையும் பெற்றியுடையவர்; எவ்விதமான தீதும் இல்லாதவர்; நெருப்புப் போன்ற மழுப்படை யுடையவர்; வானுலகமாகிய மறுமையும், நிலவுலக மாகிய இவ்வுலகமும், இம்மை, மறுமை ஆகிய இரு உலகமும் ஆகியவர்; யாவராலும் வணங்கப்படுபவர்; அன்பிற்கு இணங்குபவர். ஞானிகளால் வாழ்த்தப் படுபவர். கத்தூரி, அகில் முதலான நறுமணம் கமழ மென்மையான பூஞ்சோலையில் மயில்கள் சூழவும், மான்களும் பன்றிகளும் உடைய சாரலில், இடைச் சுரம்மேவிய இப்பெருமானின் 'வண்ணம்தான் என்னே!

நானம் – கத்தூரி. ஏனம் – பன்றி. பிணவல் – பெண் விலங்குகள்.

845. கடமணி மார்பினர் கடல்தனில் உறைவார்
காதலர் தீதிலர் கனல்மழு வாளர்
விடமணி மிடறினர் மிளிர்வதோர் அரவர்
வேறுமோர் சரிதையர் வேடமும் உடையர்
வடம்உலை அயலன கருங் குருந்து ஏறி
வாழையின் தீங்கனி வார்ந்துதேன் அட்டும்
இடமுலை அரிவையர் எழில்திகழ் சாரல்
இடைச்சுர மேவிய இவர்வணம் என்னே.

தெளிவுரை: *ஈசன், மணி மார்பினர்; கடற்புறத்தில் உறைபவர்; அன்புடையவர்; தீது இல்லாதவர்; கனல் போன்ற மழுப்படையாளர்; விடத்தை மணி போன்று மிடற்றில் கொண்டவர்; ஒளி மிக்க நாகத்தை உடையவர்; நன்னெறியும் தவ வேடமும் உடையவர்; ஆலின் அயலில் பொலியும் குருந்தையில் தேன் எடுக்கின்ற எழில் மகளிர் திகழும் சாரலில் இடைச் சுரம் மேவிய இப்பெருமான் வண்ணம் தான் என்னே!*

846. கார்கொண்ட கடிகமழ் விரிமலர்க் கொன்றைக்
கண்ணியர் வளர்மதி கதிர்விடக் கங்கை
நீர்கொண்ட சடையினர் விடைஉயர் கொடியர்
நிழல்திகழ் மழுவினர் அழல்திகழ் நிறத்தர்
சீர்கொண்ட மென்சிறை வண்டுபண் செய்யும்
செழும்புனல் அனையன செங்குலை வாழை
ஏர்கொண்ட பலவினொடு எழில்திகழ்சாரல்
இடைச்சுர மேவிய இவர்வணம் என்னே.

தெளிவுரை: *ஈசன், கார்காலத்தில் கடிமணம் கமழ விரியும் கொன்றை மலரைச் சூடியவர்; ஒளிவிடும் சந்திரனும், கங்கை நீரும் கொண்ட சடையினர்; இடபக் கொடியுடையவர்; ஒளி திகழும் மழுப்படை உடையவர்; நெருப்புப் போன்ற சிவந்த நிறமுடையவர்; சிறப்பான மெல்லிய சிறகுகளை யுடைய வண்டுகள்*

பண்ணிசைக்க, நீர்வளத்துடன், வாழை, பலா மரங்களின் சுவை மிக்க கனிகள் திகழும் சாரலில் இடைச்சுரம் மேவிய இப்பெருமானின் வண்ணம் தான் என்னே!

847. தோடுஅணி குழையினர் சுண்ணவெண் ணீற்றர்
சுடலையில் ஆடுவர் தோலுடையாகப்
பீடுஉயர் செய்ததோர் பெருமையை உடையர்
பேயுடன் ஆடுவர் பெரியவர் பெருமான்
கோடல்கள் ஒழுகுவ முழுகுவதும்பி
குரவமும் அரவமு(ம்) மன்னியபாங்கர்
ஏடுஅவிழ் புதுமலர் கடிகமழ் சாரல்
இடைச்சுர மேவிய இவர்வணம் என்னே.

தெளிவுரை: ஈசன், தோடு அணிந்த காது உடையவர்; திருவெண்ணீறு தரித்தவர்; மயானத்தில் ஆடுபவர்; தோலை உடையாகக் கொண்டு, பெருமையை உயர்த்திய பெருமை உடையவர்; பேய்க்கணங்களுடன் ஆடுபவர்; பெருமையுடையவர்களுக்கும் பெருமானாக விளங்குபவர்; கோட்டுப் பூக்கள் தேனைச் சொரிய வண்டுகள் அதில் முழுகித் திளைக்க புது மலர்களின் மணம் கமழும் சாரலில் இடைச்சுரம் மேவிய இப்பெருமானின் வண்ணம்தான் என்னே!

குழை – காது. தும்பி – வண்டு.

848. கழல்மல்கு காலினர் வேலினர் நூலர்
கவர்தலை அரவொடு கண்டியும் பூண்பர்
அழல்மல்கும் எரியொடு மணிமழு வேந்தி
ஆடுவர் பாடுவர் ஆரணங்கு உடையர்
பொழில்மல்கு நீடிய அரவமு மரவ
மன்னிய கவட்டிடைப் புணர்குயில்ஆலும்

எழில்மல்கு சோலையில் வண்டிசை பாடும்
இடைச் சுரமேவிய இவர்வணம் என்னே.

தெளிவுரை: ஈசன், வீரக் கழல் அணிந்த திருப்பாதம் உடையவர்; சூலப் படை உடையவர்; முப்புரிநூல் அணிந்த திருமார்பினர்; ஐந்தலை நாகமும், உருத்திராக்க மணியும் பூண்டவர்; நெருப்பினைக் கரத்தில் ஏந்தியவர்; ஒளிரும் மழுப்படை ஏந்தியவர்; நடம் புரிபவர்; வேதம் ஓதுபவர்; தெய்வத் தன்மை மிக்க உமாதேவியை உடையவர்; பொழில்களும், மராமரக் கிளைகளிலும் குயில்கள் கூவ, வண்டுகள் இசை பாட விளங்கும் இடைச்சுரம் மேவிய இப் பெருமானின் வண்ணம்தான் என்னே!

வேல் – சூலம். நூலர் – பூணூல் தரித்தவர். கண்டி – உருத்திராக்கம்.

849. தேன்கமழ் கொன்றைஅம் திருமலர் புனைவார்
திகழ்தரு சடைமிசைத் திங்களும் சூடி
வீந்தவர் சுடலைவெண் ணீறுமெய் பூசி
வேறுமோர் சரிதையர் வேடமும்உடையர்
சாந்தமும் அகிலொடு முகில்பொதிந்து அலம்பித்
தவழ்கன மணியொடு மிகுபளிங்குஇடறி
ஏந்துவெள் ளருவிகள் எழில்திகழ்சாரல்
இடைச்சுர மேவிய இவர்வணம் என்னே.

தெளிவுரை: ஈசன், தேன் மணம் கமழும் அழகிய கொன்றை மலரைப் புனைபவர்; திகழ்ந்து விளங்கும் சடையின்மீது சந்திரனைச் சூடி, இறந்தவர்களின் சாம்பலைத் திருவெண்ணீறு எனக்கொண்டு பூசுபவர்; உலகத்தவர் பொதுவாகக் கருதும் தன்மையில் அல்லாது அவருக்கு எனத் தனியாக வேறு ஒழுக்க நெறியை உடையவர்; பல வடிவங்களைக் கொண்டு விளங்குபவர்; சந்தனம், அகில் ஆகிய மரங்களும்

உயர்ந்த நவமணிகள் முதலானவைகளும் அருவியின் வெள்ளத்தில் அடித்துக் கொண்டு திகழும் சாரலில் இடைச்சுரம் மேவிய இப் பெருமானின் வண்ணம் தான் என்னே!

சரிதை – ஒழுக்க நெறி.

850. பலஇலம் இடுபலி கையில் ஒன்று ஏற்பர்
பலபுகழ் அல்லது பழியிலர் தாமும்
தலைஇலங்கு அவிர்ஒளி நெடுமுடி அரக்கன்
தடக்கைகள் அடர்த்ததோர் தன்மையை உடையர்
மலைஇலங்குஅருவிகள் மணமுழவு அதிர
மழைதவழ் இளமஞ்ஞை மல்கிய சாரல்
இலை இலவங்கமும் ஏலமும் கமழும்
இடைச்சுர மேவிய இவர்வணம் என்னே.

தெளிவுரை: ஈசனார், பல வீடுகளில் இடுகின்ற பிச்சையைக் கையில் ஏற்பவர்; பலவகைப்பட்ட புகழேயல்லாது எவ்வகையான பழிப்பும் இல்லாதவர்; தலையில் ஒளி உமிழும் மணி முடியை உடைய அரக்கனான இராவணனுடைய வலிமையான கைகள் நலியுமாறு செய்த தன்மையுடையவர். மலையிலிருந்து வேகமாக வீழும் அருவிகள் திருமண வாத்தியம் போன்று அதிருமாறு ஒலிக்க, மேகம் நோக்கி இனிமை கண்டு மயில்கள் தோகை விரிக்கும் சாரலில் ஏலம், இலவங்கம் ஆகிய வாசனைப் பொருள்களை வழங்கும் தருக்கள் திகழும் வண்ணம்தான் என்னே!

இலம் – இல்லம், வீடு. மஞ்ஞை – மயில்.

851. பெருமைகள் தருக்கியோர் பேதுறுகின்ற
பெருங்கடல் வண்ணனும் பிரமனும் ஓரா
அருமையர் அடிநிழல் பரவிநின்று ஏத்தும்
அன்புடை அடியவர்க்கு அணியரும் ஆவர்

கருமைகொள் வடிவொடு சுனைவளர் குவளைக்
கயலினம் வயலின் வாளைகள் இரிய
எருமைகள் படிதர இளஅனம் ஆலும்
இடைச்சுர மேவிய இவர்வணம் என்னே.

தெளிவுரை: *ஈசனார், பெருமைகளை நினைத்துத் தருக்கிப் பேசி மயக்கத்தில் ஆழ்ந்த திருமாலும், பிரமனும் ஓர்ந்து காணமுடியாத பெருமையை உடையவர்; திருவடியைப் போற்றிப் பரவி நின்று வணங்குகின்ற அன்புடைய திருத்தொண்டர்களுக்கு மிகவும் அண்மையில் இருப்பவர். நீர்ச் சுனைகளில் நீல வண்ணக் குவளை மலர்கள் விளங்க, கயல்களும், வயல்களில் உள்ள வாளை மீன்களும் அச்சம் கொண்டு விலகிச் செல்லுமாறு எருமைகள் படிய, அன்னப் பறவைகள் அதிர்ந்து ஒலி எழுப்பும் இடைச் சுரம் மேவிய இப்பெருமானின் இனிய வண்ணம்தான் என்னே!*

பேதுறு – மயங்குதல். ஓராஅருமையர் – ஓர்ந்து காணமுடியாதவர். இள அனம் – அன்னப் பறவை. ஆலும் – ஒலி எழுப்பும்.

852. மடைச்சுர மறிவன வாளையும் கயலும்
மருவிய வயல்தனில் வருபுனல்காழிச்
சடைச்சுரத்து உறைவதோர் பிறையுடை அண்ணல்
சரிதைகள் பரவி நின்று உருகுசம்பந்தன்
புடைச்சுரத்து அருவரைப் பூக்கமழ் சாரல்
புணர் மடநடையவர் புடைஇடை ஆர்ந்த
இடைச்சுரம் ஏத்திய இசையொடு பாடல்
இவைசொல வல்லவர் பிணிஇலர்தாமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *நீர்மடைகளில் வாளையும் கயலும் துள்ளி மகிழும் வளப்பம் உடைய வயல் வளம் மருவிய காழிப்*

பதியின்கண், சடை முடியில், பிறையுடன் திகழும் அண்ணலாகிய ஈசனார் அருள் நிலைகளைப் பரவி நின்று உள்ளம் உருகும் ஞானசம்பந்தன், அருமையான மலைச்சாரலில், பூக்கள் கமழ அமர்ந்துள்ள இடைச் சுரத்தை ஏத்திய இத்திருப்பதிகத்தை இசையோடு சொல்ல வல்லவர்கள், பிணியற்றவராய் விளங்கி மகிழ்ந்து இருப்பர்.

குறிப்பு: ஈசனார் பெருமை, தலத்தின் பெருமையாக விளங்கும் தன்மையுடையதைனக் குறிப்பிட்டு உணர்த்தல் அறிக.

இத் திருப்பதிகத்தில், மருதநிலச் சிறப்பாக, "சேற்றயன் மிளிர்வன கயல் இளவாளை" என வரும் தொடர்கள் திருப்பாட்டு 2இல் (வ. எண் 843) குறிக்கப் பட்டுள்ளது, கானமும் சுடலையும் கற்படுநிலனும் என முல்லை, பாலை, குறிஞ்சி நிலச் சிறப்புகள், திருப்பாட்டு எண் 3லும், (வ. எண் 844) நெய்தல் நிலச் சிறப்பு "கடல்தனில் உறைவார்" எனத் திருப்பாட்டு 4லும் (வ. எண். 845) குறிக்கப்படுதல் காண்க.

79. திருக்கழுமலம்

தல விளக்கம்: பதிக எண் 1 காண்க.

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

853. அயில்உறு படையினர் விடையினர் முடிமேல்
அரவமும் மதியமும் விரவிய அழகர்
மயில்உறு சாயல வனமுலை ஒருபால்
மகிழ்பவர் வானிடை முகில்புல்கு மிடறர்

பயில்உறு சரிதையர் எருதுஉகந்துஏறிப்
பாடியும் ஆடியும் பலிகொள்வர் வலிசேர்
கயிலையும் பொதியிலும் இடம்என உடையார்
கழுமல நினையநம் வினைகரிசு அறுமே.

தெளிவுரை: *ஈசனார், கூர்மையான சூலமும், மழுவும் படையாக உடையவர்; இடப வாகனம் உடையவர்; சடைமுடியில் பாம்பும், சந்திரனும் தரித்த அழகர்; மயில் போன்ற சாயலை உடைய உமாதேவியை ஒரு பாகம் ஏற்று மகிழ்பவர்; சிவந்த வானத்தில் கருமுகில் சேர்ந்ததைப் போன்ற மிடற்றை உடையவர்; நன்னெறியில் சஞ்சரிப்பவர்; இடபவாகனத்தில் ஏறிப்பாடியும் ஆடியும் பிச்சை ஏற்பவர்; வலிமை மிக்க திருக்கயிலையையும், பொதிய மலையையும் தமது இடமாகக் கொண்டு விளங்குபவர். அப்பெருமான் கழுமல நகரில் வீற்றிருந்து அருள் புரிய, அதனை நினைத்துப் போற்ற நம் வினையின் தீமை அறும்.*

அயில் – கூர்மை; மிடறு – கழுத்து, கண்டம். சரிதை – நல்லொழுக்கத்தில் சஞ்சரித்தல். கரிசு – தீமை, குற்றம், பாவம்.

854. கொண்டலும் நீலமும் புரைதிரு மிடறர்
கொடுமுடி உறைபவர் படுதலைக்கையர்
பண்டுஅலர்அயன்சிரம் அரிந்தவர் பொருந்தும்
படர்சடை அடிகளார் பதியதன்அயலே
வண்டலும் வங்கமும் சங்கமும் சுறவு
மறிகடல் திரை கொணர்ந்து எற்றியகரைமேல்
கண்டலும் கைதையு நெய்தலும் குலவும்
கழுமல நினையநம் வினை கரிசுஅறுமே.

தெளிவுரை: *ஈசனார், மேகமும் நீலமும் பொருந்திய மிடறுடையவர்; கொடுமுடியில் உறைபவர்; மண்டை ஓட்டினைக் கையில் உடையவர்; பிரமனின் ஐந்து*

சிரங்களில் ஒன்றைக் கொய்து நான்முகனாகச் செய்தவர்; சடை முடி யுடையவர். அப்பெருமான், ஊருக்கு அயலாக, வண்டல் மண்ணும், தோணியும், சங்குகளும், சுறா மீன்களும் அலைகள் வாயிலாகச் சேர்க்கும் கடல் கரையில் நீர் முள்ளியும், தாழையும் நெய்தற் பூக்களும் சேரும் கழுமல நகரில் வீற்றிருக்க, அதனை நினைத்து வணங்கிட வினையின் தீமை அறும்.

சிறப்புரை: யாவருக்கும் ஏற்பட்ட அச்சத்தைப் போக்கி நஞ்சினை உண்டு காத்தருளிய ஈசன் மாண்பு தோன்ற, மேகம் போன்று நன்மை புரிதலைக் குறிக்கும் மிடற்றின் அருள் வண்ணம் கொண்டல் எனவும், கண் களுக்கு இனிமை திகழும் நீலவண்ணமும் காட்டுமாறு, "கொண்டலும் நீலமும் புரை திருமிடர்" என உணர்த்தப்பட்டது.

கைதை – தாழை.

855. எண்ணிடை ஒன்றினர் இரண்டினர் உருவம்
எரியிடை மூன்றினர் நான்மறையாளர்
மண்ணிடை ஐந்தினர் ஆறினர் அங்கம்
வகுத்தனர் ஏழிசை எட்டிருங் கலைசேர்
பண்ணிடை ஒன்பதும் உணர்ந்தவர் பத்தர்
பாடிநின்று அடிதொழ மதனனை வெகுண்ட
கண்ணிடைக் கனலினர் கருதிய கோயில்
கழுமல நினையநம் வினைகரிசு அறுமே.

தெளிவுரை: ஈசனார், எண்ணத்தில் ஒன்றாகக் கலந் திருந்து மகிழ்விப்பவர்; உருவத் திருமேனி கொண்டு, உமாதேவியுடன் ஒரு பாகத்தை உடைய அர்த்த நாரியாகவும், வேறாகத் தனித்தும் ஆக இரண்டும் உடையவர்; எரியினில், சூட்டின் பரிசம், ஒளியின்

வண்ணம், எரிகின்ற போது விளையும் ஓசை ஆக மூன்று தன்மையுடையவர்; நான்கு மறைகளையும் ஆள்பவர்; மண்ணிடையில் ஐந்து தன் மாத்திரைகள் கொண்டவர்; வேதத்தின் ஆறு அங்கம் ஆகியவர்; ஏழிசையாக விளங்கும் சஞ்சமம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாரம் (ச, ரி, க, ம, ப, த, நி) என விளங்குபவர்; அட்டாவதானம் முதலான எட்டு அருங்கலையானவர்; ஒன்பது வகையான பண்களும் ஆனவர்; பத்தர்கள் பாடி நின்று தொழுது போற்றி நிற்க, மன்மதனை நெற்றிக் கண்ணால் எரியுண்ணச் செய்தவர். அத்தகைய பெருமான் கருதிய கோயிலாகிய கழுமலத்தை நினைக்க நம் வினையானது அற்றொழியும்.

சிறப்புரை: இத் திருப்பாடல் எண்ணலலங்காரத்தில் சிறப்புற விளங்கி நிற்பதாகும். எரியிடை மூன்றினர் என்பதனை 1. ஆகவனீயம், 2. காருகபத்தியம், 3. தட்சணாக்கினி (வடவாக்கினி) எனலும் பொருந்தும். "தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி" என மாணிக்கவாசகர் உரைப்பதும் காண்க. அவ்வாறு, மண்ணிடை ஐந்தினர் என்பதனை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகையாய் உரைத்தலும் கூடும். "பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி" என வரும் மணிவாசகர் கூற்றும் நோக்கற்பாலது. ஏழிசையின் வகைகள்: 1. குரல், 2. கைக்கிளை, 3. துத்தம், 4. இழை, 5. இளி, 6. விளரி, 7. தாரம் என்னும் தன்மையும் சாரும். "ஏழிசையாய் இசைப்பயனாய்" எனப் பகரும் நாவலாரூரர் வாக்கும் காண்க. எட்டிருங் கலைசேர் ஈசனை அட்டமூர்த்தியாகிய இறைவனை உணர்த்துதலும் ஆகும். "கலை எட்டும், காப்பெட்டும் காட்சி எட்டும்" என நாவுக்கரசர் உரைப்பதும் காண்க.

எரிமூன்று ஈசனார் முக்கண்ணும் — சூரியன், சந்திரன், அக்கினி ஆகும்.

856. எரிஒரு கரத்தினர் இமையவர்க்கிறைவர்
ஏறுஉகந்துஏறுவர் நீறுமெய்பூசித்
திரிதரும் இயல்பினர் அயலவர் புரங்கள்
தீயெழ விழித்தனர் வேய்புரை தோளி
வரிதரு கண்ணிணை மடவரல்அஞ்ச
மஞ்சுற நிமிர்ந்ததோர் வடிவொடும் வந்த
கரியுரி மருவிய அடிகளுக்கு இடமாம்
கழுமல நினையநம் வினைகரிசுஅறுமே.

தெளிவுரை: ஈசனார், நெருப்பினை ஒரு கரத்தில் உடையவர்; தேவர்களின் இறைவர்; இடப வாகனத்தை உகந்து ஏறுபவர்; திருநீற்றை மெய்யில் பூசித் திரியும் இயல்பினர்; முப்புரங்களை எரித்தவர்; உமாதேவி அஞ்சி நடுங்குமாறு வந்த கரிய யானையின் தோலை உரித்தவர். அத்தகை பெருமானுக்கு இடமாகிய கழு மலத்தை நினைக்க நம் வினையின் தீமை அறும்.

857. ஊர் எதிர்ந்திடு பலி தலைகலனாக
உண்பவர் விண்பொலிந்து இலங்கிய உருவர்
பார்எதிர்ந்து அடிதொழ விரைதரு மார்பில்
படஅரவு ஆமைஅக்கு அணிந்தவர்க்கு இடமாம்
நீர்எதிர்ந்து இழிமணி நித்தில முத்த
நிரைகரி சங்கமொடு ஒண்மணிவரன் றிக்
கார்எதிர்ந்து ஓதம் வன் திரைகரைக்கு எற்றும்
கழுமல நினையநம் வினைகரிசு அறுமே.

தெளிவுரை: ஈசனார், பிரம கபாலம் ஏந்தி ஊர்களில் திரிந்து பிச்சை யேற்பவர்; ஆகாயம் பொலியுமாறு விரிந்த திருமேனி கொண்டவர்; உலகத்தவர் வணங்கு

மாறு மணம் திகழும் மார்பில் நாகம், ஆமையோடு, உருத்திராக்க மணி அணிந்தவர். அப் பெருமானுக்கு இடமாக உள்ள, முத்துக்களும் சங்குகளும் திரைகள் வாயிலாகக் கடற்கரைக்குக் கொண்டு சேர்க்கும் கழுமல நகரினை நினைக்க நம் வினையின் தீமை அறும்.

858. முன்னுயிர்த் தோற்றமும் இறுதியும் ஆகி
முடியுடை அமரர்கள் அடிபணிந்து ஏத்தப்
பின்னிய சடைமிசைப் பிறைநிறை வித்த
பேரருளாளனார் பேணிய கோயில்
பொன்னியல் நறுமலர் புனலொடு தூபம்
சாந்தமும் ஏந்திய கையினர் ஆகிக்
கன்னியர் நாள்தொறும் வேடமே பரவும்
கழுமல நினைய நம் வினைகரிசு அறுமே.

தெளிவுரை: உலகம் தோன்றுவதற்கு முன்னர் தோன்றியும் பிரளய காலத்திலும் விளங்குதல் செய்து தேவர்கள் எல்லோரும் அடிபணிந்து ஏத்த, சடையின் மீது பிறை சூடிய பேரருளாளராகிய ஈசனார், பேணிய கோயிலானது, பொன்போன்ற உயர்ந்த மணம் பொருந்திய மலர்களும், தூபம், சந்தனம் ஆகியவற்றுடன் பூசனை செய்து, கன்னியர்கள் நாள்தோறும் வழிபாடு இயற்றும் தன்மையில், ஈசன் திருவடியையே போற்றுகின்ற கழுமல நகர் ஆகும். அந்நகரை நினைக்க நம் வினையின் தீமையானது அறும்.

சிறப்புரை: கன்னிப் பெண்கள் மார்கழி மாதத்தில் நோன்பு இருந்து வழிபட்டு நல்ல கணவனை அடைதல் மரபாகக் கொள்ளும் நிலையில், இவண் அச்செயல் நாள்தோறும் ஆற்றுதல் உணர்த்தப் பெற்றது. கன்னிப் பெண்கள் தம் இல்லங்களில் மேற்கொள்ளும் வழிபாட்டு முறையை உணர்த்தியதும் ஆகும்.

859. கொலைக்கு அணித்தாவரு கூற்றுஉதை செய்தார்
குரைகழல் பணிந்தவர்க்கு அருளிய பொருளின்
நிலைக்கு அணித்தா வர நினையவல்லார்தம்
நெடுந்துயர் தவிர்த்த என் நிமலருக்கு இடமாம்
மலைக்கு அணித்தா வர வன்திரை முரல
மதுவிரி புன்னைகள் முத்தென அரும்பக்
கலைக்கணம் கானலின் நீழலில் வாழும்
கழுமல நினையநம் வினைகரிசு அறுமே.

தெளிவுரை: *ஈசனார், மார்க்கண்டேயரின் உயிரைக் கவருவதற்கு என வந்த கூற்றுவனை, தன் திருப்பாதத் தால் உதைத்தார். கழல் பணிந்து போற்றுபவர்க்கு அண்மையாய் இருந்து அருள் செய்து, அவரவர்தம் நெடிய துயர்களைத் தவிர்ப்பவர் ஈசன். அத்தகைய நிமலருக்கு இடமாவது, அருகில் வரவேண்டும் எனக் கடலலைகள் ஒலி செய்ய, புன்னை மலர்கள் முத்துப் போன்று அரும்ப, கலை மான்கள் சோலைகளின் நிழலில் வாழும் கழுமல நகர் ஆகும். அதனை நினைக்க நம் வினையின் தீமையானது அறும்.*

மலை – திருக்கோயில்

860. புயம் பலஉடைய தென் னிலங்கையர் வேந்தன்
பொருவரை எடுத்தவன் பொன்முடி திண்தோள்
பயம்பல படஅடர்த்து அருளிய பெருமான்
பரிவொடும் இனிதுறை கோயில தாகும்
வியன்பல விண்ணினு(ம்) மண்ணினும் எங்கும்
வேறுவேறு உகங்களில் பெயருளதுஎன்னக்
கயம்பல படக்கடல் திரைகரைக்கு எற்றும்
கழுமல நினைய நம்வினை கரிசு அறுமே.

தெளிவுரை: *பல தோள்களை யுடைய தென்னிலங் கையின் வேந்தனாகிய இராவணனுடைய*

தலையையும் தோளையும் அச்சம் கொள்ளுமாறு அடர்த்துப் பின்னர் அருள் செய்த பெருமான், பரிவுடன் இனிது உறையும் கோயிலாவது, பல பெயர் களை யுகங்கள்தோறும் கொண்டுள்ள கழுமலம் என்னும் நகரில் உள்ளதாகும். இத் தலத்தை நினைக்க நம் வினையின் தீமையானது அறும்.

கயம் – யானை.

861. விலங்கல் ஒன்று ஏந்திவன் மழை தடுத்தோனும்
வெறிகமழ் தாமரை யோனும் என்று இவர்தம்
பலங்களால் நேடியும் அறிவரிதாய
பரிசினன் மருவி நின்று இனிதுறை கோயில்
மலங்கிவன் திரைவரை யெனப் பரந்தெங்கு
மறிகடல் ஓங்கிவெள் ளிப்பியும் சுமந்து
கலங்கள் தன் சரக்கொடு நிரக்கவந்துஏறும்
கழுமல நினைய நம் வினைகரிசு அறுமே.

தெளிவுரை: கோவர்த்தன மலையை ஏந்திக் கொடிய மழையைத் தடுத்து உயிர்களைப் பாதுகாத்த திருமாலும், தாமரை மலரில் விளங்கும் பிரமனும் தமது பலத்தின் திறமை கொண்டு தேடியும் அறிய இயலாத பெருமையுடைய ஈசன், மருவி விளங்குகின்ற இனிய கோயிலான வன்மையான கடல் அலைகள் பரவி வெண்மையான இப்பிகளைச் சுமந்தும், மரக் கலங்களில் சரக்குகள் ஏறும் கழுமலத்தை நினைக்க நம் வினையின் தீமையானது அறும்.

விலங்கல் – கோவர்த்தன மலை. மலங்கி – கலங்கி.

862. ஆம்பலதவம் முயன்று அறவுரைசொல்லும்
அறிவிலாச் சமணரும் தேரரும் கணிசேர்
நோம்பல தவம் அறி யாதவர் நொடிந்த
மூதுரை கொள்கிலா முதல்வர்தம் மேனிச்

சாம்பலும் பூசி வெண் தலைகல னாகத்
தையலார் இடுபலி வையகத்து ஏற்றுக்
காம்பன தோளியொடு இனிதுறை கோயில்
கழுமல நினைய நம் வினைகரிசு அறுமே.

தெளிவுரை: ஆகும் பல தவங்களை முயன்று அறவுரைகள் சொல்லும் சமணரும் பௌத்தரும், மெய்யாக நோற்றுச் செய்யும் தவம் அறியாதவராய் இருக்க அவ் உரைகளைக் கொள்ளாதவராகிய ஈசன், திருமேனியில் சாம்பலைப் பூசிக் கபாலத்தைக் கையில் ஏந்தி மாதர்கள் இடுகின்ற பிச்சையை உலகில் ஏற்று, உமாதேவியுடன் இனிது வீற்றிருக்கும் கோயிலாகிய கழுமலத்தை நினைக்க நம் வினையின் தீமை அறும்.

863. கலிகெழு பாரிடை ஊர்என உளதாம்
கழுமலம் விரும்பிய கோயில் கொண்டவர்மேல்
வலிகெழு மனமிக வைத்தவன் மறைசேர்
வருங்கலை ஞானசம் பந்தன தமிழின்
ஒலிகெழு மாலை என்று உரைசெய்த பத்தும்
உண்மையினால் நினைந்து ஏத்தவல்லார்மேல்
மெலிகெழு துயர்அடை யாவினை சிந்தும்
விண்ணவர் ஆற்றலின் மிகப்பெறு வாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஒலிமிக்க உலகில் ஊர் என எக்காலத்திலும் விளங்கும் கழுமலம் என்னும் நகரை விரும்பிக் கோயில் கொண்ட ஈசன்மேல், வலிமைமிக்க பற்றுக் கொண்டு, கலை ஞானத்திலும், வேதத்திலும் வல்ல ஞானசம்பந்தன், தமிழில் இசை மிக்க மாலையாய் உரை செய்த இத் திருப்பதிகத்தை உள்ளத் தூய்மையினால் நினைந்து பாடுபவர்கள் மீது, மெலிவைத் தருகின்ற துன்பம் அடையாது,

அவர்களிடம் பற்றி இருக்கும் வினை அகலும். அவர்கள் தேவர்களுடைய ஆற்றலை விட மிகுதியான ஆற்றலைப் பெறுவர்.

கலிகெழு – ஒலிக்கின்ற. வலிகெழு – வலிமை கொண்ட, உறுதியான.

80. கோயில்

தல விளக்கம்: காவிரி வடகரைத் தலம். தில்லை – சிதம்பரம் என்று அழைக்கப்படுகிறது. பெரும்பற்றப் புலியூர் என்பது வேறு பெயர். பூலோகக் கயிலாயம், புண்டரீகபுரம், சிதாகாசத்தலம் எனவும் பெயர்கள் உண்டு. மாணிக்கவாசகர், வியாக்கரபாதர், பதஞ்சலி, உபமன்யு, வியாசர், சுகர், திருநீலகண்டர், திருநாளைப் போவார் (நந்தனார்), கூற்றுவநாயனார், கணம்புல்லர் முதலானோர் பேறுபெற்ற திருத்தலம். இறைவனுக்கு இத்தலம் இருதய ஸ்தானமாகச் சொல்லப்படுவது.

பஞ்சபூதத் தலங்களுள் இது ஆகாயம்; பஞ்ச சபைகளுள் இது கனகசபை. இத் தலத்தில் உள்ள சபைகள் 1. சிற்றம்பலம், 2. பொன்னம்பலம், 3. பேரம்பலம், 4. நிருத்த சபை, 5. ராஜ சபை. இங்குள்ள ஆயிரங்கால் மண்டபத்தில் ராஜ சபை உள்ளது.

இத் தலத்தில் மாணிக்கவாசகர் புத்தரை வாதில் வென்றார். சேக்கிழார் பெரியபுராணத்தை அரங் கேற்றம் செய்த தலம்.

மற்ற சிறப்புகள்:

1. சேக்கிழார் சுவாமிகளுக்கு ஈசன் உலகெலாம் என்று அடி எடுத்துக் கொடுத்தது.

2. உமாபதி சிவம் கொடிக் கவி பாடிக் கொடியேறச் செய்தது.

3. தடைப்பட்ட தேரை, சேந்தனார் திருப்பல்லாண்டு பாடி ஓடச் செய்தது.

4. திருமுறைகளை வெளிப்படுத்தியது.

5. யானை, திருக்களிற்றுப் படியார் எனும் நூலை ஈசன் திருவடியில் வைத்தது.

சுவாமி : அம்பலவாணர், கூத்தபிரான், நடராசர், சபாநாயகர், கனக சபாபதி, திருச்சிற்றம்பலம் உடையார்.

அம்பிகை : சிவகாம சுந்தரி

தல மரம் : ஆல மரம்

தீர்த்தம் : சிவகங்கை, பிரம தீர்த்தம், ஆனந்த தீர்த்தம் முதலியன.

சிறப்பு : இறைவன் புரியும் ஆனந்த தாண்டவக் காட்சி. இதனுள் திருச்சித்திர கூடம் என்ற மங்களா சாசனம் பெற்ற வைணவத் தலம் உள்ளது.

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

864. கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.

தெளிவுரை: வேதத்தை நன்கு கற்றுத் தேர்ந்து, உலகத்தில் துன்பத்தை நாடாதவாறு வேள்வி செய்யும் மறையவர்கள் வாழ்கின்ற தில்லையின், சிற்றம் பலத்தில் இளமையான சந்திரனைச் சூடி விளங்கும்

முதல்வனாகிய ஈசன் பாதத்தைப் பற்றி வணங்குபவர்களுக்குப் பாவம் அணுகாது.

சிறப்புரை: உயர்ந்த சாத்திரமாகிய வேதத்தைக் கற்றலே, உண்மையாகக் கற்ற சிறப்பு ஆகும் என்று புலப்படுத்துமாறு. "கற்று". என உணர்த்தப்பட்டது. உலக நன்மைக் காக் வேள்வித் தீ ஆற்றித் துன்பத்தைச் செற்றுத் தீய்க்கும் அந்தணர்கள் "செற்றார்" என உணர்த்தப் பட்டது. தில்லை நடராசப் பெருமான் திருவடியைப் பற்றிப் பாவத்தைப் போக்கிக்கொள்ள வேண்டும் என, மன்னுயிர்களுக்கு உணர்த்தியவாறும் ஆயிற்று. இறைவன் திருவடியைப் பற்றி இருந்து நம்மைப் பற்றிய பாவத்தை நீக்கிக் கொள்ள வேண்டும் என்பதாம்.

"படர்சடையன் பரஞ்சோதி பாவம் தீர்க்கும் பித்தாடி புலியூர்ச் சிற்றம்பலத்து எம் பெருமானைப் பெற்றாம் அன்றே," என சுந்தரமூர்த்தி சுவாமிகள் உரைப்பதும் அறியத்தக்கது.

பாதமே பற்றா நின்றார் – பாதத்தைப் பற்றி நின்றவர். பற்றா பாவமே – பாவம் பற்றாது. பற்றுதல் – தாமாகப் பதிதல், தாமே பற்றுதல்.

865. பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட்டு எரியோம்பும்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
பிறப்பில் பெருமானைப் பின்தாழ் சடையானை
மறப்பி லார்கண்டீர் மையல் தீர்வாரே.

தெளிவுரை: வேள்விச் சாலை அமைத்து, ஆன்மா மகிழ்ந்து விளங்குவதற்கு உரிய வேள்வி புரிந்து, ஓம்புதல் செய்யும் சிறப்பினை யுடைய மறையவர்கள் வாழ்கின்ற தில்லை நகரின் சிற்றம்பலத்தில் வீற்றிருக்கும் பிறப்பிலாப் பெருமானை, தாழ் சடையுடையவனை மறவாது, எஞ்ஞான்றும் நினைத்து,

வழிபடுபவர்கள் உலக மாயையிலிருந்து நீங்கியவராய்த் திகழ்வார்கள்.

சிறப்புரை: பிரமன் திருமாலின் உந்திக் கமலத்திலும், திருமால் இராமாவதாரம், கிருஷ்ணாவதாரம் முதலான அவதாரப் பிறப்புகளை யுடைத்தலைக் கருத்தில் கொண்டு, அவ்வாறு இன்றி எந்நிலையிலும் கருவில் பதிந்து பிறவாத பெருமான், ஈசன் என்னும் கருத்து, "பிறப்பில்" (பிறப்பு இல்லாத) பெருமான் என உணர்த்தப் பட்டது.

பறப்பு – வேள்விச் சாலை. பசுவேட்டு – ஆன்மாவிற்கு விரும்பி மகிழ்ச்சி தருவது. பசு – ஆன்மா; வேட்டல் – விரும்புதல். மையல் – பாசத்தால் உண்டாகும் மயக்கம், அறியாமையாலும் தோன்றும்.

866. மையார் ஒண்கண்ணார் மாடநெடுவீதிக்
கையால் பந்துஓச்சும் கழிசூழ் தில்லையுள்
பொய்யா மறைபாடல் புரிந்தான் உலகேத்தச்
செய்யான் உறைகோயில் சிற்றம் பலம்தானே.

தெளிவுரை: மை பூசிய கண்களையுடைய மகளிர் பந்து வீசி விளையாடும் நெடிய வீதிகளைக் கொண்ட தில்லையுள், எக்காலத்திலும் பொய்ம்மையடையாத வேத பாடல்களை விரும்பி, உலகத்தோர் ஏத்தி வணங்குகின்ற செம்மையுடைய ஈசன், உறைகின்ற கோயில் சிற்றம்பலம்தான்.

சிறப்புரை: வேதத்தின் மெய்மைச் சிறப்புத் தோன்ற பொய்யா மறை என உணர்த்தப்பட்டது. யாவும் செய்யும் இயல்புடையதும், சிவந்த வண்ணம் உடையதும் ஆகிய தன்மையும் குறித்தலை, "செய்யான்" என ஈசனார் திருநாமமாய் உணர்த்தப் பட்டது. "செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ" என மாணிக்கவாசகர் உரைப்பதும்

காண்க. தவிரவும், "செய்யனை வெளியதிருநீற்றில் திகழு மேனியன் மான்மறி ஏந்தும் மைகொள் கண்டனை வாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தை மறந்து என் நினைக்கேனே," என சுந்தரமூர்த்தி சுவாமிகள் உரைப்பதும் நோக்கத் தக்கது. தானே - உறுதியைப் புலப்படுத்தும் தேற்றப் பொருள்.

பொய்யாமறை – வேதம்.

867. நிறைவெண் கொடிமாட நெற்றிநேர் தீண்டப்
பிறைவந்து இறைதாக்கும் பேரம்பலம் தில்லைச்
சிறைவண்டு அறைஓவாச் சிற்றம் பலமேய
இறைவன் கழல் ஏத்தும் இன்பம் இன்பமே.

தெளிவுரை: வெண்மையான கொடிகளைக் கொண்ட மாடங்களின் முகப்பில், சந்திரன் ஒளி சாரும் பேரம் பலம் உடைய தில்லையில், சிறகுகள் உடைய, ஓய் வில்லாது ஒலித்து மகிழும் சிற்றம்பலம் மேவும் நடராசப் பெருமானின் திருக்கழலைப் போற்றி வணங்குதலே இன்பம் தரும்; மற்றவை இன்பம் ஆகாது என வெளிப்படுத்தப்பட்டது.

சிறப்புரை: இத்தலத்தின்கண் உள்ள ஐந்து சபைகளில் இரு சபைகள் இவண் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை:

1. பேரம்பலம் - தேவசபை.

2. சிற்றம்பலம் - நடராசப் பெருமான் திருநடம் புரிந்தருளும் இடம்.

பிற சபைகள்:

1. பொன்னம்பலம் - கனகசபை. நடராசப் பெருமான் அபிஷேகம் கொள்ளும் இடம்.

2. நிருத்த சபை - கொடிமரத்திற்கு அண்மையில் உள்ளது. ஈசன் ஊர்த்துவ தாண்டவம் புரிந்தது.

3. ராஜ சபை - ஆயிரங்கால் மண்டபம்.

இறைவன் கழல் ஏத்திப் பெறும் இன்பத்தின் சிறப்பினை, "இறைவனோடு இசைந்த இன்பம், இன்பத் தோடு இசைந்தவாழ்வு" என உரைக்கும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூற்றும் காண்க. இன்பமே - தேற்றப் பொருளில் உறுதியைக் காட்டிற்று.

868. செல்வ நெடுமாடம் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழல்ஏத்தும் செல்வம் செல்வமே.

தெளிவுரை: செல்வ வளத்தைக் காட்டும் உயர்ந்த மாட மாளிகைகள் விளங்க, ஞானமாகிய செல்வம் தோய, அச் செல்வத்தில் மிக்க மறைஞானச் செல்வர்கள் வாழும் தில்லையில், சிற்றம்பல நாதனாகிய செல்வக் கழலை ஏத்துதல் நல்ல மாண்பு — உண்மையான செல்வம் ஆகும்.

சிறப்புரை: தானியங்கள் பெருக்கத்திற்கு, விதை அடித்தளமாக விளங்குதலைப் போன்று, பேரின்ப நிலைக்குக் காரணமாகிய ஈசன் கழலை ஏத்துதல் அமைவதால், கழல் ஏத்தும் செயல் செல்வம் என உணர்த்தப் பெற்றது.

இத் திருப்பாட்டில் ஏழு இடங்களில் செல்வம் என்னும் சொல் சுட்டப் பெற்றதானது, ஏழு - எழு, எழும் செல்வம் என்றும், அது இறைவன் கழல் ஏத்துதல் ஆகும் என்றும் உணர்த்தியவாறு. செல்வமே - உறுதிப்படுத்தும் தேற்றப் பொருளாய்ச் சுட்டியது.

869. வருமாந் தளிர்மேனி மாதோர் பாகமாந்
திருமாந் தில்லையுள் சிற்றம் பலமேய
கருமான் உரியாடைக் கறைசேர் கண்டத்துஎம்
பெருமான் கழல்அல்லால் பேணாது உள்ளமே.

தெளிவுரை: மாந்தளிர்போல் வண்ணம் உடைய உமாதேவியை ஒரு பாகமாய்த், திருமகள் வாசம் புரியும் தில்லையுள் யானையின் தோலை உரித்து ஆடையாக அணிந்தும், நஞ்சு அருந்திய கண்டத்தை உடையவரும் ஆகிய சிற்றம்பலவன் கழலையன்றி என் உள்ளம் வேறு பொருளை நாடாது.

870. அலையார் புனல்சூடி ஆகத்து ஒருபாகம்
மலையான் மகளோடு மகிழ்ந்தான் உலகேத்தச்
சிலையால் எயில்எய்தான் சிற்றம்பலம் தன்னைத்
தலையால் வணங்குவார் தலையா னார்களே.

தெளிவுரை: கங்கையைத் தலையில் சூடி, உடலின் ஒரு பாகத்தில் மலையான் மகளாகிய உமாதேவியை வைத்து மகிழ்ந்தவன், உலகத்தோர் போற்றி வணங்கு மாறு, மேரு மலையை வில்லாகக் கொண்டு முப்புரக் கோட்டைகளை எரித்து அழித்த, அப் பெருமானுடைய இடமாக விளங்கும் சிற்றம்பலத்தை, தலையால் வணங்குபவர்கள், சிறப்பினை அடைந்தவர்கள் ஆவர்.

சிலை – மேரு. எயில் – கோட்டை. தலையானார்கள் – தலையாகிய உறுப்புக் கொண்டு வணங்குதல். (தலைமையுடைய) சிறப்பினை உடையவர் ஆவர்.

871. கூர்வாள் அரக்கன்றன் வலியைக் குறைவித்துச்
சீரா லேமல்கு சிற்றம் பலமேய
நீரார் சடையானை நித்தல் ஏத்துவார்
தீரா நோய்எல்லாம் தீர்தல் திண்ணமே.

தெளிவுரை: கூரிய வாளையுடைய அரக்கனான இராவணனின் வலிமையை அடக்கி, புகழ் பெருகும் சிற்றம்பலம் மேவும், கங்கை தரித்த சடையுடைய ஈசனை, நாள்தோறும் ஏத்துபவர்களுக்குத் தீர்க்க முடியாத எல்லா நோயும் தீரும். பிறவி நோயும் தீரும். இது உறுதி.

872. கோண்நா கஅணையானும் குளிர்தா மரையானும்
காணார் கழல்ஏத்தக் கனலாய் ஓங்கினான்
சேணார் வாழ்தில்லைச் சிற்றம் பலம்ஏத்த
மாணா நோய் எல்லாம் வாளா மாயுமே.

தெளிவுரை: வளைந்த நாகத்தைப் படுக்கையாகக் கொண்ட திருமாலும், தாமரைமேல் உள்ள பிரமனும் காணாதவராய் நிற்க, பின்னர் திருவடியை ஏத்தத் தீப் பிழம்பாய் ஓங்கிக் காட்சி நல்கியவன் ஈசன். அப்பெருமான் விளங்கும், தேவர்கள் வாழும் தில்லைச் சிற்றம்பலத்தை ஏத்த எல்லாவகையான நோய்களும் தாமாகவே மாயும்.

சிறப்புரை: தில்லை நகரில் தேவர்கள் சூழ்ந்து ஈசனை வணங்கும் தன்மையை "செறிபொழில் சூழ்தில்லை நகர்த் திருச்சிற்றம்பலமன்னி, மறையவரும் வானவரும் வணங்கிட நான் கண்டேனே," என மாணிக்கவாசகர் உரைப்பதும் காண்க.

யாக்கையில் தோன்றும் இயல்பாகிய நோய்கள் மட்டும் அல்லாது, பெருத்த ஊறு விளைவிக்கும் நோய் களையும் தீர்க்க வல்லவன் ஈசன் என்பதனை "மாணா நோய் மறையும்" என உணர்த்தப்பட்டது. இதில், பிறவி நோயும் தீரும் என்பது, குறிப்பால் உணர்த்தப் பெற்றது.

சேணார் – தேவர்கள். மாணாநோய் – மாட்சிமை இல்லாத நோய்

873. பட்டைத் துவராடைப் படிமம் கொண்டாடும்
முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
நட்டப் பெருமானை நாளும் தொழுவோமே.

தெளிவுரை: துவராடையை அணிந்து, அறியாமை யுடையவராய் உள்ளவர்கள் சொற்களைக் கேட்டு மயக்கம் கொள்ளாது, ஒழுக்கம் மிக்க பெரியோர்கள் வாழும் தில்லையின் சிற்றம்பலத்தில் மேவி நடம் புரியும் பெருமானை, தினந்தோறும் தொழுவோமாக.

சிறப்புரை: சிட்டர்கள் பெருகி ஏத்தும் தன்மையை, "சிட்டர்வானவர் சென்று வரங்கொளும் சிட்டர் வாழ் தில்லைச் சிற்றம்பலத்துறை சிட்டன் சேவடிகை தொழ" என்று திருநாவுக்கரசர் உரைப்பதும் இவண் நோக்கற்பாலது.

சிட்டர் – ஒழுக்க சீலர், ஞானிகள்.

874. ஞாலத்து உயர்காழி ஞான சம்பந்தன்
சீலத்தார் கொள்கைச் சிற்றம் பலமேய
சூலப்படை யானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத் தால்பாட வல்லார் நல்லாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: உலகத்தில் உயர்ந்து விளங்கும் காழிப் பதியின் ஞான சம்பந்தன், ஆசார ஒழுக்கத்தால் விளங்கும் சிற்றம்பலத்தில் சூலப் படையுடன் மேவும் ஈசனைப் போற்றிச் சொன்ன இத் தமிழ் மாலையை அழகுடன் பாட வல்லவர் நல்லவர்.

சிறப்புரை: செவிக்கினியதாயும் மனத்திற்கு இனியதாயும் கொண்டு பாடுதல் கோலத்தால் பாடுதலைச்

சுட்டிற்று. ஓதுவாமூர்த்தித் திருக்கோலத்தில் பாடுதலும் அமையும்.

நல்லவர் என்பது தமக்கு மட்டும் அன்றி ஞாலத் திற்கும் நன்றாதலை உணர்த்திற்று.

கோலம் – அழகு, வடிவம்.

81. சீகாழி

தல விளக்கம்: *பதிக எண் 1 காண்க.*

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

875. நல்லார் தீமேவும் தொழிலார் நால்வேதம்
சொல்லார் கேண் மையார் சுடர்பொன் கழலேத்த
வில்லால் புரஞ்செற்றான் மேவும் பதிபோலும்
கல்லார் மதிழ்சூழ்ந்த காழிந் நகர்தானே.

தெளிவுரை: நன்மை தரும் வேள்வித் தீ வளர்த்துச் செயல் புரியும் நான்கு வேதத்தையும் கற்று, மந்திரச் சொற்களைக் கூறும் அந்தணர்கள் பொற்கழலைப் போற்றி இருக்க, முப்புரத்தை எரித்த ஈசன் மேவும் பதி, மதில் சூழ்ந்த காழிநகர்.

சொல்லார் – சொல்லை உடையவர். கல்லார் – உறுதியான.

876. துனிவண் தேன்பாயும் இதழி தூமத்தம்
தெளிவெண் திங்கள் மா சுணநீர் திகழ்சென்னி
ஒளிவெண் தலைமாலை உகந்தான் ஊர்போலும்
களிவண்டு யாழ்செய்யும் காழிந் நகர்தானே.

தெளிவுரை: வளமான தேன் துளி யுடைய கொன்றை மலர், ஊமத்தம், தெளிந்த வெண்மதி, நாகம், கங்கை

ஆகியன திகழ்கின்ற சென்னியில் மண்டை ஓட்டு மாலையை உகந்த ஈசன் ஊரானது, வண்டு களிப்புடன் தேன் அருந்தி ரீங்காரம் செய்யும் காழி நகர்.

தலை மாலை – மண்டை ஒடு. யாழ் – ஒலியைக் குறித்தது.

877. ஆலக் கோலத்தின் நஞ்சுண்டு அமுதத்தைச்
சாலத் தேவர்க்கு ஈந்து அளித்தான் தன்மையால்
பாலற்காய் நன்றும் பரிந்து பாதத்தால்
காலன் காய்ந்தான் ஊர் காழிந் நகர்தானே.

தெளிவுரை: ஆலகால விடத்தைத் தான் உண்டு, அமுதத்தைத் தேவர்களுக்கு அளித்து அருள் புரிந்த தன்மையைப் போன்று, மார்க்கண்டேயருக்கு நன்றாகப் பரிந்து திருப்பாதத்தால் காலனை உதைத்து மாய்த்த ஈசனது ஊர், காழி நகர்.

878. இரவில் திரிவோர்கட்கு இறைதோள் இணைபத்தும்
நிரவிக் கரவாளை நேர்ந்தான் இடம்போலும்
பரவித் திரிவோர்க்கும் பால்நீறு அணிவோர்க்கும்
கரவில் தடக்கையார் காழிந் நகர்தானே.

தெளிவுரை: இரவில் திரிகின்ற அரக்கர்களுக்குத் தலைவனாகிய இராவணனுடைய இருபது தோள் களும் அடங்குமாறு செய்தும், வாளினை அளித்து அருள் புரிந்தும் திகழ்ந்த ஈசன் இடமாவது, பரவித் துதிப்போர்க்கும், திருவெண்ணீறு அணிபவர்களுக்கும் வரையாது வழங்கும் வண்மைக் குணம் உடையவர்கள் வாழும் காழி நகர் ஆகும்.

இரவில் திரிவோர் – அரக்கர், அசுரர். இறை – தலைவன்.

879. மாலும் பிரமனும் அறியா மாட்சியான்
தோலும் புரிநூலும் துதைந்த வரைமார்பன்

ஏலும் பதிபோலும் இரந்தோர்க்கு எந்நாளும்
காலம் பகராதார் காழிந் நகர்தானே.

தெளிவுரை: *திருமாலும் பிரமனும் அறியாத மாட்சிமை யுடையவன், தோலால் ஆகிய உடையும் அணிந்து மார்பில் முப்புரி நூல் பொருந்த விளங்கும் ஈசன் விளங்கும் பதியானது, இரந்து வருபவர்களுக்கு எல்லா நாட்களிலும் எல்லாக் காலங்களிலும் இல்லை என்று உரைக்காமல் வழங்கும் வள்ளல் தன்மையுடையவர் வாழும் காழி நகர் ஆகும்.*

880. தம்கைஇட உண்பார் தாழ்சீ வரத்தார்கள்
பெங்கை உணராதே பேணித் தொழு மின்கள்
மங்கை ஒரு பாக மகிழ்ந்தான் மலர்சென்னிக்
கங்கை தரித்தான்ஊர் காழிந் நகர்தானே.

தெளிவுரை: *கையில் உணவு ஏந்தி உண்பவர், காவியுடை கொண்டவர் ஆகியோரின் தீயொழுக் கத்தைத் ஏற்றுக் கொள்ளாது, மங்கையைப் பாகம் கொண்டு மகிழ்ந்து, கொன்றை மலர் முதலானவை களும், கங்கையும் சென்னியில் தரித்த ஈசனைத் தொழுமின்கள். அவனது ஊர் காழி நகர்.*

சீவரம் – காவியுடை. பெங்கு – தீயொழுக்கம்.

881. வாசம் கமழ்காழி மதிசெஞ் சடை வைத்த
ஈசன் நகர்தன்னை இணைஇல் சம்பந்தன்
பேசும் தமிழ்வல்லோர் பெருநீர் உலகத்துப்
பாசம் தனைஅற்றுப் பழியில் புகழாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *சந்திரனைச் செஞ்சடையில் வைத்த ஈசன் நகராகிய மண் கமழ் காழியின் இணையில்லாத ஞான சம்பந்தன் தமிழ்ப் பதிகத்தை உரைப்பவர்கள், கடல்*

சூழ்ந்த இவ்வுலகத்தில். பாசத்தை நீத்துப், பழியற்ற புகழை அடைவர்.

சிறப்புரை: உயிரானது (பசு) பாச நீக்கம் பெறும்; பதியை அடையும் என உணர்த்தப்பெற்றது.

(இப்பதிகத்தில் நான்கு பாடல்கள் கிடைக்கவில்லை.)

82. திருவீழிமிழலை

தல விளக்கம்: பதிக எண் 4 காண்க.

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

882. இரும்பொன் மலைவில்லா எரிஅம் பாநாணில்
திரிந்த புரமூன்றும் செற்றான் உறைகோயில்
தெரிந்த அடியார்கள் சென்ற திசைதோறும்
விரும்பி எதிர்கொள்வார் வீழி மிழலையே.

தெளிவுரை: பெரிய பொன்மலையாகிய மேருவை வில்லாகவும் அக்கினியை அம்பாகவும் கொண்டு வாசுகி என்கின்ற நாணில் ஏற்றிப் புரங்கள் மூன்றையும் எரித்து அழித்த ஈசன் உறையும் கோயில், அடியவர்களை எதிர் கொண்டு அழைக்கும் சிறப்புடைய வீழிமிழலையாகும்.

இரும்பொன்மலை – மேருமலை.

883. வாதைப் படுகின்ற வானோர் துயர்தீர
ஓதக் கடல்நஞ்சை உண்டான் உறைகோயில்
கீதத் திசை யோடும் கேள்விக் கிடையோடும்
வேதத் தொலிஓரா வீழி மிழலையே.

தெளிவுரை: துன்பத்தால் வேதனையுற்ற வானோர்கள் துயர் தீரக் கடல் நஞ்சினை உண்ட ஈசனார் கோயிலானது, வேத பாடசாலையில் வேத பாராயண ஒலி ஓய்வில்லாது ஒலிக்கும் வீமிழலையாகும்.

கிடை – வேத பாடசாலை.

884. பயிலும் மறையாளன் தலையில் பலிகொண்டு
துயிலும் பொழுதுஆடும் சோதி உறைகோயில்
மயிலும் மடமானும் மதியும் இளவேயும்
வெயிலும் பொலிமாதர் வீழி மிழலையே.

தெளிவுரை: மறையாளன் எனப்படும் பிரமாவின் சிரசினைக் (பிரமகபாலம்) கொண்டு பிச்சையேற்று எல்லோரும் துயிலும் காலமாகிய இரவில் ஆடும் சோதியாகிய ஈசன் உறையும் கோயிலாவது, மயில் போன்ற சாயலும், மான் போன்ற விழியும், சந்திரனைப் போன்ற முகமும், இள மூங்கிலைப் போன்ற தோளும், அனலைப் போன்ற கற்பும் பொலிகின்ற மாதர்கள் திகழும் வீழிமிழலையாகும்.

இளவேய் – இளைய மூங்கில். வெயில் – அனல்.

885. இரவன் பகலோனும் எச்சத்து இமையோரை
நிரவிட்டு அருள்செய்த நிமலன் னுறைகோயில்
குரவம் சுரபுன்னை குளிர்கோங்கு இளவேங்கை
விரவும் பொழில்அந்தண் வீழி மிழலையே.

தெளிவுரை: சந்திரனும் சூரியனும் எஞ்சிய தேவர்களும் உரிய வழியில் – தக்கனது யாகத்தில் பங்கேற்ற குற்றத் திற்காகத் தண்டனை செய்து அருள் புரிந்த ஈசன் உறையும் கோயிலாவது, குரவம், சுரபுன்னை, கோங்கு, வேங்கை மரங்கள் சூழும் பொழிலையுடைய வீழி மிழலையாகும்.

இரவன் – சந்திரன்.

886. கண்ணிற் கனலாலே காமன் பொடியாகப்
பெண்ணுக்கு அருள்செய்த பெருமான் உறைகோயில்
மண்ணில் பெருவேள்வி வளர்தீப் புகைநாளும்
விண்ணில் புயல்காட்டும் வீழி மிழலையே.

தெளிவுரை: நெற்றிக் கண்ணால் மன்மதனைப் பொடியாக்கி, அவன் மனைவியாகிய இரதி பணிந்து வேண்டுதல் செய்ய அருள் புரிந்த ஈசன் உறையும் கோயிலானது, பூவுலகத்தில் பெரிய வேள்வியைப் புரிந்து அதன் புகை நாள்தோறும் வானத்தில் சென்று மேகம் போன்று காட்டும் வீழிமிழலையாகும்.

887. மால்ஆ யிரங்கொண்டு மலர்க்கண் ணிடஆழி
ஏலா வலயத்தோடு ஈந்தான் உறைகோயில்
சேலா கியபொய்கைச் செழுநீர்க் கமலங்கள்
மேலால் எரிகாட்டும் வீழி மிழலையே.

தெளிவுரை: திருமால் ஆயிரம் மலர்களுடன் தன் மலர் போன்ற கண்ணை இட்டுப்போற்ற, ஆழிப்படையாகிய வலயத்தைச் - சக்கரத்தைத் தந்த ஈசன் உறையும் கோயிலானது, பொய்கையில் சேல்கள் சூழ்ந்திருக்க மேலே தீச்சுடர் போல் விளங்கும் செந்தாமரை மலர் கள் உடைய வீழிமிழலையாகும்.

888. மதியால் வழிபட்டான் வாழ்நாள் கொடுபோவான்
கொதியா வருகூற்றைக் குமைத்தான் உறைகோயில்
நெதியான் மிகுசெல்வர் நித்த நியமங்கள்
விதியால் நிற்கின்றார் வீழி மிழலையே.

தெளிவுரை: நல்ல ஞானத்தால் வழிபட்ட மார்க் கண்டேயனின் உயிரைக் கொண்டு செல்லக் கொதித்து வந்த கூற்றுவனை அழித்த ஈசன் உறையும் கோயிலாவது, ஆசார அனுட்டானங்களில் மிக்க

வராய் விளங்கும் பெருமக்கள், விதிப்படி நியமங்கள் புரியும் வீழிமிழலையாகும்.

889. எடுத்தான் தருக்கினை இழித்தான் விரலூன்றிக்
கொடுத்தான் வாள் ஆளாக் கொண்டான் உறைகோயில்
படித்தார் மறைவேள்வி பயின்றார் பாவத்தை
விடுத்தார் மிகவாழும் வீழி மிழலையே.

தெளிவுரை: *மலையைப் பெயர்த்த இராவணனுடைய தருக்கினை அழித்துத் திருப்பாத விரலால் ஊன்றி அடர்த்து, பின்னர் மந்திரவாளைக் கொடுத்து ஆட் கொண்ட ஈசன் உறைகின்ற கோயிலாவது, வேதங் களை நன்கு கற்றுத் தேர்ந்து வேள்விகளைப் பயின்று பாவத்தை வீழ்த்தியவர்கள் மிக வாழும் வீழிமிழலை யாகும்.*

சிறப்புரை: *வேள்வி புரிதலால் தனது பாவமும், மன்னுயிர்களின் பாவமும் ஒருசேரக் கெடுதல், "பாவத்தை மிக விடுத்தார்" என உணர்த்தப் பெற்றது.*

890. கிடந்தான் இருந்தானும் கீழ்மேல் காணாது
தொடர்ந்து ஆங்கு அவர்ஏத்தச் சுடர்ஆ யவன்கோயில்
படந்தாங்கு அரவு அல்குல் பவளத் துவர்வாய்மேல்
விடந்தாங்கிய கண்ணார் வீழி மிழலையே.

தெளிவுரை: *கிடந்து பள்ளி கொள்ளும் திருமாலும், இருந்து தொழிலாற்றும் பிரமனும், அடியும் முடியும் காணாது தொடர்ந்து, அவர்கள் அயர்ந்து ஏத்தி வணங்கத் தீச்சுடர் ஆகிய ஈசன் உறையும் கோயி லானது, பாம்பின் படம் போன்ற அல்குலும், பவளம் போன்ற வாயும், விடம் தாங்கிய கண்களும் உடைய மாதர்கள் விளங்கும் வீழிமிழலையாகும்.*

சிறப்புரை: மகளிர்தம் பார்வை, கற்புக்கதிரைக் காட்டிய வாரும், அது மாற்றார்க்கு விடம் போன்று, அச்சத் தினைத் தரும் என்று கூறுமுகத்தான், விடந்தாங்கிய கண்ணார் என உணர்த்தப்பட்டது.

891. சிக்கார் துவராடைச் சிறுதட்டு உடையாரும்
நக்கு ஆங்கு அலர்தூற்றும் நம்பான் உறைகோயில்
தக்கார் மறை வேள்வித் தலையாய் உலகுக்கு
மிக்கார் அவர் வாழும் வீழி மிழலையே.

தெளிவுரை: தட்டும், துவராடையும் கொண்டு ஏளனமாக நகை செய்து பழிச்சொல் கூறப்படும் ஈசன் உறையும் கோயிலானது, தகுதி வாய்ந்த வேத விற்பன்னர்கள் வேள்விகளை ஆற்றி உலகத்தின் தலை சிறந்தவர்களாக வாழும் வீழிமிழலையாகும்.

நக்கு – நகைத்து.

892. மேல்நின்று இழிகோயில் வீழிமிழலையுள்
ஏனத்து எயிற்றானை எழிலார் பொழில் காழி
ஞானத்து உயர்கின்ற நலங்கொள் சம்பந்தன்
வாய்மைத்து இவைசொல்ல வல்லோர் நல்லோரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: விண்ணுலகத்திலிருந்து பூவுலகிற்கு வந்த கோயிலாகிய வீழிமிழலையுள் வீற்றிருக்கும் பன்றியின் பல்லை அணியாகக் கொண்டுள்ள ஈசனை ஏத்தி, எழில் மிக்க பொழில்திகழ் காழியின் ஞானசம்பந்தன் மெய்யாகக் கூறிய இத் திருப்பதிகத்தைச் சொல்ல வல்லவர் நல்லோர் ஆவர்.

ஏனத்து எயிறு – பன்றியின் பல்.

83. திருஅம்பர்மாகாளம்

தல விளக்கம்: காவிரி தென்கரைத் தலம். கோயில் திருமாளம் என அழைக்கப்படுகிறது. அம்பன், அம்பாசுரன் ஆகிய இருவரையும் கொன்ற பாவம் தீர, காளி பூசித்த திருத்தலம். சோமாசி மாற நாயனார் யாகம் செய்த தலம். மாகாள ரிஷி பூசித்த தலம்.

சுவாமி : மாகாளேஸ்வரர், காளகண்டேஸ்வரர்

அம்பிகை : பட்சயாம்பிகை

தல மரம் : கருங்காலி

தீர்த்தம் : மாகாள தீர்த்தம்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

893. அடையார் புரமூன்றும் அனல்வாய் விழவெய்து
மடையார் புனல்அம்பர் மாகா ளம்மேய
விடையார் கொடியெந்தை வெள்ளைப் பிறைசூடும்
சடையான் கழலேத்தச் சாரா வினைதானே.

தெளிவுரை: முப்புரங்களைத் தீக்கிரையாக்கி, வாய்க் கால்களில் நீர் பெருகும் அம்பர்மாகாளத்தில் மேவிய இடபக் கொடி யுடைய எந்தை, வெண்பிறைச் சந்திரனைச் சூடிய ஈசன் ஆவர். சடையுடைய அப்பெருமான் கழல் ஏத்த வினை அணுகாது.

அடையார் புரமூன்று – முப்புரங்கள்.

894. தேனார் மதமத்தம் திங்கள் புனல்சூடி
வானார் பொழில்அம்பர் மாகா ளம்மேய
ஊனார் தலைதன்னில் பலிகொண்டு உழல்வாழ்க்கை
ஆனான் கழலேத்த அல்லல் அடையாவே.

தெளிவுரை: தேன் மிகுந்த ஊமத்த மலருடன், சந்திரனும், கங்கையும் சூடி வானளவு உயர்ந்த மரங்கள் கொண்ட பொழில் சேர் அம்பர்மாகாளம் மேவி, பிரம கபாலம் ஏந்திப் பலியேற்று உழலும் வாழ்க்கை உடையவனாகிய ஈசனார் கழல் ஏத்த, அல்லல் அடையாது.

மத – மிகுதி. ஊனார் தலை – பிரம கபாலம்.

895. திரையார் புனலோடு செல்வ மதிசூடி
விரையார் பொழில்அம்பர் மாகாளம்மேய
நரையார் விடையூரு நம்பான் கழல்நாளும்
உரையா தவர்கள்மேல் ஒழியா ஊனம்மே.

தெளிவுரை: அலைகள் கொண்ட நீராகிய கங்கையுடன், செல்வம் மிக்க மதி சூடி, நறுமணம் கமழும் பொழில் சூழ்ந்த அம்பர்மாகாளம் மேவிய, கம்பீரமாகப் பீடு நடையுடைய வெண்மையான இடப வாகனத்தில், ஊர்கின்ற நண்பனாகிய ஈசன் கழலை வணங்கித் தினந்தோறும் போற்றி உரைக்க வேண்டும். அவ்வாறு உரைக்காதவர்கள் குறைகள் தீராது. ஈசன் கழலை வணங்கிப் போற்ற குறைகள் தீரும்.

சிறப்புரை: தக்கனது சாபத்தால் தேய்ந்து போன சந்திரன், நல்ல மதி (அறிவு) கொண்டு ஈசனைச் சரண் அடைந்து வளம் பெற்றதைக் குறிக்குமாறு செல்வ மதி என உணர்த்தப்பட்டது.

விரை – நறுமணம். நரை – வெண்மை. ஊனம் – குறைபாடு.

896. கொந்து அண்பொழில் சோலைக் கோல வரிவண்டு
மந்தம் மலிஅம்பர் மாகாளம்மேய
கந்தம் கமழ்கொன்றை கமழ்புன்சடைவைத்த
எந்தை கழலேத்த இடர்வந்து அடையாவே.

தெளிவுரை: கொத்தாகப் பூக்கும் பொழில்கள் நிறைந்த சோலைகளில் வண்டுகள் மகிழ்ந்து தேனருந்தவும், தென்றல் காற்று வீசும் அம்பர்மாகாளம் மேவி, கந்தம் கமழும் கொன்றை மலரை, நறுமணம் கமழும் சடையில் வைத்துள்ள, எந்தையாகிய ஈசனார் கழலை ஏத்தி வணங்க, இடர் இல்லை.

கோலம் – அழகு. மந்தம் – காற்று, தென்றல்

897. அணிஆர் மலைமங்கை ஆகம் பாகமாய்
மணிஆர் புனல்அம்பர் மாகா ளம்மேய
துணிஆர் உடையினான் துதைபொன் கழல்நாளும்
பணியா தவர்தம்மேல் பறையா பாவம்மே.

தெளிவுரை: அழகு பொருந்திய மலை மங்கையான உமாதேவியை உடலில் ஒரு பாகமாக வைத்து, சங்கு, முத்துகள் விளங்கும் நீர்நிலைகள் கொண்ட அம்பர் மாகாளம் மேவி, துணிக்கப்பெற்ற - கிழிந்த, கோவணத்தை உடுத்திய ஈசனார் பொற்கழலை, நாள் தோறும் பணியாதவர்களின் பாவம் அழியாது. பணிபவர்கள் பாவம் அழியும் என்றவாறு.

பறை – அழிதல்.

898. பண்டுஆழ் கடல்நஞ்சை உண்டு களிமாந்தி
வண்டார் பொழில்அம்பர் மாகா ளம்மேய
விண்டார் புரம்வேவ மேருச் சிலையாகக்
கொண்டான் கழலேத்தக் குறுகா குற்றம்மே.

தெளிவுரை: கடல் நஞ்சை உண்டு மகிழ்ந்து அம்பர் மாகாளத்தில், முப்புரம் எரிசெய்வதற்காக, மேருவை வில்லாகக் கொண்டு, மேவிய ஈசனார் திருக்கழல் ஏத்தக் குற்றம் சாராது.

சிறப்புரை: நஞ்சைக் கண்டு அஞ்சும் தன்மையில் யாவரும் இருக்க, அவ்வச்சம் இறைவன் அடைவ தில்லை எனும் மெய்ம்மை, "உண்டு களி மாந்தி" என உணர்த்தப்பட்டது.

899. மிளிரும் மரவோடு வெள்ளைப் பிறைசூடி
வளரும் பொழில்அம்பர் மாகா ளம்மேய
கிளரும் சடையண்ணல் கேடில் கழலேத்தத்
தளரும் முறுநோய்கள் சாரும் தவந்தானே.

தெளிவுரை: மிளிர்ந்து ஓங்கும் அரவுடன் வெண்மையான பிறைச் சந்திரனைச் சூடி, கிளர்ந்து எழுகின்ற சடையுடைய அண்ணலாகிய ஈசனார், வளர்கின்ற பொழிலையுடைய, அம்பர்மாகாளத்தில் மேவியுள்ளார். அவருடைய, கெடுதியில்லாத திருக் கழலை ஏத்திப் பணிய, நோய்கள் யாவும் நீங்கும்; தவம் சார்ந்து மேவும்.

மிளிரும் மரவு, தளரும் முறுநோய் – மிளிரும் அரவு, தளரும் உறுநோய். மிளிர்தல் – ஒளிர்தல் (சந்தம் நோக்கி மகரம் மிகுந்தது.)

900. கொலைஆர் மழுவோடு கோலச் சிலையேந்தி
மலைஆர் புனல் அம்பர் மாகா ளம்மேய
இலைஆர் திரிசூலப் படையான் கழல்நாளும்
நிலையா நினைவார்மேல் நில்லா வினைதானே.

தெளிவுரை: கொலைத் தன்மையுடைய படைக் கலமாகிய மழுவும், அழகிய வில்லும் ஏந்தி, மூவிலை யுடைய சூலம் கொண்டு, மலையிலிருந்து வீழும் நீர் வளம் மிக்க அம்பர்மாகாளத்தில் மேவிய ஈசனார் திருக்கழலை, நாள்தோறும் உறுதியாக நினைப்பவர் களுக்கு வினையானது, நின்று தீங்கு செய்யாது.

நிலையா – உறுதியாக.

901. சிறைஆர் வரிவண்டு தேனுண்டு இசைபாட
மறைஆர் நிறைஅம்பர் மாகா ளம்மேய
நறைஆர் மலரானும் மாலும் காண்பு ஒண்ணா
இறையான் கழல்ஏத்த எய்தும் இன்பமே.

தெளிவுரை: *சிறகுகளை யுடைய வண்டுகள் தேன் உண்டு இசைத்து ரீங்காரம் செய்ய, வேதங்கள் முழங்கும் அம்பர்மாகாளம் மேவியவன் ஈசன். தேன் பொருந்திய தாமரை மலர்மீது உறையும் பிரமனும், திருமாலும் காண்பதற்கு முடியாத அப்பெருமான் திருக்கழலை ஏத்த, இன்பம் உண்டாகும்.*

சிறை – சிறகு. நறை – தேன்.
மலரான் – பிரமன். இறையான் – ஈசன்.

902. மாசூர் வடிவின்னார் மண்டை உணல்கொள்வார்
கூசாது உரைக்குஞ்சொல் கொள்கை குணமல்ல
வாசார் பொழில் அம்பர் மாகா ளம்மேய
ஈசா என்பார்கட்கு இல்லை இடர்தானே.

தெளிவுரை: *மாசு படிந்த வடிவம் உடையவர்கள், கூசாது உரைக்கும் பொய்யுரை குணம் மிக்கதாகாது. நறுமணம் மிக்க பொழிலுடைய அம்பர் மாகாளம் மேவிய ஈசன் திருநாமத்தை உரைப்பவர்களுக்கு, இடர் இல்லை.*

வாசார் – நறுமணம் பொருந்திய. தானே – உறுதியைக் காட்டித் தேற்றப் பொருளாய் வந்தது.

903. வெரிநீர் கொளஓங்கும் வேணுபுரந் தன்னுள்
திருமா மறைஞான சம்பந்தன் சேணார்
பெருமான் மலிஅம்பர் மாகா ளம்பேணி
உருகா உரைசெய்வார் உயர்வான் அடைவாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: தேன்போன்ற இனிமையான நீர் கொண்டு ஓங்கும் வேணுபுரத்தில் விளங்கும், செல்வ வளம் மிக்க மறைவல்ல ஞானசம்பந்தன், தேவர் பெருமானாக வீற்றிருந்து அருள்புரியும் ஈசன் திகழும் அம்பர் மாகாளத்தைப் பேணி, மனம் உருகி இத் திருப்பதிகத்தை ஓத, அவ்வாறு உரைப்பவர்கள் உயர்ந்த வானுலகத்தில் உள்ள பெருமையை அடைவார்கள்.

வெரி – தேன் (வேரி என்பது வெரியாக உரைக்கப் பெற்றது). சேணார் – தேவர்.

84. திருநாகைக்காரோணம்

தல விளக்கம்: காவிரி தென்கரைத் தலம். புண்டரீக முனிவரை ஈசன் தன் திருமேனியில் ஆரோகணித்துக் கொண்ட திருத்தலம். அகத்திய முனிவருக்குத் திருமணக் காட்சியை அருளிய தலம். அதிபத்த நாயனார் திரு அவதாரத் தலம். இத்தலத்தின் வேறு பெயர்கள், சிவராசதானி, பார்பதீச்சரம், அரவநகரம்.

சப்த விடங்கத் தலங்களுள் ஒன்று. சுவாமி சுந்தரவிடங்கர்; நடனம் : பாராவாரதரங்க நடனம் - ஏனைய விடங்கத்தலமாவன:

1. திருவாரூர்
2. திருமறைக்காடு
3. திருநள்ளாறு
4. திருவாய்மூர்
5. திருக்கோளிலி
6. திருக்காறாயில்

ஊர்ப் பெயர் நாகை; திருக்கோயில் - காரோணம்.

சுவாமி : காயாரோகணேஸ்வரர், ஆதிபுராணர்

அம்பிகை : நீலாயதாட்சி, கருந்தடங்கண்ணி

தல மரம் : மாமரம்

தீர்த்தம் : புண்டரீக தீர்த்தம், காக தீர்த்தம், தேவதீர்த்தம்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

904. புனையும் விரிகொன்றைக் கடவுள் புனல்பாய
நனையும் சடைமேலோர் நகுவெண் தலைசூடி
வினையில் லடியார்கள் விதியால் வழிபட்டுக்
கனையும் கடல்நாகைக் காரோ ணத்தானே.

தெளிவுரை: அழகினைத் தரும் விரிந்த கொன்றை மலர் சூடிய கடவுள், கங்கை திகழும் சடைமேல், மண்டையோட்டினைத் தரித்து, வினையிலிருந்து நீங்கிய மெய்யடியார்கள் விதிமுறைப்படி வழிபாடு செய்ய, ஒலி எழுப்பும் கடற்கரையில் உள்ள நாகையில், காரோணத்தில் வீற்றிருப்ப ர்.

சிறப்புரை: ஈசனை மெய்யன்பால் வணங்கிப் போற்றும் அடியவர்கள், வினையிலிருந்து நீங்கப் பெற்றவர் ஆவர் என்னும் சிறப்புத் தோன்ற, வினையில் அடியார்கள் என உணர்த்தப்பட்டது. அவ் அடியவர்கள், நியதிப்படி பூசாவிதிகளில் உள்ளவாறு வணங்குதலும் இவண் சுட்டப் பெற்றது.

புனல் – கங்கை, தேவகங்கையும் ஆகும்.

905. பெண்ஆண் எனநின்ற பெம்மான் பிறைச்சென்னி
அண்ணா மலைநாடன் ஆரூர் உறைஅம்மான்
மண்ஆர் முழவுஓவா மாடம் நெடுவீதிக்
கண்ணார் கடல்நாகைக் காரோ ணத்தானே.

தெளிவுரை: சத்தியும் சிவனும் என நின்ற பெருமான், பிறைச் சந்திரனைச் சென்னியில் சூடிய அண்ணா மலையானாகவும், திருவாரூரில் உறைபவனாகவும், முழவு ஒலி ஓய்வின்றி மேவும் மாட மாளிகைகள் உடைய நீண்ட வீதிகளைக் கொண்ட, கடல் சூழ் நாகையில் காரோணத்தின்கண்ணும் விளங்கின்றான்.

906. பாரோர் தொழவிண்ணோர் பணியம் மதில்மூன்றும்
ஆரார் அழல்ஊட்டி அடியார்க்கு அருள்செய்தான்
தேரார் விழவுஓவாச் செல்வன் திரைசூழ்ந்த
காரார் கடல்நாகைக் காரோ னத்தானே.

தெளிவுரை: பூவுலகத்தவர் தொழ, தேவர்கள் பணிய மூன்று மதில்களை நெருப்புக்கு இரையாக்கி, அடியவர்க்கு அருள் செய்தவன், தேர்த் திருவிழா நடைபெறும் செல்வச் சிறப்புடையவனாக, அலைகடல் சூழ் நாகையின் காரோணத்தில் விளங்கு பவனே.

907. மொழிசூழ் மறைபாடி முதிரும் சடைதன்மேல்
அழிசூழ் புனல்ஏற்ற அண்ணல் அணியாய
பழிசூழ் விலர்ஆய பத்தர் பணிந்தேத்தக்
கழிசூழ் கடல்நாகைக் காரோ ணத்தானே.

தெளிவுரை: மந்திர மொழி யுடைய வேதங்களை ஆய்ந்து, சடையின்மேல், கங்கையை ஏற்ற அண்ண லாகிய ஈசன், எத்தகைய பழியையும் அடைதற்கு இல்லாத சிறப்புடைய பக்தர்கள் பணிந்து ஏத்த அண்மையனாய் உப்பங்கழி சூழ்ந்த கடல் நாகைக் காரோணத்தில் வீற்றிருப்பவன்.

அழிசூழ்புனல் – அழிப்பதைப் போன்று மிக வேகமாக வந்த நீராகிய கங்கை.

908. ஆணும்பெண் ணுமாய் அடியார்க்கு அருள்நல்கிச்
சேண்நின் றவர்க்கு இன்னம் சிந்தை செயவல்லான்
பேணி வழிபாடு பிரியாது எழும் தொண்டர்
காணும் கடல்நாகைக் காரோ ணத்தானே.

தெளிவுரை: *சிவனும் சக்தியுமாய் விளங்கி, அடியவர்களுக்குப் போகமும் ஞானமும் அருள் புரிந்து, தேவர்களுக்கு மேலும் வழங்குதற்கு வல்லவனாகிய ஈசன், அன்பு கொண்ட வழிபாடு புரியும் திருத்தொண்டர்கள், நாள்தோறும் கண்டு வழிபடும் கடல் நாகைக் காரோணத்தில் வீற்றிருப்பவன்.*

சிறப்புரை: *பூவுலகத்தில் செய்த புண்ணிய வசத்தால் தேவர்கள் ஆனமையும், அன்னோர் இறைவனை வணங்கிய நெறியின் வழிநின்று, தேவர்கள் ஆகிய பின்னரும் வணங்குதலையும், தன்னை வணங்கிய அடியவர்களுக்கு அருளும் ஈசன், முன்னமே அருள் பெற்ற தேவர்களுக்கு, மேலும் அருளைப் பொழிய உள்ளவன் எனவும் விளக்கும் வகையில் "இன்னம் சிந்தை செய வல்லான்" என உணர்த்தப்பட்டது.*

சேண் நின்றவர் – தேவர்; இன்னம் – மேலும்.

909. ஏனத்து எயிறோடும் மரவ மெய்பூண்டு
வானத்து இளந்திங்கள் வளரும் சடையண்ணல்
ஞானத்து உரைவல்லார் நாளும் பணிந்தேத்தக்
கானல் கடல் நாகைக் காரோ ணத்தானே.

தெளிவுரை: *பன்றியும் பல்லும் அரவமும் அணியாகப் பூண்டு சந்திரனைச் சடையில் கொண்ட அண்ணலாகிய ஈசன், ஞான நூல்களில் வல்லவர்கள் நாள்தோறும் பணிந்தேத்தும் நாகைக் காரோணத் தானே!*

910. அரையார் அழல்நாகம் அக்கோடு அசைத்திட்டு
விரையார் வரைமார்பில் வெண்ணீறு அணிஅண்ணல்
வரைஆர் வனபோலவளரும் வங்கங்கள்
கரைஆர் கடல்நாகைக் காரோ ணத்தானே.

தெளிவுரை: அரையில் நாகம், மணி ஆகியவற்றைக் கட்டி அசைத்து மணம் கமழும் மார்பில் வெண்ணீறு தரித்த அண்ணல், மலைபோல் கப்பல்கள் வரும் கடல் நாகைக் காரோணத்தில் வீற்றிருப்பவரே.

911. வலங்கொள் புகழ்பேணி வரையால் உயர்திண் டோள்
இலங்கைக்கு இறைவாட அடர்த்து அங்கு அருள் செய்தான்
பலங்கொள் புகழ் மண்ணில் பத்தர் பணிந்தேத்தக்
கலங்கொள் கடல்நாகைக் காரோ ணத்தானே.

தெளிவுரை: வளமான புகழ்கொண்டு, மலை போன்ற தோள்களும் உடைய, இலங்கையின் வேந்தனாகிய இராவணன் மெலியுமாறு அடர்த்து, பின்னர் வணங்கித் துதிக்க அருள் செய்த ஈசன், வலிமை மிக்க புகழுடைய பக்தர்கள் பணிந்து ஏத்தப் பூவுலகத்திற்கு அணிகலமாக உள்ள கடல் நாகைக் காரோணத்தானே.

சிறப்புரை: மரக்கலம் கொள்ளும் கடல் நாகை என்பதும் சாரும்.

கலம் – அணிகலம், மரக்கலம்.

912. திருமால் அடிவீழத் திசைநான் முகன்ஏத்தப்
பெருமான் எனநின்ற பெம்மான் பிறைச்சென்னிச்
செருமால் விடையூரும் செல்வன் திரைசூழ்ந்த
கருமால் கடல்நாகைக் காரோ ணத்தானே.

தெளிவுரை: திருமால், திருவடியைத் தொழுது விழுந்து வணங்கவும், பிரமன் போற்றித் துதிக்கவும்,

பெருமானே என்று ஏத்தி வழிபடுபாறு நின்ற ஈசன், பிறைச் சந்திரனைத் தலையில் சூடி மால்விடையூரும் செல்வன். அப்பெருமான், அலைகள் சூழ்ந்த கரிய பெருமையுடைய கடல் சூழ்ந்த நாகையில் விளங்கும் காரோணத்தில் வீற்றிருப்பவனே.

செருயில் விடை – திருமால் இடபமாய் நின்று தாங்கிய சிறப்பு – இடபத்திற்கு சிறப்பாக உணர்த்தியது ஆம்.

913. நல்லார் அறம்சொல்லப் பொல்லார் புறம்கூற
அல்லார் அலர்தூற்ற அடியார்க்கு அருள்செய்வான்
பல்லார் தலைமாலை அணிவான் பணிந்து ஏத்தக்
கல்லார் கடல்நாகைக் காரோ ணத்தானே.

தெளிவுரை: நல்லோர்கள் அறநூல் பொருள்களை நவிலவும், தீயவர்களும், அறியாமையுடையவர்களும் பயனற்றவைகளைப் பேசியிருப்பினும், பணிந்து ஏத்தும் அடியவர்களுக்கு அருள் செய்யும் ஈசன், தலை மாலை அணிபவனாகிய கடல் நாகைக் காரோணத் தானே.

அல்லார் – அறியாமை உடையவர்.

914. கரை யார்கடல்நாகைக் காரோ ணம்மேய
நரையார் விடையானை நவிலும் சம்பந்தன்
உரையார் தமிழ்மாலை பாடும் மவரெல்லாம்
கரையா உருவாகிக் கலிவான் அடைவாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: கடற்கரையில் விளங்கும் நாகையில் காரோணத்தில் வீற்றிருக்கும் வெள்ளிடையானை ஏத்தி நவிலும் ஞானசம்பந்தன் தமிழ் மாலையாகிய இத் திருப்பதிகத்தைப் பாடுபவர்கள் அனைவரும்,

அழியாத வடிவுடைய அழகினராய் விளங்கி, மங்கல ஒலி முழங்கும் வானுலகை அடைவார்கள்.

85. திருநல்லம்

தல விளக்கம்: காவிரி தென்கரைத் தலம். கோனேரி ராஜபுரம் என வழங்கப்படுகிறது.

சுவாமி : உமாமகேஸ்வரர், பூமி நாதர்

அம்பிகை : தேக சௌந்தரி, மங்கள நாயகி

தல மரம் : அரசு

தீர்த்தம் : பிரம தீர்த்தம், சக்தி தீர்த்தம்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

915. **கல்லால் நிழல்மேய கறைசேர் கண்டா என்று**
எல்லா மொழியாலும் இமையோர் தொழு தேத்த
வில்லால் அரண்மூன்றும் வெந்துவிழ எய்த
நல்லா(ன்) நமையாள்வா(ன்) நல்ல நகரானே.

தெளிவுரை: "கல்லால மரநிழலில் தட்சணாமூர்த்தியாக அமர்ந்து உபதேசம் செய்த நீலகண்டப் பெருமானே!" என்று, எல்லா மொழியாலும் தேவர்கள் தொழுது ஏத்தி நிற்க, முப்புரங்களை எரித்துச் சாம்பலாகுமாறு செய்து மேருமலையை வில்லாகக் கொண்டு விளங்கும், எல்லோருக்கும் நல்லவனாகிய ஈசன், நம்மை ஆண்டு அருள்புரியும் நல்லம் என்னும் நகரை உடையவனே.

சிறப்புரை: ஈசன், பக்தி வலையில் படுவோனாகவும், சொற்பதம் கடந்த தூயோனாகவும் விளங்கும் தன்மை

யும், மனத்தைப் பல்வேறு திசைகளில் திரியவிடாது ஒருமுகப்படுத்தி வணங்குபவர்களுக்கு வெளிப்படு வனாகவும் விளங்குதல், எல்லா மொழியாலும் இமையோர் தொழுதேத்த என உணர்த்தப்பட்டது. இறைவன் மொழி பேதம் அற்றவன் என விளக்கப் பட்டது.

916. தக்கன் பெருவேள்வி தன்னில் அமரரைத்
துக்கம் பலசெய்து சுடர்பொற் சடைதாழக்
கொக்கின் னிறகோடு குளிர்வெண் பிறைசூடும்
நக்கன் நமையாள்வா னல்ல நகரானே.

தெளிவுரை: ஈசனைப் புறம்பாக வைத்து, தக்கன் செய்த யாகத்தில் பங்கேற்ற தேவர்களைத் தண்டித்து, பொன் சடை தாழ்ந்து விளங்கி இருக்க, கொக்கின் இறகும் வெண்பிறைச் சந்திரனும் சூடும் பெருமான், நம்மை எல்லாம் ஆட்கொண்டு அருள் புரிபவன். அவன் நல்லம் என்னும் நகரை உடையவன்.

917. அந்திமதி யோடும் அரவச் சடைதாழ
முந்தி அனலேந்தி முதுகாட்டு எரியாடி
சிந்தித்து எழவல்லார் தீரா வினை தீர்க்கும்
நந்தி நமையாள்வா னல்ல நகரானே.

தெளிவுரை: தேய்ந்த பிறைச் சந்திரனும் நாகமும், சடையில் விளங்க, நெருப்பைக் கரத்தில் ஏந்தி, மயானத்தில் நடம் புரிந்து சிந்தையால் தொழுது போற்றும் அடியவர்களுடைய தீராத வினை யாவும் தீர்க்கும் ஈசன், நம்மை ஆட்கொண்டு அருள்புரிபவன். அவன் நல்லம் என்னும் நகரில் விளங்குபவன்.

அந்திமதி – பிறைச் சந்திரன். நந்தி – சிவபெருமான்.

918. குளிரும் மதிசூடிக் கொன்றைச் சடைதாழ
மிளிரும் மரவோடு வெண்ணூல் திகழ் மார்பில்
தளிரும் திருமேனித் தையல் பாகமாய்
நளிரும் வயல்சூழ்ந்த நல்ல நகரானே.

தெளிவுரை: *குளிர்ந்த சந்திரனும் கொன்றையும் சடையில் விளங்க, மிளிர்ந்து விளங்கும் அரவமும் முப்புரிநூலும் திகழ் மார்பும், தளிர் போன்ற திருமேனி யுடைய உமாதேவியைப் பாகமாக உடையவன், தண்வயல் சூழ்ந்த நல்லம் என்னும் நகரத்தில் விளங்கும் ஈசன்.*

919. மணியார் திகழ்கண்டம் முடையான் மலர்மல்கு
பிணிவார் சடைஎந்தை பெருமான் கழல்பேணித்
துணிவார் மலர்கொண்டு தொண்டர் தொழுதேத்த
நணியான் நமையாள்வா னல்ல நகரானே.

தெளிவுரை: *நீலமணி போன்று திகழும் கண்டத்தை உடையவன்; மலர்கள் சூடி பிணித்துக் கட்டப்பட்ட நீண்ட சடையுடைய எந்தையாகிய பெருமான் ஆவர். அப்பெருமானைத் தெளிந்த மனத்தை உடைய தொண்டர்கள் மலர்கொண்டு கழல் பேணிப் போற்றித் தொழுது ஏத்த, நாடி வந்து நம்மை ஆட் கொண்டு அருள்புரிவான். அவன் நல்லம் என்னும் நகரில் வீற்றிருப்பவன்.*

கண்டம் முடையான்: கண்டம் உடையான் – சந்தம் நோக்கி மகரம் மிகுந்தது.

துணிதல் – தெளிதல். நணியான் – நண்ணியவன், நாடி வந்தவன்.

920. வாசம் மலர்மல்கு மலையான் மகளோடும்
பூசும் சுடுநீறு புனைந்தான் விரிகொன்றை
ஈசன் எனஉள்கி எழுவார் வினைகட்கு
நாசன் நமையாள்வா னல்ல நகரானே.

தெளிவுரை: வாசம் பொருந்திய மலர்கள் பெருகும் மலையான் மகளாகிய உமாதேவியை ஒரு பாகம் கொண்டு திருநீற்றை அழகாகத் தரித்து, விரிந்த கொன்றை மலரைச் சூடிய ஈசன், தன்னை நினைத்து வணங்குபவர்களுக்கு வினை நாசன் ஆகுபவன். அப்பெருமான் நம்மை ஆட்கொண்டு அருள் புரிபவன். அவன் நல்லம் எனும் நகரத்தில் விளங்கு பவன்.

புனைதல் – அழகாகத் தரித்தல்.

921. அங்கோல் வளைமங்கை காண அனலேந்திக்
கொங்கார் நறுங்கொன்றை சூடிக் குழகாக
வெங்காடு இடமாக வெந்தீ விளையாடும்
நங்கோ(ன்) நமையாள்வா(ன்) நல்ல நகரானே.

தெளிவுரை: அழகிய வளையலை யணிந்த உமாதேவி கண்டு மகிழுமாறு, நெருப்பைக் கையில் ஏந்தி, தேன் சொரியும், வாசனைமிக்க கொன்றை மலர் சூடி, இளமை யழகு பொலிய, சுடுகாட்டில் ஊழித்தீயின் விளையாட்டை நிகழ்த்தும் நம் தலைவன், நம்மை ஆட் கொண்டு அருள்புரிபவன். அவன் நல்லம் என்னும் நகரில் விளங்குபவன்.

அங்கோல்வளை – அழகிய வளையில். கொங்கு – தேன். குழகு – இளமையழகு.

922. பெண்ணார் திருமேனிப் பெருமான் பிறைமல்கு
கண்ணார் நுதலின் கயிலை கருத்தினால்
எண்ணாது எடுத்தானை இறையே விரலூன்றி
நண்ணார் புரம்எய்தா(ன்) நல்ல நகரானே.

தெளிவுரை: உமாதேவியைப் பாகமாகத் திருமேனியில் கொண்டுள்ள பெருமான், பிறை சூடிய நெற்றியை

உடையவன்; கருத்து இன்றிக் கயிலையை எடுத்த இராவணனை, ஒரு நொடிப்போதில் விரலை ஊன்றி அடக்கியன்; அப்பெருமான், பகைவராய்த் திரிந்த முப்புராரிகளை எரித்று அழித்த நல்லம் என்னும் நகரத்தினன்.

இறை – நொடிப் பொழுது.

923. நாகத்து அணையானு நளிர்மா மலரானும்
போகத்து இயல்பினால் பொலிய அழகாகும்
ஆகத் தவளோடும் அமர்ந்துஅங்கு அழகாரும்
நாகம் மரையார்த்தா னல்ல நகரானே.

தெளிவுரை: நாகத்தை அணையாகக் கொண்டு பாற்கடலில் பள்ளிகொள்ளும் திருமாலும், குளிர்ச்சியான தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் பிரமனும் போகத்தில் பொலிவடைந்து இருத்தலை யொட்டி உமா தேவியைப் பாகமாகக் கொண்டு, அழகிய நாகத்தை அரையில் கட்டி மகிழ்ந்தவன் நல்லம் என்னும் நகரில் வீற்றிருக்கும் ஈசன்.

சிறப்புரை: உமாதேவியைப் பாகங்கொண்டு ஈசன் மேவி விளங்காதிருப்பின், மன்னுயிர்கள் யோகத்தில் மூழ்குவர் என்பதும், ஈசன் ஒருவனே முழுமுதற் கடவுள் என்பதும், திருமால் மற்றும் பிரமன் முதலானோர் புண்ணியத்தின் பயனாக வகிக்கப் பெறும் பதவிகள் ஆயினமையும், இவண் உணர்த்தப் பெற்றன. "பெண்பால் உகந்திலனேல், நோய் இரு நிலத்தோர் விண்பால் யோகு எய்தி வீடுவர் காண் சாழலோ," என மாணிக்கவாசகர் உரைப்பதும் உன்னற்பாலது.

மரையார்த்தான் – அரை ஆர்த்தான் – சந்தம் நோக்கி மகரம் மிகுந்தது.

924. குறியில் சமணோடு குண்டர் வண்தேரர்
அறிவில் லுரைகேட்டு அங்கு அவமே கழியாதே
பொறிகொள் ளரவுஆர்த்தான் பொல்லா வினைதீர்க்கும்
நறைகொள் பொழில்சூழ்ந்த நல்ல நகரானே.

தெளிவுரை: குறிக்கோள் இல்லாத சமணர்களும் தேரர்களும் கூறும் உரைகளை ஏற்காது, அரவத்தை அணியாகக் கொண்டுள்ள ஈசன், வினை தீர்ப்பவன்; பொழில் சூழ்ந்த நல்லம் எனும் நகரத்தில் வீற்றிருப்பவன்.

925. நலமார் மறையோர் வாழ் நல்ல நகர்மேய
கொலைசேர் மழுவானைக் கொச்சை அமர்ந்தோங்கு
தலமார் தமிழ்ஞான சம்பந் தன்சொன்ன
கலைகள் இவைவல்லார் கவலை கழிவாரே.

தெளிவுரை: வேதங்களை நன்கு கற்றுத் தேர்ந்து வேள்விகள் செய்து நலம் பரப்பும் மறையவர்கள் வாழ்கின்ற நல்லம் என்னும் நகரில் மேவிய, மழுப் படையேந்திய ஈசனை, காழிப்பதியில் திகழும் ஞானசம்பந்தன், கருதிச் சொன்ன சாத்திரக் கலைபோன்ற இத்திருப் பதிகத்தை உரைப்பவர்கள், கவலை யற்றவராவர்.

கொச்சை – சீகாழி.

86. திருநல்லூர்

தல விளக்கம்: காவிரி தென்கரைத் தலம். கோச் செங்கட் சோழனால் கட்டப்பட்ட மாடக் கோயில். திருநாவுக் கரசருக்குத் திருவடி சூட்டிய தலம். அமர்நீதி நாயனாரை ஆட்கொண்ட திருத்தலம்.

பிருங்கி முனிவர், வண்டு வடிவம் தாங்கி வழிபட்டது. அகத்திய முனிவருக்குத் திருமணக் கோலக் காட்சி வழங்கியது.

கயிலையில் இருந்து வாயுவால் கொண்டு வந்த சிகரமே கோயிலாக உள்ளது. இது சுந்தரகிரி, தென் கயிலாயம் என வழங்கப்படுகிறது.

சுவாமி : பெரியாண்டேஸ்வரர், கல்யாண சுந்தரேஸ்வரர், பஞ்சவர்ணேஸ்வரர்

அம்பிகை : பர்வத சுந்தரி, கல்யாண சுந்தரி

தலமரம் : வில்வம்

தீர்த்தம் : சப்ரசாகர தீர்த்தம்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

926. கொட்டும் பறைசீராற் குழும அனலேந்தி
நட்டம் பயின்றாடும் நல்லூர்ப் பெருமானை
முட்டின்று இருபோது முனியாது எழுந்துஅன்பு
பட்ட மனத்தார்கள் அறியார் பாவமே.

தெளிவுரை: கொட்டும் பறைக்கு ஏற்றாற் போன்று அனலைக் கையில் ஏந்திச் சீராக நடனம் ஆடுகின்ற நல்லூர்ப் பெருமானை, காலை மாலை ஆகிய இரு காலங்களிலும் தடை இல்லாது, அன்பு பொருந்திய நெஞ்சினராய் வழிபடுகின்றவர்களுக்குப் பாவம் இல்லை.

அன்புபட்ட – அன்பு கொண்ட.

927. ஏறில் எருதேறும் எழிலாய் இழையோடும்
வேறும் முடனுமாம் விகிர்தர் அவர்என்ன

நாறும் மலர்ப் பொய்கை நல்லூர்ப் பெருமானைக்
கூறும் மடியார்கட்கு அடையா குற்றமே.

தெளிவுரை: *எருது வாகனம் அன்றி வேறு எதிலும் வாகனமாகக் கொள்ளாது, உமாதேவியுடனாகி அர்த்தநாரியாயும், வேறாயும் விளங்கும் விகிர்தராகிய ஈசன் வாசம் பொருந்திய பொய்கைசேர் நல்லூரில் விளங்கும் பெருமானே என்று கை தொழுது போற்றும் அடியவர்களுக்குக் குற்றங்கள் சாராது.*

முடனுமாம் – உடனும் ஆம்.

928. சூடும் இளந்திங்கள் சுடர்பொன் சடைதாழ
ஓடுஉண் கலனாக ஊர்இடு பிச்சை
நாடும் நெறியானை நல்லூர்ப் பெருமானைப்
பாடும் மடியார்கட்கு அடையா பாவமே.

தெளிவுரை: *இளைய பிறைச் சந்திரனைச் சூடி, பொன் போன்ற சடை விரிந்து தாழ, பிரம கபாலம் ஏந்தி ஊர் இடுகின்ற பிச்சையை நாடும் நெறியுடைய நல்லூர்ப் பெருமானை, பக்தியால் பாடிப் போற்றும் அடியவர்களுக்கு, பாவம் சாராது.*

மடியார் – அடியார்:

929. நீத்த நெறியானை நீங்காத் தவத்தானை
நாத்த நெறியானை நல்லூர்ப் பெருமானைக்
காத்த நெறியானைக் கைகூப்பித் தொழுது
ஏத்தும் அடியார்கட்கு இல்லை இடர்தானே.

தெளிவுரை: *பந்த பாசங்களிலிருந்து நீத்து விளங்கும் தனித்துள்ள நெறியுடையவன், தவத்தினின்று நீங்காத் தன்மையன், உலகுக்குப் பொருந்திய நெறியினை வகுத்து, அந்நெறியாக விளங்குபவன் நல்லூரில் விளங்கும் ஈசன். உயிர்களைக் காத்தருளும் நெறி*

யுடைய அப்பெருமானைக் கைகளால் கூப்பித் தொழும் அடியவர்களுக்கு இடர் இல்லை.

சிறப்புரை: கைகளால் ஈசனை வணங்கித் தொழ வேண்டும் என்பதனை, "கைகாள் கூப்பித் தொழீர் - கடிமாமலர் தூவி நின்று, பைவாய்ப் பாம்பு அரை ஆர்த்த பரமனைக் கைகாள் கூப்பித் தொழீர்" என வரும் திருநாவுக்கரசர் வாக்கும் கொண்டு மகிழ்க.

நாத்த – ஞாத்த – பொருந்த, கட்டுப்பட்ட.

930. ஆகத்து உமைகேள்வன் அரவச் சடைதாழ
நாகம் அசைத்தானை நல்லூர்ப் பெருமானைத்
தாகம் புகுந்துஅண்மித் தாள்கள் தொழும்தொண்டர்
போக மனத்தராய்ப் புகழத் திரிவாரே.

தெளிவுரை: தனது உடம்பில் ஒரு கூறாகிய உமாதேவிக்குத் துணைவனாகிய ஈசன், அரவம் சடையில் தாழ்ந்து அசைய நல்லூரில் வீற்றிருக்க, மிக்க ஆர்வம் கொண்டு நாடித் திருவடியைத் தொழும் தொண்டர்கள் போகம் கொண்டு மகிழ்ந்து புகழுடன் விளங்குவார்கள்.

ஆகம் – உடம்பு.

931. கொல்லும் களியானை உரிபோர்த்து உமைஅஞ்ச
நல்ல நெறியானை நல்லூர்ப் பெருமானைச்
செல்லு நெறியானைச் சேர்ந்தார் இடர்தீரச்
சொல்லும் அடியார்கள் அறியார் துக்கமே.

தெளிவுரை: உமாதேவி அஞ்சுமாறு, கொல்லும் நோக்கத்துடன் வந்த மதங்கொண்ட யானையின் தோலை உரித்துப் போர்த்து, நன்னெறியாகிய முத்தி வழங்கும் நல்லூர்ப் பெருமானையே அந்நெறியாகக் கொண்டு, அவன் திருவடியினைச் சிந்தித்துத் துதிக்கும்

அடியவர்களுக்குத் துக்கம் இல்லை; துன்பமும் இல்லை. இம்மையில் துன்பமற்ற நிலையும், மறுமையில் முத்திப் பேறும் ஆகும் என்பதாம்.

932. எங்கள் பெருமானை இமையோர் தொழுதேத்தும்
நங்கள் பெருமானை நல்லூர் பிரிவில்லாத்
தங்கை தலைக்கேற்றி ஆள்என்று அடிநீழல்
தங்கு மனத்தார்கள் தடுமாற்று அறுப்பாரே.

தெளிவுரை: எங்கள் பெருமான், தேவர்களால் தொழப் பெறும் பெருமான்; நல்லூரில் எக்காலத்திலும் நீங்காது விளங்கும் பெருமான்; தமது கைகளைத் தலைமேல் ஏற்றித் தூக்கி, அப்பெருமானுக்கு ஆட்படும் அடியவராய், திருவடி நிழலில் தங்கும் திருத் தொண்டர்கள், மனத் தடுமாற்றம் அற்றவர்களாய் உறுதியுடன் விளங்குவார்கள்.

சிறப்புரை: கைகளைத் தலைமேல் வைத்துக் கூப்பித் தொழும் தன்மையினை, "உன் விரையார் கழற்கு என்கை தான் தலைவைத்துக் கண்ணீர்ததும்பி," என வரும் மாணிக்கவாசகர் உரைக்கும் மாண்பும் நோக்குக.

933. காமன் எழில்வாட்டிக் கடல்சூழ் இலங்கைக் கோன்
நாமம் இறுத்தானை நல்லூர்ப் பெருமானை
ஏம மனத்தாராய் இகழாது எழும்தொண்டர்
தீப மனத்தார்கள் அறியார் தீயவே.

தெளிவுரை: மன்மதனுடைய அழகைத் தீய்த்து, கடல் சூழ்ந்த இலங்கையின் தலைவனாகிய இராவண னுடைய பெயரைக் களங்கம் உறுமாறு அடர்த்து, நல்லூரில் வீற்றிருக்கும், ஈசனை, இகழ்ந்து கூறாது, இன்ப மனத்தோடு துதித்துப் போற்றும் தொண்டர்கள்,

ஒளி பெறும் மனத்தினராய் விளங்கி தீமையற்ற வராய் இருப்பார்கள்.

சிறப்புரை: ஈசனைத் தியானம் செய்தால் உண்டாகும் இன்பம் "ஏம மனத்தாராய்" ஆகுதலையும், அவற்றால் உண்டாகும் தெளிவும், ஞானமும், "தீப மனத்தாராய்" விளங்குதலாம்.

ஏமம் – இன்பம்.

934. வண்ண மலரானும் வையம் அளந்தானும்
நண்ணல் அரியானை நல்லூர்ப் பெருமானைத்
தண்ண மலர்தூவித் தாள்கள் தொழுதேத்த
எண்ணும் அடியார்கட்கு இல்லை இடுக்கணே.

தெளிவுரை: மலரோனாகிய பிரமனும், உலகம் அளந்த திருமாலும் நண்ணுவதற்கு அரிய நல்லூரில் விளங்கும் ஈசனை, மலர்கள் கொண்டு தூவித் திருவடியைத் தொழுது போற்ற நினைக்கும் அடியவர்களுக்குத் துன்பம் இல்லை.

சிறப்புரை: தொழுது ஏத்த எண்ணுதல் தொழுது போற்றும் செயலுக்கு வித்தாதலைக் குறித்து உணர்த்திற்று. "எண்ணி இருந்து கிடந்து நடந்தும் அண்ணல் எனா நினைவார் வினை தீர்ப்பார்," எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் உரைப்பதும் நோக்குக.

935. பிச்சக் குடைநீழற் சமணர் சாக்கியர்
நிச்சம் அலர்தூற்ற நின்ற பெருமானை
நச்சு மிடற்றானை நல்லூர்ப் பெருமானை
எச்சும் அடியார்கட்கு இல்லை இடர்தானே.

தெளிவுரை: சமணர்களும் சாக்கியர்களும் நாள்தோறும் பழிச் சொற்களைக் கூறித் தூற்றி நின்றாலும், நிலைத்து

நின்ற ஈசனை, நஞ்சினை மிடற்றில் கொண்ட நல்லூர்ப் பெருமானை, உயர்வாகக் கொள்ளும் அடியவர்களுக்கு இடர் இல்லை.

நிச்சம் – நித்தம், நாள்தோறும். எச்சு – உயர்வு.

936. தண்ணம் புனல்காழி ஞான சம்பந்தன்
நண்ணும் புனல்வேலி நல்லூர்ப் பெருமானை
வண்ணம் புனைமாலை வைகல் ஏத்துவார்
விண்ணும் நிலனுமாய் விளங்கும் புகழாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: தண்மையான நீர்சூழ்ந்த காழியின் ஞான சம்பந்தன், நண்ணி நீர்சூழ்ந்த நல்லூரில் விளங்கும் ஈசனைப் போற்றி அழகாகப் புனைந்த சொல் மாலையாகிய இத் திருப்பதிகத்தை ஏத்தி உரைப்பவர்கள் நில உலகத்திலும் விண்ணுலகத்திலும் புகழுடன் விளங்குவார்கள்.

வண்ணம் புனை மாலை – அழகிய சிறப்புகளைக் கூறிய தமிழ்ப்பதிகம். வைகல் – தினந்தோறும்.

87. திருவடுகூர்

தல விளக்கம்: நடுநாட்டுத் தலம். திருவாண்டார் கோயில் என வழங்கப்படுகிறது. வடுக பைரவர் முண்டகன் என்னும் அசுரனைக் கொன்ற பழி தீர வழிபட்ட தலம். இறைவனின் அறுபத்து நான்கு வடிவங்களுள் எட்டு வடுக பைரவக் கோலம் அடங்கும். அவை: 1. அசிதாங்க பைரவர்; 2. குருபைரவர்; 3. சண்ட பைரவர்; 4. குரோத பைரவர்; 5. உன்மத்த பைரவர்; 6. கபாலி பைரவர்; 7. பீஷண பைரவர்; 8. சம்மார பைரவர் (வடுக பைரவர்).

சுவாமி : வடுக நாதர்

அம்பிகை : வடுவகிர்க் கண்ணி, திரிபுரசுந்தரி

தல மரம் : வன்னி

தீர்த்தம் : வாமதேவ தீர்த்தம்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

937. சுடுகூர் எரிமாலை அணிவர் சுடர்வேலர்
கொடுகூர் மழுவாள் ஒன்று உடையார் விடையூர்வர்
கடுகூர் பசிகாமம் கவலை பிணியில்லார்
வடுகூர் புனல்சூழ்ந்த வடுகூர் அடிகளே.

தெளிவுரை: ஈசன் சுடுகின்ற எரியை அணிபவர், கொடிய கூர்மையான மழுப்படையேந்தியவர், இடப வாகனத்தில் ஊர்பவர். கடுமையான பசி, காமம், மனக்கவலை முதலான பிணிகள் இல்லாதவர். கரிய நுண்ணிய மணலில் நீர் சூழ்ந்த வடுகூரில் விளங்கும் அடிகள் ஆவர்.

வடுகூர் புனல் – கரியநொய் மணலில் நீர் சூழ்ந்த தன்மை.

938. பாலும் நறுநெய்யும் தயிரும் பயின்றுஆடி
ஏலும் சுடுநீறும் என்பும் ஒளிமல்கக்
கோலம் பொழிற்சோலைக் கூடி மடவன்னம்
ஆலும் வடுகூரில் ஆடும் மடிகளே.

தெளிவுரை: பால், நெய், தயிர் ஆகியவற்றைப் பூசனைப் பொருள்களாக ஏற்று மகிழ்ந்து ஆடி, எலும்பு மாலையும், மணம் பொருந்திய திருவெண்ணீறும் கொண்டு, ஒளி மல்கும் அழகிய திருக்கோலத்தில், சோலைகளில் அன்னப் பறவைகள் மகிழ்ந்து ஒலி செய்யும் வடுகூரில் ஈசன் நடம்புரிபவர்.

ஏலும் – மணம் பொருந்திய. கோலம் – அழகு. ஆலும் – ஒலிக்கும்.

939. சூடும் இளந்திங்கள் சுடர்பொன் சடைதன்மேல்
ஓடும் களியானை உரிபோர்த்து உமையஞ்ச
ஏடு மலர்மோந்தங்கு எழிலார் வரிவண்டு
பாடும் வடுகூரில் ஆடும் மடிகளே.

தெளிவுரை: *சுடர்கின்ற பொன்போன்று விளங்கும் சடையில் பிறைச் சந்திரனைச் சூடி, உமையவள் அஞ்சுமாறு ஓடி வந்த மதயானையின் தோலை உரித்துப் போர்த்து, இதழ்கள் விரிந்த மலர்களை, அழகிய வண்டுகள் முகர்ந்து ரீங்காரம் செய்யும் வடுகூரில் ஈசன் நடம் புரிபவர்.*

940. துவரும் புரிசையும் துதைந்த மணிமாடம்
கவர வெரி யோட்டிக் கடிய மதில்எய்தார்
கவரு மணிகொல்லைக் கடிய முலைநல்லார்
பவரும் வடுகூரில் ஆடும் மடிகளே.

தெளிவுரை: *நவமணிகள் விளங்கும் வாசனை மலர்கள் சூழும் முல்லை நிலத்தில், மகளிர் விளங்கித் திகழும் வடுகூரில், ஆடல்புரியும் அடிகளாகிய ஈசன், துவர்வண்ணத்தில் மதில்கள்களும் மாடங்களும் கவருமாறு மும்மதில்களை எரித்தவர்.*

941. துணியார் உடையாடை துன்னி அரைதன்மேல்
தணியா அழல்நாதம் தரியாவகை வைத்தார்
பணியார் அடியார்கள் பலரும் பயின்றேத்த
அணியார் வடுகூரில் ஆடும் அடிகளே.

தெளிவுரை: *கிழிந்த துணியாகிய கோவணத்தை, ஆடையாக உடுத்தி, அரையில் நாகத்தைத் தரித்து, பணி செய்யும் அடியவர்கள் பலர் வணங்கிப் போற்ற, அழகிய வடுகூரில் ஈசன் நடம் புரிபவர்.*

942. தளரும் கொடியன்னாள் தன்னோடு உடனாகிக்
கிளரும் அரவுஆர்த்துக் கிளரு முடிமேலோர்
வளரும் பிறைசூடி வரிவண்டு இசைபாட
ஒளிரும் வடுகூரில் ஆடும் அடிகளே.

தெளிவுரை: இளமையான கொடிபோன்ற உமா தேவியை உடனாகக் கொண்டு, கிளர்ந்து எழும் அரவத்தை முடிமேலே வைத்துப் பிறை சூடி, வரி வண்டுகள் இசை பாடும் வடுகூரில் ஈசன் நடம் புரிபவர்.

943. நெடியர் சிறிதாய நிரம்பா மதிசூடும்
முடியர் விடையூர்வர் கொடியர் மொழிகொள்ளார்
கடிய தொழிற்காலன் மடிய உதைகொண்ட
அடியர் வடுகூரில் ஆடும் மடிகளே.

தெளிவுரை: நெடிது ஓங்கியவர், சிறிய இளம்பிறைச் சந்திரனைச் சூடியவர், இடப வாகனத்தில் அமர்பவர், கொடிய சொற்களால் கூறப்படும் பழிச் சொற்களை ஏற்காதவர், கடுமையான தொழிலுடைய காலன் மடியுமாறு உதைத்த பாதத்தை உடையவர், வடுகூரில் வீற்றிருந்து நடம் புரியும் ஈசர்.

944. பிறையு நெடுநீரும் பிரியா முடியினார்
மறையும் பலபாடி மயானத்து உறைவாரும்
பறையும் அதிர்குழலும் போலப் பலவண்டுஆங்கு
அறையும் வடுகூரில் ஆடும் மடிகளே.

தெளிவுரை: பிறைச் சந்திரனும் கங்கையும் நீங்காது சூடிய முடியுடையவர், வேதமும் ஓதி, மயானத்தில் உறைந்து, யாழ் ஒலி போன்று ஒலிக்கும் வண்டுகள் சூழும் வடுகூரில் நடம் புரியும் அடிகளாவர், ஈசன்.

945. சந்தம் மலர்வேய்ந்த சடையின் னிடைவிம்மு
கந்தம் மிகுதிங்கள் சிந்து கதிர்மாலை
வந்து நயந்துஎம்மை நன்று மருள்செய்வார்
அந்தண் வடுகூரில் ஆடும் மடிகளே.

தெளிவுரை: *அழகிய மலர்கள் சூடிய சடையின் இடையில், அந்த மணத்தையுடைய சந்திரன் உதிர்க்கும் கதிர் அலைகள் விரும்பி வந்து நல்லருள் புரியுமாறு செய்பவர், அழகிய குளிர்ச்சி பொருந்திய வடுகூரில் நடம்புரியும் அடிகளாகிய ஈசன்.*

சிறப்புரை: *சந்திரனது அமுததாரைகள் ஈசன் அருளால் பொழிந்து வளமை புரிதல் இவண் உணர்த்தப் பெற்றது. அவ் அமுததாரைகளால் மயக்கம் உற்ற நிலையில் மயங்கி விளங்கும் தன்மையும் கொள்ளுதல் பொருந்தும்.*

சந்தம் – அழகு. நன்று மருள்வார் – நன்றும் அருள்வார், நன்று மருள்வார் (மருள் – மருட்சி, மயக்கம்).

946. திருமால் அடிவீழத் திசைநான் முகனாய
பெருமான் உணர்கில்லாப் பெருமா(ன்) நெடுமுடிசேர்
செருமால் விடையூரும் செம்மான் திசைவில்லா
அருமா வடுகூரில் ஆடும் மடிகளே.

தெளிவுரை: *திருமாலும் பிரமனும் உணர்வதற்கு அரிய பெருமான், மால் விடையூர்ந்து செல்லும் செம்மை யுடையவன் ஆகிய ஈசன், எல்லாத் திசைகளிலும் ஒளி பரவும் சிறப்புடைய வடுகூரில் நடம்புரியும் அடிகள் ஆவார்.*

வில் – ஒளி.

947. படிநோன்பு அவையாவர் பழியில் புகழான
கடி நாள்திகழ் சோலை கமழும் வடுகூரைப்

படியா னசிந்தை மொழிஆர் சம்பந்தன்
அடிஞா னம்வல்லார் அடிசேர் வார்களே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *உலகத்தில் நோற்கப்படும் விரதங்கள் யாவும் ஆகியவர், பழியில்லாத புகழுடன், நறுமணம் கமழும் சோலைசூழ் வடுகூரில் விளங்க, சிந்தை பதித்து ஒருமைகொண்டு பாடிய, ஞானசம்பந்தன் திருப்பதிகத்தைப் பாட வல்லவர்கள், ஈசன் திருவடியான முத்தி நலம் அடைந்து, பேரின்பத்தில் திளைத்து மகிழ்ந்திருப்பார்கள்.*

படிநோன்பு – உலகில் உள்ள நோன்பு வகைகள். கடி – நறுமணம். படியான சிந்தை – சிந்தை ஒன்றி. அடிஞானம் – திருப்பதிகம் ஓதுதல்.

88. திருஆப்பனூர்

தல விளக்கம்: *பாண்டிய நாட்டுத் தலம். ஆப்புடையார் கோயில் என வழங்கப்படுகிறது. ஆற்று மணலை அன்னமாக மாற்றிய தலம்.*

சுவாமி : *ஆப்புடையார், அன்னவிநோதர், இடபுரேசர்*

அம்பிகை : *குரவங்கமழ் குழலி*

தீர்த்தம் : *இடப தீர்த்தம், வைகை*

பண் : *குறிஞ்சி*

திருச்சிற்றம்பலம்

948. முற்றும் சடைமுடிமேல் முதிரா இளம்பிறையன்
ஒற்றைப் படஅரவம் அதுகொண்டு அரைக் கணிந்தான்
செற்றமில் சீரானைத் திருஆப்ப னூரானைப்
பற்று மனம்உடையார் வினைபற்று அறுப்பாரே.

தெளிவுரை: முதிர்ந்த சடைமுடியின் மீது, முதிராத இளைய பிறைச் சந்திரனைச் சூடி, படம் கொண்டு விளங்கும் அரவத்தை அரையில் அணிந்து சினம் அற்றவனாகி, சிறப்புடைய திருஆப்பனூரில் வீற்றிருக்கும் ஈசனை, பற்றுதல் கொண்டு வணங்கும் மனம் உடையவர்கள், வினையும் பற்றும் அற்றவர்கள் ஆவார்கள்.

சிறப்புரை: பற்று விடற்கு பற்றற்றவனாகிய ஈசனைப் பற்ற வேண்டும் என்பது இவண் உணர்த்தப் பெற்றது. ஈசன், வினையும் வினை உண்டாவதற்குக் காரணமாகிய பற்றும் தீர்ப்பவர் என உணர்த்துதல் காண்க. பற்றி நிற்கும் வினை தீர்ப்பவன் ஈசன் எனலும் பொருந்தும்.

முற்றும் – முதிர்ந்த. சடைமுடியே முற்றுமாக உள்ள ஈசன் என்பதனைச் "சடை ஒன்பது கொலாம்" எனத் திருநாவுக்கரசர் வாக்காலும் கொள்க.

949. குரவம் கமழ் குழலாள் குடிகொண்டு நின்றுவிண்ணோர்
விரவும் திருமேனி விளங்கும் வளைஎயிற்றின்
அரவம் அணிந்தானை அணிஆப்ப னூரானைப்
பரவு மனம்உடையார் வினைபற்று அறுப்பாரே.

தெளிவுரை: குரவம்கமழ் குழலி என்னும் திருநாமம் கொண்ட உமாதேவி வீற்றிருக்க, உடனாகி வளைந்த பல்லையுடைய பாம்பினை அணிந்து, ஆப்பனூரில் விளங்கும் ஈசனைப் போற்றித் துதிப்பவர்கள், வினையும் பற்றும் அற்றவர்கள் ஆவார்கள்.

குரவங்கமழ் குழலாள் – இத்திருத்தலத்தில் வீற்றிருக்கும் அம்பிகையின் திருநாமம்.

950. முருகு விரிகுழலார் மனங்கொள் அநங்கனைமுன்
பெரிது முனிந்துகந்தான் பெருமான் பெருங்காட்டின்
அரவம் அணிந்தானை அணிஆப்ப னூரானைப்
பரவு மனம்உடையார் வினைபற்று அறுப்பாரே.

தெளிவுரை: *அழகிய மணம் வீசும் கூந்தலை யுடைய பெண்கள் மனத்தைக் கொள்ளை கொள்ளும் மன்மதனை, முன்னர் சினந்து எரித்துச் சாம்பலாக்கிப் பின்பு உயிர் பெற்று எழுமாறு செய்த ஈசன், சுடுகாட்டில் அரவம் அணிந்து விளங்கி, ஆப்பனூரில் வீற்றிருக்க, அப் பெருமானைத் துதிப்பவர்கள், வினையும் பற்றும் நீங்கியவர்கள் ஆவார்கள்.*

அநங்கன் – மன்மதன்.

951. பிணியும் பிறப்புஅறுப்பான் பெருமான் பெருங்காட்டில்
துணியின் உடைதாழச் சுடரேந்தி ஆடுவான்
அணியும் புனலானை அணிஆப்ப னூரானைப்
பணியு மனம் உடையார் வினைபற்று அறுப்பாரே.

தெளிவுரை: *பிணிக்கப்படும் பிறப்பிலிருந்து விடுவித்து மீண்டும் பிறவாத நிலையை அளிக்கும் பெருமான், சுடுகாட்டில் கோவண ஆடை கொண்டு, தீ அனலைக் கரத்தில் ஏந்தி ஆடுபவன், அப்பெருமான் கங்கையைச் சடையில் தரித்து, அழகிய ஆப்பனூரில் வீற்றிருக்கின்றான். அவனைப் பணிபவர்கள் வினையும் பற்றும் அற்றவர்களாவார்கள்.*

சிறப்புரை: *பிறப்பிற்குக் காரணமாகிய பிணி தீர்த்தலும், பிணிக்கப்படும் பிறவியின் துன்பத்தைத் தீர்த்தலும், இம்மையில் உடலில் தோன்றும் பிணியும், மீளவும் பிறவா நிலையை அளிப்பவனும் உடையவன் ஈசன் எனும் பொருள் தோன்ற, "பிணியும் பிறப்பறுப்பான்*

பெருமான்'' என உணர்த்தப்பட்டது. இதனைப் பிணியும் பிறப்பும் அறுப்பான் எனலும் பொருந்தும்.

952. தகரம் அணியருவித் தடமால் வரைசிலையா
நகரம் ஒருமூன்று நலங்குன்ற வென்றுகந்தான்
அகர முதலானை அணியாப்ப னூரானைப்
பகரு மனமுடையார் வினைபற்று அறுப்பாரே.

தெளிவுரை: *மயிர்ச்சாந்து அணிகொளும் பெரிய மலையாகிய மேருவை வில்லாகக் கொண்டு, மும்மதில்களை எரித்து வெற்றிகொண்டு, அகரமாக விளங்கி, எழுத்துக் கெல்லாமும், ஒலிக்கெல்லாமும் ஆதாரமாகிய முதற் பொருளாய் உள்ளவன், அழகிய ஆப்பனூரில் வீற்றிருப்பவனாகிய ஈசன். அப்பெருமானைத் தியானித்து வணங்குபவர்கள் வினையும் பற்றும் அற்றவர்கள் ஆவார்கள்.*

தகரம் – மயிர்ச் சாந்து.

953. ஓடும் திரிபுரங்கள் உடனே உலந்து அவியக்
காடது இடமாகக் கனல்கொண்டு நின்றுஇரவில்
ஆடும் தொழிலானை அணி ஆப்ப னூரானைப்
பாடு மனம்உடையார் வினைபற்று அறுப்பாரே.

தெளிவுரை: *ஓடி, இறக்கைகள் கொண்டு பறந்து திரியும் மாயங்களையுடைய மூன்று புரங்களை விரைவில் எரிந்து சாம்பலாகுமாறு செய்து, சுடுகாட்டை இடமாகக் கொண்டு, கையில் நெருப்பு ஏந்தி, இரவில் நடனம் புரியும் தொழில் உடையவன், ஈசன். அப் பெருமான் அழகிய ஆப்பனூரில் வீற்றிருக்க, அவனை வணங்கிப் பாடித் துதிக்கும் சிறப்புடையவர்கள், வினையும் பற்றும் அற்றவர்கள் ஆவார்கள்.*

954. இயலும் விடையேறி எரிகொள் மழுவீசிக்
கயலின் இணைக் கண்ணாள் ஒருபால் கலந்துஆட
இயலும் இசையானை எழில்ஆப்ப னூரானைப்
பயிலு மனம்உடையார் வினைபற்று அறுப்பாரே.

தெளிவுரை: ஈசனார் திருமனம் கொள்ளும் வகையில் இயங்கும் இடப வாகனத்தில் ஏறி, எரியைப் போன்ற ஒளிதரும் மழுப்படையை வீசி, கயல் போன்ற கண்ணையுடைய உமாதேவி ஒரு பக்கம் இணைந்து ஆடும் தன்மையுடையவன், எழில் கொண்ட ஆப்பனூரில் வீற்றிருப்பவன். அப்பெருமானை வணங்கும் மனத்தினர்க்கு, வினையும் பற்றும் அறுந்தொழியும்.

பயிலும் – நாள்தோறும் நாடிச் சென்று வணங்கும்.

955. கருக்கு மணிமிடறன் கதநாகக் கச்சையினான்
உருக்கும் அடியவரை ஒளிவெண் பிறைசூடி
அரக்கன் திறல்அழித்தான் அணிஆப்ப னூரானைப்
பருக்கு மனம்உடையார் வினைபற்று அறுப்பாரே.

தெளிவுரை: கரிய கண்டத்தை உடையவன்; சினம் கொண்ட நாகத்தை அரையில் கட்டியவன்; ஒளி மிக்க வெண்பிறை சூடி அடியவர்கள் பக்தியால் உருகி நிற்குமாறு செய்பவன்; இராவணனுடைய திறனை அழித்தவன் ஈசன். அப்பெருமான், அழகிய ஆப்பனூரில் வீற்றிருக்க, அவனை உள்ளத்தால் பருகி மகிழும் அடியவர்கள், வினையும் பற்றும் அற்றவர்கள் ஆவார்.

956. கண்ணன் கடிக்கமல மலர்மேல் இனிதுறையும்
அண்ணற்கு அளப்பரிதாய் நின்றுஅங்கு அடியார்மேல்
எண்ணில் வினைகளைவான் எழில்ஆப்ப னூரானைப்
பண்ணின் னிசைபகர் வார் வினைபற்று அறுப்பாரே.

தெளிவுரை: திருமாலும், திருமாலின் உந்திக் கமலத்தில் இனிது உறையும் பிரமனும், அளப்பரியவாறு ஓங்கி, சோதிப் பிழம்பாகி நின்று, அடியவர்களிடம் பற்றி யுள்ள எண்ணற்ற வினைச் சுமைகளைக் களைகின்ற, எழில் மிக்க ஆப்பனூரில் வீற்றிருக்கும் ஈசனை, பண் சேர்ந்த இசைகொளும், பக்திப் பாடல்களைக் கூறிப் போற்றும் அடியவர்கள் வினையும் பற்றும் அற்றவர் ஆவார்.

கண்ணன் – திருமால். அண்ணல் – பிரமன்.

957. செய்ய கலிங்கத்தார் சிறுதட்டு உடையார்கள்
பொய்யர் புறங்கூறப் புரிந்த அடியாரை
ஐயம் அகற்று வான் அணிஆப்ப னூரானைப்
பைய நினைந்தெழுவார் வினைபற்று அறுப்பாரே.

தெளிவுரை: சிவந்த காவித் துணியும், தட்டும் உடைய வர்கள் பொய்ம்மை கூற, தன்னை நன்கு புரிந்த அடியார்களின் சந்தேகங்களை நீக்கி அருள் புரிபவன், அழகிய ஆப்பனூரில் வீற்றிருக்க, அப்பெருமானை ஆழ்ந்து தியானம் செய்து நினைப்பவர்களின் வினையும் பற்றும் அறும்.

ஐயம் – சந்தேகம். பைய – ஆழ்ந்து.

958. அந்தண் புனல்வைகை அணி ஆப்ப னூர்மேய
சந்த மலர்க்கொன்றை சடைமேல் உடையானை
நந்தி அடிபரவு நலஞான சம்பந்தன்
சந்தம் இவைவல்லார் தடுமாற்று அறுப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

தெளிவுரை: அழகிய தண்புனலாகிய வைகையின் வளப்பத்தினால் அணிபெறும் ஆப்பனூரில் மேவும், அழகிய கொன்றை மலரைச் சடையில் கூடிய ஈசன்,

அடியை வணங்கியொழுகும் ஞானசம்பந்தன் உரைத்த சந்தப் பாடலாகிய இத் திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள், மனம் தடுமாற்றம் அற்றவராய், உறுதி யான தன்மையுடையவர்கள் ஆவார்கள்.

வைகை – இத்தலத்தின் தீர்த்தம். சந்தமலர் – அழகிய மலர். நந்தி – ஈசன்.

89. திருஎருக்கத்தம் புலியூர்

தல விளக்கம்: நடுநாட்டுத் தலம். இராஜேந்திரப் பட்டணம் என வழங்கப்படுகிறது. திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் திருஅவதாரத் தலம்.

புலிக்கால் முனிவராகிய, வியாக்கரபாதர் பூசித்த தலங்கள் ஐந்து. அவை புலியூர் என்ற பெயர்களுடன் இணைந்தவை. அவையாவன:

1. பெரும்பற்றப்புலியூர் - தென் புலியூர் - தில்லை
2. திருப்பாதிரிப்புலியூர் - வட புலியூர் - கடலூர்
3. ஓமாம் புலியூர்
4. பெரும்புலியூர்
5. எருக்கத்தம் புலியூர்.

உருத்திரசன்மர், ஈசனை வழிபட்டு, ஊமை நீங்கப் பெற்ற தலம்.

சுவாமி : நீலகண்டேசர்

அம்பிகை : நீலமலர்க்கண்ணி, நீலோற்பலாம்பாள்,
அபீதகுஜ நாயகி

தல மரம் : வெள்ளெருக்கு

தீர்த்தம் : நீலோற்பல தீர்த்தம்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

959. படையார் தருபூதப் பகடார் உரிபோர்வை
உடையான் உமையோடும் உடனாய் இடுகங்கைச்
சடையான் எருக்கத்தம் புலியூர்தகு கோயில்
விடையான் அடியேத்த மேவா வினைதானே.

தெளிவுரை: படைகள் உடைய பூதங்களையும், யானையை உரித்த தோலைப் போர்வையாகவும் உடையவனாகிய ஈசன், உமாதேவியை உடனாகிக் கங்கையைச் சடையில் கொண்டவனாய், எருக்கத்தம் புலியூர் மேவி உள்ளவன். இடப வாகனம் கொண்ட அப்பெருமான் திருவடியை வணங்கித் துதிக்க, வினை யானது சாராது.

பகடு – யானை.

960. இலைஆர் தருசூலப் படைஎம் பெருமானாய்
நிலையார் மதில்மூன்று நீறாய் விழஎய்த
சிலையான் எருக்கத்தம் புலியூர் திகழ்கோயில்
கலையான் அடியேத்தக் கருதா வினைதானே.

தெளிவுரை: இலைபோன்ற சூலத்தைப் படையாகக் கொண்ட எம்பெருமானாய், மூன்று கோட்டை களைச் சாம்பலாக்கிய வில்லை யுடையவன், எருக் கத்தம்புலியூரில் திகழும் கோயிலில் உள்ளவன். அப்பெருமானை, வேதத்தால் பாடித் தொழுது திருவடியைப் போற்ற, வினைகள் நாடாது.

961. விண்ணோர் பெருமானே விகிர்தா விடையூர்தீ
பெண்ஆண் அலியாகும் பித்தா பிறைசூடீ

எண்ணார் எருக்கத்தம் புலியூர் உறைகின்ற
அண்ணா எனவல்லார்க்கு அடையா வினைதானே.

தெளிவுரை: தேவர்களுடைய தலைவனே! விகிர்தா! இடப வாகனத்தில் ஊர்பவனே! பெண்ணும் ஆகி, ஆணும் ஆகி, இரண்டும் இல்லாத அலியும் ஆகிய பித்தா! பிறை சூடிய பெருமானே! எண்ணத்தில் பொருந்துகின்ற எருக்கத்தம் புலியூரில் மேவும் அண்ணா! எனப் போற்றி வழிபடும் அடியவர்களுக்கு, வினை அடையாது.

தெளிவுரை: ஈசன், ஆணுமாகிப் பெண்ணுமாகி, ஆண் பெண் இரண்டும் சேர்ந்த அலியும் ஆகி உள்ளவன் என்னும் தன்மையினைப் "பெண் ஆண் அலியெனும் பெற்றியன் காண்க" என வரும் மாணிக்கவாசகர் கூற்றாலும் அறிக. சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு ஈசன் அடியெடுத்துக் கொடுத்தவாறு, "பித்தா பிறைசூடி" என மகுடம் வைத்துப் பாடினமையும் இவண் உன்னற்பாலது.

962. அரைஆர் தருநாகம் அணிவான் அலர்மாலை
விரைஆர் தருகொன்றை உடையான் விடையேறி
வரையான் எருக்கத்தம் புலியூர் மகிழ்கின்ற
திரைஆர் சடையானைச் சேரத் திருவாமே.

தெளிவுரை: அரையில் நாகத்தை அணிந்து, மணம் கமழும் கொன்றை மாலை தரித்து, இடப வாகனத்தில் அமர்ந்து, கயிலை மலையுடைய ஈசனை, எருக்கத்தம் புலியூரில் மகிழ்ந்து உறையும், கங்கை பதிந்த சடையுடையவனை, மனம் ஒன்றி வணங்க, செல்வம் தரும்.

வரை – கயிலை மலை. திரை ஆர்சடை – கங்கை பதிந்த சடை.

963. வீறுஆர் முலையாளைப் பாக மிகவைத்துச்
சீறா வருகாலன் சினத்தை அழிவித்தான்
ஏறான் எருக்கத்தம் புலியூர் இறையானை
வேறா நினைவாரை விரும்பா வினைதானே.

தெளிவுரை: *தனிச்சிறப்புடைய தனங்களையுடைய உமாதேவியைப் பாகம் வைத்தும், சீற்றம் மிகுந்த காலனை அழிவித்தும், ஏறுபோன்ற எருக்கத்தம் புலியூர் மேவும் இறைவனைத் தனித்திருந்து தியானம் செய்பவர்களுக்கு, வினை இல்லை.*

வீறு – தனிச்சிறப்பு; வேறு – தனிமை. அம்பிகையின் திருநாமம் (அபீதகுஜ நாயகி) உணர்த்தப் பெற்றது காண்க.

964. நகுவெண் தலையேந்தி நானாவிதம் பாடிப்
புகுவான் அயம்பெய்யப் புலித்தோல் பியற்கிட்டுத்
தகுவான் எருக்கத்தம் புலியூர்த் தகைந்துஅங்கே
தொகுவான் கழலேத்தத் தொடரா வினைதானே.

தெளிவுரை: *கபாலம் ஏந்தி, நாலாவிதமான பாட்டு களைப் பாடி பிச்சை எடுத்து, புலித் தோலை மேலே உடுத்தித் தகுந்தவாறு எருக்கத்தம்புலியூரில் விளங்கி, முழுமை கொண்டுள்ள ஈசனின் கழலை ஏத்தி வணங்க, வினைகள் அணுகாது.*

நகுவெண்தலை – பிரம கபாலம்.

965. ஆவா எனஅரக்கன் அலற அடர்த்திட்டுத்
தேவா என அருளார் செல்வம் கொடுத்திட்ட
கோவே எருக்கத்தம் புலியூர் மிகுகோயில்
தேவே எனஅல்லல் தீர்தல் திடமாமே.

தெளிவுரை: *மலையைப் பெயர்த்த அரக்கனாகிய இராவணன், "ஆ! ஆ!" என அலறித் துன்புறுமாறு அடர்த்து, பின்னர் அவன் "தேவா!" என்று, சாமகீதம்*

கொண்டு இசைத்துப் பாற்ற, அருள் மிகுந்த செல்வத்தைக் கொடுத்த தலைவரே, எருக்கத்தம் புலியூரில் கோயில் கொண்டுள்ளவர். அப்பெருமானை தேவன் என வணங்கித் தொழுபவர்களுக்கு, அல்லல் இல்லை.

966. மறையா(ன்) நெடுமால்காண்பு அரியான் மழுவேந்தி
நிறையா மதிசூடி நிகழ்முத் தின்தொத்தே
இறையான் எருக்கத்தம் புலியூர் இடங்கொண்ட
கறையார் மிடற்றானைக் கருதக் கெடும்வினையே.

தெளிவுரை: *பிரமனும் திருமாலும் காண்பதற்கு அரியவனாகிய ஈசன், மழுப்படை யேந்தி, நிறைவில்லாத பிறைச் சந்திரனைச் சூடி முத்துக் குவியலாக உள்ள இறைவன், எருக்கத்தம்புலியூரில் வீற்றிருந்து கறையுடைய கண்டத்தனாய் விளங்குகின்றான். அப்பெருமானை நினைக்க, வினை கெடும்.*

மறையான் – பிரமன், தொத்து – குவியல்.

967. புத்தர் அருகர்தம் பொய்கள் புறம்போக்கிச்
சுத்தி தரித்துறையும் சோதி உமையோடும்
நித்தன் எருக்கத்தம் புலியூர் நிகழ்வாய்
அத்தன் அறவன்றன் னடியே அடைவோமே.

தெளிவுரை: *புத்தர்களும் அருகர்களும் கூறும் உரைகளைப் புறம்பாகத் தள்ளி வைத்து, தூய்மையாய் உறையும் சோதி வடிவான உமாதேவியை உடனாகக் கொண்டு, நித்தியப் பொருளாகியவனாய், அத்தனாய், அறநெறியனாய், எருக்கத்தம்புலியூரில் வீற்றிருக்கும் ஈசன் திருவடியைச் சார்வோமாக.*

968. ஏரார் எருக்கத்தம் புலியூர் உறைவானைச்
சீரார் திகழ்காழித் திருவார் சம்பந்தன்

ஆரா அருந்தமிழ் மாலை இவை வல்லார்
பார்ஆர் அவரேத்தப் பதிவான் உறைவாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *சிறப்பு மிக்க எருக்கத்தம்புலியூரில் உறையும் ஈசனைச் சீர்மிக்க காழிப்பதியின் செல்வமாக விளங்கும் ஞானசம்பந்தன், ஏத்தி அளித்த இனிய அருந்தமிழ் மாலையாகிய இத் திருப்பதிகத்தை உலகத்தவர் பொருந்தி ஏத்த வானுலகில் இனிது வாழ்வார்கள்.*

90. திருப்பிரமபுரம்

தல விளக்கம்: *பதிக எண் 1 காண்க.*

திருவிருக்குக்குறள்
பண் : *குறிஞ்சி*

திருச்சிற்றம்பலம்

969. அரனை உள்குவீர் பிரமன் ஊருள்எம்
பரனையே மனம் பரவி உய்ம்மினே.

தெளிவுரை: *ஈசனை நெஞ்சில் நினைமின். பிரமன் பூசித்த ஊராகிய பிரமபுரத்தில் எம் பரனை மனத்தால் பரவி ஏத்தி உய்து பெறுவீராக.*

970. காண உள்குவீர் வேணு நற்புரத்
தாணு வின்கழல் பேணி உய்ம்மினே.

தெளிவுரை: *ஈசனைக் கண்டு தரிசிக்க வேண்டும் என்று நினைப்பவர்களே! சீகாழியில் மேவும் ஈசன் கழல் பேணி தரிசித்து உய்தி பெறுவீராக.*

தாணு – ஈசன்.

971. நாதன் என்பீர்காள் காதல் ஒண்புகல்
ஆதி பாதமே ஓதி உய்ம்மினே.

தெளிவுரை: *என் தலைவனே என ஈசனைப் போற்றுகின்றவர்களே! ஆதிபரஞ்சுடராக விளங்கும் நாதன் பாதத்தை விரும்பி ஏத்தி உய்தி பெறுவீராக.*

972. அங்க மாதுசேர் பங்கம் ஆயவன்
வெங்குரு மன்னும் எங்கள் ஈசனே.

தெளிவுரை: *உடம்பில் உமாதேவியைப் பங்குடையவனாகிய சீகாழியில் விளங்குபவன் எங்கள் ஈசன்.*

அங்கம் – உடம்பு. பங்கம் – பங்கு. வெங்குரு – சீகாழி.

973. வாள்நி லாச்சடைத் தோணி வண்புரத்து
ஆணி நற்பொனைக் காணு மின்களே.

தெளிவுரை: *ஒளி மிக்க நிலவைச் சடையில் கொண்டவன், தோணிபுரத்தின் வள்ளல், உயர்ந்த வகையாகிய ஆணிப்பொன்னானவன். அத்தகைய ஈசனைக் கண்டு மகிழ்வீராக.*

974. பாந்தள் ஆர்சடைப் பூந்தராய் மன்னும்
ஏந்து கொங்கையாள் வேந்தன் என்பரே.

தெளிவுரை: *பாம்பினைச் சடையில் கொண்டு பூந்தராய் எனப்படும் சீகாழியில் விளங்கும் ஈசனை, உமையவள் தலைவனை, நாமத்தால் ஏத்தி வணங்குவீராக.*

975. கரிய கண்டனைச் சிரபுரத்துள்எம்
அரசை நாள்தொறும் பரவி உய்ம்மினே.

தெளிவுரை: கரிய கண்டத்தையுடைய ஈசனைச் சிரபுரம் எனும் சீகாழியில் விளங்கும் அரசனாகிய தலைவனை, நாள்தொறும் வணங்கி உய்திபெறுவீராக.

976. நறவம் ஆர்பொழில் புறவ நற்பதி
இறைவ(ன்) நாமமே மறவல் நெஞ்சமே.

தெளிவுரை: தேன் சொரியும் பொழிலையுடைய புறவம் என்கிற சீகாழியின் இறைவன் திருநாமத்தை, நெஞ்சமே! மறவாதிரு!

977. தென்றில் அரக்கனைக் குன்றிற் சண்பைமன்
அன்று நெரித்தவா நின்று நினைமினே.

தெளிவுரை: தென்திசையின் அரக்கனாகிய இராவணன் குன்றுமாறு, விரலால் ஊன்றி நெரித்த சண்பை என்னும் சீகாழியின் மன்னனாகிய ஈசனை, மனம் ஒருமிக்க நிறுத்தித் துதிப்பீராக.

978. அயனு மாலுமாய் முயலும் காழியான்
பெயல் வைஎய்திநின்று இயலும் உள்ளமே.

தெளிவுரை: பிரமனும், திருமாலும் முயன்று தேடியும் காணற்கு அரியவனாய் மறைந்து நிற்க, அவனை உள்ளத்தில் பதிப்பீராக.

979. தேரர் அமணரைச் சேர்வில் கொச்சைமன்
நேரில் கழல்நினைந்து ஒரும் உள்ளமே.

தெளிவுரை: பௌத்தர், சமணர் உரைகளைக் கொள்ளாது, கொச்சைமன் எனப்படும் சீகாழியின் ஈசன் இணையில்லாத திருவடியை நினைத்து உள்ளத்தில் தியானிப்பீராக.

நேரில் கழல் – ஒப்பற்ற கழல், இணையிலாச் சேவடி.

980. தொழும னத்தவர் கழுமலத் துறை
பழுதில் சம்பந்தன் மொழிகள் பத்துமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: கழுமலத்தில் உறை ஞானசம்பந்தன் உரைத்த இத் திருப்பதிகம் ஓதத்தொழும் மனத்தவர் உயர்ந்தோராவர்.

91. திருவாரூர்

தல விளக்கம்: காவிரி தென்கரைத் தலம். பஞ்ச பூதத் தலங்களுள் இது பிருதிவித் தலம். பிறக்க முத்தி தரும் தலம். "திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்" என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம். ஏனைய முத்தித் தலங்களாவன:

இருக்க முத்தி - காஞ்சி.

நினைக்க முத்தி - திருவண்ணாமலை.

தரிசிக்க முத்தி - சிதம்பரம்.

மரிக்க முத்தி - காசி.

பஞ்ச பூதத் தலங்களுள் பிருதிவி (மண்) தலமான இத் திருத்தலத்தைத் தொடர்ந்து ஏனைய தலங்களாவன:

1. திருவண்ணாமலை - நெருப்பு.

2. காளத்தி - காற்று.

3. சிதம்பரம் - ஆகாயம்.

4. திருவானைக்கா - நீர்.

ஏனைய சப்த விடங்கத் தலங்களாவன:

1. நாகை; 2. திருநள்ளாறு; 3. திருமறைக்காடு; 4. திருவாய்மூர்; 5. திருக்கோளிலி; 6. திருக்காறாயில்

இத் தலத்திற்குள்ள வேறு பெயர்கள்: கமலாய புரம், ஆடகேசுரபுரம், மூலாதாரபுரம், சக்திபுரம், கந்த புரம், முசுகுந்தபுரம், தேவாசிரியபுரம், வன்மீக நாதபுரம் என்பன.

பரவையார் திருஅவதாரம் செய்த பதி. திருமகள், இராமர், மன்மதன் முதலானோர் வழிபட்ட திருத்தலம். மனுநீதி சோழனுக்கு அருள் செய்த பதி.

சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்காக இறைவன் பரவையார் இல்லம் நோக்கித் தூது சென்ற தலம். சுந்தரர், மணிமுத்தாற்றில் இட்ட பொன்னைத் திருவாரூர்க் குளத்தில் எடுக்கப்பெற்ற சிறப்புடைய தலம்.

சுவாமி : வன்மீக நாதர், புற்றிடம்கொண்டார்

அம்பிகை : கமலாம்பிகை, அல்லியங்கோதை, நீலோத்பலாம்பாள்

தல மரம் : பாதிரி

தீர்த்தம் : கமலாலயம் (வேத தீர்த்தம்), சங்கு தீர்த்தம், வாணி தீர்த்தம் முதலியன

திருவிருக்குக்குறள்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

981. சித்தம் தெளிவீர்காள் அத்தன் ஆரூரைப்
பத்தி மலர்தூவ முத்தி யாகுமே.

தெளிவுரை: சித்தம் தெளிய விழையும் பெரியோர்களே! ஆரூர்த் தலைவனாகிய ஈசனைப் பக்தியால் போற்றி மலர் தூவி நின்று ஏத்தி வழிபடுவீர்களாக. அது முத்தியைத் தரவல்லது.

சிறப்புரை: "சித்தத்தைச் சிவன்பாலே வைத்தாற்கும் அடியேன்," எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் உரைப் பதைப் போன்று, சித்தத்தைத் தெளிவாக வைத்துக் கொள்ள பெருமக்களுக்கு உபதேச மொழியாதலும், அது மலர் தூவிப் பக்தி செய்தலும் ஆகும் எனவும், உணர்த்தப்பட்டது. இச்செயலால் முத்திக்கு ஆகும் பயனும் சுட்டப்பெற்றது.

"சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்" எனவும், "அரன் கோயில் வலம் வந்து பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத இவ் ஆக்கையாற் பயன் என்?" எனவும் திருநாவுக்கரசர் உரைப்பது இவண் உன்னற்பாலது.

982. பிறவி அறுப்பீர்காள் அறவன் ஆரூரை
மறவாது ஏத்துமின் துறவி யாகுமே.

தெளிவுரை: பிறவியை அறுக்க வேண்டும் என்று விழைபவர்களே! தரும நெறியில் விளங்கும் ஆரூர்ப் பெருமானை மறவாது ஏத்துவீர்களாக. அது துறவு நிலையைத் தரும்.

சிறப்புரை: ஈசனை மறவாமல் ஏத்த புறப்பொருள்பால் உற்ற பற்று நீங்கப் பெறுதலும், அதுவே துறவு நிலை விளைவிக்கும் வித்தாதலும், அதனால் மீளவும் பிறவாத நிலை காண்டலும் உணர்த்துவதாயிற்று.

983. துன்பம் துடைப்பீர்காள் அன்பன் அணிஆரூர்
நன்பொன் மலர்தூவ இன்பம் ஆகுமே.

தெளிவுரை: *துன்பம் தீர வேண்டும் எனக் கருதுபவர் களே! அழகிய ஆரூரில் விளங்கும் பெருமான் மிக்க அன்புடையவன். நல்ல பொன் போன்ற மலர்களால் தூவித் தொழுமின்கள். அது இன்பத்தை உண்டாக்கும்.*

சிறப்புரை: *"துன்னிய பிணைமலர்க் கையினர்ஒரு பால்" என மலர்கொண்டு வழிபடும் முறையினை மாணிக்க வாசகர் உரைப்பதும் இவண் உன்னற்பாலது.*

பொன்மலர் – கொன்றை மலர்.

984. உய்யல் உறுவீர்காள் ஐயன் ஆரூரைக்
கையி னால்தொழ நையும் வினைதானே.

தெளிவுரை: *உய்ய வேண்டும் என நினைப்பவர்களே! தலைவனாகிய ஆரூர்மேவும் செல்வனைக் கையினால் கூப்பித் தொழுவீராக. வினையானது நைந்து அழியும். உய்தி பெற்று விடுவீர்கள் என்றவாறு.*

உய்யல் – நற்கதி அடைதல்.

985. பிண்டம் அறுப்பீர்காள் அண்டன் ஆரூரைக்
கண்டு மலர்தூவ விண்டு வினைபோமே.

தெளிவுரை: *பிறவியைத் தரக்கூடிய வினையிலிருந்து மீள வேண்டும் என்று கருதுபவர்களே! அண்டங் களுக்குத் தலைவனும் ஆகி, தானே முற்றுமாகவும் இருக்கும் ஆரூர்ப் பெருமானைக் கண்டு மலர் தூவிப் போற்றுவீராக. உங்கள் வினை யாவும் மாய்ந்து போகும்.*

986. பாசம் அறுப்பீர்காள் ஈசன் அணிஆரூர்
வாச மலர்தூவ நேசம் ஆகுமே.

தெளிவுரை: பாசம் அறுத்து ஒதுக்க வேண்டும் என்று நினைப்பவர்களே! அணிமிகும் ஆரூரின் ஈசன் திருவடியில் வாச மலர் தூவிப் பணிவீர்களாக. அது உலக பாசத்தைப் போக்கி ஈசன் மீது நேசம் கொள்ளு மாறு செய்யும்.

987. வெய்ய வினைதீர ஐயன்அணி ஆரூர்
செய்ய மலர்தூவ வையம் உமதாமே.

தெளிவுரை: கொடிய வினைகள் தீருவதற்கு, அழகிய ஆரூரின் தலைவனாகிய, ஈசனின் சேவடியைச் செம்மையான மலர்களால் தூவிப் போற்ற வேண்டும். அவ்வாறு செய்தால் இவ்வுலகம் உம்முடையதாகும்.

சிறப்புரை: மலர் தூவி அருச்சனை செய்வதனால் வையத்தின் வசம் கொண்ட பற்று நீத்தலும், ஞானம் உறுதலும், அத்தகைய ஞானத்தை உலகமானது ஓம்புதல் செய்தலும் கூடும் எனப் புலப்படுத்துமாறு "வையம் உமதாமே" என்பது உணர்த்துவதாயிற்று.

செய்ய – செம்மை, சிவந்த.

988. அரக்கன் ஆண்மையை நெருக்கி னான்ஆரூர்
கரத்தி னால்தொழத் திருத்தம் ஆகுமே.

தெளிவுரை: அரக்கனாகிய இராவணனுடைய வன்மை மிக்க ஆணவத்தை அடக்கிய ஆரூரின் நாதனைக் கரத்தினால் தொழுது போற்ற, ஆணவ மலம் முதலான மலத் தொகுதிகள் களையப்பெற்று திருத்தம் பெறும்.

989. துள்ளும் இருவர்க்கும் வள்ளல் ஆரூரை
உள்ளும் அவர்தம் மேல் விள்ளும் வினைதானே.

தெளிவுரை: தாமே பெரியவர் என்று தருக்கிய திருமால், பிரமன் ஆகியோருக்குக் காண்பரிதாய் விளங்கிப்

பின்னர் அருள் வழங்கிய வள்ளற் பெருமானாகிய. ஆரூரில் விளங்கும் ஈசன் திருவடியைத் தியானிக்கும் உள்ளம் உடையவர்களுக்கு வினையானது நிற்காது.

சிறப்புரை: கண்களுக்குப் புலப்படாத தன்மையுடைய வினையானது மெலிந்து தோன்றி விலகிச் செல்கிறேன் என மொழிந்து செல்லும் பாவனையில் மறையும் என உணர்த்துவதாயிற்று.

விள்ளும் – பேசும்.

990. கடுக்கொள் சீவரை அடக்கி னான்ஆரூர்
எடுத்து வாழ்த்துவார் விடுப்பர் வேட்கையே.

தெளிவுரை: தீய எண்ணங்களையுடைய சீவர்களை அடக்கிய ஆரூர் ஈசனை வாழ்த்துபவர்கள் பற்றற்றவர் ஆவார்கள்.

கடுக்கொள் சீவர் – தீய ஆத்மாக்கள், சீவர்கள்.

991. சீரூர் சம்பந்தன் ஆரூரைச் சொன்ன
பாரூர் பாடலார் பேரார் இன்பமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: சிறப்புப் பொருந்திய ஞானசம்பந்தன் ஆரூரைச் சொன்ன, பாரில் பரவி விளங்கும் இத் திருப் பதிகத்தைப் பேணுபவர்கள், பெருமை மிக்க இன்பத்தில் திளைப்பார்கள். பேரின்பம் அடைவர்.

92. திருவீழிமிழலை

தல விளக்கம்: பதிக எண் 4 காண்க.

பதிகக் குறிப்பு: திருஞானசம்பந்தர், திருநாவுக் கரசருடன் தலயாத்திரை மேவி, திருவீழிமிழலையில்

இருந்த காலத்தில் பெரும்பஞ்சம் ஏற்பட்டது. அடியவர்கள் பசியால் துன்புற்றனர். அது கண்ட இருபெரும் சமயக் குரவர்களும் ஈசனை நினைந்து துயில் கொள்ளலாயினர். ஈசன், கனவில் தோன்றிப் பஞ்சம் தீரும்வரையில் படிக்காசு அளிக்கின்றோம் என்று அருள் செய்தனர். அவ்வாறே பீடத்தின் கிழக்குப் பகுதியில் ஒரு பொற்காசும், மேற்குப் பகுதியில் ஒரு பொற்காசும் ஆக இரு காசுகள் அளித்தனர். திருநாவுக்கரசர் திருமடத்தில் காலம் தாழ்த்தாது உணவு படைக்கப்படுதலும் திருஞான சம்பந்தர் திருமடத்தில் மாற்றுக் குறைந்த காசு பெற்றமையால் தாழ்த்தி உணவு வழங்கப்படுதலும் கண்டு ஞானசம்பந்தர், மாற்றுக் குறையாத நல்ல பொற்காசு அளித்தருளுமாறு வேண்டினார். அதுபற்றி இத் திருப்பதிகம் எழுந்தது.

திருவிருக்குக்குறள்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

992. வாசிதீரவே காசு நல்குவீர்
மாசின் மிழலையீர் ஏசல் இல்லையே.

தெளிவுரை: குற்றமற்ற மிழலையில் வீற்றிருக்கும் பெருமானே! வேறுபாடு இல்லாது இருப்பதற்கு உரிய காசு நல்குவீராக. அவ்வாறு நல்கினால் நிந்தனை சொல்வதற்கு யாதும் இல்லை.

சிறப்புரை: திருநாவுக்கரசர் திருமடத்து அன்பர்களுக்கு நல்ல பொற்காசு கிடைத்தமையால், உரிய நேரத்தில் அமுது அளிக்கப்பெறுதலும், ஞானசம்பந்தர் திருமடத்து அன்பர்களுக்கு மாற்றுக் குறைந்த

பொற்காசு தந்தமையால், அதனை உருக்கி வடித்துப் பின்னர் பொருள்கள் பெற்று உணவு வழங்குதல் தாமதம் ஆகியது. வேறுபாடு ஆயினமை கூறப்பட்டது. அவ்வேறுபாடு நிந்தனையாகத் தோன்றியமையும் உணர்த்தப் பெற்றது.

993. இறைவர் ஆயினீர் மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை முறைமை நல்குமே.

தெளிவுரை: வேதத்தைக் கொண்டுள்ள மிழலையின் பெருமானே! இறைவராக உள்ள நீவிர், கறை கொண்ட காசினை வழங்குதலை ஒழித்து, முறைமையான நல்ல காசினை நல்குவீராக.

994. செய்யமேனியீர் மெய்கொள் மிழலையீர்
பைகொள் அரவினீர் உய்ய நல்குமே.

தெளிவுரை: செம்மேனியராக, மெய்ம்மை கொண்டு மிழலையில் விளங்கும் பெருமானே! படம் கொண்ட பாம்பினை உடையவரே! நாங்கள் உய்யுமாறு நல்ல காசு தந்தருள்வீராக.

995. நீறு பூசினீர் ஏறது ஏறினீர்
கூறு மிழலையீர் பேறும் அருளுமே.

தெளிவுரை: திருநீறு மெய்யில் பூசினீர், இடபவாகனத்தில் ஏறினீர், மிழலை நகரின் அங்கம் உடையீர், நற்பேறும் அருள்வீராக.

996. காமன் வேவஓர் தூமக் கண்ணினீர்
நாம மிழலையீர் சேம நல்குமே.

தெளிவுரை: புகழ் மிக்க மிழலையில் உள்ள பெருமானே! மன்மதன் எரியுமாறு நெருப்புக் கண் உடையவர் ஆயினீர்; பாதுகாப்பும் நலமும் புரிவீராக.

சேமம் – க்ஷேமம் என்பதன் திரிபு.

997. பிணிகொள் சடையினீர் மணிகொள் மிடறினீர்
அணிகொள் மிழலையீர் பணிகொண்டு அருளுமே.

தெளிவுரை: *பிணித்துக் கட்டிய சடையை உடைய பெருமானே! நீலகண்டத்தை உடைய நாதனே! அழகிய மிழலையில் வீற்றிருப்பவரே! எமது பணியை ஏற்றுக் கொண்டு அருள் புரிவீராக.*

998. மங்கை பங்கினீர் துங்க மிழலையீர்
கங்கை முடியினீர் சங்கை தவிர்மினே.

தெளிவுரை: *உமாதேவியை ஒரு பாகத்தில் கொண்டுள்ள ஈசனே! சாந்தமான மிழலையின் நாதனே! கங்கையைத் தரித்த முடியுடையவரே! எங்கள் ஐயத்தைப் போக்கிக் குற்றமற்ற காசு தருவீராக.*

சங்கை – ஐயப்பாடு.

999. அரக்க னெரிதர இரக்கம் எயிதினீர்
பரக்கு மிழலையீர் கரக்கை தவிர்மினே.

தெளிவுரை: *அரக்கனாகிய இராவணன், குற்றம் செய்தமையால் நெரிக்கப்பட்டு வருந்தினாலும், அவன் அழுகை கேட்டு இரக்கம் கொண்டு அருள் புரிந்த பெருமானே! புகழ்பரவும் மிழலையில் வீற்றிருப் பவரே! வஞ்சகம் தவிர்த்து நல்ல பொற்காசு தந்தருள் வீராக.*

1000. அயனு மாலுமாய் முயலு முடியி னீர்
இயலு மிழலையீர் பயனும் அருளுமே.

தெளிவுரை: *பிரமனும் திருமாலும் முயன்று தேடிய தலைமை உடையவரே! இயல்பின் மிக்க மிழலையில் வீற்றிருப்பவரே! பயனை அருள்புரிவீராக.*

சிறப்புரை: *நற்காசு பெறுதலுடன், பேரின்பப் பயனும் உணர்த்தப்பெற்றது.*

1001. பறிகொள் தலையினார் அறிவது அறிகிலார்
வெறிகொள் மிழலையீர் பிறிவது அரியதே.

தெளிவுரை: *மணம் கொள் மிழலையின் ஈசனே! சமணர்கள், அறியும் பொருளை அறிந்திடாது நிற்க வேறு உரைப்பது அரியதாகும்.*

1002. காழிமாநகர் வாழி சம்பந்தன்
வீழி மிழலைமேல் தாழு மொழிகளே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *காழியின் ஞானசம்பந்தன் வீழிமிழலை மேல் பதியக் கூறிய பதிகத்தை உரைப்பவர்கள் மேலாவார்கள்.*

தாழும் – பதியும். எடையில் கனத்தது கீழே தாழ்தல் போல.

93. திருமுதுகுன்றம்

தல விளக்கம்: *பதிக எண் 12 காண்க.*

திருவிருக்குக்குறள்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1003. நின்று மலர்தூவி இன்று முதுகுன்றை
நன்றும் ஏத்துவீர்க்கு என்றும் இன்பமே.

தெளிவுரை: *பத்தியுடன் முதுகுன்று மேவும் ஈசன் திருமுன்னர் நின்று, பக்திச் சிரத்தையுடன் மலர் தூவிப்*

போற்றும் உங்களுக்கு எக் காலத்திலும் இன்பம் பெருகும்.

இது பக்தர்களை முன்னிலைப்படுத்தி உரைக்கும் அருளுரை ஆயிற்று.

1004. அத்தன் முதுகுன்றைப் பத்தி யாகிநீர்
நித்தம் ஏத்துவீர்க்கு உய்த்தல் செல்வமே.

தெளிவுரை: அத்தனாக விளங்கும் முதுகுன்றுடைய ஈசனைப் பக்தியுடன் போற்றித் துதிக்கும் உங்களுக்குக் கிடைத்தது பயன்தரத் தக்கதான செல்வம் ஆகும்.

சிறப்புரை: செல்வமானது, பொருட் செல்வத்துடன் அருட் செல்வமும் உணர்த்தும். இவ்வுலகத்தில் இடையூறு மற்றும் தடையின்றி, வழுவாது வழிபடுவதற்குப் பொருட்செல்வமும், மறுமைக்கு உரித்தாகிய முத்தியும் செல்வம் என உணர்த்தப்பட்டது.

1005. ஐயன் முதுகுன்றைப் பொய்கள் கெடநின்று
கைகள் கூப்புவீர் வையம் உமது ஆமே.

தெளிவுரை: பொய்ம்மையான பந்தபாசம் முதலான மலக்கட்டினைக் கெட்டு அழியுமாறு, தன்னை மறந்து, முதுகுன்று நகரில் மேவும் தலைவனாகிய ஈசன் திருமுன்னர் நின்று, கைகளைத் தலைக்குமேல் கூப்பி வணங்குவீராக. இவ்வுலகமானது உமக்கு உரியதாகும்.

சிறப்புரை: பொய்யாமை அன்ன புகழில்லை. என்பதால், அது எல்லா அறத்தினையும் தரும் எனும் மாண்புடையதாதலும், பொய்ம்மை தோன்றும் பந்த பாசம் கெடுதலால், புலனைந்தின் வகை தெளிந்த மாட்டு, அதனிலிருந்து தற்காத்துக் கொள்வதால்

அவன்கண் உலகு அமையும் எனப் புலப்படுத்தியதும், "வையம் உமதாகுமே" என்பதால் உணர்த்தப்பெற்றது.

இது சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படும் நான்கனுள் சரியை வழிபாட்டின் வாயிலாகக் கிடைக்கப்பெறும் பயன் ஆயிற்று.

1006. ஈசன் முது குன்றை நேசம் ஆகிநீர்
வாச மலர்தூவப் பாசவினை போமே.

தெளிவுரை: ஈசனார் விரும்பும் முதுகுன்றத்தை விரும்பி நாடி, அங்கு வீற்றிருக்கும் பெருமானை மலர் தூவிப் போற்றி வணங்குவீராக. அது உங்களைப் பாசத்தில் ஆழ்த்தும் வினையை நீக்கும்.

சிறப்புரை: பாசத்தின் காரணமாக, பந்தப்படுத்தும் பிராரத்தம், ஆகாமியம், சஞ்சிதம் ஆகிய மூன்று விதமான வினைகளும் போகும் என உணர்த்துவ தாயிற்று.

முதுகுன்றை -- திருத்தலமும் திருத்தலத்தின் தலைவனாகிய பெருமானையும் குறிப்பது.

1007. மணிஆர் முதுகுன்றைப் பணிவார் அவர்கண்டீர்
பிணியாயின கெட்டுத் தணிவார் உலகிலே.

தெளிவுரை: மணிகள் பொருந்திய முதுகுன்றத்தில் விளங்கும் பெருமானைப் பணிபவர்கள், உடற்பிணி யாவும் நீங்கப் பெறுவர். உலகில் சாந்த மயமான வாழ்க்கையை உடையவர்கள் ஆவார்கள்.

சிறப்புரை: கண்டீர் என்பது உறுதியைப் புலப்படுத்தும் தேற்றப் பொருளாய் ஆகியது. பிணியாயின என்பது, பிறவிப் பிணியும் தீர்தலை உணர்த்துவதாகும். இம்மை

யில் முத்தியின்பத்தை நுகரும் வண்ணமும், குறிப்பால் சுட்டுமாறு "தணிவார்" என உணர்த்தப்பட்டது.

மணி – மணிமுத்தாறு தீர்த்தமும் ஆதல் காண்க.

1008. மொய்யார் முதுகுன்றில் ஐயா எனவல்லார்
பொய்யார் இரவோர்க்குச் செய்யாள் அணியாளே.

தெளிவுரை: மக்கள் குழுமி முதுகுன்றநாதரை 'ஐயா' எனப் போற்றி பக்தியால் இரந்து வணங்குபவர்களுக்குப் பொய்க்காது, திருமகள் கடாட்சம் கைவரப் பெறும்.

சிறப்புரை: முகமலர்ச்சியுடன் விருந்தினரை உபசரிப்பவர்களுக்கு, திருமகள் அருள்புரிதலைப் போன்று, முதுகுன்ற நாதரைப் போற்றி 'ஐயா' எனத் தொழுபவர்களுக்குத் திருமகள் அருள்புரிவாள் என உணர்த்தப்பட்டது.

செய்யாள் – திருமகள்.

1009. விடையான் முதுகுன்றை இடையாது ஏத்துவார்
படையாயின சூழ உடையார் உலகமே.

தெளிவுரை: முதுகுன்றில் விளங்கும் இடப வாகனத்தை உடைய நாதரை, இடைவிடாது வணங்கித் தொழுபவர்கள், படைசூழ இவ்வுலகத்தில் யாவும் உடையவர்களாய்ப் புகழோடு விளங்குவர்.

சிறப்புரை: அரசர்க்குரிய சிறந்த உறுப்பாகப் படை முதலானவை விளங்குவதைப் போன்று, மக்களுக்குரிய அம்சங்களும் நன்கு வாய்க்கப் பெறும் என்பதைப் "படையாயின சூழ" என்று உணர்த்தப் பட்டது.

1010. பத்துத் தலையோனைக் கத்த விரலூன்றும்
அத்தன் முதுகுன்றை மொய்த்துப் பணிமினே.

தெளிவுரை: *பத்துத் தலைகளுடன் கூடிய இராவணன் மலையைப் பெயர்த்த ஞான்று கத்தித் துன்புறுமாறு விரலை ஊன்றி, அடர்த்த முதுகுன்றநாதரைப் போற்றி நெருங்கிச் சூழ்ந்து பணிவீராக*

கத்த – ஒலமிட்டு அலற.

1011. இருவர் அறியாத ஒருவன் முதுகுன்றை
உருகி நினைவார்கள் பெருகி நிகழ்வோரே.

தெளிவுரை: *திருமாலும், பிரமனும் அறிய முடியாதவனாய் விளங்கி நின்ற ஒப்பற்றவராகிய முதுகுன்றத்தில் விளங்கும் நாதரை, பக்தியால் உருகி நினைத்து மகிழ்பவர்கள், மேற்கொள்ளும் எல்லா செயல்களும் துலங்கி வளர்ந்து பெருகி நிறைவேறும்.*

நிகழ்தல் – நிறைவேறுதல்.

1012. தேரர் அமணரும் சேரும் வகையில்லான்
நேரில் முதுகுன்றை நீர்நின்று உள்குமே.

தெளிவுரை: *பௌத்தர், சமணர் சேர்ந்து வணங்கும் வகையில்லாத தன்மையராய் இருக்க, ஒப்புமை யில்லாத முதுகுன்றத்தின் நாதரை, நீவிர் உறுதியாகப் பற்றி நின்று தியானிப்பீர்களாக.*

நேரில் – (நேர் + இல்) இணை இல்லாத, ஒப்புமை இல்லாத.

1013. நின்று முதுகுன்றை நன்று சம்பந்தன்
ஒன்றும் உரை வல்லார் என்றும் உயர்வோரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: முதுகுன்றம் மேவிய பழமலை நாதரை, உறுதியாகப் பற்றி நின்று, நன்மை தரும் ஆக்கத்தை யுடைய ஞானசம்பந்தன், மனம் ஒன்றியவாறு உரைத்த இத் திருப்பதிகத்தை உரைக்க வல்லவர்கள், எல்லாக் காலங்களிலும் தாம் மேற்கொள்ளும் செயல்களில் வெற்றியடைந்து உயர்ந்த நிலையைப் பெறுவார்கள்.

சிறப்புரை: ஈசன்பால் ஒருமித்த சிந்தனை கொண்டு விளங்கும் ஞானசம்பந்தன், மன்னுயிர்களுக்கு ஆக்கம் புரியும் பெருமான் என்பதனை "நன்று" என்னும் சொல் உணர்த்துவதாயிற்று.

நன்று – ஆக்கம்.

94. திருவாலவாய்

தல விளக்கம்: பதிக எண் 7 காண்க.

திருவிருக்குக்குறள்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1014. நீல மாமிடற்று ஆல வாயினான்
பாலது ஆயினார் ஞாலம் ஆள்வரே.

தெளிவுரை: நீலகண்டத்தை உடைய ஆலவாய்க் கடவுள்பால் மனம் ஒன்றி நினைத்துத் திருவடியைத் தொழுபவர்கள், உலகத்தில் உள்ள பேறுகளைப் பெற்றவர் ஆவர்.

1015. ஞாலம் ஏழுமாம் ஆல வாயிலார்
சீலமே சொலீர் காலன் வீடவே.

தெளிவுரை: ஏழு உலகங்களையும் ஆட்கொள்ளும் ஆலவாய்க் கடவுளை வணங்கி, அப்பெருமான் அருட் குணங்களைச் சொல்வீராக. காலன் வீழ்ந்து மடிவான்.

1016. ஆல நீழலார் ஆல வாயிலார்
கால காலனார் பால தாமினே.

தெளிவுரை: காலனுக்குக் காலன் ஆகிய ஆலவாய்க் கடவுள், ஆல் நிழலில் வீற்றிருந்து சனகாதி முனிவர்களுக்கு அறப்பொருள் உணர்த்தியவர். நம் பால் உள்ளவர்தாம்.

1017. அந்தமில் புகழ் எந்தை ஆலவாய்
பந்தி யார்கழல் சிந்தை செய்ம்மினே.

தெளிவுரை: எல்லையற்ற புகழுடைய எந்தையாகிய ஆலவாய்க் கடவுளின் அருள்புரிந்து ஈர்க்கும் திருக்கழலைச் சிந்தை செய்வீராக.

1018. ஆடல் ஏற்றினான் கூடல் ஆலவாய்
பாடி யேமனம் நாடி வாழ்மினே.

தெளிவுரை: வெற்றியை உடைய இடபத்தை வாகன மாகக் கொண்டு கூடல் ஆலவாயில் விளங்கும் கடவுளை மனம் விரும்பிப் பாடி மகிழ்ந்து வாழ்வீராக.

ஆடல் – வெற்றி.

1019. அண்ணல் ஆலவாய் நண்ணி னான்றனை
எண்ணி யேதொழத் திண்ணம் இன்பமே.

தெளிவுரை: ஆலவாயில் மேவும் அண்ணலை அடைந்து தியானம் செய்து வணங்குபவர்கள், இன்பம் உறுதியாகப் பெறுவர்.

1020. அம்பொன் ஆலவாய் நம்ப னார்கழல்
நம்பி வாழ்பவர் துன்பம் வீடுமே.

தெளிவுரை: அழகுடன் ஒளிரும் ஆலவாயில் வீற்றிருக்கும் நம்பனாகிய ஈசன் திருக்கழலை நம்பி வாழ்க்கை நடத்துபவர் துன்பம் கெடும்.

வீடும் – கெடும்.

1021. அரக்க னார்வலி நெருக்கன் ஆலவாய்
உரைக்கும் உள்ளத்தார்க்கு இரக்கம் உண்மையே.

தெளிவுரை: கயிலை மலையை எடுத்த அரக்கனாகிய இராவணன் வல்லமையை நெருக்கியவனாகிய ஆலவாய் அடிகளை, பக்திப் பெருக்கினால் போற்றித் துதிக்கும் உள்ளம் உடையவர்களுக்கு, ஈசன் அருள் கிடைப்பது உண்மை.

சிறப்புரை: இராவணனை அடர்த்த ஈசன், அவன் அழுது போற்றிய நிலை கண்டு அருள் புரிந்த தன்மையைக் குறிப்பால் உணர்த்தி, உள்ளம் பொருந்தி போற்றும் அடியவர்களுக்கு அருள் புரிபவன் என்பதை "இரக்கம் உண்மையே" என்பது உணர்த்துவதாயிற்று.

இரக்கம் – ஈசன் அருள்.

1022. அருவன் ஆலவாய் மருவி னான்றனை
இருவர் ஏத்தநின்று உருவம் ஓங்குமே.

தெளிவுரை: திருமால், பிரமன் ஆகிய இருவரும் தேடிய காலத்தில் கண்ணுக்குப் புலப்படாது அருவனாய் விளங்கி நின்று, பின்னர் அவ் இருவரும், ஆலவாய் மேவிய கடவுளை ஏத்தி நின்று, வழிபட்டு நிற்க, தோற்றம் கொண்டு உருவப் பொருளாகித் தீப்பிழம் பாய் ஓங்கினான் ஈசன்.

1023. ஆர நாகமாம் சீரன் ஆலவாய்த்
தேர்அு மண்செற்ற வீரன் என்பரே.

தெளிவுரை: *புத்தர்களும், சமணர்களும் பகையாகக் கருதியவன், நாகத்தை மாலையாகக் கொண்ட புகழ் மிக்க ஆலவாய்க் கடவுள்.*

1024. அடிகள் ஆலவாய்ப் படிகொள் சம்பந்தன்
முடிவில் இன்தமிழ் செடிகள் நீக்குமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *உலகில் நன்மைகள் சேர்க்கும் ஞான சம்பந்தன், ஆலவாய் மேவியுள்ள அடிகளைப் பற்றி, எல்லையற்ற இனிய தமிழ்ப் பதிகத்தை உரைக்க, அதனை ஓதுபவர்கள் தீமைகளிலிருந்து நீங்கியவ ராவர்.*

சிறப்புரை: *இம்மையில் உண்டாகும் குற்றங்களுடன் அதனுடன் இயைந்து பொருந்தும் வினையும் சுட்டுமாறு "செடிகள்" என உணர்த்தப்பட்டது.*

ஞானசம்பந்தன் திருப்பதிகமானது வினைகளை நீக்கும் என, உணர்த்தியதும் காண்க.

செடிகள் – தீமை, வினைகள்.

95. திருவிடைமருதூர்

தல விளக்கம்: *பதிக எண் 32 காண்க.*

திருவிருக்குக்குறள்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1025. தோடொர் காதினன் பாடு மறையினன்
காடு பேணி நின்று ஆடு மருதனே.

தெளிவுரை: *காதில் ஒரு தோடு அணிந்தவன்; வேதம் மொழிபவன்; சுடுகாட்டை இடமாகப் பேணி நின்று நடனம் புரியும் திருவிடைமருதூரில் வீற்றிருக்கும் நாதனே.*

1026. கருதார் புரம்எய்வர் எருதே இனிதுஊர்வர்
மருதே இடமாகும் விருதாம் வினைதீர்ப்பே.

தெளிவுரை: *ஈசன், பகைகொண்ட முப்புரஅசுரர்களை அழிப்பர்; இடபவாகனத்தில் இனிது ஊர்ந்து வருவர்; திருவிடைமருதூரில் பெருமையாக இடம் கொண்டு வீற்றிருப்பர்; அப்பெருமானை வணங்க, வினை தீர்ந்து விடும்.*

1027. எண்ணும் அடியார்கள் அண்ணல் மருதரைப்
பண்ணின் மொழிசொல்ல விண்ணும் தமதாமே.

தெளிவுரை: *இடைமருதில் வீற்றிருக்கும் பெருமானாகிய ஈசனை, எண்ணித் துதித்து வழிபடும் அடியவர்கள், பண்ணுடன் இசைத்துப் பாடித் தோத்திரம் செய்ய, விண்ணுலகும் தமதாக்கிக் கொள்வார்கள்.*

1028. விரியார் சடைமேனி எரியார் மருதரைத்
தரியாது ஏத்துவார் பெரியார் உலகிலே.

தெளிவுரை: *அங்கையில் நெருப்பு ஏந்திய ஈசன், இடைமருதூரில் திகழ்பவர்; விரிந்த சடையை உடையவர். அப் பெருமானைத் தாமதம் செய்யாது ஏத்தி வழிபடுபவர் உலகத்தில் பெருமை வாய்ந்தவர் ஆவர்.*

1029. பந்த விடையேறும் எந்தை மருதரைச்
சிந்தை செய்பவர் புந்தி நல்லரே.

தெளிவுரை: *சேவை எனும் பந்தத்தில் விளங்கும் இடபத்தை வாகனமாக உடைய எந்தையாகிய இடை*

மருதூரில் விளங்கும் ஈசனை, சிந்தையில் தேக்கி வழிபாடு செய்பவர்கள், நல்ல புத்தியை வாய்க்கப் பெற்றவர்கள் ஆவார்கள்.

சிறப்புரை: அந்தக்கரணங்களாகிய மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்கின்ற நான்கனுள், விரிந்து செல்லும் மனத்தில் அறிவு என்னும் நுட்பக்கருவி பதிந்து, இறைவன் திருவருளால் தெளிவை ஏற்படுத்தும். இதனைப் புத்தி என்று உரைப்பர் மேலோர். இவ்வாற்றல் பெரிது ஓங்கும் நிலையில் நன்மையுற்று நல்லோராய் விளங்குவர் என்பது, "புந்தி நல்லரே" என உணர்த்தப்பட்டது.

1030. **கழலும் சிலம்புஆர்க்கும் எழிலார் மருதரைத்**
தொழிலே பேணுவார்க்கு உழலும் வினைபோமே.

தெளிவுரை: ஒரு காலில் வீரக்கழலும், மற்றொரு காலில் சிலம்பும் ஒலிக்க, நடனம் புரிகின்ற எழில் மிக்க இடைமருதில் விளங்குபவர், ஈசன். அப்பெருமானை, எஞ்ஞான்றும் மனத்தால் சிந்தித்துத் தொழுதும், பூசித்துப் பேணுதல் செய்தும், விளங்கி அன்பு கொள்ளும் அடியவர்களுக்கு, உழலும் வினை நீங்கிச் செல்லும்.

சிறப்புரை: பிராரத்தம், சஞ்சிதம், ஆகாமியம் ஆகிய மூன்று வகையான வினைகளுள், முற்பிறவிகளில் செய்து, இந்தப் பிறவிக்குக் காரணமாகி, உயிர்கள் நுகர்வதற்கு அவ்வவர்களுடைய தன்மைக்கு ஏற்ப, கடவுளின் கருணை வயத்தால் வகுக்கப்படும் பிராரத்த வினை, இவ் உடம்பு உள்ளளவும் நுகருமாறு செய்யவல்லது. இவை கட்புலனுக்குப் புலப்படாத வாறு கலந்து எல்லாக் காலத்திலும் அனுபவித்துக்

கழிக்க வேண்டும் என்பதனை, "உழலும் வினை" என்பது உணர்த்துகிறது.

உழலும் வினை – இத்தேகத்தில் பதிந்து துன்புறுத்தும் வினை.

1031. பிறைஆர் சடையண்ணல் மறைஆர் மருதரை
நிறையால் நினைபவர் குறையார் இன்பமே.

தெளிவுரை: வேதத்தின் நிறைவாகிய இடைமருதூரில் விளங்குபவராகிய ஈசன், பிறைச் சந்திரனை இனிது சடையில் சூடிய அண்ணல் ஆவார். அப்பெருமானை, மனம், புத்தி, அகங்காரம், சித்தம் எனப்படும் அந்தக் கரணங்கள் நான்கும் பதியுமாறு நினைத்து வழிபடு பவர்களுக்கு, இன்ப வாழ்க்கை நிலையாகி, எக்காலத் திலும் குறைவில்லாது விளங்கும்.

1032. எடுத்தான் புயந் தன்னை அடுத்தார் மருதரைத்
தொடுத்தார் மலர்சூட்ட விடுத்தார் வேட்கையே.

தெளிவுரை: கயிலை மலையைப் பெயர்த்த இராவண னுடைய தோள்களை அடர்த்தவராகிய ஈசன், விளங்கும் திருவிடைமருதூரில் வீற்றிருக்க, அப் பெருமானை, அழகிய மலர்களால் மாலை தொடுத்துச் சூடி வணங்குபவர்களுக்குப் பற்றானது நீங்கும்.

சிறப்புரை: உலகப் பற்று, வினைக்குக் காரணமாதல் சுட்டப்பெற்று, அப் பற்று நீங்குவதால் வினையற்ற வராதல் உணர்த்தப் பெற்றது. இது, சிவயோக நிலையின்பாற்பட்டதாகும்.

1033. இருவர்க்கு எரியாய உருவ மருதரைப்
பரவி யேத்துவார் மருவி வாழ்வரே.

தெளிவுரை: திருமால், பிரமன் ஆகிய இருவரும், ஈசனை அறிய முடியாதவாறு ்க்கம் கொண்டு நின்று,

வணங்கிப் போற்ற, தீப்பிழம்பாகி உருவத் தோற்றம் வெளிப்படுத்திய இடைமருது நாதரை வணங்கிப் போற்றும் அடியவர்கள், உலகியலில் தேவைப்படும் எல்லாவற்றையும் பொருந்தப் பெற்று, இனிது வாழ்வார்கள்.

1034. நின்றுஉண் சமண்தேரர் என்று மருதரை
அன்றி உரைசொல்ல நன்று மொழியாரே.

தெளிவுரை: நின்று கொண்டு உணவு கொள்ளும் சமணரும் பௌத்தரும், திருவிடைமருதூரில் வீற்றிருக்கும் பெருமானைத் தவிர, பிறவற்றை மனங் கொண்டு பேசுவதால், அவர்கள் வாயிலிருந்து நற்சொற்கள் வராது. அப் பெருமானை வணங்கு பவர்கள் வாயிலிருந்து நல்லுரைகள் தோன்றும் என்பது குறிப்பு.

1035. கருது சம்பந்தன் மருதர் அடிபாடிப்
பெரிதும் தமிழ்சொல்லப் பொருத வினைபோமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஈசனையே எஞ்ஞான்றும் மனம் மொழி மெய்களால் கருதிப் போற்றும் ஞானசம்பந்தன், திருவிடைமருதூரில் வீற்றிருக்கும் பெருமானை வணங்கிப் பாடிப் போற்றி, பெரிதாகும் கருத்துக்களும் பக்திமையும் மல்க, உரைத்த இனிமை மிகுந்த இத் திருப்பதிகத்தைச் சொல்ல, நம்மை வருத்திக் கொண்டிருக்கும் வினையானது நீங்கிச் செல்லும்.

96. திருஅன்னியூர்

தல விளக்கம்: காவிரி வடகரைத்தலம். பொன்னூர் என வழங்கப்படுகிறது. வருணன், அக்கினி, சூரியன்,

இரதி, பஞ்சபாண்டவர் முதலானோர் வழிபட்டது. இத் திருத்தலத்தின் வேறு பெயர்கள்: லிகுசாரண்டம், பாஸ்கர க்ஷேத்திரம், பானு க்ஷேத்திரம்.

சுவாமி : ஆபத்சகாயேஸ்வரர். அக்னீஸ்வரர், லிகுசாரண யேஸ்வரர், ரதீஸ்வரர், பாண்டவேஸ்வரர்

அம்பிகை : பெரிய நாயகி

தல மரம் : எலுமிச்சை

தீர்த்தம் : வருண தீர்த்தம்

திருவிருக்குக்குறள்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1036. மன்னி யூரிறை சென்னி ஆர்பிறை
அன்னி யூர்அமர் மன்னு சோதியே.

தெளிவுரை: பிறைச் சந்திரனைச் சடை முடியில் சூடி, ஊர்தோறும் ஒளிர்ந்து அருள் தரும் ஈசன், அன்னியூரில் விளங்கும் சோதியே.

1037. பழகும் தொண்டர்வம் அழகன் அன்னியூர்க்
குழகன் சேவடி தொழுது வாழ்மினே.

தெளிவுரை: ஈசன் திருவடியைத் தொழுது, பக்தி மிக்க அடியார்களுடன் பழகுபவர்களே! வம்மின். அன்னியூரின் அழகனாய் விளங்கும் பெருமான் திருவடியைத் தொழுது வாழ்வீர்களாக.

வம் – வம்மின். வருக.

1038. நீதி பேணுவீர் ஆதி அன்னியூர்ச்
சோதி நாமமே ஓதி உய்ம்மினே.

தெளிவுரை: நியதிப்படி விளங்க வேண்டும் என்று கருதுபவர்களே! ஆதிப் பிரானாகிய, அன்னியூரில் விளங்கும் சோதியின் திருநாமத்தை ஓதி, உய்தி பெறுவீராக.

1039. பத்தர் ஆயினீர் அத்தர் அன்னியூர்ச்
சித்தர் தாள்தொழ முத்தர் ஆவரே.

தெளிவுரை: ஈசன்பால் பேரன்பு பூண்டு, பக்திமை கொண்டுள்ளீர். அதன் தொடர்பாக முத்திநலம் பெற்றவர் ஆக வேண்டும். எனவே, எல்லோருக்கும் இனிமையான தலைவராக அன்னியூரில் வீற்றிருக்கும் பெருமானாகிச் சித்தராக உள்ளவர்தம் திருவடியை, வணங்கித் துதி செய்வீராக. அது முத்தி நலனைக் கூட்டுவிக்கும்.

1040. நிறைவு வேண்டுவீர் அறவன் அன்னியூர்
மறையு ளான்கழற்கு உறவு செய்ம்மினே.

தெளிவுரை: நிறைவான இனிய வாழ்க்கை அமைய வேண்டும் என்று கருதுபவர்களே! அறத்தின் வடிவின ராகிய, அன்னியூரில் வீற்றிருக்கும், வேதப் பொருளாகும் ஈசன் கழலை, நாள்தோறும் சென்று வழிபடுவீராக.

சிறப்புரை: நாள்தோறும், பூவினால் அருச்சனை செய்து, நாவினால் பாடி, மனத்தினால் சிந்தித்து, கைகளால் கூப்பித் தொழுதலை, "கழற்கு உறவுசெய்மின்" என்பது உணர்த்திற்று.

உறவு – பக்தி.

1041. இன்பம் வேண்டுவீர் அன்பன் அன்னியூர்
நன்பொன் என்னுமின் உம்பர் ஆகவே.

தெளிவுரை: இன்பப் பெருக்கில் திளைக்க வேண்டும் என விரும்புபவர்களே! எல்லோருக்கும் அன்புடைய வனாக அன்னியூரில் வீற்றிருக்கும் ஈசன் நல்ல பொன் போன்றவன் என்பீராக. தேவர்கள் ஆகலாம்.

சிறப்புரை: மாற்றறியாத தூய பொன் கொண்டு, நாம் விழையும் வண்ணம் இழைத்து மகிழ்தலை நன்பொன் எனக் குறிப்பிட்டுள்ளது காண்க. விண்ணுலகத்தவர் எப்போதும் இன்பத்தில் திளைத்திருப்பவர்கள் என்பது இவண் சுட்டப் பட்டுள்ளதும் அறிக.

உம்பர் – விண்ணுலகத்தவர், தேவர்.

1042. **அந்த ணாளர்தம் தந்தை அன்னியூர்**
எந்தை யேஎனப் பந்த நீங்குமே.

தெளிவுரை: தூய நெறியில் நின்று வேதம் ஓதும் அந்தணர்கள் தம் தந்தை, அன்னியூரில் விளங்கும் எந்தையே என்று துதித்துப் போற்ற, பந்தபாசம் முதலான கட்டுகளாய் உள்ள தடைகள் நீங்கும்.

1043. **தூர்த்த னைச்செற்ற தீர்த்தன் அன்னியூர்**
ஆத்த மாஅடைந்து ஏத்தி வாழ்மினே.

தெளிவுரை: கொடியவனாகிய இராவணனைச் செருக்கு அழியுமாறு செற்று அடக்கிய தீர்த்தன், அன்னியூரில் வீற்றிருக்கும் பெருமான். அப்பெருமானை, விருப்பத்தோடு சார்ந்து அன்பு பெருகப் போற்றி வாழ்வீராக.

சிறப்புரை: திருக்கயிலையை எடுத்த இராவணனுடைய கொடிய பண்பையும், காமுகனாய்ச் சீதையைக் கவர்ந்த புன்செயலையும் தூர்த்தன் :என்பது உணர்த்துவதாயிற்று.

தூர்த்தன் – காமுகன், கொடியோன், இராவணன். ஆத்தம் – விருப்பம், அன்பு.

1044. இருவர் நாடிய அரவன் அன்னியூர்
பரவு வார்விண்ணுக்கு ஒருவர் ஆவரே.

தெளிவுரை: திருமாலும் பிரமனும் நாடிய அரவினை உடையவனாகிய, அன்னியூரில் வீற்றிருக்கும் பெருமானைப் பரவி, பக்திப் பெருக்கினால் தொழுபவர்கள், விண்ணுலகில் ஒப்பற்றவராய் விளங்கும் தேவேந்திரராவார்கள்.

சிறப்புரை: இவ்வுலகத்தில், ஆயிரம் வேள்விகளைப் புரிந்தவர்கள் இந்திர பதவி அடைவர் என்று நூல்கள் கூறும். அதனினும் சிறந்தது புலால் உண்ணாமை; அதனினும் சாலச் சிறப்புடையது இறைவன் திருவடியைப் பரவுதல். இறைவன் திருவடியை உள்ளம் உருகிப் பரவுதல் புலால் மறுத்தலை ஈட்டும். ஈசன் அருள், தன்னை அடைந்தவர்களுக்கு, வேண்டியவற்றை வழங்கும். எனவே தேவேந்திர பதவி கைகூடும் என உணர்த்துவதாயிற்று.

நிஷ்காமியமாகப் பரவும் அடியவர்களுக்கு, அதனினும் மேன்மையுடையதாகிய முத்திப்பேறு வாய்க்கும் என்பதும், குறிப்பால் உணர்த்தப்பட்டது.

அரவன் – அரவத்தைத் தரித்தவன் – அரன்.

1045. குண்டர் தேரருக்கு அண்டன் அன்னியூர்த்
தொண்டு ளார்வினை விண்டு போகுமே.

தெளிவுரை: மாற்றுக் கருத்துடையவர்களாகிய சமணர், பௌத்தர் ஆகியோர், அண்டி நெருங்க முடியாதவனாகிய அன்னியூர் மேவும் ஈசன், தொண்டு செய்பவர்களுடைய வினையானது சிதறிப் போகுமாறு அருள் புரிபவன்.

அண்டன் – அண்டுவதற்கு (நெருங்குவதற்கு) முடியாதவன்.

1046. பூந்த ராய்ப்பந்தன் ஆய்ந்த பாடலால்
வேந்தன் அன்னியூர் சேர்ந்து வாழ்மினே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *பூந்தராய் என்று சொல்லப்படும் சீகாழியில் மேவும் ஞானசம்பந்தரின், மெய்ப்பொருள் விளங்கும் பாடலால், அன்னியூரில் விளங்கும் ஈசனைப் போற்றிய இத் திருப்பதிகத்தைப் பொருந்த உரைத்து வாழ்வீராக.*

வேந்தன் – ஈசன்.

97. திருப்புறவம்

தல விளக்கம்: *பதிக எண் 1 காண்க.*

பண் : *குறிஞ்சி*

திருச்சிற்றம்பலம்

1047. எய்யாவென்றித் தானவர்ஊர்மூன்று எரிசெய்த
மையார்கண்டன் மாதுமைவைகும் திருமேனிச்
செய்யான்வெண்ணீறு அணிவான்திகழ்பொன் பதிபோலும்
பொய்யா நாவின் அந்தணர்வாழும் புறவம்மே.

தெளிவுரை: *எக்காலத்திலும் வெற்றியைக் கொள்ள முடியாதவர்களாகிய மூன்று புரங்களையுடைய அசுரர்களின் கோட்டைகளை எரிசெய்த பெருமான், நீலகண்டத்தை உடைய கடவுள். அப்பெருமான், சிவந்த திருமேனி உடையவன்; உமாதேவியைப் பாகமாக உடையவன்; திருவெண்ணீறு அணிபவன். அப்பெருமான் வீற்றிருக்கும் அழகிய பதியானது, பொய்ம்மை கலவாத வேதத்தை ஓதும் நாவினை*

புடைய அந்தணர்கள் வாழும் புறவம் எனப்படும் சீகாழியாகும்.

தானவர் – அசுரர், தான் என்னும் அகந்தை கொள்ளத்தக்கவர்.

1048. மாதொருபாலு மாலொருபாலும் மகிழ்கின்ற
நாதன்என்றேத்து நம்பரன்வைகும் நகர்போலும்
மாதவிமேய வண்டிசை பாட மயிலாடப்
போதுஅலர் செம்பொன் புன்னைகொடுக்கும் புறவம்மே.

தெளிவுரை: உமாதேவி ஒரு பக்கமும் திருமால் ஒரு பக்கமும் மகிழ்கின்ற நாதன் என்று ஏத்தப்படுகின்ற நம் பரமன் வீற்றிருக்கின்ற நகர் புறவம் என்பதாகும். அந்த நகரானது, மாதவி மலரில் வண்டுகள் மொய்த்து ரீங்காரம் செய்து இசை பாடவும், மயில்கள் தோகை விரித்து ஆடவும், புன்னை மலர்கள் பொன்போன்ற மகரந்தத் தூள்களைக் கொடுக்கவும் உள்ள பொலிவை உடையது.

சிறப்புரை: உமாதேவியும் திருமாலும், ஈசனை வழிபட்டு மகிழ்தலும்; உமாதேவி, ஈசனை வழிபடுதலுடன் இடப் பாகம் கொண்டு மகிழ்தலும் உணர்த்துவதாயிற்று. "அரியலால் தேவி இல்லை" எனத் திருநாவுக்கரசர் உரைப்பதும் இவண் ஓர்க.

"இந்தப் பூமி, சிவன் உய்யக் கொள்கின்றவாறு என்பது நோக்கித் திருப்பெருந்துறை உறைவாய் திருமாலாம் அவன் விருப்பு எய்தவும்" எனவும், "தழல் எரித்த அந்நாளில் இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ" எனவும் மாணிக்கவாசகர் உரைத்தமையும் இவண் நோக்கத்தக்கது.

1049. வற்றாநதியும் மதியும்பொதியும் சடைமேலே
புற்றுஆர் அரவின் படம்ஆடவும்இப் புவனிக்கோர்

பற்றாய்இடுமின் பலிஎன்றுஅடைவார் பதிபோலும்
பொற்றாமரையின் பொய்கை நிலாவும் புறவம்மே.

தெளிவுரை: வற்றாத நதியாகிய கங்கையும் சந்திரனும் பொதிந்து விளங்கும் சடையில், புற்றுள் விளங்கும் அரவத்தையும் வைத்திருக்க, அது ஆடவும், இந்த உலகத்திற்கு ஒரு பற்று என்கின்றதைப் போல, பிச்சை இடுவீராக! என்று கேட்டு அடைபவராய், ஈசன் விளங்கும் பதியானது, பொற்றாமரைக் குளம் திகழும் புறவம் ஆகும்.

சிறப்புரை: அன்னதானம் முதலானவற்றைப் பிச்சைப் பொருளாக இட்டுப் பெறுகின்ற பேறு மண்ணுலகத்திற்கு வாய்த்துள்ள சிறப்பாக உள்ளதெனப் புலப்படுத்த "புவனிக்கோர் பற்றாய் இடுமின் பலி" என்று கூறப்பட்டது.

புறவம் – சீகாழி.

1050. துன்னார்புரமும் பிரமன்சிரமும் துணிசெய்து
மின்னார்சடைமேல் அரவும்மதியும் விளையாடப்
பன்னாள் இடுமின் பலிஎன்று அடைவார் பதிபோலும்
பொன்னார் புரிநூல் அந்தணர்வாழும் புறவம்மே.

தெளிவுரை: பகைமை கொண்ட முப்புரங்களையும், பிரமன் சிரத்தையும் அழித்து, மின்னல்போன்று ஒளிரும் சடைமேல் அரவமும், சந்திரனும் பகையொழித்து மகிழ்ந்து விளையாடுமாறு பொருந்த வைத்து பல நாட்கள் பிச்சையிடுமின் என்று மொழிந்து விளங்குகின்ற பரமன் பதியானது, அழகிய முப்புரிநூல் அணிந்த அந்தணர்கள் வாழும் புறவம் ஆகும்.

சிறப்புரை: சந்திர கிரகணம் என்பது சந்திரனைப் பாம்பு விழுங்குவதாகக் கொள்ளப்படும் தன்மையில், பகைப்

பாங்குடையதெனக் கருதப்பட்டு, ஈசன் திருவருள் அவ்வியல்பினை மாற்றி, மகிழ்ந்து விளையாடுமாறு ஆக்கியது என உணர்த்துவதாயிற்று.

பொன் – அழகு.

1051. தேவாஅரனே சரண்என்று இமையோர் திசைதோறும்
காவாய்என்று வந்தடையக்கார் விடம் உண்டு
பாவார் மறையும் பயில்வோர்உறையும் பதிபோலும்
பூவார் கோலச் சோலைசுலாவும் புறவம்மே.

தெளிவுரை: தேவாதி தேவனே! அரனே! சரணம்! என்று எல்லாத் திசைகளிலும் சூழ்ந்து காவாய் என்று வந்து குழுமி ஏத்த, கரிய விடத்தை உட்கொண்டு வீற்றிருக்கும் பதியானது, பாடல்களோடு விளங்கும் வேதங்களை ஓதுபவர்களும் பூக்கள் விளங்கும் சோலைகளும் திகழும் புறவம் ஆகும்.

1052. கற்றுஅறிவெய்திக் காமன்முன்னாகும் முகவெல்லாம்
அற்றரனேநின் னடிசரண்என்னும் அடியோர்க்குப்
பற்றதுவாய பாசுபதன்சேர் பதிஎன்பர்
பொற்றிகழ்மாடத்து ஒளிகள் நிலாவும் புறவம்மே.

தெளிவுரை: யாவும் கற்றறிந்தவனாகி, காமவேள் முகத்தை அறுமாறு செய்த அரனே! நின் திருவடி சரணம் என்னும் அடியவர்களுக்குப் பற்றாகி இருந்து பற்றி, அருள் புரியும் ஈசன் சேர்ந்து விளங்குகின்ற பதி என்பது அழகிய மாட மாளிகைகளின் ஒளிசூழ் புறவம்.

பாசுபதன் – பாசுபதம் என்னும் படையை உடைய ஈசன்.

1053. எண்திசையோர் அஞ் சிடுவகைகார்சேர் வரைஎன்னக்
கொண்டெழு கோல முகில்போல்பெரிய கரிதன்னைப்
பண்டுஉரி செய்தோன் பாவனைசெய்யும் பதிஎன்பர்
புண்டரிகத் தோன் போல்மறையோர்சேர் புறவம்மே.

தெளிவுரை: எட்டுத் திசையில் உள்ளவர்களும் அஞ்சி நடுங்குமாறு கரிய மலைபோன்றும், எழுகின்ற முகில் போன்றும் தழைய வந்த பெரிய யானையை உரித்து வீரம் புரிந்த பாவனையில், ஈசன் விற்றிருந்து திகழும் பதி என்று சொல்லப்படுவது, தாமரை மலரின்மேல் விளங்கும் பிரமனைப்போல் மறை வல்லவர்கள் சேர்ந்து விளங்கும் புறவம்.

புண்டரிகம் – தாமரை.

1054. பரக்கும்தொல்சீர்த் தேவர்கள் சேனைப் பௌவத்தைத்
துரக்கும் செந்தீப் போல்அமர் செய்யும் தொழில்மேவும்
அரக்கன்திண்டோள் அழிவித்தானக் காலத்தில்
புரக்கும்வேந்தன் சேர்தருமூதூர் புறவம்மே.

தெளிவுரை: தேவர்களுடைய சேனைகளைக் கடலில் மூழ்குமாறு விரட்டி, ஊழித் தீயைப் போன்று கடுமையாகப் போர் புரியும் தொழிலையுடைய அரக்கனாகிய இராவணனின் தோள் அழியுமாறு செய்த ஈசன், காத்தல் செய்து புரக்கும் மூதூர் புறவமே.

1055. மீத்திகழ் அண்டம் தந்தயனோடு மிகுமாலும்
மூர்த்தியை நாடிக் காணவொணாது முயல்விட்டுஆங்கு
ஏத்தவெளிப்பாடு எய்தியவன்றன் இடம்என்பர்
பூத்திகழ் சோலைத் தென்றல்உலாவும் புறவம்மே.

தெளிவுரை: மேல் ஒளிர்கின்ற அண்டங்களை எல்லாம் படைக்கும் பிரமனும், மிக்க பெருமையுடைய திருமாலும் ஈஸ்வரமூர்த்தியை நாட வேண்டும் என்று பலவாறு முயற்சி செய்தும் அச்செயல் கைகூடப் பெறாமையால் கைவிட்டு, ஆங்குப் பக்தி சிரத்தையுடன் ஏத்த, வெளிப்பட்டுக் காட்சி நல்கிய

இடம் என்பது, பூக்கள் திகழ் சோலைகளில் தென்றல் உலாவும் புறவமே.

1056. வையகநீர்தீ வாயுவும் விண்ணும் முதலானான்
மெய்யலதோர் உண்டுஇலை என்றே நின்றுஏதம்
கையினில் உண்போர் காணவொணாதான் நகரென்பர்
பொய்யகம்இல்லாப் பூசுரர்வாழும் புறவம்மே.

தெளிவுரை: *நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என ஐம்பூதங்களுக்கும் ஆதியான ஈசன் விளங்கி நிற்க, மெய்ம்மையில்லாத 'உண்டு, இல்லை' எனும் கொள்கையால் வாழும் தேரர்கள் கருதவொண்ணாத நகர், பொய்ம்மை சிறிதளவும் அகத்தில் கொள்ளாத அந்தணர்கள் வாழும் புறவம் என்பர்.*

பூசுரர் – பூவுலகத் தேவர்கள், அந்தணர்.

1057. பொன்னியல்மாடப் புரிசைநிலாவும் புறவத்து
மன்னிய ஈசன் சேவடிநாளும் பணிகின்ற
தன்னியல்பில்லாச் சண்பையர் கோன்சீர்ச் சம்பந்தன்
இன்னிசை ஈரைந்து ஏத்தவல்லோர்கட்கு இடல்போமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *அழகிய மாட மாளிகைகளும் மதில்களும் நிலவும் புறவம் என்னும் பதியில் விளங்கும் ஈசன் சேவடியை நாள்தோறும் பணிகின்ற தன்னியல்பி லிருந்து அகன்று, ஈசன் அருள்வண்ணத்தின் இயல்புடைய சண்பையர் கோனாகிய புகழ்மிக்க ஞானசம்பந்தன், இன்னிசையோடு மொழியலுற்ற இத் திருப்பதிகத்தை, ஏத்திப் பாடவல்லவர்களுக்கு, இடரானது நீங்கிப் போகும்.*

98. திருச்சிராப்பள்ளி

தல விளக்கம்: காவிரி தென்கரைத் தலம். இத் திருத் தலத்திற்குத் தென்கயிலாயம் என்றும் பெயர் உண்டு. பிரமன், இந்திரன், சடாயு, சப்தரிஷிகள், திரிசிரன், சாரமா முனிவர், மௌன குரு, தாயுமானவர் முதலியோர் வழிபட்டது. மலையின்மேல் உள்ள தலம். மேலே மலை உச்சியில் உச்சிப் பிள்ளையார் கோயில் உள்ளது.

கர்ப்பிணிப் பெண்ணுக்கு, அவள் தாய் வடிவம் கொண்டு பிரசவம் பாந்த்தார் ஈசன். எனவே தாயும் ஆனவர் என்னும் திருநாமம் வழங்குவதாயிற்று.

சுவாமி : தாயுமானவர், மாத்ருபூதேஸ்வரர்.

அம்பிகை : மட்டுவார் குழலி, சுகந்த குந்தளாம்பிகை

தீர்த்தம் : காவிரி, சிவகங்கை, பிரமதீர்த்தம், நன்றுடை யான், தீயதில்லான்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1058. நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையான்னைக் கூறஎன்னுள்ளம் குளிரும்மே.

தெளிவுரை: நன்றுடையான் தீயதில்லான் என்னும் மகிமை வாய்ந்த தீர்த்தங்கள் உடையவனை, வெண்மையான வண்ண இடபம் உடையவனை, உமா தேவியைப் பாகம் கொண்டவனை, இயல்பாகவே செல்வத்தை உடையவனை, சிராப்பள்ளிக் குன்றின் மேல் விளங்கும் நாதனைப் போற்றிக் கூற, என் உள்ளமானது மகிழ்ச்சி கொள்ளும்.

சிறப்புரை: எல்லா நன்மைகளையும் உடையவனும், தீயது ஒன்றும் இல்லாதவன் என்பதும் "நன்றுடை யானைத் தீயதிலானை" என உணர்த்தலும் ஆம். "நல்லாரை நன்மை அறிவாய் நீயே" என வரும் திருநாவுக்கரசர் வாக்கும் காண்க.

இந்திர பிரமாதியர் அனைவரும் புண்ணிய வசத்தால் மற்றும் ஈசனை வழிபடுவதால் ஈட்டிப் பெறும் செல்வத்தினராய் விளங்க, முற்படு பொருளாகிய முதற்பொருள் எனவாகும் ஈசன், எவ்விதமான சங்கல்பத்திற்கும் சாராமல் இயல்பாகவே செல்வம் உடையவனாதலைச் சென்றடையாத திருஉடையான் என உணர்த்தப் பட்டது.

குளிரும் – மகிழும்.

1059. கைம்மகவுஏந்திக் கடுவனொடுஊடிக் கழைபாய்வான்
செம்முக மந்தி கருவரையேறும் சிராப்பள்ளி
வெம்முகவேழத்து ஈர்உரி போர்த்த விகிர்தாநீ
பைம்முகநாகம் மதியுடன்வைத்தல் பழியன்றே.

தெளிவுரை: பெண் குரங்கு தன் குட்டியை அணைத்துக் கொண்டு ஆண் குரங்குடன் பிணக்குற்றுக் கரிய மலை யேறும் தன்மையுடையது சிராப்பள்ளி. அத் திருத் தலத்தில் வீற்றிருக்கும் பெருமானே! கொடிய யானையின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்ட விகிர்தனே! நாகத்தைச் சந்திரனுடன் பொருந்துமாறு வைத்த நின் செயல் பழியாகாது.

கழை – மூங்கில்; வெம்முக வேழம் – சினங்கொண்ட யானை.

1060. மந்தம்முழவம் மழலைததும்ப வரைநீழல்
செந்தண் புனமும் சுனையும்சூழ்ந்த சிராப்பள்ளிச்

சந்தம் மலர்கள் சடைமேலுடையார் விடையூரும்
எந்தம் மடிகள் அடியார்க்கு அல்லல் இல்லையே.

தெளிவுரை: பொருள் விளக்கம் புலனாகாதவாறு அமையப் பெற்ற, மழலை ததும்பும் முழவத்தின் ஒலி போல் "இழும்..." என ஓசையுடன் கூடிய மலையின் நீழலில், சோலையும் சுனையும் விளங்கச் சிராப் பள்ளியில், அழகிய மலர்களைச் சடைமேல் தரித்து இடபவாகனத்தில் அமர்ந்திருப்பவர், எம் அடிகளாகிய ஈசன். அவர்தம் அடியவர்களுக்கு, அல்லல் இல்லை.

அல்லள் – அறியாமையாகிய இருள்; துன்பம்.

1061. துறைமல்குசாரல் சுனைமல்கு நீலத்து இடைவைகிச்
சிறைமல்கு வண்டும் தும்பியும்பாடும் சிராப்பள்ளிக்
கறைமல்கு கண்டன் கனலெரியாடும் கடவுள்ளெம்
பிறைமல்கு சென்னி யுடையவன்எங்கள் பெருமானே.

தெளிவுரை: சிராப்பள்ளிக் குன்றின் சாரலில் சுனைகள் விளங்கவும் நீலவண்ண மலர்கள் இடை மல்க, சிறகு களையுடைய வண்டும் தும்பியும் பாட, நீலகண்டக் கடவுளாகிய எம்பரமன் சந்திரனைத் தலையில் சூடி நெருப்பைக் கையில் கொண்டு ஆடுபவன்.

1062. கொலைவரையாத கொள்கையர்தங்கள் மதில்மூன்றும்
சிலைவரையாகச் செற்றனரேனும் சிராப்பள்ளித்
தலைவரை நாளும் தலைவர்அல்லாமை உரைப்பீர்காள்
நிலவரைநீலம் உண்டதும் வெள்ளை நிறமாமே.

தெளிவுரை: அளவில்லாத கொலைகளைச் செய்யும் முப்புரத்தின் அசுரரின் மூன்று கோட்டைகளையும் மேரு மலையை வில்லாகக் கொண்டு போரிட்டு அழித் தவர் ஈசன். அவர் சிராப்பள்ளியில் விளங்கும் தலையாயவர். அப்பெருமானை அவ்வாறு அல்ல

என்று உரைப்பவர்களே! நீல வண்ணம் நிலத்தின்பால் பதிந்து இருக்க, அது வெண்மை நிறம் கொண்டது என்று உரைப்பது பொருந்துமோ!

சிறப்புரை: வெண்மையான வட்டத்தின் மையப் பகுதியில் நீல வண்ணத்தால் ஆன கோடு வரைந்து இரவில் சற்றுத் தொலைவில் பேரொளி பதியும்கால், நோக்கும்போது, யாவும் ஒரே வெண்மை வண்ண மாகத் தோற்றம் கொள்வது இயல்பு. (இதனை, இரவில் பேருந்து வாகனங்களில் செல்லும்போது நோக்கலாம்). இக்கருத்து, உண்மையைத் தோற்றத்தால் மறைத்தாலும் ஆழ்ந்து நோக்கி அறியும் தன்மையைச் சுட்டிக் காட்டியும், ஈசன் தலைமையானவன் என உறுதிப் படுத்துமாறு உணர்த்தியது காண்க.

1063. வெய்யதண்சாரல் விரிநிறவேங்கைத் தண்போது
செய்யபொன்சேரும் சிராப்பள்ளிமேய செல்வனார்
தையலொர்பாக மகிழ்வர்நஞ்சுண்பர் தலையோட்டில்
ஐயமும்கொள்வர் ஆர்இவர்செய்கை அறிவாரே.

தெளிவுரை: விருப்பம் மிகுந்த குளிர்ந்த சாரலில் வேங்கை மரத்தின் மலர்கள் பொன்போன்று திகழக் கூடிய சிராப்பள்ளி மேவும் செல்வனாகிய பரமன், உமாதேவியை ஒரு பாகம் கொண்டு மகிழ்வர்; நஞ்சு உட்கொள்வர்; பிரம கபாலம் ஏந்திப் பிச்சை எடுப்பர். அத்தகைய வேறுபட்ட செயல்களைப் புரியும் இவரை, யார்தான் அறிந்து கொள்ள இயலும்.

வெய்ய – விரும்பும் தன்மை. தையல் – உமாதேவி.

1064. வேயுயர்சாரல் கருவிரல்ஊகம் விளையாடும்
சேயுயர்கோயில் சிராப்பள்ளிமேய செல்வனார்

பேய்உயர்கொள்ளி கைவிளக்காகப் பெருமானார்
தீயுகந்து ஆடல் திருக்குறிப்பாயிற்று ஆகாதே.

தெளிவுரை: மூங்கில்கள் உள்ள மலைச் சாரலில் கருங்குரங்கு விளையாடிக் களிக்க, மலையின்மேல் உள்ள சிராப்பள்ளியில் கோயில் கொண்டிருக்கும் செல்வனாகிய ஈசன், பேய்கள் உயர்ந்த தீப் பந்தங்களைக் கைவிளக்காகக் கொண்டு, கையில் அனலை ஏந்தி ஆடும் கொள்கையே, திருக் குறிப்பாயிற்று என்றால், அது ஆகாது.

சிறப்புரை: தாயும் ஆனவராக விளங்கும் ஈசன் அச்சம் தோன்றுமாறு செய்யும் செயல் ஆயின் அது முறை யாகாது என, அன்பால் ஈர்க்கும் சமத்காரத்தின் காரணமாக உணர்த்துவதாயிற்று.

கருவிரல் ஊகம் – கருங்குரங்கு. திருக்குறிப்பு – ஈசன் எண்ணம், நினைப்பது.

1065. மலைமல்குதோளன் வலிகெடஊன்றி மலரோன்றன்
தலைகலனாகப் பலிதிரிந்து உண்பர் பழிஓரார்
சொலவலவேதம் சொலவலகீதம் சொல்லும்கால்
சிலவலபோலும் சிராப்பள்ளிச்சேடர் செய்கையே.

தெளிவுரை: மலைபோன்ற வலிமையும் உறுதியும் உடைய தோளினை உடைய இராவணனுடைய வலிமை கெடுமாறு, திருப்பாத மலரால் ஊன்றி, மலர்மீது உறைபவனாகிய பிரமன் கொண்டிருந்த ஐந்து தலைகளில் ஒன்றைக் கொய்து, அதனைக் கபாலமாக ஏந்தி, பிச்சையேற்றுத் திரிந்து உண்பவராய், அதனால் உண்டாகும் பழிச்சொல்லையும் ஆராயாதவர் ஈசன். அப் பெருமானைப் பற்றிச் சொல்லப்படும் வேதம், கீதம் முதலானவற்றை ஆய்ந்து

பார்க்கும் போது, சில செய்திகள் இல்லாத தன்மை உடையன போல் சிராப்பள்ளியில் பெருமை கொள்ளும் ஈசன் செயல் தோற்றம் கொள்ளும்.

சொலவல வேதம் – சொல்லுதற்கு வல்லமையாகிய வேதம். சொல வல கீதம் – சொல்லுதற்கு அல்ல போலும். அல – அல்லது – இல்லாததன்மை உடையது. சேடர் – ஈசன்.

1066. அரப்பள்ளியானும் அலர்உறைவானும் அறியாமைக்
கரப்புஉள்ளிநாடிக் கண்டிலரேனும் கல்சூழ்ந்த
சிரப்பள்ளிமேய வார்சடைச்செல்வர் மனைதோறும்
இரப்புள்ளீர்உம்மை ஏதிலர்கண்டால் இகழாரே.

தெளிவுரை: பாம்பினைப் படுக்கையாகக் கொண்ட திருமாலும், மலர்மேல் உறையும் பிரமனும், அறியாமை கொள்ளக் கரந்து உள்ளவர் ஆகி, மறைந்தவர் ஆனாலும், சிராப்பள்ளி மலையில் விளங்கும் அழகிய சடையுடைய செல்வராகிய ஈசன், மனைகள்தோறும் பிச்சை எடுத்தவர் ஆயினார். இச்செயலை அயலவர் கண்டால் இகழ்ச்சி கொண்டு பழி சொல்லமாட்டார் களோ!

சிறப்புரை: ஈசன் பக்திமையால் காணப்படு பவனேயன்றி மற்ற தன்மையால் காணப் பெறாதவன் என்பதும், பத்திமையால் வழங்கும் நிந்தாஸ்துதியும் அர்ச்சனை ஆகும் எனவும் இவண் உணர்த்தப்படுவது காண்க.

அலர் – மலர். கரப்பு – மறைப்பு. இரப்பு – பிச்சையேற்றல். ஏதிலர் – மாற்றார்.

1067. நாணாது உடைநீத் தோர்களும் கஞ்சி நாட்காலை
ஊணாப் பகல்உண்டு ஓதுவோர்கள் உரைக்கும்சொல்
பேணாதுறுசீர் பெறுதும்என்பீர்எம் பெருமானார்
சேணார்கோயில் சிராப்பள்ளிசென்று சேர்மினே.

தெளிவுரை: நாணத்தைக் கைவிட்டும், உணவைப் பெரிதாகக் கொள்ளும் பான்மையர்கள் புறம் உரைக்கும் சொற்களைக் கொள்ளாது, பெறத்தகுந்த நல்ல சிறப்புகளைப் பெறவேண்டும் என்று விரும்புகின்றவர்களே! எம்பெருமான் வீற்றிருக்கும் உயர்ந்த திருக்கோயிலாகிய சிராப்பள்ளி அடைந்து ஈசனை வணங்குவீராக.

1068. தேனயம்பாடும் சிராப்பள்ளியானைத் திரைசூழ்ந்த
கானல்சங்கேறும் கழுமலவூரிற் கவுணியன்
ஞானசம் பந்த னலமிகுபாடல் இவைவல்லார்
வானசம்பந்தத் தவரொடுமன்னி வாழ்வாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: தேன் இசைத்துப் பாடும் சிறப்புடைய சிராப்பள்ளியில் விளங்கும் பெருமானைக் கனிந்து கண்டு, கடல் சூழ்ந்த கானலில் சங்குகள் திகழும் கழுமலநகரின் ஞானசம்பந்தன் உரைத்த இத் திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள், தேவர்களுடன் மகிழ்ந்து இருப்பர்.

99. திருக்குற்றாலம்

தல விளக்கம்: பாண்டிய நாட்டுத் தலம். இத்தலத்திற்கு உரிய வேறு பெயர்கள்: திரிகூடமலை, திரிகூடாசலம். நடராசப்பெருமான் நடனம் புரியும் ஐந்து சபைகளுள் இது சித்திர சபை. அகத்திய முனிவர் வழிபட்டது.

சுவாமி : குற்றாலநாதர், திரிகூடாசலேஸ்வரர்

அம்பிகை : குழல்வாய் மொழியம்மை, வேணுவாக்குவாகினி

தல மரம் : குறும்பலா

தீர்த்தம் : வட அருவி.

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1069. வம்பார்குன்றம் நீடுயர்சாரல் வளர்வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண்டுயாழ்செய் குற்றாலம்
அம்பால் நெய்யோடு ஆடல்அமர்ந்தான் அலர்கொன்றை
நம்பால்மேய நன்னகர்போலும் நமரங்காள்.

தெளிவுரை: *அன்பர்காள்! அழகிய குன்றும் நீண்டு வளர்ந்த சாரலில் வேங்கை மரங்களும் சோலைகளும் திகழ, அழகிய வடிவத்தை உடைய வண்டுகள் யாழ் போன்று ரீங்காரம் செய்யும் குற்றாலமானது, அழகிய ஆடல் புரியும் ஈசன், பாலும் நெய்யும் பூசனைப் பொருளாய் ஏற்று மகிழ்ந்து கொன்றை மலர் சூடி நமக்கு அருள் புரிவதற்காக வீற்றிருக்கும் நல்ல நகர் ஆகும்.*

அம் – அழகிய. நமரங்காள் – அன்பர்கள்.

1070. பொடிகள்பூசித் தொண்டர்பின்செல்லப் புகழ்விம்மக்
கொடிகளோடும் நாள்விழமல்கு குற்றாலம்
கடிகொள்கொன்றை கூவிளமாலை காதல்செய்
அடிகள்மேய நன்னகர்போலும் மடியீர்காள்.

தெளிவுரை: *அடியவர் பெருமக்களே! திருவெண்ணீறு தரித்துத் தொண்டர்கள் குழுமிப் பின் செல்ல, புகழ் மிக்க கொடி தோரணங்கள் மலிந்து, தினந்தோறும் விழாச்சிறப்பு மல்கும் குற்றாலமானது, மணம் மிக்க கொன்றை மலரும் வில்வமாலையும் விரும்பி அணியும் அடிகளாகிய ஈசனார் மேவும் நல்ல நகர் ஆகும்.*

மடியீர் – அடியீர். சந்தம் நோக்கி மகரம் மிகுந்தது.

1071. செல்வமல்கு செண்பகம்வேங்கை சென்றுஏறிக்
கொல்லைமுல்லை மெல்லரும்பூனும் குற்றாலம்
வில்லின்ஒல்க மும்மதில்எய்து வினைபோக
நல்குநம்பான் நன்னகர்போலும் நமரங்காள்.

தெளிவுரை: *அன்பர்களே! வளம் பெருக்கும் செண்பகம், வேங்கை ஆகியவற்றின் மீது படர்ந்து காட்டு முல்லை அரும்புகளை வழங்கும் தன்மை கொண்ட குற்றாலமானது, முப்புரங்களை வில்லால் எய்து அழித்து, வினைகள் கெடுமாறு வரங்கள் நல்கும் நம்பனாகிய ஈசன் விளங்கும் நல்ல நகர் ஆகும்.*

செல்வம் – வளம். நம்பான் – நம்பன், ஈசன்.

1072. பக்கம்வாழைப் பாய்கனியோடு பலவின்தேன்
கொக்கின்கோட்டுப் பைங்கனிதூங்கும் குற்றாலம்
அக்கும்பாம்பும் ஆமையும் பூண்டோர் அனலேந்தும்
நக்கன்மேய நன்னகர்போலும் நமரங்காள்.

தெளிவுரை: *அன்பர்களே! வாழை, பலா, மாங்கனிகள் மல்கிப் பெருகும் குற்றாலமானது; எலும்பு, பாம்பு, ஆமை ஆகியவற்றைப் பூண்டு, கையில் நெருப்பு ஏந்தி, கோவண ஆடையுடன் விளங்கும் ஈசன் விளங்கும் நல்ல நகர் ஆகும்.*

சிறப்புரை: *வாழை மரத்தின் பக்கப் பகுதியில் குலை தள்ளும் வாழைக்கனிகளும், மாமரத்தின் கிளைகளில் விளங்கும் அழகிய மாங்கனிகளும் நயமுடன் சுட்டப்படும் தன்மை காண்க.*

கொக்கு – மாமரம். அக்கு – எலும்பு, சங்குமணி, உருத்திராக்கம். நக்கன் – ஈசன்.

1073. மலைஆர்சாரல் மகவுடன்வந்த மடமந்தி
குலைஆர்வாழைத் தீங்கனிமாந்தும் குற்றாலம்

இலைஆர்சூலம் ஏந்திய கையான் எயில்எய்த
சிலையான்மேய நன்னகர்போலும் சிறுதொண்டீர்.

தெளிவுரை: தொண்டு செய்பவர்களே! மலையின் சாரலில் குட்டியுடன் வந்த பெண் குரங்கு, வாழைக் கனிகளை மாந்தித்தின்னும் குற்றாலமானது, சூலத்தை ஏந்தி, மேருமலையை வில்லாகக் கொண்டு, முப்புரங் களை எரித்து விளங்கும் ஈசன், வீற்றிருக்கும் நல்ல நகர் ஆகும்.

1074. மைம்மாநீலக் கண்ணியர்சாரல் மணிவாரிக்
கொய்ம்மாஏனல் உண்கிளிஒப்பும் குற்றாலம்
கைம்மாவேழத்து ஈர்உரிபோர்த்த கடவுள்எம்
பெம்மான்மேய நன்னகர்போலும் பெரியீர்காள்.

தெளிவுரை: பெரியோர்களே! அழகிய நீலமலர் போன்ற கண்களை உடைய குற மாதர்கள்; மணிகள் விளங்கித் திகழும் மலைச்சாரலில் தினைப்புனத்தில் உள்ள தினைக்கதிர்களை உண்ணும் கிளிகளை ஓட்டும் தன்மைசூழ் குற்றாலமானது, யானையின் தோலை உரித்துப் போர்த்த, எம் கடவுளாகிய பெருமான் விளங்கும் நல்ல நகர் ஆகும்.

ஏனல் – தினைப்புனம். ஒப்பும் – ஓட்டும்.

1075. நீலநெய்தல் தண்சுனைசூழ்ந்த நீள்சோலைக்
கோலமஞ்ஞை பேடையொடுஆடும் குற்றாலம்
காலன்றன்னைக் காலாற்காய்ந்த கடவுள்எம்
சூலபாணி நன்னகர்போலும் தொழுவீர்காள்.

தெளிவுரை: இறைவனைத் தொழுது போற்றும் பெருமை படைத்தவர்களே! நீலநிறமுள்ள நெய்தல் பூக்கள், சுனைகளில் சூழ்ந்து விளங்க, அகன்ற சோலை களில், அழகிய மயில்கள் தம் பெடையோடு ஆடி

மகிழ்கின்ற குற்றாலமானது, காலனைக் காலால் உதைத்து அழித்த கடவுளாகிய, சூலத்தைக் கையில் கொண்ட ஈசன், வீற்றிருக்கும் நல்ல நகர் ஆகும்.

மஞ்ஞை – மயில்.

1076. போதும்பொன்னும் உந்தியருவி புடைசூழக்
கூதல்மாரி நுண்துளிதூங்கும் குற்றாலம்
மூதூர்இலங்கை முட்டியகோனை மிறைசெய்த
நாதன்மேய நன்னகர்போலும் நமரங்காள்.

தெளிவுரை: அன்பர்களே! பொன்னும் மலர்களும் உந்தித் தள்ளும் நீர் அருவிகள் புடைசூழ, குளிர்ந்த மழைத்துளிகள் வீசும் குற்றாலமானது, இலங்கை வேந்தனாகிய இராவணனை நெருக்கி வருத்திய நாதனாகிய ஈசன் விளங்கும் நல்ல நகர் ஆகும்.

போது – மலர்; புடை – பக்கம். மிறை செய்த – வருத்திய. கோன் – இராவணன்.

1077. அரவின்வாயின் முள்ளெயிறுஏய்ப்ப அரும்பீன்று
குரவம்பாவை முருகமர்சோலைக் குற்றாலம்
பிரமன்னோடு மாலறியாத பெருமையெம்
பரமன்மேய நன்னகர்போலும் பணிவீர்காள்.

தெளிவுரை: இறைவனைப் பணிந்து மகிழ்பவர்களே! பாம்பின் வாயில் உள்ள கூர்மையான முள்போன்ற குரவம் முதலான அழகிய மலர்கள் சூழ்ந்த சோலையுடைய குற்றாலமானது, பிரமனும் திருமாலும் அறியாத பெருமையுடைய எமது பரமன் வீற்றிருக்கும் நல்ல நகர் ஆகும்.

அரும்பு ஈன்று – மலர் ஆதல்.

1078. பெருந்தண்சாரல் வாழ்சிறைவண்டு பெடைபுல்கிக்
குருந்தம் ஏறிச் செவ்வழிபாடும் குற்றாலம்
இருந்து உண்டேரும் நின்றுண்சமணும் எடுத்தார்ப்ப
அருந்தண்மேய நன்னகர்போலும் அடியீர்காள்.

தெளிவுரை: *இறைவனுக்கு எப்போதும் மெய்யடியாராய் உள்ளவர்களே! அகன்ற குளிர்ச்சி பொருந்திய சாரலில் வாழும் சிறகுகளை உடைய வண்டு, தன் பெடையுடன் சேர்ந்து குருந்தம் ஏறிச் செவ்வழி என்னும் இனிய பண்ணிசைக்கும் எழில் கொள்ளும் குற்றாலமானது, இருந்து உணவு கொள்ளும் தேரரும் நின்று உணவு கொள்ளும் சமணர்களும் ஏற்று நுகர்ந்து மகிழ்தற்கு அரியவனாய்த் தண்மையனாய் மேவும் ஈசன் வீற்றிருக்கும் நல்ல நகர் ஆகும்.*

உண்டேரும் – உண்ணும் தேரரும்.

1079. மாடவீதி வருபுனல்காழி ஆர்மன்னன்
கோடல்ஈன்று கொழுமுனைகூம்பும் குற்றாலம்
நாடவல்ல நற்றமிழ்ஞான சம்பந்தன்
பாடல்பத்தும் பாடநம்பாவம் பறையுமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *மாட வீதிகளும், வளம் பெருகும் நீர் நிலைகளும் உடைய காழிப்பதியில் விளங்கும் வேந்தனாகிய கோடல் எனப்படும் செம்மையான பூக்களைத் தந்து உச்சி கூம்பி விளங்குதலையுடைய குற்றால நாதனை நாடிப் போற்றி உரைத்த நற்றமிழ் ஞானசம்பந்தனின் திருப்பதிகத்தைப் பாட நம் பாவமானது விலகிச் செல்லும்.*

100. திருப்பரங்குன்றம்

தல விளக்கம்: பாண்டிய நாட்டுத் தலம். நக்கீரர் வாழ்ந்த திருத்தலம். சிபிச்சக்கரவர்த்தி, பிரமன், நக்கீரர் பூசித்தது.

தற்போது இது முருகப்பெருமான் தலமாக விளங்குகின்றது. ஆறுபடை வீடுகளுள் ஒன்று.

சுவாமி : பரங்கிரிநாதர்

அம்பிகை : ஆவுடை நாயகி

தீர்த்தம் : சரவணப் பொய்கை, லட்சுமி தீர்த்தம்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1080. நீடலர்சோதி வெண்பிறையோடு நிரைகொன்றை
சூடலன்அந்திச் சுடர்எரியேந்திச் சுடுகானில்
ஆடலன்அஞ்சொல் அணிஇழையாளை ஒருபாகம்
பாடலன்மேய நன்னகர்போலும் பரங்குன்றே.

தெளிவுரை: ஈசன், நீடித்து மலரவல்ல வெண்மையான பிறைச் சந்திரனும், கொன்றை மலரும் சூடுபவன்; இரவில் கையில் நெருப்பு ஏந்தி, சுடுகாட்டில் ஆடுகின்றவன்; ஞானவல்லியாக விளங்கும் உமாதேவியை ஒரு பாகமாக உடையவன். அப் பெருமான் மேவி விளங்கும் நல்ல நகர், பரங்குன்றம் ஆகும்.

1081. அங்கமொருஆறும் மருமறைநான்கும் அருள்செய்து
பொங்குவெண்ணூலும் பொடியணிமார்பிற் பொலிவித்துத்
திங்களும்பாம்பும் திகழ்சடைவைத்தோர் தேன்மொழி
பங்கினன்மேய நன்னகர்போலும் பரங்குன்றே.

தெளிவுரை: நான்கு வேதங்களும் அதன் ஆறு அங்கங்களும் அருளிச் செய்து, திருவெண்ணீறும், முப்புரி நூலும் மார்பில் பொலிய, சந்திரனும் பாம்பும் திகழ்கின்ற சடையில் வைத்துத் தேன் போன்ற மொழி பேசும் உமாதேவியைப் பாகமாக உடைவனாகிய ஈசன் மேவும் நல்ல நகர் பரங்குன்றம் ஆகும்.

1082. நீரிடம்கொண்ட நிமிர்சடைதன்மேல் நிரைகொன்றை
சீரிடம்கொண்ட எம்மிறைபோலும் சேய்தாய
ஒருடம்புஉள்ளே உமையொருபாகம் உடனாகிப்
பாரிடம்பாட இனிதுறைகோயில் பரங்குன்றே.

தெளிவுரை: கங்கையைத் தாங்கிய சடை முடியில் கொன்றை மலரைச் சிறப்பாகச் சூடிய எம் இறையாகிய ஈசன், தனது தேகத்தில் ஒரு பாதியில் உமா தேவியைப் பாகங்கொண்டு உடனாகிப் பூதகணங்கள் பாட இனிது உறைகின்ற கோயில் பரங்குன்றம் ஆகும்.

சிறப்புரை: சடை முடியில் கங்கையும், உடம்பின் அங்கமாக உமாதேவியும் விளங்கி நிற்கும் தன்மையினைச் சேய்தாய நிலையாய் அமைந்தவாறு, என்று கூறப்பெறுகிறது.

பாரிட்ம் – பூத கணங்கள்.

1083. வளர்பூங்கோங்க மாதவியோடு மல்லிகைக்
குளிர்பூஞ்சாரல் வண்டறைசோலைப் பரங்குன்றம்
தளிர்போல்மேனித் தையல்நல்லாளோடு ஒருபாகம்
நளிர்பூங்கொன்றை சூடினன்மேய நகர்தானே.

தெளிவுரை: மாதவி, கோங்கு, மல்லிகை வளரும் பூஞ் சோலைகளில் வண்டுகள் ரீங்காரம் செய்ய, இளந்தளிர் போன்ற மென்மையான மேனியையுடைய

மங்கை நல்லாளாகிய உமாதேவியை ஒரு பாகத்தில் வைத்து, கொன்றை மலரைச் சூடியவனாகிய ஈசன் மேவும் நகர் பரங்குன்றம் ஆகும்.

1084. பொன்னியல்கொன்றை பொறிகிளர்நாகம் புரிசடைத்
துன்னியசோதி ஆகியஈசன் தொல்மறை
பன்னியபாடல் ஆடலன்மேய பரங்குன்றை
உன்னிய சிந்தை உடையவர்க்கில்லை உறுநோயே.

தெளிவுரை: பொன்னைப் போன்று ஒளிரும் தன்மை உடைய கொன்றை மலரும், பாம்பும், ஒளி திகழும் செஞ்சடையும் உடைய ஈசன், தொன்மையான வேதப் புகழ் விளங்கும் பாடலின் இயல்பிற்கு ஏற்ப ஆடலும் கொண்டு பரங்குன்றத்தில் மேவி வீற்றிருக்கின்றான். அப்பெருமானைச் சிந்தை ஒருமித்து நினைப்பவர் களுக்கு நோய் இல்லை.

1085. கடைநெடுமாடக் கடியரண்மூன்றும் கனல்மூழ்கத்
தொடைநவில்கின்ற வில்லினன்அந்திச் சுடுகானில்
புடைநவில்பூதம் பாடநின்றாடும் பொருசூலப்
படைநவில்வான்றன் நன்னகர்போலும் பரங்குன்றே.

தெளிவுரை: நெடிய மாடங்களையுடைய மூன்று மதில் களையும் எரியில் மூழ்கிச் சாம்பலாகுமாறு செய்து, அம்பினைச் செலுத்தும் வில்லையுடையவனாகி, சுடு காட்டில் பூதங்கள் பாட, ஆட்டம் ஆடியும், சூலப்படை கொண்டு விளங்கும் ஈசன் வீற்றிருக்கும் நல்ல நகர் பரங்குன்றம் ஆகும்.

தொடை – அம்பு.

1086. அயிலுடைவேலோர் அனல்புல்குகையின் அம்பொன்றால்
எயில்படஎய்த எம்இறைமேய இடம்போலும்

மயில்பெடைபுல்கி மாநடமாடும் வளர்சோலைப்
பயில்பெடைவண்டு பாடல்அறாத பரங்குன்றே.

தெளிவுரை: கூர்மையான சூலமும், அனலும் கொண்ட கரத்தை யுடையவன், ஓர் அம்பினால் கோட்டையின் மூன்று மதில்களையும் எய்து, எரித்துச் சாம்பலாக்கிய எமது கடவுள். மயிலானது தன் பெடையுடன் பொருந்திச் சிறப்பான நடனம் புரிந்து ஆடும் வளமிக்க சோலையில் வாசம்புரியும் வண்டு, தன் பெடையுடன் ரீங்காரம் புரிந்து கொண்டு எப்போதும் விளங்கும் பரங்குன்றம், எம்பெருமான் வீற்றிருக்கும் இடம் ஆகும்.

சிறப்புரை: ஈசனார், முப்புரத்தை ஒரே அம்பினால் தொடுத்து எரித்த செயலை, "ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தம்கையில் ஓரம்பே முப்புரம் உந்தீபற" என, மாணிக்க வாசகர் உரைப்பதும் காண்க.

அயிலுடை வேல் – கூர்மையான சூலம்.

1087. மைத்தகுமேனி வாளரக்கன்றன் மகுடங்கள்
பத்தினதிண்தோள் இருபதும்செற்றான் பரங்குன்றைச்
சித்தமது ஒன்றிச் செய்கழல்உன்னிச் சிவன்என்று
நித்தலும்ஏத்தத் தொல்வினைநம்மேல் நில்லாவே.

தெளிவுரை: மைபோன்ற கரிய நிறம்கொண்ட மேனியையுடைய கொடிய அரக்கனாகிய இராவணனுடைய பத்து மகுடங்களும் இருபது தோள்களும் வலிமை குன்றுமாறு செய்த ஈசன் வீற்றிருக்கும் பரங்குன்றத்தை – பரங்குன்ற நாதனை, ஒருமித்த சித்தம் உடையவராய்த் திருவடியை நினைந்து சிவனே என்று நாள்தோறும் போற்றி வணங்கத் தொல்வினையானது நம்மீது நில்லாது நீங்கும்.

சிறப்புரை: "முந்தைவினை முழுதும் மோய உரைப்பன் யான்" என்று, மாணிக்கவாசகர் உரைத்தலின் வழி, முற்பிறப்புகளில் ஈட்டிய வினை இப்பிறப்பிற்கும் காரணமாகி மேலும் எஞ்சியுள்ள வினைகள், மேற் கொள்ளும் பல பிறப்புகளுக்கும் காரணமாதலை உணர்த்துமாறு தொல்வினையின் அமைப்பு குறிப்பிடப்பட்டது காண்க. அத்தகைய கொடிய வினையானது நீங்கும் எனச் சுட்டப்பெறுதல் ஓர்க.

சிவமந்திரத்தை உபதேசப் பொருளாக உணர்த்தப் படுதலும் சிந்திக்க.

1088. முந்திஇவ்வையம் தாவியமாலு(ம்) மொய்யொளி
உந்தியில்வந்திங்கு அருமறைஈந்த உரவோனும்
சிந்தையினாலும் தெரிவரிதாகித் திகழ்சோதி
பந்தியல்அங்கை மங்கையொர்பங்கன் பரங்குன்றே.

தெளிவுரை: முற்காலத்தில் இவ் உலகத்தைப் பேருருக் கொண்டு, ஓங்கித் தாவி அளந்த திருமாலும், மொய்த்துச் சூழும் ஒளி பொருந்திய உந்திக் கமலத்தில் உதித்து, இங்கு அரிய மறையாகிய வேதத்தைத் தந்த அறிஞனாகிய பிரமனும், சிந்தையாலும் தெரிந்து கொள்வதற்கு அரிதாகிப் பின்னர் சோதி வடிவாகி, பந்து ஆர் விரலையுடைய அழகிய கரத்தைக் கொண்டு விளங்கும் மங்கையாகிய உமாதேவியைப் பாகங் கொண்டுள்ள ஈசன், வீற்றிருக்கும் பதி பரங்குன்றம் ஆகும்.

உரவோன் – பிரமன்.

1089. குண்டாய்முற்றும் திரிவார்கூறை மெய்போர்த்து
மிண்டாய் மிண்டர் பேசியபேச்சு மெய்யல்ல

பண்டுஆல்நீழல் மேவியஈசன் பரங்குன்றைத்
தொண்டால்ஏத்தத் தொல்வினைநம்மேல் நில்லாவே.

தெளிவுரை: *சமணரும், பௌத்தரும் விவாதம் புரிந்து சொல்கின்ற மொழிகள் மெய்ம்மை ஆகாது. பண்டைய காலத்தில் ஆல மர நிழலில் மேவி, சனகாதி முனிவர் களுக்கு அறப்பொருள் விளக்கிய ஈசன், பரங்குன்றத் தில் மேவி விளங்க, அப் பெருமானுடைய திருத் தொண்டில் திகழும் தொண்டர்கள்பால் உள்ள தொல்வினையானது நீங்கும்.*

1090. தடமலிபொய்கைச் சண்பைமன்ஞான சம்பந்தன்
படமலிநாகம் அரைக்கசைத்தான்றன் பரங்குன்றைத்
தொடைமலிபாடல் பத்தும்வல்லார்தம் துயர்போகி
விடமலிகண்டன் அருள்பெறும்தன்மை மிக்கோரே.

தெளிவுரை: *அகன்ற பொய்கையுடைய சண்பையில் சிறந்து விளங்கும் ஞானசம்பந்தன், படங்கொண்ட நாகத்தை அரைக்குக் கட்டிய பரங்குன்றத்தில் விளங்கும் ஈசனை ஏத்திப் பாடிய இத்திருப்பதிகத்தை உரைக்கவல்லவர், துயர் அற்றவராய், நீல கண்டப் பெருமான் அருளைப் பெறுகின்ற தன்மையில் மிக விளங்குவார்கள்.*

பொய்கை – குளம், நீர்நிலை. தொடை – யாப்பில் உள்ள எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியவற்றில் தொடை என்னும் உறுப்பு, தமிழ் மாலை.

101. திருக்கண்ணார்கோயில்

தல விளக்கம்: *காவிரி வடகரைத் தலம். குறுமாணக்குடி என வழங்கப்படுகிறது. கௌதம முனிவரின் சாபம் பெற்ற இந்திரன் ஆயிரம் கண்ணன் எனும் பெயரும்*

சாப விமோசனமும் பெற்ற தலம். இந்திரன் வழிபட்டது. திருமால் வாமனமூர்த்தியாய் வழிபட்டது.

சுவாமி : கண்ணாயிரநாதர், சகஸ்ரநேத்திர ஈசர்

அம்பிகை : முருகுவளர்கோதை

தல மரம் : சரக்கொன்றை

தீர்த்தம் : இந்திர தீர்த்தம்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1091. **தண்ணார்திங்கள்பொங்கர வம்தாழ் புனல்சூடிப்**
பெண்ஆண் ஆய பேரருளாளன் பிரியாத
கண்ணார்கோயில் கைதொழுவார்கட்கு இடர்பாவம்
நண்ணாவாகும் நல்வினையாய நணுகும்மே.

தெளிவுரை: தணிந்து அடக்கமாக உள்ள சந்திரனும், பொங்கிச் சீறும் அரவமும், தாழ்ந்து பாயும் நீராகிய கங்கையும், பெண்ணுமாய் ஆணுமாய் ஆகிய பேரரு ளாளனாகிய ஈசன், எஞ்ஞான்றும் பிரியாது கண்ணார் கோயிலின்கண் வீற்றிருக்கின்றான். அப்பெருமான் திருவடியைத் தொழுது போற்றும் அடியவர்களுக்கு, வாழ்க்கையில் நேரும் இடரும், செயல், சொல், சித்தம் ஆகியவற்றால் நேரும் பாவமும் அணுகாது. நல்வினை யானது நாடி அடைந்து, மகிழ்ச்சிக்கு ஆதாரமாக அமையும்.

சிறப்புரை: வானில் திரிந்து, தண்மையாக விளங்கும் சந்திரனும், சீறும் தன்மையுடன் ஆடி அசைந்து கொண்டு இருக்கும் அரவமும், முறையே அமுத தாரைகளும், கொடிய நஞ்சும் உடையன. அவற்றுடன், கங்கைநீர் ஓடிச் சென்று பாயும் தன்மையுடையது. இம்

மூன்றினையும் ஒருசேர வைத்த சிறப்பு, ஈசனுக்கு உரித்தானது எனக் குறிப்பால் உணர்த்துவது காண்க.

"பெண் ஆண் அலி எனும் பெற்றியன் காண்க" என்று, மாணிக்கவாசகர் உரைத்த பான்மையில், ஈசன் பெண், ஆண் ஆய பேரருளாளன் என உணர்த்தி அருளியதும் நோக்குக. "பித்தா பிறைசூடி, பெருமானே அருளாளா" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் குறிப்பிட்டவாறு "பேரருளாளன்" என உணர்த்தியதும் காண்க.

பாவம் – மனம், வாக்கு, காயம் ஆகிய திரி கரணத்தால் உண்டாகும் பாவம்.

1092. கந்தமர்சந்தும் கார்அகிலும்தண் கதிர்முத்தும்
வந்துஅமர்தெண்ணீர் மண்ணிவளம்சேர் வயல்மண்டிக்
கொந்தலர் சோலைக் கோகிலம்ஆடக் குளிர்வண்டு
செந்திசை பாடும் சீர்திகழ்கண்ணார் கோயிலே.

தெளிவுரை: மணம் திகழ் சந்தனமும் கரிய அகிலும் கதிர்களும் முத்துக்களும் வந்து விளங்கச் செய்யும் தெளிந்த நீர்மல்கும் மண்ணியாற்றின் வளம்சேர் வயல்களும், கொத்தாகப் பூத்துக் குலுங்கும் சோலைகளில் குயில்கள் ஆட, தேன் அருந்தி மகிழ்ந்த வண்டு, செவ்வழி என்னும் பண்ணை எழுப்பி விளங்குவதும், ஆகிய சிறப்புடன் திகழ்வது கண்ணார் கோயில் ஆகும்.

சிறப்புரை: பாடும் இயல்புடைய குயில் ஈசன் திருவருளின் வயத்தால் மகிழ்ச்சியுற்று ஆடுதல் நிலையும் அடைந்தது என, உணர்த்தியது காண்க.

கோகிலம் – குயில். குளிர் வண்டு – மகிழ்ச்சியுற்ற வண்டு. செந்திசை – செவ்வழி எனும் இசை, பண்.

1093. பல்லியல்பாணிப் பாரிடம்ஏத்தப் படுகானில்
எல்லிநடம்செய் ஈசன்எம்மான்றன் னிடமென்பர்
கொல்லையின்முல்லை மல்லிகை மௌவல்
கொடிபின்னிக்
கல்லியல்இஞ்சி மஞ்சமர்கண்ணார் கோயிலே.

தெளிவுரை: பலவகைப்பட்ட இயல்புடைய பண்களைப் பூதங்கள் இசைத்துப் பாடி ஏத்தி நிற்க, சுடுகாட்டில், இரவில் நடம் புரியும் ஈசனாகிய எம் தலைவனுடைய இடம் என்று சொல்லப்படுவது, முல்லை நிலத்தில் விளங்கும் மல்லிகை, முல்லை, மௌவல் ஆகிய மலர்க் கொடிகள் கல்லால் ஆன மதில்களில் பின்னிச் சூழ, மேகம் தவழும் கண்ணார் கோயில் ஆகும்.

மௌவல் – காட்டு மல்லிகை.

1094. தருவளர்கானம் தங்கியதுங்கப் பெருவேழம்
மருவளர் கோதை அஞ்சஉரித்து மறைநால்வர்க்
குருவளர்ஆல நீழல்அமர்ந்துஈங்கு உரைசெய்தார்
கருவளர் கண்ணார் கோயில்அடைந்தோர் கற்றோரே.

தெளிவுரை: தாருகவனத்தில் உள்ள முனிவர்களால் ஏவப்பட்ட மலை போன்ற பெரிய யானையைச் செருத்து உமாதேவியும் அச்சம் கொள்ளுமாறு, வீரம் காட்டி, அதன் தோலை உரித்து, கல்லால மரநீழலில் சனகாதி முனிவர்களாகிய நால்வருக்கு, தட்சணா மூர்த்தி வடிவினராகி, அறத்தின் உண்மைப் பொருளை உபதேசம் செய்து, யாவற்றுக்கும் கருப்பொருளாய் விளங்கும் ஈசன் வீற்றிருக்கும் கண்ணார் கோயிலை அடைந்து பெருமானை வணங்கியவர்களே கற்றோர் எனப்படுவர்.

சிறப்புரை: ஈசன்பால் ஏவப்பட்ட யானை, தங்கும் இடமாக மரங்கள் சூழ்ந்த கானகத்தை மரபு நோக்கித் தருவளர்கானம் தங்கிய வேழம் என உணர்த்தப் பட்டது.

தீய செயலை நாடிய தாருகவனத்து முனிவர்களும், அவர்தம் செயலால் ஏவப்பெற்ற யானையை உரித்ததும், நற்செயலுக்கு உட்பட்ட சனகாதி முனிவர்களும், அவர்களுக்கு அறமுரைத்த குரு மூர்த்தமும், ஒருசேர உரைக்கும் நயம் காண்க.

நால்வர்க்குக் குருவடிவாகி ஆலமரத்தின் நிழலில் அறம் உரைத்த மாண்பினை, "குருவளர் ஆல நீழல்" எனக் கொள்ளுதலும் பொருந்தும்.

"கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழார் எனின்" என்னும் தமிழ் மறைக் கேற்ப, இறைவன் திருக்கோயிலை அடைந்து வணங்கு தலின் கொள்கையே, கற்றதன் பயனாகும் என்னும் கருத்து, "கற்றோரே" என உணர்த்தப் பெற்றது.

துங்கம் – மலை. கோதை – உமாதேவி. மறைநால்வர் – சனகாதி முனிவர்கள்

1095. மறுமாண்உருவாய் மற்றிணைஇன்றி வானோரைச்
செறுமாவலிபால் சென்றுலகெல்லாம் அளவிட்ட
குறுமாண்உருவன் தன்குறியாகக் கொண்டாடும்
கறுமாகண்டன் மேயதுகண்ணார் கோயிலே.

தெளிவுரை: தேவர்களைத் துன்புறுத்திய மாவலிச் சக்கரவர்த்தியின்பால் சென்று, மூவடி நிலம் வேண்டிப் பெற்று, அவ்னை வருத்தி மறுக்கம் செய்யும் மிகப் பெரிய வடிவம் தாங்கியவனாய், தனக்கு இணை என யாரையும் சொல்ல முடியாதவாறு உலகத்தை

எல்லாம் அளவு கொண்ட, குறுகிய சிறந்த உருவினனான திருமால் தனது வழிபடும் பொருளாகக் கொண்டாடும் நீலகண்டனாகிய ஈசன், மேவி விளங்குவது, கண்ணார் கோயிலே ஆகும்.

சிறப்புரை: திருமால் வாமன அவதாரம் தாங்கி ஈசனை வழிபட்ட இத்திருத்தலச் சிறப்பு இவண் உணர்த்தப் பெற்றது.

குறுமாணுருவன் – திருமால், வாமனன். தற்குறி – தான் பூசிக்குங் குறியாக, ஈசன் விளங்கும் சிவலிங்க மூர்த்தம்.

1096. விண்ணவருக்காய் வேலையுள்நஞ்சம் விருப்பாக
உண்ணவனைத்தே வர்க்குஅமுதீந்துஎவ் வுலகிற்கும்
கண்ணவனைக்கண் ணார்திகழ்கோயிற் கனிதன்னை
நண்ணவல்லோர்கட்கு இல்லைநமன்பால் நடலையே.

தெளிவுரை: தேவர்களுக்கு நல்வாழ்க்கை அளிக்க வேண்டும் என்பதற்காக, கடலில் தோன்றிய நஞ்சினை விரும்பி உண்டு, அவர்கள் அமுதம் கொள்ளுமாறு அளித்து, எல்லா உலகங்களுக்கும் கண்ணாக விளங்கும் பெருமானாகியும், கண்ணார் கோயிலில் திகழும் கனி போன்று விளங்கியும், தன்னை வழிபடுபவர்களுக்கு இனியவனாகிய ஈசனை நாடுபவர்க்கு, காலனால் உண்டாகும் துன்பம் இல்லை.

சிறப்புரை: யாவற்றினையும் நோக்கியும், ஆய்ந்தும் அறியும் தன்மையுடைய கண்போன்று, ஈசன் மன்னுயிர்களுக்குக் கண்போன்று நின்று அருள் வழங்குதல் "கண்ணவன்" என உணர்த்தப்பட்டது.

"கனி இருப்பக் காய்கவர்ந்து" கொள்ளும் பண்பு ஆகாதது என்னும் குறிப்பில், கண்ணார் கோயில் ஈசன்

கனியாக விளங்கி, சுவையின் இன்பமும், நுகர்தலின் பயனும் ஒருசேர வழங்குதலும் இவண் உணர்த்துவது காண்க.

நமன் – காலன்; நடலை – துன்பம்.

1097. **முன்னொருகாலத்து இந்திரன்உற்ற முனிசாபம்**
பின்னொருநாள்அவ் விண்ணவர்ஏத்தப் பெயர்வெய்தி
தன்னருளாற்கண் ணாயிரம்ஈந்தோன் சார்பென்பர்
கன்னியர்நாளும் துன்னமர்கண்ணார் கோயிலே.

தெளிவுரை: காம வயப்பட்டு அகலிகையை நாட, அதனால் கௌதம முனிவரின் சாபம் பெற்ற இந்திரன், அது தீரும் வண்ணம் பூசித்து வேண்ட, அந்த சாபத்திலிருந்து விடுவித்துக் கண்ணாயிரம் என்னும் பெயரையும் ஈந்த, ஈசன் வீற்றிருப்பது, கன்னிப் பெண்கள் ஏற்றமாகப் போற்றும் கண்ணார் கோயில் ஆகும்.

பெயர்வு எய்தி – நீங்கி.

1098. **பெருக்குஎண்ணாத பேதையரக்கன் வரைக்கீழால்**
நெருக்குண்ணாத்தன் நீள்கழல்நெஞ்சில் நினைந்தேத்த
முருக்குண்ணாதோர் மொய்கதிர்வாள்தேர் முன்னீந்த
திருக்கண்ணார்என் பார்சிவலோகம் சேர்வாரே.

தெளிவுரை: நல்ல ஆக்கத்தை எண்ணிப் பார்க்காத பேதையாகிய அரக்கன் – இராவணன், மலையின் கீழ் நெருக்குற, ஈசன் திருவடியை நினைத்துப் போற்றித் துதித்தனன். அதனால் அழிதல் இல்லாத ஒளி பொருந்திய வாளும் தேரும் பெற்றவனானான். அப்பெருமானைக் கண்ணார் கோயில் உடையவனே! என்று ஏத்தும் தொண்டர்கள், சிவலோகப் பேறு பெற்றவர் ஆவர்.

பெருக்கு – நல்ல ஆக்கம்.

1099. செங்கமலப்போ தில்திகழ்செல்வன் திருமாலும்
அங்கமலக்கண் நோக்கரும்வண்ணத் தழலானான்
தங்கமலக்கண் ணார்திகழ்கோயில் தமதுள்ளம்
அங்கமலத்தோடு ஏத்திடஅண்டத்து அமர்வாரே.

தெளிவுரை: பிரமனும் திருமாலும் தமது கண்களால் நோக்குவதற்கு அரியவனாகி, வண்மைமிகும் சோதிப் பிழம்பாய். கண்ணார் கோயிலில் வீற்றிருப்பவனைத் தூய்மையாய் ஏத்தி வழிபடுவோர், தேவர் உலகத்தில் விளங்கி இருப்பார்கள்.

செங்கமலப்போது – செந்தாமரை மலர், பிரமன் இருப்பிடம். அங்கமலக்கண் – அங்கத்தில் உள்ள ஊனக்கண். அங்கமலத்தோடு – அங்கு அமலத்தோடு, மலம் நீங்கப் பெற்ற தூய்மை உள்ளத்தோடு.

1100. தாறிடுபெண்ணைத் தட்டுடையாரும் தாம்உண்ணும்
சோறுடையார்சொல் தேறன் மின்வெண்ணூல்
சேர்மார்பன்
ஏறுடையன்பரன் என்புஅணிவான்நீள் சடைமேலோர்
ஆறுடைஅண்ணல் சேர்வதுகண்ணார் கோயிலே.

தெளிவுரை: குலை தருகின்ற பெண்பனை ஓலைகளால் தயாரிக்கப்பட்ட தடுக்கு உடையவர்களாய் விளங்கும் புறச் சமயத்தார் கூறும் சொற்களை ஏற்காதீர்கள். முப்புரி நூல் அணிந்த மார்பினனும், இடப வாகனத்தை யுடையவனும் ஆகிய பரமன், எலும்பு அணிபவன்; நீளமாக விளங்கும் சடையின்மேல் ஒப்பற்ற ஆறாகத் திகழும் கங்கையைச் சூடிய அண்ணல். அப்பெருமான் பொருந்தி விளங்கும் இடமாவது, கண்ணார் கோயில் ஆகும்.

என்பு அணிவான் – எலும்பு அணியாகக் கொண்டு விளங்கும் ஈசன்.

1101. காமருகண்ணார் கோயில்உளானைக் கடல்சூழ்ந்த
பூமருசோலைப் பொன்னியல்மாடப் புகலிக்கோன்

நாமருதொன்மைத் தன்மையுள்ஞான சம்பந்தன்
பாமரு பாடல் பத்தும்வல்லார்மேல் பழிபோமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *மகிழுதற்குரிய கண்ணார் கோயிலில் வீற்றிருக்கும் ஈசனை, கடல் சூழ்ந்த, பூமருவு சோலையும் பொன்னொளிர் மாடங்களும் பொலியும், புகலி நகரின் வேந்தனாகிய, பழம் பெருமையை நன்கு உள்கும் ஞான சம்பந்தன், கனிந்து அளித்த இத்திருப் பதிகத்தை ஓதுபவர்கள் மீது பழியானது இல்லை.*

102. சீகாழி

தல விளக்கம்: *பதிக எண் 1 காண்க.*

பண் : *குறிஞ்சி*

திருச்சிற்றம்பலம்

1102. உரவார்கலையின் கவிதைப் புலவர்க்கு ஒருநாளும்
கரவாவண்கைக் கற்றவர்சேரும் கலிக்காழி
அரவார்அரையா அவுணர்புரமூன்று எரிசெய்த
சரவாஎன்பார் தத்துவஞானத் தலையாரே.

தெளிவுரை: *ஞானம் மிக்க கவிதைகளைக் கூறும் புலவர்களுக்கு எல்லாக் காலங்களிலும், கரவாது வழங்கும் வள்ளல் தன்மை உடையவர்கள் சேரும் காழி நகரில், விளங்கும் அரவத்தையுடைய அரசே! முப்புரத்தை எரித்த சரத்தினை உடையவரே! என்று போற்றி மகிழ்பவர்கள் தத்துவஞானத்தில் தலைப்பட்டு உயர்ந்த பெரியோர்கள் ஆவர்.*

தத்துவம் – உண்மை நிலை.

1103. மொய்சேர்வண்டுண் மும்மதநால்வாய் முரண்வேழக்
கைபோல்வாழை காய்குலையீனும் கலிக்காழி
மைசேர்கண்டத்து எண்தோள்முக்கண் மறையோனே
ஐயாஎன்பார்க்கு அல்லல்களான அடையாவே.

தெளிவுரை: வண்டுகள் உண்கின்ற மும்மதம் பொருந்திய, தொங்கும் வாயைப் போன்ற வேழத்தின் துதிக்கை போன்று, நீண்டு பெருகிய வாழை, குலை யீனும் காழியில், நீலகண்டமும், எண்தோளும், முக் கண்ணும் கொண்ட மறையவனே! ஐயா! என்று, ஈசனைப் போற்றிப் பணிபவர்களை அல்லல் அடையாது.

சிறப்புரை: "வேதங்கள், ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே" என்று மாணிக்கவாசகர் உரைப்பதும் இவண் ஓர்க.

ஐயா – தலைவா!

1104. இளகக்கமலத்து ஈன்கள் இயங்கும் கழிசூழக்
களகப்புரிசை கவினார்சாரும் கலிக்காழி
அளகத்திருநல் நுதலிபங்கா அரனேஎன்று
உளகப்பாடும் அடியார்க்குறுநோய் அடையாவே.

தெளிவுரை: தாமரை மலரிலிருந்து இளகி வெளிவரும் தேன் வழியும் உப்பங்கழி சூழ, சுண்ணாம்பு பூசப் பெற்ற மதில்கள் அழகு பொலிய விளங்கும் காழியில், அழகிய கூந்தலும் நல்ல நெற்றியும் உடைய உமா தேவியைப் பாகங்கொண்டுள்ளவனே! அரனே! என்று உள்ளம் பொருந்திப் பாடுகின்ற அடியவர்களுக்கு நோய் அடையாது.

கள் – தேன்; களகம் – சுண்ணம்; அளகம் – கூந்தல்; உளகப்பாடும் – உள்ளம் பொருந்தப் பாடும்.

1105. எண்ணார்முத்தம் ஈன்றுமரகதம் போல்காய்த்துக்
கண்ணார்கமுகு பவளம் பழுக்கும் கலிக்காழிப்
பெண்ணோர்பாகா பித்தாபிரானே என்பார்க்கு
நண்ணாவினைகள் நாள்தொறும்இன்பம் நணுகும்மே.

தெளிவுரை: *கண்களுக்கு விருந்தாகும் கமுக மரங்கள் எண்ணுதற்கு அரியதாக நிரம்ப, முத்துக்களைப் போல் ஈன்று, மரகதம் போல் காய்த்து, பவளம் போல் பழுக்கும் வளம் பொருந்திய காழியில், உமையைப் பங்காக உடையவரே! பித்தப்பெருமானே! எம்பிரானே! என்று துதிப்பவர்க்கு வினைகளானவை அணுகாது. நாள்தோறும் இன்பமானது பெருகிச் சேரும்.*

எண்ணார் – எண்ணரிய, அதிகமான.

1106. மழைஆர்சாரல் செம்புனல்வந்துஅங்கு அடிவருடக்
கழைஆர் கரும்பு கண்வளர்சோலைக் கலிக்காழி
உழைஆர்கரவா உமையாள்கணவா ஒளிர்சங்கக்
குழையா என்று கூறவல்லார்கள் குணவோரே.

தெளிவுரை: *மலைச்சாரலில் இருந்து பெருகும் செம்புனல், கழை என்னும் வளம்பெருக்கும் கரும்பின் சோலையில் பாயும் காழியில், மான் ஏந்திய கரத்தை உடையவனே! உமாதேவியின் நாயகனே! ஒளிவிடுகின்ற வெண்சங்கினைக் காதில் குழையாக உடையவனே! என்று கூறிப் போற்ற வல்லவர்கள் நற்குணத்தவர் ஆவர்.*

1107. குறியார்திரைகள் வரைகள்நின்றும் கோட்டாறு
கறியார்கழிசம் பிரசம்கொடுக்கும் கலிக்காழி
வெறியார் கொன்றைச் சடையாவிடையா என்பாரை
அறியாவினைகள் அருநோய்பாவம் அடையாவே.

தெளிவுரை: *மலைப் பகுதிகளிலிருந்து வளைந்த ஆறுகள் கடலலைகளில் கலக்கும் கழியின் பகுதிகளில் மிளகுகள் பெருக்கெடுத்து விளையுமாறு உள்ள காழியில், மணம்கமழும் கொன்றை தரித்த சடையுடையவனே! இடப வாகனத்தை உடையவனே! என்று வணங்கும் அடியவர்களை, வினையும், நோயும், பாவமும் அடையாது.*

கறி – மிளகு; வெறி – நறுமணம்.

1108. **உலங்கொள்சங்கத்து ஆர்கலிஓதத் துதையுண்டு**
கலங்கள்வந்து கார்வயல்ஏறும் கலிக்காழி
இலங்கைமன்னன் தன்னைஇடர்கண்டு அருள்செய்த
சலங்கொள்சென்னி மன்னாஎன்னத் தவம்ஆமே.

தெளிவுரை: *திரட்சியான சங்குகளும் தோணிகளும் கடலின் ஓதத்தால் கார் வயல் ஏறும் தன்மை உடையது காழி. ஆங்கு இலங்கையின் மன்னவனான இராவணன் இடர் கண்டு அருள் செய்த, கங்கையைச் சென்னியில் சூடிய மன்னவனே! என்று போற்றத் தவம் கைவரப் பெறும்.*

உலம் – திரட்சி; கலம் – தோணி.

1109. **ஆவிக்கமலத்து அன்னம்இயங்கும் கழிசூழக்**
காவிக்கண்ணார் மங்கலம்ஓவாக் கலிக்காழிப்
பூவில்தோன்றும் புத்தேளொடுமா லவன்தானும்
மேவிப்பரவும் அரசேஎன்ன வினைபோமே.

தெளிவுரை: *தாமரைக் குளத்தில் அன்னப் பறவைகள் இயங்குகின்ற தன்மையும், குவளை மலர் போன்ற கண்களை உடைய பெண்கள் மங்கல ஒலிகளை ஓய்வின்றி ஒலிக்கும் காழியில், தாமரை மலரில்*

விளங்கும் பிரமனும், திருமாலும் பொருந்திப் பரவும் அரசே! என்று தோத்திரம் செய்ய வினை நீங்கும்.

ஆவி – வாவி – குளம்; கமலம் – தாமரை. காவிக்கண் – குவளை மலர்போன்ற கண். பூ – தாமரை; புத்தேள் – பிரமன்.

1110. மலையார்மாட நீடுயர்இஞ்சி மஞ்சாரும்
கலையார்மதியம் சேர்தரும் அந்தண் கலிக்காழித்
தலைவாசமணர் சாக்கியர்க்குஎன்றும் அறிவொண்ணா
நிலையாய்என்னத் தொல்வினையாய நில்லாவே.

தெளிவுரை: மலைபோன்ற உயர்ந்த மாட மாளிகைகளும் நீண்டு உயர்ந்த மதில்களும் மேகம் தவழுமாறு, திங்களின் ஒளி சேரும் அழகிய குளிர்ச்சி பொருந்திய காழியின் தலைவனே! சமணர், சாக்கியர் ஆகியோருக்கு அறிய வொண்ணாத நிலையாய் உள்ளவனே! என்று துதிக்க, வினை யாவும் நீங்கும்.

இஞ்சி – மதில்; மஞ்சு – மேகம்.

1111. வடிகொள்வாவிச் செங்கழுநீரிற் கொங்காடிக்
கடிகொள்தென்றல் முன்றினில்வைகும் கலிக்காழி
அடிகள்தம்மை அந்தமில்ஞான சம்பந்தன்
படிகொள்பாடல் வல்லவர்தம்மேல் பழிபோமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: அழகிய பொய்கையில் விளங்கும் செங்கழு நீர்ப் பூவில் பொலியும் தேன் அளைந்து மணம் பெருகும் தென்றல், முற்றத்தில் திகழும் காழியில் வீற்றிருக்கும் அடிகளாகிய ஈசனை, ஞானசம்பந்தன் ஏத்திப் பாடிய இத் திருப்பதிகத்தை ஓதவல்லவர்கள் மேல் உள்ள பழியானது விலகிப் போகும்.

103. திருக்கழுக்குன்றம்

தல விளக்கம்: தொண்டை நாட்டுத் தலம். வேதம் மலையாக விளங்குதலின் வேதகிரி எனப் பெயர் பெற்றது. வேறு பெயர்கள்: வேதாசலம், கதலி வனம், கழுக்குன்றம். மலைமேல் உள்ளது மலைக்கோயில் என்றும், ஊருக்குள் உள்ளது தாழக்கோயில் என்றும் அழைக்கப்படுகிறது. மலையில் பட்சிகள் வந்து உணவு பெற்றுச் செல்வதால் கழுகு தீர்த்தம் - பட்சி தீர்த்தம் என்று பெயர்.

மார்க்கண்டேயர் வழிபட்டது. மலை வலம் வருதல் சிறப்புடையது. மாணிக்கவாசகருக்கு இறைவன் குரு வடிவு காட்டிய தலம். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை சங்கு உற்பத்தியாகும் குளம் உள்ளது.

மலைமேல் உள்ள திருக்கோயில்:

சுவாமி : வேதகிரீஸ்வரர்

அம்பிகை : சொக்க நாயகி

தாழக்கோயில்:

சுவாமி : பக்தவத்சலேஸ்வரர்

அம்பிகை : திரிபுரசுந்தரி

தல மரம் : வாழை

தீர்த்தம் : சங்கு தீர்த்தம்

பண் : குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1112. தோடுடையான்ஒரு காதில்தூய குழைதாழ
ஏடுடையான் தலைகலனாக இரந்துண்ணும்

நாடுடையான் நள்ளிருள் ஏமம் நடமாடும்
காடுடையான் காதல்செய்கோயில் கழுக்குன்றே.

தெளிவுரை: தோடு என்னும் அணியை ஒரு காதிலும் குழை என்னும் அணியை மற்றொரு காதிலும் உடையவன் ஈசன். பிரமனின் ஒரு தலையைக் கபால மாக ஏந்திப் பிச்சையேற்று உண்ணும் நாட்டத்தை உடைய அப்பெருமான், நள்ளிருளில் ஆனந்தமாய் நடனத்தைப் புரியும் சுடுகாடு உடையவன். அத்தகைய ஈசன் மகிழ்ந்து வீற்றிருக்கும் கோயில் கழுக்குன்று ஆகும்.

சிறப்புரை: தோடுடைய செவியை முன்னிருத்தித் திருப்பதிகம் ஓதுதற்குத் திருவுளம் கொண்ட ஞான சம்பந்தர், ஈசன் இசைப் பிரியராய் விளங்குதலையும், அத் தன்மையில் இரு கந்தருவர்களைக் குழையாகக் காதில் அணிந்துள்ள மாண்பினையும், ஒருசேர உணர்த்தும் நெறியில், காதில் தூய குழை தாழ என அருளிச் செய்தமை நோக்குக.

தோடு என்று எடுத்து ஓதிய திருப்பதிகங்கள் ஆறு. ஏனையவை:

1. தோடுடைய செவி - பதிக எண் 1 - திருப்பிரம்மபுரம்.

2. தோடுடைய காது - பதிக எண் 49 - திருநள்ளாறு.

3. தோடுடையான் குழை - பதிக எண் 61 - திருச்செங்காட்டங்குடி.

4. தோடணிகுழை - பதிக எண் 78 - திருவிடைச்சுரம்.

5. தோடொர்காதினன் - பதிக எண் 95 - திருவிடைமருதூர்.

1113. கேணவல்லான் கேழல்வெண்கொம்பு குறளாமை
பூணவல்லான் புரிசடைமேலொர் புனல்கொன்றை
பேணவல்லான் பெண்மகள்தன்னை ஒருபாகம்
காணவல்லான் காதல்செய்கோயில் கழுக்குன்றே.

தெளிவுரை: *பன்றியின் வெண்கொம்பும் ஆமையோடும் விரும்பி அணிந்து, சடை முடியின்மேல் கங்கையும் கொன்றை மலரும் பூண்டு, பேணிக் காக்கும் மலையரசன் மகளாகிய, பார்வதி தேவியை ஒரு பாகமாகக் கொண்டு காட்சி தருபவனாகிய ஈசன், மிக விரும்பி வீற்றிருக்கும் கோயிலானது கழுக் குன்றம் ஆகும்.*

கேணவல்லான் – விரும்பி அணிபவன். (வலிமை, விழைவு குறித்தல்)
பேணவல்லான் – பேணிக் காக்கும் பர்வதராசன்.

1114. தேனகத்தார் வண்டதுஉண்ட திகழ்கொன்றை
தானகத்தார் தண்மதிசூடித் தலைமேலோர்
வானகத்தார் வையகத்தார்கள் தொழுதேத்தும்
கானகத்தான் காதல்செய்கோயில் கழுக்குன்றே.

தெளிவுரை: *தேனை உண்ணும் தன்மையுடைய வண்டு, கொன்றை மலரின் மீது பொருந்தி உண்ண, அவ்வழகிய மலரைத் தன்னகத்தே உடைய ஈசன், குளிர்ந்த சந்திரனைத் தலையின்மேல் சூடி, தேவர் களும், வையக மாந்தர்களும் தொழுது போற்றும் தன்மையினன். அப்பெருமான், மயானத்தில் நடம் புரிபவன். அவன், விரும்பி வீற்றிருக்கும் இடமானது கழுக்குன்றம் ஆகும்.*

1115. துணையல்செய்தான் தூயவண்டு யாழ்செய்
சுடர்க்கொன்றை
பிணையல்செய்தான் பெண்ணின் நல்லாளை ஒருபாகம்

இணையல்செய்யா இலங்கு எயில்மூன்றும் எரியுண்ணக்
கணையல்செய்தான் காதல்செய் கோயில் கழுக்குன்றே.

தெளிவுரை: *சேர்ந்து பூத்துக் குலுங்கும் மலர்களில், தூய வண்டானது யாழின் ஒலியை எழுப்புகின்ற சுடர் போன்ற கொன்றையைச் சடை முடியில் பிணைத்துக் கட்டி, பெண்ணின் நல்லாளாகிய உமாதேவியை ஒரு பாகம் கொண்டு இணைத்து, அர்த்தநாரியாய் விளங்கி, மூன்று மதில்களை எரியில் மூழ்கிச் சாம்பலாகுமாறு அம்பு எய்த ஈசன், மகிழ்ந்து வீற்றிருக்கும் இடம், கழுக்குன்றம் ஆகும்.*

சிறப்புரை: *மலர்கள் சரம் போன்று பூக்கும் தன்மையும், அவ்வாறே, ஒற்றைப் பூவால் அல்லாது மிகுந்த மலர் கொண்டு ஏத்திப் போற்றுதலும், புலப்படுத்தும் மாண்பில் "துணையல்" என்று குறிப்பிட்டு உணர்த்துவ தாயிற்று.*

"பூங்கழற்கு இணை துணை மலர்கொண்டு ஏற்றி" என்று மாணிக்கவாசகர் உரைப்பதும் காண்க. "பூ நாளும் தலைசுமப்ப" என, ஞானசம்பந்தர் வாக்கும் (திருஞானசம்பந்தர் தேவாரம் - இரண்டாம் திருமுறை பதிக எண் 41, திருச்சாய்க்காடு - பாடல் 3.), "கைகாள் கூப்பித் தொழீர் - கடி மாமலர் தூவி நின்று" எனத் திருநாவுக்கரசர் உரைப்பதும் ஓர்க.

"கழுமல வள நகர்ப் பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே" என ஞானசம்பந்தர், உமாதேவியைக் குறிப்பிட்டவாறு, இத் திருப்பாட்டில் உணர்த்தப் பெற்றுள்ளது காண்க.

துணையல் – துணைமலர். பிணையல் – பிணைத்தல். இணையல் – இணைத்தல். கணையல் – கணை, அம்பு எய்தல்.

1116. பையுடைய பாம்பொடுநீறு பயில்கின்ற
மெய்யுடையான் வெண்பிறைசூடி விரிகொன்றை
மையுடைய மாமிடற்றண்ணல் மறிசேர்ந்த
கையுடையான் காதல்செய் கோயில் கழுக்குன்றே.

தெளிவுரை: *படத்தைக் கொண்டு ஆடும் பாம்பினை அணிந்து, திருநீறு மெய்யில் பூசி, வெண்பிறைச் சந்திரனும் கொன்றை மலரும் விளங்க, கரிய சிறந்த கண்டத்தையுடைய அண்ணலாகிய ஈசன், மானைக் கரத்தில் ஏந்தி, விரும்பி வீற்றிருக்கும் இடமாவது கழுக் குன்றம் ஆகும்.*

பை – படம். மை – கரிய விடம். மறி – மான்.

1117. வெள்ளமெல்லாம் விரிசடைமேலோர் விரிகொன்றை
கொள்ளவல்லான் குரைகழல்ஏத்தும் சிறுத்தொண்டர்
உள்ளமெல்லாம் உள்கிநின்றுஆங்கே உடன்ஆடும்
கள்ளம்வல்லான் காதல்செய்கோயில் கழுக்குன்றே.

தெளிவுரை: *கங்கையை, விரிந்து பரந்த சடையின்மேல் கொள்ளுமாறு செய்து, கொன்றை மலர் சூடிய ஈசன் திருக்கழலைப் போற்றி மகிழும் சிறுத்தொண்டராகிய பெருந்தகையாளரின் உள்ளத்தில் எக்காலமும் விளங்கி நின்று, நடம் புரியும் தன்மையுடையவனாகி, ஊனக் கண்ணுக்குப் புலப்படாதவாறு மறைந்து விளங்கும் ஆற்றல் பொருந்தியவனாகிய ஈசன், விரும்பி வீற்றிருக்கும் கோயில் கழுக்குன்றம் ஆகும்.*

சிறப்புரை: *அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவ ராகிய சிறுத்தொண்டரை, ஈசன் ஆட்கொண்டு மகிழ்ந்த சிறப்பினைக் கருத்தில் கொண்டும், அவர்தம் உள்ளத்தில் வீற்றிருக்கும் ஈசனாரின் பெருங் கருணையும், வியந்து உணர்த்திய சிறப்புக் காண்க.*

ஈசனார் தமது உள்ளத்தில் மகிழ்ந்து வீற்றிருத்தலை. திருநாவுக்கரசர்,

நாடிநாரணன் நான்முகன் என்றிவர்
தேடியும் திரிந்தும் காண வல்லரோ
மாடமா ளிகைசூழ் தில்லை அம்பலத்து
ஆடி பாதமென் நெஞ்சுள் இருக்கவே

என உரைப்பதும் காண்க.

ஈசனை, "என் உள்ளம் கவர்கள்வன்" எனத் திருஞானசம்பந்தர் உணர்த்துவதும் நோக்குக.

கள்ளம் வல்லான் – ஊனக் கண்ணுக்குப் புலப்படாதவாறு விளங்கும் வல்லமை உடையவன்.

1118. ஆதல்செய்தான் அரக்கர்தம்கோனை அருவரையின்
நோதல்செய்தா(ன்) நொடிவரையின்கண் விரலூன்றிப்
பேர்தல்செய்தான் பெண்மகள்தன்னோடு ஒருபாகம்
காதல்செய்தான் காதல்செய்கோயில் கழுக்குன்றே.

தெளிவுரை: நல்லருள் செய்தவனாகிய ஈசன், மலையைப் பெயர்த்த இராவணனைத் தன் விரலால் ஊன்றி, ஒரு நொடியில் வலிமையை இழக்கச் செய்தவன். அப் பெருமான், உமாதேவியை ஒரு பாகம் விரும்பி ஏற்று, மகிழ்ந்து விளங்கும் கோயில் கழுக்குன்று ஆகும்.

1119. இடந்தபெம்மான் ஏனமதாயு(ம்) அனமாயும்
தொடர்ந்தபெம்மான் தூமதிசூடி வரையார்தம்
மடந்தைபெம்மான் வாரகழல்ஒச்சிக் காலனைக்
கடந்தபெம்மான் காதல்செய்கோயில் கழுக்குன்றே.

தெளிவுரை: பன்றியாய் பூமிக்குள் தோண்டிச் சென்ற திருமாலும், அன்னமாய் மேலே பறந்து சென்ற

பிரமனும் தேடிய ஈசன், தூய்மையான சந்திரனைச் சூடி, மலைமகளாகிய உமாதேவியை மணம் கொண்ட பெருமான். அப்பெருமான், அழகிய திருப்பாதத்தால் காலனை வீழ்த்தியவன். அவன் விரும்பி வீற்றிருக்கும் கோயில் கழுக்குன்று ஆகும்.

இடந்த – தோண்டிய; ஏனம் – பன்றி; அனம் – அன்னம்; ஒச்சி – உதைத்து; கடந்த – வீழ்த்திய.

1120. தேயநின்றான் திரிபுரம்கங்கை சடைமேலே
பாயநின்றான் பலர்புகழ்ந்தேத்த உலகெல்லாம்
சாயநின்றான் வன்சமண்குண்டர் சாக்கியர்
காயநின்றான் காதல்செய்கோயில் கழுக்குன்றே.

தெளிவுரை: ஈசன், திரிபுரத்தை அழித்து வெற்றி கொண்டவன்; கங்கையைச் சடைமேல் பாய்ந்து நிற்குமாறு செய்தவன்; பலரும் புகழ்ந்து ஏத்த உலகம் எல்லாம் அமிழுமாறு பிரளயகால மூர்த்தியாய் நின்றவன்; வன்மைக் குணம் மிக்க சமணர், சாக்கியர்கள் துன்புறுமாறு விளங்கியவன். அப்பெருமான் விரும்பி வீற்றிருக்கும் கோயில், கழுக்குன்றம் ஆகும்.

தேய – அழிய; பாய – விளங்கிப் பொருந்த.
சாய – அழிய; காய – வலிமை கெட, துன்புற.

1121. கண்ணுதலான் காதல்செய்கோயில் கழுக்குன்றை
நண்ணியசீர் ஞானசம்பந்தன் தமிழ்மாலை
பண்ணியல்பால் பாடியபத்தும் இவைவல்லார்
புண்ணியராய் விண்ணவரோடும் புகுவாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: நெற்றிக் கண்ணுடைய ஈசன் விரும்பி வீற்றிருக்கும் கோயிலாகிய கழுக்குன்றை நண்ணிய, புகழ் மிக்க ஞானசம்பந்தன் அருளிய இத்தமிழ் மாலையைப்

- பண்ணின் இயல்பினால் பாடிய இத்திருப்பதிகத்தை ஓதவல்லவர்கள் புண்ணியவான்கள் ஆவார்கள்; தேவர்களுடனும் சேர்ந்து மகிழ்ந்திருப்பார்கள்.

(இப் பதிகத்தில் ஒரு பாடல் கிடைக்கவில்லை).

104. திருப்புகலி

தல விளக்கம்: *பதிக எண் 1 காண்க.*

பண் : *வியாழக் குறிஞ்சி*

திருச்சிற்றம்பலம்

1122. ஆடல் அரவசைத்தான் அருமாமறை
தான்விரித்தான் கொன்றை
சூடிய செஞ்சடையான் சுடுகாடு
அமர்ந்த பிரான்
ஏடவிழ் மாமலையாள் ஒருபாகம்
அமர்ந்தடியார் ஏத்த
ஆடிய எம் மிறையூர்
புகலிப் பதியாமே.

தெளிவுரை: *ஈசன், ஆடுகின்ற அரவத்தை அசைத்தவன்; அரிய வேதத்திற்கு விளக்கம் செய்தவன்; கொன்றை மலரைச் செஞ்சடையில் சூடியவன்; சுடுகாட்டில் அமர்ந்து விளங்கும் பிரான். ஏடு அவிழ்ந்த மலர் போன்ற, மலையரசன் திருமகளாகிய உமாதேவியைப் பாகமாகக் கொண்டு, அடியவர்கள் வணங்குமாறு, நடம்புரியும் எமது இறைவன் வீற்றிருக்கும் பதியானது புகலி ஆகும்.*

1123. ஏல மலிகுழலார் இசைபாடி
எழுந்தருளால் சென்று

சோலை மலிசுனையில்
குடைந்தாடித் துதிசெய்ய
ஆலை மலிபுகைபோய் அண்டர்வானத்தை
மூடிநின்று நல்ல
மாலை யதுசெய்யும்
புகலிப் பதியாமே.

தெளிவுரை: நறுமணம் கமழ்கின்ற கூந்தலையுடைய மகளிர் இசை பாடி, காலையில் எழுந்து ஈசன் வண்ணத்தில் பதிந்து சோலைகளில் விளங்கும் சுனையில் குடைந்து நீராடித் துதி செய்ய, ஆலைகளி லிருந்து எழும் புகையானது மேலே ஆகாயத்தில் பரவி மூடும்படியாகத் தவழ்ந்து, கதிரவன் ஒளியைத் தடுத்து நிறுத்தும் அமைப்பில் திகழ, அது மாலை நேரம் போன்று பொலியச் செய்யும் எழில் மிக்க புகலி நகர் ஆகும்.

சிறப்புரை: மகளிர், பொய்கையில் நீராடும் செயல், "மடையில் வாளைபாயமாதரார் குடையும் பொய்கைக் கோலக்கா உளான்" என்று ஞான சம்பந்தர் பிறிதோர் இடத்தில் உணர்த்துவதும் இவண் நோக்குக.

"பூத்திகழும் பொய்கை குடைந்து, உடையான் பொற்பாதம் ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்" என்று மாணிக்கவாசகர் உரைப்பதும் காண்க.

ஆலை மலி புகை – வெல்லம் தயாரிக்கும் வகையாகக் கரும்பாலையிலிருந்து வரும் புகை.

1124. ஆறணி செஞ்சடையான் அழகார்புர
மூன்றும்அன்று வேவ

நீறணி யாகவைத்த நிமிர்புன்சடை
எம்மிறைவன்
பாறணி வெண்தலையில் பகலேபலி
என்றுவந்து நின்ற
வேறணி கோலத்தினான் விரும்பும்
புகலியதே.

தெளிவுரை: ஈசன், கங்கையினைச் சிவந்த சடையில் அணிந்தவன்; புரங்கள் மூன்றினையும் எரித்தவன்; திருவெண்ணீறு அணிந்து விளங்கும் எம் இறைவன். பிரம கபாலம் கையில் கொண்டு பிச்சையேற்று உவந்து கோவண ஆடையுடைய அவ் ஈசன், விரும்பும் பதியானது புகலியே.

சிறப்புரை: இறந்தவர்களின் தலையில், கழுகுகள் சூழ்ந்து கொத்தும் மரபினையொட்டி, ஈசன் ஏந்திய பிரம கபாலத்தின் தன்மை பாறணி வெண்தலை என்று உணர்த்தப்பட்டது.

பட்டு, பீதாம்பரம் முதலான ஆடைகள் விளங்கி இருக்க, அதனை நீக்கி, கோவண ஆடையுடன் விளங்கிய ஈசன் திருக்கோலத்தை, வேறணி கோலத்தினான் என்று உணர்த்தப்பட்டது.

பாறு – கழுகு. பலி என்று வந்து; பலி என்று உவந்து இரு வகையிலும் கொள்ளற்கு உரியது. வேறு அணி – கோவண ஆடை.

1125. வெள்ளம் அதுசடைமேல் கரந்தான்
விரவார்புரங்கள் மூன்றும்
கொள்ள எரிமடுத்தான் குறைவின்றி
உறைகோயில்
அள்ளல் விளைகழனி அழகார்விரைத்
தாமரைமேல் அன்னம்

புள்ளிமை வைகிளமும் புகலிப்
பதிதானே.

தெளிவுரை: *கங்கையைச் சடையில் கரந்து கொண்ட ஈசன், பகைவராகிய மூன்று அசுரர் புரங்களை எரித்துக் குறைவின்றி நல்லருள் புரிய உறையும் கோயிலாவது, சேறு மிகக் கொண்ட கழனிகளும் அழகிய தாமரை மலர்களில் அன்னம் முதலான புள்ளினங்கள் அமர்ந்து எழுகின்ற புகலிப்பதி ஆகும்.*

வெள்ளம் – கங்கை; விரவார் – பகைவர்; அள்ளல் – சேறு; புள்ளினம் – பறவைகள்; வைகி – இருக்கையாகக் கொண்டு களைப்பு நீங்கி இருக்கும் தன்மை.

1126. சூடு மதிச்சடைமேல் சுரும்பார்மலர்க்
கொன்றைதுன்ற நட்டம்
ஆடும் அமரர்பிரான் அழகார்உமை
யோடும் உடன்
வேடு படநடந்த விகிர்தன்
குணம்பரவித் தொண்டர்
பாட இனிதுறையும் புகலிப்
பதியாமே.

தெளிவுரை: *சந்திரனைச் சூடிய சடையின் மீது வண்டு சூழும் கொன்றை மலர் பொருந்தி விளங்க, நடனம் புரியும் தேவர்பிரான், அழகு மிக்க உமாதேவியோடு வேட்டுவ வடிவம் தாங்கி, நடந்து அர்ச்சுனருக்கு அருள் புரிந்த விகிர்தன் ஆவார். அப்பெருமானுடைய புகழைப் பரவிப் போற்றி, தொண்டர்கள் இனிது பாட, மகிழ்ந்து உறைகின்ற பதி புகலி ஆகும்.*

சுரும்பு – வண்டு.

1127. மைந்துஅணி சோலையின்வாய் மதுப்பாய்வரி
வண்டினங்கள் வந்து

நந்துஇசை பாடநடம் பயில்கின்ற
நம்பன் இடம்
அந்திசெய் மந்திரத்தால் அடியார்கள்
பரவிஎழ விரும்பும்
புந்திசெய் நான்மறையோர் புகலிப்
பதி தானே.

தெளிவுரை: அழகாக அலங்கரிக்கப்பட்ட சோலையில் தேன் உண்ணும் வரி வண்டுகள் நெருங்கி இசையெழுப்ப, நடனம் புரியும் ஈசன் இடமாவது, சந்தியா வந்தனம் செய்யும் அடியவர்கள் வணங்கி எழவும், யாவரும் விரும்பும், நான்மறையோர்கள் விளங்குகின்ற புகலிப்பதி ஆகும்.

மைந்து – அழகு; அந்திசெய் மந்திரம் – சந்தியாவந்தனம்.

1128. மங்கையோர் கூறுகந்த மழுவாளன்
வார்சடைமேல் திங்கள்
கங்கை தனைக்கரந்த கறைக்கண்டன்
கருதும் இடம்
செங்கயல் வார்கழனி திகழும்
புகலிதனைச் சென்றுதம்
அங்கையி னால்தொழுவார் அவலம்
அறியாரே.

தெளிவுரை: உமாதேவியை உடம்பில் ஒரு பாகமாக உகந்து ஏற்ற மழுப்படையை உடையவன், சடைமுடியின் மீது சந்திரனையும் ஏற்று, கங்கையைக் கரந்து கொண்ட, விடம் பொருந்திய கண்டத்தையுடையவன். அப் பெருமான் விரும்பிய இடமாவது, கயல்கள் விளங்கும் கழனிகளையுடைய புகலி. ஆங்கு சென்று கரங்கூப்பித் தொழுபவர்களுக்குத் துயரம் இல்லை.

மங்கை – உமாதேவி.

1129. வில்லிய நுண்ணிடையாள் உமையாள்
விருப்பன்அவன் நண்ணும்
நல்லிடம் என்றறியா நலியும்
விறல் அரக்கன்
பல்லொடு தோள்நெரிய விரலூன்றிப்
பாடலுமே கைவாள்
ஒல்லை அருள்புரிந்தான் உறையும்
புகலி யதே.

தெளிவுரை: *ஒளி பொருந்திய நுண்ணிய இடையுடைய உமாதேவியை விரும்பும் ஈசன் விளங்கி மேவும் இடம் என்று அறியாத இராவணன், கயிலையைப் பெயர்க்க, பல்லும் தோளும் நெரியுமாறு விரலால் ஊன்றி, பின்னர் பாடலுக்காக இசைந்து மந்திர வாளைக் கொடுத்து, விரைவில் அருள்புரிந்த பரமன் உறையும் இடம் புகலி ஆகும்.*

வில்லிய – ஒளி பொருந்திய.

1130. தாதலர் தாமரைமேல் அயனும்
திருமாலும் தேடி
ஓதியும் காண்பரிய உமைகோன்
உறையும் இடம்
மாதவி வான்வகுள மலர்ந்தெங்கும்
விரைதோய வாய்ந்த
போதலர் சோலைகள் சூழ்
புகலிப் பதிதானே.

தெளிவுரை: *மகரந்தம் விளங்கும் தாமரையின்மேல் உறையும் பிரமனும் திருமாலும் தேடியும், ஓதி அழைத்தும் காண்பதற்கு அரியவனாய், உமாதேவியின் தலைவனாகிய ஈசன் உறையும் இடமாவது, மாதவியுடன் மகிழமலர்கள் சேர்ந்து எங்கும் மணம்*

பரப்ப, போதுகள் மலரும் சோலைகள் சூழும் புகலிப் பதியாகும்.

ஓதி – கூப்பிட்டு அழைத்தல். வகுளம் – மகிழம்பூ.

1131. வெந்துவர் மேனியினார் விரிகோவண
நீத்தார் சொல்லும்
அந்தர ஞானமெல்லாம் அவையோர்
பொருள் என்னேல்
வந்தெதிரும் புரமூன்று எரித்தான்
உறைகோயில் வாய்ந்த
புந்தியினார் பயிலும் புகலிப்
பதிதானே.

தெளிவுரை: துவராடை கொண்டவர்களாகிய பௌத்தர்களும், மற்றும் திகம்பரர்களும் கூறும் பேதம் கலந்த ஞானம் யாவும் பொருளுடையதெனக் கருதற்க. எதிர்த்துப் பொருத முப்புரத்தை எரித்த ஈசன் உறைகின்ற கோயிலானது, நல்ல அறிஞர்கள் பயிலும் புகலிப் பதியாகும்.

அந்தர ஞானம் – பேதமுற்ற ஞானம்.

1132. வேதமோர் கீதமுணர் வாணர்தொழுது
ஏத்த மிகுவாசப்
போதனைப் போல்மறையோர் பயிலும்
புகலி தன்னுள்
நாதனை ஞானமிகு சம்பந்தன்
தமிழ்மாலை நாவில்
ஓதவல் லார்உலகில் உறுநோய்
களை வாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: வேத கீதங்களை உணர்ந்துள்ள அறிஞர்கள் தொழுது ஏத்த, மிகுந்த வாசனையுடைய தாமரை மலரில் விளங்கும் பிரமனைப் போன்ற, மறைவல்ல அந்தணர்வாழும் புகலியில், ஈசனைப் பரவிய ஞானம் மிகுந்த ஞானசம்பந்தன் தமிழ் மாலையை நாவினால் மருவும் பாடற் சுவை கொண்டு ஓத வல்லவர்கள், உலகத்தில் நோயின்றி வாழ்வார்கள்.

வாசப்போதன் – தாமரை மலரில் உறையும் பிரமன்.

105. திருவாரூர்

தல விளக்கம்: பதிக எண் *91* காண்க.

பண் : வியாழக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1133. பாடல னான்மறையன் படிபட்ட
கோலத்தன் திங்கள்
சூடலன் மூவிலைய சூலம்
வலன்ஏந்திக்
கூடலர் மூவெயிலும் மெரியுண்ணக்
கூரெரிகொண்டு எல்லி
ஆடலன் ஆதிரையன் ஆரூர்
அமர்ந்தானே.

தெளிவுரை: பாடுவதற்கு வல்ல நான்மறைகளை உடையவன், ஈசன். அப்பெருமான் உலகில் தோன்றுகின்ற எல்லா வடிவங்களையும் உடையவன்; திங்களைச் சடையில் சூடியுள்ளவன்; மூன்று இலைகளையுடைய சூலத்தை ஏந்தியவன்; பகைமை கொண்ட மூன்று கோட்டை மதில்களையும் எரித்துக் கொழுந்துவிட்டு எரியும் நெரிப்பைக் கையில்

கொண்டு இரவில் நடனம் புரிபவன்; ஆதிரைத் திருநாளில் மகிழ்ந்து சிறப்பாக விளங்கிக் காட்சி தருபவன். அப்பெருமான், ஆரூரில் அமர்ந்தனன்.

1134. சோலையில் வண்டினங்கள் சுரும்போடு
இசைமுரலச் சூழ்ந்த
ஆலையின் வெம்புகைபோய்
முகில்தோயும் ஆரூரில்
பாலொடு நெய்தயிரும் பயின்றாடும்
பரமேட்டி பாதம்
காலையும் மாலையும்போய்ப்
பணிதல் கருமமே.

தெளிவுரை: சோலைகளில் சுரும்பு முதலான வண்டினங்கள் இசையெழுப்ப, சூழ்ந்துள்ள ஆலைகளிலிருந்து வெளியேறும் புகையானது, மேகம் போல் பரவும் ஆரூரில், பால், நெய், தயிர் ஆகிய வற்றால் பூசைகள் பயின்றாடும் பரமனின் திருக்கழலை, காலை, மாலை ஆகிய இரு காலங் களிலும் சென்று வணங்குதல் கடமையாகும்.

1135. உள்ளமோர் இச்சையினால் உகந்தேத்தித்
தொழுமின்தொண்டீர் மெய்யே
கள்ளம் ஒழிந்திடு மின்கரவாது
இரு பொழுதும்
வெள்ளம்ஓர் வார்சடைமேல் கடந்திட்ட
வெள்ளேற்றான் மேய
அள்ளல் அகன்கழனி ஆரூர்
அடைவோமே.

தெளிவுரை: தொண்டு செய்பவர்களே! உள்ளத்தில் மிகுந்த வேட்கை கொண்டு, மகிழ்ந்து போற்றித் தொழுவீராக. உண்மையாகவே உம்முடைய

அஞ்ஞான இருள் ஒழிந்துவிடும். தடையில்லாது காலை, மாலை ஆகிய இருபொழுதும், கங்கைவார் சடையுடையவனை, வெண்மையான இடப வாகனத்தைக் கொண்டவனை, சேறு மிகக் கூட்டிய அகன்ற கழனிகளையுடைய ஆரூர் அண்ணலை, நாடிச் செல்வோமாக.

இச்சை – வேட்கை, விருப்பம். கள்ளம் – அஞ்ஞான இருள்.

1136. வெந்துறு வெண்மழுவாள் படையான்
மணிமிடற்றான் அரையின்
ஐந்தலை ஆடரவம் அசைத்தான்
அணி ஆரூர்ப்
பைந்தளிர்க் கொன்றையந்தார்ப் பரமன்
அடிபரவப் பாவம்
நைந்தறும் வந்தணையும் நாள்தொறு(ம்)
நல்லனவே.

தெளிவுரை: வெம்மை மிக்க ஒளிபொருந்திய மழுவாட் படையுடையவன் ஈசன். அப்பெருமான், நீலகண்டத் தவன்; அரையில் ஐந்து தலைகளையுடைய ஆடுகின்ற நாகத்தை அசைத்துக் கட்டியவன்; அழகு மிக்க ஆரூரில் வீற்றிருக்கும், கொன்றைமாலை சூடிய பரமன். அவனுடைய திருவடியைத் தொழுது போற்ற, பாவமானது இற்றழியும்; நல்லன யாவும் நாள்தோறும் வந்து சேரும்.

1137. வீடு பிறப்புளிதாம் அதனை
வினவுதிரேல் வெய்ய
காடிட மாகநின்று கனலேந்திக்
கைவீசி
ஆடும் அவிர்சடையான் அவன்மேய
ஆரூரைச் சென்று

பாடுதல் கைதொழுதல் பணிதல்
கருமமே.

தெளிவுரை: *முத்தி நலம் எளிதாகப் பெறுவதற்குரிய வழி யாது என வினவுவீரானால்; கொடிய சுடுகாட்டை இடமாகக் கொண்டு, கையில் நெருப்பு ஏந்தி வீசி ஆடும், சடையுடைய ஈசன் மேவி விளங்கும் ஆரூரை நாடிச் சென்று, பாடிக் கை தொழுது பணிவதைக் கடமை எனக் கொள்வீராக.*

வீடு பிறப்பு – முத்தி இன்பம் தோன்றுதல், பெறுதல். பிறக்க முத்தித் தலம் என உணர்த்தலும் ஆம்.

1138. கங்கையோர் வார்சடைமேல் கரந்தான்
கிளிமழலைக் கேடில்
மங்கையோர் கூறுடையான் மறையான்
மழுவேந்தும்
அங்கையி னான்அடியே பரவி
அவன்மேய ஆரூர்
தம்கையி னால்தொழுவார் தடுமாற்று
அறுப்பாரே.

தெளிவுரை: *கங்கையைச் சடைமேல் கரந்து, கிளி போன்ற மென்மையாகக் கூறும், கெடுதல் இல்லாத மங்கையாகிய உமாதேவியைப் பாகமாகக் கொண்டு விளங்கும் மறைவல்லவனாய், மழுவேந்திய அழகிய கரத்தை உடைய ஈசனின் திருவடியையே நெஞ்சில் பதித்து, அப்பெருமான் விளங்கும் ஆரூரை, தம் கையினால் தொழுபவர்கள் மனத் தடுமாற்றம் அற்றவராய், தெளிவு பெற்றவராய் இருப்பார்கள்.*

1139. நீறணி மேனியனாய் நிரம்பா
மதிசூடி நீண்ட

ஆறணி வார்சடையான் ஆரூர்
இனித மர்ந்தான்
சேறணி மாமலர்மேற் பிரமன்
சிரம்அரிந்த செங்கண்
ஏறணி வெல்கொடியான் அவன்எம்
பெருமானே.

தெளிவுரை: திருநீறு மேனியில் தரித்தவனாய், பிறைச் சந்திரனைச் சூடிக் கங்கையினைச் சடைமுடியில் ஏற்று ஆரூரில் இனிது அமர்ந்த ஈசன், சேற்றில் திகழும் தாமரை மலர்மேல் விளங்கும் பிரமனின் சிரம் கொய்த ஈசன், சிவந்த கண்ணையுடைய இடபக் கொடியுடையவன், அவன் எம் பெருமானார் ஆவார்.

1140. வல்லியம் தோலுடையான் வளர்திங்கள்
கண்ணியினான் வாய்த்த
நல்லியல் நான்முகத்தோன் தலையின்
நறவேற்றான்
அல்லியங் கோதைதன்னை ஆகத்து
அமர்ந்தருளி ஆரூர்ப்
புல்லிய புண்ணியனைத் தொழுவாரும்
புண்ணியரே.

தெளிவுரை: புலித் தோலுடையவன்; வளர்கின்ற சந்திரனைச் சூடியவன்; பிரமன் தலையின் ஓடு கொண்டு பலியேற்றவன்; அல்லியங் கோதையைத் தன் மேனியில் அமர்ந்து பொருந்துமாறு செய்து ஆரூரில் வீற்றிருக்கும் புண்ணியன்; அப்பெருமானைத் தொழுபவர்கள் புண்ணியர் ஆவர்.

குறிப்பு: அல்லியங் கோதை இத்திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள தேவியின் திருநாமம்.

வல்லியம் – புலி. புல்லிய – பொருந்த வீற்றிருக்கும் தன்மை.

1141. செந்துவர் ஆடையினார் உடைவிட்டு
நின்றுழல்வார் சொன்ன
இந்திர ஞாலமொழிந்து இன்புற
வேண்டுதி ரேல்
அந்தர மூவெயிலும் மரணம்
எரியூட்டி ஆரூர்த்
தந்திர மாஉடையான் அவன்என்
தலைமையனே.

தெளிவுரை: காவி உடையை அணிந்தவர்களும், ஆடையை நீத்தவரும் சொன்ன மயக்க மொழிகளை ஒழித்து, ஈசன் திருவடிக்கீழ் இருந்து இன்புற வேண்டும் என வேண்டுவீராயின், தீமை செய்த மூன்று மதில்களையுடைய கோட்டைகளை எரியூட்டி ஆரூரில் உள்ள ஈசன் என் தலைமையாக உடையவன். அவன் உமக்கு எல்லா ஞானமும் வழங்குவான் என்றவாறு.

இந்திரஞாலம் மொழிதல் – பிறர் கெட்டுப் போகுமாறு சூழ்ச்சி உடைய மயக்க மொழிகளை உரைத்தல்; அத்தகைய சொற்களை ஒழித்தல்.
அந்தரம் – தீமை. வானத்தில் பறந்து சென்று தீமை புரிந்த மூவெயில் கோட்டைகளைக் குறித்தது, ஆகாயம்.
தந்திரம் – வினை நீக்கும் உபாயமும், கல்வியைப் போல் தெளிவு தருதலும், ஆகம விதிப்படி பூசை ஏற்றலும் ஈசன் கொண்டு விளங்கு தலின் மாண்பு உணர்த்தப்படுவதாயிற்று.
தந்திரம் – உபாயம், கல்வி நூல், ஆகமம்.

1142. நல்ல புனற் புகலித் தமிழ்ஞான
சம்பந்த னல்ல
அல்லி மலர்க்கழனி ஆரூர்
அமர்ந் தானை
வல்லதோர் இச்சையினால் வழிபாடுஇவை
பத்தும் வாய்க்கச்
சொல்லுதல் கேட்டல்வல்லார் துன்பம்
துடைப் பாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: நல்லன புரியும் தீர்த்த மகிமையுடைய புகலியின் தமிழ் ஞானசம்பந்தன், அல்லி மலர்கள் சாரும் கழனிகளையுடைய ஆரூரில் அமர்ந்து அருள் வழங்கும் பரமனை, உறுதியான பற்றுடன் உரைத்த இவ் வழிபாட்டுத் திருப்பதிகத்தை மனத்தில் கொண்டு கற்றும், சொல்லியும், சொல்லக் கேட்டும் விளங்கி நிற்பவர்கள், துன்பத்திலிருந்து நீங்கியவர் ஆவார்கள்.

106. திருவூறல்

தல விளக்கம்: தொண்டை நாட்டுத் தலம். தக்கோலம் என்று வழங்கப்படுகிறது. கல்லாற்றின் கரையில் உள்ள தலம். நந்தியின் வாயிலிருந்து நீர் விழுந்து வெளியில் செல்லும் தலம்.

சுவாமி : ஜலநாதேஸ்வரர், உமாபதீஸ்வரர்

அம்பிகை : உமையம்மை, மோகனவல்லி

தீர்த்தம் : நந்தி தீர்த்தம், கல்லாறு

பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1143. மாறில் அவுணர்அரணம் அவைமாயவோர்
வெங்கணையால் அன்று
நீறெழ எய்தஎங்கள் நிமலன்
இடம்வினவில்
தேறல் இரும்பொழிலும் திகழ்செங்கயல்
பாய்வயலும் சூழ்ந்த
ஊறல் அமர்ந்தபிரான் ஒலியார்கழல்
உள்குதுமே.

தெளிவுரை: பகைமைத் தன்மையிலிருந்து மாறாத அசுரர்களுடைய கோட்டைகளை அழிப்பதற்கு ஒப்பற்ற ஒரே ஒரு கொடிய கணை கொண்டு எரிந்து சாம்பலாகுமாறு செய்த எங்கள் நிமலனுடைய இடம் யாது என வினவினால், தேன் கமழ் பெரிய சோலை திகழ, செம்மையான கயல் பாயும் நீர்வளம் மிக்க வயல் சூழ்ந்த ஊறல் ஆகும். அப் பெருமானுடைய ஒலிக்கும் கழலை நினைந்து போற்றுவோமாக.

அரணம் – கோட்டை; நீறு – சாம்பல். இரும் பொழில் – பெரிய சோலை.

1144. மத்த மதக்கரியை மலையான்மகள்
அஞ்சஅன்று கையால்
மெத்த உரித்த எங்கள் விமலன்
விரும்பும் இடம்
தொத்துஅல ரும்பொழில்சூழ் வயல்சேர்ந்தொளிர்
நீல நாளும் நயனம்
ஒத்தலரும் கழனித் திருவூறலை
உள்குதுமே.

தெளிவுரை: செருக்குற்ற மத யானையை, உமாதேவி கண்டு அஞ்சுமாறு, அக்காலத்தில் கையால் மிகுதியாக உரித்த எங்கள் விமலன், விரும்பி வீற்றிருக்கும் இடமானது, பூத்துக் கொத்தாக மலரும் பொழில் சூழ, வயல்கள் சேர்ந்து, ஒளிர்கின்ற நீல மலர்கள் நாள் தோறும் கண்களைப் போன்று மலரும் கழனிகளை உடைய திருவூறல். அதனை நினைந்து போற்றுவீராக.

சிறப்புரை: உலக மாதாவான பராசக்தி, யானையை அடர்த்த செயலைக் கண்டு அஞ்சியதாக உரைப்ப தானது, மகளிரின் மென்மைத் தன்மையைக் குறித்து, மரபு நோக்கி உணர்த்தப் பெற்றதாயிற்று.

ஈசன் திருவருளால் மன்னுயிர்கள் பூத்து மகிழ்தலும், அவன் அருள் வண்ணம் இயற்கையின் எழில் வண்ணம் அமைதலும், நீல மலர்களை ஒத்த கண்கள் புலப்படுத்தவல்ல இன்ப வெளிப்பாடும் "நயனம் ஒத்து அலரும் கழனித் திருவூறலை" என்னும் தொடர் உணர்த்துவதாயிற்று.

மத்த – செருக்கு. தொத்து – கொத்து. நயனம் – கண்.

1145. ஏன மருப்பினொடும் எழிலாமையும்
பூண்டு அழகார் நன்றும்
கானமர் மான்மறிக்கைக் கடவுள்
கருதும் இடம்
வான மதிதடவும் வளர்சோலைகள்
சூழ்ந்து அழகார் நம்மை
ஊனம் அறுத்தபிரான் திருவூறலை
உள்குதுமே.

தெளிவுரை: பன்றியின் கொம்பும், எழில்மிக்க ஆமையின் ஓடும் அணியாகப் பூண்டு, நன்று விளங்கும் சோலைகளில் விளங்கும் மானும், கரத்தில் கொண்டுள்ள கடவுள் விரும்புகின்ற இடமானது, வளம்மிக்க சோலைகளில் வானத்தில் விளங்குகின்ற சந்திரனின் தண்கதிர்கள் மருவித் திகழ, நம்முடைய குறைபாடுகளை அறுத்த தலைவனாகிய பரமனின் அழகிய திருவூறல் ஆகும். அதனை நினைந்து துதிப்பீராக.

சிறப்புரை: ஆமை வடிவம் கொண்ட திருமாலின் சிறப்புத் தோன்ற "எழில்ஆமை" என உணர்த்தப் பெற்றது. மான் விளங்கும் காடு, நற்பொழிலை உடைதெனும் குறிப்புத் தோன்றவும், பொருந்திய படைகளைப் போன்று அல்லாமல், அணிகலன்

போன்று, நன்று திகழ்கலைக் குறிப்பதாகவும் "அழகார் நன்றும் கானமர்மான்'' என்னும் தொடர் உணர்த்துவதாயிற்று.

வினைத் தொகுதி, மலத் தொகுதி, பிறவிநோய், யாக்கையில் நேரும் பிணி, உள்ளத்தில் நேரும் அறியாமை, அச்சம் முதலான குறைகள் அனைத்தையும் அழித்தவன் பரமன் என்னும் குறிப்புத் தோன்ற, ஊனம் என்பது உணர்த்துவதாயிற்று.

முன்னடியில் ஈசனார் திருக்கோல அழகும் மூன்றாம் அடியில் திருவருள்புரியும் வண்ண அழகும் தனிதனியே சுட்டப்பெறும் சிறப்பாக, "அழகார்'' எனும் சொல் இருமுறை உணர்த்தப் பெற்றுளதும் நோக்குக.

1146. நெய்யணி மூவிலைவேல் நிறைவெண்மழுவும்
அனலும் அன்று
கையணி கொள்கையி னான் கடவு
ளிடம் வினவில்
மையணி கண்மடவார் பலர்வந்து
இறைஞ்சமன்னி நம்மை
உய்யும் வகைபுரிந்தான் திருவூறலை
உள்குதுமே.

தெளிவுரை: சூலமும், ஒளிமிக்க மழுவும், நெருப்பும் நிறைவாகக் கையில் கொண்டுள்ள கடவுள் வீற்றிருக்கும் இடமானது யாது என வினவு வீர்களாயின், அது, மையணிந்த மகளிர் பலர் பணிந்து போற்ற, அதனால் பரிந்து விளங்கி நம்மை உய்யும் வகையில் அருள் புரிந்த ஈசனின் திருவூறல் ஆகும். அதனை நினைந்து, தொழுவீராக.

சிறப்புரை: படைக் கலன்களுக்கு நெய் தடவுதல் மரபு நோக்கி, நெய்யணி மூவிலை வேல் என்று உணர்த்தப் பெற்றது.

படைக் கலன்களைச் செலுத்தும் ஆற்றலும், அவற்றை உரிய இடங்களில் பொருந்துமாறு தரித்துள்ள தன்மையின் சிறப்பும் "நிறை" என்பது உணர்த்தப்பெற்றது.

சிவனும் சக்தியுமாக விளங்கும் இல்லற அக ஒழுக்கத்தின் மேன்மையும், மகளிரின் வழிபாட்டு ஒழுக்க நெறியும் புலப்படுத்த, "மையணி கண்மடவார் பலர் வந்து இறைஞ்ச" என்றார்.

1147. எண்திசை யோர்மகிழ எழில்மாலையும்
போனகமும் பண்டு
சண்டி தொழஅளித்தான் அவன்தாழும்
இடம் வினவில்
கொண்டல்கள் தங்குபொழில் குளிர்பொய்கைகள்
சூழ்ந்து நஞ்சை
உண்டபி ரான்அமரும் திருவூறலை
உள்குதுமே.

தெளிவுரை: எண் திசையில் உள்ள மக்கள் அனைவரும் மகிழும் வண்ணம், தான் அணிந்து எழில் பெற்ற மலர் மாலையும், உண்டியும் சண்டீசருக்கு அணிவித்து வணங்குமாறு அருள்புரிந்த பரமன் உறையும் இடம் வினவில், அது, மேகம் சூழும் பொழில்களும், குளிர்ந்து விளங்கும் பொய்கையும் சூழ்ந்து விளங்க, நஞ்சை அருந்திய ஈசன் அமர்கின்ற திருவூறல் ஆகும். அதனை நினைந்து வணங்குவீராக.

போனகம் – உண்டி, பிரசாதம். சண்டி – சண்டேசர். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். கொண்டல் – மேகம்.

1148. கறுத்த மனத்தினொடும் கடுங்காலன்வந்து
எய்தலும் கலங்கி
மறுக்குறு மாணிக்குஅருள மகிழ்ந்தான்
இடம் வினவில்
செறுத்தெழு வாளரக்கன் சிரம்தோளு(ம்)
மெய்யும் நெரிய அன்று
ஒறுத்தருள் செய்தபிரான் திருவூறலை
உள்குதுமே.

தெளிவுரை: *சினங்கொண்டவனாய்க் கொடிய காலன் வந்துற்ற போது, அஞ்சிக் கலக்கம் அடைந்த மார்க்கண்டேயருக்கு அருள் புரிந்து, கூற்றுவனை உதைத்து அழித்து மகிழ்ந்தவனாகிய ஈசன் வீற்றிருக்கும் இடம் யாது என வினவில், பகைகொண்டு, மலையைப் பெயர்க்க எழுந்த இராவணரின் சிரமும், தோளும், மெய்யும் நெரிய விரலால் ஊன்றித் தண்டனை வழங்கி, பின்னர் அருள் செய்த அப் பிரான் விளங்கும் திருவூறல் ஆகும். அதனை எண்ணி வணங்குவீராக.*

கறுத்த – சினம் கொண்ட. மறுக்குறு – கலங்கிய. ஒறுத்த – தண்டித்த.

1149. நீரின் மிசைத்துயின்றோன் இறைநான்
முகனும் அறியாது அன்று
தேரும் வகைநிமிர்ந்தான் அவன்சேரும்
இடம்வினவில்
பாரின் மிசையடியார் பலர்வந்து
இறைஞ்ச மகிழ்ந்து ஆகம்
ஊரும் அரவசைத்தான் திருவூறலை
உள்குதுமே.

தெளிவுரை: *திருமாலும் பிரமனும் அறியாது பின்னர் உணரும் வகையால் ஓங்கி நின்ற ஈசன் பொருந்தி விளங்கும் இடம் யாது என வினவில், உலகில்*

அடியவர்கள் பலர் வந்து துதிக்க, மகிழ்ந்து திருமேனி யில் ஊர்ந்து செல்லும் நாகத்தையுடையன் வீற்றிருக்கும் திருவூறல் ஆகும். அதனை எண்ணி வணங்குவீராக.

1150. பொன்னியல் சீவரத்தார் புளித்தட்டையர்
மோட்டு அமணர் குண்டர்
என்னும் இவர்க்கு அருளா ஈசனிடம்
வினவில்
தென்னென வண்டினங்கள் செறியார்பொழில்
சூழ்ந்து அழகார் தன்னை
உன்ன வினைகெடுப்பான் திருவூறலை
உள்குதுமே.

தெளிவுரை: பொன்போன்ற காவியுடை யுடையவர்கள் மற்றும் சமணர்கள் ஆகியோர்க்கு, அருள் தோயாது ஈசன் விளங்கும் இடம் யாதென வினவில், வண்டினங் கள் சேர் பொழில் சூழ்ந்து, தன்னை நினைப்பவர் களின் வினை தீர்ப்பவனாகிய பரமன் மேவும் திருவூறல் ஆகும். அதனை எண்ணித் துதிப்பீராக.

1151. கோடல் இரும்புறவிற் கொடிமாடக்
கொச்சையர்மன் மெச்ச
ஓடு புனல்சடைமேற் கரந்தான்
திருவூறல்
நாடல் அரும்புகழால் மிகுஞான சம்
பந்தன் சொன்ன
பாடல்கள் பத்தும்வல்லார் பரலோகத்து
இருப்பாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: கங்கையைச் சடையில் கரந்த சீகாழியில் விற்றிருக்கும் ஈசனைத் துதிக்கும் ஞானசம்பந்தன்

திருவூறல் மேவும் ஈசனைச் சார்ந்து இத்திருப்பதிகத்தை ஓதவல்லவர்கள், பரனுடைய உலகில் விளங்குவார்கள்.

பரலோகம் – பரமனின் உலகம்.

(இப் பதிகத்தில் இரு பாடல்கள் கிடைக்கவில்லை).

107. திருக்கொடிமாடச் செங்குன்றூர்

தல விளக்கம்: கொங்கு நாட்டுத்தலம். திருச்செங்கோடு என வழங்கப்படுகிறது. வேறு பெயர்கள்; தெய்வத் திருமலை, செங்கோடு, நாககிரி, காளகிரி முதலியன. பிரசித்தி பெற்ற முருகப் பெருமான் திருத்தலமாக விளங்குகிறது.

இதனை அருணகிரிநாதர்,

"சேந்தனைக் கந்தனைச் செஞ்சுடர்வேல்
வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்
தோனை விளங்கு வள்ளிக்
காந்தனைக் கந்தக் கடம்பனைக்
கார்மயில் வாகனனைச்
சாந்து ணைப் போதும் மறவா
தவர்க்கு ஒரு தாழ்வில்லையே." (கந். அலங்)

எனப் போற்றுகின்றார்.

சுவாமி : அர்த்தநாரீஸ்வரர்

அம்பிகை : பாகம் பிரியாள், அர்த்தநாரீஸ்வரி

தல மரம் : இலுப்பை மரம்

தீர்த்தம் : பிரம தீர்த்தம்

பண் : வியாழக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1152. வெந்தவெண் ணீறணிந்து விரிநூல்
திகழ்மார்பில் நல்ல
பந்தண வும்விரலாள் ஒருபாகம்
அமர்ந்தருளிக்
கொந்தண வும்பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் நின்ற
அந்தண னைத் தொழுவார் அவலம்
அறுப்பாரே.

தெளிவுரை: *திருவெண்ணீறு அணிந்து, முப்புரி நூல் மார்பில் திகழ, உமாதேவியை ஒரு பாகத்தில் அமர்ந்து விளங்குமாறு அருள் செய்து, கொத்தாக விளங்கும் பொழில் சூழும் கொடிமாடச் செங்குன்றூர் மேவி விளங்கும் ஈசனைத் தொழுபவர்கள், துயரம் அற்றவராய் இருப்பார்கள்.*

சிறப்புரை: *ஈசனை, "அந்தணன் ஆகி ஆண்டு கொண்டு அருளி" எனவும், "திருப்பெருந்துறையுறை கோயிலும் காட்டி, அந்தணன் ஆவதும் காட்டி வந்து ஆண்டாய்" எனவும் மாணிக்கவாசகர் உரைப்பது காண்க.*

கொந்து – கொத்து.; அந்தணன் – ஈசன்.

1153. அலைமலி தண்புனலோடு அரவம்
சடைக்குஅணிந்து ஆகம்
மலைமகள் கூறுடையான் மலைஆர்
இளவாழைக்
குலைமலி தண்பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் நின்ற
தலைமக னைத்தொழுவார் தடுமாற்று
அறுப்பாரே.

தெளிவுரை: கங்கையுடன் அரவம் சடையில் அணிந்து, உடம்பில் உமாதேவியைக் கூறாக வைத்து, மலையில் விளங்கும் வாழைக் குலைகள் உடைய பொழில் சூழ்ந்த கொடிமாடச்செங்குன்றூர் மேவிய பரமனைத் தொழுபவர்கள், மனக்கலக்கம் அற்றவர் ஆவர்.

மலைமகள் கூறுடையான் – அர்த்த நாரீசர். இத் தலத்தில் விளங்கும் ஈசன் திருநாமம்.

i154. பாலன நீறுபுனை திகழ்மார்பில்
பல்வளைக்கை நல்ல
ஏல மலர்க்குழலாள் ஒருபாகம்
அமர்ந்தருளிக்
கோல மலர்ப்பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் மல்கும்
நீலநன் மாமிடற்றான் கழலேத்தல்
நீதியே.

தெளிவுரை: பால் போன்ற வெண்மையான திருநீறு புனைந்து திகழ்கின்ற மார்பில், உமாதேவியை ஒரு பாகமாக அமருமாறு அருளி அழகிய மலர்ப் பொழில் சூழும் கொடிமாடச் செங்குன்றூர் விளங்கும் நீல கண்டனாகிய பரமன் திருக்கழலை வணங்குவது, கடமையாகும்.

சிறப்புரை: வெண்மை வண்ணமும், பருக இன்பமும், சக்தியும் தரும் பால் போன்று, திருவெண்ணீறு நல்கு தலை, இவண் சுட்டுவதாயிற்று. உடல் பசியைத் தீர்க்கும் பால் போன்று ஆன்மப் பசியைத் தீர்க்க வல்லது திருவெண்ணீறு என்பதும், இவண் குறிப்பால் உணர்த்தப் பெற்றது.

நஞ்சினைத் தன் மிடற்றில் தேக்கி வைத்துக் காத்தருளிய ஈசன் அருட்குணத்தை வெளிப்படுத்தி,

அப்பெருமானைச் சரண் அடைதல் நம்மைக் காத்துக் கொள்ளும் பொருட்டே ஆகும் என்னும் மெய்ம்மையும், மன்னுயிர்களுக்கு அப்பேற்றை வழங்க வேண்டும் என்னும் கருணையும் தோன்ற நீல நன்மாமிடற்றான் கழல் ஏத்தல் நீதியே என உணர்த்தப்பட்டது.

நீதி – நியதி, கடமை.

1155. வாருறு கொங்கைநல்ல மடவாள்
திகழ்மார்பில் நண்ணும்
காருறு கொன்றையொடும் கதநாகம்
பூண்டருளிச்
சீருறும் அந்தணர்வாழ் கொடிமாடச்
செங்குன்றூர் நின்ற
நீருறு செஞ்சடையான் கழல்ஏத்தல்
நீதியே.

தெளிவுரை: உமாதேவியார் ஒரு பாகத்தில் திகழ்ந்து விளங்க, நண்ணும் கார்காலத்தில் சிறந்து மல்கும் கொன்றை மலரும், சினம் மிக்க நாகமும் அணிந்து, புகழ்மிக்க அந்தணர்கள் வாழும் கொடிமாடச் செங்குன்றூரில் நின்று, கங்கை தரித்த செஞ்சடை நாதனாகிய பரமன் திருக்கழலை வணங்குதல் கடமை யாகும்.

சிறப்புரை: வேதங்களை நன்கு பயின்று வேள்வி முதலான கிரியைகளைப் பேணும் ஒழுக்கமும் சீலமும் கொண்டுள்ள அந்தணர்கள், சீர்உறும் அந்தணர் என உணர்த்தப் பெற்றது.

சீர் – புகழ்.

1156. பொன்திகழ் ஆமையொடு புரிநூல்
திகழ் மார்பில் நல்ல
பன்றியின் கொம்பணிந்து பணைத் தோளியோர்
பாக மாகக்
குன்றன மாளிகைசூழ் கொடிமாடச்
செங்குன் றூர் வானில்
மின்திகழ் செஞ்சடையான் கழல்ஏத்தல்
மெய்ப்பொருளே.

தெளிவுரை: அழகியதாய் விளங்கும் திருமால், வடிவுகாண் ஆமையோட்டுடன், முப்புரி நூல் திகழும் மார்பில், பன்றியின் கொம்பு அணிந்து, மூங்கிலை யொத்த மென்மையான தோளையுடைய உமாதேவியைப் பாகமாகக் கொண்டு, குன்றனைய வலிமையும் உயர்ச்சியும் கொண்ட மாளிகைகள் சூழ்ந்த கொடிமாடச் செங்குன்றூரில், வானில் விளங்கும் மின்னலைப் போன்ற சிவந்த சடையுடைய ஈசன் திருக்கழலைப் பரவிப் போற்றுதல், உண்மை யான ஞானம் ஆகும்.

சிறப்புரை: திருமால் ஆமையாகவும், பன்றியாகவும் வடிவு கொண்ட மகிமையை உணர்த்தும் வண்ணம், "பொன் திகழ் ஆமை" எனவும், "நல்ல பன்றி" எனவும் உரைக்கப் பெற்றமை காண்க.

திருமகள் விளங்கும் திருமார்பினை உடைய திருமாலின் பெருமை, "பொன்திகழ் ஆமை" எனக் குறிப்பால் உணர்த்துவதாயிற்று.

ஈசன் திருவடியை வணங்கும் முறைமையே மெய்ம்மை தரவல்லது. அதுவே மெய்ஞ்ஞானம் என உணர்த்தப்படுவதை, "மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்" என வரும் மாணிக்க

வாசகர் தம் கூற்றாலும் அறிக. ஈசன் திருவடியை வணங்குதலாகிய ஞானம் வீடுபேற்றுக்குக் காரணம் ஆதலும் காண்க.

பொன் – அழகு, திருமகள்.

1157. ஓங்கிய மூவிலைநற் சூலம்
ஒருகையன் சென்னி
தாங்கிய கங்கையொடு மதியம்
சடைக்குஅணிந்து
கோங்கு அணவும் பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் வாய்ந்த
பாங்கன தாள் தொழுவார் வினையாய
பற்றறுமே.

தெளிவுரை: வெற்றியோடு நல்லருளும் ஓங்கச் செய்யும் மூவிலை வேல் நற்சூலம் ஒரு கையில் திகழவும், கங்கையும், சந்திரனும் சடையில் தரித்து, தேன் திகழும் பொழில் சூழ் கொடிமாடச் செங்குன்றூரில் மேவிய ஈசனின் அருட்பாங்கான திருவடியைத் தொழு பவர்களுக்கு, பற்றியுள்ள வினைகள் யாவும் விலகி அறும்.

1158. நீடலர் கொன்றையொடு நிமிர்புன்
சடைதாழ வெள்ளை
வாடல் உடைதலையில் பலிகொள்ளும்
வாழ்க்கையனாய்க்
கோடல் வளம்புறவிற் கொடிமாடச்
செங்குன்றூர் நின்ற
சேடன தாள்தொழுவார் வினையாய
தேயுமே.

தெளிவுரை: நீண்டு மலரும் கொன்றையுடன் சடை முடி தாழ்ந்து நீண்டு விளங்க, பிரம கபாலம் ஏந்திப்

பிச்சை கொள்ளும் வாழ்க்கை உடையவனாய், கோடல் என்னும் பூக்கள் விளங்கும் கொடிமாடச் செங்குன்றூரில் நின்று மேவும் பெருமையுடன் விளங்கும் ஈசன் திருத்தாளைத் தொழுபவர்களுக்கு, வினையானது நீங்கும்.

சிறப்புரை: ஈசன் இத்திருத்தலத்தில் அர்த்தநாரீஸ்வரர் ஆக நின்ற திருக்கோலத்தில் அருள் வழங்குகின்ற, "கொடிமாடச் செங்குன்றூர் நின்ற சேடன்" என்று உணர்த்தப்பட்டது காண்க.

வெள்ளை வாடல் உடைதலை – பிரம கபாலம். கோடல் – ஒருவகைப் பூ, செங்காந்தள் மலரைக் குறிக்கும். சேடன் – பெருமையுடையவன்.

1159. மத்த நன் மாமலரும் மதியும்வளர்
கொன்றையுடன் துன்று
தொத்தலர் செஞ்சடைமேல் துதைய
உடன்சூடிக்
கொத்தலர் தண்பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் மேய
தத்துவ னைத்தொழுவார் தடுமாற்று
அறுப்பாரே.

தெளிவுரை: ஊமத்த மலரும், சந்திரனும், கொன்றை மலரும் கொத்தாக விளங்கும் சடையின்மேல் திகழச் சூடி, கொத்தாக மலரும் குளிர்ந்த பொழில் சூழும் கொடிமாடச் செங்குன்றூர் மேவிய மெய்ப் பொருளாகிய ஈசனைத் தொழுபவர்கள் மனத் தடுமாற்றம் இல்லாதவர் ஆவர்.

சிறப்புரை: ஊமத்த மலர், ஈசன் திருமுடியில் அணியப் பெறும் சிறப்பு, "மத்த நன்மா மலர்" என உணர்த்தப் பெற்றது.

1160. செம்பொனின் மேனியனாம் பிரமன்திரு
மாலும் தேட நின்ற
அம்பவளத் திரள்போல் ஒளியாய
ஆதிபிரான்
கொம்புஅண வும்பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் மேய
நம்பன தாள்தொழுவார் வினையாய
நாசமே.

தெளிவுரை: செம்பொன் போன்ற திருமேனியுடையவன், பிரமனும் திருமாலும் தேடுமாறு செய்து அழகிய செம்மையான பவளத் திரள் போன்று ஒளியாகிய ஆதிப்பிரான், பொழில் சூழ் கொடிமாடச் செங்குன்றூர் மேவிய ஈசன். அப்பெருமானுடைய திருவடியைத் தொழுபவர்களுக்கு வினையானது மாயும்.

நம்பன் – ஈசன், சிவன்.

1161. போதியர் பிண்டியர்என்று இவர்கள்
புறங்கூறும் பொய்ந்நூல்
ஓதிய கட்டுரை கேட்டு உழல்வீர்
வரிக்குயில்கள்
கோதிய தண்பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் நின்ற
வேதிய னைத்தொழநும் வினையான
வீடுமே.

தெளிவுரை: புத்தர், சமணர் என்பவர் கூறும் பொய்யுரை கொள்ளன்மின். குயில்கள் சூழும் தண் பொழில்கள் விளங்கும் கொடிமாடச் செங்குன்றூரில் நிலவி நின்று மேவும் வேத நாயகனாகிய ஈசனைத் தொழ, உமது வினை யாவும் அழியும்.

வேதியன்: சிவன். "சொற்றுணை வேதியன் சோதி வானவன்" என வரும் திருநாவுக்கரசரின் வாக்கும் காண்க.

வீடும் – அழியும், வீழும்.

1162. அலைமலி தண்புனல்சூழ்ந்து அழகார்
புகலிந்நகர் பேணும்
தலைமக னாகிநின்ற தமிழ்ஞான
சம்பந்தன்
கொலைமலி மூவிலையான் கொடிமாடச்
செங்குன்றூர் ஏத்தும்
நலமலி பாடல்வல்லார் வினையான
நாசமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *நீர்வளம் மிக்க அழகிய புகலி நகரைப் பேணும் தலை மகனாகிய தமிழ் ஞானசம்பந்தன், சூலம் ஏந்தியவனாகிய ஈசன் விளங்கும் கொடிமாடச் செங்குன்றூரை ஏத்திய நலம் மிகுந்த இத்திருப்பதிகத்தை ஓதவல்லவர்களுடைய வினை யாவும் அழியும்.*

கொலை மலிமூவிலையான் – சூலப்படை கொண்ட ஈசன்.

108. திருப்பாதாளீச்சரம்

தல விளக்கம்: *காவிரி தென்கரைத் தலம். பாமணி என்று வழங்கப்படுகிறது. பாம்பணி, சர்ப்பபுரம் என்பன இவ்வூரின் வேறு பெயர்கள். ஆதிசேஷன், தனஞ்செய முனிவர் திருக்கோலம் தாங்கி பூசித்ததலம்.*

சுவாமி : *நாகநாதர், சர்ப்ப புரீஸ்வரர்*

அம்பிகை : *அமிர்த நாயகி*

தல மரம் : *மாமரம்*

தீர்த்தம் : நாக தீர்த்தம்.

பண் : வியாழக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1163. மின்னியல் செஞ்சடைமேல் விளங்கும்மதி
மத்தமொடு நல்ல
பொன்னியல் கொன்றையினான் புனல்சூடிப்
பொற்பமரும்
அன்னம் அனநடையாள் ஒருபாகத்து
அமர்ந்தருளி நாளும்
பன்னிய பாடலினான் உறைகோயில்
பாதாளே.

தெளிவுரை: *மின்னலைப் போன்று விளங்கும் சிவந்த சடையின்மீது, விளங்கும் சந்திரன், ஊமத்த மலர், பொன் போன்ற கொன்றை மலர், கங்கை ஆகிய வற்றைத் தரித்துக் கொண்டு, மலையரசன் மகளாகிய அன்னம் போன்ற நடையுடைய உமாதேவி ஒரு பாகத்தில் வீற்றிருக்க, நாள்தோறும் துதிப்பாடல் களால் ஏத்தப்படுபவனாகிய ஈசன், உறையும் கோயில் பாதாளீச்சரம் ஆகும்.*

1164. நீடலர் கொன்றையொடு நிரம்பா
மதிசூடி வெள்ளைத்
தோடமர் காதில்நல்ல குழையான்
சுடுநீற்றான்
ஆடரவம் பெருக அனலேந்திக்
கைவீசி வேதம்
பாடலி னால்இனியான் உறைகோயில்
பாதாளே.

தெளிவுரை: *நீண்ட கொன்றை மலரும், சந்திரனும் சூடி, வெண்மையான ஒளி மிக்க தோடும், நல்ல இசை*

பொழியும் கந்தருவர்களைக் குழைகளாகவும் காதில் அணிந்து, திருவெண்ணீறு பூசி, ஆடுகின்ற அரவம் திகழ, கையில் அனலையேந்தி வீசி, வேத கீதங்களால் போற்றப்படும் இனிமை உடையவனாகிய ஈசன், உற்றகின்ற கோயில் பாதாளீச்சரம் ஆகும்.

1165. நாகமும் வான்மதியும் நலமல்கு
செஞ்சடை யான்சாமம்
போகநல் வில்வரையாற் புரமூன்று
எரித்துகந்தான்
தோகைநன் மாமயில்போல் வளர்சாயல்
தூமொழியைக் கூடப்
பாகமும் வைத்துகந்தான் உறைகோயில்
பாதாளே.

தெளிவுரை: *நாகமும், சந்திரனும் நலமுடன் திகழும் செஞ்சடையை உடையவன், உரிய காலத்தில், மேரு மலையை வில்லாகக் கொண்டு முப்புரங்களை எரித்த வன், மயில் போன்ற சாயலையுடைய உமாதேவியைப் பாகமாகக் கொண்டு மகிழ்ந்த ஈசன், உறைகின்ற கோயிலானது, பாதாளீச்சரம் ஆகும்.*

சாமம் – ஜாமம். கால அளவைக் குறித்தது.

1166. அங்கமு நான்மறையும் அருள்செய்து
அழகார்ந்த அஞ்சொல்
மங்கையோர் கூறுடையான் மறையோன்
உறைகோயில்
செங்கயல் நின்று உகளும் செறுவில்
திகழ்கின்ற சோதிப்
பங்கய நின்றுஅலரும் வயல்சூழ்ந்த
பாதாளே.

தெளிவுரை: வேதமும், அதன் அங்கமும் அருளி, அழகிய அஞ்சொல் விளம்பும் மங்கையாகிய உமாதேவியைப் பாகங்கொண்ட வேதநாயகன் உறைகின்ற கோயிலானது, கயல்கள் திரியும் குளத்தில் செந்தாமரை மலர்கள் விளங்கும் வயல் சூழ்ந்த பாதாளீச்சரம் ஆகும்.

சிறப்புரை: உமாதேவியின் சொல்லழகு இவண் சுட்டப் பெற்றது. இதனால் ஞானாம்பிகையாக விளங்கும் உமாதேவியின் சிறப்பும் உணர்த்தப்படுவதாயிற்று. இக் கருத்தின் வழி, "வாக்கே நோக்கிய மங்கை மணாளனை மூக்கே நீ முரலாய்" எனத் திருநாவுக் கரசர் உரைப்பதும் சிந்திக்கத் தக்கது.

செறு – வயல், குளம். சோதிப் பங்கயம் – செந்தாமரை.

1167. பேய்பல வும்நிலவப் பெருங்காடு
அரங்காகஉன்னி நின்று
தீயொடு மான்மறியும் மழுவும்
திகழ்வித்துத்
தேய்பிறை யும்அரவும் பொலிகொன்றைச்
சடை தன்மேற் சேரப்
பாய்புன லும்உடையான் உறைகோயில்
பாதாளே.

தெளிவுரை: பேய்கள் சூழச் சுடுகாட்டை இடமாகக் கொண்டு, தீயும், மானும் மழுவும் திகழ, சடை முடியில் பிறைச் சந்திரனும், அரவமும் கொன்றை மலரும் பொருந்தி விளங்க, கங்கை தரித்த ஈசன், உறைகின்ற கோயில் பாதாளீச்சரம் ஆகும்.

1168. கண்ணமர் நெற்றியினான் கமழ்கொன்றைச்
சடைதன்மேல் நன்று

விண்ணியல் மாமதியும் உடன்வைத்
தவன் விரும்பும்
பெண்ணமர் மேனியினான் பெருங்காடு
அரங்காக ஆடும்
பண்ணியல் பாடலினான் உறைகோயில்
பாதாளே.

தெளிவுரை: *நெற்றியில் கண்ணுடையவன், கொன்றை மலர் சூடியுள்ள சடையின் மீது சந்திரனை உடன் வைத்தவன்; தன்னால் விரும்பப்படும் உமாதேவியை உடனாகக் கொண்ட அர்த்த நாரியாய் விளங்குபவன்; சுடுகாட்டை இடமாகக் கொண்டு ஆடுகின்றவன்; பண்ணோடு கூடிய இசையை விழைந்த ஈசன், அப்பெருமான் உறையும் கோயில் பாதாளீச்சரம் ஆகும்.*

1169. விண்டலர் மத்தமொடு மிளிரும்இள
நாகம் வன்னி திகழ்
வண்டலர் கொன்றைநகு மதிபுல்கு
வார் சடையான்
விண்டவர் தம்புரமூன்று எரிசெய்துரை
வேத நான்கும் அவை
பண்டிசை பாடலினான் உறைகோயில்
பாதாளே.

தெளிவுரை: *நன்கு மலர்ந்த ஊமத்தம், ஒளிமிக்க நாகம், வன்னி இலை, வண்டுகள் திகழ் கொன்றை, பிறைச் சந்திரன் இவற்றைச் சடையில் கொண்டு, பகைவரின் மூன்று புரங்களை எரித்து, நான்கு வேதங்களின் இசையில் மிக்கவனாகிய ஈசன் உறையும் கோயில் பாதாளீச்சரம் ஆகும்.*

வன்னி – வன்னிப்பத்திரம், நெருப்பு. விண்டவர் – பகைவர்.

1170. மல்கிய நுண்ணிடையாள் உமைநங்கை
மறுகஅன்று கையால்
தொல்லை மலைஎடுத்த அரக்கன்தலை
தோள்நெரித்தான்
கொல்லை விடை யுகந்தான் குளிர்திங்கள்
சடைக்குஅ ணிந்தோன்
பல்லிசை பாடலினான் . உறைகோயில்
பாதாளே.

தெளிவுரை: *நுண்ணிய மெல்லிடையுடைய உமாதேவி கலங்குமாறு, கையினால் கயிலையை எடுத்த இராவணனுடைய தலையும், தோளும், கால்விரல் ஊன்றி நெரித்தவன், இடப வாகனத்தை உகந்து, குளிர்ச்சி பொருந்திய சந்திரனைச் சடைக்கு அணியாகக் கொண்டு பலவிதமான இசைப் பாடலுக்கு உரியவனாகிய ஈசன், உறைகின்ற கோயில் பாதாளீச்சரம் ஆகும்.*

மறுகுதல் – கலங்குதல். பல்லிசை – பல வகையான இசை

1171. தாமரை மேல்அயனும் அரியும்தமது
ஆள்வினையால் தேடிக்
காமனை வீடுவித்தான் கழல்காண்பிலர்
ஆய் அகன்றார்
பூமரு வும்குழலாள் உமைநங்கை
பொருந்தியிட்ட நல்ல
பாமரு வும்குணத்தான் உறைகோயில்
பாதாளே.

தெளிவுரை: *தாமரை மலரின்மேல் விளங்கும் பிரமனும், திருமாலும் தமது ஆற்றலின் வயத்தால், காமனை எரித்த ஈசன் கழலைக் காணாதவாறு விலகி நிற்கவும், மலர்போன்ற மென்மையான கூந்தலை உடைய*

உமாதேவியைப் பாகமாகப் கொண்டு, பக்திப் பாடல்களில் விளங்கும் குணத்தினனாகிய ஈசன் உறையும் கோயில், பாதாளீச்சரம் ஆகும்.

சிறப்புரை: ஆணவம் நீங்கப்பெற்ற நிலையில், தேவ காரியத்தை முன்னிட்டு, ஈசன்பால் நாடிய மன் மதனின் கண்ணுக்கு, இறைவன் புலனாகியமையும், தமக்குள் உண்டான விவாதம் காரணமாக நாடிய பிரமன், திருமால் ஆகியோருக்குப் புலனாகாத தன்மை யும் காண்க.

"தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே" என்னும் திருநாவுக்கரசர் வாக்கிற்கு ஏற்ப தோத்திரப் பாடல்களில் மருவி விளங்குபவன் ஈசன் என்பதனை, "நல்ல பாமருவும் குணத்தான்" என்பது உணர்த்துவ தாயிற்று.

பக்தி செய்யும் அடியவர்களை நன்முறையில் காத்தருள்பவன் எனவும், தூய்மையானவன் எனவும், "நல்ல பாமருவும் குணத்தான்" எனும் தொடர் உணர்த்தலும் ஆம்.

வீடுவித்தல் – வீழ்த்தல், அழித்தல். பூமருவும் குழல் – மலர் போன்ற மென்மையான கூந்தல். பொருந்தியிட்ட – பாகமாகக் கொண்ட. பா – பக்திப் பாடல்கள், தூய்மை, காப்பு.

1172. காலையில் உண்பவரும் சமண கையரும்
கட்டுரை விட்டுஅன்று
ஆல விடநுகர்ந்தான் அவன்றன்னடி
யே பரவி
மாலையில் வண்டினங்கள் மதுஉண்டு
இசைமுரல வாய்த்த
பாலையாழ்ப் பாட்டுகந்தான் உறைகோயில்
பாதாளே.

தெளிவுரை: *சமணர் முதலான பிறர் கூறும் வரைகளை ஒதுக்கிவிட்டு, தேவர்களைக் காக்கும் பொருட்டு ஆலகால விடத்தை உண்டவனும், வண்டினங்கள் மாலை நேரத்தில் தேனை உண்டு இசை எழுப்ப, பாலைப் பண் விரும்பியவனும் ஆகிய ஈசன் உறைகின்ற கோயில், பாதாளீச்சரம் ஆகும்.*

1173. பன்மலர் வைகுபொழில் புடைசூழ்ந்த
பாதாளைச் சேரப்
பொன்னியல் மாடமல்கு புகலிநகர்
மன்னன்
தன்னொளி மிக்குயர்ந்த தமிழ்ஞான
சம்பந்தன் சொன்ன
இன்னிசை பத்தும்வல்லார் எழில்வானத்து
இருப்பாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *பலவகையான மலர்கள் கொண்ட பொழில்கள் சூழ்ந்த பாதாளீச்சரத்தைப் பொருந்த, புகலி நகரில் சிறப்புடன் விளங்குபவனாகிய தனது இயல்பால் ஒளி மிக்கு உயர்ந்த, தமிழ் ஞானசம்பந்தன் சொன்ன, இனிய இசைமிக்க இத் திருப்பதிகத்தை ஓதவல்லவர்கள், தேவலோகத்தில் எழிலுடன் விளங்கு வார்கள்.*

109. திருச்சிரபுரம்

தல விளக்கம்: *பதிக எண் 1 காண்க*

பண் : வியாழக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1174. வாருறு வனமுலை மங்கைபங்கன்
நீருறு சடைமுடி நிமலன்இடம்
காருறு கடிபொழில் சூழ்ந்து அழகார்
சீருறு வளவயல் சிரபுரமே.

தெளிவுரை: *அழகிய கச்சு அணிந்த உமாதேவியைப் பாகம் கொண்டு, கங்கை தரித்த சடை முடியுடைய நிமலன் இருக்கும் இடமானது, வளமையான மணம் கொண்ட பொழில் சூழ்ந்த, அழகின் சிறப்பினை உடைய வளம் மிகுந்த வயல்களை யுடைய சிரபுரம் ஆகும்.*

நீருறு சடைமுடி – கங்கை தரித்த சடைமுடி.

1175. அங்கமொடு அருமறை அருள்புரிந்தான்
திங்களொடு அரவுஅணி திகழ்முடியன்
மங்கையொடு இனிதுறை வளநகரம்
செங்கயல் மிளிர்வயல் சிரபுரமே.

தெளிவுரை: *வேதங்களும் அதன் அங்கங்களும் தோற்றுவித்து, சந்திரனும் அரவும் திகழும் முடியுடன் உமா தேவியுடன் இனிது உறையும் ஈசனின் வளமையான நகரானது, கயல்கள் மிகுந்த நீர் வளம் மிக்க வயல்களைக் கொண்ட சிரபுரம் ஆகும்.*

1176. பரிந்தவன் பன்முடி அமரர்க்கு ஆகித்
திரிந்தவர் புரமவை தீயில்வேவ
வரிந்தவெஞ் சிலைபிடித்து அடுசரத்தைத்
தெரிந்தவன் வளநகர் சிரபுரமே.

தெளிவுரை: *கருணையின் வயத்தால் தேவர்களின் பதவியைக் காக்கும் வகையில், முப்புர அசுரர்களை அழிக்கவல்லதும், கோட்டைகளைத் தீயில் வேகுமாறு*

கொடிய வில்லும் அதில் தொடுக்கும் அம்பும் தெரிந்து பயன்படுத்தி, ஈசன் வீற்றிருக்கும் வளநகர் சிரபுரம் ஆகும்.

1177. நீறுஅணி மேனியன் நீள்மதியோடு
ஆறுஅணி சடையினன் அணி இழையோர்
கூறுஅணிந்து இனிதுஉறை குளிர்நகரம்
சேறுஅணி வளவயல் சிரபுரமே.

தெளிவுரை: திருவெண்ணீறு அணிந்த திருமேனியை உடையவன்; சந்திரனும் கங்கையும் சடையில் அணிந்தவன்; உமாதேவியை ஒரு பாகத்தில் அங்கமாகக் கொண்டு இனிது உறையும் நகரானது, வயல் வளம் மிக்க சிரபுரம் ஆகும்.

ஆறு – கங்கை. அணி இழை – உமாதேவி.

1178. அருந்திறல் அவுணர்கள் அரண்அழியச்
சரம்துரந்து எரிசெய்த சங்கரன்ஊர்
குருந்தொடு கொடிவிடு மாதவிகள்
திருந்திய புறவணி சிரபுரமே.

தெளிவுரை: வலிமைமிக்க அசுரர்களின் கோட்டைகள் அழியுமாறு சரம் தொடுத்து எரித்த சங்கரன் ஊரானது, குருந்த மரத்தில் மாதவிக் கொடிகள் படர, காடுகள் சூழும் சிரபுரம் ஆகும்.

1179. கலையவன் மறையவன் காற்றொடுதீ
மலையவன் விண்ணொடு மண்ணும்அவன்
கொலையவன் கொடிமதில் கூட்டழித்த
சிலையவன் வளநகர் சிரபுரமே.

தெளிவுரை: ஈசன், கல்வியால் திகழும் ஞான மாகியவன்; வேதமாகியவன்; காற்றும் நெருப்பும் ஆகியவன்; உறுதியான மலையாகியவன்; விண்ணும்,

மண்ணும் ஆகியவன்; கொலைத் தன்மை கொண்ட வன்மை மிக்க கொடிய மதில்களை - முப்புரத்தினை அதன் கூட்டோடு, ஒருசேர அழித்த வில்லை யுடையவன். அப் பெருமானின் வளநகர் சிரபுரம் ஆகும்.

சிறப்புரை: *பஞ்ச பூதங்களுள் காற்று, தீ, விண், மண் என நான்கும் கூறப்பட்டதாயினும், நீரின் தன்மையும் இனத்தின் அடிப்படையில் சேரும் எனக் கொள்க. மலையவன் என்பது கயிலை மலையை உணர்த்தலும் ஆம்.*

1180. வானமர் மதியொடு மத்தம்சூடித்
தானவர் புரம்எய்த சைவன்இடம்
கானமர் மடமயில் பெடைபயிலும்
தேனமர் புரம்எரி சிரபுரமே.

தெளிவுரை: *சந்திரனொடு ஊமத்த மலரினைச் சென்னியில் சூடி, அசுரர்களின் புரம் எரித்த சைவனாகிய ஈசன் இடமானது, சோலைகளில் மயில் கள் பெடையுடன் ஆட, தேன் கமழும் ஒளிமிக்க சிரபுரம் ஆகும்.*

சிறப்புரை: *ஈசனை, சைவம் எனக் குறிப்பிடும் முறையில், "ஐயாறு அதனில் சைவன் ஆகியும்" என மாணிக்கவாசகர் உணர்த்துவதும் காண்க. "சதுர நடம் ஆட்டுகந்த சைவர் போலும்" எனத் திருநாவுக்கரசர் ஈசனைக் குறிப்பிடுதலும் காண்க.*

எரி – ஒளி.

1181. மறுத்தவர் திரிபுர மாய்ந்தழியக்
கறுத்தவன் கார்அரக் கன்முடிதோள்

இறுத்தவன் இருஞ்சினக் காலனைமுன்
செறுத்தவன் வளநகர் சிரபுரமே.

தெளிவுரை: பகைவரின் திரிபுரத்தை மாய்த்து அழியுமாறு செய்து, சினம் கொண்ட கரிய அரக்கனாகிய இராவணனுடைய முடியும் தோளும் நலியச் செய்து, மார்க்கண்டேயரின் உயிரைச் சினத்தின் வயம் கொண்டு கவர்வதற்கு வந்த காலனைக் காலால் உதைத்து மாய்த்த ஈசன் வீற்றிருக்கும் வளமையான நகர், சிரபுரம் ஆகும்.

1182. வண்ணநன் மலர்உறை மறையவனும்
கண்ணனும் கழல்தொழக் கனல்உருவாய்
விண்ணுற ஓங்கிய விமலன் இடம்
திண்ண நன் மதில்அணி சிரபுரமே.

தெளிவுரை: வண்ணம் மிக்க தாமரை மலர்மேல் உறைகின்ற பிரமனும், திருமாலும், திருவடியைப் போற்றித் துதிக்க, கனல் உருவாய் விண்ணளவு சோதியாய் ஓங்கிய விமலன் வீற்றிருக்கும் இடமானது, உறுதியான மதில்களின் அழகு பெறும் சிரபுரம் ஆகும்.

கண்ணன் – திருமால்; விமலன் – ஈசன்.

1183. வெற்று அரை உழல்பவர் விரிதுகிலார்
கற்றிலர் அறவுரை புறன்உரைக்கப்
பற்றலர் திரிபுர மூன்றும் வேவச்
செற்றவன் வளநகர் சிரபுரமே.

தெளிவுரை: ஆடையின்றிக் கல்லாதவராய் உள்ளவர்கள், உண்மைக்கு மாறாகப் புறம் உரைக்க, அச்சொற்களை ஏற்றுக் கொள்ளாது. அன்பற்ற பகைவரின் திரிபுரத்தை எரித்து சாம்பலாகுமாறு செய்த ஈசன் வீற்றிருக்கும் வளநகர், சிரபுரம் ஆகும்.

பற்றலர் – பகைவர், அன்பில்லாதவர்.

1184. அருமறை ஞானசம் பந்தன்அந்தண்
சிரபுர நகர்உறை சிவனடியைப்
பரவிய செந்தமிழ் பத்தும்வல்லார்
திருவொடு புகழ்மல்கு தேசினரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *அருமறையில் மிகுந்த ஞானசம்பந்தன் சிரபுர நகரில் உறையும் சிவனடியைப் பரவி உரைத்த செந்தமிழ்ப் பதிகமாகிய இத்திருப்பதிகத்தை ஓதவல்ல வர்கள், செல்வராய் விளங்கிப் புகழ் மிக்க ஒளியை உடையவர்களாவர்.*

சிறப்புரை: *இம்மையில் பிணியற்ற ஒளியையுடைய தேகமும், புகழ் மிக்க நற்பேறும் வாய்ப்பதோடு செல்வச் சிறப்புடன் திகழ்வர் என்பது திருப்பதிகம் ஓதுபவர்கள் அடையும் பயனாக உணர்த்தப் பெற்றது. திரு என்பது முத்திச் செல்வம் பயத்தலையும் குறிப்ப தாம்.*

தேசினர் – தேஜஸ், ஒளியை உடையவர்.

110. திருவிடைமருதூர்

தல விளக்கம்: *பதிக எண் 32 காண்க.*

பண் : *வியாழக் குறிஞ்சி*

திருச்சிற்றம்பலம்

1185. மருந்தவன் வானவர் தானவர்க்கும்
பெருந்தகை பிறவினொடு இறவும் ஆனான்
அருந்தவ முனிவரொடு ஆல்நீழற்கீழ்
இருந்தவன் வளநகர் இடைமருதே.

தெளிவுரை: *உள்ளத்திற்கும் யாக்கைக்கும் யாண்டும், ஈசன் மருந்தென விளங்குபவன்; தேவர்களுக்கும்*

அசுரர்களுக்கும் பெருந்தகையாய்ப் பிறப்பும் இறப்பும் நிகழ்விக்கும் காரணன்; சனகாதி முனிவர்களுடன் ஆல் நிழலில் அமர்ந்து குருமூர்த்தம் ஆனவன். அப்பெருமான் வீற்றிருப்பது, இடைமருது ஆகும்.

1186. தோற்றவன் கேடவன் துணைமுலையாள்
கூற்றவன் கொல்புலித் தோல் அசைத்த
நீற்றவ(ன்) நிறைபுன(ல்) நீள் சடைமேல்
ஏற்றவன் வளநகர் இடை மருதே.

தெளிவுரை: ஈசன், யாவற்றையும் செய்பவன்; மாயச் செய்பவன்; உமாதேவியைக் கூறாகக் கொண்டு அர்த்த நாரியாய் விளங்குபவன்; கொலைப் பண்பு கொண்ட புலியின் தோலை ஆடையாகக் கொண்டவன்; திருநீறு அணிந்தவன்; கங்கையைச் சடையின் மீது ஏற்றவன். அப் பெருமான் வீற்றிருக்கும் இடம், இடைமருது ஆகும்.

1187. படையுடை மழுவினன் பால்வெண்ணீற்றன்
நடைநவில் ஏற்றினான் ஞாலமெல்லாம்
உடைதலை யிடுபலி கொண்டுழல்வான்
இடைமருது இனிதுஉறை எம் மிறையே.

தெளிவுரை: ஈசன் மழுப்படை உடையவன்; பால் போன்ற வெண்ணீறு அணிந்தவன்; இடப வாகனம் உடையவன்; கபாலம் ஏந்தி உலகம் எல்லாம் சென்று பிச்சையேற்றவன்; அப் பெருமான் இடைமருதில் இனிது உறையும் எம் இறை.

1188. பணைமுலை உமையொரு பங்கன் ஒன்னார்
துணைமதில் மூன்றையும் சுடரில் மூழ்கக்
கணை துரந்து அடுதிறல் காலன்செற்ற
இணையிலி வளநகர் இடை மருதே.

தெளிவுரை: உமாதேவியை ஒரு பாகத்தில் கொண்டுள்ள ஈசன், பகைவரின் மூன்று மதில்களையும் நெருப்பில் மூழ்குமாறு கணை தொடுத்து, திறல் மிக்க காலனைச் செற்று, இணையற்ற வளம் மிக்க நகராகிய இடைமருதில் வீற்றிருப்பவன்.

ஒன்னலர் – பகைவர்.

1189. பொழிலவன் புயலவன் புயல்இயக்கும்
தொழிலவன் துயரவன் துயரகற்றும்
கழலவன் கரியுரி போர்த்துகந்த
எழிலவன் வளநகர் இடைமருதே.

தெளிவுரை: ஈசன், பொழிற் சோலையாய், மேகமாய், அதனை இயக்கும் அதிகாரியாய், வினை வழி உறும் துயராய், அதனை நீக்குபவனாய் விளங்கும் திருவடிச் சீரை உடையவன். யானையின் தோலை உரித்துப் போர்த்திய எழிலுடையவனாகிய அப்பெருமானின் வளநகர், இடைமருது ஆகும்.

1190. நிறையவன் புனலொடு மதியும் வைத்த
பொறையவன் புகழவன் புகழ நின்ற
மறையவன் மறிகடல் நஞ்சையுண்ட
இறையவன் வளநகர் இடை மருதே.

தெளிவுரை: ஈசன், யாவும் நிறைந்த நிலையுடையவன்; கங்கையும், சந்திரனும் வைத்த சடையையுடையவன்; புகழாகவும், அதற்குரிய மறையாகவும் விளங்குபவன்; கலக்கம் உறுமாறு தோன்றிய நஞ்சினை உட்கொண்ட இறையவன். அப் பெருமான் வீற்றிருக்கும் வளநகர், இடைமருது ஆகும்.

பொறை – சுமை.

1191. நனிவளர் மதியொடு நாகம் வைத்த
பனிமலர்க் கொன்றையம் படர்சடையன்
முனிவரொடு அமரர்கள் முறைவணங்க
இனிதுறை வளநகர் இடை மருதே.

தெளிவுரை: *நன்று வளரும் பிறைச் சந்திரனோடு நாகத்தையும் கொன்றை மலரையும் சடை முடியில் வைத்த ஈசன், தேவர்களும் முனிவர்களும் வணங்க இனிது உறையும் வளநகரானது, இடைமருது ஆகும்.*

1192. தருக்கின அரக்கன தாளும் தோளும்
நெரித்தவ(ன்) நெடுங்கைமா மதகரியன்று
உரித்தவன் ஒன்னலர் புரங்கள் மூன்றும்
எரித்தவன் வளநகர் இடைமருதே.

தெளிவுரை: *அகந்தை கொண்ட அரக்கனான இராவணனுடைய தாளும் தோளும் நெரித்த ஈசன், மத யானையின் தோலை உரித்தவன்; பகைவரின் முப்புரங்களை எரித்தவன். அப் பெருமான் வீற்றிருக்கும் வளநகர், இடைமருது ஆகும்.*

1193. பெரியவன் பெண்ணினொடு ஆணும் ஆனான்
வரியர வணைமறி கடல் துயின்ற
கரியவன் அலரவன் காண்பரிய
எரியவன் வளநகர் இடைமருதே.

தெளிவுரை: *யாவர்க்கும் முந்தியவனாய் விளங்கும் பெரியவனாகிய ஈசன், பெண்ணுமாய் ஆணுமாய் விளங்கி, பாம்பணையில் பள்ளி கொள்ளும் திருமாலும், பிரமனும் காண்பதற்கு அரியவனாய் ஒளிவடிவாகிய பரமன். அவன் நகர் இடைமருது ஆகும்.*

1194. சிந்தையில் சமணொடு தேரர் சொன்ன
புந்தியில் உரையவை பொருள் கொளாதே

அந்தணர் ஒத்தினொடு அரவம் ஒவா
எந்தைதன் வளநகர் இடை மருதே.

தெளிவுரை: சிந்தனை கொள்ளாத சமணர்களும் பௌத்தர்களும் அறிவுக்குப் பொருந்தாத உரை சொல்ல, அவற்றை ஏற்காது, அந்தணர்கள் ஓதும் வேத ஒலிகள் ஓய்வில்லாது விளங்க, எந்தையாகிய ஈசன் வீற்றிருக்கும் வளநகர், இடைமருது ஆகும்.

1195. இலைமலி பொழிலிடை மருது இறையை
நலமிகு ஞானசம் பந்தன் சொன்ன
பலமிகு தமிழ்இவை பத்தும்வல்லார்
உலகுறு புகழினொடு ஒங்குவரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: இலைகள் மலிந்து பெருகிய சோலைகளை உடைய இடைமருதில் எழுந்தருளியுள்ள இறைவனைப் பரவி, நலத்தால் மிகுந்த ஞானசம்பந்தன் சொன்ன சக்தி மிகுந்த தமிழாகிய இத்திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள், உலகத்தில் பெரும் புகழோடு ஓங்கி விளங்கி நிற்பார்கள்.

111. திருக்கடைமுடி

தல விளக்கம்: காவிரி வடகரைத் தலம். இது கீழூர் என வழங்கப்படுகிறது. பிரமன் பூசித்துப் பேறு பெற்ற திருத்தலம். இத்தலத்தின் வேறு பெயர்கள் கீழையூர், ஏழூர்.

சுவாமி : கடை முடி நாதர்

அம்பிகை : அபிராமி

தல மரம் : கிளுவை

தீர்த்தம் : கருணா தீர்த்தம்.

பண் : வியாழக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1196. அருத்தனை அறவனை அமுதனை நீர்
விருத்தனைப் பாலனை வினவுதிரேல்
ஒருத்தனை அல்லது இங்கு உலகம் ஏத்தும்
கருத்தவன் வளநகர் கடைமுடியே.

தெளிவுரை: எல்லாவற்றுக்கும் பொருளாக விளங்குபனாகிய ஈசனை, அறத்தின் பொருளாகியவனை, அமுதமாகி விளங்குபவனை, யாவர்க்கும் மூத்தோனாகியும் யாண்டும் இளமையுடையவனாயும் உள்ளவன் யார் என வினவுவீர்களாயின், அவன், யாவராலும் போற்றப்படும் ஒருவனாகிய ஈசன். அவன் உலகம் ஏத்திப் பரவும் கருத்துடையவனாகிக் கடைமுடி நகரில் வீற்றிருப்பவன்.

1197. திரைபொரு திருமுடி திங்கள் விம்மும்
அரைபொரு புலியதள் அடிகளிடம்
திரையொடு நுரைபொரு தெண்சுனைநீர்
கரைபொரு வளநகர் கடைமுடியே.

தெளிவுரை: கங்கையும் சந்திரனும் சடையில் பொலிய, புலியின் தோலை ஆடையாகக் கொண்ட அடிகளின் இடம், அலையொடு நுரை மிகும் தெளிந்த சுனைநீர் மோதும் கடைமுடி என்னும் வளநகர் ஆகும்.

1198. ஆலின மதியினொடு அரவு கங்கை
கோலவெண் ணீற்றனைத் தொழுது இறைஞ்சி
ஏலநன் மலரொடு விரைகமழும்
காலன வளநகர் கடைமுடியே.

தெளிவுரை: இளம் பிறைச் சந்திரனும், அரவும், கங்கையும் கொண்டு அழகிய திருநீறு தரித்தவனாகிய ஈசனை, மணம் கமழ் மலரோடு ஏத்தித் தொழ, அப்பெருமான் தன் வளநகராகிய கடைமுடியில் வாசனை மிக்க திருத்தாள் கொண்டு அருள் புரிகின்றான்.

1199. கொய்யணி நறுமலர்க் கொன்றையந்தார்
மையணி மிடறுடை மறையவன்ஊர்
பையணி அரவொடு மான்மழுவாள்
கையணி பவனிடம் கடைமுடியே.

தெளிவுரை: கொய்து அணியும் நறுமலராகிய கொன்றை சூடிய, கரிய மிடற்றினை உடைய வேதியனாகிய ஈசனின்பால் ஊர்ந்து அசையும் படம் கொண்ட அரவமும் மானும் மழுவும் கையில் கொண்டு அணிபவனுடைய இடமானது, கடைமுடி ஆகும்.

1200. மறையவன் உலகவன் மாயம் அவன்
பிறையவன் புனலவன் அனலும்அவன்
இறையவன் எனஉலகு ஏத்தும்கண்டம்
கறையவன் வளநகர் கடைமுடியே.

தெளிவுரை: ஈசன், மறையாக உள்ளவன்; உலகமாக உள்ளவன்; மாயைப் பொருளாக மனத்தின்கண் பதிபவனும் அவன்; பிறைச் சந்திரனைச் சூடியவன்; கங்கையும் ஆனவன்; நெருப்பும் ஆனவன்; உலகம் எங்கிலும் இறையவன் என ஏத்தப் பெறுபவன்; நீலகண்டத்தையுடையவன். அப் பெருமானின் நகர் கடைமுடி ஆகும்.

1201. படஅரவு ஏர்அல்குல் பல்வளைக்கை
மடவர லாளையொர் பாகம் வைத்துக்
குடதிசை மதியது சூடுசென்னிக்
கடவுள்தன் வளநகர் கடைமுடியே.

தெளிவுரை: உமாதேவியைப் பாகம் வைத்து பிறைச் சந்திரனைச் சூடும் சென்னியை உடைய கடவுள் வீற்றிருக்கும் வளநகர் கடைமுடி ஆகும்.

சிறப்புரை: தேய்பிறைச் சந்திரன் மேல்திசையில் கண்ணுக்குப் புலனாதல் குறித்து குடதிசை மதி என உணர்த்தப் பெற்றது.

குடதிசை – மேற்கு.

1202. பொடிபுல்கு மார்பினில் புரிபல்குநூல்
அடிபுல்கு பைங்கழல் அடிகள்இடம்
கொடிபுல்கு மலரொடு குளிர்சுனைநீர்
கடிபுல்கு வளநகர் கடைமுடியே.

தெளிவுரை: திருவெண்ணீறு மார்பினில் பொலியவும், முப்புரிநூல் விளங்கவும், திருவடியில் ஒலிக்கின்ற அழகிய கழலும் உடைய அடிகள் வீற்றிருக்கும் இடமானது, குளிர்ந்த சுனைகளில் வாசனை மிக்க மலர்களையுடைய கொடிகள் பரவ, அந்த நறுமண மானது விளங்கும் வளநகராகிய கடைமுடி ஆகும்.

1203. நோதல்செய்து அரக்கனை நோக்கு அழியச்
சாதல்செய் தவன்அடி சரண்எனலும்
ஆதரவு அருள்செய்த அடிகள்அவர்
காதல்செய் வளநகர் கடைமுடியே.

தெளிவுரை: இராவணனைத் துன்பத்திற்கு ஆளாக்கி, அவனுடைய நோக்கத்தையும் அழியச் செய்து, சரணம் என அடைக்கலம் ஆன நிலையில் அன்பு கொண்டு, அருள் செய்த அடிகள், விரும்பி இருக்கும் வளநகர் கடைமுடியாகும்.

1204. அடிமுடி காண்கிலர் ஓரிருவர்
புடைபுல்கி அருள்என்று போற்றிசைப்பச்
சடை யிடைப் புனல்வைத்த சதுரனிடம்
கடைமுடி அதன்அயல் காவிரியே.

தெளிவுரை: திருமாலும் பிரமனும் அடியும் முடியும் காண்கிலராய்ப் புலம்பி நின்று போற்றிசைக்கச் சோதி வடிவாகிய ஈசன், கங்கையினைச் சடையில் வைத்த சதுரன். அப் பெருமான் விளங்கும் இடம், காவிரியின் அயல் விளங்கும் கடை முடி ஆகும்.

சிறப்புரை: ஈசன், எல்லா வல்லமையும் உடையவன் என்பதைச் "சதுரன்" என உணர்த்தப் பெற்றது. இதனைத் "தந்தது உன்றன்னைக் கொண்டது என்றன்னை, யார் கொலோ சதுரர்," என மாணிக்க வாசகர் உரைத்தலும் காண்க. மற்றும், "மதுரவாய் மொழியோர் பங்கினன், சதுரன் சிற்றம்பலவன்" எனத் திருநாவுக்கரசர் உரைப்பதும் நோக்குக.

ஓரிருவர் – திருமால், பிரமன் ஆகியோர்.

1205. மண்ணுதல் பறித்தலும் மாயம்இவை
எண்ணிய கால்அவை இன்பம்அல்ல
ஒண்ணுதல் உமையையொர் பாகம்வைத்த
கண்ணுதல் வளநகர் கடைமுடியே.

தெளிவுரை: சிகை நீக்குதல் முதலான விரதங்கள், அதன் சார்பான ஒழுக்கங்கள் யாவும் மாயை. அது உண்மையான இன்பத்தை வழங்காது. உமாதேவியைப் பாகம் கொண்ட, கண்ணுதல் கொண்ட ஈசன் வளநகர் கடைமுடியாகும். அப் பெருமானைத் தொழுவீராக என்றவாறு.

1206. பொன்திகழ் காவிரிப் பொருபுனல்சீர்
சென்றடை கடைமுடிச் சிவனடியை
நன்றுணர் ஞானசம் பந்தன்சொன்ன
இன்தமிழ் இவை சொல இன்பமாமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: புகழ் விளங்கும் காவிரியின் நீரானது சென்றடையும் கடைமுடியில் வீற்றிருக்கும் சிவனடியை நன்றாக உணர்ந்த ஞானசம்பந்தன் சொன்ன, இனிய இத் தமிழ்த் திருப்பதிகத்தைச் சொல் பவர்கள், யாண்டும் இன்புற்று விளங்குவார்கள்.

112. திருச்சிவபுரம்

தல விளக்கம்: *பதிக எண் 21 காண்க.*

பண் : வியாழக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1207. இன்குரல் இசைகெழும் யாழ்முரலத்
தன்கர மருவிய சதுரனகர்
பொன்கரை பொரு பழங் காவிரியின்
தென்கரை மருவிய சிவபுரமே.

தெளிவுரை: இனிய குரலின் இசையினை யாழ் எழுப்பத் தன் கரத்தைப் பதித்த சதுரனாகிய ஈசன் நகரானது காவிரியின் அழகிய தென்கரையில் மருவிய சிவபுரம் ஆகும். ஈசன் வீணை வாசித்த வரலாற்றைச் சுட்டியது.

1203. அன்றடற் காலனைப் பாலனுக்காய்ப்.
பொன்றிட உதைசெய்த புனிதநகர்
வென்றிகொள் எயிற்றுவெண் பன்றிமுன்னாள்
சென்றடி வீழ்தரு சிவபுரமே.

தெளிவுரை: மார்க்கண்டேயருக்காகக் காலனை உதைத்து அழித்த புனித நகர், வெற்றி கொண்ட திருமால் வெண் பல்லுடைய பன்றியாய் ஈசனடியை அடைந்து வணங்கிய சிவபுரம் ஆகும்.

பொன்றுதல் – அழித்தல். வென்றிகொள் பன்றி – திருமால்.

1209. மலைமகள் மறுகிட மதகரியைக்
கொலைமல்க உரிசெய்த குழகனகர்
அலைமல்கும் அரிசிலின் அதன்அயலே
சிலை மல்கு மதிள்அணி சிவபுரமே.

தெளிவுரை: உமாதேவியும் கலங்குமாறு எதிர்த்து வந்த மத யானையைக் கொன்று, அதன் தோலை உரித்த அழகனாகிய ஈசன் விளங்கும் நகரானது, அரிசிலி ஆற்றை மருவியுள்ள உயர்ந்த மதில்களை உடைய சிவபுரம் ஆகும்.

1210. மண்புனல் அனலொடு மாருதமும்
விண்புனை மருவிய விகிர்த(ன்)நகர்
பண்புனை குரல்வழி வண்டுகிண்டிச்
செண்பக மலர்பொழில் சிவபுரமே.

தெளிவுரை: நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் பஞ்ச பூதங்கள் ஆகி விகிர்தனாகிய ஈசன், விளங்கும் நகரானது பண்ணிசை போன்று குரல் எழுப்பும் வண்டுகள் சூழும் செண்பக மலர்ச் சோலையுடைய சிவபுரம் ஆகும்.

மாருதம் – காற்று.

1211. வீறுநன்கு உடையவள் மேனிபாகம்
கூறுநன்கு உடையவன் குளிர்நகர்தான்
நாறுநன் குரவிரி வண்டுகிண்டித்
தேறல்உண்டு எழுதரு சிவபுரமே.

தெளிவுரை: பெரும் ஆற்றல் உடையவளாகிய உமாதேவியை ஒரு பாகம் அங்கமாகக் கொண்டு, அர்த்தநாரியாய் உடைய ஈசனின் குளிர்ச்சி பொருந்திய நகரானது, மணம் கமழும் குரவ மலரில்

வண்டு பதிந்து தேன் உண்டு மகிழ்ந்து எழும் சிவபுரம் ஆகும்.

சிறப்புரை: மன்னுயிர்கள் ஈசனை வணங்கி மகிழ்தலைத் தேன் உண்டு மகிழ்ந்து எழும் வண்டின் தன்மை கூறிக் குறிப்பால் உணர்த்தப்பெற்றது காண்க.

வீறு – ஆற்றல். குர – குரவ மலர்.

1212. மாறுஎதிர் வருதிரி புரம்எரித்து
நீறது ஆக்கிய நிமலனகர்
நாறுடை நடுபவர் உழவரொடும்
சேறுடை வயலணி சிவபுரமே.

தெளிவுரை: பகை கொண்டு எதிர் நின்ற திரிபுரத்தை எரித்துச் சாம்பலாக்கிய, நிமலனாகிய ஈசனுடைய நகரானது, நாற்றுகளை நடுகின்ற உழவர்கள் தம்முடன், சேறுடைய வயல்களின் அணி கொண்ட சிவபுரம் ஆகும்.

மாறு – பகை; நீறு – சாம்பல். நாறு – நாற்று.

1213. ஆவில்ஐந்து அமர்ந்தவன் அரிவையொடு
மேவி நன்கு இருந்ததொர் வியனகர்தான்
பூவில் வண்டு அமர்தரு பொய்கைஅன்னச்
சேவல்தன் பெடைபுல்கு சிவபுரமே.

தெளிவுரை: பசுவிலிருந்து தோன்றும் பால், தயிர் என ஆகும் பஞ்சகவ்வியத்தைப் பூசனையாக ஏற்று மகிழ்ந்த ஈசன், உமாதேவியோடு மேவி, நன்கு இருந்த பெருமை மிக்க நகரானது, பூவில் உள்ள தேனை அருந்திக் களிக்கும் வண்டானது அமர்ந்திருக்கும் எழிலார்ந்த பொய்கையில், அன்னச் சேவல் தன் பெடையொடு புல்கும் இயல்பினையுடைய சிவபுரம் ஆகும்.

சிறப்புரை: *ஈசனார்க்கு அளிக்கப் பெறும் வழிபாட்டு நெறியும், அதனால் மன்னுயிர்கள் அடைகின்ற மகிழ்ச்சியும், குறிப்பால் உணர்த்தப்பெற்றது. ஆவில் ஐந்து: பசுவிலிருந்து பெறும் பஞ்ச கவ்யம்.*

அரிவை – உமாதேவி.

1214. எழில்மலை எடுத்தவல் லிராவணன்றன்
முழுவலி அடக்கிய முதல்வனகர்
விழவினில் எடுத்தவெண் கொடிமிடைந்து
செழுமுகில் அடுக்கும்வண் சிவபுரமே.

தெளிவுரை: *எழில் மிக்க கயிலை மலையைப் பெயர்த்த இராவணனுடைய முழு வலிமையும் அடக்கிய பரமனுடைய நகரானது, திருவிழாக் காலங்களில் அமையப்பெறும் வெண்கொடி, மேகத்தை நெருங்கு மாறு உயர்ந்த நிலையுடன் விளங்கும் சிவபுரம் ஆகும்.*

1215. சங்குஅள வியகையன் சதுர்முகனும்
அங்குஅள வறிஅரி யவனகர்தான்
கங்குலும் பறவைகள் கமுகுதொறும்
செங்கனி நுகர்தரு சிவபுரமே.

தெளிவுரை: *சங்கினைக் கரத்தில் ஏந்திய திருமாலும், நான்முகனும் அளவிடுவதற்கு அறியாதவராய், அவர் களுக்கு அரியவனாகிய ஈசன் நகரானது, கமுக மரங் களில் வாழும் பறவைகள், இரவிலும் கனிகளை நுகரும் தனிச்சிறப்புறும் சிவபுரம் ஆகும்.*

சிறப்புரை: *பகல் காலங்களில் கனிகளை நுகரும் பறவை கள், இரவுக் காலங்களிலும் நுகர்ந்து சுவைக்கும் தனிச் சிறப்பு, ஈசன் அருள் என உணர்த்தப் பெற்றது. மன்னுயிர்கள் எல்லாக் காலங்களிலும் இன்புற்றிக்கச்*

செய்யும் ஈசனின் கருணை, இவண் நன்கு உணர்த்தப் பெற்றுள்ளது காண்க.

கங்குல் – இரவு.

1216. மண்டையிற் குண்டிகை மாசுதரும்
மிண்டரை விலக்கிய விமலனகர்
பண்டமர் தருபழங் காவிரியின்
தெண்டிரை பொருதுஎழு சிவபுரமே.

தெளிவுரை: விவாதம் செய்து மாசு புரியும் சொற்களை விலக்கிய விமலன் நகரானது, தொன்மைக் காலத்தி லிருந்து காவிரியின் நீர் வளம் சேரும் எழில் உடைய சிவபுரம் ஆகும். இது ஈசன் அருளால் நீர்வளமும், நில வளமும், மக்கள் தம் மகிழ்ச்சிப் பெருக்கும் உணர்த்துவ தாயிற்று.

1217. சிவன்உறை தருசிவ புரநகரைக்
கவுணியர் குலபதி காழியர்கோன்
தவமல்கு தமிழ்இவை சொல்லவல்லார்
நவமொடு சிவகதி நண்ணுவரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: சிவபெருமான் உறைகின்ற சிவபுர நகரினைக் கவுணியர் கோத்திரத்தின் வழிவந்த காழி நகரின் தலைவனின் தவம் பெருகும் இத் தமிழ்ப் பதிகத்தைச் சொல்ல வல்லவர்கள் புதுமை திகழுமாறு சிவகதியை அடைவார்கள்.

சிறப்புரை: ஆயினும் அதனை அடைதலுக்கு எளிதாகச் செய்யும் புதுமை இத் திருப்பதிகத்திற்கு உடையது என்று உணர்த்த வல்லதாய் "நவமொடு" என சுட்டப் பெறுதல் காண்க.

இவ்வுலகத்தில் நன்மைகள் யாவும் பெற்று, நட்பும் கொண்டு, இனிது மகிழ்ந்திருந்து, இம்மை நலம் எக்காலத்திலும் குறைவுபடாது பெற்று மறுமையில் சிவகதியைப் பெறுவர் என்றலும் பொருந்தும்.

கவுணியர் குலபதி – ஞானசம்பந்தன். நவம் – புதுமை, நட்பு, பூமி.

113. திருவல்லம்

தல விளக்கம்: தொண்டை நாட்டுத்தலம். திருவலம் என வழங்கப்படுகிறது. இத்தலம், வில்வ வனம், வில்வா ரண்யம் எனப்படும். கௌரி, திருமால், சனகமுனிவர், நவக்கிரகங்கள், வல்லாளன் ஆகியோர் பூசித்துப் பேறு பெற்ற திருத்தலம்.

தீக்காலி என்பவன் பூசித்ததால் தீக்காலி வல்லம் எனவும் பெயர் வழங்கும் தலம். மௌன குரு சுவாமி கள் ஆசிரமம் அமைத்து விளங்கிய திருத்தலம்.

சுவாமி : வில்வநாதீஸ்வரர், வல்லநாதர்

அம்பிகை : வல்லாம்பிகை, தனுமத்யாம்பாள்

தல மரம் : வில்வம்

தீர்த்தம் : கௌரி தீர்த்தம்.

பண் : வியாழக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1213. எரித்தவன் முப்புரம் எரியின் மூழ்கத்
தரித்தவன் கங்கையைத் தாழ்சடைமேல்
விரித்தவன் வேதங்கள் வேறுவேறு
தெரித்தவன் உறைவிடம் திருவல்லமே.

தெளிவுரை: ஈசன், முப்புரத்தை எரித்து சாம்பலாகு மாறு செய்தவன்; தாழ் சடையின் மேல் கங்கையைத் தரித்தவன்; வேதங்களை விரித்து அதன் பொருட் சிறப்பினைப் பலவாறு விளங்கச் செய்தவன். அவன் உறைவிடம் திருவல்லம் ஆகும்.

1219. தாயவன் உலகுக்குத் தன்னொப்பிலாத்
தூயவன் தூமதி சூடியெல்லாம்
ஆயவன் அமரர்க்கு முனிவர்கட்கும்
சேயவன் உறைவிடம் திருவல்லமே.

தெளிவுரை: ஈசன், உலகுக்கெல்லாம் தாயாகிக் காப்பவன். தனக்கு இணையாக யாரும் சொல்ல முடியாதவாறு மலம் அற்று விளங்கும் தூயவன்; தூய மதி சூடி எல்லாமாய் விளங்குபவன்; ஞானம் கைவரப் பெறாத தேவர்களுக்கும், முனிவர்களாயினும் அவர் களுக்கும் தொலைவாக இருப்பவன். அப்பெருமான் உறையும் இடம், திருவல்லம் ஆகும்.

சிறப்புரை: ஈசன் தாயாகி விளங்குதலைத் "தாயவன் காண்" எனத் திருநாவுக்கரசர் உரைத்தலும் காண்க. "அம்மையே அப்பா ஒப்பிலாமணியே" என மாணிக்க வாசகர் பகர்வதும் நோக்குக.

"எல்லாம் ஆயவன்" என்னும் தொடர், ஈசன் எல்லா இடத்திலும் வியாபித்து விளங்குவதை உணர்த்திற்று. "அனைத்துலகும் ஆய நின்னை ஐம்புலன்கள் காண் கிலா" என வரும் மாணிக்க வாசகரின் வாக்கும் காண்க.

1220. பார்த்தவன் காமனைப் பண்புஅழியப்
போர்த்தவன் போதகத் தின்னுரிவை

ஆர்த்தவ(ன்) நான்முகன் தலையைஅன்று
சேர்த்தவன் உறைவிடம் திருவல்லமே.

தெளிவுரை: ஈசன், தன்மேல் அம்பு தொடுத்த மன்மதனை நெற்றிக் கண்ணால் பார்த்து எரித்தவன்; எதிர்த்து வந்த யானையின் தோலை உரித்துப் போர்த்தவன்; ஆணவத்தின்பால் திரட்சி கொண்டு நின்ற பிரமனின் ஐந்து தலைகளுள் ஒன்றினைக் கொய்து நான்முகனாக்கியவன். அப்பெருமான் உறையும் இடம் திருவல்லம் ஆகும்.

பார்த்தவன் – எரித்தவன் (ஈசன்). போதகம் – யானை

1221. கொய்தவம் மலரடி கூடுவார்தம்
மைதவழ் திருமகள் வணங்கவைத்துப்
பெய்தவன் பெருமழை உலகம்உய்யச்
செய்தவன் உறைவிடம் திருவல்லமே.

தெளிவுரை: கொய்த அழகிய மலரைக் கொண்டு, மனம் ஒருமித்துத் தூவிப் போற்றி வழிபடுபவர்களுக்குத், திருமகள் செல்வச் செழிப்பினை இணங்கி அருளுமாறு செய்யவைத்தும், உலகம் உய்ய பெருமழை பெய்யுமாறு செய்து பஞ்சத்தைப் போக்கும் ஈசன் உறையும் இடம், திருவல்லம் ஆகும்.

சிறப்புரை: ஈசனை வணங்கித் துதிக்க இம்மை நலம் காணும் என்னும் மாண்பு உணர்த்தப் பெற்றது.

பஞ்சம் ஏற்படின் இங்கு விளங்கும் பாதாளேஸ்வரருக்குப் பிரார்த்தனையாகச் சிறப்பு அபிடேகம் செய்தால், பஞ்சம் நீங்கிப் பெருமழை பெய்யும் என்னும் திருத்தலத்தின் சிறப்பு இத் திருப்பாட்டில் குறிக்கப் பெற்றுள்ளது காண்க.

கொய்தவம் மலர் – கொய்த அம் மலர். வணங்க – இணங்க.

1222. சார்ந்தவர்க்கு இன்பங்கள் தழைக்கும்வண்ணம்
நேர்ந்தவ(ன்) நேரிழை யோடும் கூடித்
தேர்ந்தவர் தேடுவார் தேடச் செய்தே
சேர்ந்தவன் உறைவிடம் திருவல்லமே.

தெளிவுரை: தன்னைச் சார்ந்து உள்ள அடியவர்களுக்கு எல்லாவிதமான இன்பங்களும் தழைக்கும் வண்ணம் புரியும் ஈசன், உமாதேவியுடன் கூடியிருப்பவனாய், தன்னைத் தேர்ந்து தேடுவார் தம்மைத் தேடுமாறு செய்து, அவர்களிடம் எப்போதும் சேர்ந்து இருப்பவன். அப்பெருமான் உறைவிடம் திருவல்லம் ஆகும்.

சிறப்புரை: புறப்பொருளால் காணாதவாறு விளங்கும் ஈசன் அகத்தின் பொருளாய் உள்ளத்தின் உள்ளே கோயிலில் கொண்டு விளங்கும் சிறப்பு உணர்த்தப் பெற்றது. "தேடித் தேடொணாத் தேவனை என்னுளே தேடிக் கண்டு கொண்டேன்" எனத் திருநாவுக்கரசர் உரைப்பதும் காண்க.

நேரிழை – உமாதேவி.

1223. பதைத்துஎழு காலனைப் பாதம் ஒன்றால்
உதைத்துஎழு மாமுனிக்கு உண்மை நின்று
விதிர்த்தெழு தக்கன்றன் வேள்வி யன்று
சிதைத்தவன் உறைவிடம் திருவல்லமே.

தெளிவுரை: பதை பதைத்துச் சினந்து எழுந்த காலனைத் திருப்பாதத்தால் உதைத்து அழித்து, தன்னை வழிபட்ட மாமுனியாகிய மார்க் கண்டேயருக்கு மெய்ப்பொருளாய் விளங்கி அருள் புரிந்து, நன்னெறியிலிருந்து பிறழ்ந்து தடுமாறிய, தக்கன்

செய்த வேள்வியைச் சிதைத்த ஈசன் உறைவிடம், திருவல்லம் ஆகும்.

1224. இகழ்ந்துஅரு வரையினை எடுக்கலுற்றுஆங்கு
அகழ்ந்தவல் லரக்கனை அடர்த்த பாதம்
நிகழ்ந்தவர் நேடுவார் நேடச் செய்தே
திகழ்ந்தவன் உறைவிடம் திருவல்லமே.

தெளிவுரை: இகழ்ச்சியாக நினைத்து அருவரையான கயிலை மலையை எடுக்க வேண்டும் என்று அகழ்ந்த, கொடிய அரக்கனாகிய இராவணனைத் தண்டித்த திருப்பாதத்தைத் தேடுமாறு செய்த ஈசன் உறைவிடம், திருவல்லம் ஆகும்.

1225. பெரியவன் சிறியவர் சிந்தைசெய்ய
அரியவன் அருமறை அங்கம்ஆனான்
கரியவ னான்முகன் காணவொண்ணாத்
தெரியவன் வளநகர் திருவல்லமே.

தெளிவுரை: ஈசன், யாவற்றுக்கும் முதற்பொருளாய் இருத்தல் போன்று யாவர்க்கும் பெரியவனாய் விளங்கு பவன்; சிறியவர்களாய பிறர்க்குச் சிந்தை செய்வதற்கு அரியவன்; வேதங்களும் அதன் அங்கங்களும் ஆனவன்; திருமாலும், பிரமனும் காண வொண்ணாதவன். யாவும் தெரிந்தவனாய் விளங்கி, சீவன் முத்தர்கள்பால் விளங்கும் அப்பெருமான் உறைவிடம், திருவல்லம் ஆகும்.

கரியவன் – திருமால்.

1226. அன்றிய அமணர்கள் சாக்கியர்கள்
குன்றிய அறவுரை கூறாவண்ணம்
வென்றவன் புலன்ஐந்தும் விளங்களங்கும்
சென்றவன் உறைவிடம் திருவல்லமே.

தெளிவுரை: அன்று எனும் இன்மை கூறும் சமணர் மற்றும் சாக்கியர்தம் அறவுரைகள் வளம் அற்றன வாகும். அவ்வுரைகள் மேலாகாதவாறு வென்ற வனாய், ஐந்து புலன்களுக்கும் கடந்தவனாய் விளங்கும் ஈசன் உறைவிடம், திருவல்லம் ஆகும்.

சிறப்புரை: புலன்களை வென்றவனாகிய ஈசனைப் புலன்களால் காணற்கு அரியவன் என்பதனை, "அனைத்துலகும் ஆய நின்னை ஐம்புலன்கள் காண்கிலா" என மாணிக்கவாசகர் கூறுவதும் நோக்குக.

1227. கற்றவர் திருவல்லம் கண்டுசென்று
நற்றமிழ் ஞானசம் பந்தன்சொன்ன
குற்றமில் செந்தமிழ் கூறவல்லார்
பற்றுவர் ஈசன்பொற் பாதங்களே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: கற்றவர் விளங்கும் திருவல்லத்தைக் கண்டு மகிழ்ந்து நற்றமிழ் ஞானசம்பந்தன் சொன்ன குற்றமற்ற செந்தமிழாகிய இத்திருப்பதிகத்தைக் கூற வல்லவர்கள், ஈசனார் திருவடியைப் பற்றி, நின்று விளங்குவார்கள். இது, பேரின்பம் உண்டாகும் என உணர்த்தியவாறு.

சிறப்புரை: பாவத்தை மற்றும் குற்றத்தை, இல்லாமை ஆக்கும் திருப்பதிகம் என்னும் மாண்பில் "குற்றம் இல்" என உணர்த்தப் பெற்றது காண்க.

கற்றவர் – ஈசன், இயல்பாய் யாவும் கற்றவர் எனலும் ஆம். வேத விற்பன்னர்கள்.

(இத் திருப்பதிகத்தில் ஒரு பாட்டு கிடைக்கவில்லை).

114. திருமாற்பேறு

தல விளக்கம்: *பதிக எண் 55 காண்க*

பண் : *வியாழக் குறிஞ்சி*

திருச்சிற்றம்பலம்

1228. குருந்தவன் குருகவன் கூர்மையவன்
பெருந்தகை பெண்ணவன் ஆணும்அவன்
கருந்தட மலர்க்கண்ணி காதல்செய்யும்
மருந்தவன் வளநகர் மாற்பேறே.

தெளிவுரை: *ஈசன், கொழுந்தாக விளங்கி செழுமையைப் புலப்படுத்துபவனாகவும், நுண்மையாக விளங்குபவனாகவும் பெருந்தகைமை பூண்டுள்ளவனாகவும், பெண்ணும் ஆகி, ஆணும் ஆகியவனாயும், உமாதேவியார் விரும்பி ஏத்தும் அமுதனாகவும் உள்ளவன். அவன் வளநகர் மாற்பேறு ஆகும்.*

சிறப்புரை: *மாணிக்கவாசகருக்கு, இறைவன் குருந்த மரத்தின் நிழலில் அந்தண வடிவு கொண்டு அமர்ந்திருந்து காட்சி நல்கியதைக் குருந்தவன் என்று சுட்டியதாகச் சொல்லப் பெறுதலும் உண்டு.*

மருந்து – அமுதம்.

1229. பாறணி வெண்தலை கையில் ஏந்தி
வேறணி பலிகொள்ளும் வேட்கையனாய்
நீறணிந்து உமையொரு பாகம்வைத்த
மாறிலி வளநகர் மாற்பேறே.

தெளிவுரை: *பிரம கபாலம் கையில் ஏந்திப் பிச்சையேற்கும் வேட்கை உடையவனாய்த் திருநீறு மெய்யில் பூசி, உமாதேவியைப் பாகமாகக் கொண்ட, மாறு*

பாடில்லாதவனாய் விளங்கும் ஈசனின் வளநகர் மாற்பேறு ஆகும்.

சிறப்புரை: கபாலம் ஏந்திப் பிச்சை கொண்ட காலத்திலும், உமாதேவியை உடனாகக் கொண்டு திகழும் காலத்திலும், எவ்வித மாறுதலும் இன்றி நிர்விகற்பனாய் விளங்கும் தன்மை "மாறிலி" என உணர்த்தப் பெற்றது.

1230. கருவுடை யாருல கங்கள்வேவச்
செருவிடை யேறியும் சென்றுநின்று
உருவிடை யாள்உமை யாளும்தானும்
மருவிய வளநகர் மாற்பேறே.

தெளிவுரை: கருமையுடைய இருள் மனத்தினராகிய முப்புராரிகளையும் அவர்தம் மதில்களையும் வேகுமாறு எரிசெய்து, இடப வாகனத்தில் ஏறிய ஈசன் அழகிய இடையுடைய உமாதேவியும் தானும் மருவி விளங்கும் வளநகர் மாற்பேறு ஆகும்.

கருவுடை – கருமை, இருள். உருவிடை – அழகிய இடை.

1231. தலையவன் தலையணி மாலைபூண்டு
கொலைநவில் கூற்றினைக் கொன்றுகன்தான்
கலைநவின் றான்கயி லாயமென்னும்
மலையவன் வளநகர் மாற்பேறே.

தெளிவுரை: ஈசன், யாவற்றுக்கும் தலைமையானவன்; தலைமாலையைப் பூண்டவன்; கொலை நவிலும் கூற்றுவனைக் காலால் உதைத்துக் கொன்றவன்; மானைக் கரத்தில் விரும்பி ஏற்றவன். கயிலாயம் என்னும் திருமலையான் அப்பெருமானின் வளநகர் மாற்பேறு ஆகும்.

1232. துறையவன் தொழிலவன் தொல்லுயிர்க்கும்
பிறையணி சடைமுடிப் பெண்ணோர் பாகன்
கறையணி மிடற்றண்ணல் காலற்செற்ற
மறையவன் வளநகர் மாற்பேறே.

தெளிவுரை: ஈசன், உயிர்கள் எல்லாம் பேணுகின்ற நெறிகள் யாவும் தானாகவே இருப்பவன்; படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்து தொழில்களுக்கும் தானே தலைவன் ஆனவன்; சடை முடியில் பிறைச் சந்திரனை அணிந்தவன்; உமா தேவியை ஒரு பாகமாக உடையவன்; கறையுடைய கண்டம் கொண்டு விளங்கும் நீலகண்டன்; காலனை உதைத்த வேதத்தின் நாயகன். அவனுடைய வளநகர் மாற்பேறு ஆகும்.

1233. பெண்ணினல் லாளையோர் பாகம்வைத்துக்
கண்ணினாற் காமனைக் காய்ந்தவன்றன்
விண்ணவர் தானவர் முனிவரொடு
மண்ணவர் வணங்குநன் மாற்பேறே.

தெளிவுரை: பெண்ணின் நல்லாளாகிய உமாதேவியை ஒரு பாகம் வைத்து, காமனை நெற்றிக் க்ண்ணால் எரித்துச் சாம்பலாக்கிய ஈசன், தேவர்களும் அசுரர் களும் முனிவர்களும், பூவுலகத்தவர்களும் வணங்கும் நல்ல மாற்பேற்றில் வீற்றிருப்பவரே.

சிறப்புரை: பூர்வ புண்ணியத்தின் பயனாகத் தேவர்களாய் விளங்குபவர்கள் போக பூமியாய் விளங்கும் விண்ணுலகத்தில் தம் வளத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காகவும், தானவர்களாகிய அசுரர்கள் தமது ஆற்றலும் மாயா சக்திகளும் பெருக வேண்டும் என்ற நோக்கத்திற்காகவும் முனிவர்கள் முத்தி இன்பத்தை நாடியும், கர்ம பூமியாகிய பூவுலக

மக்கள் வினைப்பயனின் தீமைகள் நீங்க வேண்டும் என்பதற்காகவும் ஈசனுடைய வளநகராகிய மாற்பேற்றை வணங்குகின்றனர்.

1234. தீதிலா மலைஎடுத்த (அ)வ்வரக்கன்
நீதியால் வேதகீ தங்கள்பாட
ஆதியா னாகிய அண்ணல்எங்கள்
மாதிதன் வளநகர் மாற்பேறே.

தெளிவுரை: யாவருக்கும் தீமை விளையாதவாறு நன்மையே புரியும் கயிலை மலையை எடுத்த அரக்கனாகிய இராவணன் நியதிப்படி சாமவேத கீதம் பாட, ஆதியானாகிய அண்ணல், எங்கள் மாதாவாகிய உமா தேவியைப் பாகங் கொண்ட ஈசன்றன் வளநகர் மாற்பேறு ஆகும்.

மாதி – மாதினை உடைய ஈசன்.

1235. செய்யதண் தாமரைக் கண்ணனொடும்
கொய்யணி நறுமலர் மேலயனும்
ஐயன்நன் சேவடி யதனைஉள்க
மைய்ல்செய் வளநகர் மாற்பேறே.

தெளிவுரை: செந்தாமரை போன்ற கண்ணுடைய திருமாலும், கொய்ய அணிகொள் நறுமலராகிய தாமரையின் மேல் விளங்கும் பிரமனும், தலைவனாகிய ஈசன் சேவடியை நினைத்து விரும்பி யேத்தும் வளநகர், மாற்பேறு ஆகும்.

1236. குளித்துஉணா அமணர்குண்டு ஆக்கர்என்றும்
களித்துதன் கழலடி காணல்உறார்
முளைத்த வெண் மதியினொடு அரவம்சென்னி
வளைத்தவன் வளநகர் மாற்பேறே.

தெளிவுரை: உடல் தூய்மையின்றி உணவு கொள்ளும் அமணர் முதலானோர் மனம் மகிழுமாறு ஈசன் திருவடியைக் காணாதவர்கள் ஆவர். வளர்பிறைச் சந்திரனையும் அரவத்தையும் இணைத்துச் சென்னியில் பொருந்துமாறு வளைத்துச் சேர்த்தவனாகிய பரமனின் வளநகர் மாற்பேறு ஆகும்.

குண்டு ஆக்கர் – உடலைப் பேணுபவர்.

1237. அந்தமில் ஞானசம் பந்தன் சொன்ன
செந்துஇசை பாடல்செய் மாற்பேற் றைச்
சந்தம்இன் தமிழ்கள் கொண்டு ஏத்தவல்லார்
எந்தைதன் கழலடி எய்துவரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: அழிதல் இல்லாத ஞானசம்பந்தன் சொன்ன செவ்விய இசைப் பாடல் செம்மை வளர் மாற்பேற்றை, சந்தம் மிகுந்த இனிய தமிழ் கொண்டு ஏத்தவல்லவர், எந்தையாகிய ஈசன் திருவடிப் பேற்றை எய்துவர்.

சிறப்புரை: அந்தம் இல்லாத என்னும் சிறப்பு ஞானசம்பந்தருக்கும் அவர்தம் திருப்பதிகத்திற்கும் சேரச் சுட்டப் பெற்றது காண்க.

அந்தம் இல் – அழிதல் இல்லாத, நிலைத்தது.

115. திருஇராமனதீச்சரம்

தல விளக்கம்: காவிரி தென்கரைத் தலம். திருக்கண்ணபுரம் என வழங்கப்படுகிறது. இராமர் பூசித்த தலம்.

சுவாமி : இராமநாதர், இராமனதீஸ்வரர்

அம்பிகை : சரிவார்குழலி, சூளிகாம்பாள்

தலமரம் : சண்பகம் (மகிழ மரம்)

தீர்த்தம் : இராம தீர்த்தம்

பண் : வியாழக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1238. சங்கொளிர் முன்கையர் தம்மிடையே
அங்கிடு பலிகொளும் அவன்கோபப்
பொங்கரவு ஆடலோன் புவனியோங்க
எங்குமன் இராமன தீச்சரமே.

தெளிவுரை: *சங்கு வளையலை அணிந்த தாருகவனத்து முனிபத்தினிகளிடையே பிச்சையேற்ற ஈசன், சினம் மிக்க அரவம் திருமேனியில் ஆட உலகமானது ஓங்கித் திகழ, எங்கும் சிறப்புக் கொண்டு ஒளிர்வது இராமனதீச்சரமே.*

1239. சந்தநன் மலரணி தாழ்சடையன்
தந்த மதத்தவன் தாதையோதான்
அந்தமில் பாடலோன் அழக(ன்)நல்ல
எந்தவன் இராமனது தீச்சரமே.

தெளிவுரை: *ஈசன், அழகிய மலரை அணிந்த நீண்ட சடையுடையவன்; தந்தமும், மதமும் கொண்ட விநாயகப் பெருமானின் தந்தையானவன்; அழகனாக விளங்குபவன்; என்னுடைய நற்றவம் ஆனவன்; அவன் இராமனதீச்சரத்தானே.*

1240. தழைமயில் ஏறவன் தாதையோதான்
மழைபொழி சடையவன் மன்னுகாதில்
குழையது இலங்கிய தோலமார்பின்
இழையவன் இராமன தீச்சரமே.

தெளிவுரை: ஈசன், தோகையைத் தழைத்து விளங்கும் மயில் வாகனத்தை உடைய குமரவேளின் தாதை யானவன்; கங்கை விளங்கும் சடையுடையவன்; காதில் குழையணிந்து விளங்க திருமார்பில் முப்புரி நூல் திகழ உடையவன். அவன் இருப்பது இராமன தீச்சரமே.

சிறப்புரை: இரு கந்தருவர்கள் குழைகளாக இருந்து இசைத்துக் கொண்டு விளங்குவதால், அதன் ஏற்றத்தைக் குறிக்கும் தன்மையில் "மன்னுகரதில் குழையது" என உணர்த்தப் பெற்றது. மன்னு என்னும் சிறப்பு; காதில், குழை ஆகிய இரு சொற்களுக்கும் அடை மொழியாதலைக் காண்க

ஏறவன் – வாகனம் கொண்டவன், குமரன். மழை – கங்கை.

1241. சத்தியுள் ஆதியோர் தையல்பங்கன்
முத்திய தாகிய மூர்த்தியோதான்
அத்திய கையினில் அழகுசூலம்
வைத்தவன் இராமன தீச்சரமே.

தெளிவுரை: ஈசன், ஆதிசக்தியானவன்; உமையவளை ஒரு பாகமாக உடையவன்; முத்திக்குத் தலைவனாக விளங்கி அருள்புரிபவன்; செவ்வையான திருக்கரத்தில் அழகிய சூலப் படை தரித்தவன்; அவன் இராமன தீச்சரத்தினனே.

தையல் – உமையவள். அத்து – செவ்விய. அழகு – அருளின் அழகு, மேன்மை.

1242. தாழ்ந்த குழற்சடை முடியதவன்மேல்
தோய்ந்த இளம்பிறை துலங்குசென்னிப்
பாய்ந்த கங்கையொடு படஅரவம்
ஏய்ந்தவன் இராமன தீச்சரமே.

தெளிவுரை: நீண்ட குழலும், சடைமுடியின்மேல் இளம் பிறைச் சந்திரன் தோய்ந்து விளங்க, கங்கையும், படம் கொண்டு ஆடும் அரவமும், பொருந்த வைத்தவன் இராமனதீச்சரத்தானே.

சிறப்புரை: உமாதேவியை அங்கமாக உடைய தன்மையில், தேவிக்குரிய குழலும் (கூந்தல்) ஈசனுக்குரிய சடையும் சேர்ந்து விளங்குதலை குழற்சடை என உணர்த்தப் பெற்றது காண்க.

தாழ்ந்த – நீண்ட.

1243. சரிகுழல் இலங்கிய தையல்காணும்
பெரியவன் காளிதன் பெரியகூத்தை
அரியவன் ஆடலோன் அங்கையேந்தும்
எரியவன் இராமன தீச்சரமே.

தெளிவுரை: நீண்டு சரிந்த கூந்தலையுடைய உமையவள் கண்டு மகிழும் பெருமையை உடையவன்; காளியின் சிறப்பான நடனத்திற்கு அரியவனாகி ஆடுகின்றவன்; அழகிய கரத்தில் நெருப்பினை ஏந்தியவன் ஈசன், இராமனதீச்சரத்தான்.

பெரியவன் – ஆதியானவன், மூத்தோன், தலைவன், மேன்மையானவன், பெருமையுடையவன்.

1244. மாறிலா மாதொரு பங்கன்மேனி
நீறது ஆடலோன் நீள்சடைமேல்
ஆறது சூடுவான் அழகன்விடை
ஏறவன் இராமன தீச்சரமே.

தெளிவுரை: மாறுதல் அடையாத உமாதேவியைத் தனது தேகத்தின் ஒரு பாகத்தில் கொண்டு விளங்குபவனாகி, திருமேனியில் திருவெண்ணீறு அணிந்து, நடனம் புரிபவனாகி, நீண்ட சடை முடியின்மேல்

கங்கை சூடும் அழகனாகி, இடப வாகனத்தில் ஏறி வீற்றிருப்பவன், இராமனதீச்சரத்தினன்.

சிறப்புரை: தன்னுடைய இயல்பிலிருந்து மாறுதல் கொள்ளாத கருணைத் திறத்தினளாயும், ஈசன் திருவுளக் குறிப்பின்வழி நின்று யாவும் புரிபவளாயும், ஈசனே தன் தலைவன் என்னும் மெய்ம்மையை உணர்த்த பல வடிவங்களில் (பார்வதி, தாட்சாயணி, காமாட்சி, கௌரி முதலாயின) பூசித்து மகிழ்ந்த வளாயும், மன்னுயிர்களின்பால் எக்காலத்திலும் பேரன்பு பூண்டவளாயும் உடைய பராசக்தியின் எழிலை, "மாறிலா மாது" என உணர்த்தப் பெற்றது.

நீறு – திருவெண்ணீறு; ஆறு – கங்கை.

1245. தடவரை அரக்கனைத் தலைநெரித்தோன்
படஅரவு ஆட்டிய படர்சடையன்
நடமது ஆடலா னான்மறைக்கும்
இடமவன் இராமன தீச்சரமே.

தெளிவுரை: மலைபோன்ற பெரிய தோளுடைய அரக்கனாகிய இராவணனின் தலை நெரியுமாறு அடர்த்து படங்கொண்டு ஆடும் அரவத்தைச் சடையில் பொருந்தச் செய்து, நடம் புரியும் நாதனாகி, நான்கு வேதங்களுக்கும் தானே புகலிடம் என விளங்கும் ஈசன், இராமனதீச்சரத்தான்.

சிறப்புரை: நடனக்கலை பிறழாது ஆடுகின்றவன் என்னும் சிறப்புத் தோன்ற "நடமது ஆடலான்" என உணர்த்தப்பட்டது.

1246. தனமணி தையல்தன் பாகன்தன்னை
அனமணி அயன்அணி முடியும்காணான்
பனமணி அரவுஅரி பாதம்காணான்
இனமணி இராமன தீச்சரமே.

தெளிவுரை: ஈசன், உமைபாகனாகியவன்; அன்னப் பறவை வடிவு கொண்ட பிரமன் ஈசனார் திருமுடியைக் காண வேண்டும் என்று முயன்றும் முடியவில்லை. பல மணிகளை உடைய அரவத்தின் மீது பள்ளி கொள்ளும் திருமால், பாதத்தைக் காண முடியவில்லை. அத்தகைய ஈசன் விளங்கும் இடம் இராமனதீச்சரம் ஆகும்.

தனமணி தையல் – உமையவள்.

1247. தறிபோலாம் சமணர்சாக் கியர்சொற்கொளேல்
அறிவோரா நாமம் அறிந்துரைமின்
மறிகையோன் றன்முடி மணியார்கங்கை
எறிபவன் இராமன தீச்சரமே.

தெளிவுரை: பயனற்றதாகிய . சமணர், சாக்கியர் தம் சொற்களை மனத்தில் கொள்ளற்க. அறிவின் வயத் தால் ஓர்ந்து அறிதற்கு இயலாததாயும், உள்ளத்தின் உணர்வினால் ஒன்றி இயைந்து அறியக் கூடியதும் ஆன, இறைவன் திருநாமத்தை அறிந்து உரை செய்க. அத்தகைய திருநாமத்திற்கு உரிய பெருமான், மானைக் கரத்தில் ஏந்தி, செம்மையுடன் ஒளிரும் சடைமுடியில் விளங்கும் கங்கையை, உலக நலத்தினைக் கொண்டு, உலகுக்கு வழங்கும் இராமனதீச்சரத்தான்.

சிறப்புரை: பகீரதன் தவம் செய்து கங்கையை வேண்டிப் பெற்ற வரலாறு தோன்றுமாறு "கங்கை எறிபவன்" என உணர்த்திய தாயிற்று.

எறிதல் – வழங்குதல், வீசுதல்.

1248. தேன்மலர்க் கொன்றையோன் . . .

திருச்சிற்றம்பலம்

(இறுதிப் பாடல் முற்றுப் பெறவில்லை).

116. பொது
(திருநீலகண்டம்)

பதிகக் குறிப்பு: திருஞானசம்பந்தர் திருத்தொண்டர்கள் சூழக் கொடிமாடச் செங்குன்றூரில் வீற்றிருந்த போது பனிக்காலம் வர, பெரும்பாலோர் பிணியுற்றனர்; குளிர் சுரம் கொண்டு வாடினர். இதனை ஞானசம்பந்தர் திருமுன் சென்று இறைஞ்ச அவர் இது இந்நிலத்தின் இயல்பு எனினும் நமக்கு எய்தப் பெறா என்று "அவ்வினைக்கு இவ்வினை" என எடுத்துத் திருப்பதிகம் அருளிச் செய்யலானார். அதன் வழி அவ் இடத்தில் மட்டும் அன்றி நாடு முழுவதும் பிணி தீர்ந்தது.

பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1249. அவ்வினைக்கு இவ்வினை யாம்என்று
சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாது இருப்பதும்
உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்துஎம் பிரான்கழல்
போற்றது நாம்அடியோம்
செய்வினை வந்துஎமைத் தீண்டப்
பெறாதிரு நீலகண்டம்.

தெளிவுரை: முன் செய்த வினையின் பயனாக இப்போது, இப்பிறவியில் யாம் துன்பம் அடைகின்றோம் என்று சொல்பவர்களே! இதனைப் பிராரத்தகன்மம் என்று அறிந்து உரைப்பவர்களே! இதிலிருந்து உய்தி பெற்றுக் கடைத் தேறும் வழியை நாடிச் செய்யாமல் இருப்பதும் உமக்குக் குறைவு தந்து

ஊனத்தைத் தரும் அல்லவா! எனவே, அக்குறையைப் போக்க, கைகளால் செய்யும் செயலாகிய மலர் பறித்தல், குவித்து வணங்குதல் போன்ற செயல்களைச் செய்து எம்முடைய தலைவனாகிய ஈசன் திருவடியைப் போற்றுவோமாக. நாமெல்லாம் அப் பெருமானின் அடியவர்கள். ஆகையால் வினையானது வந்து தீண்டாது. திருநீலகண்டம் அவ்வினையை நிர்மூலமாக்கும் என்றவாறு.

சிறப்புரை: செய்வினை என்பது, செய்தவினை, செய்யும் வினை, செய்ய இருக்கும் வினை ஆகிய முக்கால நிகழ்ச்சியும் குறிக்கவல்லது – வினைத்தொகை.

நாம் அடியோம் என்ற தன்மையில் எமைத் தீண்டப் பெறா என்பது நம்மைத் தீண்டப் பெறாது என்னும் குறிப்பு ஆயிற்று.

நஞ்சனைய வினையாயினும் நஞ்செனும் நீல கண்டம், தன்வயத்தில் ஈர்த்து, மன்னுயிர்களின் வினைகளை நீக்கவல்லது என்பதும் குறிப்பாம்.

வினை – நல்வினை தீவினை.

1250. காவினை யிட்டும் குளம்பல
தொட்டும் கனி மனத்தால்
ஏவினை யால்எயில் மூன்றெரித்
தீர்என்று இருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி
போற்றுது நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்
பெறாதிரு நீலகண்டம்.

தெளிவுரை: மலர்ச் சோலைகள் அமைத்தும் திருக்குளம் தோண்டியும், கனிந்த மனத்துடன்,

"முப்புரம் எரித்த ஈசனே" எனக் கொண்டு காலை மாலை ஆகிய இருவேளையும் பூப்பறித்து மலரடி போற்றுவீராக. நாம் அனைவரும் அடியவர்களாய் ஈசனுக்குத் தொண்டு புரிபவர்கள். தீயவினையானது வந்து நம்மைத் தீண்டித்துன்பம் தராது. திருநீலகண்டம் துணை நின்று தடுத்துக் காக்கும்.

காவினை – பூஞ்சோலைகள் அமைத்தல்.

1251. முலைத்தட மூழ்கிய போகங்
கஞமற் றவையுமெல்லாம்
விலைத்தலை யாவணம் கொண்டெமை
யாண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமும் தண்டு
மழுவும் இவை யுடையீர்
சிலைத் தெமைத் தீவினை தீண்டப்பெ
றாதிரு நீலகண்டம்.

தெளிவுரை: காம நுகர்ச்சியின் வயங்கொண்டு, கொள்ளும் போகங்களால் நின் திருவடிக்கழலை விலகிச் சென்று தலைப்பட்டு அலையாத வண்ணம், ஆளாகக் கொண்டு, எம்மை ஆட்கொண்ட சடை யுடைய ஈசனே! சூலமும் மழுவும் திருக்கரத்தில் உடைய பெருமானே! ஆரவாரம் செய்து மலைபோல் பெருகி வரும் தீவினையாது, எம்மைத் தீண்டவிடாது திருநீலகண்டம் காத்தருளும்.

1252. விண்ணுல காள்கின்ற விச்சா
தரர்களும் வேதியரும்
புண்ணியர் என்றிரு போதும்
தொழப்படும் புண்ணியரே
கண்ணிமை யாதன மூன்றுடை
யீரும் கழலடைந்தோம்

திண்ணிய தீவினை தீண்டப்பெ
றாதிரு நீலகண்டம்.

தெளிவுரை: விண்ணுலகத்தில் விளங்குகின்ற வித்யா தரர்களும், வேதவிற்பன்னர்களும் புண்ணியர் என்று இரு வேளையிலும் தொழப்படுகின்ற புண்ணியரே! இமைத்தல் புரியாத மூன்று கண்களை உடையவரே! உமது திருவடியை அடைந்தோம். திணிக்கப்பட்டு வரும் தீவினையானது தீண்டப்பெறாமல் திருநீல கண்டம் காக்க.

1253. மற்றிணை யில்லா மலைதிரண்
டன்னதிண் தோளுடையீர்
கிற்றெமை யாட்கொண்டு கேளாது
ஒழிவதும் தன்மைகொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்துஉம்
திருவடி யேஅடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப்பெ
றாதிரு நீலகண்டம்.

தெளிவுரை: இணையில்லாத மலைபோன்ற திரட்சி யான தோள்களை உடைய பெருமானே! வலிமை யுடன் உறுதியாக எம்மை உமது ஆளாக்கிக் கொண்ட பின்னர், எம்மைப் பாராமுகமாய் விடுவதும் நற்பண்பு ஆகுமோ! வெறும் வாய்ச் சொற்கள் வாயிலாகத் துணை என்று சொல்லலப்படுகின்ற வாழ்க்கையைத் துறந்து, உம்முடைய திருவடியே சரண் என்று அடைந் தோம். தீவினையானது எம்மைச் செற்றுத் தீண்டப் பெறாது, திருநீலகண்டம் விளங்குமாக.

சிறப்புரை: கர்ம பூமியாகிய இம்மண்ணுலகத்தில் வாய்ச் சொற்களால் அமையப் படுகின்ற உறவுகள், பற்றுகள் யாவும் மாயும் தன்மை உடையன என்பதும், அவை

கர்மத்தை நுகர்வதற்கே வாய்த்தவை என்பதும், ஈசன் பொற்கழலே உண்மையாகப் பற்றக்கூடிய பொருள் என்பதும் "சொற்றுணை வாழ்க்கை" என்பது உணர்த்துவதாயிற்று.

ஞானப்பால் தந்து ஞானசம்பந்தர் ஆட்கொள்ளப்பட்ட நிலையானது, ஈசனார் வலிந்து வந்து ஞானம் பொழிந்த பெருங்கருணையும் அதன் உறுதியின் சிறப்பும் தோன்ற "இற்றெமை ஆட் கொண்டு" என்பது உணர்த்தியது. இதன் தன்மை யினை "கிற்றவா! மனமே கெடுவாய் உடையான்"... என மாணிக்கவாசகர் உரைத்தமையும் காண்க.

கிற்று – வலிமை கொண்டு.

1254. மறக்கு மனத்தினை மாற்றியெம்
ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்தடிக்
கீழ்ப்பிழை யாதவண்ணம்
பறித்த மலர்கொடு வந்துஉமை
யேத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெ
றாதிரு நீலகண்டம்

தெளிவுரை: உலக மாயையால் மறக்கும் தன்மையுடைய மனத்தை மாற்றி, எம்மை வற்புறுத்திப் பிறவாப் பெரி யோனாகிய நின் திருவடிக்கு ஆளாக்கி, நெஞ்சில் மாசற்ற நிலையாய்ச் செய்து, மலர்தூவி உம்மை ஏத்திப் பணி செய்யும் அடியவர்கள் நாங்கள். பெருமானே! எக்காலத்திலும் சிறப்பினைப் பெறாத தீவினையானது தீண்டப் பெறாது, திருநீலகண்டம் துணை நிற்க.

சிறப்புரை: ஈசனார் திருவடியானது, திரு உந்து அடியாக விளங்கி முத்திப்பேறு நல்குதலும், மன்னுயிரை, மாயத்

தளையிலிருந்து திருந்தி வரச் செய்யும் அடியாதலும், குறிக்குமாறு "திருந்தடி" என உணர்த்தப் பெற்றது.

1255. கருவைக் கழித்திட்டு வாழ்க்கை
கடிந்தும் கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்துஉமை
யேத்தது நாமடியோம்
செருவில் அரக்கனைச் சீரில்
அடர்த்தருள் செய்தவரே
திருவிலித் தீவினை தீண்டப்பெ
றாதிரு நீலகண்டம்.

தெளிவுரை: *இப் பிறவியில் உமது திருவடிக்கு மலர் தூவிப் போற்றுகின்ற செயலைப் புரிந்து உருகி நின்று, மீண்டும் பிறவா நிலையைப் பெறுவதற்கு ஏத்தும் அடியவர்கள் ஆயினம், பகை ஏதும் இல்லாத வனாயினும் வினைவலி காரணமாகி, சீர் அற்ற செயலைப் புரிய, அடர்த்துப் பின்னர் அருள் செய்த பெருமானே! எம்மைத் திருவற்ற தீவினையானது தீண்டப் பெறாது, திருநீலகண்டம் விளங்குக.*

கருவைக் கழித்திட்டு – பிறவி நீக்குதல், பிறப்பறுத்தல்.

1256. நாற்ற மலர்மிசை நான்முக
நாரணன் வாதுசெய்து
தோற்றம் உடைய அடியு
முடியும் தொடர்வரியீர்
தோற்றினும் தோற்றும் தொழுது
வணங்குது நாமடியோம்
சீற்றம தாம்வினை தீண்டப்பெ
றாதிரு நீலகண்டம்.

தெளிவுரை: *மணம் மிக்க தாமரை மலரில் விளங்கும் பிரமனும், திருமாலும், ஒருவருக்கு ஒருவர் வாதுபுரிந்து*

அடிமுடி காணாத பெருமானே! காணப் பெறினும் பெறுவீர் நீவிர்! யாம் உம்மைத் தொழுது வணங்கும் அடியவர்கள். சீற்றம் கொள்வதாகிய வினையானது தீண்டப் பெறாது, திருநீலகண்டம்.

1257. சாக்கியப் பட்டும் சமணுரு
வாகி உடையொழிந்தும்
பாக்கியம் இன்றி இருதலைப்
போகமும் பற்றும்விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடை
யீர்அடி போற்றுகின்றோம்
தீக்குழித் தீவினை தீண்டப்பெ
றாதிரு நீலகண்டம்.

தெளிவுரை; சமணரும் சாக்கியரும் பாக்கியம் அற்றவராய் இருதலைப் போகமாக விளங்கும் இம்மை நலமும் மறுமைப் பேறும் பற்றுகின்ற தன்மையை ஒழித்தனர். கொன்றை மலரைச் சடைமுடியில் தரித்த பெருமானே! உமது திருவடியைப் போற்றுகின்றோம். தீக்குழியைப் போன்று கனல்வீசும் தீவினையானது எம்மைத் தீண்டப் பெறாது, திருநீலகண்டம்.

1258. பிறந்த பிறவியில் பேணிஎம்
செல்வன் கழலடைவான்
இறந்த பிறவியுண் டாகில்
இமையவர் கோன்அடிக்கண்
திறம்பயில் ஞானசம் பந்தன்
செந்தமிழ் பத்தும்வல்லார்
நிறைந்த உலகினில் வானவர்
கோனொடும் கூடுவரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: எம்செல்வனாகிய ஈசன் கழலடியில் சேர்வதற்காக வழங்கப்பட்ட இப்பிறவியில், மீண்டும் பிறவி இருக்குமானால், திறன் மிக்க ஞானசம்பந்தன் செந்தமிழாகிய இத்திருப்பதிகத்தை ஓதவல்லவர்கள், விண்ணுலகத்தில் தேவேந்திரனுடன் சேர்ந்திருப்பார் கள்.

சிறப்புரை: உயிர்கள் கொள்ளும் எழுவகைப் பிறப்புக் களாகிய, 1. தாவரம்; 2. நீர்வாழ்வன; 3. ஊர்வன; 4. பறப்பன; 5. விலங்குகள்; 6. மனிதர்; 7. தேவர் ஆகிய வற்றுள் உயர்ந்ததாகிய தேவர் பிறப்பு கொள்வார்கள் என்பதனை "வானவர் கோனொடும் கூடுவரே". என்பது உணர்த்துவதாயிற்று. இது இத்திருப்பதிகத்தின் பயன் கூறியதாயிற்று.

திறம் பயில் – உறுதி வாய்ந்த.

117. திருப்பிரமபுரம்

தல விளக்கம்: பதிக எண் 1 காண்க.

மொழிமாற்று

பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1259. காடது அணிகலம் காரர
வம்பதி காலதனில்
தோடது அணிகுவர் சுந்தரக்
காதினில் தூச்சிலம்பர்
வேடது அணிவர் விசயற்கு
உருவம் வில்லும் கொடுப்பர்
பீடது அணிமணி மாடப்
பிரம புரத்தாரே.

தெளிவுரை: அணிமிக்க மாடங்கள் கொண்ட பெருமை மிகுந்த பிரமபுரத்தில் விளங்கும் பெருமான், கொடிய விடம் கொண்ட அரவத்தினை ஆபரணமாகக் கொண்டவர்; சுடுகாட்டை இருப்பிடமாக உடையவர்; அழகிய காதில் தோடு அணிபவர்; திருப்பாதத்தில் சிலம்பு அணிபவர்; வேடுவர் வடிவுகொண்டு விசயருக்கு பாசுபத அத்திரம் கொடுப்பவர்; அப் பெருமானைப் போற்றுவீராக.

சிறப்புரை: உமாதேவியை இடப்பாகம் கொண்டுள்ள ஈசனார் திருக்கோலக் காட்சியில், தேவிக்கு என்று உரியதாகிய தோடும், சிலம்பும் இவண் உணர்த்தப் பட்டது. இதனைச் "சுந்தரக் காது" எனச் சிறப்பித்தலும் ஓர்க.

காடு – சுடுகாடு. வில்லும் – இங்கு பாசுபத அத்திரத்தைக் குறித்தது. பீடது – பெருமை. பீடுடைய பிரமாபுரம் எனக் கொள்க.

1260. கற்றைச் சடையது கங்கண
முன்கையில் திங்கள்கங்கை
பற்றித்து முப்புரம் பார்படைத்
தோன்றலை சுட்டதுபண்டு
எற்றித்துப் பாம்பை அணிந்தது
கூற்றை எழில் விளங்கும்
வெற்றிச் சிலைமதில் வேணு
புரத்தெங்கள் வேதியரே.

தெளிவுரை: எழில்மிக்கு ஓங்கிய மதில்களை உடைய வேணுபுரம் என்னும் நகரில் விளங்கும் வேத நாயக ராகிய எங்கள் பெருமான், சடைமுடியில் சந்திரனும் கங்கையும் தரித்துள்ளவர்; முன் கையில் அரவத்தைக் கங்கணமாகக் கட்டியுள்ளவர்; முப்புரத்தை எரித்தவர்; உலகத்தைப் படைக்கும் தொழிலையுடைய பிரமனின்

ஐந்து தலைகளுள் ஒன்றைப் பற்றிக் கொய்தவர்; மார்க்கண்டேயரின் உயிரைக் கவர வந்த கூற்றுவனைக் காலால் உதைத்தவர்; பாம்பினை அணிகலனாகக் கொண்டவர்; அப்பெருமானின் திருவடியைத் தொழு வீராக.

1261. கூவிளம் கையது பேரி
சடைமுடிக் கூட்டத்தது
தூவிளங் கும்பொடிப் பூண்டது
பூசிற்றுத் துத்திநாகம்
ஏவிளங் கும்நுத லாளையும்
பாகம் உரித்தனரின்
பூவிளம் சோலைப் புகலியுள்
மேவிய புண்ணியரே.

தெளிவுரை: பூக்கள் மல்கும் அழகிய சோலைகள் உள்ள புகலியுள் மேவிய புண்ணியனாகிய பெருமான், சடையில் வில்வம் தரித்தவர்; ஒலிக்கும் உடுக்கையைக் கொண்டுள்ளவர்; நாதத்தை அணிகலனாகக் கொண் டிருப்பவர்; தூய்மையாக விளங்கும் திருவெண்ணீறு பூசிய திருமேனியுடையவர்; அம்பு போன்று விளங்கும் நுதலை உடைய உமையவளை ஒரு பாகத்தில் கொண்ட உரிமை உள்ளவர்; அவரைத் துதிப்பீராக.

கூவிளம் – வில்வம். பேரி – உடுக்கை. ஏ – அம்பு; பொடி – திருநீறு.

1262. உரித்தது பாம்பை உடன்மிசை
இட்டதோர் ஒண்களிற்றை
எரித்ததொர் ஆமையை இன்புறப்
பூண்டது முப்புரத்தைச்
செருத்தது சூலத்தை யேந்திற்றுத்
தக்கனை வேள்விபன்னூல்

விரித்தவர் வாழ்தரு வெங்குரு
வில்வீற் றிருந்தவரே.

தெளிவுரை: தருக்கள் சூழ்ந்த வெங்குருவில் வீற்றிருக்கும் பெருமான், யானையின் தோலை உரித்தவர்; பாம்பினை உடம்பின் மீது அணிகலனாகக் கொண்டவர்; முப்புரத்தை எரித்தவர்; ஆமை ஓட்டினைப் பூண்டவர்; தக்கன் வேள்வியைச் செருத்து அழித்தவர்; சூலத்தை ஏந்தியவர்; வேதங்களை விரித்தவர். அவரைத் தொழுக.

1263. கொட்டுவர் அக்குஅரை ஆர்ப்பது
தக்கை குறுந்தாளன
விட்டுவர் பூதம் கலப்பில
ரின்புகழ் என்புலவின்
மட்டுவ ருந்தழல் சூடுவர்
மத்தமும் ஏந்துவர்வான்
தொட்டுவ ருங்கொடித் தோணி
புரத்துறை சுந்தரரே.

தெளிவுரை: வானத்தைத் தொடுகின்ற உயர்ந்த கொடித் தோரணங்கள் கொண்டுள்ள தோணிபுரத்தில் வீற்றிருக்கும் சுந்தரராகிய பெருமான், தக்கை என்னும் பறை கொட்டுபவர்; சங்குமணி அரையில் கொண்டுள்ளவர்; குறுகிய பாதங்களை உடைய பூதங்கள் இனிய புகழைச் சொல்ல ஏற்பவர்; கலப்பில்லாத என்பு பொருந்த இருப்பவர்; மடுத்து வரும் தழலைக் கரத்தில் ஏந்துபவர்; ஊமத்தம் சூடுபவர். அப்பெருமானை வணங்குக என்றவாறு.

1264. சாத்துவர் பாசம் தடக்கையில்
ஏந்துவர் கோவணம்தம்

கூத்தவர் கச்சுக்குலவி நின்று
ஆடுவர் கொக்கிறகும்
பேர்த்தவர் பல்படை பேயவை
சூடுவர் பேரெழிலார்
பூத்தவர் கைதொழு பூந்தராய்
மேவிய புண்ணியரே.

தெளிவுரை: மாதவத்தோர் பூக்கையால் தொழும் பூந்தராய் மேவிய புண்ணியராகிய பரமன், கோவணத்தினைச் சாத்தி அணிபவர்; பாசம் தடக் கையில் ஏந்துபவர்; தம் கூத்தவர்; கச்சு பொருத்தி ஆடுபவர்; கொக்கிறகு சூடுபவர்; பேய்ப் படை பல சூழப் பேர் எழில் ஆர்க்கக் காரணமானவர். அவரைத் துதிப்பீராக.

பேர்த்தல் – காரணமாதல்.

1265. காலது கங்கை கற்றைச்
சடையுள்ளாற் கழல்சிலம்பு
மாலது ஏந்தல் மழுவது
பாகம் வளர்கொழுங் கோட்டு
ஆலது ஊர்வர் அடலேற்று
இருப்பர் அணிமணி நீர்ச்
சேலது கண்ணியொர் பங்கர்
சிரபுர மேயவரே.

தெளிவுரை: சேல்போன்ற கண்ணுடைய உமையவளை ஒரு பங்குடையவராய்ச் சிரபுரம் மேவிய ஈசன் காலில், கழலும் சிலம்பும் அணிந்தவர். கற்றையாக உள்ள சடைமுடியில் கங்கை தரித்தவர்; மாலினைப் பாகமாகக் கொண்டவர்; மழு ஏந்தியவர்; வளர்ந்த செழுமையான கல்லால மர நிழலில் வீற்றிருப்பவர்;

இடபத்தில் ஏறுபவர். அவரை வணங்கி மகிழ்க என்றவாறு.

சிறப்புரை: ஈசன், அர்த்தநாரியாக விளங்கும் தன்மையைக் குறிக்க, தேவிக்குரிய சிலம்பும் ஈசனுக்குரிய கழலும் உரைக்கப் பெற்றது.

1266. நெருப்புரு வெள்விடை மேனியர்
ஏறுவர் நெற்றியின்கண்
மருப்புறு வன்கண்ணர் தாதையைக்
காட்டுவர் மாமுருகன்
விருப்புறு பாம்புக்கு மெய்த்தந்தை
யார்விறன் மாதவர்வாழ்
பொருப்புறு மாளிகைத் தென்புற
வத்தணி புண்ணியரே.

தெளிவுரை: பெருமை மிக்க சிறந்த தவமுனிவர்கள் வாழ்கின்ற சிறப்பும், மலை போன்று உயர்ந்த மாளிகைகளும் விளங்கும் அழகிய புறவம் என்னும் நகரில் அணியாக விளங்கும் புண்ணியராகிய ஈசன், நெருப்புப் போன்ற சிவந்த திருமேனியர்; வெள்விடையேறுபவர்; நெற்றிக் கண் உடையவராகி வீரம் காட்டுபவர்; யானையின் கொம்புடைய விநாயகரின் தாதை; விரும்பி இலங்கும் பாம்பிற்குத் தன் மெய்யைக் காட்டி இருக்கச் செய்பவர்; மாமுருகன் தந்தை. அவரை வணங்குக.

1267. இலங்கைத் தலைவனை யேந்திற்று
இறுத்தது இரலையின்னாள்
கலங்கிய கூற்றுயிர் பெற்றது
மாணி குமைபெற்றது
கலங்கிளர் மொந்தையின் ஆடுவர்
கொட்டுவர் காட்டகத்துச்

சலங்கிளர் வாழ்வயல் சண்பையுள்
மேவிய தத்துவரே.

தெளிவுரை: நீர் வளம் பெருக்கும் வயல் வளம் மிக்க சண்பை நகரில் மேவிய உண்மைப் பொருளாகிய ஈசன், இராவணனை இறுத்துத் துன்புறுத்தி வலியிழக்கச் செய்து, கரத்தில் மானை ஏந்திக் காலனின் உயிரைக் கவர்ந்து, வாழ்நாள் இன்மையைக் குறித்துக் கலங்கிய மாணியை மீட்டு உயிர் தந்து, மொந்தை என்னும் பறையைக் கொட்டுவர்; சுடுகாட்டில் ஆடுவர். அப்பெருமானை வணங்குமின்.

இரலை – மான். யின்னாள் – இல் நாள், இல்லை எனும் வாழ்நாள். மாணி – மார்க்கண்டேயர்.

1268. அடியிணை கண்டிலன் தாமரை
யோன்மால் முடிகண்டிலன்
கொடியணி யும்புலி யேறுகந்து
ஏறுவர் தோலுடுப்பர்
பிடியணி யும்நடை யாள்வெற்பு
இருப்பதோர் கூறுடையர்
கடியணி யும்பொழில் காழியுள்
மேய கறைக்கண்டரே.

தெளிவுரை: நறுமணம் மிக்க பொழில்சூழ் காழியுள் மேய, கறை பொருந்திய கண்டத்தை யுடையவராகிய பெருமான், பிரமன் முடி கண்டிலராய்த் திருமால் அடி கண்டிலராய் விளங்க, கொடியாகத் திகழும் இடபத்தை வாகனமாக ஏறுவர்; புலியின் தோலை உடுப்பர்; பெண் யானை போன்ற நடையுடைய உமா தேவியைப் பாகமாக உடையவர்; கயிலை மலையில் வீற்றிருப்பர். அவரைத் தொழுவீராக.

1269. கையது வெண்குழை காதது
சூலம் அமணர்புத்தர்
எய்துவர் தம்மை யடியவர்
எய்தார் ஓர் ஏனக் கொம்பு
மெய்திகழ் கோவணம் பூண்பது
உடுப்பது மேதகைய
கொய்தலர் பூம்பொழிற் கொச்சையுள்
மேவிய கொற்றவரே.

தெளிவுரை: மேன்மையான தகைமையுடைய மலர்கள் சூழ்ந்த பூம்பொழிலைக் கொண்ட கொச்சை வயம் என்னும் பதியில் மேவும் கொற்றவராகிய ஈசனார் கையில் சூலம் விளங்க, காதில் வெண்குழை இருக்க, அமணரும் புத்தரும் எய்தாதவராவர்; அடியவர்கள் எய்துவர். அப்பெருமான், ஏனக் கொம்பினை அணியாகக் கொண்டு மெய்யில் திகழும் கோவண ஆடையை உடுத்தி விளங்குபவர். அவரைத் துதிப்பீராக.

கொற்றவர் – தலைவர்.

1270. கல்லுயர் கழுமல விஞ்சியுள்
மேவிய கடவுள்தன்னை
நல்லுரை ஞானசம் பந்தன்
ஞானத் தமிழ் நன்குணரச்
சொல்லிடல் கேட்டல் வல்லோர் தொல்லை
வானவர் தங்களோடும்
செல்குவர் சீரரு ளாற்பெற
லாம்சிவ லோகமதே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: கல்லால் ஆன மதில்களையுடைய கழுமல நகரில் மேவிய கடவுளை, நல்லுரை புகலும் ஞான

சம்பந்தன், கடவுள் ஞானத்தை உணர்த்தும் தமிழால் நன்கு உணரச் சொல்லிய இத் திருப்பதிகத்தைச் சொல்லவும், சொல்லிக் கேட்கவும் வல்லவர்கள், தொன்மையாக விளங்கும் தேவர்களுடன் வதிந்து, பின்னர் தேவர்களும் புண்ணியத்தின் பயனை உற்றவராய் அவர்களுடன், புகழ் மிக்க ஈசன் அருள் தன்மையால் சிவலோகத்தையே பெறலாம்.

சீர் அருள் – கடவுள் அருள், ஞானசம்பந்தர் அருளால் தேவர் உலகும், பின்னர் கடவுள் அருளால் சிவலோக வாழ்வும் கிடைக்கும் என்பதாகும்.

118. திருப்பருப்பதம்

தல விளக்கம்: வடநாட்டுத் தலம். ஸ்ரீசைலம் என்று வழங்கப்படுகிறது. சக்தி மடமாக உள்ளது. பூகயிலாயம் எனவும் வழங்கும்.

மருத மரத்தைத் தல மரமாகக் கொண்டுள்ள தலங்கள் மூன்று. அவற்றுள் இத்தலம் மல்லிகார் ஜுனம் எனப்படும். மற்ற இரண்டும்,

1. திருவிடை மருதூர் - மத்தியார்ஜுனம்
2. திருப்புடை மருதூர் - புடார்ஜுனம்

இது சிலாத முனிவர் தவம் செய்த திருத்தலம். நந்தி தேவர் தவம் செய்து வாகனப் பேறு பெற்றார். அவரே இங்கு மலையாக இருந்து பெருமானைத் தாங்குகிறார் என்பது வரலாறு. பன்னிரு ஜோதி லிங்கத் தலங்களில் ஒன்று இத்திருத்தலம் (ஆந்திர மாநிலம்). ஏனையவை:

1. சோமநாதம் — குஜராத் மாநிலம்
2. உச்சயினி — மத்தியப் பிரதேசம்

3. ஓங்காரம் — மத்தியப் பிரதேசம்
4. வைத்தியநாதம் — மகாராட்டிரம்
5. பீமசங்கரம் — மகாராட்டிரம்
6. இராமேஸ்வரம் — தமிழ் நாடு
7. விஸ்வேசம் (காசி) — உத்தரப்பிரதேசம்
8. திரயம்பகம் — மகாராட்டிர மாநிலம்
9. கேதாரம் — உத்தரப்பிரதேசம்
10. குஸ்மேசம் — மகாராட்டிர மாநிலம்
11. நாகேசம் — மகாராட்டிர மாநிலம்

சுவாமி, மலையின்மேல் வீற்றிருக்கிறார்.

சுவாமி : பருப்பத நாயகர், மல்லிகார்ச்சுனர்
அம்பிகை : பருப்பத நாயகி, பிரமராம்பிகை
தல மரம் : மருதமரம், திரிபலா
தீர்த்தம் : பர்வத தீர்த்தம்

பதிகக் குறிப்பு: திருஞானசம்பந்தர், திருக்காளத்தி மேவி ஈசனைப் பாடிப் பரவி மகிழ்ந்து, ஆங்கிருந்தவாறே, திங்கள் புனை முடியார் தம், தலம்தோறும் சென்று தமிழ் இசை பாடும் செய்கை போலக் குலவு திருப்பருப்பதத்தின் கொள்கை பாடினர் என்பது சேக்கிழார் வாக்கு.

பண் : வியாழக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1271. சுடுமணி யுமிழ்நாகம் சூழ்தர அரைக்கசைத்தான்
இடுமணி எழிலானை ஏறலன் எருதேறி
விடமணி மிடறுடையான் மேவிய நெடுங்கோட்டுப்
படுமணி விடுசுடரார் பருப்பதம் பரவுதுமே.

தெளிவுரை: ஒளிவிடும் மாணிக்கத்தை உமிழும் நாகத்தை அரையில் கட்டி, எழில் மிக்க யானைமீது ஏறாது, இடபத்தின்மீது ஏறி, நீலகண்டனாய் நெடிய மலையின் மீது பிரகாசம் பொருந்தி விளங்கும் பருப்பதத்தைப் பரவுவோமாக.

எருதேறி – இடப வாகனத்தைக் குறிப்பது. மற்றும் இத்தலத்தின் மகிமை தோன்ற, நந்தி சிவபெருமானைப் போற்றிப் பூசித்து வரம் பெற்றதும், தானே மலையாக விளங்கி ஈசனைத் தாங்கும் வரலாறும் உணர்த்துவதாயிற்று. சுடுமணி – மாணிக்கம்.

1272. நோய்புல்கு தோல்திரைய நரைவரு நுகருடம்பில்
நீபுல்கு தோற்றமெல்லா நினையுள்கு மடநெஞ்சே
வாய்புல்கு தோத்திரத்தால் வலம்செய்து தலைவணங்கிப்
பாய்புலித் தோலுடையான் பருப்பதம் பரவுதுமே.

தெளிவுரை: நோய் சேர்ந்து, தோல் சுருங்கி, நரை வந்து நுகரும் உடம்பில், நெஞ்சமே! நீ அடைய வேண்டியதை நினைப்பது பற்றிச் சிந்தித்துப் பார். வாயினால் தோத்திரங்கள் பாடி வணங்கி, புலித்தோல் உடையானின் பருப்பதத்தைப் பரவுதும்.

1273. துனியுறு துயர்தீரத் தோன்றியோர் நல்வினையால்
இனியுறு பயனாதல் இரண்டுற மனம்வையேல்
கனியுறு மறமேறிக்கருமுசுக் கழையுகளும்
பனியுறு கதிர்மதியான் பருப்பதம் பரவுதுமே.

தெளிவுரை: வினைத் துயர் நீங்க இவ்வுலகத்தில் பிறவி எடுத்ததன் பயனாய், இனி கொள்ளப்போகும் பிறவியைக் கருதி மனத்தைத் திரியச் செய்யற்க. கனிகள் தரும் மரத்தின்மேல் ஏறி மூங்கில்கள் அசையக் களிக்கும் கருங்குரங்குகள் சாரும் கதிர்ஒளி பரவும் பருப்பதத்தைப் பர்வித் துதிப்பீராக.

சிறப்புரை: "கனியிருப்பக் காய் கவர்ந்தற்று" என்னும் குறிப்பு உணர்த்தும் வகையில், கனிகள் திகழும் பருப் பதத்தைப் பரவும் தன்மையானது சிவப்பேற்றினை நல்கும் என்றும், மீண்டும் கொள்ளப் போகும் பிறவியைக் கருத்தில் வைத்து கவலை கொள்ளற்க என்றும் உணர்த்தப்பெற்றது காண்க.

துனி – துயர்; முசு – குரங்கு, கழை – மூங்கில்.

1274. கொங்குஅணி நறுங்கொன்றைத் தொங்கலன் குளிர்சடையான்
எங்கள்நோய் அகலநின்றான் எனவருள் ஈசனிடம்
ஐங்கணை வரிசிலையான் அநங்கனை அழகழித்த
பைங்கண்வெள் ளேறுடையான் பருப்பதம் பரவுதுமே.

தெளிவுரை: தேன் விளங்கும் வாசனை பொருந்திய கொன்றை மாலையும், கங்கை பொருந்திய சடையும் கொண்டவன், எங்கள் பிறவி நோயை நீக்குவதற்காக வீற்றிருப்பவன் எனச் சொல்லப்படும் ஈசனுடைய இடமாவது, மன்மதனை அழித்த இடபவாகனத்தை உடையவனாகிய, பரம்பொருளின் பருப்பதம் ஆகும். அதனைப் பரவித் துதிப்பீராக.

சிறப்புரை: ஈசனின் இருப்பிடத்தைக் கூறும் தன்மையில், அதன் உயர்வும் தெய்வத் தன்மையும் தெரியுமாறு அருள் என்று உணர்த்தியதாயிற்று.

ஐந்து மலர்க் கணைகளை உடையவனாய்க் கரும்பு வில் கொண்டுள்ளவன் மன்மதன்; மூன்று வகையான வில்களை உடையவன் எனச் சொல்லப்படுதலும் உண்டு. அவை:

1. பூ வில் – தேவர்களிடம் பயன்படுத்துதல்

2. கரும்பு வில் - மனிதர்களிடம் பயன்படுத்துதல்

3. இரும்பு வில் - அரக்கர்களிடம் பயன்படுத்துதல்.

ஐங்கணை: 1. தாமரை; 2. அசோகு; 3. மா; 4. முல்லை; 5. கருங்குவளை. கொங்கு – தேன்; தொங்கல் – மாலை; குளிர் – கங்கை. நோய் – பிறவி நோய்; அருள் – உயர்ந்த சொல்லாக உரைத்தல். அநங்கன் – மன்மதன்.

1275. துறைபல சுனைமூழ்கித் தூமலர் சுமந்தோடி
மறையொலி வாய்மொழியால் வானவர் மகிழ்ந்தேத்தச்
சிறையொலி கிளிபயிலும் தேனினம் ஒலியோவாப்
பறைபடு விளங்கருவிப் பருப்பதம் பரவுதுமே.

தெளிவுரை: *புண்ணியத் தீர்த்தங்கள் பல ஆடி, தூய மலர்களைச் சுமந்து சென்று, வேதங்கள் இசைத்துப் போற்றவும், வானவர்கள் மகிழ்ந்து வணங்கவும், சிறகுகள் ஒலிக்கக் கிளியானது மொழியவும், வண்டுகள் ரீங்காரம் செய்யவும், அருவிகள் விழும் ஒலியானது பறை கொட்டுவது போன்று அதிரவும், விளங்குகின்ற பருப்பதம் சென்று, ஈசனைப் போற்றுவீராக.*

துறைபல சுனை – புண்ணியத் தீர்த்தங்கள்.

1276. சீர்கெழு சிறப்புஓவாச் செய்தவ நெறிவேண்டில்
ஏர்கெழு மடநெஞ்சே இரண்டுற மனம்வையேல்
கார்கெழு நறுங்கொன்றைக் கடவுளது இடம்வகையால்
பார்கெழு புகழோவாப் பருப்பதம் பரவுதுமே.

தெளிவுரை: *புகழ் மிக்கதும், சிறப்பு அகலாது செய்யப் படும் தவநெறி வேண்டுதிர் ஆயின், நெஞ்சமே! மனத்தின்கண் வேறுபாடின்றி ஒன்றிய நிலையில், கொன்றை சூடும் கடவுளின் இடம் என்னும் வகையில்*

பெருகும் புகழுடன் விளங்கும் பருப்பதத்தைப் பரவி ஏத்துமின்.

1277. படைபுல்கு படர்கமலம் புகையொடு விரைகமழத்
தொடைபுல்கு நறுமாலை திருமுடி மிசையேற
விடைபுல்கு கொடியேந்தி வெந்தவெண் ணீறணிவான்
படைபுல்கு மழுவாளன் பருப்பதம் பரவுதுமே.

தெளிவுரை: நல் வேள்வி புரிதலை யொட்டி எழும் புகையும் தாமரை மலரின் நறுமணமும் பரவத் தொடுக்கப்பெற்ற மலர்மாலை திருமுடியில் திகழ, இடபக் கொடி ஏந்தி, திருவெண்ணீறு அணிபவனாகி யும் மழுப் படையுடையவனாயும் விளங்கும் ஈசன் பருப்பதத்தைப் பரவித் தொழுமின்.

புகை – வேள்விப் புகை.

1278. நினைப்பெனு நெடுங்கிணற்றை நின்றுநின் றயராதே
மனத்தினை வலித்தொழிந்தேன் அவலம்வந்து
அடையாமைக்
கனைத்தெழு திரள்கங்கை கமழ்சடைக் கரந்தான்றன்
பனைத்திரள் பாய்அருவிப் பருப்பதம் பரவுதுமே.

தெளிவுரை: நெடுங் கிணற்றை நெடிது நோக்கி நோக்கி அச்சம் கொண்டு அயர்தலைப் போன்று, நெஞ்சில் தோன்றும் பலதரப்பட்ட எண்ணங்கள் அவலத்தை உண்டாக்கும். ஆதலினால் மனத்தைக் கட்டுப்படுத்தி வலித்து அடக்கி அவலத்தை விட்டொழிந்தேன். உம்மை துன்பமானது அடையாதிருப்பதற்கு, ஒலித்துத் திரண்டு எழும் கங்கையைக் கமழ்கின்ற சடையில் தரித்தவனின் பருப்பதத்தைப் பரவிப் பணிவீராக.

சிறப்புரை: நெடுங்கிணற்றை நோக்கி அச்சம் கொள்ளுதல் அறியாமை குறித்து எழுவதைப் போன்று,

மனத்தில் அறியாமையிருள் பரவும் தன்மையில் எண்ணங்கள் உதித்தெழ, உதித்தெழ அவலம் பெருகும் என உணர்த்தியமையும், அதனைத் தீர்ப்பதற்குரிய பாதையானது மனத்தை அடக்கிச் சிவசிந்தனையில் தேக்குவது என்பதும் சுட்டப்பெறுவது காண்க.

1279. மருவிய வல்வினை நோய் அவலம் வந்து அடையாமல்
திருஉரு அமர்ந்தானும் திசைமுகம் உடையானும்
இருவரும் அறியாமை எழுந்ததோர் எரிநடுவே
பருவரை யுறநிமிர்ந்தான் பருப்பதம் பரவுதுமே.

தெளிவுரை: ஊழ்வினையின் காரணமாக இப்பிறவியில் பற்றுக் கொண்டிருக்கும் கொடிய வினையாகிய பிணியால் துன்பம் அடையாமல் இருக்கும் நிலைக்குத் திருமாலும் பிரமனும் அறியப்படாதவராய் விளங்கிய சோதி வடிவான ஈசன் விளங்கும் பருப்பதத்தைப் பரவித் தொழுக.

சிறப்புரை: யாவராலும் போற்றப்படுகின்ற திருமகளை மார்பில் கொண்டுள்ள திருமாலும், நான்கு திசைகளிலும் திருமுகத்தால் நோக்கும் பிரமனும் ஈசனைக் காணாமையானது, தற் சார்பின் உணர்வால் ஏற்பட்டதென்றும், அஃது, அறியாமையின் காரணமாய் விளையும் என்றும், ஈசன் திருக்கழலை ஒன்றி நினைத்து வணங்குதல், எக்காலத்திலும் ஆக்கம் தரும் என்றும் அஃதே உண்மை ஞானம் என்றும் உணர்த்துதல் காண்க.

திரு – திருமகள்; உரு – வடிவு; திசை முகம் – நான்கு முகம். எரி – சோதி.

1280. சடம்கொண்ட சாத்திரத்தார் சாக்கியர் சமண்குண்டர்
மடம்கொண்ட விரும்பியராய் மயங்கியோர்
பேய்த்தேர்ப்பின்

குடம்கொண்டு நீர்க்குச்செல்வார் போதுமின்
குஞ்சரத்தின்
படங்கொண்ட போர்வையினான் பருப்பதம் பரவுதுமே.

தெளிவுரை: *அறிவு சார்ந்த பொருள்களைப் புகலாத சாக்கியர் மற்றும் சமணர்களின் சொற்சாத்திரங்களை விரும்பி, பேதையர்களாய் மயங்கிக் கானல் நீர் போன்று தோன்றும் காட்சியில் பதிந்து யாரேனும் செல்வார்களோ! செல்ல மாட்டார்கள். யானையை உரித்துப் போர்வையாகக் கொண்டவனாகிய ஈசனின் பருப்பதம் பரவும் அடியவர்கள் நன்மை பெறுவார்கள்.*

சிறப்புரை: *கானல் நீர்நிலைகளிலிருந்து, நீர் கொள்ள எக்காலத்திலும் ஆகாது என்னும் க்ருத்தும், வாழ்க்கைக்கு நீர் இன்றியமையாத ஒன்று என்னும் கருத்தும் வலியுறுத்தும்முகத்தான், நீர் போன்ற நற்பொருள் உள்ள இடம், பருப்பதம் பரவுதல் ஆகும் எனவும் சுட்டப் பெறுதல் காண்க.*

சடங்கொண்ட சாத்திரம் – பொருளற்ற உரை. பேய்த்தேர் – கானல் நீர்; போதுமின் – போகமாட்டார்கள் என்பது குறிப்பு. குஞ்சரம் – யானை.

1281. வெண்செநெல் விளைகழனி விழவொலி கழுமலத்தான்
பண்செலப் பலபாடல் இசைமுரல் பருப்பதத்தை
நன்சொலி னாற்பரவு ஞானசம் பந்தனல்ல
ஒண்சொலின் இவை மாலை உருஎணத் தவம்ஆமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *பண்ணிசையால் பாடல்கள் இசைக்க வல்ல பருப்பதத்தை, வெண்மையாகவும் செம்மை யாகவுமுள்ள நெல் விளையும் கழனிகளும், திருவிழாக் களும் உடைய கழுமல நகரினனாகிய, நற் சொற்களால் பரவும் ஞானசம்பந்தன், நல்ல ஞானத்தால் இனிமை*

யாகச் சொல்லப்பட்ட இத்திருப்பதிகத்தை, மன்னம் செய்து எண்ண, தவமானது கைகூடும். தவத்தின் பயனைத் தரும் என்றவாறு.

ஒண்சொல் – ஞானம் பெருகும் சொல். உருஎண – எண்ணி மனனம் செய்தல்.

119. திருக்கள்ளில்

தல விளக்கம்: தொண்டை நாட்டுத் தலம். இது, திருக்கள்ளம், திருக்கண்டலம் என வழங்கப்படுகிறது. பிருகு முனிவர் பூசித்த திருத்தலம்.

சுவாமி : சிவானந்தேஸ்வரர்

அம்பிகை : ஆனந்தவல்லி

தீர்த்தம் : நந்தி தீர்த்தம்

பண் : வியாழக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1282. முள்ளின்மேல் முதுகூகை முரலும்சோலை
வெள்ளின்மேல் விடுகூறைக் கொடிவிளைந்த
கள்ளின்மே யஅண்ணல் கழல்கள் நாளும்
உள்ளுமேல் உயர்வெய்தல் ஒருதலையே.

தெளிவுரை: முட்கள் பொருந்திய கூகைகள் ஒலி செய்யும் சோலை உடையதும், வெள்ளை வண்ணம் கொண்ட வீடுகளில் துகில்களால் ஆன கொடிகள் திகழும் திருக்கள்ளில் என்னும் நகரில் விளங்கும் அண்ணலாகிய எந்தை ஈசனார் திருவடியை, நாள் தோறும் நினைத்து வணங்கி நிற்க, உயர்வு அடைதல் உறுதியாகும்.

கூறை – துகில், துணி; ஒருதலை – உறுதி.

1283. ஆடலான் பாடலான் அரவங்கள் பூண்டான்
ஓடுஅலாற் கலன்இல்லான் உறை பதியால்
காடுஅலாற் கருதாத கள்ளின் மேயான்
பாடுஎலாம் பெரியார்கள் பரசுவாரே.

தெளிவுரை: *ஆடலும் பாடலும் விரும்பி அரவங்கள் பூண்டு திருவோட்டைப் பிச்சைப் பாத்திரமாக்க் கொண்டு, சுடுகாட்டினை இடமாக உடைய ஈசன், கள்ளில் எனும் பதியில் விளங்கி நிற்க. அப் பெருமானைப் பெருமக்கள் பெருமையாய்ப் போற்றித் துதிப்பர்.*

கலன் – பிச்சைப் பாத்திரம். காடு – சுடுகாடு. பாடு – பெருமை; பரசுதல் – துதித்தல்.

1284. எண்ணார்மும் மதில்எய்த இமையா முக்கண்
பண்ணார்நான் மறைபாடும் பரம யோகி
கண்ணார்நீ றணிமார்பன் கள்ளின்மேயான்
பெண்ணாணாம் பெருமான்எம் பிஞ்ஞ கனே.

தெளிவுரை: *நன்மை எண்ணாத பகைவரின் மூன்று மதில்களை நெருப்புக் கணைகொண்டு எய்து எரித்த, இமையாத மூன்று கண்ணுடையவனும், பண் விளங்கும் நான்கு மறைகளைப் பாடும் பரமயோகி கண்ணார நீறு அணி மார்பினராகிக் கள்ளில் என்னும் பதியில்மேவிப் பெண்ணும் ஆணும் ஆகிய பரமன், எம் பிஞ்ஞகனே.*

1285. பிறைபெற்ற சடையண்ணல் பெடைவண்டு ஆலும்
நறைபெற்ற விரிகொன்றைத் தார்ந யந்த
கறைபெற்ற மிடற்றண்ணல் கள்ளின் மேயான்
நிறைபெற்ற அடியார்கள் நெஞ்சுளானே.

தெளிவுரை: *பிறைச் சந்திரனைச் சூடிய சடையுடைய எம் அண்ணல், பெண் வண்டு ஒலி செய்து, தேன்*

பெற்ற கொன்றை மாலையை விரும்பிய நீல மணிமிடற்றண்ணலாய்க் கள்ளில் என்னும் நகரில் மேவி, நிறைவாகத் துதிக்கும் அடியவர்கள் நெஞ்சில் விளங்கி நிற்பவர்.

கறை – விடம்.

1286. விரையாலும் மலராலும் விழுமை குன்றா
உரையாலும் எதிர்கொள்ள ஊரா ரம்மாக்
கரையார்பொன் புனல்வேலிக்கள்ளின் மேயான்
அரையார்வெண் கோவணத்த அண்ணல்தானே.

தெளிவுரை: சிறப்பான பெரிய கரைகளையுடைய தூய நீர்நிலைகளைக் கொண்ட, கள்ளில் என்னும் நகரில் மேவி, அரையில் வெண்கோவண ஆடை கொண்டுள்ள அண்ணலை ஊர் மக்கள், கோட்டம், துருக்கம், தகரம், அகில், சந்தனம் ஆகிய ஐவகை விரையாலும், கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ ஆகிய நான்கு வகையான மலராலும், விழுமை குன்றாத வேத உரைகளாலும் எதிர் கொள்ளு கின்றனர்.

விரை – மணம்.

1287. நலனாய பலிகொள்கை நம்பால் நல்ல
வலனாய மழுவாளும் வேலும் வல்லான்
கலனாய தலையோட்டான் கள்ளின்மேயான்
மலனாய தீர்த்து எய்து மாதவத்தோற்கே.

தெளிவுரை: நம்பால் நலன்கள் விளையும் தன்மையில், பலி ஏற்கும் கொள்கையனாய் வலிமை மிக்க மழுவும் சூலமும் கொண்டு விளங்குபவனாகிய ஈசன், வல்ல வனாகிய பிரமனின் தலையை ஓடாகக் கொண்டவன். அப்பெருமான், கள்ளில் என்னும் பதியில் மேவி,

மும்மலங்களைத் தீர்க்கும் அருளைப் புரிகின்றான். தவம் உடையவர்கள் அதனை எய்துகின்றனர்.

1288. பொடியார்மெய் பூசினும் புறவின் நறவம்
குடியாவூர் திரியினும் கூப்பி டினும்
கடியார்பூம் பொழிற்சோலைக் கள்ளில் மேயான்
அடியார் பண்பு இகழ்வார்கள் ஆதர்களே.

தெளிவுரை: மணம் பொருந்திய சோலைகள் சூழும் கள்ளில் என்னும் பதியில் மேவும் ஈசனின் அடியவர் கள், திருவெண்ணீறு பூசி நற்கோலத்தில் காட்சி தந்தாலும், காட்டில் தோன்றும் தேன் குடித்து ஊரில் திரிந்தாலும், கைகளைக் கூப்பித் தொழுதாலும், ஆக எத்தன்மையில் இருக்க நேர்ந்தாலும் அவர்களை இகழ்பவர்கள், கீழ்மக்கள் ஆவர்.

ஆதர் – கீழ்மக்கள், அதமர்.

1289. திருநீல மலர்ஒண்கண் தேவி பாகம்
புரிநூலும் திருநீறும் புல்கு மார்பில்
கருநீல மலர்விம்மு கள்ளில் என்றும்
பெருநீல மிடற்றண்ணல் பேணு வதே.

தெளிவுரை: ஒளிமிக்க நீல மலர்போன்ற கண்களை உடைய உமையவளை ஒரு பாகம் கொண்டு, முப்புரி நூலும், திருவெண்ணீறும் மார்பில் பொருந்தித் திகழ, கருநீல மலர் பெருகும் கள்ளில் என்னும் பதியில், எக்காலத்திலும் நீல மிடற்றுடைய ஈசன் பேரண்ணலாய் விரும்பி வீற்றிருக்கின்றனர்.

சிறப்புரை: உமையவள் நயனத்தால் அருள் வழங்கும் சிறப்பினைக் குறிக்கும் தன்மையில் திரு என்னும் அடைமொழி கூட்டித் "திரு நீலமலர் ஒண்கண் தேவி" என உணர்த்தப் பெறுதல் காண்க. அவ்வாறே, கருணைத் திறத்தால் நஞ்சு அருந்திய ஈசனார்

செயலைக் குறிக்குமாறு "பெரு நீலமிடற்று அண்ணல்" என உணர்த்தியமையும் காண்க.

1290. வரியாய மலரானும் வையம் தன்னை
உரிதாய அளந்தானும் உள்ளு தற்குஅங்கு
அரியானும் அரிதாய கள்ளின் மேயான்
பெரியான்என்று அறிவார்கள் பேசுவாரே.

தெளிவுரை: அழகியதாகிய தாமரையில் விளங்கும் பிரமனும், உலகத்தைக் காக்கும் தொழில் மேவும் தன்மையில் உரிமை தோன்றியவாறு அளந்த திருமாலும், நினைப்பதற்கு அரியவனாய் வீற்றிருப்பவன் சிறப்பின் மிக்க கள்ளில் என்னும் நகரில் மேவிய பெருமான், என்று அறிஞர்கள் பேசுவர்.

வரியாய மலர் – அழகிய தாமரை மலர்.

1291. ஆச்சியப் பேய்களோடு அமணர் குண்டர்
பேச்சிவை நெறியல்ல பேணுமின்கள்
மாச்செய்த வளவயல் மல்கு கள்ளில்
தீச்செய்த சடையண்ணல் திருந்துஅடியே.

தெளிவுரை: நகைப்பிற்கு இடமளிக்கும் சமணர் முதலானோர் பேச்சுக்கள் நெறியற்றவையாகும். வளம் மிக்க வயல்கள் பெருகும் பெருமையான கள்ளில் என்னும் நகரில் விளங்கும் சிவந்த சடையுடைய அண்ணலாகிய ஈசன் திருவடியைப் பேணித் துதிப்பீராக.

சிறப்புரை: ஈதன்பால் பக்தி மிகும் பேச்சுக்களன்றி நகை தோன்றும் பேச்சுக்களை நீக்க வேண்டும் என உணர்த்தியமை காண்க.

ஆச்சியம் – ஆசியம். நகைப்புக்குரிய சொல்.
தீச்செய்த சடை – செஞ்சடை.

1292. திகைநான்கும் புகழ்காழிச் செல்வ மல்கு
பகல்போலும் பேரொளியான் பந்த னல்ல
முகை மேவு முதிர்சடையன் கள்ளில் ஏத்தப்
புகழோடும் பேரின்பம் புகுதும் அன்றே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: நான்கு திசைகளிலும் புகழ் மல்கும் காழியின் செல்வம் பெருகவும் சூரியனைப் போன்ற பேரொளி படைத்த ஞானசம்பந்தன், நல்ல மணம் தரும் மலர் போன்ற சடையுடையவனாகிய ஈசன் வீற்றிருக்கும் கள்ளில் என்னும் நகரை ஏத்திப் பாடிய இத் திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள், புகழும் பேரின்பமும் அக்கணமே வாய்க்கப் பெறுவார்கள்.

குறிப்பு: "திகை எட்டும் தெரிப்பதற்கு முன்னோ பின்னோ," என வரும் நாவரசர் கூற்றைக் காண்க.

திகை – திசைகள்; பகல் – சூரியன், முகை – அரும்பு, மலர்.

120. திருவையாறு

தல விளக்கம்: *பதிக எண் 36 காண்க*

திருவிராகம்

பண் : வியாழக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1293. பணிந்தவர் அருவினை பற்றறுத்து அருள்செய்த
துணிந்தவன் தோலொடு நூல்துதை மார்பினில்
பிணிந்தவன் அரவொடு பேரெழில் ஆமைகொண்டு
அணிந்தவன் வளநகர் அந்தண் ஐயாறே.

தெளிவுரை: அடியவர்கள்பால் பற்றியுள்ள வினையை நீக்கி அருள் செய்த பரமன், தோலுடை தரித்து, முப்புரி

நூல் பொருந்திய மார்பில், அரவமும் ஆமையின் ஓடும் அணிந்தவன். அப் பெருமானின் வளநகர் என்பது, அழகிய குளிர்ச்சி மிக்க ஐயாறு ஆகும்.

1294. கீர்த்திமிக் கவனகர் கிளரொளி யுடன்அடப்
பார்த்தவன் பனிமதி படர்சடை வைத்துப்
போர்த்தவன் கரியுரி புலியதள் அரவரை
ஆர்த்தவன் வளநகர் அந்தண் ஐயாறே.

தெளிவுரை: ஈசன், கீர்த்தி மிக்கவன்; பகைத்துக் கிளர்ந்து எழுந்த முப்புரத்தை நெருப்பில் எரியுமாறு நோக்கியவன்; குளிர்ந்த சந்திரனை விரிந்த சடையில் வைத்தவன்; யானையின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டவன்; புலியின் தோலையும் அரவத்தையும் அரையில் கட்டியவன். அப்பெருமானுடைய அழகிய குளிர்ச்சி பொருந்திய வளநகரானது ஐயாறு ஆகும்.

அடப் பார்த்தவன் – அழியச் செய்தவன். அரவரை – அரவு அரை.

1295. வரிந்த வெஞ்சிலை பிடித்து அவுணர்தம் வளநகர்
எரிந்துஅற வெய்தவன் எழில்திகழ் மலர்மேல்
இருந்தவன் சிரமது இமையவர் குறைகொள
அரிந்தவன் வளநகர் அந்தண் ஐயாறே.

தெளிவுரை: வரிக்கப் பெற்ற மேருமலையை வில்லாகக் கொண்டு முப்புரங்கள் எரிந்து சாம்பலாகுமாறு சினந்தவனாகிய ஈசனார், எழில் திகழும் தாமரை மலரோனாகிய பிரமனின் ஐந்து சிரங்களில், ஆணவத் தோடு கூடிய உச்சி நோக்கிய சிரத்தினைத் தேவர் களுடைய குறை தீருமாறு கொய்தவர். அப் பெருமானுடைய வள நகரானது குளிர்ச்சி பொருந்திய ஐயாறு ஆகும்.

சிறப்புரை: மேருமலையை வில்லாக வரித்து, முப்புரத்தை எரித்த செய்கையைக் காட்டுமாறு வெஞ்சிலையானது, "வரிந்த" என உணர்த்தப்பட்டது. சாதாரண நிலையில் மேருமலையாகவும் முப்புரத்தை எரிக்கும் ஈசனார் திருவருளால், வரிக்கப் பெற்று வெஞ்சிலை ஆனதும் இவண் சுட்டப் பெறுதல் காண்க.

வரிந்த – வரித்துக் கொள்ளப்பட்ட.

1296. வாய்ந்தவல் லவுணர்தம் வளநகர் எரியிடை
மாய்ந்துஅற வெய்தவன் வளர்பிறை விரிபுனல்
தோய்ந்தெழு சடையினன் தொல்மறை ஆறங்கம்
ஆய்ந்தவன் வளநகர் அந்தண் ஐயாறே.

தெளிவுரை: முப்புரத்தை எரித்த ஈசன், வளர்கின்ற சந்திரனும், பெருக்கெடுத்தோடும் கங்கையும் சடையும் உடையவன்; வேதமும் அதன் அங்கங்கள் ஆறும் ஆய்ந்தவன். அவன் வளநகர் ஐயாறு ஆகும்.

சிறப்புரை: செம்மையற்ற அசுரர்களின் நகரானது எரியின் வளம்கொண்ட நகர் ஆயிற்று என்க.

1297. வானமர் மதிபுல்கு சடையிடை அரவொடு
தேனமர் கொன்றையன் திகழ்தரு மார்பினன்
மான்அன மென்விழி மங்கையொர் பாகமும்
ஆனவன் வளநகர் அந்தண் ஐயாறே.

தெளிவுரை: வானத்தில் விளங்கும் சந்திரனைச் சடையில் வைத்து, அதன் இடையில் அரவமும், கொன்றை மலரும் திகழ விளங்கும் மார்பினனாய், மான் போன்ற விழியுடைய உமையவளை ஒரு பாகத்தில் உள்ளவனின் வளநகரானது, ஐயாறு ஆகும்.

1298. முன்பனை முனிவரோடு அமரர்கள் அடிதொழும்
இன்பனை இணையில இறைவனை எழில்திகழ்
என்பொனை ஏதமில் வேதியர் தாம் தொழும்
அன்பன வளநகர் அந்தண் ஐயாறே.

தெளிவுரை: *யாவர்க்கும் முன்னவனாய் விளங்கும் பழைமையானவனை, முனிவர்களும் தேவர்களும் அடிதொழும் இன்பப் பொருளாகியவனை, இணையில்லா இறைவனாய் உள்ளவனை, எழில் திகழும் என் பொன்போன்ற அழகிய உயர்ந்த பொருளாகியவனை, வேதவிற்பன்னர்கள் தொழும் அன்பனாகிய ஈசனை உரிமையாக உடைய திருத்தலம், ஐயாறு.*

சிறப்புரை: *யாவர்க்கும் முன்பாகிய ஈசனை, "முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே" என மாணிக்கவாசகர் உரைப்பதும் காண்க.*

1299. வன்திறல் அவுணர்தம் வளநகர் எரியிடை
வெந்தற வெய்தவன் விளங்கிய மார்பினில்
பந்தமர் மெல்விரல் பாகம தாகிதன்
அந்தமில் வளநகர் அந்தண் ஐயாறே.

தெளிவுரை: *கொடிய அசுரர்கள் நகரை, எரியின் வளம் பெருகுமாறு வெந்து சாம்பலாக்கித் தீய்த்த ஈசன், உமையவளைப் பாகம் கொண்டு அழிவில்லாத நிலையாய் வீற்றிருக்கும் வளநகரானது, ஐயாறு ஆகும்.*

1300. விடைத்தவல் லரக்கன்நல் வெற்பினை எடுத்தலும்
அடித்தலத் தால்இறை ஊன்றிமற்று அவனது
முடித்தலை தோளவை நெரிதர முறைமுறை
அடர்த்தவன் வளநகர் அந்தண் ஐயாறே.

தெளிவுரை: செருக்கினால் சினங்கொண்ட கொடிய அரக்கனாகிய இராவணன், நன்மை வழங்கும் கயிலை வெற்பினை எடுத்தலும், திருப்பாதத்தால் சிறிது ஊன்றி அரக்கனது கிரீடம் கொண்ட தலையும், தோளும் துன்புற்று வருந்துமாறு அடர்ந்த ஈசன் வளநகரானது, ஐயாறு ஆகும்.

சிறப்புரை: முதிர்ச்சியுறாத அறிவுடையவனாய்ச் செருக்' கொடு ஆர்த்துச் சினந்த இரா்வணனை விடைத்த வல்லரக்கன் என உணர்த்தப்பட்டது.

ஈசன் விளங்கும் தலமாதலும், கயிலையை எடுத்த அரக்கனுக்கும் வரங்கள் நல்கிய சிறப்பும் தோன்ற நல்வெற்பு என்று கயிலை மலையை உணர்த்திய சிறப்பும் காண்க.

எவரை எத்தருணத்தில், எம்முறையில் எவ்விடத்தில் அடர்த்தல் நன்று என அருளும் ஈசன் திருக்குறிப்பின் சிறப்பினைக் காட்டும் வகையில், ஈசனாரை முறைமுறை அடர்த்தவன் எனச் சுட்டப் பெற்றதும் ஓர்க.

இறை – சிறிதளவு. முறைமுறை – ஒழுங்கு முறை, ஈசனார் திருவுளக் குறிப்பு வழி.

1301. விண்ணவர் தம்மொடு வெங்கதி ரோன்நல்
எண்ணிலி தேவர்கள் இந்திரன் வழிபடக்
கண்ணனும் பிரமனும் காண்பரி தாகிய
அண்ணல்தன் வளநகர் அந்தண் ஐயாறே.

தெளிவுரை: எண்ணற்ற தேவர்களுடன் சூரியன், இந்திரன் முதலானோர் வழிபடவும்; திருமாலும், பிரமனும் காண்பதற்கு அரிதாகிய அண்ணலாகிய

ஈசனுடைய வளநகர் குளிர்ச்சி பொருந்திய ஐயாறு ஆகும்.

1302. மருளுடை மனத்துவன் சமணர்கள் மாசறா
இருளுடை இணைத்துவர்ப் போர்வையி னார்களும்
தெருளுடை மனத்தவர் தேறுமின் திண்ணமா
அருளுடை அடிகள்தம் அந்தண் ஐயாறே.

தெளிவுரை: *மருள் உற்ற மனத்தினராகிய சமணர்கள் மாசு நீங்கப் பெறாது ஒரு புறத்தே நிற்க, தெளிந்த மனத்துடையீர்! அருள் தரும் அடிகள் ஐயாற்றில் வீற்றிருப்பவர் என்று திண்ணமாகக் கொள்வீராக.*

1303. நலமலி ஞானசம் பந்தனது இன்தமிழ்
அலைமலி புனல்மல்கும் அந்தண்ஐ யாற்றினைக்
கலைமலி தமிழ்இவை கற்றுவல் லார்மிக
நலமலி புகழ்மிகு நன்மையர் தாமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *நலம் மிக்க ஞானசம்பந்தனது இனிய தமிழால், நீர் வளம் மல்கும் ஐயாற்றைச் சிவஞானம் மிக்க தமிழ்ப் பதிகமாக அருளிச் செய்ய, இதனைக் கற்று வல்லவர் ஆனவர்கள் நலங்கள் பெருகவும், புகழ் மிகுந்து ஓங்கவும் யாவர்க்கும் நன்மை செய்பவராயும் விளங்குவார்கள்.*

கலைமலி – ஞானம் மிக்கு.

121. திருவிடைமருதூர்

தல விளக்கம்: *பதிக எண் 32 காண்க*

திருவிராகம்

பண் : *வியாழக் குறிஞ்சி*

திருச்சிற்றம்பலம்

1304. நடைமரு திரிபுரம் எரியுண நகைசெய்த
படைமரு தழல்எழ மழுவல பகவன்
புடைமருது இளமுகில் வளம்அமர் பொதுளிய
இடைமருது அடையநம் இடர்கெடல் எளிதே.

தெளிவுரை: ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்கு நகர்ந்தும் பறந்தும் இயங்கித் தீமை விளைவித்த திரிபுரமானது, எரியுண்டு சாம்பலாகுமாறு நகை செய்து, அதனையே படையாக்கித் தழல் எழுமாறு ஆக்கி, மழுப் படையை வலக்கரத்தில் ஏந்திய இறைவன் மருதமரங்கள் மேகங்கள் தொடுமாறு ஓங்கி விளங்கும் இடைமருதினைச் சென்றடைய நம் இடரானது எளிதில் கெடும்.

சிறப்புரை: மேருமலையினை வில்லாகக் கொண்டு திருமால் கணையாக விளங்க, திரிபுரத்தை எரிக்கும் நோக்கில் நிலவ, ஈசன் முறுவல் செய்த ஞான்று அதனின்று நெருப்புப் பொறிகள் வெளிப்பட்டு கோட்டைகளை எரித்தன என்ற வரலாற்றை, "எரியுண நகை செய்த" என்பது உணர்த்துவதாயிற்று.

திரிபுரம் நகர்ந்து செல்லும் தன்மையுடையது என்னும்முகத்தால் "நடைமரு திரிபுரம்" எனச் சுட்டப் பெற்றது.

பகவன் – இறைவன், ஈசன்.

1305. மழைநுழை மதியமொடு அழிதலை மடமஞ்ஞை
கழைநுழை புனல்பெய்த கமழ்சடை முடியன்
குழைநுழை திகழ்செவி அழகொடு மிளிர்வதொர்
இழைநுழை புரியணல் இடம்இடை மருதே.

தெளிவுரை: மேகங்களின் ஊடே செல்லும் சந்திரனும், பிரம கபாலமும், கங்கையுடைய சடையும் கொண்டு, குழையணிந்த செவியுடன் முப்புரி நூல் விளங்க மேவும் ஈசன் இடமானது, இடை மருது ஆகும்.

மழை – மேகம்; அழிதலை – கபாலம்; மஞ்ஞை கழை நுழைபுனல் – மயில்கள் மூங்கில்களின் இடையில் புகுந்திருக்க நுழையும் புனல் கங்கைக்குச் சாற்றும் அடைமொழி. இழை நுழைபுரி – பூணூல். அணல் – அண்ணல்.

1306. அருமையன் எளிமையன் அழல்விட மிடறினன்
கருமையின் ஒளிபெறு கமழ்சடை முடியன்
பெருமையன் சிறுமையன் பிணைபெணொடு ஒருமையின்
இருமையும் உடையணல் இடம் இடை மருதே.

தெளிவுரை: ஈசன், அரியனாகவும், எளியனாகவும், நீல மணியைக் கண்டத்தில் உடையவனாகவும், பெருமை யான ஒளிமிக்க சடையுடையவனாகவும் விளங்கு பவன். பெரிய அண்டமாகி யாவற்றுக்கும் பெரியவனாகவும், யாவற்றுக்கும் சிறிய நுண்பொரு ளாயும் விளங்கும் அப்பெருமான், பிணைத்துத் தம் அங்கத்தில் ஒரு கூறாக உள்ள தேவியுடன் சேர்ந்து அர்த்தநாரியாகவும், சிவன்–சக்தி என இரு வடிவமாயும் உடைய அண்ணல். அவனுடைய இடம் இடை மருது ஆகும்.

கருமை – பெருமை.

1307. பொரிபடு முதுகுற முளிகளி புடைபுல்கு
நரிவளர் சுடலையுள் நடமென நவில்வோன்
வரிவளர் குளிர்மதி ஒளிபெற மிளிர்வதொர்
எரிவளர் சடையணல் இடம்இடை மருதே.

தெளிவுரை: நரிகள் சூழும் சுடுகாட்டில் நடம் புரிபவ னாகிய ஈசன், அழகிய கலைகள் பெருகும் குளிர்ந்த

சந்திரனின் ஒளியைப் பெருகச் செய்யுமாறு, ஒளியை வழங்கும் சோதி வடிவான சிவந்த சடையுடைய அண்ணல் ஆவர். அவர் வீற்றிருக்கும் இடம் இடை மருது ஆகும்.

1308. வருநல மயிலன மடநடை மலைமகள்
பெருநல முலையிணை பிணைசெய்த பெருமான்
செருநல மதில்எய்த சிவன்உறை செழுநகர்
இருநல புகழ்மல்கும் இடம்இடை மருதே.

தெளிவுரை: மயில் போன்ற சாயலும், அன்னம் போன்ற நடையும் கொண்ட மலைமகள் உடனாக விளங்கச் செய்த பெருமான், முப்புரத்தை எரியுமாறு செய்த சிவன், அவன் உறையும் செழுநகர் இம்மை, மறுமை ஆகிய இருவகை நலத்தின் புகழ் மல்கும் இடைமருது ஆகும்.

செருநலம் – செற்றதனால் மன்னுயிர்களுக்கு விளைந்த நலம்.

1309. கலையுடை விரிதுகில் கமழ்குழல் அகில்புகை
மலையுடை மடமகள் தனைஇடம் உடையோன்
விலையுடை அணிகலன் இலன்என மழுவினோடு
இலையுடை படையவன் இடம்இடை மருதே.

தெளிவுரை: கலை வண்ணம் உடைய ஆடையும், அகிலின் புகை கமழும் கூந்தலும் உடைய உமையவளை இடப்பாகத்தில் கொண்ட ஈசன், விலை மதிப்புள்ள அணிகளைக் கொள்ளாது, மழுவும் சூலப் படையும் கொண்டுள்ளான். அப்பெருமானின் இடம், இடை மருது ஆகும்.

1310. வளம்என வளர்வன வரிமுரல் -பறவைகள்
இளமணல் அணைகரை இசைசெயும் இடைமருது

உளம்என நினைபவர் ஒலிகழல் இணையடி
குளம்அணல் உறமூழ்கி வழிபடல் குணமே.

தெளிவுரை: இடை மருது என்னும் திருத்தலமானது வளமுடையது என்றும், நாம் வாழ்வதற்கு ஏற்ற இடம் என்றும், அழகிய பறவைகள் மற்றும் வண்டுகள் அணைந்து ஒலித்து இசைக்க, அத்தகைய தலத்தில் உள்ளோம் எனும் மகிழ்ச்சியுடன் உள்ள மக்கள், ஒலிக்கும் வீரக்கழல் அணிந்த ஈசன் திருவடியை நினைத்துத் திருக்குளத்தில் கழுத்தளவு படிந்து மூழ்கி நீராடி வழிபடுவது சிறப்பாகும். (புனித தீர்த்தத்தில் நீராடும் சிறப்பு உணர்த்தப் பெற்றது.)

அணல் – கழுத்து.

1311. மறையவன் உலகவன் மதியவன் மதிபுல்கு
துறையவன் எனவல அடியவர் துயரிலர்
கறையவன் மிடறது கனல்செய்த கமழ்சடை
இறையவன் உறைதரும் இடம்இடை மருதே.

தெளிவுரை: ஈசனை, வேதநாயகன், உலகமே அவனாகியவன், அறிவு ஆனவன், சந்திரனைச் சூடிய வன் என்று சொல்லவல்ல அடியவர்கள், துயர் அற்றவர் ஆவர். நீலகண்டத்தை உடையவனாய்த் தழல் போன்ற சிவந்த சடையுடைய இறைவனாகிய அப்பெருமான் உறையும் இடமானது, இடை மருது ஆகும்.

எனவல – என்று உறுதியாகப் பற்ற வல்ல.

1312. மருதிடை நடவிய மணிவணர் பிரமரும்
இருதுடை யகலமொடு இகலினர் இனதுஎனக்
கருதிடல் அரியதொரு உருவொடு பெரியதொர்
எருதுடை யடிகள்தம் இடம்இடை மருதே.

தெளிவுரை: *மருத மரத்தின் இடையில் உரலோடு நடை பயின்ற மணிவண்ணனாகிய திருமாலும், பிரமனும் பூமிக்கடியிலும் மேலே வானத்தை நோக்கியும் இரு பக்கங்களிலும் அகன்று சென்று தேடியும், இன்னது எனக் கருதுவதற்கு இயலாது நிற்கப் பேருருவாகிய ஈசன், இடப வாகனத்துடன் விளங்கும் இடமானது, இடை மருது ஆகும்.*

1313. துவருறு விரிதுகில் உடையரும் அமணரும்
அவர்உறு சிறுசொலை நயவன்மின் இடுமணல்
கவருறு புனலிடை மருதுகை தொழுதுஎழும்
அவருறு வினைகெடல் அணுகுதல் குணமே.

தெளிவுரை: *நீண்ட துவராடை கொண்ட பௌத்தரும், சமணரும் கூறும் சிறுமையான சொற்களைக் கொள்ளற்க. இடை மருது உறையும் நாதனைத் தொழு பவர்கள் தாம் உற்ற வினையிலிருந்து நீங்கப் பெறுவர்.*

1314. தடமலி புகலியர் தமிழ்கெழு விரகினன்
இடமலி பொழிலிடை மருதினை இசைசெய்த
படமலி தமிழ்இவை பரவவல் லவர்வினை
கெடமலி புகழொடு கிளரொளி யினரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *தமிழ் விரும்பியவனாகிய புகலியின் ஞான சம்பந்தன், இடை மருதினை இசைத்த இத் திருப்பதி கத்தைப் பரவிப் பாட வல்லவர்கள், வினை யாவும் கெட, புகழும் ஒளியும் பெற்றவர் ஆவர்.*

122. திருவிடைமருதூர்

தல விளக்கம்: *பதிக எண் 32 காண்க.*

திருவிராகம்

பண் : *வியாழக் குறிஞ்சி*

திருச்சிற்றம்பலம்

1315. விரிதரு புலியரி விரவிய அரையினர்
திரிதரும் எயிலவை புனைகணை யினில்எய்த
எரிதரு சடையினர் இடைமருது அடைவுனல்
புரிதரு மனனவர் புகழ்மிக உளதே.

தெளிவுரை: ஈசன், புலித் தோலை ஆடையாகக் கொண்டவர்; முப்புரத்தை எரித்தவர்; நெருப்புப் போன்ற சிவந்த சடைமுடி உடையவர். அப்பெருமான் வீற்றிருக்கும் இடைமருதினை அடைய வேண்டும் என்று நினைக்கும் மனம் உடையவர்களுக்கு, மிகுந்த புகழ் உண்டு.

அடைவுனல் – அடைய வேண்டும் என்று நினைத்தல்.

1316. மறிதிரை படுகடல் விடம்இடை மிடறினர்
எறிதிரை கரைபொரும் இடைமருது எனுமவர்
செறிதிரை நரையொடு செலவிலர் உலகினில்
பிறிதிரை பெறும்உடல் பெறுகுவது அரிதே.

தெளிவுரை: கடலில் தோன்றிய விடத்தை மிடற்றின் இடையில் வைத்த ஈசனுடைய இடமானது, இடை மருது என்று சொல்பவர்கள் மூப்பினை உணர்த்தும் நரை, திரை ஆகியவற்றை நீத்தவராயும், உலகினில் மறுபிறவி கொண்டு உடல் வளர்க்கும் நிலையும் அற்றவராயும் திகழ்வர். மீண்டும் பிறவாமையாகிய செல்வம் வாய்க்கப்பெறும் என்பதாம்.

பிறிதிரை – பிறிது இரை. (உணவு). உடன். பெறுகுவது – மீண்டும் பிறப்பது.

1317. சலசல சொரிபுனல் சடையினர் மலைமகள்
நிலவிய உடலினர் நிறைமறை மொழியினர்
இலர்என இடுபலி யவர்இடை மருதினை
வலமிட உடல்நலிவு இலதுள வினையே.

தெளிவுரை: *சலசல என்று சொரியும் கங்கையைச் சடையில் கொண்ட ஈசன், மலைமகளை ஒரு பாகமாக உடையவர்; நிறைவாகிய வேத மொழியினர்; பலி இடுமின் என்று யாசிப்பவர். அவர் வீற்றிருக்கும் இடை மருதை வலம் வருதலானது, உடல் நலிவைத் தீர்த்து, வினை அற்றதாக்கும்.*

சிறப்புரை: *ஈசன், "மறை மொழியினர்" என்பதனை, "வேத மொழியர், வெண்ணீற்றர், செம்மேனியர்" என வரும் மாணிக்கவாசகர் மொழியாலும் காண்க.*

1318. விடையினர் வெளியதொர் தலைகலன் எனநனி
கடைகடை தொறுபலி யிடுகென முடுகுவர்
இடைவிடல் அரியவர் இடைமருது எனுநகர்
உடையவர் அடியிணை தொழுவதுஎம் முயர்வே.

தெளிவுரை: *ஈசன், இடப வாகனத்தினர்; பிரம கபாலம் ஏந்தி உண்கலனாகக் கொண்டு வீதிதோறும் சென்று பிச்சை விழைபவர்; மன்னுயிர்களால் இடையறாது தியானிக்கப்படுபவர்; இடைமருது என்னும் நகருக்கு உரியவர். அவர்தம் இணையடியைத் தொழுவது, எமக்கு உயர்வைத் தரும் – இம்மையில் புகழும் மறுமையில் முத்திப்பேறும் ஆகும் என்பதாம்.*

வெளியதோர் தலை – மண்டையோடு. கலன் – உணவு கொள்ளும் பாத்திரம். முயர்வு – உயர்வு – மேன்மை, சிறப்பு, உயர்ச்சி. சந்தம் நோக்கி மகரம் மிகுந்தது.

1319. உரையரும் உருவினர் உணர்வரு வகையினர்
அரைபொரு புலியதள் உடையினர் அதன்மிசை
இரைமரும் அரவினர் இடைமருது எனஉளம்
உரைகள்அது உடையவர் புகழ்மிக உளதே.

தெளிவுரை: *ஈசன், உரைகளால் விளக்கிக் கூறமுடியாத வாறு திருவடிவத்தை உடையவர்; மனத்தால் - சிந்தனையால், உணர்ந்து கொள்வதற்கு அரியவர்; அரையில் புலியின் தோலை ஆடையாக உடையவர்; புலித்தோலாடையின் மேல் அரவத்தைக் கட்டி யுள்ளவர். அப்பெருமான் விளங்கும் இடைமருது என உள்ளத்தால் ஒன்றி உரைத்துத் தியானம் செய்பவர் களுக்கு, மிக்க புகழ் உண்டாகும்.*

1320. ஒழுகிய புனல்மதி அரவமொடு உறைதரும்
அழகிய முடியுடை அடிகளது அறைகழல்
எழிலினர் உறைஇட மருதினை மலர்கொடு
தொழுதல்செய்து எழுமவர் துயர்உறல் இலரே.

தெளிவுரை: *ஒழுகும் புனலாகிய கங்கையும், சந்திரனும், அரவமும் உறையும் அழகிய சடை முடியுடைய அடிகளின் கழலினையும், அவ் எழிலினரின் உறை விடமாகிய இடை மருதினையும், மலர் கொண்டு தொழுபவர்களுக்குத் துயர் இல்லை.*

1321. கலைமலி விரலினர் கடியதொர் மழுவொடும்
நிலையினர் சலமகள் உலவிய சடையினர்
மலைமகள் முலையிணை மருவிய வடிவினர்
இலைமலி படையவர் இடம்இடை மருதே.

தெளிவுரை: *ஈசர், கலைத்தன்மை மிக்கு தோன்ற வீணை மீட்டிய விரலையுடையவர்; மழுப்படை உடையவர்; கங்கை உலவிய சடையுடையவர்; மலைமகளை*

மருவிய வடிவத்தை உடையவர்; சூலப்படை உடையவர். அவருடைய இடமானது இடைமருது ஆகும்.

இலைமலி படை – சூலம்.

1322. செருவுஅடை யிலவல செயல்செயத் திறலொடும்
அருவரை யினில்ஒரு பதுமுடி நெரிதர
இருவகை விரல்நிறி யவர்இடை மருதது
பரவுவர் அருவினை ஒருவுதல் பெரிதே.

தெளிவுரை: போர் செய்யும் தன்மையின்றி, வலிமை செய்யும் திறத்துடன் திண்ணிய மலையை எடுத்த அரக்கனின் உடல் வலிமையும் உள்ளத்தின் செருக்கும் கெடுமாறு, திருப்பாத விரலால் நிறுத்தியவராகிய ஈசனார் வீற்றிருக்கும் இடைமருதினைப் பரவித் தொழுபவர்கள், அருவினையானது நீங்குதல் பெரிதாகுமோ! வினை நீங்குதல் எளிது என்பது குறிப்பு.

1323. அரியொடு மலரவன் எனஇவர் அடிமுடி
தெரிவகை யரியவர் திருவடி தொழுதெழ
எரிதரும் உருவர்தம் இடைமருது அடைவுறல்
புரிதரு மனனவர் புகழ்மிக உளதே.

தெளிவுரை: திருமாலும் பிரமனும் அடிமுடி தெரியாத வகையில் அரியவராகிய ஈசனார் திருவடியைத் தொழுது எழ, சோதி வடிவாகிய அப்பெருமானுடைய இடை மருது நகரை அடைதல் வேண்டும் என்னும் மனத்தை உடையவர்கள், புகழ் பெறுவர்.

1324. குடைமயி லினத்தழை மருவிய உருவினர்
உடைமரு துவரினர் பலசொல வுறவிலை

அடைமரு திருவினர் தொழுதுஎழு கழலவர்
இடைமருது எனமன நினைவதும் எழிலே.

தெளிவுரை: *குடையும், மயிற் பீலியும், மருவிய துவர் ஆடையும் கொண்டவர்கள் பல சொற்களைப் புறம் பாகக் கூற, அவற்றை உற்றவையாகக் கொள்ளற்க. திருவுடைய சீலர்களாய்த் தொழுது எழும் கழலை யுடைய ஈசன் வீற்றிருப்பது, இடைமருது என மனத்தால் நினைப்பது எழில் ஆகும்.*

1325. பொருகடல் அடைதரு புகலியர் தமிழொடு
விரகினன் விரிதரு பொழிலிடை மருதினைப்
பரவிய ஒருபது பயிலவல் லவர்இடர்
விரவிலர் வினையொடு வியன்உலகு உறவே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *கடற்கரையின் அடைவு தரும் புகலியில், தமிழ் விரும்பியவனாகிய ஞானசம்பந்தர், பொழில் திகழ் இடை மருது தலத்தைப் பரவிய இத் திருப்பதிகத்தை ஓத வல்லவர்களுக்கு, இடர் என்பது இல்லை; வினையில்லை; பெருமை மிக்க தேவர் உலகு வாய்க்கப் பெறும்.*

123. திருவலிவலம்

தல விளக்கம்: *பதிக எண் 50 காண்க*

திருவிராகம்

பண் : *வியாழக் குறிஞ்சி*

திருச்சிற்றம்பலம்

1326. பூவியல் புரிகுழல் வரிசிலை நிகர்நுதல்
ஏவியல் கணைபிணை எதிர்விழி உமையவள்

மேவிய திருவுரு உடையவன் விரைமலர்
மாவியல் பொழில்வலி வலமுறை இறையே.

தெளிவுரை: *மலர்களால் பின்னப்பட்ட சுருண்ட கூந்தலும், அழகிய வில் போன்ற நெற்றியும் அம்பினை யொத்த விழியும் கொண்ட உமையவள், பாகத்தில் பொருந்திய திருவடிவத்தை உடையவனாகிய ஈசன், நறுமண மலர் சிறப்பாக விளங்கும் பொழிலையுடைய வலிவலத்தில் உறையும் கடவுள்.*

ஏ – அம்பு. மாவியல் – சிறப்பாக விளங்குதல்.

1327. இட்டம தமர்பொடி இசைதலில் நசைபெறு
பட்டவிர் பவளநன் மணியென அணிபெறு
விட்டொளிர் திருவுரு உடையவன் விரைமலர்
மட்டமர் பொழில்வலி வலமுறை இறையே.

தெளிவுரை: *விருப்பத்துடன் திருநீறு இசைய அணிந்து, சிவந்த திருமேனியுடையவராகிய ஈசன், பட்டு அணிந்த பவளம் போன்ற திருவுருவுடையவராய், மணம் பொருந்திய பொழில்சூழ் வலிவலத்தில் உறை கின்ற இறைவர் ஆவர்.*

பொடி – திருநீறு.

1328. உருமலி கடல்கடை வுழிஉலகு அமர்உயிர்
வெருவுறு வகையெழு விடம்வெளி மலையணி
கருமணி நிகர்களம் உடையவன் மிடைதரு
மருமலி பொழில்வலி வலம்உறை இறையே.

தெளிவுரை: *பாற்கடலைக் கடைந்தபோது, உலகத்தின் உயிர்கள் யாவும் அஞ்சுமாறு எழுந்த விடத்தை வெள்ளி மலையில் கருமணி ஒளிர்வதைப் போன்று, தன் சிவந்த திருமேனியில் கறை கொள்ள மிடற்றில் தேக்கி, நீலகண்டனாய் விளங்கும் ஈசன், மணம் திகழ்*

பொழில்கள் நெருங்கித் திகழும் வலிவலத்தின்கண் உறையும் இறைவனாகும்.

மிடை தரு – நெருக்கமாக; மரு – வாசனை, மணம்.

1329. அனல்நிகர் சடையழல் அவியுற எனவரு
புனல்நிகழ் வதுமதி நனைபொறி யரவமும்
எனநினை வொடுவரும் இதுமெல முடிமிசை
மனமுடை யவர்வலி வலமுறை இறையே.

தெளிவுரை: அனலை நிகர்த்த சடையின் அழலைக் குளிரச் செய்யும் காட்சியைப் போன்று, கங்கையானது மிகுந்து தோன்றவும், அதில் விளங்கும் அரவமும், மதியை விழுங்க நேர்க்கவும், இதன் இயல்புகளைக் கண்ட ஈசன், அச்சிந்தையுடையவராய் விளங்குபவர். அவர் வலிவலத்தில் உறையும் கடவுள் ஆவர்.

சிறப்புரை: தன்னியல்பில் நீரும் நெருப்பும் மற்றும் சந்திரனும் அரவும் ஒன்றுக்கொன்று பகையுடைமை யாயினும், ஈசன் அருள் பகையொழிந்த நிலையில் ஆற்றவல்லது என உணர்த்தப்பட்டது.

இது நீர்க்குடம் தலையில் ஏந்தியவர்தம் சிந்தனை போன்று நயம் தோன்ற கூறப்பட்டதாம்.

1330. பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர்இடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம்உறை இறையே.

தெளிவுரை: உமாதேவி பெண் யானை வடிவம் கொண்டு மேவ, ஆண் யானை வடிவம் தாங்கி, அடியவர் தம் இடர் போக்கும் கணபதிநாதன் தோன்றுமாறு அருள் புரிந்த ஈசன், மிகுந்த வள்ளல்

தன்மை மிக்க சிறந்தவர் வாசம் புரியும் வலிவலத்தில் உறைகின்ற இறையாவார்.

இடர்கடி கணபதி – மணம் போன்று இனிமை தோன்ற இடர் நீக்கும் கணபதி.

குறிப்பு: இக்கருத்தமைந்த பாடல் – விநாயகக் கடவுள் அவதாரக் குறிப்பு, பதிகம் எண் 77 பாடல் எண் 833இல் வருதல் காண்க.

1331. தரைமுதல் உலகினில் உயிர்புணர் தகைமிக
விரைமலி குழல்உமை யொடுவிர வதுசெய்து
நரைதிரை கெடுதகை யதுஅரு ளினன்எழில்
வரைதிகழ் மதில்வலி வலம்உறை இறையே.

தெளிவுரை: பூவுலக முதல்கொண்டு உலகம் யாவையும் உயிர்கள் போகியாய் நிற்றல் பொருட்டு, உமாதேவி யோடு விரவி இருந்து, தன்னைத் தொழுபவர்களுக்கு நரை திரை முதலானவை கெடுமாறு அருள் புரிபவன், எழில் மிக்க மதில்களையுடைய வலிவலம் என்னும் பதியில் உறைகின்ற இறைவன்.

சிறப்புரை: ஈசன் உமாதேவி சகிதம் விளங்கவில்லை யாயின் மன்னுயிர்கள் யாவும் யோகத்தில் நிற்க, உலக இயக்கம் திரியும் என உணர்த்தப் பெற்றது. இந்நெறி யில், "பெண்பால் உகந்திலனேல் பேதாயிரு நிலத்தோர் விண்பாலியோகு எய்தி வீடுவர்காண் சாழலோ" என மாணிக்கவாசகர் உரைப்பதும் நோக்குக.

1332. நலிதரு தரைவர நடைவரும் இடையவர்
பொலிதரு மடவர லியர்மனை யதுபுகு
பலிகொள வருபவன் எழில்மிகு தொழில்வளர்
வலிவரு மதில்வலி வலம்உறை இறையே.

தெளிவுரை: தரையில் நடந்து செல்லுதற்கும் அரியவராய் மென்மையான இடையை உடைய மாதர்கள் மனை சென்று பிச்சையேற்க வருபவன், எழில் மிக்க தொழில் பெருகவும் வலிவான மதில் உடையதும் ஆகிய வலிவலத்தில் உறையும் இறைவன் ஆவார்.

மடவரலியர் – மாதர்கள்; தாருக வனத்து முனி பத்தினிகள்.

1333. இரவணன் இருபது கரம்எழில் மலைதனில்
இரவண நினைதர அவன்முடி பொடிசெய்து
இரவணம் அமர்பெயர் அருளின னகநெதி
இரவண நிகர்வலி வலமுறை இறையே.

தெளிவுரை: இராவணன், தனது இருபது கரங்களைக் கொண்டு எழிலார்ந்த கயிலை மலையை இல்லாத வண்ணம் (இராவணம்) நினைத்துப் பெயர்க்க, அவன் முடியைப் பொடியாக்கி நசித்து, அவன் கலங்கி அழ, இராவணன் என்னும் பெயரானது விளங்குமாறு (இராவணன் – அழுதவன்) செய்து அருளித் திருபாதத்தின் நுனியால் வருத்தி, இரந்து (இரவு கொண்டு) அணைந்து வேண்டும் அடியவர்க்கு அருள் புரிபவன், வலி வலம் உறையும் இறைவன்.

1334. தேனமர் தருமலர் அணைபவன் வலிமிகும்
ஏனம தாய்நிலம் அகழ்அரி அடிமுடி
தான்அணை யாவுரு வுடையவன் மிடைகொடி
வானணை மதில்வலி வலமுறை இறையே.

தெளிவுரை: தேனமர் தாமரையில் உறையும் பிரமனும், வலிமை மிகுந்த ஏனமாய் நிலம் அகழ்ந்த திருமாலும், அடி முடி காணாதவராய் விளங்கிய ஈசன், உயர்ந்த மதில்களை உடைய வலிவலத்தில் உறையும் இறையே.

1335. இலைமலி தரமிகு துவருடை யவர்களும்
நிலைமையில் உணலுடை யவர்களு நினைவது
தொலைவலி நெடுமறை தொடர்வகை உருவினன்
மலைமலி மதில்வலி வலமுறை இறையே.

தெளிவுரை: *துவராடை கொண்ட பௌத்தர்களும், உணவினைப் பொருட்டாக உடையவர்களும், பகர்தலை விடுமின். வேதம் தேடித் தொடரும் தன்மையனாய் மதில் சூழ்ந்த வலிவலம் மேவிய இறைவனை ஏத்துமின்.*

1336. மன்னிய வலிவல நகருறை இறைவனை
இன்னியல் கழுமல நகரிறை எழில்மறை
தன்னியல் கலைவல தமிழ்விர கனதுரை
உன்னிய ஒருபதும் உயர்பொருள் தருமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *சிறப்பு மிக்க வலிவல நகரில் உறையும் இறைவனை, இனிய இயல்கொள்ளும் கழுமல நகர் இறையின் – எழில் மறையின் ஞானம் வல்ல தமிழ் விரகனாகிய ஞானசம்பந்தன், நினைத்து ஓதிய இத்திருப்பதிகத்தை ஓதுபவர்களுக்கு உயர்ந்த பொருள் கைகூடும்.*

124. திருவீழிமிழலை

தல விளக்கம்: *பதிக எண் 4 காண்க*

திருவிராகம்

பண் : *வியாழக் குறிஞ்சி*

திருச்சிற்றம்பலம்

1337. அலர்மகள் மலிதர அவனியில் நிகழ்பவர்
மலர்மலி குழலுமை தனையிட மகிழ்பவர்

நலமலி உருவுடை யவர்நகர் மிகுபுகழ்
நிலமலி மிழலையை நினையவ லவரே.

தெளிவுரை: மலர் போன்ற கூந்தலையுடைய உமையவளைத் தனது இடப்பாகத்தில் கொண்டு மகிழும் நல்ல வடிவம் . பொருந்திய ஈசன் விளங்கும் நகரானது, பூவுலகில் மிக்க புகழைக் கொண்ட மிழலையாகும். அதனை நினைக்க வல்லவர்கள், மலர்மீது வாசம் புரியும் திருமகளின் அம்சமாக, உலகில் செல்வம் மிக்கு விளங்குவார்கள்.

சிறப்புரை: "அவனருளாலே அவன்தாள் வணங்குதலே ஒல்லும்" என்பதனால் மிழலையை, நம் மனமானது இயல்பாக நினையப் பெறாமல் உள்ளதும், ஈசன் அருள் கூடுங்காலத்தில் அன்றி நினைதற்கு அரியது எனவும், தெளிவுபடுத்துதல் "நினைய வலவரே" என்று உணர்த்தியதாயிற்று.

எல்லா நலன்களையும் ஈசன், தானே புரிவதும், புரிவிப்பதும் தோன்றுமாறு, திருமகளைக் கொண்டு தமது அடியவர்களுக்கு செல்வத்தினை வழங்குகின்றான் என்பதும், இவண் உணர்த்தப்படுகிறது.

அலர்மகள் – திருமகள். வலவர் – வல்லவர்.

1338. இருநிலம் இதன்மிசை எழில்பெறும் உருவினர்
கருமலி தருமிகு புவிமுதல் உலகினில்
இருளது மதியினர் இமையவர் தொழுதெழு
நிருபமன் மிழலையை நினையவ லவரே.

தெளிவுரை: பிறப்பின் வயப்பட்டு கன்மத்தை நுகரும் தன்மையால் விளங்கும் புவியாக உள்ள இந்த உலகத்தில் இருளற்ற மனத்தினராகிய ஞானிகளும், தேவர்களும் தொழுது எழும் சிறப்பினை உடைய

மிழலையை நினைத்து வணங்குபவர்கள், உலகில் எழில் மிக்க வடிவழகு உடையவராவர்.

இருநிலம் – உலகு; உருவினர் – அழகுடையவர். கருமலி – பிறப்பின் தன்மை; கிருபம் – சிறப்பு, மேன்மை.

1339. கலைமகள் தலைமகன் இவன்என வருபவர்
அலைமலி தருபுனல் அரவொடு நகுதலை
இலைமலி யிதழியு மிசைதரு சடையினர்
நிலைமலி மிழலையை நினையவ லவரே.

தெளிவுரை: *கங்கையும், அரவமும், மண்டை ஓடும், கொன்றை மலரும் பொருந்திய சடையும் உடைய ஈசன் நிலைபெறும் மிழலையை நினைத்து வணங்கு பவர்கள், கலைமகள் தலைவராகிய பிரமனைப் போன்று கல்வி மிக்கவர் ஆவர்.*

சிறப்புரை: *கல்விக்குத் தலைமையாகிய தேவி, கலை மகள் ஆனமையால், அத்தேவியின் தலைமகனாய்க் கலைகள் யாவும் கைவரப் பெற்றவர் ஆவர் என்பதாம்.*

இதழி – கொன்றை மலர்.

1340. மாடமர் சனமகிழ் தருமனம் உடையவர்
காடமர் கழுதுகள் அவைமுழ வொடுமிசை
பாடலில் நவில்பவர் மிகுதரும் உலகினில்
நீடமர் மிழலையை நினையவ லவரே.

தெளிவுரை: *சுடுகாட்டில் பேய்கள் முழவும், பாடலும் இசைக்க, நடம் புரியும் பெருமான், உலகில் நெடிது விளங்கும் மிழலையை, நினைக்க வல்லவர்கள் சுற்றங் கள் சூழ அன்பு மிக்கவராய் விளங்குவார்கள்.*

1341. புகழ்மகள் துணையினர் புரிகுழல் உமைதனை
இகழ்வுசெய் தவனுடை எழில்மறை வழிவளர்

முகமது சிதைதர முனிவுசெய் தவன்மிகு
நிகழ்தரு மிழலையை நினையவ லவரே.

தெளிவுரை: *உமாதேவியை இகழ்ந்த பிரமனுடைய ஐந்து சிரங்களில் ஒன்றைக் கொய்த பெருமானாகிய ஈசன் வீற்றிருக்கும் மிழலையை நினையவல்லவர்கள், புகழுடன் விளங்குவார்கள்.*

1342. அன்றினர் அரியென வருபவர் அரிதினில்
ஒன்றிய திரிபுரம் ஒருநொடி யினில்எரி
சென்றுகொள் வகைசிறு முறுரல்கொடு ஒளிபெற
நின்றவன் மிழலையை நினையவ லவரே.

தெளிவுரை: *திரிபுரமானது ஒரு நொடியில் எரிந்து சாம்பலாகுமாறு, சென்று அடையும் தன்மை கொண்ட சிறு முறுவல் செய்து, ஒளி பெற நின்றவனாகிய ஈசனது மிழலையை நினைய வல்லவர்கள், பகைவர்களுக்குச் சிங்கம் போன்று கம்பீரமாக எதிர் நின்று விளங்குவார்கள்.*

அன்றினர் – மாற்றார், பகைவர். சிறு முறுவல் – முப்புரம் எரியுமாறு ஈசன் புரிந்த புன்னகை.

1343. கரம்பயில் கொடையினர் கடிமலர் அயனதொர்
சிரம்பயில்வு அறஎறி சிவன்உறை செழுநகர்
வரம்பயில் கலைபல மறைமுறை யறநெறி
நிரம்பினர் மிழலையை நினையவ லவரே.

தெளிவுரை: *மலர்மேல் உறையும் பிரமனின் ஒரு சிரத்தினை, அதன் இயல்பினை அறுமாறு அரிந்து எறிந்த சிவபெருமான் உறையும் செழுமையான நகரானது, மேன்மைகள் பல விளங்கும் வேதங்களை முறையாகப் பயின்றும், அறநெறி நிரம்பப் பெற்றவர்*

களும் வாழும் மிழலை. அதனை நினைய வல்லவர், கொடை மிகு கரத்தராய் விளங்குவார்கள்.

1344. ஒருக்கிய உணர்வினொடு ஒளிநெறி செலும்அவர்
அரக்கனன் மணிமுடி ஒருபதும் இருபது
கரக்கன நெரிதர மலரடி விரல்கொடு
நெருக்கினன் மிழலையை நினையவ லவரே.

தெளிவுரை: *அரக்கனாகிய இராவணன் மணி முடிகள் பத்தும், இருபது கரங்களும் நெரியுமாறு, திருப்பாத விரலால் ஊன்றியவன் உறையும் மிழலையை நினைக்க வல்லவர்கள், ஒன்றிய சிந்தனை உடையவர்களாய், ஞானம் திகழப் பெறுவார்கள்.*

ஒளி நெறி – ஞானம்.

1345. அடியவர் குழுமிட அவனியில் நிகழ்பவர்
கடிமலர் அயன்அரி கருதரு வகைதழல்
வடிவுரு இயல்பினொடு உலகுகள் நிறைதரு
நெடியவன் மிழலையை நினையவ லவரே.

தெளிவுரை: *பிரமனும் திருமாலும் கருதுதற்கு அரியவனாகிச் சோதி வடிவமாய் உலகம் யாவையும் நிறைந்து கலந்தவனாகிய ஈசனின் மிழலையை நினைக்க வல்லவர்கள், அடியவர்கள் கூட்டத்தில் இணைந்து உலகில் மகிழ்வார்கள்.*

1346. மன்மதன் எனஒளி பெறுமவர் மருதமர்
வன்மலர் துவருடை யவர்களு மதியிலர்
துன்மதி அமணர்கள் தொடர்வரு மிகுபுகழ்
நின்மலன் மிழலையை நினையவ லவரே.

தெளிவுரை: *காவி அணிந்தவர்களும் சமணர்களும் தொடர்ந்து வணங்குவதற்கு அரியவனாய், மிகுந்த புகழையுடைய நினைந்து போற்ற வல்லவர், மன்மதன்*

என்று சொல்லப்படும் பேரழகு உடையவர்கள் ஆவார்கள்.

ஒளி – அழகு.

1347. நித்திலன் மிழலையை நிகரிலி புகலியுள்
வித்தக மறைமலி தமிழ்விர கனமொழி
பத்தியில் வருவன பத்திவை பயில்வொடு
கற்றுவல் லவர்உல கினில்அடி யவரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: முத்தனாகிய ஈசன் விளங்கும் மிழலையை, நிகரற்ற புகலியில், வேதமும் ஞானமும் வல்ல தமிழ் விரகனாகிய ஞானசம்பந்தன், பத்திப் பெருக்கினால் அருளிய இத் திருப்பதிகத்தை, மனத்தில் பதித்து ஓத வல்லவர்கள், உலகத்தில் அடியார் பெருமக்களாய் விளங்குவார்கள்.

சிறப்புரை: பதிகம் முழுமையும் பதினாறு பேறுகளை முழுமையாக அளிக்கவல்லவாறு அருளிச் செய்தமையும், யாவற்றுக்கும் மேலாக – மகுடமாக விளங்குதல், அடியவர் ஆதல் என்பதனைச் சுட்டுமாறு அதன் சிறப்பினைத் திருக்கடைக் காப்பாக உரைத்தமையும் காண்க.

"தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்னும் வாக்கும் நோக்குக. முற்பாடல்களில் இம்மையில் காணும் நலன்களைப் புகன்ற ஆளுடைய பிள்ளையார், திருக்கடைக்காப்பில் உணர்த்திய இம்மை நலனும், அதனுரிமை பூண்ட சிவப்பேற்றின் சிறப்பும் ஓர்க.

நித்திலம் – முத்து. தமிழ் விரகன் – தமிழ் விரும்புபவன்; தமிழ் – இனிமை.

125. திருச்சிவபுரம்

தல விளக்கம்: *பதிக எண் 21 காண்க*

திருவிராகம்

பண் : *வியாழக் குறிஞ்சி*

திருச்சிற்றம்பலம்

1348. கலைமலி அகல்அல்குல் அசிவைதன் உருவினன்
முலைமலி தருதிரு உருவமது உடையவன்
சிலைமலி மதில்பொதி சிவபுர நகர்தொழ
இலைநலி வினையிரு மையும்இடர் கெடுமே.

தெளிவுரை: *உமையவளைக் கூறாகக் கொண்டு காட்சி தரும் அந்த்தநாரியானவன், ஈசன். உயர்ந்த மதிலை உடைய சிவபுரத்தில் விளங்கும் அப்பெருமானைத் தொழுது வணங்க, நலிவு தரும் வினையானது, இல்லாமை ஆகும். இம்மை, மறுமை ஆகிய இரு பிறவி களிலும் இடர் தீரும்.*

1349. படர்ஒளி சடையினன் விடையினன் மதிலவை
சுடரெரி கொளுவிய சிவனவன் உறைபதி
திடலிடு புனல்வயல் சிவபுரம் அடையநம்
இடர்கெடும் உயர்கதி பெறுவது திடனே.

தெளிவுரை: *ஒளிர்கின்ற சடையும் இடப வாகனமும் உடையவனாய், முப்புரம் எரித்த சிவன் உறையும் பதியாகிய சிவபுரத்தை அடைய, நமது இடர் நீங்கும்; உயர்கதி உறுதியாகும்.*

1350. வரைதிரி தரஅரவுஅகடு அழல் எழவரு
நுரைதரு கடல்விட நுகர்பவன் எழில்திகழ்

திரைபொரு புனல்அரி சிலதுஅடை சிவபுரம்
உரைதரும் அடியவர் உயர்கதி யினரே.

தெளிவுரை: *பாற்கடலில் மேருமலையை நாட்டி, வாசுகி என்னும் அரவத்தைக் கயிறாகக் கொண்டு கடைய, அரவத்தின் உடலிலிருந்து அழல் போன்று வெளிப் பட்ட நஞ்சை நுகர்ந்தவனாகிய ஈசன், அரிசிலின் கரையில் திகழும் சிவபுரம் என்னும் நகரை மொழிந்து ஏத்துபவர் உயர்கதியைப் பெறுவார்கள்.*

அகடு – வயிறு, உடம்பு.

1351. துணிவுடை யவர்சுடு பொடியினர் உடல்அடு
பிணியடை விலர்பிற வியும்அற விசிறுவர்
தணிவுடை யவர்பயில் சிவபுர மருவிய
மணிமிட றனதடி யிணைதொழு மவரே.

தெளிவுரை: *சிவபுரத்தில் மருவிவிளங்கும் நீலகண்ட னாகிய ஈசனைத் தொழுபவர்கள், துணிவு மிக்கவர்; நீறணிபவர்; பிணியற்றவர்; பிறவியினையும் அறுமாறு வினைத் தொகுதினை வீசி எறிவார்கள்.*

1352. மறையவன் மதியவன் மலையவ னிலையவன்
நிறையவன் உமையவள் மகிழ்நட நவில்பவன்
இறையவன் இமையவர் பணிகொடு சிவபுரம்
உறைவென வுடையவன் எமையுடை யவனே.

தெளிவுரை: *எம்மை உடையவனாகிய ஈசன், வேத முதல்வன்; அறிவானவன்; மலைபோன்று உயர்ந்து நிலைத்து இருப்பவன்; யாவிலும் நிறைந்தவன்; உமையவள் மகிழுமாறு நடம் பயில்பவன்; மேலான இறைவன்; தேவர்களின் பணி கொள்ளப்பெற்றுச் சிவபுரத்தில் இருப்பிடமாய் உள்ளவன்.*

1353. முதிர்சடை இளமதி நதிபுனல் பதிவுசெய்து
அதிர்கழல் ஒலிசெய அருநட நவில்பவன்
எதிர்பவர் புரம்எய்த இணையிலி அணைபதி
சதிர்பெறும் உளம்உடை யவர்சிவ புரமே.

தெளிவுரை: *சடை முடியில் இளம்பிறைச் சந்திரனும், கங்கையும் பதித்து வீரக்கழல் ஒலிக்க நடம் புரியும் ஈசன், பகை கொண்டவர்களின் முப்புரத்தை எரிசெய்த இணையற்றவனாகி விளங்கிச் சேர்கின்ற நகரானது, பெருமை மிக்கவர் வாழ்கின்ற சிவபுரம் ஆகும்.*

சதிர் – பெருமை, அறிவு.

1354. வடிவுடை மலைமகள் சலமகள் உடன்அமர்
பொடிபடும் உழைஅதள் பொலிதிரு உருவினன்
செடிபடு பலிதிரி சிவனுறை சிவபுரம்
அடைதரும் அடியவர் அருவினை இலரே.

தெளிவுரை: *அழகிய மலைமகளும் கங்கையும் பொருந்த, திருநீறு பூசி, மான் தோல் பொலியும் காட்சியுடன் பலியேற்கும் சிவன் உறையும் சிவபுரத்தை அடையும் அடியவர்கள், வினையற்றவர் ஆவர்.*

உழை அதள் – மான் தோல். செடிபடு – குற்றம் சாரும்.

1355. கரம்இரு பதுமுடி ஒருபதும் உடையவன்
உரநெரி தரவரை அடர்வுசெய் தவன்உறை
பரன்என அடியவர் பணிதரு சிவபுர
நகரது புகுதனம் உயர்கதி அதுவே.

தெளிவுரை: *இருபது கரங்களும், பத்துத் தலைகளும் உடைய இராவணனுடைய வலிமையை அடக்கும் வகையில், கயிலை மலையை ஊன்றிய ஈசனைப் பரம் பொருள் என அடியவர்கள் பணிந்து எழ,*

அப்பெருமான் உறையும் சிவபுர நகரைப் புகுதல் நம் உயர்கதிக்கு வழியாகும்.

உரம் – மார்பு, வலிமை, மனம்.

1356. அன்றியல் உருவுகொள் அரிஅயன் எனும்அவர்
சென்றுஅள விடல்அரி யவன்உறை சிவபுரம்
என்றுஇரு பொழுதுமுன் வழிபடும் அவர்துயர்
ஒன்றிலர் புகழொடும் உடையர்இவ் உலகே.

தெளிவுரை: தமது இயல்பான உருவத்தை விட்டு, அல்லாத வேறு உருவமாகிய ஏனம் (பன்றி), அன்னம் ஆகிய திருமாலும் பிரமனும் காணரிய, ஈசன் உறையும் தலம் சிவபுரம் என்று எண்ணிக் காலை மாலை இரு வேளையும் வணங்கும் அடிவர்களுக்கு, துயர் ஏதும் இல்லை; புகழ் சேரும்; இவ்வுலகில் யாவும் உடைமையாகும்.

1357. புத்தரொடு அமணர்கள் அறவுரை புறவுரை
வித்தக மொழிஇல விடையுடை அடிகள்தம்
இத்தவ முயல்வுறில் இறைவன சிவபுரம்
மெய்த்தக வழிபடல் விழுமிய குணமே.

தெளிவுரை: புத்தர்களும் அமணர்களும் கூறும் அறவுரைகள் புறம்பானவை. ஞானம் ஆகாது. இடப வாகனத்தினை உடைய அடிகளாகிய சிவபுரத்தில் உறையும் ஈசன் திருவடிகள், மெய்ம்மையுடையன. அவற்றை வழிபடுவது சிறப்பான்து ஆகும்.

1358. புந்தியர் மறைநவில் புகலிமன் ஞானசம்
பந்தன தமிழ்கொடு சிவபுர நகருறை
எந்தையை யுரைசெய்த இசைமொழி பவர்வினை
சிந்திமுன் உறவுயர் கதிபெறு வர்களே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *அறிவு சார்ந்த பெருமக்கள் வேதங்களை நவிலும் புகலி நகரில் சிறப்பாக விளங்கும் ஞான சம்பந்தனது தமிழைக் கொண்டு, சிவபுரத்தில் உறைகின்ற எந்தையை உரை செய்த புகழ் மொழி யாகிய இத் திருப்பதிகத்தை ஓதுபவர், வினை நீங்கி முன்னேற்றம் கொண்டு உயர்கதியைப் பெறுவார்கள்.*

சிறப்புரை: *உமாதேவியாரால் பொற்கிண்ணத்தில் அளிக்கப்பட்ட பால் அடிசில் அருந்தி, பாடிய ஞான சம்பந்தரின் சிறப்பும் தமிழின் சிறப்பும் தோன்ற "ஞான சம்பந்தன தமிழ் கொடு" என உணர்தப்பட்டது காண்க.*

126. திருக்கழுமலம்

தல விளக்கம்: *பதிக எண் 1 காண்க*

திருத்தாளச்சதி

பண் : *வியாழக் குறிஞ்சி*

திருச்சிற்றம்பலம்

1359. பந்தத்தால் வந்தெப்பால் பயின்று நின்ற வும்பரப்
பாலே சேர்வாய் ஏனோர்கான் பயில்கண
முனிவர்களும்
சிந்தித்தே வந்திப்பச் சிலம்பின்மங்கை தன்னொடும்
சேர்வார்நாணா ணீள்கயிலைத் திகழ்தரு
பரிசதெலாம்
சந்தித்தே யிந்தப்பார் சனங்கள்நின்று தங்கணால்
தாமேகாணா வாழ்வாரத் தகவுசெய்த வனதுஇடம்
கந்தத்தால் எண்திக்கும் கமழ்ந்திலங்கு சந்தனக்
காடார்பூவார் சீர்மேவும் கழுமல வளநகரே.

தெளிவுரை: நல்வினையின் பந்தம் கொண்ட தேவர்களும், அதற்கு அப்பால் மேலோங்கி நிற்கும் ஏனையவர்களும், தவமுனிவர்களும் ஆரச் சிந்தனை செய்து போற்றித் துதிக்க, சிலம்பினை அணிந்த உமையவளுடன் பாகம் கொண்டு, திருக்கயிலையில் நாள்தோறும் திகழ்கின்ற பரிசெலாம் இவ்வுலகத்து மக்கள் நேரில் தம்முடைய கண்களால் காணும் சிறப் பினைத் தாம் பெற்ற பிறவியின் சிறப்பாகக் கொள்ளும் தகவினைப்பு புரியும் ஈசனது இடம் என்று சொல்லப் படுவது, எண் திக்கும் சந்தன மரங்களும் மணமும் சோலைகளும் திகழ, பூவுலகத்தின் பெருமை மேவும் கழுமல வளநகர் ஆகும்.

சிலம்பின் மங்கை – மலைமகள்; (சிலம்பு – மலை). நாணாணீள் – நாள் நாளும் நீள்கின்ற. பரிச தெலாம் – சிறப்பு யாவும். கந்தத்தால் – நறுமணத்தினால்.

1360. பிச்சைக்கே இச்சித்துப் பிசைந்தணிந்த வெண்பொடிப்
பீடார்நீடார் மாடாரும் பிறைநுதல் அரிவையொடும்
உச்சத்தான் நச்சிப்போல் தொடர்ந்தடர்ந்த வெங்கணேறு
ஊராவூரா நீள்வீதிப் பயில்வொடும் ஒலிசெய்இசை
வச்சத்தான் நச்சுச்சேர் வடங்கொள் கொங்கை மங்கைமார்
வாராநேரே மாலாகும் வசிவல வவனதிடம்
கச்சத்தான் மெச்சிப்பூக் கலந்திங்கு வண்டினம்
காரார்காரார் நீள்சோலைக் கழுமல வளநகரே.

தெளிவுரை: பிச்சை எடுப்பதற்கு இச்சை கொண்டு திருவெண்ணீறு குழையப் பூசி, பெருமையுடைய, நீண்ட, சிறந்த பிறைபோன்ற நெற்றியுடைய உமை யவளைப் பாகங்கொண்டு,' உச்சிப் பகலில் விரும்பி, இடப வாகனம் தொடர 'ஊர்ந்து, ஊர்களெல்லாம் நீண்ட வீதிகள்தோறும் சென்று, ஒலி செய்து, தன்

நிலையை விளம்புதலும் செய்து வைத்தமையால், கச்சு அணிந்த தாருகவனத்து மங்கையர் நேரில் வந்து மயங்கி நிற்க, வசீகரிக்க வல்லவனாகிய பரமனின் இடமானது, திருமாலின் உந்திக் கமலத்தில் விளங்கும் பிரமன் பொருந்தி விளங்க, கருமை நிறம் படிந்த மேகங்கள்சூழ் சோலைகளில் வண்டினம் இசைக்கும் கழுமல வளநகர் ஆகும்.

மால் – மயக்கம்.

1361. திங்கட்கே தும்பைக்கே திகழ்ந்திலங்கு மத்தையின்
சேரே சேரே நீராகச் செறிதரு சுரநதியோடு
அங்கைசேர் வின்றிக்கே யடைந்துடைந்த வெண்தலைப்
பாலேமேலே மாலேயப் படர்வுறும் அவன்இறகும்
பொங்கப்பேர் நஞ்சைச்சேர் புயங்கமங்கள் கொன்றையின்
போதார்தாரே தாமேவிப் புரிதரு சடையன் இடம்
கங்கைக்கே யும்பொற்பார் கலந்துவந்த பொன்னியின்
காலேவாரா மேலேபாய் கழுமல வளநகரே.

தெளிவுரை: பிறைச் சந்திரன், தும்பை, ஊமத்தை ஆகியன சேரவும், சுரநதியாகிய தேவகங்கையும் அழகிய கரத்தில் அமையாது, தலையில் திகழ்ந்து விளங்க, வெண்தலையோட்டிற்கு மேல்பக்கம் பிரமன் அஞ்ஞான மயக்கம் கொண்டு பறந்த அன்னத்தின் இறகும், பொங்கும் நஞ்சுடைய பாம்பும் கொன்றை மலர் மாலையும் மேவிய சடையுடையவனாகிய பரமனது இடமானது, கங்கையின் சிறப்பின் அமைந்த பொன்னியாகிய காவிரியானது வாய்க்கால் வழியாகப் பாயும் கழுமல வளநகர் ஆகும்.

புயங்கம் – பாம்பு.

1362. அண்டத்தால் எண்திக்கும் அமைந்தடங்கு மண்தலத்து
ஆறேவேறே வானாள்வார் அவரவர் இடமதெலாம்

மண்டிப்போய் வென்றிப்போர் மலைந்து அலைந்த உம்பரு
மாறுஏலாதார் தாமேவும் வலிமிகு புரம்எரிய
முண்டத்தே வெந்திட்டே முடிந்திடிந்த விஞ்சிசூழ்
மூவாமூதூர் மூதுரா முனிவுசெய்த வனதுஇடம்
கண்டிட்டே செஞ்சொற் சேர் கவின்சிறந்த மந்திரக்
காலே யோவா தார்மேவும் கழுமல வளநகரே.

தெளிவுரை: *அண்டத்திலும், எண் திசைகள் அமைந்த இந்த மண்ணுலகத்தின் வழியும் வானாளும் தேவர்கள் இடத்திலும் சென்று போர் செய்து, தமக்கு மாறுபட்டு எதிர்ப்பவர்கள் யாரும் இல்லை எனும் வலிமை மிகுந்த முப்புரத்தை எரிக்க, நெற்றிக் கண்ணால் வேகுமாறு செய்து முடித்த ஈசன் இடமானது, வேதங்கள் ஓதி வேள்வித் தீயை ஓய்வின்றி ஆற்றிப் பெருமை கொள்ளும் கழுமல வளநகர் ஆகும்.*

1363. திக்கிற்றே வற்றற்றே திகழ்ந்திலங்கு மண்டலச்
சீறார்வீறார் போரார் தாரகனுடல் அவனெதிரே
புக்கிட்டேவெட்டிட்டே புகைந்தெழுந்த சண்டத்தீப்
போலேபூநீர் தீகால்மீப் புணர்தரும் உயிர்கள்திறஞ்
சொக்கத்தே நிர்த்தத்தே தொடர்ந்தமங்கை செங்கதத்
தோடே யாமே மாலோகத் துயர்களை
பவனதுஇடம்
கைக்கப்பேர் யுக்கத்தே கனன்றுமிண்டு தண்டலைக்
காடேயோடா வூரேசேர் கழுமல வளநகரே.

தெளிவுரை: *எட்டுத் திக்குகளிலும் தேவர்கள் அங்கங்கே திகழ்ந்து விளங்கும் இந்த உலகத்தில், சீற்றமும் வீறு கொள்ளும் எழுச்சியும், போர்த் தன்மையும் உடைய தாருகனது உடலை, அவன் எதிர்ப்படவும், வெட்டி வீழ்த்த, சண்டத் தீப்போன்று ஐம்பூதங்கள் சீற்றம் கொண்டு உயிர்களின் நல்ல வண்ணத்தைக் குலைக்காமல், தம் நிலையில் இன்புறுமாறு செய்து, நடனத்தில்*

தோல்வி கண்டு சினந்த காளியின் செந்தீக் கனல் ஊழித் தீபோல் தோன்றி அழியாதவாறு நிலைத்திருக்கு மாறு செய்யும் ஈசனது இடம், கழுமல வளநகர்.

குறிப்பு: ஈசனும் காளியும் நடனம் ஆட, ஈசன் வெற்றி கொண்டதனைச் சுட்டுமாறும் தேவியின் நிலை யினைத் "தொடர்ந்த மங்கை" என உணர்த்தப்பெற்றது காண்க.

நிர்த்தம் – நடனம்.

1364. செற்றிட்டே வெற்றிச்சேர் திகழ்ந்ததும்பி மொய்ம்புறும்
சேரேவாரா நீள்கோதைத் தெரியிழை பிடியதுவாய்
ஒற்றைச்சேர் முற்றக்கொம்பு உடைத்தடக்கை முக்கண்மிக்கு
ஓவாதேபாய் மாதானத் துறுபுகர் முகஇறையைப்
பெற்றிட்டே மற்றிப்பார் பெருத்துமிக்க துக்கமும்
பேரா நோய் தாம் ஏயாமைப் பிரிவுசெய்த வனதிடம்
கற்றிட்டே எட்டெட்டுக் கலைத்துறைக் கரைச்செலக்
காணாதாரே சேராமெய்க் கழுமல வளநகரே.

தெளிவுரை: சலந்தரன் முதலான அசுரர்களைச் செற்று வெற்றி கொண்ட பரமனாகிய ஆண் யானையின்பால் விருப்புக் கொண்டு, பொருந்திச் சேரும்முகத்தான் உமாதேவியார் பெண் யானை வடிவு கொண்டு விளங்க, நீண்ட துதிக்கையும் ஒற்றைக் கொம்பும் உடைய இறைவனாகிய விநாயகரைத் தந்து, உலகினில் பெருத்துக் காண்கின்ற துன்பமும் நோயும் இல்லாது செய்யும்படி அருள் புரிந்த ஈசனது இடம், அறுபத்து நான்கு கலைகளையும் கற்றுத் தேர்ந்து விளங்கவும், அவ்வாறு ஒழுகாதார் சேராததும் ஆகிய கழுமல வளநகர் ஆகும்.

குறிப்பு: ஒழுக்கம் இல்லாதார் சேர்க்கை ஆக்கத்தைக் குன்றச் செய்யும் என உணர்த்தப் பெறுதல் காண்க.

1365. பத்திப்பேர் வித்திட்டே பரந்தஐம் புலன்கள்வாய்ப்
பாலே போகாமே காவாப் பகையறும்
வகைநினையா
முத்திக்கே விக்கத்தே முடிக்குமுக் குணங்கல் வாய்
மூடாவூடா நாலந்தக் கரணமும் ஒருநெறியாய்ச்
சித்திக்கே உய்த்திட்டுத் திகழ்ந்தமெய்ப் பரம்பொருள்
சேர்வார்தாமே தானாகச் செயுமவன்
உறையும்இடம்
கத்திட்டோர் சட்டங்கங் கலந்திலங்கு நற்பொருள்
காலேயோவா தார்மேவும் கழுமல வளநகரே.

தெளிவுரை: பெருமையுடைய பக்திக்கு வித்திட்டு, பரந்து சென்று சீர் அழிக்கும் ஐம்புலன்களின் வழியின் பால் போகாது காத்து, பகையாகிய பஞ்சமா பாதகங்கள் அறுத்து, முத்திக்குத் தடையாய் இருக்கும் முக்குணங்களின் வழியை அடைத்து; மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனப்படும் நான்கு அந்தக் கரணங்களை ஒரு நெறியாய்ச் சித்தத்தில் உய்த்து, பரம்பொருளைச் சேரும் தன்மையரைத் தானாகவே விளங்கச் செய்யும் ஈசன் உறையும் இடம், வேதத்தின் ஆறு அங்கங்களையும் கற்று, அப் பொருளின் மெய்ம்மையுணர்ந்து எக் காலத்திலும் மேவும் கழுமல வளநகர் ஆகும்.

சட்டங்கம் – ஆறு அங்கம்.

1366. செம்பைச்சேர் இஞ்சிச்சூழ் செறிந்திலங்கு பைம்பொழில்
சேரேவாரா வாரீசத் திரையெறி நகரிறைவன்
இம்பர்க்கே தம்செய்திட்டு இருந்தரன் பயின்ற வெற்பு
ஏரார்பூநேர் ஓர்பாதத்து எழில்விரல் அவண்
நிறுவிட்டு

அம்பொற்பூண் வென்றித்தோள் அழிந்து வந்தனம்
செய்தாற்கு
ஆரார்கூர்வாள் வாணாளன்று அருள்புரி
பவனதிடம்
கம்பத்தார் தும்பித்திண் கவுட்சொரிந்த மும்மதக்
காரார் சேறார் மாவீதிக் கழுமல வளநகரே.

தெளிவுரை: *செம்பினால் ஆகிய மதில் சூழ்ந்து, செறிந்த பைம்பொழில் சேரக் கடலின் அலைகள் வீசும் இலங்கையின் வேந்தன், இவ்வுலகத்தவர்க்குத் தீமை விளைவித்து, ஈசன் விளங்கும் மலையினையும் எடுக்க, மலர் போன்ற ஒப்பற்ற பாதத்தின் அழகிய விரல் அங்கு நிறுவி, தோள் அழியுமாறு புரிந்து, அவன் வணங்கி ஏத்த, ஆர்த்து விளங்கும் கூர்வாளும் வாழ் நாளும் தந்தவன் இடம், கம்பத்தில் கட்டப்பெற்ற யானையின் மத நீர் கரிய சேறு ஆக்கும் சிறந்த வீதிகளைக் கொண்ட கழுமல வளநகர் ஆகும்.*

இஞ்சி – மதில் சுவர்; வாரீசம் – கடல். இம்பர் – உலக மக்கள்; தும்பி – தும்பிக்கையுடைய யானை.

1367. பன்றிக்கோ லங்கொண்டிப் படித்தடம் பயின்றிடப்
பானாமால்தா னாமேயப் பறவையின் உருவுகொள
ஒன்றிட்டே அம்புச்சேர் உயர்ந்தபங் கயத்தவன்
ஓதான்ஓதான் அஃதுஉணராது உருவினது
அடிமுடியும்
சென்றிட்டே வந்திப்பத் திருக்களங்கொள் பைங்கணின்
றேசால் வேறோர் ஆகாரம் தெரிவுசெய்
தவனதிடம்
கன்றுக்கே முன்றிக்கே கலந்திலம் நிறைக்கவும்
காலேவாரா மேலேபாய் கழுமல வளநகரே.

தெளிவுரை: *பன்றிக் கோலம் கொண்டு பூமியில் இடந்து சென்ற திருமால், மற்றும் தான் விரும்பிய பறவையின்*

உருவுகொண்டு ஒன்றிய நீரில் விளங்கும் தாமரைமேல் உள்ளவனாகிய வேதத்தை ஓதியவனாய் இருந்தும் இவ்வுண்மை ஓதப்பெறாத பிரமன் ஆகிய இருவரும் அடிமுடியை வந்திக்க, அழகிய கண்ணுக்குக் காட்சி தருபவனாய் வேறோர் உருவத்தினைத் தேர்ந்து விளங்கிய ஈசனது இடம், இல்லங்களில் கறவைப் பசுக்கள் விளங்கவும், வயல்களில் வாய்க்கால் வழியாக நீர் வற்றாது மேலே சென்று பாயவும் உள்ள கழுமல வளநகர் ஆகும்.

அம்பு – நீர்; பங்கயம் – தாமரை. ஆகாரம் – உருவம். கலந்திலம் – கலந்து இல்லம்.

1368. தட்டிட்டே முட்டிக்கைத் தடுக்கிடுக்கி நின்றுணாத்
தாமேபேணா தேநாளும் சமணொடும்
உழல்பவரும்
இட்டத்தா லத்தம்தான் இதன்றதென்று நின்றவர்க்கு
ஏயாமேவா யேதுச்சொல் லிலைமலி மருதம்பூப்
புட்டத்தே அட்டிட்டுப் புதைக்குமெய்க்கொள் புத்தரும்
போல்வார்தாம் ஓராமேபோய்ப் புணர்வுசெய்த
வனதிடம்
கட்டிக்கால் வெட்டித்தீங் கரும்புதந்த பைம்புனற்
காலேவாரா மேலேபாய் கழுமல வளநகரே.

தெளிவுரை: பனையோலையால் செய்யப்பட்ட தடுக்குகளை அக்கத்தில் இடுக்கி, நின்ற தன்மையில் உணவு உட்கொண்டும், தாம் எதைப் பற்றியும் பேணாது நாள் தோறும் சமணர்கள் தம்மொடு உழல்பவரும், தமது மன விருப்பத்திற்கேற்ப இதன் பொருள் இது அல்ல அது என்று கூறிக்கொண்டு, பொருந்தாதன சொல்லி, மருதாணி முதலான வண்ணங்களை மெய்யில் பூசித் தடவி மகிழும் பௌத்தரும் போன்றவர்களால் உணர முடியாதவனாகிய ஈசன் பொருந்தி விளங்கும் இடம்,

கால்வாய்களில் நீர் பாய்ந்து மேலே செல்ல கரும்பின் சாரும் கலந்து சுவை நீராய்ச் செல்லும் கழுமல வளநகர் ஆகும்.

அத்தம் – பொருள். இதன்றதென்று – இது அன்று அது என்று. இலைமலி மருதம் பூ – மருதாணி. அட்டிட்டு – பூசி.

1369. கஞ்சத்தேன் உண்டிட்டே களித்துவண்டு சண்பகக்
கானேதேனே போராரும் கழுமல நகரிறையைத்
தஞ்சைச்சார் சண்பைக்கோன் சமைத்தநற் கலைத்துறை
தாமேபோல்வார் தேனேரார் தமிழ்விர
கனமொழிகள்
எஞ்சத்தேய் வின்றிக்கே யிமைத்திசைத்த மைத்த
கொண்டு
ஏழேஏழே நாலேமூன்று இயலிசை இசையியல்பா
வஞ்சத்தேய் வின்றிக்கே மனம்கொளப் பயிற்றுவோர்
மார்பேசேர்வாள் வானோர்சீர் மதிநுதர் மடவரலே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: தாமரை மலரில் உள்ள தேனை உண்டு களித்த வண்டானது, சண்பகச் சோலையில் தேன் பருகும் வண்டுடன் பொரும் தன்மையுடைய கழுமல நகரில் வீற்றிருக்கும் இறைவனைத் தஞ்சமாகச் சார்ந்த சண்பைக்கோன் வழங்கும் ஞானமானது, தாமே (ஈசனே) போன்று நன்மை ஆர்ந்த தமிழ் விரகனாகிய ஞானசம்பந்தன் மொழிகள், வார்க்கும் தேனாய் எக் காலத்திலும் குறைவு இன்றி எஞ்சி நிற்கக் கூடியதாய் விளங்க, இசைத்து அமைத்ததாகிய இச் சொற்கள் கொண்டு இருபத்தோரு பண் செறியும் இசையின் இயல்பால் வேறுபாடு இன்றி மனத்தில் விருப்பம் கொண்டு உரைப்பவர்கள், இதயத்தில் திருமகள் வாசம் புரிவாள்.

சிறப்புரை: *தினைத்துணைத் தேனாகாது பனைத்து துணையாய் வார்க்கும் தேன் போன்று விளங்கவல்லது இத் திருப்பதிகம் எனத் திருக்கடைக்காப்பில் உணர்த்தப் பெற்றது காண்க. இக்கருத்துடன், "ஆனந்தத் தேன் சொரியும் குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ" எனப் பகரும் மாணிக்க வாசகர்தம் வாக்கும் நனி கொள்க. "தாமே (ஈசனே) போல்வார் தேன் ஏரார் தமிழ் விரகன மொழிகள்" எனும் அடிகளும் காண்க.*

கஞ்சம் – தாமரை. எஞ்ச – விஞ்சி நிற்றல். வஞ்சம் – வேறுபாடு. இமைத்து – விளங்கும்படி, விளக்குதல். ஏழேயேழே நாலே மூன்று – 7 + 7 + 4 + 3 = 21.

127. திருப்பிரமபுரம்

தல விளக்கம்: *பதிக எண் 1 காண்க.*

ஏக பாதம்

பண் : வியாழக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1370. பிரம புரத்துறை பெம்மான் எம்மான்
பிரம புரத்துறை பெம்மான் எம்மான்
பிரம புரத்துறை பெம்மான் எம்மான்
பிரம புரத்துறை பெம்மான் எம்மான்.

தெளிவுரை: *பிரமன் ஈசனைப் பூசித்த திருத்தலமானது பிரமபுரம் என்று அழைக்கப்படுகிறது. பிரமன் புரத்தில் வீற்றிருந்த நகருக்கு உரிய பெருமான். அவனே எம் தலைவன். மலரின்மேல் வீற்றிருக்கும் பிரமன், ஏடுடைய மலர்களால் அருச்சிக்க அருள் செய்த பெருமான், ஈசன். எம்முடைய தலைவனாகிய ஈசன்*

பிரமபுரத்துறையும் பெருமானாய் அருள் புரிபவன். யாவருக்கும் பெருமானாகிய ஈசன், எம் தலைவன் அவன் பிரமபுரத்தில் விளங்குபவன்.

1371. விண்டலர் பொழிலணி வேணு புரத்தவன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தவன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தவன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தவன்.

தெளிவுரை: ஈசன் மூங்கில் (வேணு) வடிவில் தோன்றி விளங்கியவன். விரிந்த மலர்கள் கொண்ட சோலைகள் அழகுற விளங்கும் வேணுபுரத்தில் விளங்குபவன், ஈசன். அழகிய வேணுபுரத்தில் விஷ்ணு(திருமால்)வால் பூசிக்கப்பெற்றவன். விஷ்ணுவின் உந்திக் கமலத்தின் மீது அலர்ந்த தாமரையில் விளங்கும் நான்முகனுக்கு அணியாகி விளங்கி, படைத்தல் தொழில் செய்பவன்.

1372. புண்டரி கத்தவன் மேவிய புகலியே
புண்டரி கத்தவன் மேவிய புகலியே
புண்டரி கத்தவன் மேவிய புகலியே
புண்டரி கத்தவன் மேவிய புகலியே.

தெளிவுரை: தேவர்களுக்கு அடைக்கலமாகிய புகலியில் மேவிய பரமன், இதயத் தாமரையாய் விளங்கி மன்னுயிரை இயக்குபவன். தாமரை மலர் மேவிய பிரமனால் பூசிக்கப் பெற்றவன். திருமாலால் வணங்கப் படுபவன். நெற்றித் திலகமாக விளங்கும் திருநீறு போன்றவன். புகலியே பரம்பொருளாய் வியாபித்து நின்று, மணம் வீசும் இனிய தன்மையும், தேன் சொரியும் பாங்கும், செம்மையின் ஒளி வண்ணமும் வண்டின் இனிய கீதமும், குளிர்ச்சியான பரிசமும் தந்து ஐம்புலன்களுக்கும் நல்விருந்து படைத்து சிவனடிக்கு உந்தச் செய்து விளங்குகின்றது.

1373. விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்.

தெளிவுரை: *பிரகஸ்பதியாகிய வியாழபகவன் பூசித்துப் பேறு பெற்ற வெங்குரு எனும் பதியில் மேவிய பரமன், விளங்குகின்ற ஒளியின் வண்ணம் பெருக வீற்றிருக் கின்றனன். அறியாமை என்னும் வெம்மை தவிர்க்கும் குருவாகவும், ஆல் நிழல் நின்ற நிலையை ஒத்த குளிர்ச்சி மிக்க தெய்வ பீடமாகிய வெங்குருவில் வீற்றிருந்து ஞானம் வழங்குபவனாய் உள்ளவன். ஒளி வண்ணமாகத் திகழ்தரும் ஈசன், அவன் அருள் வடிவாய் மேவி விளங்குபவன்.*

1374. சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்.

தெளிவுரை: *பிரளய காலத்தில் யாவும் வெள்ளத்தில் மூழ்கி நிற்கத் தோணியில் விளங்கும் பரமன், மெய் யடியார்களைத் தமது காயத்தில் ஆரோகணித்து அருள் வழங்குபவன். சுடர் விடும் வண்ணமிகு செம் மேனியனாய், மாணிக்கமாய் விளங்குகின்றவன், அடியவர் மனத்தில் சுடர்விடும் சோதியாய் விளங்கு பவன். ஏகாந்த நிலையினருக்கும் விஞ்ஞானகலர் என்று பேசப்படும் ஒருமலத்தார்க்கும் நித்தியச் சுடராய் விளங்கும் அவன், ஒளி பொருந்திய மணிகளால் பதிக்கப்பெற்ற மாடமாளிகையுடைய தோணிபுரத்துப் பெருமான் ஆவன்.*

1375. பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி.

தெளிவுரை: இரணியாக்கதனை வதம் செய்த வராக மூர்த்தியான திருமால் வழிபட்ட பூந்தராய் மேவிய பொன்னடி, பூவுலகத்தின் உயர்ந்தோராகிய அந்தணர் களால் வழிபடப் பெறுவதாகும். அப்பொன்னாகிய ஒளி மிக்க திருவடியைச் சார்ந்து விளங்க, மென்மை மிக்க தேவர் ஆவர். தாயாக விளங்கிப் பாதுகாக்கும் ஈசனின் பொன்னார் சேவடி, எல்லா போகத்தையும் இவ்வுலகத்தில் சேர்த்து வழங்க வல்லது. தெய்வத் தன்மையை. இவ்வுலகில் சேர்க்கும் ஈசன் திருவடிக் கமலத்தை, மலர்கொண்டு தூவிப் போற்றுவோமாக.

1376. செருக்குவாய்ப் புடையான் சிரபுரம் என்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுரம் என்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுரம் என்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுரம் என்னில்.

தெளிவுரை: சிரம் அறுபட்ட ராகு பூசித்த திருத்தலத் தில் எழுந்து அருளி, பேறு நல்கும் பெருமான், யான் எனது என்னும் செருக்கு அறுமாறு செய்பவன். செருக்கின் முனைந்து ஆணவ மலம் தோன்ற நின்ற பிரமனின் சிரத்தை அறுத்துப் புடைத்தவன். என்னிடம் தலையானவனாய் விளங்கி மொழியும் பெரும் சொற்களாக மலர்பவன். மன்னுயிர்கள் செருக்குற்று நலியாதவாறு, அவர்தம் சிரத்தில் பதிந்து காத்தருள்பவன். பக்தர்களின் உள்ளத்தில் பதிந்து நின்று விளங்கி, அச்சமற்ற செம்மையுடையவர்களாய்ச் செய்பவன். அவ் இறைவனை வணங்கித் துதிப்பீராக.

1377. பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதவர் சேர்புற வத்தவன்.

தெளிவுரை: *புறா வடிவத்தில் தோன்றிய அக்கினி தேவன் வழிபட்ட பெருமான், அழகிய ஒளி பெறும் திருவடியை உடையவன். மாதவ வேந்தர்கள் சார்ந்து தொழுதற்கு உரியவன். தவத்தின் மேலாய், மாதவத்தின் சீராய், அவன் பொன்னடிக் கமலத்தைச் சேர்ந்தவர்களுக்கு, மேலான சிறப்புகளைத் தருபவன். உலக மாதாவாகிய உமையவளைச் சேர்ந்து அர்த்த நாரியாக இணைந்தும், வேறாகியும் விளங்குபவன். அப்பெருமான் திருவடியைப் போற்றுதல் தவமாகும்.*

1378. தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான்.

தெளிவுரை: *சண்பை என்னும் கோரையால் விளைந்த சாபம் தீருமாறு, திருமால் (கண்ணபிரான்) வழிபட்ட சண்பை நகரில் விளங்கும் பெருமான், மலை எடுத்த தசமுகனாகிய இராவணன் முடிகள் நெரியுமாறு, கயிலை மலையைத் திருப்பாத விரலால் ஊன்றி அருள் புரிந்தவன். மன்னுயிர்களின் பத்து வகையான குற்றங்களை நீக்கும்முகத்தால் ஞானம் அருள வல்லவன். பலவிதமான கொடுமைகளைப் புரிந்த அசுரர்களின் கோட்டை மதில்களை எரித்தவன். நறுமணம் பொருந்தி விளங்கும் அப் பரமனை உகந்து தொழுமின்.*

1379. காழி யானயன் உள்ளவா காண்பரே
காழி யானயன் உள்ளவா காண்பரே
காழி யானயன் உள்ளவா காண்பரே
காழி யானயன் உள்ளவா காண்பரே.

தெளிவுரை: காளிதேவி வழிபடப் பேறு நல்கிய காழியில் விளங்கும் பெருமான், பிரமனால் பூசிக்கப் பெற்றவன். அன்பின் வயத்தால் வணங்குபவர்களுக்குக் காட்சி நல்குபவன். ஊழிக் காலத்திலும் அழியாது விளங்கும் காழியில் நிலைகொள்ளும் பெருமான். அவன் தன்னைப் பற்றும் மெய்த் தொண்டர்களுக்கு உறுதியான பற்றாய் விளங்கி, உள்ளத்தில் பதிந்து இனிய காட்சி நல்குபவன். நினையாதவர்களுக்கு அயலாய் நிற்பவன். அவன் பெருமையை, உள்ளவாறு யாராலும் அறிந்து ஓதுதற்கு அரியவன். அவனைத் தொழுது போற்றுவீராக.

1380. கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே
கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே
கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே
கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே.

தெளிவுரை: கொச்சையாம் பழியை நீக்கக் கோரி பராசர முனிவரால் பூசிக்கப்பெற்ற கொச்சை வயம் என்னும் நிழலைப் பேணாதவர் பேதையர் ஆவர். ஈசன் புகழ் போற்றாது அவமாய்த் திரிபவர்கள் அறியாமையுற்று, அஞ்ஞானத்தவராய் உலகில் உழல்வார்கள் - பிறவி எடுத்ததன் பேற்றை இழந்து, குற்றத் தொகுதிக்கண் மூடப்பெற்றவராய் நன்னிலையை நீத்தவராவர்.

1381. கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை

கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: குற்றத் தொகுதி நீங்குமாறு உரோமச முனிவர் வழிபட்ட கழுமல நகரில் வீற்றிருக்கும் ஞானத்தின் தலைவனாக விளங்கும் ஈசன், கவுணியர் கோத்திர மரபில் தோன்றிய ஞானசம்பந்தரின் சொற்களாக மலர்ந்தருள்பவன். இத்தகைய மொழிகளைக் கொள்கின்ற நன்மனத்தினர்கள் வினைக் கட்டு அறும்; பிறவித்தளை நீங்கும்; எக்காலத்திலும் அழியாது மூத்து நிலையாக நின்று விளங்கும் பதியாகிய கழுமலத்தில் வீற்றிருக்கும் பெருமான் திருவடியை அன்பினால் கட்டிப் பிணைத்து மேன்மையடைவீராக.

128. திருப்பிரமபுரம்

தல விளக்கம்: *பதிக எண் 1 காண்க.*

திரு எழுகூற்றிருக்கை

பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1382. ஓருரு வாயினை மானாங் காரத்து
ஈரியல் பாய்ஒரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்து அளித்து அழிப்பமும் மூர்த்திகள் ஆயினை
இருவரோடு ஒருவன் ஆகி நின்றனை

தெளிவுரை: *ஈசன், ஏகரூபனாய் இருந்து ஐந்து தொழில்களுக்கும் அதிபதியாக விளங்குபவன். மான் போன்ற உமாதேவியுடன் விளங்கிச் சிவன், சக்தி எனும்*

இருவகையான இயல்புடன் உயிர்களைப் பதியை நோக்கிச் சாரவும், ஆணவம் கன்மம் மாயை ஆகிய குற்றத்தொகுதிகளிலிருந்து நீங்கவும் புரிபவன். விண்ணில் தொடங்கிப் பூவுலகம் வரையில் ஒன்றிக் கலந்த இரு சுடர்களாகிய சூரியன், சந்திரன், மற்றும் தேவர்முதல் யாவும் படைத்தும், காத்தும், அழித்தும் செய்யவல்ல மும்மூர்த்திகளாகிய பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூன்று மூர்த்திகள் ஆயினன். பிரமனும் திருமாலும் உடனாக்கிச் சேர்த்து, உருத்திரத் தன்மையைத் தன்பால் தேக்கி, ஒப்பற்ற ஒருவனாய் ஆகி நின்றவன்.

ஓரால் நீழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழுது ஏத்திய நால்வர்க்கு ஒளிநெறி
காட்டினை நாட்ட மூன்றாகக் கோட்டினை

தெளிவுரை: ஓர்ந்து அறிதற்குரிய ஆலமரத்தின் நீழலில் வீற்றிருந்து, திருக்கழலை முப்போதும் ஏத்தித் தொழுத சனகாதி முனிவர்களாகிய நால்வர்க்கு, உயர்ந்த நெறியைச் சின்முத்திரை கொண்டு காட்டி, உண்மைப் பொருளை உணர்த்தி, மும்மலங்களை அறுத்து மேன்மை கொள்ளும் வகை காட்டினன், பரமன்.

இருநதி அரவமோடு ஒருமதி சூடினை
ஒருதாள் ஈரயின் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்து
இருகோட்டு ஒருகரி ஈடுஅழித்து உரித்தனை
ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானிலம் அஞ்சக்
கொன்று தலத்துறு அவுணரை அறுத்தனை

தெளிவுரை: கங்கை, அரவம் ஆகியவற்றுடன் சந்திரனைச் சூடியவன், ஈசன். அவன் ஈர்க்கும் கூர்மை கொண்ட மூன்று இலைகளையுடைய சூலமும், நான்கு வேதங்களையும் கால்களாக உடைய மானும், பஞ்சாட்சரமாகிய ஐந்து தலையுடைய அரவமும் ஏந்தியவன். நீர் வற்றித் தொங்கும் வாய் உடைய மதம் பொருந்தியதும் இரு தந்தங்களையுடையதும் ஆன யானையின் பெருமையை அழித்து, அதன் தோலை உரித்தவன்; மேருமலையை வில்லாகக் கொண்டு வளைய வாங்கி உலகம் அஞ்சி வியக்குமாறு முப்புரத்தை அழித்து அதில் இருந்த தீய அசுரர்களை அழித்தவன்.

இருநதி – கங்கை. ஈரயின் – ஈர்க்கும் கூர்மையுடைய.

ஐம்புல நாலாம் அந்தக் கரணம்
முக்குணம் இருவலி ஒருங்கிய வானோர்
ஏத்த நின்றனை ஒருங்கிய மனத்தோடு
இருபிறப்பு ஓர்ந்து முப்பொழுது குறைமுடித்து

தெளிவுரை: மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐம் புலன்களையும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனப்படும் அந்தக்கரணங்கள் நான்கும், சாத்துவிகம், ரஜோகுணம், தமோகுணம் ஆகிய முக்குணங்களும் பிராணன், அபானன் என்னும் இருவகையான காற்றும் ஒருங்குதல் மேவிய வானோர் ஏத்த நின்ற ஈசன், ஒன்றிய மனத்தினராய், இப்பிறவியின் தன்மை ஓர்ந்து, மூன்று வேளைகளிலும் அனுட்டானம் முதலான கிரியைகள் செய்து,

(இருபிறப்பு – 1. அரிய பெரிய மானுடப் பிறப்பு. 2. பூமியில் தோன்றுவது ஒன்றும் உபநயன நிகழ்ச்சிக்குப் பின்னரும் ஆகிய வகையும்.)

நான்மறை ஓதி ஐவகை வேள்வி
அமைத்து ஆரங்கமுதல்எழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை,
அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை
இகலிய மைந்துணர் புகலி அமர்ந்தனை
பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமூ வுலகும் புதையமேல் மிதந்த
தோணிபுரத்து உறைந்தனை தொலையாஇருநிதி
வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை
வரபுரம் என்றுணர் சிரபுரத்து உறைந்தனை
ஒருமலை யெடுத்த இருதிறல் அரக்கன்
விறல்கெடுத்து அருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை அமர்ந்தனை

தெளிவுரை: *நான்கு வேதங்களாகிய இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் ஆகியவற்றை ஓதி; ஐந்து வகையான வேள்வியாகிய சிவபூசை, குருபூசை, மகேஸ்வர பூசை, பிராமண உபசரிப்பு, அதிதி உபசாரம் ஆகியன ஆற்றி; ஆறு அங்கங்களாகிய சந்தசு, கற்பம், வியாகரணம், சிட்சை, சோதிடம், நிருத்தி ஆகியவற்றின் பிரதான எழுத்தாகிய பிரணவத்தை ஓதி; ஒழுங்கு முறைப்படி பயின்று வளமை தரும் பிரமபுரம் என்னும் பதியை விரும்பினன், ஈசன். அப்பெருமான் வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை என்றும் வழங்கப்படும் அப்பதியில் விழைந்து விளங்குபவன்.*

ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை
எச்சன் ஏழிசையோன் கொச்சையை மெச்சினை

ஆறு பதமு மைந்தமர் கல்வியும்
மறைமுதல் நான்கும்
மூன்று காலமும் தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியனறியும்
அனைய தன்மையை ஆதலி னின்னை
நினைய வல்லவர் இல்லைநீள் நிலத்தே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *ஈசன், ஐயம் கொண்ட சமணரும், தேரரும் உணராதவராய் இருக்கக் காழியில் அமர்ந்து விளங்கு பவன்; ஆறு சமய நெறிகளிலும், ஐந்தெழுத்தாகும் ஞானத்திலும், நான்கு மறைகளிலும் தோய்ந்தவன்; முக்காலமும் தோன்ற நின்றவன்; இம்மை, மறுமை ஆகிய இரண்டும் ஆயவன்; ஒருமை வயத்தனாய்த் திகழ்ந்து அதன் பெருமைக்கு உரியவன்; மறையோர் வாழ் கழுமல முதுபதியினன். அப்பெருமானை ஏத்திய கவுணியனாகிய ஞானசம்பந்தர் உரைத்த இவ் அருள் மொழியை நினைய வல்லவர்கள், பிறவி நோயைக் களைந்தவராய் மீண்டும் பிறவாமையாகிய செல்வத்தை அடைவார்கள்.*

129. திருக்கழுமலம்

தல விளக்கம்: *பதிக எண் 1 காண்க*

பண் : *மேகராகக் குறிஞ்சி*

திருச்சிற்றம்பலம்

1383. சேவுயரும் திண்கொடியான் திருவடியே
சரண் என்று சிறந்தவன்பால்

நாவியலு மங்கையொடு நான்முகன்தான்
வழிபட்ட நலங்கொள்கோயில்
வாவிதொறும் வண்கமல முகங்காட்டச்
செங்குமுதம் வாய்கள் காட்டக்
காவி யிருங் கருங்குவளை கருநெய்தல்
கண்காட்டும் கழுமலமே.

தெளிவுரை: இடபக் கொடியுடைய ஈசன் திருவடியே சரண் என்று சிறப்பாகக் கண்டு, தன் தேவியாகிய கலைமகளுடன் இணைந்து வழிபட்ட பிரமன் நலத்தைப் பெற்ற கோயில், பொய்கையில் மகளிர்தம் முகத்தைத் தாமரை மலரும், பவள வாயைக் குமுத மலரும் காட்ட, கண்களைக் கருங்குவளையும் நெய்தலும் காட்டி விளங்குகின்ற கழுமலம் ஆகும். பிரமன் பூசித்த தலக் குறிப்பு உணர்த்தியது காண்க.

சே – இடபம்; நாவியலு மங்கை – கலைமகள்.

1384. பெருந் தடங்கண் செந்துவர்வாய்ப் பீடுடைய
மலைச்செல்வி பிரியாமேனி
அருந்தகைய சுண்ணவெண்ணீறு அலங்கரித்தான்
அமரர்தொழ அமரும்கோயில்
தருந்தடக்கை முத்தழலோர் மனைகள்தொறும்
இறைவனது தன்மைபாடிக்
கருந்தடங்கண் ணார்கழல்பந்துஅம்மானைப்
பாட்டயரும் கழுமலமே.

தெளிவுரை: மலையரசன் மகளாகிய உமாதேவியைப் பிரியாத திருமேனியனாய், அருந்தகைமையுடைய திருவெண்ணீறு பூசி அலங்கரித்துத் தேவர்கள் தொழு தேத்த விளங்குகின்ற ஈசன் கோயில், வள்ளல் தன்மை மிக்க கரத்தையுடைய அந்தணர்கள், மனைகள் தோறும் வேள்விகள் புரியவும், கரிய பெரிய

கண்களையுடைய மகளிர் அவன் பெருமைகளைப் பாடி, அம்மானை, கழங்கு, பந்து முதலானவை விளையாடும் கழுமலம் ஆகும்.

சிறப்புரை: ஞானம் வழங்கும் திருவெண்ணீறு, ஈசனார் அலங்காரப் பொருளாய் விளங்கும் சிறப்பு சுட்டப் பெறுதல் காண்க. அந்தணர்கள் ஆற்றுகின்ற வேள்வி களுக்கு உரிய பொருள்களை வரையாது வழங்கி, அதன்கண் செல்வம் உயர்ந்து பெருகி, பல்லோர்க்கும் வழங்கப்படுதலைக் குறிப்பால் புலப்படுத்துமாறு, "தரும் தடக்கை முத்தழலோ:ர்'' என உணர்த்தப் பெற்றது காண்க.

மகளிர் அம்மானை ஆடும்போது பாடுகின்ற தன்மையை, "என்னானை என்னப்பன் என்பார்கட்கு இன்னமுதை, அன்னானை அம்மானைப் பாடுதுங் காண் அம்மானாய்,'' என மாணிக்கவாசகர் உரைத்தலும் காண்க.

1385. அலங்கல்மலி வானவரும் தானவரும்
அலைகடலைக் கடையப்பூதம்
கலங்களழு கடுவிடம் உண்டு இருண்டமணி
கண்டத்தோன் கருதும் கோயில்
விலங்கல்அமர் புயன்மறந்து மீன்சனிபுக்கு
ஊன்சலிக்கும் காலம்தானும்
கலங்கல்இலா மனப்பெருவண் கையுடைய
மெய்யர்வாழ் கழுமலமே.

தெளிவுரை: மாலைகளுடன் விளங்கும் தேவரும், அசுரரும் பாற்கடலைக் கடைய, பஞ்ச பூதங்களும் கலங்குமாறு எழுந்த கொடிய விடத்தை உட்கொண்டு, கரிய கண்டத்தையுடைய ஈசன் கருதி அமரும் கோயில், மலையின்மேல் தவழும் மேகம் மழை

பொழிதலை மறந்து, மகரராசியில் சனிக்கோள் புகுதலால் இயற்கையின் நியதியாக, வறட்சி நேர்ந்த காலத்திலும், கலங்காது வழங்கும் வள்ளல் தன்மையுடைய சத்தியவான்கள் வாழும் கழுமலம் ஆகும்.

சிறப்புரை: மகரராசியில் சனிக்கோள் புகும் காலத்தில் இன்னல் நிகழும் என்ற கருத்தும், அவ்வாறு ஆயினும் ஈசன் திருவருள் அத்தகைய இடர் நேராத வண்ணம் காக்கும் திறத்தது என்றும் உணர்த்தப்பெற்றது. இக் கருத்தில், "மகத்தில் புக்கதோர் சனி எனக்கு ஆனாய்" என வரும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரமும் நோக்குக.

(மகம் – சிம்ம ராசிக்குரியது; மகரத்தின் இடைக்குறை மகம் என்றும் பகர்வர்)

அலங்கல் – மாலை; விலங்கல் – மலை. மீன் – மகர ராசி; மீனத்தையும் குறிக்கும்.

1386. பாரிதனை நலிந்தமரர் பயமெய்தச்
சயமெய்தும் பரிசுவெம்மைப்
போரிசையும் புரமூன்றும் பொன்றஒரு
சிலைவளைத்தோன் பொருந்தும் கோயில்
வாரிசைமென் முலைமடவார் மாளிகையின்
சூளிகைமேல் மகப்பாராட்டக்
காரிசையும் விசும்பியங்கும் கணம்கேட்டு
மகிழ்வெய்தும் கழுமலமே.

தெளிவுரை: உலகம் நலியுமாறும் தேவர்கள் அச்சம் கொள்ளுமாறும் செய்த முப்புரத்தை வெற்றி கொள்ளப் போர்ப் பரணி இசைத்துச் சிலை வளைத்துப் பொருத ஈசன் பொருந்தும் கோயில், மகளிர் மாளிகையின் மேல்தளத்தில் இருந்து தம்

குழந்தைகளைப் பாராட்ட, அதன் இனிய ஒலியை மடுத்தி மேகங்கள் வானத்தில் இடி குரல் மெல்ல எழுப்பத் தேவகணங்கள் கேட்டு மகிழ்ச்சி கொள்ளும் கழுமலம் ஆகும்.

சூளிகை – மாளிகையின் உச்சிப் பகுதி.

1387. ஊர்கின்ற அரவம்ஒளி விடுதிங்க
ளொடு வன்னி மத்தமன்னும்
நீர்நின்ற கங்கைநகு வெண்டலைசேர்
செஞ்சடையா(ன்)நிகழும் கோயில்
ஏர்தங்கி மலர்நிலவி யிசைவெள்ளி
மலையென்ன நிலவிநின்ற
கார்வண்டின் கணங்களாற் கவின்பெருகு
சுதைமாடக் கழுமலமே.

தெளிவுரை: ஊர்ந்து மேவும் அரவம், சந்திரன், வன்னி, ஊமத்தம், கங்கை, கபாலம் ஆகியவற்றை உடைய செஞ்சடைகொண்ட ஈசன் கோயில், அழகிய மலர்கள் நிலவும் வெள்ளியங்கிரி போன்ற வெண்மையான மாளிகைகள் கொண்ட கழுமலம் ஆகும்.

1388. தரும்சரதம் தந்தருள்என்று அடிநினைந்து
தழலணைந்து தவங்கள் செய்த
பெருஞ்சதுரர் பெயலர்க்கும் பீடார்தோ
ழமையளித்த பெருமான் கோயில்
அரிந்தவயல் அரவிந்த மதுவுகுப்ப
அதுகுடித்துக் களித்துவாளை
கருஞ் சகடம் இளகவளர் கரும்பிரிய
அகம்பாயும் கழுமலமே.

தெளிவுரை: மெய்ப்பொருளைத் தந்தருள்க என்று திருவடியை நினைந்து, தழல் வளர்த்துத் தவங்கள் செய்த அறிஞர் பெருந்தகையாளர்களுக்குப் பெருமை

மிக்க தோழமை நல்கிய பெருமான் உறையும் கோயில், அறுவடை செய்யப்பெற்ற நிலத்தில் விளங்கும் தாமரையிலிருந்து தேன் சிந்த அதனைப் பருகிய வாளை மீன்கள் களித்துச் சக்கரம் போன்று சுழல கரும்புக் தோட்டங்களில் உள்ள பிஞ்சுக் கரும்புகள் விலகி நிற்கவும் தண்ணீர் உள்ளே பாயும் வளம்திகழ் கழுமலம் ஆகும்.

சரதம் – மெய்ப்பொருள்; சதுரர் – அறிஞர். அரவிந்தம் – தாமரை. சகடம் – சக்கரம்.

1389. புவிமுதல்ஐம் பூதமாய்ப் புலன்ஐந்தாய்
நிலன்ஐந்தாய்க் கரணநான்காய்
அவையவைசேர் பயனுருவாய் அல்லவுரு
வாய்நின்றான் அமரும்கோயில்
தவமுயல்வோர் மலர்பறிப்பத் தாழவிடு
கொம்புதைப்பக் கொக்கின்காய்கள்
கவண்எறிகல் போல்சுனையிற் கரைசேரப்
புள்ளிரியும் கழுமலமே.

தெளிவுரை: நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்களாய்; மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து புலன்களாய்; குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் நிலத்தின் வகை ஐந்தாய்; மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் அந்தக்கரணங்கள் நான்காய்; அவ்வவற்றின் பயனாய், உருவாய், உருஅல்லாத அருவாய் நின்ற ஈசன் அமரும் கோயில், தவம் முயல்வோர் பூசனை ஆற்றுவதற்காக மலர்கள் பறிக்கப்பட்ட பூங்கொம்புகள் விடுவித்த ஞான்று, வேகமாகச் சென்று சென்று அண்மையில் உள்ள மாமரத்தில் தாக்க, மாங்காய்கள் கவணில் எறிந்த கற்களைப் போன்று சுனைக்கரையில் விழ, பறவைகள் அஞ்சி அகலும் கழுமலம் ஆகும்.

சிறப்புரை: ஈசனுடைய அட்ட மூர்த்தங்களுள் ஐம்பூதங்களும் சுட்டப்பெற்றன. புலன்களாய் விளங்கும் சிறப்பு, "பூதங்கள் ஐந்தாகி, புலனாகிப் பொருளாகி" எனவும்; "கூறுநாவே முதலாகக் கூறும் கரணம் எல்லாம் நீ" எனக் கூறும் மாணிக்கவாசகர்தம் வாக்கும் நோக்குக.

நிலத்தின் திணை வகையாய்ச் சேர்தல், பிரிதல், இழைதல், இரங்கல், ஊடல் என்ற ஒழுக்கத்தின்வழி மேவும் இறைத்தன்மையும், அந்தக்கரணங்களின்வழி மேவி மன்னுயிர்களை இயக்குதலும், ஈசன் திருக்குறிப்பின்வழி ஆதல் உணர்த்தப்பட்டது.

கொக்கின் காய்கள் – மாங்காய்கள். புள் இரியும் – பறவை அஞ்சி விலகும்.

1390. அடல்வந்த வானவரை அழித்துலகு
தெழித்துழலும் அரக்கர் கோமான்
மிடல் வந்த இருபதுதோள் நெரியவிரல்
பணிகொண்டோன் மேவும் கோயில்
நடவந்த உழவர்இது நடவொணா
வகை பரலாய்த்து என்றுதுன்று
கடல்வந்த சங்கீன்ற முத்துவயற்
கரைகுவிக்கும் கழுமலமே.

தெளிவுரை: எதிர்த்துப் போர்க்கு வந்த தேவரை அழித்து, உலகத்தை வருத்தி உழல்கின்ற அரக்கர் தலைவனாகிய இராவணனின் வலிமையான இருபது தோள்கள் நெரிந்து வாடுமாறு விரலால் அடர்த்து, அவன் பாடிப் பணியச் செய்த பரமன் மேவுகின்ற கோயில், உழவர்கள் விதைக்கும்போது இது விதையன்று, முத்துப் பரல் என்று ஆய்ந்து கரையில் குவிக்கும் கழுமலம் ஆகும்.

தெழித்து – வருத்தி; மிடல் – வலிமை; துன்று – நெருங்கி.

1391. பூமகள்தன் கோன் அயனும் புள்ளினொடு
கேழல்உரு வாகிப்புக்கிட்டு
ஆமளவும் சென்றுமுடி அடிகாணா
வகைநின்றான் அமரும்கோயில்
பாமருவும் கலைப்புலவோர் பன்மலர்கள்
கொண்டணிந்து பரிசினாலே
காமனைகள் பூரித்துக் களிகூர்ந்து
நின்றேத்தும் கழுமலமே.

தெளிவுரை: திருமகள் தலைவனாகிய திருமாலும், பிரமனும், முறையே பன்றியும் அன்னப் பறவையும் ஆகி, தங்களால் முடிந்த அளவு சென்றும் அடியும் முடியும் காணாதவராய் நின்ற ஈசனார் அமரும் கோயில், பாக்களைக் கனிந்து பாடும் புலவர்கள் பன்மலர்களால் விரும்பி ஏத்தும் கழுமலம் ஆகும்.

1392. குணமின்றிப் புத்தர்களும் பொய்த்தவத்தை
மெய்த்தவமாய் நின்றுகையில்
உணல் மருவும் சமணர்களும் உணராத
வகைநின்றான் உறையும் கோயில்
மணமருவும் வதுவையொலி விழவின்ஒலி
இவைஇசைய மண்மேல் தேவர்
கணமருவு மறையின்ஒலி கீழ்ப்படுக்க
மேற்படுக்கும் கழுமலமே.

தெளிவுரை: புத்தர்கள் பொய்த் தவத்தை மெய்த் தவமாய்க் கருத, சமணர்களும் அவ்வாறு இருக்க, அவர்கள் உணரமுடியாதவாறு நின்ற ஈசன் உறையும் கோயில் திருமண ஒலியும், திருவிழாக்கள் ஒலியும் இசைக்கப் பூவுலகில் தேவகணங்கள் மருவுதலால் வேத ஒலியும், ஒன்றுக்கொன்று மேலோங்கும் கழுமலம் ஆகும்.

வதுவை – திருமணம்.

1393. கற்றவர்கள் பணிந்தேத்தும் கழுமலத்துள்
ஈசன்றன் கழல்மேல் நல்லோர்
நற்றுணையாம் பெருந்தன்மை ஞானசம்
பந்தன்தான் நயந்துசொன்ன
சொற்றுணையோர் ஐந்தினொடு ஐந்து இவைவல்லார்
தூமலராள் துணைவராகி
முற்றுலக மதுவாண்டு முக்கணான்
அடிசேர முயல்கின்றாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *நான்மறை கற்றுணர்ந்தவர்கள் பணிந்து ஏத்துகின்ற கழுமலத்துள் வீற்றிருக்கும் ஈசன் கழல்மேல், நல்லவர்களின் நற்றுணையாய் விளங்கும் பெருந்தன்மை மிகுந்த ஞானசம்பந்தன் விரும்பிச் சொன்ன, சொல்லின் துணையாகிய இத் திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள், தூய மலராளாகிய திருமகளின் துணை கொண்டவராகி உலகம் முழுவதும் தன் ஆட்சியில் கண்டு, ஈசன் திருவடியில் சேரும் முயற்சியுடையவர்கள் ஆவார்கள்.*

130. திருவையாறு

தல விளக்கம்: *பதிக எண் 36 காண்க.*

பண் : *மேகராகக் குறிஞ்சி*

திருச்சிற்றம்பலம்

1394. புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட்டு ஐம்மேல் உந்தி
அலமந்த போதாக அஞ்சேல்என்று
அருள்செய்வான் அமரும்கோயில்

வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில்பார்க்கும் திருவை யாறே.

தெளிவுரை: ஐம்புலன்களும் தமது இயல்பிலிருந்து திரிந்து, தனது வழியிலிருந்து மயங்கி அதற்குரிய அறிவும் கெட்டு, பித்த, வாயு, சிலேத்தும நாளங்களின் மாறுபாட்டால் கபம் பெருக வருந்தும்போது, அஞ்சேல் என்று அருள் செய்பவனாகிய ஈசன் அமரும் கோயில், திருக்கோயிலை வலம் வரும் பெண்கள் நடனம் ஆட, முழவின் அதிர்ஒலி கேட்ட சில மந்திகள் தடுமாற்றம் கொண்டு மேகத்தின் இடியோசை எனக் கருதி, மரத்தில் ஏறி வானத்தைப் பார்க்கும் திருவையாறு ஆகும்.

ஐம்மேல் உந்தி – கபமானது பெருகி. அலமந்து – வருந்தி, தடுமாறி.

1395. விடலேறு படநாகம் அரைக்கசைத்து
வெற்பரையன் பாவையோடும்
அடலேறுஒன் றதுஏறி அஞ்சொலீர்
பலியென்னும் அடிகள் கோயில்
கடலேறித் திரைமோதிக் காவிரியி
னுடன்வந்து கங்குல்வைகித்
திடலேறிச் சுரிசங்கம் செழுமுத்தங்கு
ஈன்றலைக்கும் திருவையாறே.

தெளிவுரை: வலிமை மிக்க நாகத்தை அரையில் கட்டி, உமையவளைப் பாகமாகக் கொண்டு இடபத்தில் ஏறி, அழகிய சொல்லுடையவர்களே! என்று கூறிப் பிச்சை யேற்ற அடிகளின் கோயில், கடலலைகள் வாயிலாகக் காவிரியினுடன் கலந்து இரவுக் காலங்களில்

கரையடைந்த சங்குகள் ஈன்ற முத்துக்கள் விளங்கும் திருவையாறு ஆகும்.

விடல் – வலிமை; திடல் – கரை.

1396. கங்காளர் கயிலாய மலையாளர்
கானப்பே ராளர்மங்கை
பங்காளர் திரிசூலப் படையாளர்
விடையாளர் பயிலும்கோயில்
கொங்காளப் பொழில்நுழைந்து கூர்வாயால்
இறகுலர்த்திக் கூதல் நீங்கிச்
செங்கானல் வெண்குருகு பைங்கானல்
இரைதேரும் திருவையாறே.

தெளிவுரை: *கபாலம் ஏந்தியவர், கயிலாய மலையுடையவர், கானப் பேராளர், உமை பங்காளர், சூலப்படையாளர், இடப வாகனர் ஆகிய ஈசன் கோயில், தேன் சொரியும் சோலையில் ஈரமான சிறகுகள் உலர்ந்து, குளிர் நீங்கிய வெண்மையான இருகுகள் இரை தேடும் திருவையாறு ஆகும்.*

கொங்கு – தேன்; கூதல் – குளிர். கானல் – கடற்கரைச் சோலை.

1397. ஊன்பாயு முடைதலைகொண்டு ஊரூரின்
பலிக்குழல்வார் உமையாள்பங்கர்
தான்பாயும் விடையேறும் சங்கரனார்
தழலுருவர் தங்கும் கோயில்
மான்பாய வயலருகே மரமேறி
மந்திபாய் மடுக்கள்தோறும்
தேன்பாய மீன்பாயச் செழுங்கமல
மொட்டலரும் திருவையாறே.

தெளிவுரை: *பிரம கபாலம் கையில் கொண்டு ஊர்தொறும் பலிக்கு உழலும் உமையவள் பங்கினர், இடப வாகனம் ஏறும் சங்கரனார், தழல் உருவானவர்.*

அவர் தங்குகின்ற கோயில், மான் பாய, வயல்களின் அருகே மந்தி பாய, தேன் பாயும் மடுக்களில் மீன் பாயத் தாமரையின் மொட்டு மலரும் திருவையாறு ஆகும்.

1398. நீரோடு கூவிளமும் நிலாமதியும்
வெள்ளெருக்கும் நிறைந்த கொன்றைத்
தாரோடு தண்கரந்தை சடைக்கணிந்த
தத்துவனார் தங்கும் கோயில்
காரோடி விசும்பளந்து கடிநாறும்
பொழிலணைந்த கமழ்தார்வீதித்
தேரோடும் அரங்கேறிச் சேயிழையார்
நடம்பயிலும் திருவையாரே.

தெளிவுரை: கங்கையும், வில்வமும், பிறைச் சந்திரனும், வெள்ளெருக்கும், கொன்றை மாலையும், குளிர்ச்சி பொருந்திய கரந்தையும் சடைக்கணிந்த தத்துவனார் தங்கும் கோயில், மேகத்தைத் தொடும் ஓங்கிய பொழிலும் மலர்செறிந்த தேரோடும் வீதிகளில் உள்ள அரங்குகளில் மகளிர் நடம் பயிலும் திருவையாறு ஆகும்.

தார் – மாலை. தண் கரந்தை – திருநீற்றுப்பச்சை, ஒருவகைப் பத்திரம்.

1399. வேந்தாகி விண்ணவர்க்கு மண்ணவர்க்கு
நெறிகாட்டும் விகிர்தனாகிப்
பூந்தாம நறுங்கொன்றை சடைக்கணிந்த
புண்ணியனார் நண்ணும் கோயில்
காந்தாரம் இசையமைத்துக் காரிகையார்
பண்பாடக் கவினார் வீதித்
தேந்தாம் என்று அரங்கேறிச் சேயிழையார்
நடமாடும் திருவையாறே.

தெளிவுரை: ஆட்சிகொண்டு காப்பவனாய், விண்ணுலகத்தினர்க்கும் மண்ணுலலகத்தினர்க்கும் நல்ல நெறியைக் காட்டும் விகிர்தனாய், நறுங்கொன்றை மாலை சடைக்கு அணிந்த புண்ணியனார் நாடும் கோயில், காந்தார இசையில், மகளிர் பண்பாட நடம் பயிலும் திருவையாறு ஆகும்.

சிறப்புரை: இசையின் ஒரு சுரமாக விளங்கும் காந்தரம் சுட்டி, ஏனையவையும் ஆயின என்று உணர்த்தப் பட்டது. அவ்வாறே நடனக்கலையின் "கதி" "தேம் தாம்" என உரைத்துப் பிறவும் கொள்ளப்படுமாறு உணர்த்தப்பட்டது.

வேந்து – ஆளுமையும், காத்தலும் ஒருசேர உடைமை. தாமம் – மாலை.

1400. நின்றுலா நெடு விசும்பில் நெருக்கிவரு
புரமூன்று நீள்வாய்அம்பு
சென்றுலாம் படிதொட்ட சிலையாளி
மலையாளி சேருங்கோயில்
குன்றெலாம் குயில்கூவக் கொழும்பிரச
மலர்பாய்ந்து வாசமல்கு
தென்றலார் அடிவருடச் செழுங்கரும்பு
கண் வளரும் திருவையாறே.

தெளிவுரை: வானத்தில் நெருக்கித் துன்புறுத்திய புரங்கள் மூன்றினையும் அம்பு செல்லுமாறு தொட்ட வில்லையுடைய கயிலை மலைநாதன் சேரும் கோயில் குன்றிடை இருந்து குயில் கூவ, மலரில் தேன் சொரிந்து வாசமலரின் மணம் சேர, தென்றல் பெருகி கரும்பினைக் கணுக்கள்தோறும் பெருகி வளரச் செய்யும் திருவையாறு ஆகும்.

1401. அஞ்சாதே கயிலாய மலையெடுத்த
அரக்கர்கோன் தலைகள் பத்தும்
மஞ்சாடு தோள்நெரிய அடர்த்தவனுக்கு
அருள்புரிந்த மைந்தர் கோயில்
இஞ்சாயல் இளந்தெங்கின் பழம்வீழ
இளமேதி இரிந்துஅங்கு ஓடிச்
செஞ்சாலிக் கதிர்உழக்கிச் செழுங்கமல
வயல்படியும் திருவை யாறே.

தெளிவுரை: *சற்றும் சிந்தித்துப் பாராமல் அச்ச உணர்வு அற்று, கயிலாய மலையெடுத்த இராவணன் பத்துத் தலைகளும் வலிமையான தோள்களும் நெரியுமாறு அடர்த்து, அருள் புரிந்த அழகரின் கோயில், இனிய தென்னை நெற்று கீழே விழுந்ததைக் கண்டு, எருமைக் கன்றுகள் அலைந்து சிதறி ஓடி, செஞ்சாலிக் கதிரை உழக்கித் தாமரை மலர் விளங்கும் வயலில் படியும் திருவையாறு ஆகும்.*

மஞ்சு – வலிமை, அழகு. இஞ்சாயல் – இன்சாயல், இனிய சாயல். மேதி – எருமை; தெங்கின் பழம் – முற்றிய தேங்காய்.

1402. மேலோடி விசும்பணவி வியனிலத்தை
மிக அகழ்ந்து மிக்கு நாடும்
மாலோடு நான்முகனும் அறியாத
வகைநின்றான் மன்னும்கோயில்
கோலோடக் கோல்வளையார் கூத்தாடக்
குவிமுலையார் முகத்தில்நின்று
சேலோடச் சிலையாடச் சேயிழையார்
நடமாடும் திருவை யாறே.

தெளிவுரை: *ஆகாயத்திலும் பூமிக்கடியிலும் நாடிச் சென்ற பிரமனும் திருமாலும் அறியாத வகை நின்ற ஈசன் கோயில், செவ்வரி படர்ந்த நீண்ட கண்களையும், திரண்ட கொங்கைகளையும்*

வளையல்களையும் அணிந்த மகளிர் நடம்புரியும் திருவையாறு ஆகும்.

1403. குண்டாடு குற்றுடுக்கைச் சமணரொடு
சாக்கியரும் குணம் ஒன்றில்லா
மிண்டாடு மிண்டர்உரை கேளாதே
ஆளாமின் மேவித்தொண்டீர்
எண்தோளர் முக்கண்ணர் எம்மீசர்
இறைவர் இனிது அமரும் கோயில்
செண்டாடு புனல்பொன்னிச் செழுமணிகள்
வந்து அலைக்கும் திருவையாறே.

தெளிவுரை: சமணரும் சாக்கியரும் தர்க்கம் செய்து உரைப்பனவற்றைக் கேளாது ஈசனார்க்கு ஆளாகித் தொண்டு செய்மின்! எண்தோள் முக்கண்ணராய் விளங்கும் எம் ஈசன் இனிது அமரும் கோயில், பூக்களும், மணிகளும் திரண்ட காவிரி அணைதரும் திருவையாறு ஆகும்.

1404. அன்னமலி பொழில்புடைசூழ் ஐயாற்றெம்
பெருமானை அந்தண்காழி
மன்னியசீர் மறைநாவன் வளர்ஞான
சம்பந்தன் மருவுபாடல்
இன்னிசையால் இவைபத்தும் இசையுங்கால்
ஈசனடி ஏத்துவார்கள்
தன்னிசையோடு அமருலகில் தவநெறிசென்று
எய்துவார் தாழாதன்றே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: அன்னப் பறவைகள் மலிந்த பொழிலைச் சூழ்ந்த ஐயாற்று எம்பெருமானைப் பாடிய அந்தண் காழி மன்னிய சீர்மறை நாவலனாகிய வளர் ஞானசம்பந்தன் மருவிய இத்திருப்பதிகத்தை இசைத்து

ஏத்தவல்லவர்கள், தாழ்வு அற்றவராய் இனிய தவநெறியில் சென்று தேவர் உலகத்தை எய்துவர்.

சிறப்புரை: *ஆற்றுகின்ற புண்ணியத்தின் பயனாகவும், மேவி ஒழுகும் தவநெறியின் பயனாகவும் அமரருலகம் வாய்க்கப் பெறும் எனச் சுட்டப் பெறுதல் காண்க.*

131. திருமுதுகுன்றம்

தல விளக்கம்: *பதிக எண் 12 காண்க.*

பண் : *மேகராகக் குறிஞ்சி*

திருச்சிற்றம்பலம்

1405. மெய்த்தாறு சுவையும் ஏழிசையும்
எண்குணங்களும் விரும்புநால்வே
தத்தாலும் அறிவொண்ணா நடைதெளியப்
பளிங்கேபோல் அரிவைபாகம்
ஒத்தாறு சமயங்கட்கு ஒருதலைவன்
கருதுமூர் உலவு தெண்ணீர்
முத்தாறு வெதிர்உதிர நித்திலம்வா
ரிக்கொழிக்கு முதுகுன்றமே.

தெளிவுரை: *மெய்யின்கண் உடைய உப்பு, புளிப்பு, துவர்ப்பு, கசப்பு, கார்ப்பு, இனிப்பு என்னும் ஆறு சுவையும்; சஞ்சமம், ரிஷபம், காந்தாரம் மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்னும் ஏழிசையும்; தன் வயத்தன் ஆதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில்லாத ஆற்றல் உடைமை, வரம்பில்லாத இன்பம் உடைமை ஆகிய எட்டுக் குணங்களும்;*

விரும்பிப் போற்றும் இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களும் அறிய வொண்ணாது நிலவிப் பளிங்கு அன்ன தேவியைப் பாகமாகக் கொண்டு, சௌரம், காணபத்யம், கௌமாரம், வைணவம், சாக்தம், சைவம் என்னும் ஆறு சமயங்களுக்கும் ஒப்பற்ற தலைவனாய் விளங்கும் ஈசன் கருதி விளங்கும் ஊரானது, மூங்கிலில் விளைந்து முதிர்ந்த முத்துகள் உதிர்ந்து முத்தாற்றில் பெருகிச் சென்று கரையில் கொழிக்கும் முதுகுன்றம் ஆகும்.

வெதிர் – மூங்கில் முத்து விளையும் இடங்களில் ஒன்று.

1406. வேரிமிகு குழலியொடு வேடுவனாய்
வெங்கானில் விசயன்மேவு
போரின்மிகு பொறையளந்து பாசுபதம்
புரிந்தளித்த புராணர் கோயில்
காரின்மலி கடிபொழில்கள் கனிகள்பல
மலர் உதிர்த்துக் கயமுயங்கி
மூரிவளம் கிளர்கின்ற திருமுன்றில்
புகுந்துலவு முதுகுன்றமே.

தெளிவுரை: தேன் மணக்கும் கூந்தலையுடைய தேவியொடு வேடுவ வடிவம் தாங்கி, கொடிய கானகத்தில் விசயனுடன் போர் புரிந்து வலிமை யளந்து, பாசுபதம் அளித்த புராணராகிய பெருமான் கோயில், பொழில்கள் கனிகளையும், மலர்களையும் உதிர்த்து, குளிர்ந்த நீர்நிலைகளில் சுவையின் மணம் பரப்பி, இல்லங்களில் தென்றல் புகுந்து இனிமை சேர்க்கும் முதுகுன்றம் ஆகும்.

வேரி – தேன். பொறை – வலிமை. புராணன் – ஈசன். கயம் – நீர் நிலை. மூரி – பெருமை.

1407. தக்கனது பெருவேள்விச் சந்திரனிந்
திரன்எச்சன் அருக்கன் அங்கி
மிக்கவிதா தாவினொடும் விதிவழியே
தண்டித்த விமலர்கோயில்
கொக்கினிய கொழும் வருக்கை கதலிகமுகு
உயர்தெங்கின் குவைகொள்சோலை
முக்கனியின் சாறொழுகிச் சேறுலரா
நீள்வயல்சூழ் முதுகுன்றமே.

தெளிவுரை: தக்கன் புரிந்த வேள்வியில் பங்கேற்ற சந்திரன், இந்திரன், எச்சன், அருக்கன், அக்கினி, பிரமன் ஆகியோரை விதிவழியே தண்டித்த விமலர் கோயில், மா, வளமையான வகையைச் சேர்ந்த வாழை, கமுகு, தேங்காய் மற்றும் முக்கனிகள் சாறும் பெருக, உலராத சேறு உடைய வயல் சூழும் முதுகுன்றம் ஆகும்.

சிறப்புரை: தக்கனது வேள்வியானது அவனைத் தூற்றி நிந்திக்கப் படுவதானமை குறித்து பெருவேள்வி என உணர்த்தப் பெற்றது.

பெருக்குதல் – தூற்றுதல்; எச்சன் – யாகபுருஷன். அருக்கன் – சூரியன்; விதாதா – பிரமன்; கொக்கு – மா. கதலி – வாழை; கமுகு – பாக்கு. குவைகொள் சோலை முக்கனியின் சாறு – முக்கனிகளின் சாறும் ஏனையவற்றின் குலைகளும்.

1408. வெம்மைமிகு புரவாணர் மிகைசெய்ய
விறலழிந்து விண்ணுளோர்கள்
செம்மலரோன் இந்திரன் மால் சென்றிரப்பத்
தேவர்களே தேரதாக
மைம்மருவு மேருவிலு மாசுணநாண்
அரிஎரிகால் வாளியாக
மும்மதிலும் நொடியளவிற் பொடிசெய்த
முதல்வனிடம் முதுகுன்றமே.

தெளிவுரை: கொடுமை மிக்க முப்புரத்தின் அசுரர்கள் தீங்கு செய்ய அதனால் தமது வளமையழிந்த தேவர் களும், பிரமன், இந்திரன் திருமாலும் சென்று துதித்து வேண்ட, தேவர்கள் தேராகவும், அழகிய மேருமலை வில்லாகவும், வாசுகி என்னும் பாம்பு நாணாகவும், திருமால், அக்கினி தேவன், வாயுதேவன் ஆகியோர் அம்பாகவும் கொண்டு மூன்று மதில்களையும் ஒருசேர நொடியளவு நேரத்தில் எரிந்து சாம்பலாகுமாறு செய்த முதல்வனாகிய ஈசன் இடமானது, முதுகுன்றம் ஆகும்.

மிகை – தீங்கு. மாசுணம் – பாம்பு. பொடி செய்த – எரித்துச் சாம்பலாக்கிய.

1409. இழைமேவு கலையல்குல் ஏந்திழையாள்
ஒருபாலாய் ஒருபால் எள்காது
உழைமேவும் உரியுடுத்த ஒருவன்இருப்
பிடம்என்பர் உம்பர்ஓங்கு
கழைமேவு மடமந்தி மழைகண்டு
மகவினொடும் புகவொண்கல்லின்
முழைமேவு மால்யானை இரைதேரும்
வளர்சாரல் முதுகுன்றமே.

தெளிவுரை: இழைக்கப் பெற்ற மேகலையை உடைய, உமாதேவியாகிய பெண்பால் ஒரு பக்கமும், மான் தோல் திகழ ஒரு பக்கமும் ஆகி, அர்த்த நாரியாகிய ஒருவன் இருப்பிடம் எனப்படுவது, தேவர் உலகு வரைக்கும் நீண்டு வளர்ந்த மூங்கிலின் மேல் இருக்கும் பெண் குரங்கு மழை வரும் எனத் தெரிந்ததும் தன் குட்டியுடன் பாதுகாப்பான இடத்தில் புக, யானை உணவு கொள்ள உலவும் சாரலையுடைய முதுகுன்றம் ஆகும்.

உழை – மான்; உரி – தோல். ஒருவன் – ஈசன். – கழை – மூங்கில்.

1410. நகையார்வெண் தலைமாலை முடிக்கணிந்த
நாதனிட நன்முத்தாறு
வகையாரும் வரைப்பண்டம் கொண்டிரண்டு
கரையருகு மறியமோதித்
தகையாரும் வரம்புஇடறிச் சாலிகழு
நீர்குவளை சாயப்பாய்ந்து
முகையார்செந் தாமரைகண் முகமலர
வயல்தழுவு முதுகுன்றமே.

தெளிவுரை: *மண்டை ஓடுகளை மாலையாக அணிந்த ஈசன் இடமானது, மணிமுத்தாறு என்னும் ஆறு, மலையில் திகழும் செல்வங்களை இருகரைகளிலும் பெருகுமாறு சேர்த்து, நெல்லும் கழுநீர் மலர்களும் சாயுமாறு புகுந்து ஓடி, தாமரை மலருமாறு வயலைத் தழுவும் முதுகுன்றம் ஆகும்.*

1411. அறங்கிளரு நால்வேதம் ஆலின்கீழ்
இருந்தருளி அமரர்வேண்ட
நிறங்கிளர்செந் தாமரையோன் சிரமைந்தின்
ஒன்றுஅறுத்த நிமலர்கோயில்
திறங்கொள்மணித் தரளங்கள் வரத்திரண் டங்கு
எழிற்குறவர் சிறுமிமார்கள்
முறங்களினாற் கொழித்து மணி செலவிலக்கி
முத்துலைப்பெய் முதுகுன்றமே.

தெளிவுரை: *ஆலமரத்தின்கீழ் இருந்து அறத்தின் பொருளாகிய வேதங்களை, சனகாதி முனிவர் களுக்கு உணர்த்தி அருள் செய்து, தேவர்களின் வேண்டுகோளை ஏற்று, பிரமனின் ஐந்து சிரங்களுள் ஒன்றை அறுத்த நிமலர் கோயில், மாணிக்கங்களும், முத்துக்களும் ஒருசேரத் திரண்டிருக்க, குறச் சிறுமியர் கள் முறத்தினால் கொழித்து மாணிக்கங்களை விலக்கி முத்துக்களை உலையில் சேர்க்கும் முதுகுன்றம் ஆகும்.*

1412. கதிரொளிய நெடுமுடிபத் துடையகடல்
இலங்கையர்கோன் கண்ணும் வாயும்
பிதிரொளிய கனல் பிறங்கப் பெருங்கயிலை
மலையை நிலை பெயர்த்த ஞான்று
மதிலளகைக்கு இறைமுரல மலரடி யொன்று
ஊன்றி மறை பாட ஆங்கே
முதிரொளிய சுடர்நெடுவாள் முன்னீந்தான்
வாய்ந்தபதி முதுகுன்றமே.

தெளிவுரை: ஒளிக்கதிர்கள் உடைய நீண்ட முடிகள் பத்து உடைய இராவணன், கண்ணும், வாயும் மருண்டு கலங்க, அவன் கயிலையைப் பெயர்த்தபோது, தனது புஷ்பக விமானத்தைப் பறித்த அரக்கன் மாய்ந்தான் எனக் குபேரன் கருதுமாறு, திருப்பாத விரல் ஊன்றி, சாமகீதம் பாட மந்திரவாள் தந்த ஈசன் விளங்கும் பதி, முதுகுன்றம் ஆகும்.

1413. பூவார்பொன் தவிசின்மிசை இருந்தவனும்
பூந்துழாய் புனைந்தமாலும்
ஓவாது கழுகேன மாய்உயர்ந்துஆழ்ந்து
உறநாடி உண்மைகாணாத்
தேவாரும் திருவுருவன் சேருமலை
செழுநிலத்தை மூடவந்த
மூவாத முழங்கொலிநீர் கீழ்தாழ
மேலுயர்ந்த முதுகுன்றமே.

தெளிவுரை: பூவினை அழகிய இருப்பிடமாக உடைய பிரமனும், துளசி மாலை அணிந்த திருமாலும் அன்னமாக உயர்ந்து பறந்தும், ஏனமாய் ஆழ்ந்து பூமியின் குடைந்து சென்றும், உண்மை காணாதவாறு ஆகிய திருவடிவு கொண்ட ஈசன் சேரும் இடம், மகாப் பிரளய காலத்திலும் மூழ்காதவாறு மேலுயர்ந்து விளங்கும் முதுகுன்றம் ஆகும்.

1414. மேனியிற் சீவரத்தாரும் விரிதரு தட்டு
உடையாரும் விரவலாகா
ஊனிகளாய் உள்ளார்சொற் கொள்ளாதும்
உள்ளுணர்ந்து அங்கு உய்மின்தொண்டீர்
ஞானிகளாய் உள்ளார்கள் நான்மறையை
முழுதுணர்ந்துஐம் புலன்கள் செற்று
மோனிகளாய் முனிச்செல்வர் தனித்திருந்து
தவம்புரிய முதுகுன்றமே.

தெளிவுரை: உடலை வளர்க்கும் கொள்கையுடையவர்களாய்ப் புறச்சமயத்தார் இருக்க, அவர்கள் சொற்களை ஏற்காது, உண்மை கொள்வீராக. தொண்டர்காள்! ஞானிகளாய் நான்கு வேதங்களை உணர்ந்து, ஐம்புலனை அடக்கி நிட்டை கொண்டு தவம் புரியும் பேறு பெற்றது முதுகுன்றம். அவ் ஊர்ப் பெருமானை ஏத்துமின் என்றவாறு.

1415. முழங்கு ஒலிநீர் முத்தாறு வலம்செய்யு
முதுகுன்றத்து இறையைமூவாப்
பழங்கிழமைப் பன்னிருபேர் படைத்துடைய
கழுமலமே பதியாக் கொண்டு
தழங்கெரிமூன்று ஓம்புதொழில் தமிழ்ஞான
சம்பந்தன் சமைத்த பாடல்
வழங்கும்இசை கூடும்வகை பாடுமவர்
நீடுலகம் ஆள்வர்தாமே

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: முழங்குகின்ற ஒலியுடன் நீர்மிக்க முத்தாறு வலம் செய்யும் முதுகுன்றத்து இறைவனை, எக்காலத்திலும் தொன்மைபூண்டும் நிலைத்து நிற்கவல்ல பன்னிரண்டு பெயர்களைக் கொண்டுள்ள கழுமலத்தை இருப்பிடமாகக் கொண்டு, ஆகவனீயம், காருகபத்தியம், தட்சணாக்கினி எனப்படும் எரிகள்

மூன்றும் ஓம்பும், தமிழ் ஞானசம்பந்தன் வழங்கிய இத் திருப்பதிகத்தை, வழங்குகின்ற இசையுடன் பாடுபவர்கள், உலகத்தை நெடிது ஆள்வார்கள்.

குறிப்பு: *பன்னிரு பேர்படைத்துடைய கழுமலம் - பதிகம் எண். 1 காண்க.*

132. திருவிழிமிழலை

தல விளக்கம் : *பதிக எண் 4 காண்க.*

பண் : மேகராகக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1416. ஏரிசையும் வடவாலின் கீழிருந்தங்கு
ஈரிருவர்க்கு இரங்கி நின்று
நேரிய நான் மறைப்பொருளை உரைத்தொளிசேர்
நெறியளித்தோன் நின்ற கோயில்
பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும்
பயின்றோதும் ஓசைகேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள்
பொருட்சொல்லு(ம்) மிழலையாமே.

தெளிவுரை: *சிறப்பான புகழ் மிக்க பெருமைமிகு ஆல மரத்தின்கீழ் இருந்து சனகாதி முனிவர்களாகிய நால்வர்க்கு இரக்கம் கொண்டு உரிய வேதத்தின் பொருளை உரைத்து, ஒளி மிக்க மெய்ந்நெறி அளித்த ஈசன் நிலை கொண்டு விளங்கும் கோயில், உலகில் புகழ்மிக்க பண்டிதர்கள் பல நாட்களாகப் பயின்று ஓதுகின்ற ஓசையை நன்கு கேட்டு, தேன் சொரியும் சோலைகளில் உள்ள கிளிகள் வேதங்களின் பொருள் சொல்லும் வீழிமிழலை ஆகும்.*

1417. பொறியரவ மதுசுற்றிப் பொருப்பேமத்
தாகப்புத் தேளிர்கூடி
மறிகடலைக் கடைந்திட்ட விடமுண்ட
கண்டத் தோன் மன்னும்கோயில்
செறி யிதழ்த்தா மரைத்தவிசில் திகழ்ந்தோங்கும்
இலைக்குடைக்கீழ்ச் செய்யார் செந்நெல்
வெறிகதிர்ச்சா மரையிரட்ட இளஅன்னம்
வீற்றிருக்கு மிழலையாமே.

தெளிவுரை: *படம் கொண்ட வாசுகி என்ற பாம்பை நாணாக்கி, மேரு மலையை மத்தாக்கி, தேவர்கள் கூடிப் பாற் கடலைக் கடைய எழுந்த விடத்தை, உட்கொண்ட கண்டத்தையுடைய ஈசன் விளங்கும் கோயில், தாமரை மலர்மீது, இலை குடையாகவும் நெற்கதிர்கள் சாமரையாகவும் திகழ இள அன்னம் மகிழ்ந்திருக்கும் மிழலை ஆகும்.*

1428. எழுந்துலகை நலிந்துழலும் அவுணர்கள்தம்
புரமூன்றும் எழிற்கணாடி
உழுந்துருளும் அளவையின் ஒள்ளெரிகொளவெஞ்
சிலை வளைத்தோன் உறையும் கோயில்
கொழுந்தரள நகைகாட்டக் கோகநத
முகம்காட்டக் குதித்து நீர்மேல்
விழுந்தகயல் விழிகாட்ட விற்பவளம்
வாய்காட்டு மிழலையாமே.

தெளிவுரை: *ஓரிடத்தில் நில்லாது நகரும் தன்மையில் உலகத்தை நலியச் செய்த அசுரர்களின் முப்புரத்தை எழில் மிக்கு நோக்கி, நொடிப் பொழுதில் எரியாக்கும் வண்ணம், கொடிய சிலைவளைத்த ஈசன் உறையும் கோயில், முத்துப் போன்ற புன்னகையும், தாமரை*

போன்ற முகமும், கயல் போன்ற விழியும், பவள வாயும் கொண்ட மகளிர் விளங்கும் மிழலையாகும்.

உழுந்துருளும் அளவை – நொடிப்பொழுது. தவளம் – முத்து; கோகனதம் – தாமரை.

1419. உரைசேரும் எண்பத்து நான்குநூறு
ஆயிரமாம் யோனிபேத
நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய்
அங்கங்கே நின்றான் கோயில்
வரைசேரு முகில்முழவ மயில்கள்பல
நடமாட வண்டுபாட
விரைசேர்பொன் னிதழிதர மென்காந்தள்
கையேற்கு மிழலையாமே.

தெளிவுரை: *எண்பத்து நான்கு இலட்சம் யோனி பேதங்களை நிரைசேரப் படைத்து, அவற்றின் உயிர்க்கு உயிராய் நின்று விளங்கும் ஈசன் கோயில், மலையைத் தொடும் மேகம் முழவம் போன்று அதிர்ந்து ஒலிக்க, மயில்கள் நடம்புரிய, வண்டு இசை பாட, மணம் மிக்க கொன்றை மரங்கள் பொன்போன்ற மலர்களை வழங்க, காந்தன் மலர் கையேந்தி வாங்குமாறு விளங்கும் மிழலையாகும்.*

இதழி – கொன்றை.

1420. காணுமாறு அரியபெரு மானாகிக்
காலமாய்க் குணங்கள்மூன்றாய்ப்
பேணுமூன்று உருவாகிப் பேருலகம்
படைத்தளிக்கும் பெருமான் கோயில்
தாணுவாய் நின்றபர தத்துவனை
உத்தமனை இறைஞ்சீர்என்று
வேணுவார் கொடிவிண்ணோர் தமைவிளிப்ப
போலோங்கு மிழலையாமே.

தெளிவுரை: காட்சிக்குப் புலப்படாத அரிய பெருமானாகி, கடந்த காலம், நிகழ் காலம், வருங் காலம் என வரும் மூன்று காலமாயும்; சாத்விகம், ரஜோ குணம், தமோகுணம் என்னும் முக்குணமாய், உலகைப் பேணும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூன்று வடிவமும் ஆகி அண்டங்கள் யாவற்றையும் படைத்து அளிக்கும் ஈசன் கோயில், பரப்பிரம்மமாய் விளங்கும் தத்துவனை, உத்தமனை இறைஞ்சிப் பணிவீர் என்று, மூங்கில்களில் படர்ந்திருக்கும் கொடிகள், தேவர்களை அழைப்பதைப் போன்று விளங்கும் மிழலையாகும்.

பேருலகம் – அண்டங்கள்; விளிப்ப – அழைக்க.

1421. **அகனமர்ந்த அன்பினராய் அறுபகை செற்று**
ஐம்புலனும் அடக்கிஞானம்
புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத்
துள்ளிருக்கும் புராணர் கோயில்
தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குளவர்க்
கந்திகழச் சலசத்தீயுள்
மிகவுடைய புன்கு மலர்ப் பொரியட்ட
மணம்செய்யு மிழலை யாமே.

தெளிவுரை: அகத்தில் நிறைந்த அன்பினராய்க் காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம், (பொறாமை) ஆகிய ஆறு வகையான பகைகளையும் அழித்து, ஐம்புலன்களின்வழிச் செல்லும் உணர்வு களை அடக்கிய ஞானிகளின் உள்ளத் தாமரையில் வீற்றிருக்கும் புராணராகிய ஈசன் கோயில், அன்பாகிய நீர் விளங்கும் குளிர்ந்த தடாகத்தில் சங்குகளின் இனம் திகழ, இதயத் தாமரையாகிய சுடரில் மிகையான புன்கம் என்னும் வாசனைப் பொரி தூவி உயிரானது

இறைவனைப் பொருந்துமாறு அட்டமணம் நிகழ்த்தும், மிழலையாகும்.

சலசம் – தாமரை. புன்கம் – வாசனைப் பொரி – வேள்விக்குரியது. அட்டமணம் – பிரமம். பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம்.

1422. ஆறாடு சடைமுடியன் அனலாடு
மலர்க்கையன் இமயப்பாவை
கூறாடு திருவுருவன் கூத்தாடும்
குணமுடையோன் குளிரும்கோயில்
சேறாடு செங்கழுநீர்த் தாதாடி
மதுவுண்டு சிவந்தவண்டு
வேறாய உருவாகிச் செவ்வழிநற்
பண்பாடு மிழலையாமே.

தெளிவுரை: கங்கை தரித்த சடை முடியும், நெருப் பேந்திய கரமும், இமயப் பாவையாகிய உமாதேவியை ஒரு பாகமாக உடைய திருவடிவமும், நடனம் ஆடும் குணப்பாங்கும் உடைய ஈசன் மகிழ்ந்து விளங்குகின்ற கோயில், சேற்றில் திகழும் செங்கழு நீர்ப் பூக்களில் உள்ள மகரத்தத்தில் பொருந்தி தேன் உண்டு மயங்கிய வண்டு, தமது கோலத்தில் மாற்றம் கொண்டு செவ்வழி என்கிற நல்ல பண் இசைக்கும் மிழலையாகும்.

1423. கருப்ப் மிகும் உடல்அடர்த்துக் காலூன்றிக்
கைமறித்துக் கயிலையென்னும்
பொருப்பெடுக்க லுறும்அரக்கன். பொன்முடிதோள்
நெரித்தவிரற் புனிதர் கோயில்
தருப்பமிகு சலந்தரன்றன் உடல்தடிந்த
சக்கரத்தை வேண்டியீண்டு
விருப்பொடுமால் வழிபாடு செய்யஇழி
விமானம்சேர் மிழலையாமே.

தெளிவுரை: *கன்மத்தின் வழி உண்டாகும் கருவின் வழி கொண்ட உடலின் தினவு மிக்கு, கயிலையை எடுக்க லுறும் இராவணனின் முடியும் தோளும் திருப்பாத விரல் ஊன்றி நலியச் செய்த புனிதராகிய ஈசன் கோயில், சலந்தராசுரனை அழிக்கும் பொருட்டுத் தோற்றிவித்த ஆழிப்படையை நாடி, விருப்பத்துடன் திருமால் வழிபாடு செய்வதற்கு விண்ணிலிருந்து இறக்கிய விமானம்சேர் மிழலையாகும்.*

சிறப்புரை: *திருமால் வழிபாடு செய்வான் வேண்டி விண்ணிலிருந்து இறங்கிய விமானம், இத் திருத்தலத்தின் மகிமை சுட்டுவதாகும். (பதிக எண் 4 காண்க)*

தருப்பமிகு சலந்தரன் – தருக்கிய சலந்தராசுரன்.

1424. செந்தளிர்மா மலரோனும் திருமாலும்
ஏனமோடு அன்னமாகி
அந்தம்அடி காணாதே அவர்ஏத்த
வெளிப்பட்டோன் அமரும் கோயில்
புந்தியினால் மறைவழியே புல்பரப்பி
நெய் சமிதை கையிற் கொண்டு
வெந்தழலின் வேட்டுலகில் மிகஅளிப்போர்
சேருமூர் மிழலையாமே.

தெளிவுரை: *பிரமனும் திருமாலும், ஏனமும் அன்னமும் ஆகி முடியும் அடியும் காணாது நிற்க, அவர்கள் வணங்கி ஏத்த வெளிப்பட்டவனாகிய ஈசன் கோயில், அறிவு பூர்வமாக, வேத நெறிப்படி தருப்பைப் புல் விரித்து நெய், சமித்து ஆகியன கொண்டு வேள்வி செய்து, உலகத்தில் நலம் விளைவிக்கும் அந்தணர்கள் சேரும் ஊராகிய மிழலையாகும்.*

அந்தம் – முடி.

1425. எண்ணிறந்த அமணர்களும் இழிதொழில்சேர்
சாக்கியரும் என்றுந்தன்னை
நண்ணரிய வகைமயக்கித் தன்னடியார்க்கு
அருள்புரியும் நாதன்கோயில்
பண்ணமரு மென்மொழியார் பாலகரைப்
பாராட்டும் ஓசைகேட்டு
விண்ணவர்கள் வியப்பெய்தி விமானத்தோடும்
இழியும் மிழலையாமே.

தெளிவுரை: *எண்ணற்ற சமணர்களும் சாக்கியரும் தன்னை நண்ணாதவாறு மயலைத் தந்து, தன்னடியார் களுக்கு அருள் புரிகின்ற நாதன் கோயில், மகளிர் பண்ணிசைத்துத் தம் குழந்தைகளைப் பாராட்டும் ஓசை கேட்டுத் தேவர்கள் வியப்பு அடைந்து, விமானத்தோடு பூவுலகுக்கு இறங்கி வரும் மிழலையாகும்.*

1426. மின்னியலும் மணிமாட மிடைவீழி
மிழலையான் விரையார்பாதம்
சென்னிமிசைக் கொண்டொழுகும் சிரபுரக் கோன்
செழுமறைகள் பயிலுநாவன்
பன்னியசீர் மிகுஞான சம்பந்தன்
பரிந்துரைத்த பத்தும்ஏத்தி
இன்னிசையாற் பாடவல்லார் இருநிலத்தில்
ஈசனெனும் இயல்பினோரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *ஒளிமிக்க மணிமாடங்கள் கலந்த வீழி மிழலையில் வீற்றிருக்கும் நாதனின் மணம் பொருந்திய திருப்பாதத்தைச் சென்னியில் கொண்டு ஒழுகுகின்ற சிரபுரத்தின் தலைவனாகிய, மறைகள்வல்ல நாவன்மையுடைய புகழ்மிக்க ஞானசம்பந்தன் பரிந்துரைத்த இத்திருப்பதிகத்தை, இனிய இசையுடன்*

பாட வல்லவர்கள், உலகில் பெருமையுடையவராய் மலரும் இயல்புடையவராவர்.

ஈசன் – பெருமையுடையவன், தலைவன்.

133. திருக்கச்சி ஏகம்பம்

தல விளக்கம்: தொண்டை நாட்டுத் தலம். இது பிருத்து வித்தலம். நகரங்களில் சிறந்தது காஞ்சி (நகரேஷு காஞ்சி) எனப்படுவது. முத்தித் தலம் நகர் ஏழனுள் முக்கியமானது காஞ்சி என்பர். உமாதேவி ஐந்து வயது சிறுமி வடிவம் தாங்கி சிவனை பூசித்ததாக வரலாறு. காமாட்சி முப்பத்திரண்டு அறங்கள் செய்த தலம். சக்தி பீடமாகிய காமகோடி பீடம் உள்ள தலம். திருக்குறள் உரையாசிரியராகிய பரிமேலழகர், கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாசாரியார் வாழ்ந்த திருத்தலம். ஐயடிகள் காடவர்கோன், சாக்கிய நாயனார், திருக் குறிப்புத் தொண்ட நாயனார் பேறு பெற்ற தலம். சுந்தர மூர்த்தி சுவாமிகள் இடக் கண் பெற்ற தலம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜெகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் ஸ்ரீமடம், தொண்டை மண்டலாதீனம் சீலத் திருஞானப் பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் திருமடம் உள்ள திருத்தலம்.

இத்தலத்தின் வேறு பெயர்கள்: காமபீடம், மும் மூர்த்திவாசம், சிவபுரம், விண்டுபுரம், தபோமயம், துண்டீரபுரம், பிரமபுரம், பூலோக கயிலாயம், தேவபுரம், சகலசித்திபுரம், அயோத்தி, ஆதிபீடம், கன்னிகாப்பு, இலயசித்து, புவனசாரம், கலிசித்து, கச்சி என்பன. வேதம் தல மரமாக மாமரம் விளங்குவது. கச்சி ஏகம்பம் – கோயிலின் பெயர்.

நல்ல கம்பன், கள்ளக் கம்பன், வெள்ளக் கம்பன் ஆகிய மூர்த்தங்கள் உள்ள தலம்.

சுவாமி : ஏகாம்பர நாதர், திருவேகம்பர்

அம்பிகை : ஏலவார் குழலி, காமாட்சியம்மை

தல மரம் : மாமரம்

தீர்த்தம் : கம்பாநதி, சர்வதீர்த்தம் சிவகங்கை.

குறிப்பு : கம்பாநதி பூமிக்கடியில் கண்களுக்குப் புலப் படாதவாறு ஓடுவதாக வரலாறு சாற்றும்.

பண் : மேகராகக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1427. வெந்தவெண் பொடிபூசு மார்பின்விரி
நூலொருபால் பொருந்தக்
கந்தமல்கு குழலியோடும் கடிபொழில்
கச்சி தன்னுள்
அந்தமில் குணத்தார் அவர்போற்ற
அணங்கினொடு ஆடல்புரி
எந்தை மேவிய ஏகம்பம் தொழுதேத்த
இடர்கெடுமே.

தெளிவுரை: திருவெண்ணீறு பூசும் மார்பில் முப்புரி நூல் பொருந்தித் திகழ, வாசனை பொருந்திய குழலை உடைய உமாதேவியோடு, பொழில் விளங்கும் கச்சியுள் அளவிடற்கரிய நற்குணங்கள் நிரம்பப்பெற்ற வர்களாகிய திருத்தொண்டர்கள் போற்றித் துதிக்க, அவ் அணங்கினோடு சேர்ந்து நடம் புரிகின்ற எந்தை மேவிய ஏகம்பத்தைத் தொழுது ஏத்த இடரானது கெடும்.

சிறப்புரை: இத் திருத்தலத்தில் வீற்றிருக்கும் உமாதேவி யின் திருநாமமான ஏலவார் குழலி என்பது கந்தமல்கு

குழலி என உரைக்கப் பெற்றுள்ள சிறப்புக்காண்க. அடியவர்களின் பெருமையை நவிலுமாறு அந்தமில் குணத்தார் என மொழிதலும் நோக்குக.

அணங்கு – உமையவள்.

1428. வரம்திகழும் அவுணர் மாநகர் மூன்று
உடன்மாய்ந்து அவியச்
சரந்துரந்து எரிசெய்த தாழ்சடைச்
சங்கரன் மேயஇடம்
குருந்த மல்லிகை கோங்குமா தவிநல்ல
குரா மரவம்
திருந்துபைம் பொழிற்கச்சி யேகம்பம்
சேர இடர்கெடுமே.

தெளிவுரை: *வர பலம் பெற்ற அசுரர்களின் வலிமை யான மூன்று நகர்களை நொடியில் மாய்ந்து சாம்ப லாகுமாறு சரம் தொடுத்து எரித்த நீண்ட சடைகளை உடைய சங்கரன் மேவிய இடம், குருந்தம், மல்லிகை, கோங்கு, மாதவி, மணம் கமழ் குராமரம் யாவும் உரியவாறு பொருந்திய பொழில் கொண்டு விளங்கும் கச்சி ஏகம்பம் ஆகும். அதனைச் சேர இடர் கெடும்.*

மாநகர்: மா – வன்மை குறித்தது.

1429. வண்ணவெண் பொடிப்பூசு மார்பின்
வரியர வம்புனைந்து
பெண்ணமர்ந்து எரியாடல் பேணிய
பிஞ்ஞகன் மேயஇடம்
விண்ணமர் நெடுமாடம் ஓங்கி
விளங்கிய கச்சிதன்னுள்
திண்ணமாம் பொழில்சூழ்ந்த ஏகம்பம்
சேர இடர்கெடுமே.

தெளிவுரை: வண்ணம்தரும் வெண்ணீறு பூசும் மார்பில், அழகிய அரவத்தை அணிகலனாகப் புனைந்து, உமாதேவியை ஒரு பாகத்தில் கொண்டு, கரத்தில் அனல் ஏந்தி, நடம் விரும்பிச் செய்த பிஞ்ஞகன் மேய இடம், விண்ணை முட்டும் நெடிய மாட மாளிகைகள் ஓங்கி விளங்கும் கச்சியில், மாறாத பொழில்கள் சூழ்ந்த ஏகம்பம் ஆகும்.

வண்ணம் – அழகு. திருநீற்றுக்கு உகந்த அடைமொழி. பிஞ்ஞகன் – சிவன்.

1430. தோலும்நூ லும்துதைந்த வரைமார்பில்
சுடலைவெண் ணீறணிந்து
காலன்மாள் வுறக்காலாற் காய்ந்த
கடவுள் கருதுமிடம்
மாலைவெண் மதிதோயு மாமதிற்
கச்சி மாநகருள்
ஏலநாறிய சோலைசூழ் ஏகம்பம்
ஏத்த இடர்கெடுமே.

தெளிவுரை: மான் தோலும் முப்புரி நூலும் துதைந்து பொருந்திய அகன்ற மார்பில், சுடலையின் சாம்பல் அணிந்து, மார்க்கண்டேயரின் உயிரைக் கவரப் போந்த நாளில், காலனைக் காலால் உதைத்து மாய்த்த கடவுள் விரும்பி உறையும் இடமானது, நெடிய மதியில் வெண்மதி பொருந்தும் கச்சிமாநகரில் மணம் மிக்க சோலைகள் சூழ்ந்த ஏகம்பம் ஆகும். அதனை ஏத்த இடரானது கெடும்.

1431. தோடணிம் மலர்க்கொன்றை சேர்சடைத்
தூமதி யம்புனைந்து
பாடல்நான் மறையாகப் பல்கணப்
பேய்கள் அவைசூழ

வாடல்வெண் தலையோடுஅனல்ஏந்தி
மகிழ்ந்துடன் ஆடல்புரி
சேடர்சேர் கலிக்கச்சி யேகம்பம்
சேர இடர்கெடுமே.

தெளிவுரை: இதழ் கூடிய கொன்றை மலர் சூடிய சடையில் சந்திரனைத் தரித்து, நான்மறை பாடவும், பேய்கள் சூழ, மண்டையோடும் நெருப்பும் கரத்தில் கொண்டு மகிழ்ந்து நடம் புரியும், பெருமை மிக்கவர் சேரும் கச்சி ஏகம்பத்தை அடைய இடர் கெடும்.

சேடர் – பெரியோர்.

1432. சாகம்பொன் வரையாகத் தானவர்
மும்மதில் சாயவெய்து
ஆகம்பெண் ணொருபாக மாக
அரவொடு நூலணிந்து
மாகந் தோய் மணிமாட மாமதிற்
கச்சி மாநகருள்
ஏகம்பத் துறையீசன் சேவடி
யேத்த இடர்கெடுமே.

தெளிவுரை: மேருமலையை வில்லாகக் கொண்டு அசுரர்களின் மூன்று மதில்களை அழித்து, உமா தேவியை, உடம்பில் பாகமாகக் கொண்டு, அரவமும் முப்புரி நூலும் அணிந்து, விண்முட்டும் மணி மாடங்கள் கொண்டு உயர்ந்த மதில் உடைய கச்சி மாநகருள், ஏகம்பத்தில் உறையும் ஈசன், செவ்விய திருவடியை ஏத்த இடர் கெடும்.

சாகம் – வில்; மாகம் – ஆகாயம்.

1433. வாணிலா மதிபுல்கு செஞ்சடை
வாளர வம்அணிந்து

நாணிடத் தினில்வாழ்க்கை பேணி
நகுதலையிற் பலிதேர்ந்து
ஏணிலா அரக்கன்றன் நீள்முடி
பத்தும் இறுத்தவன் ஊர்
சேணுலாம் பொழிற்கச்சி யேகம்பம்
சேர இடர்கெடுமே.

தெளிவுரை: திங்கள் தரித்த செஞ்சடையில் அரவம் அணிந்து, வாசுகி என்னும் பாம்பினை நாண் என்று கொண்டு பேணி, பிரம கபாலம் கொண்டு பிச்சை ஏற்று, உயர்வில்லாத அரக்கனாகிய இராவணன் முடிகள் பத்தும் நலியச் செய்தவன் இடம், ஓங்கி உயர்ந்த பொழில்களையுடைய கச்சி ஏகம்பம். அதனை நாடி அடைய இடர் கெடும்.

1434. பிரமனும் திருமாலும் கைதொழப்
பேரழல் ஆயபெம்மான்
அரவம் சேர்சடை அந்தணன்
அணங்கினொடு அமருமிடம்
கரவில்வண் கையினார்கள் வாழ்கலிக்
கச்சி மாநகருள்
மரவம்சூழ் பொழில்ஏகம் பந்தொழ
வல்வினை மாய்ந்தறுமே.

தெளிவுரை: பிரமனும் திருமாலும் கைதொழுது போற்றப் பேரழல் ஆகிய பெருமான், அரவம் சேரும் சடையினனாய் அழகிய தண்மை கொண்ட ஈசன். அவன் உமாதேவியுடன் அமர்ந்து விளங்கும் இடம், கரத்தல் தன்மையில்லாத வள்ளல்கள் வாழ்கின்ற கலிக்கச்சி மாநகர் ஆகும். அதனுள் மல்லிகை சூழ் பொழில் உடைய ஏகம்பம் சென்று தொழ வலிய ~வினை மாயும்.

அணங்கு – உமையவள். மரவம் – மல்லிகை.

1435. குண்டு பட்டு அமணா யவரொடும்
கூறைதம் மெய்போர்க்கும்
மிண்டர் கட்டிய கட்டுரை
அவைகொண்டு விரும்பேன்மின்
விண்டரார் புரமூன்றும் வெங்கணை
ஒன்றினால் அவியக்
கண்டவன் கலிக்கச்சி யேகம்பம்
காண இடர்கெடுமே.

தெளிவுரை: சமணர்களும் சாக்கியர்களும் கூறும் உரைகளை விரும்பி ஏற்காதீர்கள். பகைவராகிய முப்புரத்து அசுரர்களை ஒரே கணையால் அழித்த ஈசனின் கச்சி ஏகம்பம் கண்டு வணங்க, இடர் கெடும்.

சிறப்புரை: முப்புர அசுரர்களைப் போர் செய்து அழிக்கும் நோக்கில் தேவர்கள் புடைசூழ ஈசன் செல்லலுற்றும், அவை யாவும் திருவிளையாடல் செய்யும் நிமித்தமே ஆயிற்று எனவும், புன்முறுவல் காட்டிய திருவாயின்வழி தீச்சுடர்ப் பொறிகள் வெளி வந்து அழித்தன என்பதும் வரலாறு. இதனை, "ஈரம்பு கண்டிலம் ஏகம்பர்தம் கையில் ஓரம்பே முப்புரம் உந்தீபற, ஒன்றும் பெருமிகை உந்தீபற" என மாணிக்க வாசகர் உரைத்தவாறும் காண்க.

விண்டவர் – பகைவர்.

1436. ஏரினார் பொழில்சூழ்ந்த கச்சி
யேகம்ப மேயவனைக்
காரினார் மணிமாடம் ஓங்கு
கழுமல நன்னகருள்
பாரினார் தமிழ்ஞான சம்பந்தன்
பரவிய பத்தும்வல்லார்

சீரினார் புகழோங்கி விண்ணவ
ரோடும் சேர்பவரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: அழகிய பொழில் சூழ்ந்த கச்சி ஏகம்பம் மேவிய பெருமானை, மேகம் சூழ்ந்த மணிமாடங்கள் ஓங்கிய கழுமல நன்னகருள், உலகம் போற்ற விளங்கும் தமிழ் ஞானசம்பந்தன் பரவிய இத் திருப்பதிகத்தைப் பாட வல்லவர்கள், வளம் நிறைந்து புகழ் ஓங்கி விண்ணுலகத்தவரோடும் சேர்ந்திருப்பர்.

இம்மைச் சிறப்பும் மறுமை நலமும் வாய்க்கப் பெறும் என்பதாம்.

காரினார் – மேகம் சூழ்ந்த.

134. திருப்பறியலூர் வீரட்டம்

தல விளக்கம்: காவிரி தென்கரைத் தலம். கீழப்பரசலூர் என வழங்கபடுகிறது. அட்ட வீரட்டத் தலத்துள் ஒன்று. வீரபத்திரரை ஏவித் தக்கனை அழித்த தலம். தட்சபுரம் என்றும் பெயர்.

சுவாமி : வீரட்டேஸ்வரர், தட்சபுரீஸ்வரர்

அம்பிகை : இளங்கொம்பனையாள்

தல மரம் : வில்வம், பலா

தீர்த்தம் : சிவகங்கை, உத்தரவேதி.

பண் : மேகராகக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1437. கருத்தன் கடவுள் கனலேந் தியாடும்
நிருத்தன் சடைமேல் நிரம்பா மதியன்

திருத்தம் உடையார் திருப்பறி யலூரில்
விருத்தன் எனத்தகும் வீரட்டத் தானே.

தெளிவுரை: ஈசன், யாவும் தானேயாகி ஆட்சி கொண்டு செய்யும் கருத்துடையவனாகிய கடவுள்; நெருப்பைக் கரத்தில் ஏந்தி நடனம் புரிபவன்; பிறைச் சந்திரனைச் சடையில் சூடியவன். அப்பெருமான் மனத்தின் வழி, புலன்களைச் செல்லவிடாது, தன் கழலை நாடச் செய்யுமாறு, திருத்தம் உடைய சான்றோர்கள் விளங்கும் திருப்பறியலூரில் தொன்மை மிக்கவன் எனத்தக்க வீரட்டத்தானே ஆவன்.

சிறப்புரை: ஈசன் தான் கருதிவாறு செய்யும் கருத்துடையவன் என்பதும், தன்பால் கருதும் அடியவர்களுக்குத் துணையாய் விளங்கியருளும் கடவுள் எனவும் புலப்படுத்துமாறு, "கருத்தன் கடவுள்" என்பது உணர்த்துவதாயிற்று.

நிருத்தன் – நடம்புரிபவன். விருத்தன் – தொன்மையானவன், விருத்தியானவன்.

1438. மருந்தன் அமுதன் மயானத்துள் மைந்தன்
பெருந்தண் புனற்சென்னி வைத்த பெருமான்
திருந்து மறையோர் திருப்பறி யலூரில்
விரிந்த மலர்ச்சோலை வீரட்டத் தானே.

தெளிவுரை: பிணி தீர்க்கும் மருந்தாய், நன்று காக்கும் அமுதனாய், மயானத்துள் நடம் புரியும் அழகனாய், கங்கையைச் சென்னியில் வைத்த பெருமான், பிறவிப் பிணியின் வயப்பட்டு அவலம் அடையாதவாறு, திருந்தப் புகலும் மறை வல்லவர்கள் விளங்கும் திருப்பறியலூரில், மலர்ச் சோலை திகழும் வீரட்டத்தான் ஆவன்.

பெருந்தண்புனல் – கங்கை.

குறிப்பு: இத் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள ஈசன் திருநாமமாகிய வீரட்டன் என்னும் பஞ்சாட்சரத் தினைத் திருப்பாடல்தோறும் உணர்த்துதலைக் காண்க.

1439. குளிர்ந்தார் சடையன் கொடுஞ்சிலை விற்காமன்
விளிந்தான் அடங்க வீந்தெய்தச் செற்றான்
தெளிந்தார் மறையோர் திருப்பறி யலூரில்
மளிர்ந்தார் மலர்ச்சோலை வீரட்டத்தானே.

தெளிவுரை: கங்கை தரித்த சடையுடைய ஈசன், கொடுஞ் சிலையுடைய மன்மதனைச் செற்றுத் தெளிந்த மறையோர் விளங்கும் திருப்பறியலூரில் சோலை சூழ்ந்த வீரட்டானத்தில் விளங்குபவன்.

சிறப்புரை: மன்மதன், தேவர்களை மலர் வில் கொண்டும், மனிதர்களைக் கரும்பு வில் கொண்டும், அரக்கர்களை இரும்பு வில் கொண்டும் பாணங்களைத் தொடுக்கும் தொழில் புரிபவன். மலர் வில் கொண்டு ஈசன்பால் எய்தான் ஆயினும், அச்செயல் பெருமானுக்கு உகந்ததாக அமையாத வழியாதல் கொண்டு, கொடுஞ்சிலை விற்காமன் என உணர்த்தப் பெற்றது.

1440. பிறப்பாதி யில்லான் பிறப்பார் பிறப்புச்
செறப்பாதி யந்தம் செலச்செய்யும் தேசன்
சிறப்பாடு உடையார் திருப்பறி யலூரில்
விறற்பா ரிடம்சூழ வீரட்டத் தானே.

தெளிவுரை: ஈசன் பிறப்பின் தன்மையில்லாதவன். ஏனையோர் பிறவிக்கும் இறப்புக்கும் தோற்றமும் முடிவும் ஆகிச் செல்லும் நிலையில் ஒளிவண்ணமாய்

இருந்து கலந்து செறிந்தவன். அவன் சிறப்புடைய பெருமக்கள் திகழும் திருப்பறியலூரில், வீரம் மிக்க பூத கணங்கள் சூழ விளங்கும் வீரட்டானன் ஆவன்.

விறல் பாரிடம் – வீரம் மிக்க பூத கணங்கள்.

1441. கரிந்தார் இடுகாட்டில் ஆடும்க பாலி
புரிந்தார் படுதம் புறங்காட் டிலாடும்
தெரிந்தார் மறையோர் திருப்பறி யலூரில்
விரிந்தார் மலர்ச்சோலை வீரட்டத் தானே.

தெளிவுரை: இறந்தவர்களை எரிக்கும் இடுகாட்டில் ஆடுகின்ற, கபாலத்தைக் கையில் ஏந்திய ஈசன், படுதம் எனப்படும் ஆட்டத்தை ஆடியவர். அப்பெருமான், நன்கு மறைவல்ல அந்தணர்கள் விளங்கும் திருப்பறிய லூரில், விரிந்து மலரும் சோலையுடைய வீரட்டானத் தில் வீற்றிருப்பவர்.

1442. அரவுற்ற நாணா அனல்அம்ப தாகச்
செருவுற் றவர்புரம் தீயெழச் செற்றான்
தெருவிற் கொடிசூழ் திருப்பறி யலூரில்
வெருவுற் றவர்தொழும் வீரட்டத் தானே.

தெளிவுரை: வாசுகி என்னும் பாம்பு நாணாகவும், அக்கினி தேவன் அம்பாகவும் கொண்டு, பகைமை கொண்ட அசுரர்களின் மூன்று புரங்களைத் தீயில் வேகுமாறு செற்றவன், ஈசன். அப்பெருமான், தெருக் களில் தோரணங்களால் அலங்கரிக்கப் பெற்ற திருப்பறியலூரில் வீரட்டத்தானத்தில் எழுந்தருளப் பெற்றவன். அச்சத்தால் அயர்வு கொண்டவர்கள் தொழுது போற்ற அருள்புரியும் ஈசன் அவனே.

வெருவுதல் – அஞ்சுதல்.

1443. நரையார் விடையான் நலங்கொள் பெருமான்
அரையார் அரவம் அழகா அசைத்தான்
திரையார் புனல்சூழ் திருப்பறி யலூரில்
விரையார் மலர்ச்சோலை வீரட்டத் தானே.

தெளிவுரை: ஈசன், நரை போன்ற வெண்மையான இடபத்தை வாகனமாக உடையவன்; அடியவர்களின் நலன்களைக் கருத்தில் ஏற்று வேண்டியவாறு அருள் புரியும் பெருமான்; அரவத்தை அரையில் அழகாகக் கட்டியுள்ளவன். அப்பெருமான் நீர்வளம் மிக்க திருப்பறியலூரில் மணங்கமழும் சோலைகள் விளங்கும் வீரட்டானத்தில் வீற்றிப்பவன்.

சிறப்புரை: மன்னுயிர்கள் புரியும் புண்ணிய பாவங் களுக்கு ஏற்பப் பிறவியானது கொள்ளும் என்பது விதி. அடியவர்கள் திருத்தொண்டு ஆற்றிப் பணிபுரிந்து, பிறவாமையை நாடும் போது, வேண்டியவாறு தருபவனாகிய இறைவன் நல்வினை தீவினையாகிய இரு வினைகளையும் தானே ஏற்று, முத்தி யருள் கின்றான் என்னும் கருத்தினை, "நலங்கொள் பெருமான்" என்பது உணர்த்துவதாயிற்று.

1444. வளைக்கும் எயிற்றின் அரக்கன் வரைக்கீழ்
இளைக்கும் படிதான் இருந்தேழை அன்னம்
திளைக்கும் படுகர்த் திருப்பறி யலூரில்
விளைக்கும் வயல்சூழ்ந்த வீரட்டத் தானே.

தெளிவுரை: வளைந்த கூரிய பற்களை உடைய அரக்கனாகிய இராவணனை, கயிலை மலையின் கீழே மெலியுமாறு செய்த பரமன், மட அன்னம் மகிழ்ந்து விளங்கும் வயல்கள் கொண்ட திருப்பறியலூரில், விளை நிலம் சூழ்ந்த வீரட்டானத்தில் வீற்றிருப்பவன்.

ஏழை அன்னம் – மடவன்னம், பெண் அன்னம். படுகர் – வயல், பள்ளப் பகுதி.

1445. விளங்கொண்மலர்மேல் அயன்ஓத வண்ணன்
துளங்கும் மனத்தார் தொழத்தழ லாய்நின்றான்
இளங்கொம் பனாளோடு இணைந்தும் பிணைந்தும்
விளங்கும் திருப்பறியல் வீரட்டத் தானே.

தெளிவுரை: *விளங்குகின்ற ஒண்மலராகிய தாமரையின் மேல் உறையும் பிரமனும், கடல் வண்ணனாகிய திருமாலும், தளர்ந்த மனத்தினராய் அயர்ந்து தொழுது போற்ற, தழலாய் ஓங்கி நின்ற பெருமான், இளங்கொம்பு அனையாள் என்னும் திருநாமம் தாங்கிய உமையவளோடு உடனாகி இணைந்தும், கூறுடைய அர்த்தநாரியாய்ப் பிணைந்தும், திருப்பறிய லூரில் விளங்கும் வீரட்டானத்தான் ஆவன்.*

ஓத வண்ணன் – கடல் நிறக் கடவுளாகிய திருமால் துளங்கும் – அசைவுற்று, அஞ்சி.

1446. சடையன் பிறையன் சமண்சாக் கியரோடு
அடையன் பிலாதான் அடியார் பெருமான்
உடையன் புலியின் உரிதோல் அரைமேல்
விடையன் திருப்பறியல் வீரட்டத் தானே.

தெளிவுரை: *ஈசன், சடை முடியுடையவன்; பிறைச் சந்திரனைச் சூடியவன்; சமணர், சாக்கியர் அடையாத வாறு அன்பற்றவராய்ப் புறத்தே நிற்க, தன்னை வணங்கும் அடியவர்களுக்கு அருள்புரியும் பெருமான்; புலியின் தோலை உரித்து உடையாகக் கொண்டவன்; இடப வாகனத்தினை உடையவன். அவன் திருப்பறியல் விரட்டானத்தில் வீற்றிருப்பவன்.*

1447. நறுநீர் உகுங்காழி ஞானசம் பந்தன்
வெறிநீர்த் திருப்பறியல் வீரட்டத் தானைப்
பொறிநீடு அரவன் புனைபாடல் வல்லார்க்கு
அறுநீடு அவல மறும்பிறப் புத்தானே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: நறுமணம் மிக்க நீர் பெருக்கும் காழியில் விளங்கும் ஞானசம்பந்தன், சுவைமல்கும் நீர் வளம் மிக்க திருப்பறியல் வீரட்டத்தில் விளங்கும் அரவம் தரித்த பெருமானைப் புனைந்து பாடிய இத்திருப்பதிகத்தை ஓத வல்லவர்களுக்கு, அவலம் அறும்; மறு பிறப்பும் அற்று விடும்.

மறும் பிறப்பு – மறுபிறப்பு, குற்றம் உடைய பிறப்பு.

135. திருப்பராய்த்துறை

தல விளக்கம்: காவிரி தென்கரைத் தலம். இறைவன் பிட்சாடனராய்ச் சென்று தாருகாவனத்து முனிவர்களின் செருக்கை அகற்றி அருள்புரிந்த திருத்தலம், தாருகாவனம் என வழங்கப்படுவது. (பராய் மரம் – தாருகா விருட்சம்) இந்திரன், குபேரன், சப்த ரிஷிகள் வழிபட்ட தலம்.

சுவாமி : பராய்த்துறை நாதர், தாருகாவனேஸ்வரர்

அம்பிகை : மயிலம்மையார், ஹேமவர்ணாம்பாள்

தல மரம் : பராய் மரம்

தீர்த்தம் : காவிரி

பண் : மேகராகக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

1448. நீறுசேர்வதொர் மேனியர் நேரிழை
கூறுசேர்வதொர் கோலமாய்ப்
பாறுசேர்தலைக் கையர் பராய்த்துறை
ஆறு சேர்சடை அண்ணலே.

தெளிவுரை: பராய்த்துறையில் வீற்றிருக்கும் அண்ணலாகிய ஈசன், திருவெண்ணீறு அணிந்த மேனியை

உடையவர்; உமையவளைக் கூறாகக் கொண்ட வடிவத்தை உடையவர்; பருந்து கொத்தும் தலையாக உள்ள மண்டையோட்டினைக் கரத்தில் கொண்டு, கங்கையைச் சடையில் சேர்த்தவர். அப்பெருமானை ஏத்திப் பணிக என்பதாம்.

குறிப்பு: *"பராய்த்துறை மேவிய பரனே போற்றி"* என்று பகரும் மாணிக்கவாசகர் வாக்கும் காண்க.

1449. கந்தமாமலர்க் கொன்றைகமழ்சடை
வந்தபூம்புனல் வைத்தவர்
பைந்தண் மாதவி சூழ்ந்த பராய்த்துறை
அந்தமில்ல அடிகளே.

தெளிவுரை: *நறுமண மலராகிய கொன்றை கமழும் சடையில் பெருகி வந்த கங்கையை வைத்தவர், மாதவி மலர்கள் சூழ்ந்த பராய்த்துறையில் அந்தம் அற்றவராய் விளங்கும் அடிகள் ஆவர்.*

1450. வேதர்வேதமெல் லாமுறையால்விரித்து
ஓதநின்ற ஒருவனார்
பாதிபெண்ணுரு வாவர் பராய்த்துறை
ஆதியாய அடிகளே.

தெளிவுரை: வேதமாகவும், வேதம் யாவையும் விரித்த வராகவும், யாவராலும் ஓதிப் போற்றப்படும் ஒப்பற்ற ஒருவனாக விளங்கிப் பாதி பாகம் உமையவளின் வடிவத்தோடு கொண்டு அர்த்தநாரீசராக விளக்கு பவர், பராய்த்துறையில் திகழும் ஆதியாகிய அடிகள் ஆவர்.

1451. தோலுந்தம்மரை யாடை சுடர்விடு
நூலும் தாம்அணி மார்பினர்

பாலும்நெய்பயின்று ஆடுபராய்த்துறை
ஆல நீழல் அடிகளே.

தெளிவுரை: புலித்தோலை அரையில் ஆடையாக உடுத்தி, முப்புரி நூல் அணிந்த மார்பினராய், ஆல மரத்தின் நிழலில் குரு மூர்த்தமாய் விளங்கும் அடிகள், பராய்த்துறையில் பாலும் நெய்யும் பூசனைப் பொருள்களாகச் சூடப்பெற்றுத் திகழ்பவர் ஆவர்.

1452. விரவிநீறுமெய் பூசுவர் மேனிமேல்
இரவில் நின்றெரி ஆடுவர்
பரவினாரவர் வேதம் பராய்த்துறை
அரவம் ஆர்த்த அடிகளே.

தெளிவுரை: திருநீறு மெய்யில் பூசி, மேனியின் மீது அரவத்தை உலவுமாறு செய்த அடிகள், இர்வில் நெருப்பினைக் கரத்தில் ஏந்தி ஆடுவர், பராய்த் துறையில் மேவி வேதத்தை விரித்தவர் ஆவர்.

1453. மறையும் ஓதுவர் மான்மறிக்கையினர்
கறைகொள்கண்டம் உடையவர்
பறையும்சங்கும் ஒலிசெய்பராய்த்துறை
அறைய நின்ற அடிகளே.

தெளிவுரை: வேதம் விரிப்பவர்; மான் கையினர்; கறை தந்த நஞ்சருந்திய கண்டத்தை உடையவர்; வெற்றிச் சின்னமாகச் சங்கொலிக்கும் பராய்த்துறையில், மந்திரச் சொல்லாக மேவும் அடிகள் ஆவர்.

அறை – சொல். மந்திரம்.

1454. விடையும் ஏறுவர் வெண்பொடி பூசுவர்
சடையிற்கங்கை தரித்தவர்
படைகொள்வெண்மழு வாளர்பராய்த்துறை
அடையநின்ற அடிகளே.

தெளிவுரை: *பராய்த்துறை என்னும் திருத்தலத்தில் எங்குமாய் முழுமையாய் மேவிய அடிகள், இடப வாகனத்தில் ஏறும் பெருமான்; வெண்ணீறு அணியும் பரமன்; சடையில் கங்கை தரித்த ஈசன். அவர், ஒளி பொருந்திய மழுவைப் படையாகக் கொண்டுள்ளவர்.*

1455. தருக்கின் மிக்க தசக்கிரிவன்றனை
நெருக்கினார் விரல் ஒன்றினால்
பருக்கினார்அவர் போலும் பராய்த்துறை
அருக்கன் றன்னை அடிகளே.

தெளிவுரை: *தருக்குற்ற இராவணனைத் தனது திருப்பாத விரலால் அடக்கி, பின் அவன் செருக்கு அழிந்து பணிந்து போற்ற, வளமை செய்தவர் பராய்த்துறை விளங்கும் அடிகள்.*

1456. நாற்றமாமல ரானொடு மாலுமாய்த்
தோற்றமும்மறி யாதவர்
பாற்றினார் வினை யானபராய்த்துறை
ஆற்றல்மிக்க அடிகளே.

தெளிவுரை: *பிரமனும் திருமாலும் தேடியும் எத்தகைய காட்சியும் தோற்றம் பெறாதவராய் ஆற்றல் மிக்கவராய்ப் பராய்த்துறையில் மேவிய அடிகள், அடியவர்கள் வினைகளைச் சிதறுண்டு விலகுமாறு செய்பவர்.*

1457. திருவிலிச்சில தேரமணாதர்கள்
உருவிலாவுரை கொள்ளேலும்
பருவிலால்எயில் எய்துபராய்த் துறை
மருவினான்றனை வாழ்த்துமே.

தெளிவுரை: *திருவற்றராகிய சில சமணர்களும் தேரர் களும் சொல்லும் உரை கொள்ளற்க. மேருமலையாகிய*

பருமையான வில்கொண்டு முப்புரம் எரித்து பராய்த்துறை மருவி விளங்கும் ஈசனைப் போற்றி வணங்குவீராக.

1458. செல்வமல்கிய செல்வர்பராய்த்துறைச்
செல்வர்மேற்சிதை யாதன
செல்வன்ஞானசம் பந்தன செந்தமிழ்
செல்வமாம் இரை செப்பவே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: செல்வம் பெருகும் பராய்த்துறையின் செல்வனாகிய ஈசனைச் சிதைவுபடாத நிறைசெல்வ மாகிய ஞானசம்பந்தன் செந்தமிழ்ப் பதிகத்தைச் சொல்ல செல்வம் பயக்கும். – இம்மை நலனும் மறுமை நலனும் தரும் என்பதாம்.

136. திருத்தருமபுரம்

தல விளக்கம்: காவிரி தென்கரைத் தலம். மார்க்கண்டேயரின் உயிரைப் பறிக்க வந்த குற்றம் நீங்க எமதருமன் வழிபட்ட தலம். திருநீலகண்ட யாழ்ப் பாணர் அவதாரத்தலம். பிரமதேவர் பூசித்தது.

பதிகக் குறிப்பு: திருநீலகண்ட யாழ்ப்பாணரின் யாழிசையின் காரணமாக, ஞானசம்பந்தர் பாடல்கள் எழுச்சி பெறுகின்றன எனச் சிலர் சொல்லக் கேட்ட யாழ்ப்பாணர் வருத்தமுற்று யாழில் அமையாதவாறு பாடுமாறு வேண்டினார். இத் திருப்பதிகம் யாழில் அடங்காது முரிவு செய்யுமாறு அமையப் பெற்றது.

சுவாமி : தருமபுரீஸ்வரர், யாழ்முரிநாதர்

அம்பிகை : மதுர மின்னம்மை, தேனமிர்தவல்லி

தல மரம் : *வாழை*

தீர்த்தம் : *தரும தீர்த்தம், பிரம தீர்த்தம்.*

பண் : *யாழ் மூரி*

மூரி – வலிமை. யாழைக் காட்டிலும், இசை வன்மை வாய்ந்தது.

திருச்சிற்றம்பலம்

1459. மாதர்ம டப்பிடியும் மட வன்னமும் அன்னதோர்
நடை யுடைம் மலை மகள் துணையென மகிழ்வர்
பூதவி னப்படைநின் றிசைபாடவு மாடுவர்
அவர் படர் சடைந் நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவர் ஆழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரைபொரு துவிம்மிநின்று அயலே
தாதவிழ் புன்னை தயங்குமலர்ச்சிறை வண்டறை
எழில் பொழில் குயில் பயில் தருமபு ரம்பதியே.

தெளிவுரை: *தருமபுரத்தில் எழுந்தருளியிருக்கும் நாதனாகிய ஈசன், அழகிய பெண் யானையும் அன்னமும் போன்ற நடையுடைய மலைமகளாகிய உமையவளை உடனாகித் துணையாகக் கொண்டு மகிழ்பவர்; பூத கணங்கள் நின்று இசை பாட ஆடுபவர்; படர்ந்த சடை முடியில் கங்கை தரித்தவர்; வேத கீதங்களும், ஏழிசையும் பாடுபவர்; அப்பெருமான் கடலின் அலைகள் இரைச்சல் கொண்டு கரையை நோக்கி மேலெழுந்து மோத, அயலே விளங்கும் புன்னை மரங்களில் ஒளிரும் மலர்களில் சிறகுகளை உடைய வண்டினங்கள் எழிலாக இசைக்க, பொழில் களில் வாசம் செய்யும் குயில்கள் அதனைப் பயிலவும் எழில் மிக்கு விளங்கும் தருமபுரத்தில் வீற்றிருப்பவர்.*

மாதர் – அழகு.

1460. பொங்கு நடைப்புகலில் விடை யாம்அவர் ஊர்திவெண்
பொடி யணி தடங்கொண்மார் புபூணநூல் புரள
மங்குலி டைத்தவழும் மதி சூடுவர் ஆடுவர்
வளம் கிளர் புனல்அர வம்வைகிய சடையர்
சங்குக டல்திரையால் உதை யுண்டுச ரிந்திரிந்து
ஒசிந் தசைந் திசைந் துசே ரும்வெண்மணற்
குவைமேல்
தங்குக திர்ம்மணிநித் தில மெல்லிருள் ஒல்கநின்று
இலங் கொளிந் நலங் கெழில் தருமபு ரம்பதியே.

தெளிவுரை: சங்குகள் கடல் அலைகளால் உதையுண்டு கரை நோக்கித் தள்ளப்பெற்றுச் சரிந்து திரிந்து ஓடிந்து மேட்டில் தங்கிக் கதிர்விடும் முத்துக்கள் வெளிப்பட, ஒளி விளங்கும் எழில் நலம் உடையது தருமபுரம் என்னும் பதியாகும். அத்தகைய பதியில், கம்பீர நடை கொண்ட இடபத்தினை வாகனமாகக் கொண்டு, அகன்ற மார்பில் திருவெண்ணீறு அணிந்து, பூணும் முப்புரி நூல் புரள, ஆகாயத்தில் தவழும் சந்திரனைச் சூடி, வளம் திகழ் கங்கை தரித்துக் கிளர்ந்தெழும் அரவம் வைகிய சடை முடி உடையவராகிய ஈசர், நடம் புரிவர்.

மங்குல் – ஆகாயம்.

1461. விண்ணுறு மால்வரைபோல் விடை யேறுவர் ஆறுசூ
டுவர் விரிசுரி யொளி கொடோடுநின் றிலங்கக்
கண்ணுற நின்றொளிருங் கதிர்வெண்மதிக் கண்ணியர்
கழிந்தவர் இழிந்திடும் முடைதலை கலனாப்
பெண்ணுற நின்றவர்தம் முரு வம்மயன் மால்தொழவ்
வரி வையைப் பிணைந் திணைந் தணைந்ததும்
பிரியார்
தண்ணிதழ் முல்லையொடெண் ணிதழ் மௌவல்ம
ருங்கலர்
கருங்கழிந் நெருங் குநல் தருமபு ரம்பதியே.

தெளிவுரை: குளிர்ந்த இதழ்களையுடைய முல்லையும், எட்டு இதழ்களையுடைய மல்லிகையும் அடர்ந்து மிகுந்துள்ள நன்மை திகழ விளங்குவது தருமபுரம் என்னும் பதியாகும். அப்பதியின்கண், எழுந்தருளி யுள்ள ஈசன், மலைபோல் பெருமை கொண்ட உயர்ந்த இடபத்தில் ஏறுவர்; கங்கை சூடுவர்; விரிந்தும் வளைந்தும் ஒளிகொண்டு விளங்கும் தோடு காதில் திகழத் தரித்து நின்று, ஒளி தரும் வெண்மதியும் சூடுவர்; இறந்தவர்களின் தலையோட்டினை உண்கலனாக ஏந்தி நிற்பவர்; பிரமனும், திருமாலும் தொழுமாறு விளங்குவர்; உமாதேவியைக் கூறாகவும் உடனாகக் கொண்டும் பிரியாது விளங்குவர்.

மால்வரை – பெரியமலை; விடை – இடபம். ஆறு – கங்கை; ஒளி கொடோடு – ஒளிகொள்தோடு. முடைதலை – பிரம கபாலம், தலையோடு தம் முருவம் மயன் – தம் உருவம் அயன். சந்தம் நோக்கி மகரம் மிகுந்தது. வரிவை – அரிவை, உமையவள். மௌவல் – மல்லிகை; கழி – மிகுதி.

1462. வாருறு மென்முலைநன் னுதல் ஏழையொடு ஆடுவர்
வளங் கிளர்விளங் குதிங் கள்வைகிய சடையர்
காருற நின்றலரும் மலர்க் கொன்றையங் கண்ணியர்
கடுவ் விடை கொடிவெடி கொள்காடுறை பதியர்
பாருற விண்ணுலகம் பர வப்படு வோர்அவர்
படுதலைப் பலி கொளல் பரிபவம் நினையார்
தாருறு நல்லரவம் மலர் துன்னிய தாதுதிர்
தழை பொழின் மழைந் நுழை தருமபு ரம்பதியே.

தெளிவுரை: நல்ல கொன்றை மலர்மாலையிலிருந்து பெருகும் மகரந்தத் தாதுக்கள் மழைபோன்று விளங்கும் தருமபுரம் என்னும் பதியில் வீற்றிருக்கும் ஈசன், உமையவளுடன் சேர்ந்து நடம் புரிபவர்; வளரும் திங்கள் விளங்கும் சடையுடையவர்;

கார்காலத்தில் நிலைத்து மலரும் கொன்றை மலரைச் சூடியவர்; இடபக் கொடியுடையவர்; இடுகாட்டில் உறைபவர்; பூவுலகத்தாராலும் விண்ணுலகத்தாராலும் வணங் கப்படுபவர்; கபாலம் ஏந்திப் பலி கொள்வதை கீழ்மையாகக் கருதாதவர்.

சிறப்புரை: *காட்சிக்கு எளிமையாகவும் கீழ்த்தன்மை உடையதாகவும் தோன்றினும், மன்னுயிரின் வினைப் பொதியை ஏற்கும் ஈசனாரின் பிட்சாடனத் திருக் கோலம் கருணை வயத்தால் ஆட்கொள்ளப்படுவதாம்.*

பரிபவம் – ஏளனம், எளிமை, கீழ்மை.

1463. நேரும வர்க்குணரப் புகில் இல்லைநெ டுஞ்சடைக்
கடும்புனல் படர்ந்திடம் படுவ்வாதார் நிலையர்
பேரும வர்க்கெனையா யிர முன்னைப்பி றப்பிறப்பு
இலா தவர்உடற் றடர்த் தபெற்றியார் அறிவார்
ஆரம வர்க்கழல்வா யாதொர் நாகம ழஃகுறவ்
வெழுஃகொழும் மலர்கொள்பொன் னிதழிநல்
லலங்கல்
தாரம வர்க்கிமவான் மகள்ஊர்வது போர்விடை
கடிபடு செடி பொழில் தருமபு ரம்பதியே.

வுரை: *சனார்க்கு, இணையாகச் சொல்லுவதற்கு யாரும் இல்லை. நெடிய சடையில் கடும் புனலாகும் கங்கை தரித்தவர்; பேரும் ஆயிரம் உடையவர்; பிறப்பும் இறப்பும் இல்லாதவர்; மாறுபாடு கொண்ட பகைவரை அடர்த்து வெற்றி கண்ட தன்மையை யாரால் அறிய முடியும்? நெருப்புப் போன்று சீறும் நாகம் அவருக்கு ஆரமாகும்; அழகு மிளிற விளங்கும் செழுமையான மலரைச் சூடுவது பொன்மயமான கொன்றை மலர் மாலையாகும். அவருக்குத் தாரமாவது மலையரசன் மகளாகிய உமையவள்;*

அவர் வாகனமாக ஊர்வது இடபம்; வாசனை பொருந்திய பொழில்கள் சூழ்ந்த தருமபுரம் அவர்தம் பதியே.

நேருமவர்க்கு – அவருக்கு இணையாக. இதழி – கொன்றை.

1464. கூழையங் கோதைகுலா யவள்தம்பினை புல்கமல்
குமென் முலைப் பொறி கொள்பொற்
கொடியிடைத் துவர்வாய்
மாழையொண் கண்மடவா ளையொர் பாகம கிழ்ந்தவர்
வலம்மலி படைவிடை கொடிகொடும் மழுவ்வாள்
யாழையும் மெள்கிடவே ழிசை வண்டுமு ரன்றினந்
துவன் றிமென் சிறஃ கறை யுறந்நறவ்வி ரியுந்நல்
தாழையு ஞாழலுந்நீ டிய கானலி னள்ளலி
சைபுள் ளினந் துயில் பயில் தருமபு ரம்பதியே.

தெளிவுரை: *யாழையும் விஞ்சும் தன்மையில் ஏழிசையில் வண்டுகள் கீதம் இசைக்கச் சிறகுகள் விரித்துப் பறந்து தாழையும் கொன்றையும் உடைய சோலையில் விளங்கப் புள்ளினம் துயில் கொள்ளும் தருமபுரம் என்னும் பதியில், அழகிய கூந்தலையுடைய உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு மகிழ்ந்து இடபக் கொடியும் மழுப்படையும் தாங்கி ஈசன் விளங்குகின்றார்.*

கூழை – கூந்தல்; ஞாழல் – கொன்றை.

1465. தேமரு வார்குழலன் னந டைப்பெடை மான்விழித்
திருந்திழை பொருந் துமே னிசெங்கதிர் விரியத்
தூமரு செஞ்சடை யிற்றுதை வெண்மதி துன்றுகொன்
றைதொல் புனல் சிரங்கரந் துரித்ததோல் உடையர்
காமரு தண்கழிநீ டிய கானல கண்டகங்
கடல் லடை கழியிழி யமுண்டகத் தயலே

தாமரை சேர்குவளைப் படு கிற்கழு நீர்மலர்
வெறி கமழ் செறிவ் வயல் தருமபு ரம்பதியே.

தெளிவுரை: தேன்கமழ் கூந்தலும், அன்ன நடையும், பெண்மான் விழியும் திருந்திழையும் கொண்ட உமையவளைப் பாகமாகக் கொண்டு, சிவந்த திருமேனியும், செங்கதிர் மருவும் சடையில் வெண்மதியும் கொன்றையும் ஏற்றுத் தோலுடை அணியும் இறைவன், நீர் வளம் மிகுந்த நிலையில் சோலைகளும் கடல் தாழையும், தாமரை, குவளை, கழுநீர்ப் பூக்களும், மணம் கமழச் செறிந்த வயல்களும் கொண்ட தருமபுரத்தைப் பதியாக உடையவர்.

1466. தூவண நீறகலம் பொலி யவ்விரை புல்கமல்
குமென் மலர்வரை புரை திரள்புயம் மணிவர்
கோவண மும்முழை யின்னத ளும்முடை யாடையர்
கொலைம் மலி படையொர்சூ லமேந்திய குழகர்
பாவண மாவலறத் தலை பத்துடையவ்வரக்
கனவ் வலி யொர்கவ் வைசெய் தருள்புரி
தலைவர்
தாவண வேறுடையெம் மடி கட்கிடம் வன்றடம்
கடல் லிடுந் தடங் கரைத் தருமபு ரம்பதியே.

தெளிவுரை: ஈசன், தூய வெண்ணீறு விரிந்து பொலிய அகன்ற மார்பிலும், புயங்களிலும் அணிவர்; கோவணமும் மான் தோலும் ஆடையாக உடையவர்; சூலப்படை ஏந்திய அழகர்; பாடல்வண்ணமாக சாம கீதத்தை இசைத்து வேண்டிய அரக்கனான இராவணனுடைய துன்பத்தை நீக்கி, அருள் புரிந்த தலைவர். இடப வாகனத்தை உடைய எம் அடிகளாகிய அப்பெருமான், இடமாகக் கொண்டு வீற்றிருப்பது, கடலின் கரையில் விளங்கும் தருமபுரம் என்னும் பதியாகும்.

1467. வார்மலி மென்முலைமா தொரு பாகம தாகுவர்
வளங்கிளர் மதியர வம்வைகிய சடையர்
கூர்மலி சூலமும் வெண் மழு வும்மவர் வெல்படை
குனிசிலை தனிம் மலை யதேந்திய குழகர்
ஆர்மலி யாழிகொள்செல் வனு மல்லிகொள் தாமரைம்
மிசை யவன் னடிம் முடி யளவுதாம் அறியார்
தார்மலி கொன்றையலங் கலு கந்தவர் தங்கிடந்
தடங்கடல் லிடுந் திரைத் தருமபு ரம்பதியே.

தெளிவுரை: *ஈசனார், மாதொரு பாகமாய் ஆகுவர்; வளரும் சந்திரனும் அரவமும் விளங்கும் சடை முடியுடையவர்; கூர்மையான சூலமும் மழுவும் படையாக உடையவர்; வளைக்கப்பெறும் வில்லாக மேருமலையை ஏந்திய அழகர்; ஆழிப் படைகொண்ட திருமாலும், தாமரை மலர்மிசை விளங்கும் பிரமனும் அடி முடியின் அளவு காணப் பெறாதவராகியவர்; கொன்றை மாலையை உகந்து அணிபவர். அவர் வீற்றிருக்கும் இடம் தருமபுரம் என்னும் பதியாகும்.*

1468. புத்தர்க டத்துவர் மொய்த் துறி புல்கிய கையர்பொய்ம்
மொழிந் தழிவில்பெற் றியுற் றநற்றவர் புலவோர்
பத்தர்க ளத்தவமெய்ப் பய னாகவுகந்தவர்
நிகழ்ந் தவர் சிவந் தவர் சுடலைப்பொடி யணிவர்
முத்தன வெண்ணகை யொண் மலை மாதுமை பொன்னணி
புணர்ம் முலையிணை துணை யணைவதும் பிரியார்
தத்தரு வித்திரளுந் திய மால்கடல் ஓதம்வந்
தடர்ந்திடுந் தடம் பொழில் தருமபு ரம்பதியே.

தெளிவுரை: *புத்தர்களும் சமணர்களும் உரைக்கும் பொய்யுரைகளை நீக்கி, அழிவில்லாத சிறப்புடைய நற்றவ வேந்தர்கள், அறிஞர்கள், பக்தர்க்ள்*

ஆகியோர்தம் மெய்த்தவத்தை உகந்தவராகிய ஈசன், சிவந்த வண்ணமுடையவர்; சுடலைப் பொடியணிபவர்; உமையவளைப் பாகமாகக் கொண்டு பிரியாது விளங்குபவர். அவர் அருவிகள் உந்திய கடல் ஓதமும் பொழிலும் கொண்ட தருமபுரத்தைப் பதியாக உடையவர்.

1469. பொன்னெடு நன்மணிமா ளிகை சூழ்விழ வம்மலி
பொரூம் புனல்திரும் வமர் புகல்லியென் றுலகில்
தன்னொடு நேர்பிறவில் பதிஞானசம் பந்தனஃ
துசெந் தமிழ்த் தடங்கடல் தருமபுரம் பதியைப்
பின்னெடு வார்சடையிற் பிறை யும்மர வும்முடை
யவன்பிணை துணைகழல் கள்பேணுத லுரியார்
இன்னெடு நன்னுலகெய் துவர் எய்திய போகமும்
முறு வர்கள் ளிடர் பிணி துயரணைவ் விலரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: அழகிய நெடிய நன்மணிகள் பதிந்த மாளிகை சூழ்ந்த விழாக்கள் மலியவும், நீர் கரை மோத உள்ளதும், தனக்கு இணையாக வேறு இல்லை எனவும் விளங்கும் புகலியின் ஞானசம்பந்தன் வழங்கிய செந்தமிழ் கொண்டு, தருமபுரத்தில் வீற்றிருக்கும் தலைவனாகிய, நீண்ட சடையில் பிறைச் சந்திரனும் அரவும் கொண்டு விளங்கும் ஈசன் துணைக் கழல்களைப் பேணி வணங்குபவர்கள், இனிய நல்லுலகத்தினை எய்துவார்கள்; போகம் பெறுவார்கள்; இடர், பிணி முதலான அவலங்கள் இல்லாதவராவார்கள்.

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்
முதல் திருமுறை மூலமும் உரையும் முற்றிற்று.

பாட்டு முதற்குறிப்பு அகராதி

* * *